மலாயாவின் தோற்றம்

HAPPY MALAYA

மலாயாவின் பெருமை! மக்களின் ஒருமை!
ஆங்கில வாட்சியின் திறம்! அரசியல்களின் அமைப்பு!
இயற்கையின் எழில்! இந்தியர்களின் தொடர்புகளைத்
தெளிவாக விளக்குமோர் தேச சரித்திரம்!

ஆக்கியவர்

திரு. பெ. நா. மு.
முத்துப்பழநியப்ப செட்டியார், ஜே. பி.,
சுங்குரும்பை.

பினாங்கு
மெர்க்கெண்டைல் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1938


பேர்லிஸ்
கெட்டா
வெல்லஸ்லிமாகாணம்
கிளந்தான்
திரெங்கானு
பேரா
பாஹாங்
ஸெலாங்கூர்
நெகிரிசேம்பிலான்
மலாக்கா
ஜோஹூர்


மலாயாவின்தோற்றம்.

(2)

மேன்மை தங்கிய விக்டோரியா மகாராணியார்.



Her Imperial Majesty the late Queen Victoria.

(3)

மாகூஷிமை தங்கிய ஆரும் ஜார்ஜ் மன்னர்.



His Imperial Majesty King George VI.

மேன்மை தங்கிய எலிஜபத் மகாராணியார்.



Her Imperial Majesty Queen Elizabeth.


மேன்மை தங்கிய ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் (செட்டிநாடு).



Raja Sir Annamalai Chettiar,
Hereditary Rajah, Chettinadu.

(6)

இம்மலாயாத் தோற்றத்துக்கு முதற்காரணர்
உயர் திரு பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியார், J. P.,
சுங்குரும்பை.



P. N. M. Muthupalaniappa Chettiar, J. P., B. Mertajam.

முன்னுரை.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றார் தொல்காப்பியனார். அவ்வுலகையும், மக்களையும் ஆக்கி, அளித்து, அழித்து, மறைத்து, அருள்பவன் இறைவன். அவ்வைந்தொழிலையும் ஆற்றும் அவனே இயற்கை வடிவாய் நின்று, இவ்வுலகில் மக்களுக்கு எவ்வின்பத்தையும் அளிக்கின்றான். அதனுற்றான் இயற்கையின் தோற்றமாகிய நானில வளங்களும் (மலை, காடு, வயல், கடல்) மக்களின் கண்களுக்கு நல் விருந்தையும், உள்ளத்துக்கு பேருணர்வையும் தருகின்றன. அந்நானில வளங்களையும் தன்னிடத்தே மிகுதியாகக்கொண்ட இம்மலாய் நாட்டுக்கும், அதன் உட்பொருளை உணர்ந்து எல்லாம் இறைவனின் தோற்றம் என்பதைக்கொள்ளும் நம் தாய் நாட்டுக்கும் பல தொடர்புண்டு. இந்நாடு பண்டைக்காலத்தில் நமது இந்திய மன்னர்களால் ஆளப்பட்டது! இந்திய வணிகர்களால் காணப்பட்டது! இந்திய மொழிகளால் போற்றப்பெற்றது! இந்திய நாகரிகத்தால் ஏற்றம்பெற்றது! இதை திரு ரோலண்ட் பிராடல் (Roland Braddell) போன்ற ஐரோப்பிய ஆசிரியர்கள் எல்லாம் எடுத்தாண்டிருக்கிறார்கள். அவர்கள் கூறுவதுபோல அன்றிருந்து நமக்குத் தொடர்புள்ள இந்நாட்டை இன்றுள்ள நிலைக்குக்கொண்டு வந்தவர்கள் ஆங்கில அரசியலாரும் நமது இந்திய மக்களுமேயாகும். இவ்விருவரிலும் இந்தியர்களே இங்கு பன்னாட்களாக வாழ்பவர்கள்! காடுகளை நாடுகளாக்கியவர்கள்! நாடுகளை நகர்களாக்கியவர்கள்!

இவைகளை இன்னும் உணராதிருப்போர் பலர். அதற்குமேல் குறையும் கூறுவோர் சிலர். இவர்களின் அறிவின் திறத்தை என்னென்று கூறுவது? உலகில் மக்களை இதற்காகவா இறைவன் தோற்றுவித்தான்? அன்று! அன்று!! வேறு எதற்காகப் படைத்தான்? மக்களாய்த் தோன்றிய ஒவ்வொருவரும் தம்தம் அறிவை உயரிய வழிகளிற் செலுத்த! பிறவியின் பெற்றியை உணர! பிறரைக் குறை கூறுவதே பெருமை என்றெண்ணுதிருக்க! உரிய தொழிலைச் செய்து வாழ்வடைய வன்றோ! படைத்தான். அதை ஒவ்வொருவரும் எண்ணினுல்! ஆராய்ந்தால்! உலகில் சழக்கேது? சச்சரவேது? ஒன்றுமே ஏற்படாது. அத்தகைய உலகை என்று காண்போமோ! அன்றே இவ்வறியாமையும் அகலும். அதன் தன்மைகளையும், இந்நாட்டின் பெருமை

யையும் உணராதவர்களுக்கும், தமிழறிந்த பலருக்கும், இதனுண்மைகளை ஓர் நூல் வடிவாக விளக்க வேண்டுமென்ற அவாவைப் பன்னாட்களுக்கு முன்பே கொண்டேன். இற்றைக்கு 5 ஆண்டுகளுக்கு முன் யான் கொண்ட அவ்வவா "அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி எடுத்த கருமங்க ளாகா" என்ற ஆன்றோரின் வாக்குப்படி இன்றே இறைவனருளால் நிறைவேறி நூல் வடிவாக வெளியேறியது.

இறைவனருளால் வெளிவரும் இந்நூல் மலாய் நாட்டின் உற்பத்தி, காட்சி, பெருமை, துலக்கம், புகழ், பொலிவு, மேன்மை, வளம், வலிமை ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறுவதாகும். இவைகளை ஒருங்கே காட்டுவதாலேயே இந்நூற்கு "மலாயாவின் தோற்றம்" என்ற பெயரையும், இங்குள்ள மக்கள் என்றும் மகிழ்வோடு இருப்பதைப் பலரு மறிய வேண்டுமென்ற நோக்கோடு ஆனந்த மலாயா என்ற பொருளைக் குறிக்கும் பதமாகிய (Happy Malaya) (ஹாப்பி மலாயா) என்ற ஆங்கிலப்பெயரையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பெயரமைந்த இந்நூலை வெளியிட யான்கொண்ட முயற்சி அதிகம். இதற்காகப் பல இடங்களுக்குச் சென்றேன். பலரைப் பார்த்தேன். படங்களைப் பெற்றேன். பலரின் வாய்மொழிகளைக் கேட்டேன். பல வளப்பங்களை உணர்ந்தேன். அவைகளுக்கு வேண்டிய ஆதாரங்களையும் தேடினேன். எல்லாவற்றையும் ஒருங்கே திரட்டி இந்நூற்கு மூலமாகிய வித்தொன்றையே நான் நட்டேன். அதை ஓர் மரமாக்கினர் எனது நண்பர். அடிகள் அற்புதாநந்தா. அவர் ஓர் துறவி. பல நாடு சுற்றியவர். பன்மொழி அறிந்தவர். பன்னூல் கற்றவர். அதனால் பல ஆங்கில நூல்களை ஆராய்ந்து இந்நாட்டின் உற்பத்தி, இந்தியாவின் தொடர்புகளைச் சேர்த்து ஓர் மரமாக்கினர். அம்மரத்தை மேலும் பயிராக்கி, வளர்த்து அதனாற் பலரும் பலனைப் பெறச் செய்ய வேண்டுமே என்ற அவா அதிகம் தூண்டியது! அதற்குரியார் இந்நாட்டிற் கிடைக்கவில்லையே என்றேங்கினேன். சின்னாள் முன் அவ்வேக்கத்தை அகற்றினர் மலாக்கா "தமிழறம் பேணும் தகைமையாளர்", உ. அரு. அருணசலம் செட்டியார்.

இவர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்! ஆங்கிலத்திலும் அநுபவங்கொண்டவர்! உலக சரித்திரங்களை உணர்ந்தவர்! சில நூல்களையும் வெளியிட்டவர்! எத்தகைய பெருங் காப்பியங்களையும் எளிய முறையில் யாவரும் உணர எடுத்து உரைக்கும் வன்மை பெற்றவர். தன்னலங் கருதாப் பொதுநலப் பிரியர்! தமக்கென

வாமுப் பிறர்க் குரியாளர்! அதனல் தனது அறிவின் திறமையைக்கொண்டு அவருக்குக் கொடுத்த மூன்றுமாத அவகாசத் துக்குள்ளாக தனது வேலேயோடு வேலேயாக, இம் "மலாயாவின் தோற்ற" மாகிய மரத்தைப் பெருந்தருவாக வளர்த்து, பல கிளே, மலர், பிஞ்சு, காய், கனிகளாக்கி, அக்கனியின் இரசத்தை நாம் அனேவரும் அருந்தும் வண்ணம் செய்தார். இதற்காக அவர் கொண்ட சிரத்தை அதிகம். அவரும் பல இடங்களுக்குச் சென்று சிலவற்றை நேரிற்கண்டு சேர்த்தார். இந்நூலுக்கு வேண்டிய ஆதாரங்களேப் பழந் தமிழ் இலக்கியங்களில் இருந்தெடுத்தார். ஒவ் வோரிடங்களிலும் நூலே அழகுப் படுத்தும் பல பாவினங்களே அமைத்தார். இத்தனேக்கும் அவர் தகுந்த புலமை வாய்ந்தவர் என்பதையும், பல நூல்களேயும் ஆராய்ந்து தேர்ந்தவர் என்பதை யும், இந்நூலில் ஒவ்வோரிடங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள மேற் கோள், ஒப்புவமைப் பொருள், இனிய தமிழ் நடைகளே காட்டும். இப்பேருதவியை எனக்கும் நந்தாய் நாட்டுக்கும், மக்களுக்கும் செய்த அவருக்கும், அடிகள் அற்புதாநந்தாவுக்கும், யான் என்றென் றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நூலில் வெளியிடுவதற்காக உருவப் படங்களேயும், இயற்கை செயற்கை எழில்களின் தோற்றப்படங்களேயும், சில குறிப்புகளேயும் அனுப்பி உதவிய நண்பர்கள் பலர். அவைகளேப் பேரவாவோடு பெற்ற யான் முழுதும் வெளியிட முடியவில்லே. ஓர் தேச சரித்திரத் தைக் கூறும் நூலில் பல படங்களேச் சேர்ப்பது அது ஓர் படப் புத்தகமாகிவிடும்போல் தெரிந்தது. அதனல் சில படங்களே மட்டிலும் சேர்த்து வெளியிடத் துணிந்தேன். இதற்காகப் படங்களே அனுப்பிய நண்பர்கள் குறைகூறுர்கள் என்பதை யானறிவேன். இந் நாட்டு நண்பர்களேப்போன்று சைகோன், மைடானிலிருந்து படங்கள் அனுப்பிய நண்பர்களும் உண்டு. அப்படங்களில் செட்டியார்களின் ஆலயப் படமிரண்டும், அங்கோர் வாட் கோயிற்படம் ஒன்றுமே இந்நூலிற் சேர்ந்திருக்கிறது. அவைகளேப் பற்றிய விரிவுரை எழுத, இந்நூல் "மலாயாவின் தோற்ற" மாகவே, இயலவில்லே. இறைவனருள் கூட்டிவைத்தால் நண்பர்கள் மனம் வைத்தால், இந்தோசைன, சுமத்திராவின் சரித் திரங்கள் வெளிவரும்போது அவைகளேக் குறிப்பிடலாம். இங்கு குறிக்கப்பட்ட படங்களேயும், குறிப்புகளேயும் அனுப்பித் தந்துதவிய நண்பர்களுக்கும் எனது நன்றியறிதலேத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பேருதவி செய்த நண்பர்களிற் பலர் எனது வேண்டுகோளுக் கிணங்கி விரைவிற் படங்களேயும் குறிப்புகளேயும்

அனுப்பினார்கள். சிலர் அனுப்பப் பன்னாளாகி விட்டது. அவர் களும் காலத்தில் தந்துதவி இருந்தார்களானால், இந்நூல் இன்னும் சின்னாள் முன்பே வெளி வந்திருக்கும்.

அண்மையிற் பெற்ற பல குறிப்புகளையும் வைத்து இன்னும் சின்னாட் சென்று இந்நூலை வெளியிட்டால், அமைதியாக எழுதி அச்சுவாகன மேற்றி இருக்கலாம். அவ்வாறு நாட்தள்ள என் மனமும், எனது நிலையும் இடங்கொடுக்கவில்லை. யானோ ஆண் டில் முதிர்ந்தவன். அத்துடன் கடல் கடந்து தாய்நாட்டை அடைய வேண்டுமென்ற அவாவொருபுறம்! அதற்குள் கொண்ட குறிக் கோளை முற்றுப் பெறச் செய்ய வேண்டுமென்ற கொள்கை ஒரு புறம்! அக்கொள்கையால் இந்நூலை மிக விரைவாக எழுதி அச்சியற்ற நேர்ந்தது. அதனால் இதிற் சில குறைகள் இருக்கலாம். அத்துடன் என்னைப் போன்று இந்நூலை எழுத உதவிய "தமிழறம் பேணும் தகைமை யாளர்" உ. அரு. அருணாசலம் செட்டியாரும், சமூக, சமய, தமிழ்ப் பணியில் அதிகப் பற்றுக்கொண்டவர். அவ்வார்வத்தால் சில இடங்களில் கொஞ்சம் விரிவாகவும் கூறி இருக்கலாம். இவைகளைப் பேரறிஞர் யாவரும் ஏற்பர். இதற்காகக் குறை கூறார்கள். இந்நூல் ஏற்பட்ட தின் உட்கருத்தை உணர்ந்து, ஆதரித்து, முற்றும் படித்து, மலாயா வின் தோற்றத்தைத்தெரிந்து கொள்வார்கள் என்பதே எனது துணிபு.

இவ்வளவு விரைவில் இந்நூலை வெளியிட உதவி புரிந்தவர்கள் பினாங்கு மெர்க்கெண்டைல் அச்சியந்திர சாலையார். அவர்களின் தொண்டு அளவிடற்கரியது. பல படங்களுடன் வெளியாகும் இப் பனுவலை முடிக்க அவர்கள் இரவு, பகலாக வேலைசெய்தார்கள். யான் அவர்களை விரைவுப்படுத்தாது கொஞ்சம் அமைதியாக அவர்கள் அச்சிட்டால் இந்நூல் இன்னும் அழகாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதற்காகச் சிரமங்கொள்ளாது அச்சியற்றித் தந்த மெர்க்கெண்டைல் அச்சியந்திர சாலையாருக்கும், அவர்களுடன் உடனிருந்து பிழை திருத்தங்களைச் செய்து நூலை முற்றுப் பெறச் செய்த எனது நண்பர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

எனது முயற்சியால் பலர் கூடி ஆக்கப்பெற்ற இந்நூலில் பல பிழைகளும் இருக்கலாம். அவைகளைப் பொருட்படுத்தாது மலாய் நாட்டின் பெருமை! மக்களின் ஒருமை! ஆங்கில வரசின் திறம்!

அரசியல்களின் அமைப்பு! இயற்கையின் எழில்! இந்தியர்களின் தொடர்பு! செல்வத்தின் வளம்! செட்டியார்களின் சிறப்பு! தக்காரின் வாழ்க்கை! தமிழின் மேன்மைகளைத் தெளிவாக விளக்கும் ஓர் தேச சரித்திரம் இது என்பதை யாவரும் எண்ணி வாங்கிப் படிக்க வேண்டுவதே பேரறிஞர்கள் எங்கட்குத் தரும் பேருதவி யாகும். அதைபுணர்ந்து அறிஞர் ஏற்கவும், இந்நூலிற் கண்ட குறைகளைக் கருத்துட் கொள்ளாது, தொண்டொன்றைக் கருதித் தூய்மைப்படுத்தவும், எல்லோரும் முன் வர அருள் புரியுமாறு இறைவனை வழுத்துகின்றேன்.

பெ. நா. மு. முத்துப்பழநியப்பன்,

சுங்குரும்பை.

FOREWORD.

Malaya has been asking for more publicity. A campaign to persuade the governments of this country to advertise her in foreign parts has been on foot, and has received support from various organisations. At such a juncture the production of a book on Malaya in Tamil is to be welcomed all the more. Not that this volume is a hand-book for tourists and sightseers. The author has not for his object the "advertisement" of Malaya. His aim, I believe is to introduce to his Tamil-speaking country-men their most important Colony—to take Malaya to South India. Sri. P. N. M. Muthupalaniappa Chettiar J. P., is one of the most respected citizens of this Settlement. His literary erudition is well known to one and all. He has by this timely publication not only paid a deserving tribute to the country of his adoption and life-work, but has done a distinct service to our mother country where thousands of people in spite of years of connection and association with Malaya have no clear-cut notions about this land. As this book shows, our relations with Malaya are as old as history itself. It is a matter for surprise that notwithstanding the many bonds that have bound India and Malaya together we have few up-to-date and well-written books in the Tamil language dealing with the historical back-ground of modern Malaya or describing to us her men and matters.

Sri. Chettiar has taken great pains not only to collect his materials but to collate them in a very presentable fashion. His style is lucid; his descriptive power extraordinary; his love of his subject remarkable, and his mastery of details amazing. Sri. Muthupalaniappa Chettiar takes care only to see the good in things and definitely discards the evil. His attempt to cause offence to none has been quite successful.

I have had the pleasure, prior to publication, of going through these pages and I have no doubt that the reader will find them not only readable but enjoyable. I feel certain that the public-spirited author will consider himself amply rewarded if as a result of his labours more and more Indians will interest themselves in Malaya so that the future of this country will once again be indissolubly linked with that of our motherland.

Penang,
9th Nov., 1938.

N. RAGHAVAN.

சிறப்புரை.

பாரிஸ்டர் திரு. என். ராகவன் அவர்களால் எழுதப்பெற்றது.

மலாய் நாடு தன்னைப் பலர் தெரிந்து கொள்ளவேண்டும், வந்து பார்த்துப்போகவேண்டும் என ஆசை கொண்டிருக்கிறது. அயல் நாட்டார்களுக்குத் தன்னை அறிமுகம் செய்து பிரபலப்படுத்த கவர்ண்மெண்டார் முன் வரவேண்டுமென்று முயற்சி நடந்துகொண் டிருக்கிறது. இதைப்பல சங்கங்களும் ஆதரிக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் மலாய் நாட்டைப்பற்றி ஓர் தமிழ் நூல் வெளி வருவது மிகவும் வரவேற்கத்தக்க, சிலாக்கியமான விஷயமே. இந் நூல் தேச சஞ்சாரிகளுக்கோ, பல காக்ஷிகளைக் காணும் பொருட்டு பிரயாணம் செய்பவர்களுக்கோ பல விஷயங்களைச் சுருக்கமாய் எடுத்துக்காட்டும் கைக்கடங்கிய புத்தகம் என்று நான் இதனால் சொல்லவில்லை. ஏனெனின், இந்நூலாசிரியரின் நோக்கம், மலாய் நாட்டை விளம்பரப்படுத்தும் நோக்கமல்ல. அவருடைய நோக்கம், தன்னுடைய தமிழ் பேசும் நாட்டினர்க்கு முக்கியமான குடியேற்ற நாடாகிய இம்மலாய் நாட்டை தென் இந்தியாவில் யாவரும் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டுமென்றதே, என்று நான் நினைக்கிறேன். ஸ்ரீமான் P. N. M. முத்துப்பழநியப்ப செட்டியார், இப்பினங்கு நக ரில் மிகவும் பிரசித்திபெற்ற நகர வாசிகளில் ஒருவராவர். அவரு டைய கல்வி, கேள்வி, ஆராய்ச்சி இவைகள் யாவரும் நன்கு அறிந் தவை. ஏற்றகாலத்தில்வெளிவரும் இந்நூலினால் ஸ்ரீமான் செட்டியார், தான் தங்கி, வியாபாரம், தொழில் செய்து, வசித்து வந்த இம்மலாய் நாட்டிற்கு பொருந்தும் பெருமையைத் தக்க வண்ணம் கொடுப்ப தோடு கூட, இந்நாட்டினோடு பல வருஷங்களாக சம்மந்தமும் போக்கு வரத்தும் வைத்துக்கொண்டும் இந்நாட்டின் விஷயங்களைப் பற்றி சரியாகத்தெரிந்து கொள்ளாமலிருக்கும் நமது தாய் நாட்டினர் களுக்கும் ஒரு பெரிய அரிய தொண்டையும் இயற்றியுள்ளார். இந் நூலிலுள்ள, மலாய் நாட்டின் நமது சம்மந்தமும் தேச சரித்திரம் எவ்வளவு பழமையோ, அவ்வளவு பழமையுமானது. இந்தியா வையும் மலாய் நாட்டையும் இம்மாதிரி பல பந்தங்கள் தொன்று தொட்டு பிணைத்துக்கொண்டிருக்க, தற்கால மலாய் நாட்டைச் சமமந்தப்படுத்தி தேச சரித்திர பூர்வமாகவோ அல்லது மலாய்

நாட்டு ஜனங்கள் மற்ற விஷயங்களைச் சேர்ந்த வழியாகவோ தமிழ் மொழியில் நன்றாகவும் புதுமையாகவும் உள்ள புத்தகங்கள் நாளிது தேதி வரையில் வெளி வராமலிருப்பது மிகவும் ஆச்சரியமான விஷயமே.

ஸ்ரீமான் செட்டியார் பல விஷயங்களை மிகவும் சிரமத்துடன் சேர்த்து அவைகளை இனிமையுடன் வாசிக்கும் வண்ணம் இணைத்திருக்கிறார். தமிழ் நடை மிகவும் தெளிவாக இருக்கிறது. வர்ணிக்கும் சக்தி மிகவும் உயர்வாய் இருக்கிறது. இந்நூலில் சொல்லப்படும் விஷயத்தால் அவருக்கு இந் நாட்டிலுள்ள அன்பையும், சிரத்தையையும் அதிகமாக விளக்கிக் காட்டுகிறது. விஷயங்களையும் விபரமாகவும், சரியாகவும் எடுத்துக் காட்டும் இவர் சக்தி மிகவும் பிரமிக்கத்தக்க வண்ணமாயிருக்கிறது. ஸ்ரீமான் முத்துப்பழநியப்ப செட்டியார் இந்நூலில் ஒவ்வொரு விஷயத்திலும் காணப்படும் நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறார் : கெடுதல்களை அறவே நிராகரித்திருக்கிறார். ஒருவர் மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற அவரது முயற்சியில் அவர் முழுப்பலன் அடைந்திருக்கிறார்.

பிரசுரமாகுமுன்னமே இந்நூலை நான் படிக்க நேர்ந்ததில் எனக்கு மிகவும் சந்தோஷமே. இந்நூல், வாசிப்போர்க்கு மிகவும் இனிமையையும் வாசிக்கு மின்பத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. பொது நல நோக்கமுடைய இந்நூலாசிரியரின் பெருந்தொண்டின் பலனை மறுபடியும் இந்நாடு, நம் தாய் நாடோடு என்று மழியா விதமாக சேர்ந்து இணைக்கப்பட்டு இன்புற்று வாழும் வண்ணம் இந்தியர்கள் மேன்மேலும் மலாய் நாட்டில் சிரத்தையும் உரிமையும் காண்பிப்பார்களானால், ஸ்ரீமான் செட்டியாரின் முயற்சி பலனுடைத்தாகும், என நான் நிச்சயமாக நம்புகிறேன்.

சிறப்புரை

பாரிஸ்டர். கே. எஸ். பிள்ளை அவர்கள்

(கே. சிதம்பரம் பிள்ளை.)

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்; இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" என அறிவுறுத்திச் சென்ருர் பாரதியார். அவ்வாக்கிற் கொப்ப, புதுப் புதுக் கருத்துகள் உலவும், இம் மலாய்நாட்டின் விஷயங்களை, ஸ்ரீமான் பி. என். எம். முத்துப்பழநியப்ப செட்டியார் ஜே. பி., "மலாயாவின் தோற்றம்" என ஒரு நூலை, தமிழில் இயற்றி, தமிழ் உலகிற்கு அளித்துள்ளது, மிகவும் போற்றுதற்குரியதாகும். இதுவரை இத்தகைய நூல், தமிழ் மொழியில் இயற்றப் படாதிருந்ததை, யாவரும் அறிவர். அக்குறையை அகற்றிப் பொருள் நுட்பம், மொழி நுட்பம், என்பன பெருக்கங்கள் கொண்டுள்ள இந்நூலை, அச்சு வாகனத்திலிருக்கும்போதே வாசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இம் மலாய் நாட்டின் பழக்க வழக்கங்கள் யாவையும் சுருக்கமாகவும், தெளிவாகவும்,எளிய நடையில், இனிய மொழிகளில், பண்டைக் காலம், இடைக் காலம், தற்காலம் என வகுத்து இவர் எழுதியுள்ளது மெச்சத் தகுந்ததாகும். இச்சாலச் சிறந்த முயற்சி இந்தியாவிற்கும், இந் நாட்டிற்கும் உள்ள தொடர்புகளை வாசகர்கள் கண்டுணரும் பான்மைகளைக் கொண்டிருப்பதனுல் இந்தியா, பர்மா, சிலோன், மலாயா வாழ் தமிழ் மக்கள் யாவரும் வாங்கிப் படித்து பயன் அடைவார்களென நம்புகிறேன்.

மலாய் நாட்டின் விஷயங்களைக் குறித்து பல ஆங்கில நூல்களை அறிஞர்கள் வரைந்துள்ளனர். அதே போல, தமிழ் இலக்கிய சங்க நூல்களிலும், அறிஞர்கள் மலாய் நாட்டின் விஷயங்களைக் குறிப்பிட்டிருப்பதை, கற்றவர்கள் நன்கறிவர். ஆயினும், இந் நூலில், ஸ்ரீமான் முத்துப்பழநியப்ப செட்டியார் ஜே. பி. தனது இயற்கை மணி மொழிகளில், தமிழ் மணம் கமழ, தற்கால நிகழ்ச்சிகளையும் விரிவாக எடுத்துரைப்பதினுல், இவரது நூலாகிய மலாயாவின் தோற்றம் அந்நூல்கள் யாவற்றிலும் சிறந்ததென்றே திண்ணமாகக் கூறலாம். மனத் தூய்மை, வினைத் தூய்மை, மாறில் வாய்மை, செயல் வன்மை என்ற சீரிய ஒழுக்கங்களைப் பெற்றிருக்கும் ஸ்ரீமான் செட்டியார் மலாய் நாட்டில் நல்லனுபவமும், நல்லறிவுமுடைய அறிவாளர்.

அறம் உடலாயும், அறிவு உள்ளமாயும், அன்பு உயிராயும் பொருந்தியிருக்கப் பெற்றவர் என்பதை, இவருடன் பழகிய யாவருமறிவர். தாய் மொழி அபிவிருத்தியிலும், தன் சமூகத்தினரின் மேன்மையிலும் இவர் ஆர்வம் கொண்டிருப்பதினாலேயே, பெரும் சிரமத்திலும், பொருட் செலவிலும், நிகரற்ற உழைப்பிலும் நிலைபடும் அறிய செய்கையாக இந்நூலின் ஆக்கியோனை முற்படும் நீர்மையையும் நேர்மையையும் கொண்டனர். இத்தகைய பெருந்தகையாளருக்கு, இவர் பேரறிவின் திறத்துக்கு, நமது தமிழ் மக்கள் அனைவரும், நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர் என்பதுவே எனது நோக்கமுமாகும்.

மலாயாவின் தோற்றம்

உள்ளுறை.

மலாயாவின் தோற்றம்

பட விளக்கம்

☞ ( ) இவ்வடையாளத்துக்குட்பட்ட எண்கள் நூலின் பக்கங்களைக் குறிப்பவைகளாகும்.

சிவமயம்

கணபதி வணக்கம்

(நேரிசை வெண்பா)

ஒன்றுதற் செவ்வா யுமையவள் மைந்தனைக்
கன்றுதற் றெய்வக் கணபதியைப்—பன்னாள்
அறிந்து அகத்திருத்தி அன்பொழுகப் பாடும்
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

சிவபெருமான் வணக்கம்

(நேரிசை வெண்பா)

எல்லோர்க்கு மொன்று மிறைவன் சிவன்பதத்தைச்
சொல்லார்ந்த இன்தமிழால் தோத்தரிப்பின்—நல்லோர்கள்
நாடுமற நற்பொருளும் நல்லின்ப வீடெல்லாங்
கூடுமின்று மெய்யெனவே கொள்.

ஆறுமுகன் வணக்கம்

(இன்னிசை வெண்பா)

கந்தா மணிவிளக்கே நாதாந்த நல்லொளியே
சிந்தா குலமகற்றுஞ் சித்தாந்தத் தேனமுதே
செந்தா மரைப்பாதச் செம்மால்! அறுமுகனே!
வந்தா தரிப்பாய் மகிழ்ந்து.

கலைமகள் வணக்கம்

(நேரிசை வெண்பா)

மண்ணுடனற் பொன்மணியு மக்களுளங் கொள்வதுபோற்
றண்ணிறைந்த தன்வளத்தாற் றந்துதவும்—வண்மைமிகு
மாமலைக ளார்ந்த மலாயாவின் தோற்றமதைப்
பாமகளே! முன்னின்று பாடு.

தமிழ்த்தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

பண்டுமறை நான்கிற்கும் பாவீந்து சங்கமிடங்
கொண்டநூற் பாவலர்க்குக் கோவளித்த—தண்டமிழே!
தொன்மை மலாயாவின் தோற்றமதைக் கூறுதற்கு
என்னகத்து ணீயார்ந் தியற்று.

உ

சிவமயம்.

மலாயாவின் தோற்றம்.

முதலாவது அதிகாரம்

முற்கால நிகழ்ச்சிகள்

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பது ஆன்றோர் வாக்கு. அவ்வாக்கின்படி அன்பர் வேண்டுவதளிக்கும் அத்தன், நினைப்பவர் மனங் கோயிலாக்கொண்ட நித்தன் எவ்வாறு கொடுக்கின்ருன்? மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கொண்ட குறிக்கோளுக் கேற்ப, வளம் பொருந்திய மண்ணுலும், வாழ்வைத் தருகின்ற பொன்னுலும், வாய்மை நிறைந்த மக்களாலும் அவரவரின் வினை, உள்ளப்படி கொடுத்துதவுகின்ருன். அத்தன்மைபோல தன்னைச் சார்ந்தோர்க்கு அவரவரின் உழைப்புக்கேற்ற உயர்வைத் தருவது மண் முதல் ஐம்பெரும் பூதங்களால் ஆக்கப்பெற்ற உலகம். அவ்வுலகத்திலும் சகல வளங்களையும் தன்னிடத்தே தாங்கி அண்டினேர்க் காதரவளிக்கும் நாடுகள் நம் தாய் நாடு போன்ற ஒரு சிலவே உள. அச்சிலவற்றுள்ளும் சிறப்புற்ருேங்குவது இம்மலாயா தீபம்.

இம்மலாயாவின் தோற்றத்தை, மாண்புமிக்க சிறப்புகளை வேத காலத்துடன் இணைத்து சரித்திர ஆராய்ச்சியினர் குறிப்பிடுவதில் "சுவர்ண தீபம்" எனவும் "யௌவன தீபம்" எனவும் குறிப்பிடுகின்றனர்.

சூரிய குலத் தோன்றல்கள் தொண்ணூற்று மூவர். அவர்களில் ஒருவரான இராமர் காலத்தின் நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பது இராமயணம். அதில் இலங்கை அரசன் இராவணன் எடுத்துச்சென்ற சிதாதேவியைத் தேட சுக்ரீவன் தன் படைகளை அனுப்புகிருன். அதில் ஒருபகுதியை இச்சுவர்ணதீபத்தையும் யௌவன தீபத்தையும் நாடித் தேடும்படி கட்டளை இடுகின்ருன். இதை வெகு விளக்கமாக கிஷ்கிந்தா காண்டம் 40-வது ஸர்க்கம் 30-வது சுலோகத்தில் எடுத்துரைக்கின்ருர் வால்மீக முனிவர்.

அதுபோல் சந்திரகுலத் தோன்றல்கள் நாற்பத்தைவர். அவர்களில் பாண்டவரின் பற்பல நிகழ்ச்சிகளையும் அவர்களின் ஆருயிர்த் தோழன், அர்ச்சுன சாரதி, கமலவதனன், கண்ணன் காட்டிய வழி

களையும் பாராட்டுவது பாரதம். அதை ஆக்கிய வியாசர் பாண்டவரிற் சிறந்தோனாகிய பார்த்தன் திக்கு விஜயம்செய்து வருவதாய்க் குறிப்பிடும்போது இவ்யௌவன தீபத்தையும் சுவர்ண தீபத்தையும் கண்டு தனது வெற்றிக்கொடியை நாட்டியதாய்க் கூறுகின்றார்.

அதுவுமன்றி அப்பாண்டவரின் தலைவரான தருமபுத்திரர் இராஜசூய யாகமொன்றை இந்திரப்பிரஸ்தத்தில் நடத்தினர். அவ் வமயம் பலதேச மன்னர்களுக்கு அழைப்பனுப்பப்பட்டது. அதே போல இம்மலாயா தீபகல்ப மன்னர்களுக்கும் அழைப்பனுப்பினர். இவர்களும் யாகத்திற்கு வந்து எல்லா மன்னர்களுடனும் கலந்திருந் தனர். அத்துடன் பாண்டவரில் கலாவல்லுநனான சகாதேவன் இப் பகுதிகளின் கண்காணிப்பாளனாக இருந்து அடிக்கடி வங்க வாயிலாய் வந்து சென்றிருக்கின்றான். இவைகள் பாரதம் சபா பருவத்தில் கூறு வதை வைத்து ஆராய்ச்சியாளர்கள் விளங்கச் செய்கிறார்கள்.

இதற்குச் சான்றாக யௌவனதீபம் என்ற சுமத்திரா, ஜாவா தீவுகளில் பீமன், அர்ச்சுனன், அசுவத்தாமன் என்பவர்களின் உருவ அடையாளங்கள் இன்றுமிருப்பதாய்க் கூறுகின்றனர். இவர்களின் உருவங்களை அங்கு நாட்டியதற்குக் காரணமும் பாரதத்திலேயே குறிப்பிட்டிருக்கிறது. பாரதத்தில் "பாண்டவர்கள் ஜாவா தீவில் ஒருகாலம் நாட்டாண்மை கொண்டார்கள். அதற்குத் தலைவனாக பீமன் அங்கு "டியங்கு" என்ற பகுதியில் இருந்தான். இதை "கௌரவர்கள்" அறிந்தார்கள். பொறாமை கொண்டார்கள். உடனே துரோணாச்சாரியாரின் புதல்வன் அசுவத்தாமனை அங்கனுப்பினார் கள். அவன் "டியங்கு" பகுதியின்மீது படை எடுத்து வந்தான். அதை யறிந்த பீமசேனன் அங்கு பல அகழிகளைத் தோண்டி அமைத்தான். அவ்வமயம் அசுவத்தாமன் இங்கு வந்ததை அறிந்த அர்ச்சுனனும் இந்திரப்பிரஸ்தமிருந்து அங்குவந்தான். அண்ணன் தோண்டிய அகழ்களை அதிக ஆழமாக்கினான். அத்துடன் அடுத்த குன்றில் உற்பத்தியாகி ஓடிய "சரயு" என்ற நதியை இவ்வகழிகளுக் குள் திருப்பி வெள்ளப்பெருக்கெடுக்கவும் செய்தான். இதை அறிந்த அசுவத்தாமன் அர்ச்சுனன் தங்கி இருந்த நகரை முற்றுகையிட்டான். அதை உணர்ந்த அர்ச்சுனன் தன் மாளிகையிலிருந்து ஒரு சுரங்க வழியாக வெளியேறினான். முற்றுகையிட்டிருந்த அசு வத்தாமனையும் அவன் படைகளையும் தாக்கினான். அப்படை களை அங்கு இருக்கை கொள்ளாதவாறு சிதறடித்தான். அசுவத்தாமன் அவனுக்காற்றாது தோல்வியுற்று அஸ்தினபுரத்தை அடைந்தான்." என்று கூறுகிறது. இந்நிகழ்ச்சிகளை அங்கு உரு

ஜாவாக்காரர்.





Javanese.

வச்சிலே நாட்டுவதற்கும் அடையாளங்களிருப்பதற்கும் காரண மெனப் புலப்படுகிறது. இவைகளைக்கொண்டு மலாய் நாட்டை "சுவர்ணதீபம்" எனவும் இதற்கடுத்த சுமத்திரா தீவுகளை "யௌவன தீபம்" எனவும் நாம் கொள்ள முடியும்.

இத்துடன் இம்மலாயா, ஜாவா, சுமத்திரா தீவுகளை சங்க காலத் துடன் இணைத்து "சாவகம்" எனவும் "நாகபுரம்" எனவும் "காழகம்" எனவும் கூறப்பட்டிருக்கிறது. ஐந்திலக்கியங்களில் ஒன்ருகிய மணி மேகலையில் இதற்குப்போதிய சான்றுகள் கிடைக்கின்றன. அதன் 14-வது பாத்திர மரபு கூறிய காதையிலிருந்து இத்தீவுகளின் தொடர்பு பல இடங்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதில் பிறந்த நாள் முதல் ஏழு நாள் வரை ஓர் பசுவினுல் காப்பாற்றப் பட்ட காரணத்தினுல் ஆபுத்திரன் என்ற பெயர் கொண்ட ஒருவன் ஓர் பிச்சைப் பாத்திரம் பெற்றுப் பல உயிர்களுக்கு உணவளிக் கின்ருன். அவனிருந்த பாண்டி நாட்டில் இந்திரனது ஏவலினுல் மழைவளம் பெருகிவிடுகிறது. மக்களெல்லாம் தாங்களே உழு துண்டு வாழ்கின்றனர். அதனுல் ஆபுத்திரனின் பாத்திரம் அறப் பணியாற்றவில்லை. இப்பாத்திரத்தால் உண்போரின்றி எல்லோரும் தாம் தாம் வாழவே இவன் ஏக்கமுற்ருன். பாத்திரத்தின் பலனை எங்களிப்பதென ஏங்கினுன். ஏங்கி,

"ஒருதனி வரூஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் தன்முன்
மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்ஞட்டுத் தண்பெயன் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்த துரவோய்! என்றலும்
அமரர்கோ ணுணையின் அருந்துவோர்ப் பெருது
குமரி மூத்தவென் பாத்திர மேந்தி
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறி"

(மணிமேகலை 14, 71-79.)

என்று சீத்தலைச் சாத்தனுர் கூறியபடி ஓர் பெரிய அரசன் போல வேருெருவருமின்றித் தானே தனியனுக வந்துகொண்டிருந்தான். அவன் முன், வாணிபங்கருதி பெருத்த நீர்ப்பரப்பையுடைய கடலில் மரக்கலத்தில் சென்று திரும்பிய பலர்தோன்றி வணங்கினர். வணங்கி, உரம்பெற்ற உத்தமனே! இங்கிருந்து நெடுந்தூரத்தில் "சாவகம்" என்ருெரு தீவு இருக்கிறது. அங்கு பல நாட்களாக

குளிர்ச்சிதரும் மழை பெய்யவில்லை. அதனால் ஊனை உடலாகப் பெற்ற உயிர்கள் எல்லாம் வாடி வதங்கி மடிந்து கொண்டிருக்கின்றன, என்று கூறினார்கள். அதைக்கேட்ட ஆபுத்திரன் என் கையிலுள்ள இப்பாத்திரம் குமரிப்பருவமுடையது. இதன் பலனை இந்திரனது கட்டளையால் இப்பாண்டி நாட்டினர் பெறவில்லை. அதனால் இது கிழத்தன்மையடையப் பார்க்கின்றது. அதற்கு நான் இடங் கொடேன். இதோ அச்சாவக நாடு செல்கின்றேன். இதன் பலனைப் பலர்பெறச் செய்கின்றேன். என்று கூறிப் பாண்டி நாட்டை விட்டுப் பாவையில் மிதக்கும் பாங்குள மரக்கலமேறிப் புறப்பட்டான்.

ஆபுத்திரனேறிய மரக்கலம் முதலில் மணிபல்லவத் தீவை அடைந்தது. அதிலிருந்தோர் இறங்கினர். அவனும் இறங்கினான். அத்தீவில் தங்கி மறுபடி மரக்கலம் புறப்படும் சமயம் ஆபுத்திரன் துறைமுகத்தில் இல்லை. கலமேறியோர் அவனும் ஏறிவிட்டதாய் எண்ணினர். நங்கூரமெடுத்து நாவாயை ஓட்டினர். ஆபுத்திரன் அங்கேயே தங்கிவிட்டான். தன்னுடன் வந்தாரும் சென்றுவிட்டனர். தானே தனியனாய் இருந்தான். அங்கு தனித்து வாழ்ந்த அவன் பலருக்கு உணவூட்டும் பாத்திரத்தின் பலனைப்பெற முடியவில்லையே என்றேங்கினான். இதனாற் பெறும் உணவை யான் தனியாகவா உண்டு வாழ்வது! அதற்கு எனதெண்ணம் இடந்தராது! அது சொந்தப்பற்றுடையோர் செய்யுங்காரியம். யானோ தனக்கென வாழ நினையாதவன். ஆகவே யாருமில்லா இத்தீவில் தனித்து வாழச் சம்மதியேன். இப்பிறப்பை ஒழித்து மறுபடி பிறந்தாவது யான் கொண்ட குறிக்கோளை முடிப்பேன், என்றெண்ணினான். தன் கையி லிருந்த பிச்சைப் பாத்திரத்தை ஓர் பொய்கையிற் புகுத்தினான். அப்பாத்திரத்தை நோக்கி, ஓ பாத்திரமே! என்போன்று உலக மக்களுக்கு உணவூட்ட எண்ணும் ஒருவர் கையில் நீ சேர்வாயாக! என்று கட்டளை இட்டான். தானும் உயிர் துறந்தான்.

அவ்வுயர் எண்ணியபடியே,

"மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளுந் தலைத்தாள் வேந்தன்
ஆவயிற் றுதித்தனன்......................."

(மணிமேகலை 14, 101—104)

என்று கூறியபடி மறுபடியும் சாவக நாட்டில் வந்து தோன்றியது.

அவ்வுயிர் முற்பிறப்பில் ஓர்பசுவால் காப்பாற்றப்பெற்றது. அவ் வெண்ணத்துடனும் சாவக நாட்டின் மக்களைக் காக்க வேண்டு மென்ற எண்ணத்துடனும் பிரிந்தது. அதனால் சாவக நாட்டில் ஓர் பசுவின் வயிற்றிலேயே தோன்றியது. அதை அந்நாட்டை அப் போது ஆண்ட அரசன் கண்டு பெற்று அக்குழந்தைக்கு புண்ணிய ராஜன் என்ற பெயரைக் கொடுத்தான். அப்புண்ணிய ராஜன் ஆண்ட காலத்தில் அந்நாட்டுக்கு ஆபுத்திர நாடெனவும், சாவக நாடெனவும், அதன் தலைநகர் நாகபுரமெனவும் கூறப்பட்டது. அவன் அரசாண்டது சிலப்பதிகார காலம். சிலப்பதிகாரம் தோன் றியது கி.பி. 114. அதற்கு முன்பே ஆபுத்திரன் சாவகத்தை ஆண்டான். அவ்வமயம் காவிரிப்பூம் பட்டினத்தில் பெருங்குடி வணிக மரபிற்றோன்றி கற்றோருள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் சிலப்பதிகாரக் காதைக்கு தலைவனாக விளங்கிய கோவலனுக்கும், அவன் காதற்கிழத்தியாய் இருந்து அவன் வாழ்நாள் முடிவுபெற்ற தும் உண்மைத் துறவுபூண்ட உத்தமி மாதவிக்கும் பிறந்த மங்கையர் திலகம், பெண்ணிணையில்லாப் பெருவனப்புற்றாள், மண்ணினிற் சிறந்த மணிமேகலை என்னும் மாதுவின் கையில் முற்கூறிய பிச்சைப் பாத்திரம் கிடைத்தது. அதனால் அவள் ஆபுத்திரனை யறிந்து சாவக நாட்டை அடைந்தாள். அவ்வரசனின் பழம்பிறப்பையும் பாத்திரத் தின் சிறப்பையும் கூறினாள்" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்குச் சான்றாக மற்ற சங்க நூல்களும் கூறுகின்றன. இவ்வாறு சாவகம் சுவர்ணதீபம் யௌவனதீபம் என்று கூறப்பெறும் இந் நாட்டிற்கும் நமக்கும் என்றென்றும் தொடர்பிருந்தது என்பதைப் பலவழியாலும் அறியக்கிடக்கின்றது.

மேற்காட்டிய ஆதாரங்களைக் கொண்டு திரு "ரோலண்ட் பிராடல்" என்பவர் ஓர் நூல் எழுதியுள்ளார். அதில் மலாயா தீபகல்பத்தில் முதலாவதாகக் குடியேறியவர்கள் இந்தியர்களே. அவர்களே இப்பகுதியில் நாகரீகம் இன்னதென்பதைக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். பண்டைக்காலங்களில் கடல் வியாபாரத்தில் தனிச்சிறப்புக் கொண்டிருந்தவர்களும் இந்தியர்களே அவர்களே எல்லாவற்றிற்கும் காரண கருவிகளாக இருந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றார். இந்தியாவின் கலைப்பெருக்கே இந்நாட்டிற்கு அறிவூட்டியது என்பதற்கு ஆதாரமாக வியாசரால் ஆக்கப் பெற்ற மஹாபாரதத்துக்கு மலாய் மொழியில் மொழி பெயர்த்த எட்டுப் பிரதி ஒன்றும் தமிழில் ஆக்கப்பெற்ற இராமயணத்தின் மலாய் மொழி பெயர்ப்பொன்றும் இங்கிலாந்தில் ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகப் புத்தக சாலையில் இருப்பதாய்க் கூறுகின்றனர்.

பண்டைய உலகின் முக்கிய மக்களாக இருந்த போனீஸியர், யகூதர், அசிரியர், கிரேக்கர், எகிப்தியர், ரோமர் முதலியவர்களு டனும் பின் நாட்களில் செல்வாக்குடன் வாழ்ந்த துருக்கியர், வெனிஷியர், போர்த்துக்கியர், உலாந்தர், ஆங்கிலேயர் முதலியவர்களு டனும் சுமார் முப்பது நூற்றாண்டுகளாக இந்தியா கடற்றுறைமுக வியாபாரங்களில் பிணைக்கப்பட்டிருந்தது. இதைச் சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். அவைகளின் சிறப்புகள் இந்நூலில் அங்கங்கே கூறப்படும்.

பர்மா, கம்போடியா, இந்தோச்சைனா, ஜாவா, சுமத்திரா, போர்னியோ, மலாயா முதலிய கிழக்கு நாடுகளில் ஜப்பான்வரை இந்தியர் செல்வாக்குக் கொண்டிருந்தனர். தென் சீனாவின் பல இடங்களிலும் அரேபியா, பெர்சியா, கிழக்காப்பிரிக்கா முதலிய இடங்களிலும் தென்னிந்தியரின் நாகரிகங்கள் புகுந்துள்ளனவென்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள்.

மஜாபஹித்தில் இந்து அரசியலே தலைசிறந்து விளங்கியது. இதன் காரணமாக ஏராளமான இந்துக் கோயில்கள் அங்கு கட்டப் பட்டன. கெட்டுவின் வடபகுதியில் உள்ள கெண்டல் பரப்பில் சைவசமயம் தலை சிறந்து இருந்தது. இவையல்லாத மற்ற இடங் களில் மஹாயன மார்க்க பௌத்த ஆலயங்கள் ஏராளமாகக் கட்டப் பட்டன. கி. பி. 656ல் மகாராஜ ஆதித்தியகர்மன் என்பவர் இந் நாட்டை ஆண்டார். அப்போது டியாங் பகுதியில் திராவிட சிற்ப ஆலயங்கள் பல கட்டப்பட்டன. சிவன், துர்க்கை, விநாயகன் என்ற தெய்வங்களின் கோயில்கள் குடிகொண்டன. அர்ச்சுனோவென்ற இடத்தில் சண்டி, தாராவதி, பராசத்தி என்ற தேவிகளுக்கு ஆல யங்கள் நிறுவப்பட்டு மக்கள் வழிபட்டனர். இதேபோல ஜாவா தீவில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன. இங்குள்ள ஆலயங்களில் எல்லாம் மிகப் பெரிதாக விளங்குவது “போரோ புதூர்” என் பவை. இவ்வாலயம் புரோகோவிற்குச் சற்று மேற்கில் கெட்டுவிற்கு அருகில் அமைந்திருக்கிறது.

இப்போரோ புதூர் ஆலயத்தையும் அதன் சிற்பங்களின் சிறப்புகளையும் ஆராய்ச்சியாளர் ஓர் அளவிட்டு உரைக்கமுடியவில்லை என்கின்றனர். அவை ஏழு நிலைகள் அல்லது அடுக்குகளால் ஆக் கப்பெற்ற ஓர் கட்டிடமாகும். அதன் அடித்தலம் குறுக்கு நெடுக் கில் சற்றேறக்குறைய 400 சதுர அடிகளுக்கு மேலிருப்பதாய்கணக் கிடப் பட்டிருக்கிறது. சிற்பிகள் தங்கள் திறமை கொண்டு அதன்

பத்தாக்காரர்.



Batakschi.

ஒவ்வோர் அடுக்கிலும் ஏராளமான சிற்பங்களைத் தங்கள் உளியினால் செதுக்கியுள்ளார்கள். அச்சிற்பங்களின் ஒவ்வோர் அணுவும் உயிரோடு அறிவும், அறிவோடு இன்பமும் செறிந்திலங்கக் கடவுள் காட்சிகளையும், இயற்கைத் தோற்றங்களையும் பெருமிதமாகத் திரட்டி வைத்திருக்கும் சிற்பிகளின் திறனே திறன். அதிலுள்ள சிற்பவடிவங்களை ஒன்றன்பின்னொன்றாக ஒழுங்காய்ப் பரப்பினால் சுமார் 3 மைல்களுக்கு அதிகமான நீளமிருக்கும்.

அவற்றின் மேன்மையைக்குறித்து எழுதி இருக்கும் ஹாவெல் துரையவர்கள் "போரோ புதூர் சிற்பங்களின் பாரமார்த்திகலட்சியமானது தமது சிற்பத்தொழில் சம்பந்தமான கடுமை நிறைந்த விதிமுறைகளின் கட்டுத்தளைகளை உதறி எறிந்து கலாவல்லுநரும் சிற்ப இலக்கண அறிஞர்களும் இதுசரி, இது பிழை எனக் கூறும் வரம்பு நிலையையுங் கடந்து தெய்விகமும் ஆவேசமும் மலிந்த வார்த்தைகள் அதனைச் செவியுறுவோரின் உள்ளத்தில் ஆழமாகப் பதிவதைப் போன்ற நீடித்த உணர்ச்சியை உண்டாக்குகிறது. தெய்விகச் சிறப்பின் உற்சாகம் பொங்கித் ததும்பும் இவ்வற்புதச் சிற்பவடிவங்களின் உயர்வைக் கருதுகையில் இவற்றிற் கிணையாக ஒப்பிட்டுக் கூறக்கூடிய ஐரோப்பிய சிற்பங்களையோ, சிற்பிகளையோ காண்பதே அரிது......... ஐரோப்பாவின் எல்லைக்குள்ளே இதுபோழ்து உயிர்வாழ்ந்திருக்கும் எந்தச் சிற்பியும் அத்தகைய பேரழகு வாய்ந்த சிற்பங்களையேனும், அல்லது சிற்பவடிவங்களையேனும் தோற்றுவிப்பதற்கு மனதாற்கூடச் சிந்திக்கமுடியாது." என்றும்

அவரைப்போன்று ஸர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் என்பவர் கூறும்போது "என் வாழ்நாள் முழுவதும் மனித உழைப்பின் சரித்திரத்தில் இவ்வளவு உன்னதமானவையும் பரிபூரணமாய்த் தோற்றத்தைத் தருவதுமான அரிய வேலைப்பாடுகள் அமைந்த சிற்ப விளக்கங்களை நான் வேறெங்கும் கண்டதில்லை" என்றும் கூறுகிறார்கள்.

இத்தகைய ஆலயங்களாலும் அரசியல்களாலும் இங்கு பண்டைக் காலங்களில் இந்துமதம் பெருகி இருந்தது. பல அரசியல் நிருபர்களின் ஆற்றல் மிகுந்த செங்கோல் பரவி இருந்தது. அநேக மரக்கலங்களில் வந்து வியாபாரிகள் நிறைந்திருந்தனர் என்பவைகள் நாம் அறிய முடியும்.

இதற்குமேல் பாலிலம் போக் என்ற இடங்களில் இன்னும் இந்துமத அடையாளங்களை அதிகமாகக் காண்கின்றனர். சுமத்தி

ராவில் நான்காம் நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இந்துமதத்தில் அந்நாட்டினர் ஈடுபட்டிருந்தனர். அந்நாட்டின் மொழியில் வழங்கும் பல வார்த்தைகள் வடமொழிப் பதங்களாகவே இருக்கின்றன. அதுபோலவே மலாய் மொழியிலும் பல வடமொழிப் பதங்களைக் காண்கின்றோம். இவைகளினால் இந்நாட்டினர் இஸ்லாம் மார்க்கம் தழுவி முஸ்லிம்கள் ஆகுமுன் இந்துமதப் பற்றுடையவர்களாகவே இருந்திருக்க வேண்டுமென்பது நிச்சயமாகும். சுமத்திராவின் பாடாங் பகுதியில் "தாறுதாதார்" என்ற இடத்தில் இந்தியரின் அரசாங்கம் இருந்திருக்கிறது. இவ்வரசாங்கம் மீனங்காபூவின் தலைநகரத்திற்கு அருகில் இருந்ததாய்த் தெரிகிறது. டெல்லியின் புடார் பார்திபி பக்கத்தில் ஜம்பிக்கடுத்த பம்பி ஆற்றுத் தீரத்தில் லாகாட்டுக்கு மேற்புறமாகிய பாலம்பாங்கின் உள்நாட்டில் இந்திய அரசாங்கங்கள் இருந்தன. கம்பார் நதிக்கருகில் உள்ள மூவாரா டாக்கூஸ் என்ற இடத்தில் இந்துச் சின்னங்கள் பாழடைந்து கிடக்கின்றன. அங்கு பதினோராவது நூற்றாண்டில் கட்டப்பட்ட 40 அடி உயரமுள்ள ஒரு கோபுரம் பௌத்த அடையாளமாக இன்றுமிருக்கிறது. பாகார் ருஸாங்கில் வடமொழிக் கல்வெட்டுகள் ஏராளமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இந்துக்கள் கொண்டாடும் அரசமரத்தை அந்நாட்டின் பாட்டர்கள் மிக்க பௌத்திரமான மரமென்று இன்றும் போற்றுகின்றனர். பாலாம்பாங் ஜம்பி, இந்திரகிரி என்ற பகுதிகளில் சைவசமயம் தழைத்திருந்தது. இதன் வடபகுதிகளில் புத்தமதம் பரவி இருந்தது. இரண்டு சமயங்களும் ஒழுக்கத்திலும், ஒத்துழைப்பிலும் நெடுங்காலம் சுமத்திரா, ஜாவா தீவுகளில் தலை சிறந்து விளங்கியது. அச்சின் அரசன் 1206ம் ஆண்டிலும் செலிபீஸின் புக்கிஸ்கள் 1495ம் ஆண்டிலும் முஸ்லிம்கள் ஆனார்கள். இதற்குமுன் இவர்களும் சைவ, பௌத்த சமயங்களின் வழிபாட்டையே கொண்டிருந்தனர்.

தென்னாட்டில் சைவசமயத்தினர் அரசாண்ட காலத்தில் கலிங்க நாட்டினர் இப்பகுதிகளுக்கு வந்து அரசாண்டிருக்கின்றனர். கலிங்நாடு இந்தியாவில் கங்கைநதிச் சங்கமத்திலிருந்து கிருஷ்ணா நதிச் சங்கமம் வரை வங்காள குடாக்கடற்கரையை ஒருபகுதி எல்லையாகக் கொண்டிருந்தது. இக்கலிங்கர்களின் அரசாட்சி மலாயாவில் பல ஆண்டுகள் வலுத்திருந்தன. இவர்களுக்குமுன் ஜாவா, சுமத்திரா, கம்போடியா, இந்தோச் சைனா, மலாயா முதலிய இடங்களில் சைவர்களும், பௌத்தர்களும் ஆதிக்கங்கொண்டு அரசாண்டனர். அவர்களைப் பார்க்கினும் கலிங்கர் மிகக் கொடுங்கோல் ஆட்சி செலுத்தி இருக்கின்றனர். காரணம்? பௌத்தர்கள் மிக

இரக்க குணமுடையவர்கள். சைவர்கள் அச்சிந்தையோடு பிறர்க்குதவுவதே பிறவிப்பயன் என்ற கருத்தைக் கொண்டவர்கள். கலிங்கர்களோ! சுயநலப்பற்றுடையவர்கள். அதனுல் அவர்கள் ஆட்சி, மக்களுக்கு அல்லலைத் தந்தது. அத்துன்பம் தாங்காது அன்றிருந்த இந்நாட்டு மக்கள் கலிங்கர்களை "ஓராங் கிள்ளங்கி" என்றழைத்தனர். இன்று அப்பெயர் தென் இந்திய தமிழர்களுக்கு வழங்கப் பெறுகிறது. என்னேவிந்தை?

கி. பி. ஏழாம் நூற்றுண்டில், மலாயா தீப கல்பத்தில் பல்லவர்களின் ஆதிக்கம் வலுத்திருந்தது. அவர்களின் கப்பல்கள் அநேகம் கெட்டாவுக்கு வந்து கொண்டிருந்தனவென்று ஸர் வால்டர் எலியட்டும், ஸர் ரிச்சார்ட் வின்ஸ்டெட்டும், தங்கள் ஆராய்ச்சி நூலில் அறிவிக்கின்றனர். சின யாத்ரீகர்களான பாஹியான், ஹியூன் திஸாங், இதிஸிங் என்பவர்கள், தங்கள் நூல்களில் சினுவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலுள்ள "தென் இந்தியக் கடல்" கொண்டோர் தீவுகள், சுமத்திரா, ஜாவா, மலாக்கா, ஜலசந்தி, பர்மா, அரிக்கன், தமலூக், இலங்கை, மலாயா என்பவைகளின் தீவுகளைக் கொண்ட நீர்ப்பரப்புடனிருந்தன வென்று கூறுகிருர்கள். இதிஸிங் குறிப்பிடுவதில், கெட்டாவிலிருந்து நாகபட்டினத்துக்கு நாவாய் மூலம் முப்பது நாட்களில் சேரலாம் எனவும், பின் இரண்டு நாட்களில், இலங்கையை அடையலாமெனவும் எழுதியுள்ளார்.

பல்லவர்களின் சிறப்புகளை வின்ஸ்டெட் விளக்கும்போது பேரா நதிச் சங்கமத்திற் கருகிலுள்ள "டிண்டிங்" ஸிற்கு அடுத்து **கங்கா நகரம்** என்ற இடத்தில் **கங்கா பல்லவன்** என்ற மன்னன் ஆட்சி புரிந்தான் என்று கூறுகிருர். இதை, 11-ம் நூற்றுண்டில் சோழ மன்னர்கள் படை எடுப்பு அழித்து விட்டதாய் தெரிகிறது. பல்லவராட்சி மலாயாவில் கெட்டாவுக்கும் லிகோவுக்கும் இடையில் இருந்த தென்பார்கள். இப்பல்லவர்கள், மலாய் நாட்டின் பெண்களை மணஞ்செய்துகொண்டு வாழ்க்கை நடத்தினுர்கள். அதனுல் இந்து மத அரசர்களின் வழக்கங்கள் பல இன்றும் மலாயா மன்னர்களின் வழக்கத்தில் புகுந்திருக்கின்றன.

மலாயாவில் இந்து மன்னர்களின் ஆட்சி ஸ்ரீ விஜயா என்ற இடத்தில் உண்டாகியது. இந்நகரையே ஸ்ரீபோஜம் என்றழைத்திருக்கின்றனர். இந்நகருக்கு முதலாவது தோன்றிய மன்னனும் ஸ்ரீ விஜயா என்ற பெயரையே கொண்டிருந்தான். இவ்வரசன் அழகிற் சிறந்தவன். ஆண்மை மிகுந்தவன். அதனுல் இவன் செங்கோல்

சுமத்திராவின் பாலம்பாங் வரை பரவி இருந்தது. பிறகு ஸ்ரீவிஜயா வுக்கு வந்த செய்லேந்திர மன்னர்கள் சுமத்திராவுக் கப்பாலும் தங்கள் செங்கோலைச் செலுத்தினார்கள். ஏழாம் நூற்றாண்டில் இவ் வாட்சி பாங்கா தீவையும் தாண்டியது. அடுத்த நூற்றாண்டில் மலாயா தீபகல்பத்தின் பான்டன் குடாக்கடல் வரை எட்டியது. ஸ்ரீவிஜ யாவின் சீரும்சிறப்பும் குறித்து, டாக்டர்களான கோயிடெஸ், குரும் என்பவர்கள், தங்களது நூல்களில் விரிவாகப் புகழ்ந்துரைக்கின்றனர்.

கி. பி. 414ல் சீன யாத்ரீகரான **பாஹியான்** மலாய் நாட்டுக்கு வந்தார். அவ்வமயம் இங்கு இந்துமதத்தைச் சார்ந்த பலரையும், சில துறவிகளையும் கண்டதேயல்லாது பௌத்த மார்க்கத்தைச் சார்ந்த பலரையோ அம்மதக்கோட்பாடுகளையோ கண்டதில்லையெனக் கூறுகிறார். அவர் கூறியபடி அன்று அந்நாட்டில் இந்து சைவசமயங் களே பரவி இருந்திருக்கிறது. அதன்பிறகு அந்நாட்டின் அரசனது தாயார் ஓர் நாளிரவு கனவுகண்டாள். அக்கனவில், சாந்தமும் சீலமும் ஓர் உருக்கொண்ட பெரியார் ஒருவர் மேகவாகன ரூடராய் தம் நாட்டில் வந்திறங்கப் போவதாய் தோன்றியது. அதே போல மறுநாட் காலை காஷ்மீர் நாட்டை ஆண்ட அரச குமாரன் **குணவர் மன்** பட்டந்துறந்து, பௌத்த சமயத்துறவியாய் எங்கும் தன் கொள்கையைப்பரப்பப் புறப்பட்டவன், இலங்கையினின்றும் அங்கு வந்தான். அவன் அங்கு வந்தது கி. பி. 423. அவனுக்கு அங்கு தக்க உபசாரங்கள் செய்யப்பெற்றது. மறுநாட் காலை, அவன் பிரசார த்தால் அரசனின் தாயார் புத்தமதக் கொள்கையைப் பற்றினாள். சின்னாளில், அவளின் வேண்டுகோட்படி அரசனும், பலரும் அம்மார் க்கத்தைத் தழுவினர். அங்கு தன் சமயத்தைப் பரப்பிய **குணவர்மன்** பின்னும் சின்னாள் இருந்தான். அப்போது அத்துறைமுகத்துக்கு "நந்தி" என்னும் இந்தியனுக்குச் சொந்தமான ஓர் நாவாய் வந்தது. அதில் குணவர்மன் ஏறி சீன தேசத்தை அடைந்தான். அங்கு கி. பி. 476-ல் **நான்கின்** என்ற இடத்தில் காலஞ்சென்றான். அக்குண வர்மன் காலத்திலேயே மலாயாவில் பௌத்தமதம் பரவியது என்பது இதனால் விளங்கும்.

கி. பி. 688-691 வரை சீனயாத்ரீகரான **இதிஸிங்** ஸ்ரீ விஜயா வில் தங்கி இருந்திருக்கிறார். அப்பொழுது அங்கு **பாலம் பாங்கில்** செய்லேந்திர மன்னர்களின் ஆட்சிஇருந்ததெனவும், ஸ்ரீவிஜயாநகரம் வடமொழிப் பயிற்சிக்கு ஓர் கல்வி நிலையம் போன்றிருந்ததெனவும், இந்தியாவுக்குச் செல்லும் சீனக் குருக்கள்கள், இங்கேயே தங்கி வட மொழி பயின்று சென்றார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். இந்நாட்

டின் மன்னர்கள் பெரு மரக்கலங்கள் வைத்து கடலில் ஓட்டி பாலம் பாங்கிற்கும் இந்தியாவுக்கும் வியாபாரம் நடத்தினார்கள் என்றும் அக்கப்பல்கள் ஒன்றிலேயே தான் சுமத்திராவிலிருந்து இந்தியாவின் தாம்ரலிப்தி (தமலுக்) என்ற ஊருக்குச் சென்றதாகவும் கூறுகின்றார். ஸ்ரீ விஜயாவிலிருந்த பேரரசரே, மலாய் நாட்டையும் ஆண்டதாகவும் இன்னும் பல சிற்றரசுகள் இந்த மன்னர்களின் கீழ் இருந்தவை களையும் தாங்களே தனியரசு கொண்டு ஆட்சி புரிந்தனர் என்றும் கூறுகின்றார். கி. பி. 686-ல் ஸ்ரீ விஜயா, ஜாவா மீது ஒரு படை யெடுப்பை அமைத்ததெனவும் கி. பி. 778-ல் மத்திய ஜாவாவின் "காலாஸான்" என்ற நகரில் புத்தமத ஆலயம் ஒன்று கட்டிய தாகவும், இவ்வாலயம் செய்லேந்திர மன்னனாலேயே கட்டப்பட்ட தென்றும், சுமார் ஒரு நூற்றாண்டு வரை இம்மன்னர்களின் பிரதி நிதிகளே, ஜாவாவை ஆட்சி புரிந்தனர் என்றும் கூறப்பெறுகிறது.

கி. பி. 775-ல் மன்னர்கள் பல புத்தமதக் கோயில்களைக் கட்டி யுள்ளார்கள். இவை சியத்தின் கீழ்ப்பகுதியிற் கண்டெடுக்கப் பட்ட சில கல் வெட்டுகளால் புலப்படுகிறது. பேரா, கின்டா பகுதியிலுள்ள பேங்காலன் என்ற இடத்தில் புரோன்ஸ் சிம்மா சனத்தில் அமைக்கப்பெற்ற புத்த உருவச்சிலை ஒன்று கண்டெடுக்கப் பட்டது. அவை ஏழாம் நூற்றாண்டினதாக இருக்க வேண்டு மென்று, ஸர். ரிச்சார்ட் வின்ஸ்டெட், தமது நூலில் குறிப்பிடுகிறார்.

மலேயன் ஆனல்ஸ் என்ற சரித்திர ஏடுகளில் "பாலம்பாங்" மன்னர்கள் "மகாமேரு" குலத்தினர்கள் எனவும், மகாமேரு என்றால், பெரியமலை என்ற இந்தியப் பதமெனவும் குறிப்பிட் டுள்ளது. இவர், இப்பதத்தை இந்து சரித்திரங்களில் அடிக்கடி படிக்கலாம் எனவும் குறிப்பிடுகின்றார். இதுபோன்ற இன்னு மொரு நூலில், இந்தியாவில் நாகபட்டினம் என்ற துறைமுகத்தில் பாலம் பாங்கின் இருமன்னர்களினால், ஒரு புத்த ஆலயம் கட்டப் பட்டது. அதன் வளர்ச்சிக்காக, ஒரு கிராமமும் வாங்கி மானிய மாக விடப்பட்டது என்றும், இவ்விரண்டு மன்னர்களுக்கும் பின் வந்தோர்களை கடாஹாவினதும், ஸ்ரீ விஷ்யாவினதும் மன்னரெனக் குறிப்பிடுவதனால், இக்கடாஹா என்பது "கெட்டா" எனவும், ஸ்ரீ விஷ்யாவென்பது "ஸ்ரீ விஜயா" எனவும் கொள்ள இட மிருக்கிறது.

இவ் விஜயாவில் இந்தியர்களின் வியாபாரங்கள் பெருகி இருந் தது. அவர்களுக்குப் பதினோராம் நூற்றாண்டில், இங்குள்ள மக்க

னால் சில இடுக்கண்கள் விளைந்தது. அதைத் தடுப்பதற்காக இராஜேந்திர சோழன் (முதலாவது மன்னன்) கி. பி. 1017-ம் ஆண்டில் ஸ்ரீ விஜயாமீது போர் தொடுக்க எண்ணினன். அதற்குத் தன் படைகளை, நாகபட்டினத்தின் துறைமுகத்திலிருந்து அனுப்புவதைப் பார்க்கினும், கலிங்க நாட்டின் துறைமுகம் ஒன்றில் இருந்து அனுப்புவது இலகுவாய்த் தெரிந்தது. அதற்காக அங்கு தன் படைகளை அனுப்பினன். அப்போது, கலிங்க நாட்டை ஆண்ட அரசனுக்கும், ஸ்ரீ விஜயாவின் மன்னனுக்கும் நெருங்கிய நட்பு; அதனால் கலிங்க நாட்டரசன் தடுத்தான். அந்நாட்டரசனோடு இராஜேந்திர சோழன் போர் தொடுத்து, முதலில் அங்கு வெற்றி கொண்டார். அப்பால் கி. பி. 1025-ம் ஆண்டில், ஸ்ரீ விஜயாவின் செய்லேந்திர மன்னன்மீது போர் தொடுத்து, அதிலும் வெற்றி பெற்றார். கி. பி. 1030-ம் ஆண்டில், இராஜேந்திர சோழ மன்னனின் வெற்றி, கெட்டா மீதும், ஒரு குன்றின் மீதிருந்த "மேலயூர்" கோட்டை மீதும், நிகோபாரிலும் ஏற்பட்டது. இவ்விபரம் தஞ்சாவூரில் கண்டெடுக்கப்பட்ட 1030-ம் ஆண்டு கல் வெட்டு ஒன்றால் புலப்படுகிறது.

இன்னும் இம்மன்னன் "லங்கா சூகர்" "தலைபு கொளம்" "பெரியதாம்ர லிங்கா" "மெபுரித்திங்கம்" "மாம்பலம்" "மேவலிம்பங்கம்" என்ற இடங்களையும் கைப்பற்றி பாஹாங் வரை ஒரு புறமும், மறுபுறம் கிராபூசந்தி வரைக்கும் வெற்றிகொண்டார் என்றும் தெரிகிறது. இச் சோழ மன்னன், டிண்டிங்ஸின் கங்கா நகரத்தை அழித்துவிட்டதுமன்றி, ஜொஹோர் நதியின் கிளைநதியாகிய லெங்கயூக் கரையில் இருந்த ஒரு கோட்டையையும், பழய சிங்கப்பூரா வெனக் கருதும், துமாஜிக்கையும் கைப்பற்றினர் எனவும் குறிப்பிடுகிறது. ஸ்ரீ விஜயாவின் செய்லேந்திர மன்னன் சினச் சக்கரவர்த்திக்கு எழுதிய ஓலை ஒன்றில், தென்னிந்திய மன்னர்கள் தமது நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டனர் என்று குறிப்பிட்டுள்ளார். இவைகளுக்குப்பின் கிடைக்கும் சின எழுத்தாதாரங்களில் ஸ்ரீ விஜயாவின் பேரரசர்கள், மலாய் நாடு முழுவதையும் ஆண்டார்கள் என்றும், அத்துடன் இலங்கையின்மீதும் ஆட்சி செலுத்தினர்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

அதிற் கூறியபடி, ஸ்ரீவிஜயாவின் அரசரே மலாயாப்பகுதிமுற்றிலும் ஆண்டதுடன், சினத்திற்கும் அரச தூதர்களை அனுப்பிவந்தார். இவ்வாறு எங்கும் வெற்றிக்கொண்டு அரசுசெலுத்தியவர், இராஜேந்திர சோழர். இவர் கெட்டாவைக் கைப்பற்றியபின், அப்பகுதியை

பழய மன்னனுக்கே திருப்பிக் கொடுத்ததாகவும் தெரிகிறது. இக் கெட்டாவிற்கும், இந்தியாவிற்கும், முன்னர் தொடர்பிருந்ததைப் பலமுறை கூறப்பட்டிருக்கிறது. இராஜேந்திர சோழர் காலத்துக்கு முன்பு அரசாண்ட சோழர்கள் காலத்தின் சிறப்பைக் கூறுவது பட்டினப்பாலை என்ற சங்க நூல். அதில் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகப் பெருக்கைக் கூறும்போது **"காழகம்"** என்றதுறையி லிருந்து, பல பொருள்கள் வந்ததாய்க் கூறுகிறார். அக்காழகத்தை **"கடாரம்"** என்ற பெயரால், உரையாசிரியர் குறிக்கிறார். அதுவே **கெட்டா** வென்று பிறகு வழங்கப்பட்டிருக்கிறது. அக்கெட்டாவை, இழந்த மன்னனுக்கே திருப்பிக்கொடுத்த பெருமை, இராஜேந்திர சோழனுக்கே உரியது. இவ்வாறு திருப்பிக் கொடுக்கப்பட்டதை அவரே கி. பி. 1068-ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் "அலைகடலுக் கப்பால் வெகுதூரத்திலிருந்த நாடுகளை வென்றேன். அதில் ஓர் மன்னனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஆகவே, அவன் ஆண்ட "கெட்டாவை" அவனுக்கே கொடுத்துவிட்டேன்" என்று கூறுகிறார். இதுதான் மன்னர்களுக் கழகு !

இந்த அரசியலுக்குப் பிறகு, மலாயாவில் சில குழப்பங்கள் நேர்ந்திருக்கிறது. 1273-ம் ஆண்டில், மலாயர்கள் மீது "**துமா பெல்லின கோர்த்தனுகாரா**" என்ற தலைவன், ஒரு படை யெடுப்பை அமைக்க அதனால் மலாயா தீப கல்பத்தின் தென் பகுதி பாழ டைந்தது. அத்துடன் சிங்கப்பூராவின் ஆட்சியும் வீழ்ச்சியுற்றது. இதனைச் சிங்கப்பூர் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் காண்கலாம். 1256-ம் ஆண்டில், கெட்டாவின் **சந்திரபாநு** என்ற மன்னன், இலங்கையிலிருக்கும் புத்த பகவானுடைய பல்லை, மலாய் நாடு கொண்டுவரத் தீர்மானித்தான். இலங்கை மன்னன் அதற் கிணங்காது மறுத்தான். அதற்காக இவன் பாண்டி மன்னனுடைய துணையில் படையெடுத்து தோல்வியுற்றான். 1275-ல், கிழக்கு ஜாவாவில் "**இருதனுகரன்**" என்று ஒரு மன்னனிருந்தான். இவன் சுமத்திராமீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றினன். 1286-ம் ஆண்டில், இந்நாட்டை "**ஸ்ரீ மத் திரிபுவனராஜ மௌலி வர்மதேவர்**" என்பவர் ஆண்டுவந்தார். அதே சமயம், மலாயாவில் பாஹாங் பகுதியை "**நாகராக்த கர்மன்**" என்பவர் ஆண்டார். கி. பி. 1281-ல், சுமத்திராவுடன் குஜராத்திகள் வியாபாரம் செய்து வந்தனர். இவ்வமயம் பாலம் பாங்கில், சோழமன்னர் ஆட்சி இருந்தது. இவ்வரசனை "**திரிமூர்த்தி திரிபுவனன்**" என்றழைத் தனர். இவன் மகன் "**நீல உத்தம சோழன்,**" பெண்டான் இராணி யாகிய "பரமேஸ்வரியின்" குமாரியை மணம் புரிந்து, சிங்கப்பூரின்

முதல் மன்னனாகி, தன்னை "பாடாரா ஸ்ரீதிரிபுவனன்" என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டான்.

மலாயா நிப கல்பத்தில் பரவி இருந்த ஹினயான பௌத்த மதத்தை, மஹாயான பௌத்த மதம் ஆட்சி கொண்டது. இம்மத மார்க்கிகள் வங்காளத்திலிருந்தும், மகதத்திலிருந்தும் சுமத்திரா, ஜாவா, கம்போடியா என்ற நாடுகளுக்கு வந்தனர். இந்நாடுகளில் அச்சமயம் சைவசமய ஆசாரங்கள் அதிகமாகப் பழக்கத்தில் இருந்தது. அதுபோலவே, தாந்தரீக மார்க்கமும் பெருகி இருந்தது. சுமத்திராவில் "கண்டாளி" அல்லது "கண்டோலி" என்ற நகரம் தலைசிறந்த துறைமுகமாகத் தெற்குக் கடலிலிருந்தது. இதன் மன்னனாகிய "ஈஸ்வரநரேந்திரன்" என்பவன், கி.பி. 454 முதல் 464 வரை,சினத்தை ஆண்ட "ஹியாவூ" மன்னனிடம் "ருத்திரன்" என்ற ஓர் இந்தியனை அரச தூதனாக அனுப்பினான். கி. பி. 502-ல் கண்டாளி மன்னன், பௌத்த மதம் தழுவி "கௌதம சுபத்திரா" வெனப் பெயர்கொண்டான். இவன் மகன் "பிரியவர்மன்" பிறகு மன்னனானான். இவன் காலத்தில், ஆரியம் அரச மொழியாக இருந்தது. "கண்டாளி" அல்லது "கண்டோலி" என்ற பதம் "கந்தலி" என எழுதப்பட்டது. கந்தலி, கதலி என்றால் வடமொழியில் "வாழை" என்று பொருள்படும். ஆகவே இந்நாடு அத்தருணம் வாழை பெருகிய நன்னாடாக இருந்திருக்குமென்று ஊகிக்கலாம்.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில், ஸ்ரீவிஜயா ஆட்சியைப்பற்றிக் கிடைத்த, மலாய் கல்வெட்டுகள் மூன்றில், ஒன்று, பாலம்பாங்கின் "சுகூண்டாங்" மலையடிவாரத்தில், "தாதாங்" ஆற்றங்கரை ஓரத்தில் கண்டெடுக்கப்பட்டது. இக்கல்வெட்டு, கி. பி. 683-ல், ஸ்ரீவிஜயாவின் தலைநகரம் காண்கப்பட்ட விதங்களைக் குறிப்பிடும். இரண்டாவது கல்வெட்டு,"ஜம்பி" ஆற்றங்கரையின் ஓரத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதில்,ஸ்ரீவிஜயா, சுமத்திரா மன்னனெனக் குறிப்பிட்டுள்ளது.மூன்றாவதாக உள்ள கல்வெட்டு, பல்லவ எழுத்துகளில் உள்ளது. இது "பங்கா" தீவின் "கோட்டாக்கப்போர்" பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இதில், கி. பி. 686-ல் ஸ்ரீவிஜயாவின் படைகள்,ஜாவாமீது படையெடுத்துச்சென்றதைக் குறிக்கப்பட்டுள்ளது.

"லிகோர்" பகுதியில் கண்டெடுக்கப்பட்ட, ஒரு கல் வெட்டில் செய்லேந்திர மன்னர்குல வழியில் ஸ்ரீமகாராஜாவென ஒரு மன்னனைக் குறிப்பிடுகிறது. இக்குலத்தினர்கள் ஒரிஸா நாட்டின், கலிங்க மன்னர்களின் குலவழிகளாகிய "ஸேப்லா" "ஸேய்லோத்பவ" என்ற

இருவகுப்புகளின் பரம்பரைகள் எனவும் குறிப்பிடுகின்றனர். இவர்கள் இந்தோசினாப் பகுதியையும் ஆண்டனரென்பர். கி. பி. 778-ன் கல்வெட்டுகள், "கலாசானில்" கண்டெடுக்கப்பட்டன. அவைகளில் மத்திய ஜாவாவில் செய்லேந்திர மன்னர்கள் இருந்தனர் என்றும் அதுபோல் கி. பி. 782-ல் "கேலுராக்" என்ற இடத்தில் கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டுகளும் கூறும்.

கி.பி. 764-ல், மலாயா தீபகற்பத்திலிருந்து "டோன்கின்" மீது ஒருபடையெடுப்பு அமைந்ததெனவும், 774-ல் "ஷாம்" ஆலயம் ஒன்றை இவர்கள் நெருப்புக்கிரையாக்கினர் என்றும், 787-ல் இன்னுமொரு "ஷாம்" ஆலயத்தை எரித்துவிட்டனர் என்றும் கூறுவர். இவர்கள் இவ்விதம் செய்ததற்குக் காரணம், தமது முன்னோர்களின் முழு அரசியலையும் கைப்பற்றியவர்களிடமிருந்து தாமீளவும் கைப்பற்ற எண்ணியதே என்று கூறுவர். கி. பி. 844—848-ன் முற்பட்ட "குர்தாத்ஸ்பே" என்ற அரேபியர், "ஜாபுக்" என்ற பரப்பைக் குறித்து விபரம் குறிப்பிடும்போது, இப்பகுதியை கெட்டாப் பிராந்தியம் என்றே விளக்குகின்றார். இதை ஒரு மகாராஜா ஆண்டு வந்தார் எனவும், இங்கு துறைமுகங்கள் பல இருந்ததெனவும், அவைகளிலிருந்து, மூங்கில் டின் முதலிய சரக்குகள் ஏற்றுமதியாகியதெனவும், இப்பரப்பின் குடிகள் பௌத்த மதத்தினராய் இருந்தனரெனவும் குறிப்பிடுகின்றார். என்றாலும் இச் செய்லேந்திர மன்னர்கள் ஸ்ரீவிஜயா மன்னர்களுடன் இணைப்புக் கொண்டிருந்ததாக அவர் கூறவில்லை.

கி. பி. 863-ல், மத்திய ஜாவாவின் தனி அரசாக இருந்த "கலாசன்," "மேண்டுட்," "போரோ புண்டர்" என்ற நாடுகளை செய்லேந்திர குலத்தினர்கள் இழந்தார்கள். அதற்குமேல், 1007-ல் ஸ்ரீ விஜயா, ஜாவா முழுவதையும் கைப்பற்றிக்கொண்டார். செய்லேந்திர மன்னர்களே, ஸ்ரீ மகாராஜா பட்டப் பெயருடன் சிங்கப்பூரையும் மலாக்காவையும் ஆண்டனர். இம்மன்னர்கள் தங்களை சுமத்திரா மன்னர்களுடன் இணைப்புக் கலப்புகள் கொண்டவரல்லவென்றும் பாலம் பாங்கின் "சிகுண்டாங்" மலைப்பிரதேச மன்னர்களின் குலத்தினரென்றும் குறிப்பிட்டுக்கொண்டனர். அதனால் மலாக்காவின் மகாராஜா மன்னன் என்பார் ஸ்ரீ விஜயாவின் ஆண் சந்ததிகளில் இருந்து வந்தவரெனக் கூறக்கூடாதென்றும், மீனங்காபூவின் குலத்தைச்சேர்ந்தவர்களெனவும், இவர்கள் இந்நாட்களில் கெகிரி செம்பிலானின் யாம்துவான் மன்னர்களாக உள்ளவர்கள் எனவும், இவர்கள் எவ்வகையிலோ பாலம் பாங்கிகளாக உள்ள

னர்களெனவும், இக்கலப்புகளை சுமத்திராக்காரர்களே கொண்டனர்களெனவும் கூறுகின்றனர்.

பாலம்பாங் அரசாட்சியில் "கிளந்தான்," "பாஹாங்," "திரேங்கானு," "லங்காசூக்கர்," "லிக்கோர்," "ஜெலுடோங்," "போலோன் கிராஹி," "அச்சே," "லாமுரி"யும் இலங்கைக்கும், அருவிற்கும் இடையிலுள்ள குடாக்கடலின் நகரமாகிய "கம்பே"யும், கட்டுப்பட்டிருந்த தென்பர். 1183-ம் ஆண்டில், கிராஹியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றில், ஸ்ரீவிஜய மன்னர்கள் அல்லாத "ஜேயன்" என்ற மன்னன் "ஜாம்பியில்" அரசாண்டான் என விளங்குகிறது. இந்த ஜாம்பி ஆட்சி, சுமத்திராவின் மேட்டுப் பக்கங்களில் பரவி, மீனங்காபு என்ற அரசாட்சி கண்டதென்பர்.

கிறிஸ்து மத ஆரம்ப காலத்தில் சுமத்திரா இந்துக்கள் மடகாஸ்கரில் குடியேறினர்கள். இங்கு இவர்கள் "மலாகாசி" என்ற மொழியைப் பேசினர்கள். இவர்கள் எழாம் நூற்றாண்டில் வியாபாரத்துக்காக நெடுந்தூரம் கடற்பிரயாணம் செய்துள்ளனர். அப்பொழுதும் அந்த மொழியே பேசினர்கள் என 1154-ம் ஆண்டில் "அரப் இத்கிஸி" என்பவர் ஆக்கிய "ராஜா புத்தகம்" என்ற நூலில் குறிப்பிடுகின்றார். சுமார் 1338—1365-ம் ஆண்டுகளுக்கிடையில் "மஜா பஹித்"தின் ஏகாதிபத்தியமானது, ஜம்பி, பாலம்பாங், மீனங்காபூ, என்ற ஆட்சிகளைச் சிதற அடித்து, அவைகள் ஆண்ட சுமத்திரா நாடு முழுவதையும் கைப்பற்றிக்கொண்டது. அத்தருணம், பாலம் பாங்கில் இருந்த சினர்கள் பல ஆயிரம் பேர் காண்டனிற்கடுத்த "நாமஹோய்" வாசியாகிய "லியாங்டன் மீன்" என்பவனைத் தலைவனாகக் கொண்டு, கடற்கொள்ளைகளிட்டு சுமார் 200 ஆண்டுகள் சுய ஆட்சி புரிந்தனர். இப்படி இருந்தபோதிலும் சுமத்திரா, போர்னியோ, மலாய் நாடு முதலியவைகளை "மஜா பஹித்" ஆட்சி, தனக்குள்ளேயே வைத்திருந்தது. அவ்வாட்சியானது மேற் கூறப்பட்ட பல நாடுகளைக் கைப்பற்றி இருந்த போதிலும், அவைகளின் செழிப்புக்கேற்ப தக்க குடிகளைக் கொண்டு வந்து சேர்க்காமலும், அங்கிருந்த குடிகளுக்கும் தக்க வாழ்க்கைக்குப் போதிய நலங்களைச் செய்யாமலும் நாடு பிடிக்கும் நோக்கம் ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு, பல இடங்களில் வெற்றியும் பெற்று வந்தது. அரசாட்சி அவ்வாறிருப்பினும், அங்கு அப்போது குடியேறி இருந்த மக்கள், பிர்மா, சிவன், இராமன், அர்ச்சுனன், காளி முதலியவர்களைத் தெய்வங்களாகக் கொண்டு, அவைகளுக்கு ஆலயங்களையும் கண்டனர். அவ்வாலயங்கள், பாஹாங்,

திரெங்கானு மற்ற இடங்களில் அமைக்கப் பட்டிருந்ததாய் அறியக் கிடக்கின்றது. இந்த நாட்களில், மலாயாவில், எப்பகுதி சென்றாலும் அங்கங்கு இந்துக் கலைகளையும் உருவ வழிபாடுகளையும் உண்டு செய்து பெருக்கினர். மலாக்காவில் அவர்களால் கண்டதற்கேற்ப, நடத்தியதற்கொப்ப, இன்றும் இந்து ஆட்சியின் அடையாளமாக, சில சுவர்களில் "மகரம்" அமைத்திருப்பதைக் காணலாம். "மகரம்" என்பது "மீன்" ஆகும். வடமொழியில் மீனை "மத்ஸ்யம்" என்றும் கூறுவர். மத்ஸ்யம் திருமாலின் சிறந்த பிறப்புகள் பத்தில் முதற் பிறப்பாகும். பௌத்தர்களும், இம் மகரத்தை "ஜாதக" அவதாரம் என்பர். இந்துக்களும் பௌத்தர்களும் கொண்டாடும் ஓர் உருவத்தை சுவற்றில் தீட்டியிருப்பதைப் பார்க்க, அன்றைய ஆட்சியின் நிலையை உணர முடிகிறது.

சில ஆயிர வருடங்கட்கு முன்பு, மலாய் நாட்டிற்கு இந்து சைவ சமயமும், தாந்தரீக மார்க்கமும், பௌத்த சமயமும், வந்தது போல, இந்தியாவின் மேற்குக் கடற்கரை யோரங்களில் இருந்து, "இஸ்லாம்" மார்க்கமும் வந்தது. அதனால், அம்மதச்சார்புடைய மேற்கு இந்திய முஸ்லீம் வியாபாரிகள், பலர் மலாய் நாடு வந்து குடியேறினர். தங்கள் மதச் செல்வாக்கைக் கொண்டும், வியாபாரப் பெருக்கைக் கொண்டும், நிதி திரட்டி ஏராளமான பேர் பெருத்த நிதியாளராயினர். அத்துடன் பினங்குப் பகுதியிலிருந்து, ஜாவாவிற்கும் அதற்கப்புறமுள்ள சுமத்திராவிற்கும், இரண்டு நூற்றாண்டுகளுக்குள் "இஸ்லாம்" மார்க்கம் பரவியது. அங்கிருந்த மன்னர்களும் அதைத்தழுவி, அவ்வாட்சியும் முஸ்லீம்களுடைய மணி முடியாகியது. மலாய்நாடும், அன்றுதொட்டு இந்து பௌத்த மன்னர்களின் ஆட்சி நாடென்றது மறைந்து, இஸ்லாம் மதமார்க்க முஸ்லீம் மக்களின் நாடாகியது. ஸர் ரிச்சார்ட் வின்ஸ்டெட், இந்நிகழ்ச்சிகளை வெகு அழகாகவும் விரிவாகவும் எடுத்து விளக்கியுள்ளார். மலாயாவில் இந்து மன்னர்களின் ஆட்சி, 1414-ம் ஆண்டில், உயிர் நீத்த பரமேஸ்வர மன்னனின் காலத்துடன் முடிவடைந்தது. அவர் மகன் "ராஜா பேஸார் மூடா" இஸ்லாம் மார்க்கம் தழுவி, "சுல்தான் முஹம்மது இஸ்கிந்தர் ஷா" வாகினர். இவரின் பின் தோன்றல்கள், பாலம்பாங் இந்து மன்னர்களின் பட்டப் பெயராகிய ஸ்ரீ மகாராஜா வென்ற பெயர்களையே புனைந்து முடியும் தரித்துக்கொண்டனர். அப்போது முதலாவது பட்டமாகவந்த இஸ்கிந்தர் ஷாவின் புதல்வரான "இராஜா இப்ராஹீம்" என்பவர், தன் பிறப்புப் பெயரை மாற்றி, "ஸ்ரீ மகா ராஜா பரமேஸ்வர தேவஷா" என்ற பெயருடன் விளங்கினர்.

இவர், தனது அரசாட்சியில், தனக்கு உறுதுணையாளர்களாகவும், ஆலோசனை கூறுபவர்களாகவும், அரசாங்கத்தை நடத்துவதற்கு பல இந்தியர்களை நியமித்திருந்தார். இவரின் பின் வந்தவர், தன் பெயரை சுல்தான் முஹம்மது ஷா வென முடி சூட்டிக் கொண்டார். இவர் சுல்தான் முஹம்மது ஷா வாக விளங்கினும் ஒரு தமிழ்ப் பெண்ணையே மணந்தார். அப்பெண்ணுக்கே "சுல்தானு" வென்ற பட்டத்தையும் கொடுத்தார். இவர் மகன் "முஜப்பர் ஷா" மலாக்காவின் சுல்தான் ஆகினர்.

இவர் காலத்துக்குமுன், சில கலவரைகளும் நடைபெற்றிருக்கின்றன. இந்தியர்களால் பல நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமாக உள்ள சிலவற்றை இங்கு ஆராய்வோம். மகா ராஜா ஸ்ரீபரமேஸ்வர தேவஷா வெனப் பெயர்கொண்டு முடி சூட்டிக்கொண்டவர் சுல்தான் முகம்மது இஸ்கிந்தர்ஷா. அவர் புதல்வன் ராஜா இப்ராஹீமை அப்போது தமிழ் வியாபாரியாக இருந்த ஸ்ரீநாமுதி ராஜாவென்ற "துன் அலி" என்பவன், சதியாலோசனை செய்து கொன்றுவிட்டான், அவனுக்குப் பின்வந்த, சுல்தான் முகம்மதுஷா வின் ஆட்சிகாலத்தில், அவரின் செங்கோலுக்கு உறுதுணையாய் இருந்தவன் "தெமங்காங் துன் முதஹிர்." இவரும் தமிழ்க் கலப்புக்கொண்டவரே. இவரின் தொண்டைப் போற்றி "பண்டாரா" வென்ற பட்டமும் கொடுக்கப்பெற்றது. அப் பதவியை, பட்டத்தைப் பெற்றதும், இவரும் சில சதியாலோசனை செய்ய எண்ணினர். இதை அறிந்த சுல்தான் "தெமங்காங் துன் முதஹிரை" கொல்லும்படி கட்டளையிட்டுக் கொன்றும் விட்டார்கள். அத்துடன் அப் "பண்டாரா" குடும்பத்தைச் சார்ந்த தமிழர்களை எல்லாம் நாடு கடத்தியும் விட்டார்கள். அதில் சுல்தான், "துன்ஹம்ஸா" என்ற ஒரு தமிழருக்கு மட்டிலும் கருணை காட்டினர். இவரைப்போல, இன்னொரு தமிழர் "நாசிம் முதலியார்" என்று இருந்தார். இவர் சுல்தான் மஹமூதின் என்பவரின் சிறிய தந்தையுமாவர். இவரை சுல்தானனவர் சீனவுக்கு, தன் தூதுவனக அனுப்பினர். இவர் அங்கு செல்லாது, எக்காரணத்தாலோ பாஹாங்கிற்குப் போய்விட்டார். அச்சமயம், மலாக்கா மீது போர்த்துக்கியர் படையெடுத்துவந்து, மலாக்காவைப் பிடித்துக் கொண்டனர். மலாக்காவில் சுல்தான் ஆட்சி வீழ்ச்சியுற்றது. இதை அறிந்த "நாசிம் முதலியார்" மலாக்காவை மறுபடியும் மீட்க எண்ணினர். பஹாங்கின் உதவியையும் கோரினர். அவை கை கூடவில்லை.

இச்சமயம் மலாக்காவில் இந்துக்களில் சிறந்தவர் ஒருவர் இருந்தார். அவரை அனைவரும் "நீனுசாபு" என்றழைத்தனர். மலாக்காவை போர்த்துக்கியர் கைப்பற்றிய தருணம் இருந்தவர்களில் "நீனுசாபு" வும் ஒருவர். போர்த்துக்கியருடைய கடற்படை ஒன்று கடலில்வந்து, அங்கு நங்கூர மிடப்பட்டிருந்தது. அப்படையின் தலைவர் "டிசிகி புரிய" ராவர். அப்படையிலிருந்து "ரூபாடி அரன் ஜோ" என்பவர், சுமார் 20 போர்த்துக்கியர்களுடன் துறைமுகத்தில் இறங்கி சாமான்கள் வாங்கிக் கொண்டிருந்தனர். அச்சமயம், "துன் முதஹிர்" என்ற பண்டாரா முற்பட்டு, இவர்களைச் சிறைப்படுத்தி விட்டான். இதை அறிந்த "நீனுசாபு" ஆலோசனைகூறி, அப்போர்த்துக்கியர்களை விடுதலை செய்யச் செய்தார். அதனால், போர்த்துக்கியர்கள் "நீனுசாபு" விடம் நன்றேக்கங்கொண்டனர்.

மலாக்காவில், அச்சமயம் இன்னுமொரு தமிழ் வியாபாரி பெருஞ் செல்வவானுக இருந்தார். அவர் பெயர் "இராஜா முதலியார்." இவர், ஸ்ரீவிஜயாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்து கொண்டிருந்தார். இவரின் வியாபாரப் பெருக்கமும், போர்த்துக்கியர் ஆட்சியில் குன்றியது. இங்கு இந்தியரின் வியாபாரம் குறைந்தாலும், ஜொஹோர் பகுதியில் குடியேறி இருந்த மேற்கு இந்திய குஜாரத்திகள் வியாபாரம் பெருக்கம் கொண்டிருந்தது. இதேபோல், "ரெம்பா" பகுதியில் தென் இந்தியத் தமிழர்கள் வியாபாரம், தலைசிறந்து நின்றது. இவைகள் நடைபெற்ற சில காலத்துக்குள், மலாக்காவை போர்த்துக்கியரிடமிருந்து, உலாந்தாக் காரர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் கைக்கு ஆட்சி வந்த பின், பல இந்தியர்களுக்கு "கப்பித்தான்" பட்டங்களும் கொடுத்தனர். 1781-ம் ஆண்டில், மலாக்காவில் இந்துக்களால், தமிழ் மக்களால் நிறுவப்பெற்ற **ஸ்ரீ பொய்யாத விநாயகமூர்த்தியின்** ஆலயத்துக்கு இனமாக உலாந்தாக்காரர் நிலமும் கொடுத்தனர். இந்த ஆலயம், மலாக்காவில் மிகப் பழமையானது. இதன் விரிவான விளக்கம் மலாக்காவைப் பற்றி சிறப்பாகக் கூறும் பகுதியில் சேர்க்கப் பெற்றுள்ளது.

இவர்களைப்போல, பேராவில் "தம்பிசெச்சில்" என்ற ஒரு தமிழன், 18-ம் நூற்றுண்டில் இருந்தான். இவனுக்கு பேராவில் ஒரு மனைவியும், இந்தியாவில் ஒரு மனைவியும், உண்டு. இவன் இந்தியா மனைவியைக்காண, பேராவிலிருந்து ஒரு சமயம் புறப்பட்டான். அப்போது பேரா சுல்தான், இவனுக்குப்பல கௌரவப்

பட்டங்களை அளித்தார். அதனால், அவன் இந்தியா சென்று திரும்பும்போது, ஒரு பெரும் வியாபாரியை அழைத்து வந்தான். அவ்வாணிபனால், பேராவைச் சார்ந்த பல யானைகள் வாங்கப் பெற்றன. அதனால் சுல்தானுக்கு வளம் பெருகியது.

பேராவின் சிற்றரசர் ஒருவர் "லெப்பை ஹானுப்" என்ற ஒரு தமிழனின் மகளை மணம் புரிந்தார். அப்பெண்ணுக்கு "ஸித்திசாரா" என்ற பெயரும் கொடுக்கப்பட்டது. அவளுக்குப் பிறந்த பிள்ளைகள், நல்ல வாழ்வைப் பெற்றிருந்தன. இவர்கள் காலத்தில், சிங்கப்பூரிலும் பல தமிழ் மக்கள் இருந்திருக்கிறார்கள்.

சிங்கப்பூரின் தலைவனாக வந்த ஸர். ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் நியமித்த சுல்தான் ஹுஸெனின் மகன் சுல்தான் அலி பெரும் செலவாளியாக இருந்தான். இவனுக்கு ஓர் தமிழன் பெருந்தொகை கடன் கொடுத்தான். இச்சுல்தான் அலி டத்தோ தெம்மாங்காங் டாயிங் இபுராஹிம் ஸ்ரீ மகாராஜா வாகியதும், தன் ஆட்சி முழுவதையும் இக்கடன்காரனுக்கு எழுதிக் கொடுத்தான். கொடுத்துவிட்டு தனக்கென கிஸாங் மூவார் நதிகளுக்கு இடையில் ஓர் பாப்பை வைத்துக்கொண்டான். அதையும் முந்திய தமிழனிடமே நம்பிக்கைகொண்டு கடனுக்காகக் கொடுத்தான். 1862-ல் எழுதிக் கொடுத்த உடன்படிக்கையில், அதைப் பிரிட்டிஷாருக்காவது அல்லது வேறு யாருக்காவது அப்படியே விற்றுக் கடனைப்பெற்றுக் கொள்ளும்படி எழுதிக்கொடுத்தான். இந்நிகழ்ச்சிகளுக்கு முன்பே, தமிழர்கள் ஆதிக்கம் சிங்கப்பூரில் பெருத்துவிட்டது. அதற்கறிகுறியாக, 1828-ல் சிங்கப்பூரிலுள்ள மாரியம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது.

இத்தகைய பல நிகழ்ச்சிகளுக்கும் காரணமாயிருந்த மலாயாவின் முற்கால நிகழ்ச்சிகளை ஓர் வகையாய் இனி முடிவுகட்டுவோம். பல பல அரசர்களால், பற் பல இன்னல்களுக்கும், படை எடுப்புகளுக்கும், ஆளான மக்கள் பிற்காலத்தில் சுகம் பெற்றனர். பல பிரிவுகளாக சிதறடிக்கப்பட்டுக்கிடந்த மலாயாவில் கி. பி. 1377-ல் மஜாபஹித் ஜாவானிய மன்னர்களால் சிங்கப்பூர் தாக்கப்பட்டது. 1511-ல் மலாக்கா போர்த்துக்கியர் கைவசமாகியது. 1577-ல் ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக் இக்கடல் கடந்து சென்றார். 1600-ல் உலாந்தாக்காரரும் கிழக்கு இந்திய இங்கிலீஷ் கம்பெனியாரும் இப்பகுதிகளில் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கினர். 1641-ல் போர்த்துக்கியர் இடமிருந்த மலாக்காவை உலாந்தாக்காரர் கைப்

பற்றினர். 1786ல் பினங்கு தீவை ஸர் "பிரான்ஸிஸ் லைட்" கண்டார். 1819ல் சிங்கப்பூரை ஸர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் கண்டார். 1824ல் ஹாலண்டின் உடன்படிக்கையில், கிரேட்பிரிட்டனுக்கு, மலாய் நாடு கிடைத்தது. 1846ல் போர்னியோவில் ஸர் ஜேம்ஸ் புரூக் முதல் அரசராகினர். அதே ஆண்டில், லாபுவானும் பிரிட்டிஷ் வசமாகியது. 1847ல் புருனுயினுடன் வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டது. 1881ல் வட போர்னியோவில் பிரிட்டிஷாருக்கு உரிமைப் பத்திரம் கிடைத்தது. 1874ல் ஏற்பட்ட பங்கோர் உடன்படிக்கையினுல், ஐக்கிய மலாய் நாட்டின் சிற்றரசியல்கள் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகளை ஏற்றன. 1909ல் ஏற்பட்ட ஆங்கிலோ உடன்படிக்கையினுல், பிரிட்டிஷ் பாதுகாப்பு மலாயாவின் அரசியல்களுக்கு அளிக்கப்பட்டது.

பிரிட்டிஷார் அரசியல் ஏற்பட்ட பின், இந்நாட்டைப் பற்றிய கலகங்கள் ஒழிந்தன. வாணிபம் பெருகின. நாடு நலம் பெற்றன. இப்போது பலவளங்களாலும் சிறந்து விளங்கும் இம்மலாயாவின் மாட்சிகளையும், மக்களின் ஏற்றங்களையும், உத்தியோகத் தோற்றங்களையும், விளைபொருள்களின் திண்மைகளையும், வியாபாரப் பெருக்கங்களையும் அடுத்தடுத்த அதிகாரங்களில் காண்போம்.

வேதகாலம், சங்க காலங்களுடன் தொடர்பு

நூல்களின் ஆதாரங்கள்

கி. பி.	454	சுமத்திராவை ஆண்ட சைவ சமய ஈஸ்வரநரேந்திரன், திரு. ருத்திராவை சின மன்னனிடம் தூதனுப்பியது.
,,	502	இச்சைவ சமய மன்னன், பௌத்த மதம் தழுவி கௌதம சுபத்திரா வெனப் பெயர் கொண்டது.
,,	656	ஆதித்திய தர்மனின் ஆட்சியும், பல இந்து சைவ சமயக் கோயில்கள் கட்டப்பட்டதும்.
,,	686	ஸ்ரீ விஜயா, ஜாவா மீது படையெடுத்தது. ஏழாம் நூற்றாண்டில் சுமத்திரா மன்னர் மலாயா தீபகல்ப மீது படை எடுத்தது.
,,	775	பல்லவராட்சியும் பௌத்தமத வளர்ச்சியும்.
,,	778	செய்லேந்திர மன்னன் என்ற கலிங்க நாட்டரசன் மத்திய ஜாவா மீது படை எடுத்து அந்நாட்டைக் கைப்பற்றியது.
,,	863	ஜாவாவில் செய்லேந்திர ஆட்சி வீழ்ச்சியுற்றது.
,,	1007	செய்லேந்திர மன்னன் "ஸ்ரீ மகாராஜா" என்ற பெயருடன் சிங்கப்பூரையும் மலாக்காவையும் கைப்பற்றியது.
,,	1017	இராஜேந்திர சோழ அரசனின் படை எடுப்பு.
,,	1025	இராஜேந்திர சோழன் செய்லேந்திர மன்னனை வெற்றிகொண்டது.

கி. பி. 1030 இராஜேந்திர சோழன் "கெட்டா," "அச்சே", "நிக்கோப்பார்", என்ற இடங்களை வெற்றி கொண்டு கைப்பற்றியது.

,, 1273 கெர்த்தனகாரா மன்னன் மலாய் நாட்டின் மீது படை எடுத்தது.

,, 1275 சுமத்திராமீது படை எடுத்தது.

,, 1276 சந்திரபானு மன்னன் இலங்கையிலிருந்து புத்த பகவானின் பல்லை கெட்டாவுக்கு கொண்டுவர முயன்றது.

,, 1281 சுமத்திராவில் குஜராத்திகள் வாணிபத்திற்காகக் குடியேறியது.

,, 1286 திரிபுவன ராஜ மௌலி தேவர் சுமத்திராவை ஆட்சி புரிந்தது.

,, 1365 கலிங்க அரசர்களின் ஆட்சியை மஜாபஹித் மன்னர்கள் கைப்பற்றியது.

,, 1377 மஜாபஹித் மன்னர்கள் சிங்கப்பூரைத் தாக்கியது.

,, 1414 மலாக்காவின் மன்னனாகிய ஸ்ரீ பரமேஸ்வர மன்னன் இறந்தது. அவர் மகன் இராஜா பேசார் மூடா இஸ்லாம் தழுவி "சுல்தான் முகமது இஸ்கிந்தர் ஷா" வெனப் பெயர் கொண்டது.

,, 1511 மலாக்காவை போர்த்துக்கீயர் கைப்பற்றியது.

,, 1577 ஸர் பிரான்ஸிஸ் டிரேக் உலகம் சுற்றி வந்தது.

,, 1600 கிழக்கு இந்தியக் கம்பெனியார் இங்கு நாட்டம் பெற்றது.

கி. பி. 1641 மலாக்காவை உலாந்தாக்காரர் கைப்பற்றியது.

,, 1781 சுமத்திராவில் பிரிட்டிஷ் அரசாட்சி பெருகியது. உலாந்தாக்காரர் மலாக்காவில் ஸ்ரீ பொய்யாத விநாயகர் ஆலயத்துக்கு இடமளித்தது. ஸர். ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் பிறந்தது.

,, 1786 காப்டன் பிரான்ஸிஸ் லைட் பினாங்கு கண்டது.

,, 1793 உலாந்தாக் காரரிடமிருந்து, மலாக்காவை பிரிட்டிஷார் கைப்பற்றி மாறிக்கொடுத்தது.

,, 1804 ஸர். ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் பினாங்கு வந்தது.

,, 1819 அவர் சிங்கப்பூரைக் கண்டது.

,, 1824 ஹாலண்டு உடன்படிக்கையினால் கிரேட் பிரிட்டனுக்கு மலாய் நாடு கிடைத்தது.

,, 1828 சிங்கப்பூரில் மாரியம்மன் கோயில் கட்டப்பட்டது.

,, 1833 பினாங்கில் மாரியம்மன் கோயில் கட்டப்பட்டது.

,, 1846 ஸர் ஜேம்ஸ் புரூக் போர்னியோவில் சாரவாவின் இராஜா வாகியது.

,, 1847 புருனாயினுடன் பிரிட்டிஷார் வியாபார உடன்படிக்கை செய்து கொண்டது.

,, 1874 மலாய் நாட்டின் பங்கோர் உடன்படிக்கை.

,, 1907 ஸர் பிராங்கு ஸ்வெட்டன் ஹாம், ஜி.ஸி.எம்.ஜி., "பிரிட்டிஷ் மலாயா" என்ற புத்தகத்தை வெளியிட்டார். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலும், பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழும் உள்ள நாடுகளை யெல்லாம் ஒன்றாகக் குறிப்பிடுவதற்காக "பிரிட்டிஷ் மலாயா" என்ற பதம் அவரால் உபயோகிக்கப்பட்டது. அது முதல் அப்படியே வழங்கி வருகிறது.

கி. பி. 1909 ஐக்கிய மலாய் நாட்டில் பிரிட்டிஷ் ரெசிடெண்டு கள் நியமனம். ஆங்கிலோ உடன்படிக்கை ஏற்பட்டு, மலாய் நாட்டின் அரசியல்களுக்கு பாதுகாப்பளிக் கப்பட்டது.

,, 1931 திரு ரோலண்டு பிராடல் வெளியிட்டுள்ள புத்தகத்தில், மலாயா இராஜாங்கவிஷயங்களை வெகு விளக்கமாகவும், தெளிவாகவும் காண்கலாம்.

இரண்டாவது அதிகாரம்

இக்கால மாட்சி


ஆங்கில வரசின் திறம்

நீர் நிலவள நிறைந்து, நிகரிலாச் செல்வத்தாலுயர்ந்து, தனக்கு நிகர் தானாய் தற்காலம் விளங்கி நிற்கும், இம்மலாயா தீப கல்பத்தின் பண்டைய துன்பங்கள் பறந்து விட்டன. பல வரசாட்சி யால் மக்கள் பட்ட இடுக்கண்கள் மறைந்து விட்டன. அதற்கு மூலகாரணமாகி, இன்று இந்நாட்டில் எல்லோரும் பயமற்று வாழ, எவ்வியாபாரமும் பெருக, யாவரும் ஒற்றுமையோடிருக்க, எச்சமயங் களும் மதங்களும் தந்தம் கோட்பாட்டின்படி நடைபெறச் செய்தது எது? அதுதான் நீதி நிறைந்த, நிறைமதி கூர்ந்த, ஆட்சி அநுபவ முதிர்ந்த, ஆங்கில வரசின் திறம். அவ்வரசையும், அதன் அரசரை யும், நாம் போற்றாதிருக்க முடியுமோ? முடியாது! யாவரும், போற்றக் கடமைப்பட்டவர்களே !!

பல இடுக்கண்களுக்காளாகி, பல சிற்றரசர்களின் ஆளுகைக் குட்பட்டு சிதறடிக்கப்பட்டுக் கிடந்த இம்மலாயா, ஒன்றுபட்டுவாழ பேரரசாகிய ஆங்கில வரசு எதற்காக முற்பட்டது? ஏதேனும் பலன் கருதியா? அன்று! அன்று! உலகில் மக்களை ஆளும், காக்கும், அரசர்களின் கடமை, ஓர் பேரரசின் கடமை என்ன? கொடுங் கோலாட்சிக் குட்பட்டு கொலைக்காட்படு மக்களை, அவ்வல் லலினின்றும் அகற்றிக் காக்க வேண்டியதே. அதையே கைக்கொண்டு நிலை நிறுத்தியது இற்றைக்கு 110 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆங்கில வரசு.

அவ்வரசுக்கும், அரச குடும்பத்துக்கும், நாம் என்ன கைம்மாறு செய்ய வியலும்? அவர்கள்தான் நம்மிடம் ஏதும் பலனை நாடுவார் களா? நாடார்கள். ஏதனால்? உலகில் அரசன், வள்ளல், கவிஞன்

மலாய்நாட்டு நாணயங்கள்.



Coins of Malay Country.

மூவரையும் மழைக்கு நிகரெனக் கூறுவதுண்டு. மழை பிறரிடம் ஒன்றையும் எதிர் பார்த்துப் பெய்வதில்லை. தனது கடமையைச் செய்கிறது. மக்களுக்கு உண்ணா உணவையும் உண்டு செய்து உணவாகவும் நிற்கிறது. அதனாலன்றோ இவ்வுலகம் வாழ்கின்றது. மழை யின்றேல் எவ்வுயிர் வாழும்? அத்தகைய வான், பிறரிடம் யாதும் பயன் கருதிப் பெய்யவில்லை. அதைத்தான்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

என்று கூறினார் பொய்யா மொழியாரும். அதே போல,

அரசர், வள்ளல், கவிஞரில் அரசர்கள் ஆளுந்திறத்தாலும், வள்ளல்கள் கொடை மிகுதியாலும், கவிஞர்கள் பாவின் மேன்மையாலும், மக்கள் வாழ்வைப் பெருக்குகிறார்கள். அது அவரவர் கடமை. அவர்களில் ஒருவராகிய நமது ஆங்கிலவரசரும் மழையைப் போன்று நம்மிடம் கருணை காட்டுகின்றார். அவருக்கு நாம் என்ன செய்யலாம்? "வாழி, உலகென்னாற்றுங் கொல்லோமற்று" என்று கூறினார் நக்கீரர். அதைப்பின்பற்றி, சில வாழ்த்துக்களால் நமது கடமையைச் செலுத்துவோம்.

[நேரிசை வெண்பா]

"அன்றரசர் பல்லோர்க ளாண்ட மலாயாவை
ஒன்றுசேர்த் தட்பகையை யோட்டிநா—மின்றிங்கு
வாணிபத்தி லேற்றமுற்று வாழ்ந்திடவுஞ் செய்த தெங்குங்
காணிமிகு மாங்கிலாட்சி காண்."

"மாற்றரசின் றுன்பமெலா மாற்றி மலாயாவி
னாற்றிசையுந் தங்கொடியை நாட்டிமக்கள்—வேற்றுமைக்
காட்படா தாண்டுவரு மாங்கில வாட்சிமிக
நாட்பட வாழுமிங்கு நன்று."

"எஞ்சாத சீர்சே ரெலிசபத்தி ராணியுடன்
மஞ்சுமிக ராஜும்ஜார்ஜ் மன்னருங்—கொஞ்சுமொழி
மக்களுடன் தாபன்னான் மற்றவரு மிவ்வுலகில்
மிக்கநாள் வாழ்ந்திடுவர் மேல்."

என்ற வெண்பாக்களின்படி இந்நாட்டு மக்களை இக்காலமாளும் ஆங்கிலப் பேரரசும், அதன் ஏகாதிபத்திய அரசரும், இந்தியச் சக்கரவர்த்தியுமான மாட்சிமைதங்கிய ஆறுவது சார்ஜ் மன்னரும் அவரின் வாழ்க்கைத் துணைவியாய் அண்மையிலமர்ந்து அரசமதி கூறும் எலிசபத் மகாராணியாரும், எதிர்கால வரசை ஆளவிருக்கும் இளவரசி எலிசபத் ராணியாரும், அரசரின் தாய் மேரி ராணி, அன்னான் மற்றவரும் நீண்ட நாள் இவ்வுலகில் வாழ்ந்து இந்நாட்டையுமாண்டு நலம் பல பெறுவார்களாக!

இக்கால ஆட்சி முறை

ஆசியாக் கண்டத்தின் தெற்குக் கோடியில் அழகு மிகுந்த அற்புதம் நிறைந்த இந்தியாவிற்கு, சுமார் 1500 மைல் தென் கிழக்கே அமைந்துள்ளது இம்மலாயா தீபகல்பம். இத்தீபகல்பமானது, வடக்கே சியமும், கிழக்கே சீனக்கடலும், தெற்கேயும் மேற்கேயும் மலாக்கா ஜலசந்தியையும், எல்லைகளாகக்கொண்டு விளங்குகின்றன. இதன் பரப்பு, சுமார் 52,265 சதுர மைல்கள்கொண்டதாகும். இப்பரப்பு கொண்ட தீபகல்பத்தை ஒரு குடியேற்ற நாடாக வைத்து, ஆங்கில நாட்டார் ஆட்சி புரிந்து வருகின்றனர். அவர்களின் நேர்முகமான ஆட்சியும், மலாய் சிற்றரசியல்களின் மறைமுக அல்லது ஆலோசனை கர்த்தர்களாக அமைந்துள்ள ஆட்சியும், திறமை வாய்ந்தது.

இத்தீபகல்பமாகிய மலாய் நாடானது, குடியேற்ற நாடு, ஐக்கிய மலாய் நாடு, ஐக்கியப்படாத மலாய்நாடு, யென, பதினோரு தனிக் கவர்ன்மெண்டுகளாக இருக்கிறது. இந்நாட்டின் தலைநகராக விளங்குவது சிங்கப்பூர். அதைச் சார்ந்த சில ஊர்களை தொடுவாய்ப் பகுதியெனவும், ஐக்கியப்பட்ட நான்கு சிற்றரசியல்களை ஐக்கிய மலாய் நாடெனவும், ஐக்கியப்படாவிடினும் பிரிட்டிஷாரின் ஆலோசனைப்படி நடத்துவதென்ற ஒப்பந்தத்தால் அரசியலை நடத்துகின்ற ஐந்து சிற்றரசியல்களை, ஐக்கியப்படாத மலாய் நாடெனவும், கூறுவதுண்டு. அவ்வொவ்வொரு நாட்டின் அரசியல் முறை, அமைப்பு, குடியேற்றம், தொழில், ஒவ்வொன்றையும், அந்தந்த நாடுகளின் பிரிவுகளில் விரித்துக் கூறப்பெறும்.

குடியேற்ற நாட்டின் கவர்ன்மெண்ட், சட்டசபை கொண்ட கவர்னரின் ஆட்சியிலுள்ளது. ஐக்கிய மலாய் நாட்டின் கவர்ன்மெண்ட், பெடரல் கவுன்சில்கொண்ட ஹை கமிஷனரின் ஆட்சியி

ளுள்ளது. ஒவ்வொரு சிற்றரசியல்களும், அப்பரப்புகளின் கவுன்சில் கொண்ட மன்னர்களின் ஆட்சியிலுள்ளது. இவ்வாறு கூறப்பெறும் பதினேரு கவர்ண்மெண்டுகளும், தனிப்பட்ட சட்டதிட்டம், தனிப்பட்ட பொறுப்பு, வெவ்வேறு கொள்கை மற்றவைகளைக் கொண்டிருந்தாலும், ஒரு கவர்னரும், ஹை கமிஷனரும் என்ற அதிகாரியின் தலைமையிலும், அவரின் கீழுள்ள மலேயன் சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களாலும், கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவர்கள் கண்காணிப்பில், தொடுவாய்ப் பகுதியின் ஆட்சியை, கலோனியல் காரியதரிசியும், பினங்கு மலாக்கா பகுதிகளில் ஹானரபிள் பிரிட்டிஷ் ரெசிடெண்ட்களும், சட்டசபையுடன் கூடிய மேன்மை தங்கிய கவர்னரின் உத்தரவின் கீழ் நடத்துவார்கள். இச்சட்டசபையில், உத்தியோகத்திலுள்ள அங்கத்தினர்களும், உத்தியோகப்பற்றில்லாத நியமன அங்கத்தினர்களும், இருப்பார்கள். ஐக்கிய மலாய் நாட்டின் அரசியல்களை, ஸ்டேட் கவுன்ஸிலருடன் கூடிய, மேன்மை தங்கிய சுல்தான்மார்கள் நடத்துவார்கள். அப்படி நடத்தியபோதிலும், ஆலோசனை ஆட்சி முறையின் பொறுப்புகளை, ஆங்காங்குள்ள பிரிட்டிஷ் ரெசிடெண்டுகளே கொண்டிருப்பார்கள். ஐக்கியப்படாத மலாய் நாட்டின் அரசியல்களை, ஸ்டேட் கவுன்சிலுடன் கூடிய மேன்மை தங்கிய சுல்தான்மார்கள் நடத்துவார்கள். அவ்வாறு நடத்தினும், ஆட்சிமுறை ஆலோசனைகளை, ஆங்காங்குள்ள, பிரிட்டிஷ் அட்வைஸர்களே, பொறுப்பேற்றுக்கொண்டிருப்பார்கள். மலாய் நாட்டின் ஆட்சி, ஜில்லாக்களாகவும், முக்கிம்களாகவும், பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஜில்லாவும், ஒவ்வொரு டீ—ஓ (District Officer) வின் கீழிருக்கும். ஒவ்வொரு முக்கிமும், ஒவ்வொரு புங்குளுவின் கீழிருக்கும்.

மலாய் நாட்டின், முக்கிய தலை நகரங்களாகிய சிங்கப்பூர், பினங்கு, குவாலலம்பூர் முதலிய நகரங்களில், வெளிநாட்டு ஜெனரல் கவுன்ஸில்களும் உள்ளனர். இவர்கள் தம் தம் நாட்டு மக்களின் நன்மைகளைக் கருதுவார்கள். வியாபாரப் பெருக்கத்திற்கும் சிரத்தை யெடுப்பார்கள். இவர்களுடன், சிங்கப்பூரில் இங்கிலாந்தின் வியாபார விஷயங்களைக் கவனிக்க, பிரிட்டிஷ் டிரேட் கமிஷனரும், கனடாவின் வியாபாரத்தைக் கவனிக்க, கனடா டிரேட் கமிஷனரும் இருக்கிறார்கள். இதேபோல லண்டனிலும், மலாயாவின் காரியங்களைக் கவனிக்க, "மலாயன் ஹவுஸ்" என்ற ஓர் நிலையம் இருக்கிறது.

மலாயன் சிவில் சர்விஸ

மேற்கூறியவாறு நடைபெறும் ஆட்சியில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்த்தர்கள் மலாயன் சிவில் சர்விஸர்களேயாவர். இவர்கள் தொடுவாய்ப்பகுதிக் கவர்ன்மெண்டிலும், ஐக்கிய மலாய் நாட்டின் கவர்ன்மெண்டிலும், ஐக்கியப்படாத மலாய் நாட்டின் கவர்ன்மெண்டிலும் அரசியல் ஆட்சி புரிவர். இவ்வுத்தியோகங்களுக்கென போட்டிப் பரீட்சைகள், லண்டனில் நடைபெறும். இப்பரீட்சையில் கலந்து கொள்பவர்கள், அசல் ஐரோப்பிய குடும்பத்தினராகவும், பிரிட்டிஷ் குடிகளென்ற பிறப்புரிமையும், கொண்டிருக்க வேண்டும். இவர்களுக்கென நடத்தும் பரீட்சையில், குறிப்பிட்ட சிலகாலம் பயின்று தேர்ச்சி பெற்று, கவர்ன்மெண்ட் வேலைகளிலும் பழக்கம்பெற வேண்டும். அத்துடன், மலாய் பாஷையிலும் தேர்ச்சிபெற வேண்டும். இவ்வாறு பரீட்சையில் தேர்ச்சிபெற்றதும், “காடெட்” என்ற பெயருடன், மலாய் கவர்ன்மெண்டின் உத்தியோகங்களுக்கு அனுப்பப் பெறுவர். இவர்கள் மலாயாவில் உத்தியோகம் ஏற்கு முன், மணம் செய்து கொண்டால், உத்தியோகத்தை இழந்தவர்களாவர். வேலையில் அமர்த்தப்பட்ட, “காடெட்டு” களுக்கு லண்டனில் மலாய்மொழி கற்கும் பொழுது, மாதம் £20 அலவன்சாகக் கொடுக்கப்பெறும்.

மலாய் நாட்டுக்கு “காடெட்”டுகள் வரும்பொழுது, இலவசக் கட்டணத்தில் வருவார்கள். அவர்கள் நோய் வாய்ப்படாத வேறு காரணத்தால், வேலையைவிட்டு விலக நேரிட்டால், அக்கட்டணம் அவர்களிடம் வசூலிக்கப்படும். அவர்கள் வந்து வேலையில் சேர்ந்தது முதல், மாதம் $350 சம்பளம் கிடைக்கும். இங்கிலாந்திலிருந்து புறப்பட்ட நாள் முதல், வேலையில் சேரும்வரை, பாதிச் சம்பளம் கிடைக்கும். காடெட்டுகள் வேலையிலமர்ந்ததும், அவர்களுக்கு சகல வசதிகளுடனும் கூடிய கட்டிடங்கள், கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பெறும். இவர்களை, வேறு மொழிகளை கற்பதற்காக, இந்தியாவிற்கோ, சினத்திற்கோ, அல்லது வேறு இடங்களிற்கோ, கவர்ன்மெண்டின் செலவில், சில காலங்களில் அனுப்புவதுமுண்டு. இவர்கள், பரீட்சையில் தேர்ச்சிபெற்ற மார்க்குகளுக்கேற்ப, ஏ (A) ஸ்ட்ரெயிட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ், சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, லாபுவான், கிரிஸ்துமஸ் தீவு முதலிய இடங்களிலும், பி (B) ஐக்கிய மலாய் நாடு, பேரா, சிலாங்கூர், நெகரி

செம்பிலான், பாகாங் முதலிய அரசியல்களிலும், சி (C) பிரிட்டிஷ் பாதுகாப்பிலுள்ள, ஐக்கியப்படாத மலாய் நாடுகளிலும், முதலில் உத்தியோகங்களில் நியமிக்கப்பெற்று, பிறகு அவரவர்களின் தகுதிக் கேற்ப, ஒவ்வொரு இடங்களுக்கும் மாற்றவும் பெறுவர்.

அங்கங்கு உத்தியோகங்களில் நியமிக்கப்பெறும் காடெட்டுகள், அந்தந்தப் பகுதிமொழிகளில் தேர்ச்சிபெற வேண்டும். தேர்ச்சி பெற்றதும், மாதம் $400 சம்பளம் நடைபெறும். உத்தியோகத்தை ஏற்ற காடெட்டுகள், பரீட்சைகளில் தேர்ச்சிபெறு விட்டாலும், அல்லது நன்னடத்தையிலிருந்து தவறினாலும், அவர்களை கவர்ண் மெண்டார் வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். அப்படி நீக்கப்படும் காடெட்டுகள், திரும்பச்செல்லும் செலவை யார் கொடுப்ப தென்பது, கவர்ண்மெண்டாரால் நிர்ணயிக்கப்பெறும். இக்காடெ ட்டுகள், ஆரம்பகாலத்தில் உத்தியோகத்தில் சேர்ந்து வேலைகளைக் கவனிப்பதுடன், சட்டம், கலோனியல் திட்டங்கள், பொது உத்தர வுகள் முதலியவைகளைப் படித்து, பரீட்சையில் தேர்ச்சிபெற வேண்டும். மலாய் அல்லது தமிழ்மொழி கற்ற காடெட்டுகளை, ஆறு மாதத்திற் கொருமுறை பரீட்சிக்கப்பெறும். அவர்கள் மூன்று வருடத்திற்குள் மேற்கண்ட சட்டதிட்ட மொழிகளை கற்றுத்தேர்ச்சி பெறுவிட்டாலும், உத்தியோகங்களிலிருந்து நீக்கப்பட்டவராவர். இவைகளில் தேர்ச்சிபெற்று, தக்க முறையில் அரசியலை நடத்தும் காடெட்டுகளை, கவர்ண்மெண்டார் அதிகம் ஆதரிப்பார்கள். அவர் களின் சம்பளத்திலிருந்து, 100க்கு நான்கு வீதம், "விட்டோஸ் அண்டு ஆர்பன்ஸ் பென்ஷன் பண்டு"க்காக ஒதுக்கி வைக்கப் பெறும். இவ்வுத்தியோகத்தில் அமர்ந்து, ஒழுக்கம், பழக்கங்களிற் சிறந்து விளங்கும் அதிகாரிகளே, பிற்காலங்களில் பெரிய உத்தி யோகங்களைப்பெறுவர்.

பிரிட்டிஷ் முடியும் கொடியும்.

உலகிலுள்ள ஏகாதிபத்தியங்களுள், மிகப் பெரியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். அதுபோலவே, உலகிலுள்ள முடிகளிற் சிறந்தது, இங்கிலாந்து மன்னர்களும், மகாராணிகளும் அணியும் அழகமைந்த முடிகள். அம்மணிமகுடங்களில், விலையுயர்ந்த வைரங்கள் 300 வைத்து இழைத்திருக்கின்றன. அத்துடன் சிறந்த மாணிக்கங் களும், பெரிய நீலங்களும், மரகதங்களும் சேர்த்து இழைத்திருப் பவைகள், பெருத்த ஒளியைத் தருகிறது. பல ரத்தினங்கள் பதிக் கப்பெற்று, பார்ப்பவர் உள்ளத்தைக் கவருவதோடு, கண்ணிறைந்த

கதிரைப்பரப்புவதால், வானத்துலாவும் கதிரவன், தன் கிரணங்களை அண்மையிற் காட்டுவதுபோல் அமைந்துளது. அவைகளில் இப்போதுள்ள மணிமுடி மிகச் சிறந்தது.

இந்திய மக்களிடம் பெருங்கருணை காட்டிய, விக்டோரியா மகாராணி அவர்களுக்கு முன்னிருந்த, நான்காவது வில்லியம் என்பவரின் முடி, அதிக கனமுள்ளதாக இருந்தது. அம்முடியைத் தாங்கும் உடல்த்திடம், மகாராணியாருக்கில்லை. இளம்பிராயமுள்ள நமது மகாராணியாருக்கென, ஓர் புதிய மணிமுடி அமைக்கப்பெற்றது. அம்மகுடம், 39 அவுன்ஸ் 4 பென்னி கனம் கொண்டது. இம்முடியைத் தவிர, இன்னும் இரு மணி மகுடங்களிருக்கின்றன. அவைகளிலொன்றை சமஸ்தான கிரீடமென்றும், மற்றொன்றை சாதாரண கிரீடமென்றும் கூறுவர். இச்சமஸ்தான மணிமுடியில், ஏழாவது எட்வர்டு மன்னர், "ஆபிரிகா நட்சத்திரம்" என்ற அழகிய வைரமணி ஒன்றைப் பதித்தார். அதனால், அம்முடி அதிகக் காந்தியை வீசி அழகு மிளிர்கின்றது.

மேற்கூறிய முடிகளிலும் சிறந்து விளங்குவது இந்தியாவிற் செய்த மணி மகுடம். இதை, 1911-ம் ஆண்டு, மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், பொன்விளையும் நன்னிலம், புகுந்தாரை ஆதரிக்கும் பொன்னிலம், பண்டைச் சிறப்புடைய பாரதபூமி, எற்போரைக் காக்கும் இந்தியாவின் தலை நகரான டெல்லிக்கு வந்து சிம்மாசனம் ஏறினர். அன்று முடி சூட்ட "இந்திய ஏகாதிபத்திய முடி" என்ற பெயரால் அமைக்கப் பெற்றிருந்த அம்மாணிக்க முடியை குறித்த சுபதினத்தில் சூட்டப்பட்டது. அதில், மாணிக்கம், நீலம், வைரம், மரகத மணிகள், ஏராளமாகச் சேர்ந்து இழைக்கப் பெற்றிருக்கின்றன. இம்மணிமுடி தயாரிக்க, 60,000 பவுன்களுக்கு மேல் ஆகியிருக்கிற தென்பர். இவ்வழகிய முடிதான் இந்தியச் சக்கரவர்த்தியின் மணி மகுடமாகும். இம்மணிமகுடத்திற்கொப்ப, எந்நாட்டிலும், எவ்வரசிலும் இல்லையென்று கூறுவதில், நாம் என்றும் பின்னடையப் போவதில்லை. இதேபோல், முடிகளையும், சிம்மாசனங்களையும், அரச சின்னங்களையும் ஆக்குவதில், இந்தியா என்றென்றும் முதன்மை பெற்றிருந்திருக்கிறது. முன் உலக அதிசயங்களில் ஒன்றாக மதிக்கப்பெறும், மயில் உருவமாக இரத்தினங்களாலாக்கப் பெற்ற, "சிம்மாசனம்" ஒன்று, இந்தியாவில் செய்யப்பட்டிருப்பது, இங்கு குறிப்பிடத்தக்கது.

முடியைப்போன்று, எங்கும் பிரிட்டிஷாரின் ஞாபகத்தை யூட்டிக்கொண்டிருக்கும் அடையாளம், "யூனியன் ஜாக்" என்ற கொடியாகும். இக்கொடியில் சிவப்பு, நீலம், வெண்மை என்ற மூன்று நிறங்களுண்டு. இம்மூன்றும், மூன்று தலைவர்களின் சின்னமாக உள்ளது. அத்தலைவர்களை, "அர்ச் ஜ்யார்ஜ்", "அர்ச் ஆண்டிரூஸ்", "அர்ச் பாட்ரிக்" என்று கூறுவர். 14, 15 நூற்றாண்டுகளில் இங்கிலாந்தின் பெரியாராகிய, அர்ச் ஜ்யார்ஜின் சின்னமாக, சிவப்பு சிலுவையை ஒவ்வொரு ஆங்கிலேய சிப்பாயும் தரித்திருந்தான். பின் இச்சின்னம், இங்கிலாந்தின் யுத்தக் கொடியாகியது. அர்ச் ஆண்டிரூஸ் ஸ்காட் லாண்டின் பெரியார். இவரை இந்நாட்டினர், சிலுவையில் அறைந்தனர், பிறகு, ஒருசமயம் பெரும் போரொன்று நடந்தது. அப்பொழுது, அர்ச் ஆண்டிரூஸின் அடையாளமாகிய சிலுவைச் சின்னத்தை, வானத்தில் அந்நாட்டு மன்னனும், படை வீரரும் கண்டனர். உடனே, அவர்கள் அர்ச் ஆண்டிரூஸின் ஆலயம் சென்று, அச்சின்னத்தை தங்கள் கொடியாக ஏற்று, அப்போரிலும் வெற்றிகொண்டனர். அதனால், அச்சின்னமே, ஸ்காட்லாண்டின் கொடியாகியது. "அர்ச் பாட்ரிக்" என்பார் அயர்லாண்டின் பெரியாராவர். இவர், அயர்லாண்டில் கிருஸ்துவ மதத்தைப் பெருக்கினர். அதனால், இவரின் சின்னம் அயர்லாந்தின் கொடியாகியது.

"ஜாக்" என்ற வார்த்தை "ஜாக்கஸ்" என்ற வார்த்தையிலிருந்து வந்தது. பிரான்ஸ் மொழியில், "ஜாக்கஸ்" என்றால், "ஜேம்ஸ்" எனப் பொருள்படும். இந்த "ஜேம்ஸ்"தான், எலிசபத் மகாராணியின் வாரிசாக, இங்கிலாந்தின் பட்டத்திற்கு வந்தவர். எலிசபத்து மகாராணியார் விவாகம் செய்துகொள்ளவில்லை. அதனால், அவருக்கு பின் சந்ததி இல்லை. அப்பொழுது, ஹென்ரி ஏழாவது மன்னரின் மூத்த மகளாகிய, மார்க்ரேட்டின் பேரனாகத் தோன்றிய, இந்த "ஜேம்ஸ்", ஸ்காட்லாண்டின் மன்னனாக இருந்தார். எலிசபத் மகாராணிக்குப்பின் சந்ததி இல்லாததால், 1603-ம் ஆண்டில் இவரை இங்கிலாந்தின் மன்னனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது, இங்கிலாந்தும், ஸ்காட்லாண்டும் ஒரு அரசின் கீழ் ஆகியது. இருநாட்டின் தலைவராகிய, இந்த "ஜேம்ஸ்" மன்னர் அப்பொழுது கிரேட் பிரிட்டனின் மன்னனாக ஏற்று முடி சூட்டப்பெற்றார். அன்று, இரண்டு நாட்டின் கொடிகளையும் ஒன்று சேர்த்து, தன் அரசியல் கொடியாகக்கொண்டார். அதன்பிறகு, 92 ஆண்டுகளுக்கப்பால், 1695-ம் ஆண்டில், இவ்விரண்டு கொடிகளுடன், அர்ச் பாட்ரிக்கின் கொடி சேர்க்கப்பட்டு, "யூனியன்ஜாக்"

என்ற பெயர் கொண்டது. அன்றுமுதல், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய அடையாளமாக, உலகில் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான நாடுகளிலெல்லாம், இவ் "யூனியன் ஜாக்" பறந்துகொண்டிருக்கிறது. அதுபோல், இம்மலாயா தீபகல்பத்திலும், அக்கொடி பறக்க விடப்பட்டிருக்கிறது. மன்னரின் மணிமுடியை கேள்வியால்ப் பார்க்கிறோம். அவரின் ஆட்சி அடையாளச் சின்னத்தை, ஒவ்வோரிடங்களிலும் நேரில் காண்கிறோம். அதற்கே, எந்த உத்தியோகஸ்தர்களும், தலைவர்களும், தம் தம் வணக்கத்தைச் செலுத்துவர். அதை நாமும் பின்பற்றுவோம்.

மதங்களின் பாதுகாப்பு

இம்மலாயாவில் வாழும் மக்கள், பல மதங்களைக் கொண்டவராவர். அவைகளின் விரிவு, முன்னேற்றமடைந்த மக்களென்பதில் கூறப்பெறும். அம்மக்களுக்குள் மதச் சண்டைகள் ஏற்படாவண்ணம், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் காத்துவருகின்றனர். அவர்களின் மதம் கிறிஸ்து. ஐக்கிய மலாய் நாடு, ஐக்கியப்படாத மலாய் நாட்டினை ஆளும் அரசர்களின் மதம் முஸ்லீம் மார்க்கம். இவை இரண்டும் அரசாங்க மதங்களாகவிருந்தும், ஏனைய இந்து, புத்த மதங்களுக்கும் மற்றவைகளுக்கும் தக்க துணை புரிந்து காப்பது போற்றுதற்குரியது.

அவைகளைப் பாதுகாப்பதற்காக, அரசாங்கத்தார் பல இந்து முஸ்லீம் எண்டௌமெண்ட் போர்டுகளையும், அட்வைஸரி போர்டுகளையும் நியமித்திருக்கிறார்கள். அவ்வறப் பாதுகாப்பு நிலையங்களில், ஆங்காங்கே உள்ள அந்தந்த மதங்களின் பெரியார்களையும், பிரபலம் வாய்ந்தவர்களையும் தேர்ந்தெடுத்து அதன் அங்கத்தினர்களாக நியமித்து, அவர்களே அம்மதங்களின் பஞ்சாயத்தார்களாக போர்டுகளை நடத்திவரச் செய்திருக்கிறார்கள். அவ்வறப் பாதுகாப்பு நிலையங்களைக்கொண்டு, ஆலயங்கள், மசூதிகள், ஈமக்காடுகள் மற்றவைகள் பரிபாலிக்கப்படுகின்றன. அவைகளுக்குரிய சொத்துகள் காக்கப்படுகின்றன. அங்கிலேயத்தின் பார்வைக்குட்பட்ட ஆலயங்கள், மசூதிகளில் சண்டை சச்சரவுகளின்றி ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன.

இவர்களின் கண்காணிப்பிலுள்ள ஆலயங்கள் நீங்கலாக, இந் நாட்டில் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் கட்டப் பெற்ற ஆலயங்கள் பலவுள. அதன் விபரங்கள், இந்நூலில் அங் கங்கே, படவிளக்கங்களுடன் காட்டப்பட்டிருக்கின்றன. அவ்வால யங்கள் அறப்பாதுகாப்பு நிலையங்களுக்குட்பட்டவைகளல்ல. அதன் நிர்வாகங்களை எவ்வித சச்சரவுமின்றி, மிக ஒழுங்குபட நடத்தும் திறமை, நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு மிகுதியுமுண்டு.

இக்குழுவினர் தொன்றுதொட்டே இறைவன் பணியிலும், ஏற்போரைக் காக்குந்தொழிலிலும் ஈடுபட்டவர்கள். இவர்களின் அறப்பணி, இயற்கைக்குணம், பொன்றாப்புகழ், வாணிபத்தின் வன்மை, வருவாய்க்கேற்ற செலவு முதலிய உயர் குணங்களை அங் கங்கே விளக்கிக் கூறப்பெறும். இவர்கள் என்றென்றும் செல்வத் தில் வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள், வாழவிருக்கின்றவர்கள். இவர் கள் செல்வ நிலைக்கேற்ப, ஏராளமான அறங்களைச் செய்து புகழை யும் பெறுபவர்கள். இவர்கள் குலத்தைப்பற்றிக் கூறும்போது, இற்றைக்கு ஆயிரமாண்டுகட்கு முன்பே,

“ மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடி.............................”

என்று கூறினர் தெய்வச் சேக்கிழார். அவர் கூறியபடி, புகழைத் தருகின்ற அறப்பணியின் வழிபற்றி, உண்மை என்ற ஒன்றில் கொஞ்சமும் ஊறுபடாத பெருமையைப் பெற்றவர்கள், பெறுபவர் கள் பெருங்குடிவணிகரெனும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்.

பால்வடி செந்தமிழீந்த சேக்கிழார் பெருமான் கூறியபடி, பல தருமங்களினும் புகழைத் தருவது எது? பலரால் விரும்பப் படுவது எது? பற்றினோர்க்குற்ற வீடுதருவதெது? பிறப் பொழித்தின்பம் பெருக்குவதெது? அதுதான் ஆலயமாக்கும் அறப்பணி. அதையறிந்தே, முன்னோர்கள், பலவாலயங்களை நிறு வினர்கள். அதைப்பின்பற்றி, அன்று தென்னாட்டில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட ஆலயங்கள் பல. அவைகள், பிற்காலத்தில் சிதைவுற்றன. சிதைவுறுகின்றன. அவ்வாலயங்களை நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காலத்திற்கேற்றவாறு, தலங்களுக் குரிய தகுதியோடு கற்றிருப்பணிகளாற் கட்டிப் புதுப்பித்தனர். அவ்வாலயங்களிலமர்ந்த பிரானுருக்கு பூசைக்குரிய, வேண்டிய நந்தவனங்கள், கோச்சாலைகள், வேதபாராயணச்சாலைகள்,

தேவாரப் பாடசாலைகள் இன்னுமற்றவைகளும் நிறுவியுள்ளனர். அதுதானா செய்துள்ளனர்? இன்னுமநேகமுண்டு. வடக்கே காசியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையும் ஒவ்வொரு தலங்களிலும் தங்குமிடங்கள், சத்திரங்கள் பல கட்டி, ஏழைகளைக் காக்கின்றனர். இக்குழுவினரின்றேல், இக்காலம் எவ்வாலயத்தை, இறைவன்றரிசனத்தை, தென்னாட்டிற் காணமுடியும்? முடியாது. அங்கு ஏராளமான ஆலயங்களைக் கட்டி அவைகளின் விழாக்களைக் கொண்டாடி நிர்வகிக்கும் திறமையும் பெற்றிருப்பதால், அவர்கள் வந்துள்ள இம்மலாயாவிலும், ஏராளமான கோயில்களைக் கட்டியுள்ளார்கள். அவைகளை முறைப்படி நிர்வகிக்கிறார்கள்.

இவர்கள் தாங்கள் கட்டிய திருப்பணிகளை நிர்வகிப்பதுடன், சைவசமயப்பற்றுடையவர்களாயிருந்தும் வேறு எம்மதத்தினர், எச்சார்பினர் சென்று தருமத்திற்கெனப் பொருள் கேட்பினும், இல்லை என்னாது கொடுத்துதவுவார்கள். காரணம்? இவர்கள் கொண்ட கொள்கையே!

“ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்வல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேவுப தேசமிதே”

(பட்டினத்தடிகள்)

(இதன்பொருள்) மனமே! தெய்வம் ஒன்றென்றிரு. அத்தெய்வம் என்றும் உண்டு என்று நம்பி இரு. உயர்ந்த செல்வங்கள் யாவும் அநித்தியம் என்றிரு. பசித்தவர்களுடைய முகத்தை இரக்கத்தோடு பார். (அவர்கட்கிரங்கி அன்னமிடு) நல்ல அறமும் நல்ல சிநேகமும் நல்லனவென உறுதிகொண்டிரு. நடுநிலை குன்றாமல் வினைக்குத்தக்கவாறு இறைவன் விதித்த இவ்வளவு கிடைத்ததென்று திருப்தியாய் இரு. இதுவே உனக்கு யான் செய்யவேண்டிய உபதேசம்.

இப்பாவியற்றிய பட்டினத்தடிகள், இற்றைக்காயிரமாண்டுகட்கு முன்பு இவர்கள் மரபிற்றோன்றியவர். அவர் வழி வந்தவர்களாகிய இன்றுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், அக்கொள்கையையே பின்பற்றுபவர்கள். உலகில் தோன்றிய மக்கள் ஒவ்வொருவரும், தம் தம் வாழ்நாளில் செய்ய வேண்டுவதிதே என்பதை நன்குணர்ந்தவர்கள். அதனால் யார் எதை நாடிச் சென்றாலும்,

இல்லை என்னாது கொடுக்கும் கொடைப் பழக்கமும் இவர்கட்குண்டு. இத்துணை சிறப்பும் திறமையும்கொண்ட இவர்கள் நடத்தும் ஆலயங் களின் நிர்வாகங்களை இன்னுமொருவர் கவனிக்கவேண்டுமென்ப தில்லையல்லவா? இவர்களால் நடத்தப்பெறும் ஆலயங்களில் பல விழாக்கள் கொண்டாடப்பெறும். அவ்விழாவின் வைபவங்கள் நாட்டின் பிரிவில் அங்கங்கே கூறப்பெறும். அவ்விழாக்களில், கவர்ண்மெண்டார் தங்களாலியன்ற உதவியைச் செய்வார்கள். அத்தருண வுதவி, போற்றுதற்குரியது.

கல்வித் திட்டம்

இந்நாட்டில் மலாயர்களுக்கு இலவசக் கட்டாய மலாய்க்கல்வி அளிக்கப்படுகிறது. மற்ற எல்லோருக்கும் அரச மொழியாகிய ஆங்கிலம் கற்பிக்கப்பெறுகிறது. ஆங்கில மலாய்ப் பள்ளிக்கூடங்களை கவர்ண்மெண்டாரே அதிகமாய் நடத்தி வருகின்றனர். அவைகளில் ஏராளமான மாணவர்கள் படித்து முன்னேற்ற மடைகிறார்கள். ஆங்கிலப் படிப்புக்கு கவர்ண்மெண்டார் ஆதரிப்புடன், மெதடிஸ்ட் மிஷன், ரோமன் காதலிக்மிஷன் காரர்களும் ஆதரித்து ஏராளமான பள்ளிக்கூடங்களைக் கட்டியுள்ளார்கள். பெண்மக்களின் கல்விக்காக வும் கவர்ண்மெண்டார் உதவி செய்கின்றனர். அத்துடன் ரோமன் காதலிக்மிஷன் காரர்கள் பல கன்வெண்டுகளை நிறுவி ஏராளமான பெண்மக்களை வளர்ப்பதோடு, நல்ல முறையில் கல்விப் பயிற்சியும் அளித்து வருகின்றனர். சினர்கள் மிகுதியாக விருப்பதால், அவர் களும் சொந்தப் பொறுப்பில் பல பள்ளிக்கூடங்களை நிறுவி, ஏராள மான மாணவர்கள் படித்து முன்னேற்றமடைகின்றனர்.

இங்குள்ள தமிழ்மக்களுக்குக் கட்டாயக் கல்வி இல்லை. அவர் களிற் பெரும் பகுதியார் கூலிவேலை செய்பவர்கள். அவர்களின் குழந்தைகளோ, படிப்பில்லாதிருக்கிறார்கள். அதை அகற்றப் பல இடங்களில் தமிழன்பர் பல்லோரால் பல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் நிறுவப் பெற்றிருக்கிறது. அப்பள்ளிகளில் சிலவற்றுக்கும், எஸ் டேட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் சில வற்றுக்கும், கவர்ண்மெண் டார் கிராண்டுத் திட்டங்கள் அளித்துவருகின்றனர். அவ்வாறு உபகார நிதிபெறும் பள்ளிக்கூடங்கள், கல்வி இலாகா அதிகாரி களின் சட்ட திட்டங்களுக்குட்பட்டிருக்க வேண்டும். அச்சட்டத் தின்படி பள்ளிக்கூடப் பாடங்கள் இந்தியாவில் கற்பிக்கப்படும்

புத்தகங்களாகும். அப் பாடங்களை இந்நாட்டில் தோன்றிய மாணவர்களுக்கு கற்பிப்பதில் யாதுபலன் ? அதனால், தமிழ் எழுத்துக்களிலும் ஒருசில பகுதி இந்தியா, இங்கிலாந்தின் சிறப்புகளையே அறிய முடியும். இந்நாட்டின் சிறப்புகளோ, கல்வியின் ஆழ்ந்த கருத்துகளோ, தெரியக்கூடிய நிலையிலில்லை. இப்போது கற்பிக்கப்படும் பாடங்கள், இந்தியாவில் போதிப்பதுபோல முழு முறையுமில்லை. இந்நாட்டிற்கு வேண்டிய கருத்துகளும் பெற்றிருக்கவில்லை. அதனால் மாணவ, மாணவிகள் பெயருக்குத்தான் படிக்கிறார்களே யன்றி, பெரும் அறிவியலுலகில் சேரக்கூடிய நிலையிலில்லை என்பது, நன்கு விளங்கும். அக்குறையைப் பல அன்பர்கள் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அதைக் காருண்ய கவர்ண்மெண்டாரும் அறிந்தார்கள். அதற்காக ஓர் ஆங்கிலத்துரை மகனாரையும் சென்னைக்கு அனுப்பினார்கள். அவரும் அங்குள்ள நிலையையும், கல்வி கற்பிக்கவேண்டிய முறையையும், தெரிந்து வந்துள்ளார். அதனால் எதிர் காலத்தில், தமிழ் மாணவ, மாணவிகள் முன்னேற்ற மடைவார்கள் என்பது திண்ணம்.

தமிழ் மக்களுக்காக, ஏழைக் குழந்தைகளுக்காக, கவர்ண்மெண்டார் உபகார நிதி கொடுத்து நடத்தும் பள்ளிக்கூடங்கள் பல. அதன் மேல், நாட்டுக்கோட்டை நகரத்தார்களாலும், பல தமிழ் அன்பர்களாலும், பினாங்கு, சுங்குரும்பை, கெட்டா, ஈப்போ, கோலாலம்பூர், சிறம்பான், மலாக்கா, மூவார், செகாமெட், சிங்கப்பூர் இன்னும் பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பெற்றுள்ளன. அவைகளிலும் இலவசக் கல்வி அளிக்கிறார்கள். இத்துணை சாதனங்கள் மிகவிருக்கிறது. ஏழை மக்கள் எப்படியும் படித்து முன்னேற்ற மடைய வேண்டும். அதைக்கண்டு நாம் ஆனந்தமுற வேண்டுமென்ற அவா, பல அன்பர்களுக்குண்டு. அவ்வாறிருந்தும், தமிழ்க் குழந்தைகள் இன்னும் பல, படிக்க முன் வராதது வியப்பைத்தருகிறது.

குழந்தைகளைப்பெற்ற ஒவ்வொருவரும், உலக நிலையையும், நத்தாய்நாட்டின் தன்மையையும், தாய்த் தமிழ்மொழியின் மேன்மையையும், உணர்ந்தால், இவ்வாறு இருப்பார்களா ? அந்தோ ! அவர்களின் அறியாமையை என்னென்றுகூறுவது ? பெற்றோர்களே! உங்களைப்போல, உங்கள் குழந்தைகளின் வாழ்நாட்களை வீணாளாக் காதீர்கள். எதிர் காலத்தில், உங்கள் குழந்தைகள் மேம்பாடடைய வேண்டும். இன்றே தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கு மாணவ, மாணவிகளை அனுப்புங்கள். செல்வவந்தர்களே ! அன்பர்களே ! கவர்ண்

மெண்டார் தமிழ் மாணவர்களுக்கு, சரியான முறையில், கல்வி கற்பிக்க முன்வந்துவிட்டார்கள். அதற்கு ஆக்கமளிக்க வேண்டுவது உங்கள் கடமை. நீங்கள் ஒவ்வொருவரும் இயன்ற அளவு பொருளீந்தால், நமது ஏழை மாணவர்கள் நன்கு கற்பார்கள். அதனால் அவர்களின் வறுமை வெறுமையாகும். அறிவு பெருகும். நமது நாட்டிற்கும் பலனுண்டு. நம் தமிழ்த்தாயும் வளர்ச்சி பெறுவாள். முன் வாருங்கள்!

வாணிபத்தின் உயர்வும் வணிகரின் சிறப்பும்

கவர்ண்மெண்டாரின் பாதுகாப்பு மிகுதியால் இந்நாட்டில் எந்நாட்டின் வியாபாரமும் பெருக்கங் கொண்டிருக்கின்றன. இங்கு விளையும் ரப்பர், கொப்பரை, அன்னாசிப்பழம், கூந்தற்பனை எண்ணெய், சவ்வரிசி, பிரம்பு, தேங்கா யெண்ணெய், பாக்கு மற்ற பழவகை விளை பொருள்களை ஏற்றுமதி செய்யவும், அயல் நாட்டிலிருந்து இந்நாட்டுக்கு வேண்டும் பொருள்களை இறக்குமதி செய்யவும், பெருத்த கம்பெனிக்காரர்களும், வியாபாரிகளும் நிறைந்திருக்கிறார்கள். இவர்களில் பெருத்த பட்டு, துணிவியாபாரங்களையும், உணவுப்பொருள் வியாபாரங்களையும், செய்பவர்கள் இந்திய நாட்டின் குஜராத்திகளும், தென்னிந்திய முஸ்லீம் சகோதரர்களுமாவார்கள். இம்முகமதிய சகோதரர்களிற் பலர், காசுக்கடை, ஜவுளிக்கடை, பலசரக்குக் கடைகளையும் வைத்து நடத்துகிறார்கள். இன்னும் சிலர் கடற்றுறை முகங்களின் போட்டுகளின் சொந்தக்காரர்களாகவும், முதலாளிகளாகவும், சாப்பாட்டுக்கடை வைத்து நடத்துபவர்களாகவும், இருக்கிறார்கள். இவர்களைப்போல பல தமிழன்பர்களும், எல்லா வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ளார்கள். இம்மலாயாவில் பெருத்த துறைமுகங்களுள்ள நகரங்களிலும், சிறிய ஊர்களிலும், எவ்வியாபாரத்தையும், எத்தொழிலையும், செய்பவர்கள் தென்னிந்தியர்களே! இவர்கள், இந்நாட்டிலின்றேல், வாணிபம் இவ்வளவு பெருக்கமுறாதென்பது திண்ணம். சீனர்கள் அதிகமாக உள்ள இந்நாட்டில், அவ்வியாபாரிகளும் நிறையவுண்டு. அவர்கள் வியாபாரம் அச்சமூகத்தையே பொறுத்தது. மற்ற சமூகத்தினரும் ஏற்கும் நிலையில், எவ்வியாபாரத்தையும் முறைப்படி நடத்துபவர்கள், தென்னிந்தியர்கள்தான் என்பதை யாரும் ஏற்பர். ஒருவரும் மறுக்கார்.

இத்தென்னிந்தியர்களில், ஒரு பகுதியாரான நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், ஏராளமான பேர்கள் பெருமுதல் வைத்து, இங்கு லேவாதேவித்தொழில் செய்கிறார்கள். பணம் கொடுக்கல், வாங்கல், லேவாதேவிக்கென, பல பாங்குகளும் இந் நாட்டில் இருக்கின்றன. அதனால் ஒரு சிலரே பலன் பெற முடியும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் லேவாதேவியால் பலர் பலன் பெறமுடியும். பாங்குக்காரர்களோ, ஒருவர் ஓர் கட்டிடத்தைக் கட்டிய பின், மதிப்பின் பேரில் பணங்கொடுப்பார்கள். செட்டியார் களோ கட்டு முன்பே, உடையவரின் நம்பிக்கையில், பணங் கொடுப் பார்கள். இதேபோல ஒவ்வொன்றிலுமுண்டு. இந்நாட்டில் இப் போதுள்ள பெருத்த பணக்காரர்கள் என்று கூறக்கூடிய சீன முதலாளிகள், தோட்ட சொந்தக்காரர்கள், ஈயச் சுரங்கங்களின் அதிபர்கள், மற்றவர்களிற் பெரும் பான்மையோர், நாட்டுக்கோட் டைச் செட்டியார்களின் பண உதவி பெற்றே, தொழிலை ஆரம் பித்துப் பெருக்கி முன்னேற்றமடைந்தவர்கள் என்பது யாவரு மறிந்தது. மலாயாவில் பெருத்த நகரங்கள் முதல், சிறிய ஊர் ஈறாக ஒவ்வோரிடங்களிலும், இவர்களின் லேவாதேவிக் கடைகளுண்டு. அவைகளின் விளக்கம் அங்கங்கே கூறப்பெறும். இவர்களிடத்தில் பேருதவி பெற்றவர்களிற் சிலரும், மற்றவரிற் சிலரும், இவர்களையும் இவர்கள் தொழிலையும் இப்போது குறை கூறுகிறார்கள். அந்தோ! அவர்களின் அறியாமையை என்னென்று கூறுவது? இவர்கள் தொழிலில் அவர்களிருந்தால், அதன் தன்மையை உணர்ந்தால், அவ்வாறு கூறார்கள்.

"சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்"

என்பது வள்ளுவர் வாக்கு. அதே போல, இவர்களின் தொழில் முறை, உண்மை நிலை, செல்வத்தின் உயர்வினை, தெரியாது கூறும் அவர்களைப்போன்ற ஒரு சிலருக்கு, நாம் மறுமொழி கூறவேண்டுவ தவசியமில்லை. ஆயினும், அதுவே உண்மை என நம்பும் ஒரு சிலர், இருப்பர் என்பதை எண்ணி நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், லேவாதேவித்தொழிலால், இந்நாட்டில் எவ்வளவு பணத்தை இழந் திருக்கிறார்கள் என்பதைக் காட்டவேண்டுவது எமது கடமையாக விருக்கிறது.

இந்நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், எத்தனையோ ஆண்டு களாக வாணிபத்தில் தேர்ச்சிபெற்றவர்கள். அதனாற்றான், இவர்

களுக்கு "வணிகர்" என்ற பெயர் வந்தது. இவர்களிற் சிலர், வாணிபங்கருதி, பன்னுள் முன்னம், பரவையிலூர்ந்த பாய்மரக் கப்பலில், இங்நாட்டுக்கு வந்து சென்றுள்ளார்கள். அவ்விளக்கம் "முன்னேற்றமடைந்த மக்க"ளென்பதில் கூறப்பெறும். அவ் வாணிபங்கருதி வந்து திரும்பியவர்கள், பிற்காலத்தில் லேவா தேவித் தொழிலுக்காக, இங்நாடு போந்தார்கள். இவர்கள் கொண்ட படியே விலைகூறி, லாபத்தைக் கொஞ்சமாக அடைய எண்ணும் குணம் பெற்றவர்கள். கொண்ட முதலுக்கு மோசம் வாராதபடி காப்பவர்கள். தங்கள் தொழிலின் வருவாய் கருதி, செட்டாகச் செலவு செய்பவர்கள். மற்றவர்களோ, ஓர் வாணிபத்தை தொட ங்குவார்கள். அப்பொழுதே அதன் பிற்கால வருவாயைப் பெரி தாய் எண்ணுவார்கள். ஆடம்பரச்செலவு செய்வார்கள். அதனுல் லாபம் பெற்றுவிடுவோமென நினைப்பார்கள். இவர்களோ, அவ் வாறு செய்யார்கள். எத்தொழிலையும் செய்வார்கள். அத் தொழிலில், லாபம் வந்த பின்பே, அப்பொருள் தன் சொந்தமென எண்ணுவார்கள். அதன் வருவாய் கருதி, செட்டாகச் செலவு செய்வதாலேயே, இவர்களுக்கு "செட்டியார்கள்" என்ற பெயரும் வந்தது. "செட்டியார்கள்" என்ற சொல், "செட்டு+ஆர்" என்ற இரு பதங்கள் சேர்ந்த ஒரு சொல்லாகும். அதாவது செட்டு நிறைந்தவர்கள் என்ற பொருளாகும். செட்டு ஆர் என்பதைச் சேர்த்து எழுதும்போது செட்டு என்பதின் ஈற்று "உ" கரம் திரிந்து, வருமொழித் தொடர்புக்கேற்ப இகரமாக மாறி "ஆ" என்பதின் இனமாகிய "யா" சேர்ந்து "செட்டியார்" ஆயிற்று. அப்பெயருக் கேற்ப செட்டாகவுள்ள லேவாதேவித் தொழிலை, இவர்கள் குலத் தொழிலாகக் கொண்டார்கள்.

இத்தொழிலில் மற்ற வியாபாரங்களைப்போல, அதிக லாபம் கிடைக்காவிட்டாலும், முதலுக்கு மோசம் வாராதென்பது இக்குழு வினரின் துணிபு. அதற்கேற்ப, இவர்கள் தொழிலை ஆரம்பித்த பொழுது, உலகமும் நம்பிக்கைத் துரோகமின்றி நடந்தது. அதனுல் இவர்கள் லேவாதேவித் தொழிலில் மென்மேலும் சிரத்தை கொண்டார்கள். கொண்டு,

"அண்டப் புரட்டர்தாம் முறிதந்து
பொன்னடகு வைக்கினுங் கடனீந்திடார்,
மருவு நாணயமுளோர் கேட்டனுப்புகினு
மவர் வார்த்தை யிலெலாங் கொடுப்பார்,

கண்டெழுதா பற்றுவரவினின் மயிர்பிளந்தே
கணக்கிலணுவாகினும் விடார்,
காசு வீணிற் செலவிடார் உசிதமானதிற்
கனதிரவியங்கள் விடுவார்—"

என்று ஓர் பெரியார் கூறியபடி, நாணயமுள்ளவர்களுக்கு கொடுத்தும், மற்றவர்களுக்கு கொடுக்காது தடுத்தும், தன் தொழிலைச் செவ்வனே நடத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இதனால் இவர்கள் தொழில் மேம்பாடடைந்தது. ஒரு காலத்தில், மேம்பாடுற்ற தொழிலால் பெற்ற செல்வத்தை, இவர்கள் ஒழுங்கான முறையில் வைத்துள்ளார்கள். மற்றவர்களிற் பலர், இவர்களைப்போல செல்வத்தைப் பாதுகாக்க வழி தெரியாது, வீண் செலவு செய்து விட்டார்கள். அதனால் பொருளிழந்ததோடு, இவர்களைக்கண்டு பொறாமையும் கொள்கிறார்கள். என்னே மதியீனம்!

இவ்விலேவாதேவித் தொழிலால் இவர்கள் இந்நாட்டில், ஏராளமாகப் பொருளிழந்ததைக் கூறுவோம். 1919, 20, 21-ம் ஆண்டுகளில், இந்நாட்டின் ரப்பர் விலை ஏற்றமுற்றிருந்தது. அக்காலந்தான் ரப்பர்த்தோட்டங்களுக்குப் பெரும்விலைகொடுத்து, ஒவ்வொருவரும் வாங்கினார்கள். அன்று எக்கர் ஒன்றுக்கு விலை $1,000, 1,100 கொடுத்து வாங்கப்பெற்றது. அப்படி வாங்கும் தோட்டங்களுக்கு உடையவர் ஒரு பகுதி பணங் கொடுப்பார். அவர் கொடுப்பதற்கு மேல், எக்கர் ஒன்றுக்கு $ 700, 800 நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடனாகக் கொடுப்பார்கள். இதே போல பல தோட்டங்கள் வாங்கப்பெற்றன. அன்னாளில் செட்டியார்களுக்கு சொந்தமாக தோட்டங்களே இல்லை. மலாக்காவில் ஒரு சிலருக்கு உண்டு. அவர்கள் விற்கவே இல்லை. அதனால் இவர்கள் கடன் கொடுத்த பணமுற்றிலும் பிறருக்கே சேர்ந்தது. அன்று, ரப்பர் விலை பிக்கல் ஒன்றுக்கு $140, 150 விற்றது. தோட்டங்களில் ஒரு பிக்கல் பால் எடுக்கவும், பராமரிக்கவும், பிக்கல்ஒன்றுக்கு $ 40, 50 கழித்தாலும், பிக்கல் ஒன்றுக்கு லாபம் $100 கிடைக்கும். அக்கணக்கின்படி, ஒரு பிக்கல் பால் 3 எக்கரில் கிடைக்கும். அம்மூன்று எக்கருக்கும், செட்டியார்கள் கொடுத்த தொகைக்கு வட்டியாக கிடைத்தது $24; உயர்ந்தால் $30. அதற்கு சொந்தக்காரர் கொடுத்த $900க்கு கிடைத்தது $76, 70. இதில் யாருக்கு அதிக லாபம் என்பதை, குறை கூறுபவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். அன்றே, தோட்டம் வாங்கியவர்களை நம்பி தொழிற் செய்யாது, செட்டியார்களே சொத்துகளை வாங்கி இருந்தால், அம்மூன்றுண்டுகளில், எவ்வளவு

லாபம் பெற்றிருப்பார்கள்? அதனால், எவ்வளவு பணங்களை, இழக்க நேர்ந்ததென்பதை, இனியேனும் அறிவார்களன்றோ! லாபம் தங்களுக்கு கிடைக்கும் வரையும், வாங்கியபவர்கள் தோட்டங்களை வைத்திருந்தார்கள். நஷ்டம் வரும் தருணம், நாட்டுக் கோட்டைச் செட்டியார்களிடம் ஒப்படைத்துவிட்டார்கள்.

இந்நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், ஒவ்வொருவரும் இந் நாட்டிற்கு வரும்பொழுது, மற்றவர்களைப்போல வெறுங்கையோடு வந்தவர்களல்ல. தம் தாய் நாட்டிலிருந்து அவரவர்களுக்கு ஏற்ற அளவு ஒரு தொகையை முதலாகக் கொண்டுவந்தவர்கள். அத் தொகையை வைத்து தங்கள் ஒழுக்கம், அடக்கம், நற்பழக்கம், நம்பிக்கை, செட்டு மற்றவைகளால் பெருந்தொகையாகப் பெருக்கினார்கள். இவர்களும் மற்றவர்களைப்போல மூன்று ஆண்டுகளுக் கொரு முறை கணக்குகளைப் புதுப்பிப்பார்கள். முன்னிருந்தவர் தாய் நாடு செல்வார். மற்றவர் வருவார். சென்று வந்தாலும் அந்தந்தக் கணக்குகளில் கிடைக்கும் லாபங்களை, அப்படியே தாய் நாட்டுக்கனுப்பும் மற்றவர்களைப்போல இவர்களும் அனுப்பமாட்டார்கள். அத்தொகைகளையும், இங்கேயே தொழிலில் வைத்துப் பெருக்குவார்கள். அதைச் சொந்த முதலாக என்னுவார்கள். அவ்வாறு தங்கள் பணங்களை இங்கேயே வைத்து, மேற்கொண்டு வேண்டியவைகளையும், தம்மினத்தவருக்குள்ளேயே வாங்கி இருந்ததால், ரப்பருக்கு விலையில்லாது இந்நாடு அல்லலுற்றபொழுதும், தங்கள் சொத்துக்களை வைத்து நிர்வகித்தார்கள். இப்பெரு முதலும் பெரும் பழக்கங்களும் பொறுமையுமின்றேல், இவர்களும் பலரைப்போல் அல்லலுக்காளாகி இருப்பார்கள். இத்துணை பழக்கங் களோடு, இவர்களுக்கு இறைவனிடத்து அன்பு மிகுதி. தங்கள் தொழிலையே அவனுடையதென்று என்னுபவர்கள். அவனருளும் இவர்களிடம் என்றும் குடிகொண்டிருக்கிறது. ஆகவே இவர்களுக் கொன்றும் குறை நேராது. காலத்துக்கேற்றவாறு இவர்களின் உள்ளக்கருத்தை இவர்கள் குலதெய்வமாக விளங்கும் கந்தன் மாற்று கிறான். அவனருளும் அறத்தின் பலனும் பெற்ற இவர்கள் அதற் கேற்றவாறு நடக்கிறார்கள். அழியாச் செல்வத்தைப் பெருக்கு கிறார்கள். உலகில் எத்தொழிலிலும் முன்னேற்றமடைகிறார்கள். இன்று இந்நாட்டில் ஏராளமான சொத்துக்குடையவர்களாகவும், லேவாதேவித் தொழிலோடு பல வியாபாரங்களைச் செய்பவர்களாக வும் பெருஞ் செல்வவந்தர்களாகவும் கொடையாளர்களாகவும் விளங்குகிறார்கள். இவர்கள் தொழில்களுக்கும் கவர்ன்மெண்டார்

பாதுகாப்பளித்து வருகிறார்கள். இவர்கள் வைத்துள்ள கணக்கை இந்நாட்டின் கவர்ன்மெண்டார் பல இடங்களில் சிறப்பித்துக் கூறி இருக்கிறார்கள். இவர்களுக்குப் பாதுகாப்பு அதிகம். அதனால் வாணிபத்துறை சிறந்து விளங்குகிறது.

வரி விதிப்பும் வழித்துணை வசதியும்

இம்மலாய் நாட்டிலுள்ள நிலங்கள் சர்வே அளவு செய்யப் பட்டிருக்கின்றன. அவைகளில் 1936-ம் ஆண்டுக் கணக்கின்படி 3,303,823 எக்கர்களில் ரப்பர் பயிரும் 610,696 ஏக்கர்களில் தென்னை மரங்களும் 765,250 எக்கர்களில் 296,557 ஏக்கர்களில் மற்ற எண்ணைப் பனை, பழம், கோப்பி, அன்னாசிப்பழம் மற்றவை களும் நெல் விவசாயங்களும் பயிரிடப்பட்டிருக்கிறது. அவை ஒவ் வொன்றுக்கும், விளைபொருளுக்கு தக்கவாறு, நிலவரி வசூலிக்கப் பெறுகிறது. நகரங்களில் முனிசிபாலிடி, செனிட்ரிபோர்ட் மற்ற நிலையங்களைக்கொண்டு கட்டிடங்களை பிளான்களோடு கட்டச் செய் கிறார்கள். அவைகளின் வருமானத்திற்கேற்ப வரியும் வசூலிக்கிறார் கள். துறைமுகங்களில் இறங்கும் சில சாமான்களுக்கு சுங்க இலா காவால் வரி வாங்கப்படுகிறது. ரப்பர் ஏற்றுமதிக்கு துறைமுகத்தில் வரி வசூலிக்கப்பெறுகிறது. சுங்க இலாகாவால் தொடுவாய்ப் பகுதி க்கு அதிக வருவாய் இல்லை. அங்கு இறக்குமதியாகும் அபின், சாராயம், புகையிலை, பெட்ரோல் இன்னும் சில சாமானுக்குத்தான் வரியுண்டு. ஐக்கிய மலாய் நாட்டில் மேற்கண்ட சாமான்களுக்கும் பட்டு, துணி, வாசனைச் சாமான்கள், எண்ணை இன்னும் பல சாமான்களுக்கும் வரியுண்டு. அதற்காக அவ்வெல்லைகளான பாரிட் பந்தார், கிமாஸ் மற்ற இடங்களில் சுங்கச் சாவடிகளை வைத்து வரி வசூலிக்கிறார்கள். இதேபோல ஐக்கியப்படாத மலாய் நாடுகளாகிய கெடா, ஜோஹோர்களிலும் அதனதன் எல்லைகளில் சுங்கச்சாவடி களை வைத்து வரி வசூலிக்கிறார்கள். இவ்வரிவசூல்களைக்கொண்டும், எஸ்டேட் டியூட்டி வருமானங்களைக்கொண்டும், நடைபெறும் கவர்ன்மெண்டு, இந்நாட்டு மக்களுக்கு, வேண்டும் நலன்களையும், வசதிகளையும், அப்போதைக்கப்போது அளவு கடந்து செய்கிறது.

இவைகளில் மிகச் சிறந்தது மக்கள் போக்குவரத்துக்காக பினாங்கிலிருந்து சிங்கப்பூர் வரை கண்ட கண்ட இடமெல்லாம்

கொண்டு செல்லும் வழிகள். மலாயாவில் சுமார் 2840 மைல் நீளம் தார் ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. 1771 மைல் சரளை ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வழித்துணைபற்றி எந்த நேரத்திலும் எந்த இடத்திற்கும் அணிந்துள்ள ஆடையில் அழுக் கேறாமல், வனப்பு நிறைந்த உடலில் வலிப்பேறாமல் பிரயாணம் செய்யலாம். இச்சிறு தீபகல்பமாகிய மலாயாவில், இவ்வளவு நீண்ட ரோடுகளை, கவர்ன்மெண்டார் போட்டிருப்பது, மக்களுக்கு மிக்க வசதியைத் தருகிறது. இவ்வழித்துணை நிறையவிருப்பதால், போக்குவரத்து அதிகப்படுகிறது. அதனால் வியாபாரம் பெருகு கிறது. இந்த வழிவசதிகளினால் இந்நாட்டில் ஏராளமான மோட் டார் கார்கள் பெருகி இருக்கின்றன. அவை பெருக, போக்கு வரத்து அதிகரிக்க, கவர்ன்மெண்டார் கண்காணிப்பும் நிறைய வேண்டியதாய்விட்டது. அவர்களும் இதற்காக இன்னும் பல வழி களைத் திறக்க எண்ணுகிறார்கள். முன் போட்ட ரோடுகளி லுள்ள வளைவுகளை நேராக்கிச் செப்பனிடுகிறார்கள். இதனால் இன் னும் சின்னாளில் வழித்துணை மிக்க வசதியைத்தரும்.

இதற்குமேல், போக்குவரத்து வசதிக்காக ஐக்கியமலாய்நாட்டு ரயில்வே ஒன்றுளது. அதற்குச் சொந்தமாக 161 என்சின்களும் 379 வண்டிகளும் 4801 டிரக்குகளும் 340 ஆடு மாடு கொண்டு செல்லும் வாகனங்களும் 6 மோட்டார் கோச்சுகளும் 11 ஸ்டீம் மோட்டார் போட்டுகளும் 77 படகுகளும் இருக்கின்றன. இவை களினால் ஆண்டொன்றுக்கு சுமார் 2,000,000 டன் சாமான்கள் ஏற்று மதி செய்யப்படுகின்றன. 7,000,000 பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள். 4,000,000 மைல்கள் வண்டிகள் ஓட்டப்பெறுகின் றன. இவ்விரயில்வேயால், மக்களுக்குப் பல நலன்களுண்டு. இந்த ரயில்வேயும், கவர்ன்மெண்டார் பாதுகாப்பிலிருப்பது, குறிப்பிடத் தக்கது.

இயற்கையின் எழிலும் இக்கால மாட்சியும்

இம்மலாயா இயற்கை எழில் நிறைந்தது. அதனை எழுத வொல்லாது. சுருங்கக் கூறின், நானிலவளம் நிறைந்தது. நாவலர் நாவிற்குகந்தது. கவிஞரின் கருத்தைக் கவர்வது. காவியங்களிற் கூறும் கருப்பொருளுண்மை காணவேண்டுமாயின், இந்நாட்டையே

பார்க்கவேண்டும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலெனக்கூறும் நானிலங்களின் வளத்தையும், தன்னிடத்தே கொண்ட இம்மலாயா வினமைப்பை, இத்தோற்றத்தில் அங்கங்கே இயன்ற அளவு காண்போம்.

பொதுப்படக்கூறும்போது, பினங்கிலிருந்து சிங்கப்பூருக்கு தரை வழியாகச் சென்றால், வானளாவி வளர்ந்து வருவோர்க்கூட்டும் வளர்தெங்கையும், குழந்தைகளுக்கிரக்கங் காட்டுவது போற் பூமியிற் படிந்து பழுக்குங் குறளாகிய தென்னை மரங்களையும் காண்கலாம். கற்பகம்போல வேண்டுவார்க்குப் பெருநிதி தரும் கவின் மிகுந்த ரப்பர் தோட்டங்களைம், அதனை உருக்கி வார்க்கும் அழகிய இயந் திரங்களையும், அங்கங்கே பார்க்கலாம். இயற்கையோ, செயற்கை யோவென ஐயமுறக்கூடியவாறு, எங்கும் ஓங்கியுயர்ந்தும், தரை யோடு தரையாயுமிருக்கும், எழிலார் பல மலைகளையும், குன்று களையும் பார்க்கலாம். அதன் சாரல்களில், பெருக்கெடுத் தோடும் அருவிகளையும், அதனடியில் நீர் நிலையம் நிறைந்த திடல் களையும், அங்கங்கே காண்கலாம். தண்ணிறைந்த தரையில் வெங் நிரைத்தரும் தெண்ணீர்க்கேணிகளைப் பலவிடங்களிற் பார்க்கலாம். காட்டானை, வேங்கை, கரடி, புலிகளை கூட்டங் கூட்டமாய் வளர் க்கும் கார்படியும் காடுகளையும் காண்கலாம். வண்டுகள் மதுவுண்டு மயங்கும், வனப்பு நிறைந்த பூச்சோலைகளை வழிநெடுகப் பார்க்கலாம். வளையணிந்த மாதர்களின் வாள்விழிக்கொப்பான கருங்குவளை மலர்களும் அவர்களின் மதிமுகங்காட்டும் அரவிந்தங்களும் நிறைந்த, அநேக நீர் நிலையங்களைப்பார்க்கலாம். முல்லை நிலத்திலுள்ள மான் கன்று பக்கத்திலுள்ள மருத நிலக் கொல்லைகளிற் றுள்ளி யோடு வதையும், கொல்லைக்குரிய ஆன்கன்று முல்லையாகிய காட்டிற்குள் நுழைந்து முழக்குவதையும் காண்கலாம். வள நிறைந்த வயல் களின் நெற்கதிர்கள் வயப்புரவி முகத்தைக் காட்டுவதையும், அதன ண்மையில் நிறைந்த கருங்கதலி நீள் குலைகள் கார்முகங்களின் துதிக்கைகளைக் காட்டுவதையும் காண்கலாம். கானாறு பாய்ந்து கடலைக் கலக்கும் காட்சியைக்கண்டானந்திக்கலாம். இதேபோல, பல மாட்சி நிறைந்த மலாயாவின் இக்கால வாட்சி, என்றென்றும் நிலைத்திருக்க இறைவனருள்புரிவார்.

(10)

நாகரீக மலாயர் குடும்பம்.



Haji Shamsuddin bin Mohamed Joonoos J. P. and family.

மூன்றாவது அதிகாரம்

முன்னேற்றமடைந்த மக்கள்

மலாய் வாழ் மக்கள்

பல்வளங்களும் நிறைந்து, பாரினிற் சிறந்து, பற்றினர்க்குற் றவைதரும் இம்மலாயாவில், இப்போது 4,694,166 மக்கள் வாழ்கிறார்கள் என 1936-ம் ஆண்டு ஜனக்கணிதம் கூறுகிறது.

அக்கணிதப்படி

மலாயர்கள்	2,128,130.
சீனர்கள்	1,829,137.
இந்தியர்கள்	624,198.
ஐரோப்பியர்கள்	22,822.
யூரேஷியர்கள்	17,399.
மற்றவர்கள்	72,480.
கூடுதல்	4,694,166.

இவர்களில் வந்தேறுங்குடிகளே அதிகம்.

மலாயர்கள்

மேற்கூறியவர்களிற் கூடுதலாகவுள்ள மலாயர்களே, இந்நாட்டின் முதற்குடிகளாவர். இவர்கள் இந்நாட்டில் எவ்வாறு குடியேறினர்கள் என்பது தெரியவில்லை. இவர்களுக்கு நீண்டநாள்முன்பே, மலாயாவில் இந்திய மக்களின் கூட்டுறவேற்பட்டது. அவ்விளக்கம் முதலதிகாரத்திற் கூறப்பெற்றுளது. இந்தியா என்றென்றும் நாகரிகத்தில் சிறந்த நாடு. இவ்வுலகின் எப்பாகங்களிலும் நாகரிகத்தைப் பெருக்கியது இந்தியாவே என்பதை எவ்வறிஞரும் ஏற்பர். இதை,


"நாகரிகம் இன்னதென்று நளிர்கடல்சூழ் நாடெலாம்
வாகுடனே அறியவன்று வகுத்தளித்தது இந்தியா"

என்று ராய. சொ. விளக்கிக்கூறி இருக்கிறார். அவர் கூறியது போல, பல நாடுகளிலும் நாகரிகத்தைப் பரப்பிய இந்திய மக்கள், இந்நாட்டிலும் பெருக்கினர்கள். அவர்களின் கூட்டுறவால் நாகரிக மடைந்த மலாயர்கள், பிற்காலத்தில் சிறப்புற்றார்கள். இம்மலாயர் களில் அரசியலை நடத்திய பல அரசர்களின் வழித்தோன்றல்களே, இப்போதுள்ள சுல்தான்மார்களாவர். இவர்களின் பெருமைகளை, நாட்டின் பிரிவில், பட விளக்கங்களுடன் கூறப்பெறும்.

இவர்களைப்போன்று நாகரிகத்தைப் பெற்ற மலாயர்கள் பலர், இந்நாட்டில் வசிக்கிறார்கள். இவர்களில், மலாய் மொழியும், ஆங்கிலமும் கற்ற ஒரு சிலரே, நகரங்களில் வசிக்கின்றனர். இவர் களில் பல சொத்துக்களுடையவர்களும் தனவந்தர்களும் உண்டு. இவர்களில் கற்றவர்கள் கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்களாக வும், பாரிஸ்டர்களாகவும், சர்ஜன்களாகவும், உபாத்தியாயர்களாக வும், இருக்கிறார்கள். இன்னும் சிலர், சுல்தான்மார்களுக்கு ஆலோ சனை கூறுபவர்களாகவும், அமைந்துள்ளனர். இவர்களில், கல்வித் தேர்ச்சியுறாது சுகவாழ்வு ஒன்றையே கருதும் மலாயர்கள், "கம்பங்கள்" என்று சொல்லப்படும் உள் நாடுகளிலும், ஆற்றங் கரை, கடற்கரை யோரங்களிலும் வசிக்கிறார்கள். இம்மலாயர்கள், என்றும் நீரோட்டமுள்ள இடங்களிலும், தாழ்ந்த பூமிகளிலுந்தான் வசிப்பதற்கு விருப்பப்படுவார்கள். அவ்வாறு வசிப்பவர்களிற் பலர், படகு ஓட்டுபவர்களாகவும், மீன் பிடிப்பவர்களாகவும், விவசாயம் செய்பவர்களாகவும், ரப்பர் தோட்டங்களில் வேலை செய் பவர்களாகவும், மோட்டார் ஓட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும், மகமதிய மதத்தைச் சார்ந்தவர்கள். முஸ்லிம் மார்க்க விதிப்படி ஒவ்வொருவரும், பல பெண்களை மணம் செய்து கொள்வார்கள். இவர்களில் பெண்களுக்கு அதிக சுதந்தரமுண்டு. இவர்கள், ஊதியத்துக்கு வேலை செய்வதை, கௌரவக் குறைவெனக் கருதுபவர்கள். அவ்வாறு கருதினாலும், நேசத்திற்காக வருவாய் கருதாது, எந்த வேலையையும், எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்து கொடுப்பார்கள். உலகம் பணத் தால் உயரும் இந்நாளில், எத்தொழிலால் எவ்வாறு தொகையைத் திரட்டலாமென்று ஒவ்வொருவரும் கருதும் இக்காலத்தில், இம் மலாயர்கள் அதைக்கருதார்கள். தங்கள் வாழ்நாளை மனைவி மக்க

மலையில் வசிக்கும் மலாய்க்காரர்.



Hill Malays.

[illegible]

[illegible]

ளுடன் இன்பமாய்க் கழிப்பதே மேலெனக் கருதுவார்கள். அதனால் அயல்நாடு செல்ல எண்ணார்கள். இங்கு ஏதேனும் சொற்ப ஊதியம் கிடைப்பதே போதுமென எண்ணுவார்கள். அதே போல இன்றும் வாழ்கிறார்கள். இவர்கள் தளர்ந்த கால் சட்டையும், கோட்டும் அணிந்து தலையில் குல்லாவையும் தரித்திருக்க விருப்பப்படுவார்கள். இவர்களில் ஆண், பெண் இருபாலாரும் "சாருங்" என்ற கைலியை அணிவதில் விருப்பங் கொண்டவர்கள்.

நாகரிக முதிர்ந்த இந்நாளில், அதை யறியாத மலாயர்களும், இன்னும் சிலர் இருக்கின்றனர். இவர்கள் இன்னமும் காடுகளிலே யே வசிக்கிறார்கள். இவர்களை "சிமாங்கினர்" என்று கூறுவதுண்டு. இவர்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து, "சிமாங் பாயா" என்பவர்கள் சதுப்பு நிலப் பகுதியில் வசிக்கிறார்கள்; "சிமாங் புக்கெட்" என்பவர்கள் மேல் பேராவிலுள்ள காடுகளில் வசிக்கிறார்கள்; "பாங்கன்" என்பவர்கள், பாகாங் அரசியலுக்கும், கிளந்தான் அரசியலுக்கும், இடையிலுள்ள மலை நாட்டில் வசிக்கிறார்கள். இவர்கள் விவசாயம் செய்வதில்லை. காடுகளில் அம்புகளினால் வேட்டையாடுவார்கள். ஊது குழல்களைக் கருவிகளாகக்கொண்டு, அக்குழல்களில் ஓர் வகை மண்ணுருண்டையை வைத்து வாயினால் ஊதி, பறவைகளையும், பழங்களையும் வீழ்த்துவார்கள். இவர்களைப்போல, "சகயிகள்" என்ற ஒரு வகுப்பினரும் இருக்கிறார்கள். இவர்கள் நாடுகளின் அண்மையில் தரைமட்டத்துக்குமேல் கம்புகளால் குடிசைகளைக் கட்டி வாழ்கிறார்கள். இவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதோடு மேற் கூறிய ஊதுகுழல்களையும் உபயோகிக்கிறார்கள். இவர்களும் சில தருணங்களில் காடுகளிலும், குன்றுகளிலும் வசிப்பார்கள்.

இவர்களுக்கு முற்காலத்தில் எழுத்துக்கள் இருந்ததாய் தெரியவில்லை. பதிமூன்றாம் நூற்றாண்டில் இஸ்லாம் மார்க்கம் தழுவிய பின்பே, அரபி எழுத்தைக் கொண்டார்கள் என்று தெரிகிறது. இவ்வெழுத்துக்களை, மலாய் "ஜாவி" மொழி என்று, ஒரு சிலர் கூறுகின்றனர். இவர்கள், முஸ்லீம்கள் ஆகுமுன் "ரீசாங்" என்ற மொழியைப் பேசினார்கள் என்றும், "காவி" என்ற மொழியைப் பேசினார்கள் என்றும், "லாம்போங்" என்ற மொழியைப் பேசினார்கள் என்றும், பலர் பலவிதமாய்க் கூறுகிறார்கள். இம்மொழிகளை ஆராய்ந்தால், அவை "கம்போடியா" மொழியின் எழுத்துக்களைக் கொண்டதாய் தெரிகிறது. இதற்குமேல், ஜாவாவிற் பேசிய "ஜாவா" மொழியையும், மீனுங்காபூவிற் பேசிய "ரீசாங்" மொழியையும், ஆராய்ந்தால் அவைகளில் ஏராளமான இந்துப் பதங்கள்

சேர்ந்திருக்கின்றன. அவைகள் பண்டைய மலாயாவில் கலந்திருந்த, இந்து, பௌத்தமதக் கலப்பாலுண்டான மொழிகள் என்றே கொள்ளவேண்டியதாகவிருக்கிறது.

இந்நாட்டில் பெரும் பகுதிக்கு உடையவர்களான மாட்சிமை தங்கிய சுல்தான்மார்கள், தங்கள் மதப்பாதுகாப்புக்கும், மக்கள் வாழ்க்கைக்கும் வேண்டும் நலங்களைச் செய்கிறார்கள். அவ்வுதவி பெற்று மலாயர்கள் வாழ்வதோடு, இவர்களிற் பலர் கைத்தொழிலிலும் சிறந்து விளங்குகிறார்கள். டிரெங்கானு, பாகாங், கிளந்தான், ஜோஹோர் முதலிய இடங்களிலுள்ள பெண்கள் நெசவுத் தொழிலில் கைதேர்ந்தவர்கள். பட்டு, துணிப் புடவைகளில் பொன் ஜரிகை வேலைகளை அழகாக அமைத்து நெய்வார்கள். ஆண்களும் இந்நெய்தற் றொழிலை நன்றாகச் செய்வார்கள். மலாக்கா, கெட்டா பக்கங்களில் விளையும் ஒருவகைப் புல்லைப் பிளந்து அழகிய கூடைகள், பெட்டிகள் செய்வார்கள். பழங்களை அல்வா, ஊறுகாய், முறப்பாக்களாகச் செய்வதில், மலாக்கா மலாய்க்காரர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்கள் கிடைத்ததைக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதென்ற திடங்கொண்டவர்கள். தம் தம் மனைவி மக்கள் சுற்றத்தாருடன் கூடி வாழ்வதே, தக்க வாழ்க்கை என்றெண்ணுபவர்கள். தன்னாடு விட்டு அயல் நாடு செல்ல விருப்பமில்லாதவர்கள். தங்கள் மதக் கோட்பாட்டைப் பெரிதாய் எண்ணுபவர்கள். அம்மார்க்க போதனையின்படி, அரேபியாவிலுள்ள "மெக்கா" "மதினா" வுக்குச் சென்று, ஆண்டவனை வழிபட்டு "ஹாஜி" என்ற பட்டம் பெறுவதில் விருப்பங்கொண்டவர்கள். இவர்கள் வாழ்க்கை இந்நாட்டில் நல்ல முறையில் அமைந்துளது.

சீனர்கள்

இந்நாட்டின் ஜனத்தொகையில், இரண்டாவதாக உள்ளவர்கள், சீனர்கள். இவர்கள் பண்டைய மலாயாவுக்கும் சீன அரசியலுக்கும் தொடர்பிருந்த காலந்தொட்டே குடியேறி இருக்கிறார்கள். அவ்வாறு குடியேறிய சீனர்களில் பல்லோர் இன்று இந்நாட்டுக் குடிகளாகவே ஆகிவிட்டனர். ஆனாலும், தங்கள் நாட்டின் பற்றை, பழக்கங்களைக் கிஞ்சிற்றும் மறக்கவில்லை. இவர்களில் ஏராளமான சொத்துக்குடையவர்களும், தனவந்தர்களும் நிறைய இருக்கிறார்கள். பெருத்த நகரங்களிலும், சிறிய ஊர்களிலும் அதிகமான

மலாய் நாட்டில் வசிக்கிற சினர்கள்.



போக்குவரத்துள்ள இடங்களில், மிக நெருக்கமான விடங்களில், இவர்கள்தான் வசிப்பார்கள். இவர்களில் வியாபாரிகள் பலர். சிலர் உத்தியோகங்களிலுமிருக்கிறார்கள். சிலர் பாரிஸ்டர்களாகவும், டாக்டர்களாகவும், உபாத்தியாயர்களாகவும் இருக்கிறார்கள். இந்நாட்டில் பெருத்த கண்ட்ராக்ட்களை எடுப்பவர்களும், கொத்து, தச்சு, கொல்லு வேலைகள் செய்பவர்களும் இவர்களே. இந்நாட்டில் ரிக்ஷா (கைவண்டி) இழுப்பவர்களும், மூட்டை தூக்குபவர்களும் இன்னும் பல தொழில்களையும் செய்பவர்கள் சினர்களே.

இவர்கள் அடர்ந்த காடுகளை அழித்துப் பயிராக்குவதில், அதிக சமர்த்தர்கள். இவர்கள் தங்கள் மதமாகிய பௌத்த சமயக் கோட்பாடுகளை, இந்துக்களுக்குமேல் நடத்துவார்கள். இவர்கள், தங்களுக்காக இந்நாட்டிற் கண்டுள்ள, ஆலயங்கள் பல. அதன் விழாக்களை அதிக விமரிசையாகக் கொண்டாடுவார்கள். இவர்களில் கிறிஸ்துவர்களும் அதிகமாகவுண்டு. அவர்களும் ஆலய வழிபாட்டில் அம்மதச் சார்பைப் பற்றினாலும் மற்ற சடங்குகளில் பழய வழக்கங்களையே கைக்கொள்வார்கள். இவர்களுக்கெனப் பாதுகாப்பு நிலையங்களைக் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ளார்கள். அதன் மூலம் இவர்களுக்குப் பல நலனுண்டு.

இந்தியர்கள்

இதற்கடுத்தபடியாக உள்ளவர்கள் நம் இந்தியர்களாவர். இவர்களுக்கும் இம்மலாயாவுக்கும் நீண்டகாலமாகத் தொடர்புண்டு. அதன் விளக்கம் முதலதிகாரத்தில் கூறப்பெற்றிருக்கிறது. இப்போதுள்ள இந்தியர்கள், இங்கு வாணிபங் கருதி வந்தவர்கள். இவர்களில் பலர் வியாபாரிகள். சிலர் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் இருக்கிறார்கள். சிலர் டாக்டர்கள், பாரிஸ்டர்கள், உபாத்தியாயர்களாக இருக்கிறார்கள். பலர் கூலிவேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள் என்ற பல மதத்தினரும், பல வகுப்பினருமுண்டு. அவரவர்களும் தந்தம் சமய, சாதிக் கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள். பல பிரிவினராயிருப்பினும், "இந்தியர்" என்ற முறையில், எல்லோரும் ஒத்துக்கூடுவார்கள். இவர்கள் கூட்டுறவுக்கும், தாய் நாட்டின் தன்மையறிவதற்கும், தங்களுக்குள் வேண்டுவன செய்வதற்கும் அங்கங்கே பல இந்தியர் சங்கங்கள் நிறுவப் பெற்றிருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒருங்கே சேர்ப்பதற்

கும் இந்நாட்டு இந்தியர்களின் நிலையை தாய் நாட்டுக்கப்போதைக் கப்போது தெரிவிப்பதற்கும், அகில மலாயா இந்தியர்களின் மத்திய சங்கம் ஒன்று கோலாலம்பூரில் காணப்பெற்றிருக்கிறது. அதன் தலைவர் டாக்டர் ஏ. எம். சூசை அவர்களும் உபதலைவர் பினங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கத் தலைவர் கே. வி. ஆர் எம். அழகப்ப செட்டியார் அவர்களும் காரியதரிசி திரு. கே. ஏ. நீலகண்டய்யரவர்களும் அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைக்கின்றனர்.

இந்தியர்களிற் பெரும் பகுதி தொழிலாளர்களாகும். இந்நாட்டில் கண்டவிடமெல்லாம் கொண்ட வழியைக் கவர்ண்மெண்டார் திறந்தார்கள். அதற்குப் பொருள் கொடுத்தது கவர்ண்மெண்ட். அதை அழகுபெறச் செய்தவர்கள், சொற்ப ஊதியங்கருதி தங்கள் உடலின் இரத்தம் சிந்த, நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்தவர்கள் நம் இந்தியர்கள். இந்நாட்டில் பெரு நிதி தரும் பெருமை சேர் ரப்பர்த் தோட்டங்கள் அழகாய் இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் தமிழ் மக்கள். இவ்வாறு பல தொழில்களையும் செய்யும் இந்தியர்கள் (தமிழர்கள்) இப்போது 304,157 பேர், இந்நாட்டில் வாழ்கிறார்கள். இவர்களுக்குத்தான் ஏற்ற வசதி இல்லை. இவர்கள் படும்பாடு பல. விரிப்பிற்பெருகும். அதன் விரிவை திரு. K. A. நீலகண்ட அய்யரவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள மலாயாவில் இந்தியர்கள் நிலை (Indian Problems in Malaya) என்ற நூலிற் காண்க. இத்தொழிலாளர் பாதுகாப்புக்காக, இந்நாட்டில் லேபர் கண்ட்ரோலர் ஆபீஸ்கள் இருக்கின்றன. அவைகளுடன் இந்தியா கவர்ண்மெண்ட் ஏஜண்டும் ஒருவரிருக்கிறார். இவர்களால் ஒரு சில நன்மைகளுண்டு. இருப்பினும், இந்திய ஏழைமக்களுக்குப் பாதுகாப்பு போதாதென்றே கூறவேண்டியதிருக்கிறது.

இவ்விந்தியர்களில் ஒரு பிரிவினராகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பலர் இங்கு வசிக்கிறார்கள். இவர்களின் தொழில், இறைவனின் அன்பு, மற்றவைகளை இரண்டாமதிகாரத்திற் கூறப்பெற்றுளது. இவர்களின் முன்னோர்கள் பெருத்த வாணிபர்களாய் இருந்தவர்கள். எந்த நாடுகளில் விளையும் பொருள்களையும் தங்கள் நாட்டுக்குக் கொண்டுவந்தார்கள். தங்கள் நாட்டின் பொருள்களைப் பிறநாடுகளுக்குக் கொண்டு சென்றார்கள். இவர்கள் குலத்தவரில் ஒருவராகிய அமர்நீதியார் என்பவரின் வாணிபப் பெருக்கத்தை விளக்குகிறார் சேக்கிழார் பெருமான். அதில்,

" மன்னும் அப்பதி வணிகர்தங் குலத்தினில் வந்தார்
பொன்னும் முத்தும்நன் மணிகளும் பூந்துகில் முதலா
எந்நி லத்தினும் உள்ளன வருவளத் தியல்பால்
அந்நி லைக்கண்மிக் கவர்அமர் நீதியார் என்பார் "
(பெரிய புராணம். அமர்நீதி 2)

என்று கூறப்பட்டிருக்கிறபடி எந்நிலத்திலும் உள்ள பொருள்களை தங்கள் நாட்டுக்குக் கொண்டுவந்துள்ளார்கள் என்பது தெரிகிறது. இவ்வாணிபங்களுக்காக, இவர்களில் ஒருவரான " சந்திரதத்தன் " என்பார், தன் சொந்த மரக்கலத்தில் இந்நாடு போந்ததாய், " மணி மேகலை " கூறுகிறது. இவர்கள் வாணிபத்துக்கு வந்து. திரும்பினு லும், இங்கு குடியேறியதாய் தெரியவில்லை. காரணம் ?

இவர்கள் தங்கள் தாய்நாட்டைவிட்டு வேறு எங்கும் குடியேறு பவர்களல்ல. வாணிபத்துக்குச் சென்றாலும், வாழ்நாளை அங்கு கழித்தாலும், இறுதிக் காலத்தை, தாய்நாட்டிலேயே கழிக்க எண்ணு வார்கள். இவர்கள் தங்கள் குலப் பழக்கங்களிலிருந்து, கொஞ்ச மும் மாறாதவர்கள். எங்கு சென்றாலும் தங்கள் பழக்கங்களையே, கைக்கொள்பவர்கள். இது தொன்றுதொட்டு நடந்து வருமொன்று. இவர்களில், ஒருவராகிய " சாதுவன் " என்பார் வாணிபங்கருதி, இந்நாட்டையடைய வங்கமேறினர். கடலில் மிதந்த கப்பல் காற்று லுடையுண்டது. அதில் பலர் பிழைத்தனர். அவர்களில் " சாதுவன் " ஒருவன். அவன் ஓர் மரத்தைப் பற்றினன். சுமத் திராவுக்கு அண்மையிலிருந்த நாகநாட்டின் கரையைச் சார்ந்தான். கடலலைப்பால் அயர்ந்து கரையிற் றுயின்றான். அவ்வமயம் அந் நாட்டின் நாகரிற் பலர் அங்கு வந்தனர். அவர்கள் மக்களைக் கொன்றுதின்னும் மாக்கள். இவனையும் கொன்றுதின்ன எண்ணி னர்கள்: பற்றினர்கள். அவர்கள் மொழியைச் " சாதுவன் " அறிவான். அதனல் அவர்களோடு வாதிட்டான். மொழி தெரிந்த இவனை ஒன்றும் செய்யாது, தலைவனிடம் கொண்டு சென்றார்கள். அவனிடமும், தப்பலாமென்ற தைரியத்தோடு, சாதுவனும் சென் றான். எல்லோரும் தலைவனை அடைந்தார்கள். அவ்வமயம் தலைவ னிருந்த அழகைக் குறிப்பிடுகின்றார் சித்தலைச் சாத்தனர்.

" கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கி "
(மணிமேகலை 16, 66—69)

நினைத்தபோதெல்லாம் எடுத்துக்குடிப்பதற்காக கள் நிரப்பப்பட்ட ஜாடி ஒருபுறம். ஏராளமான இறைச்சி வகைகள் குவித்திருப்பதால் அதனின்று புறப்படும் நாற்றமொருபுறம். பன்னாளாகச் சேர்த்து வைக்கப்பெற்ற பல எலும்புகளின் குவியல் ஒருபுறமும் சூழ்ந்த பெரிய ஆசனத்தில் கரடியானது தனது மனைவியோடு கூட இருப்பதைப்போல வீற்றிருந்த தலைவனைக் கண்டான் சாதுவன். இவனைக் கொண்டுவந்த ஏவலர்கள் தலைவனை வணங்கினார்கள். அவனும் சாதுவன் தங்கள் மொழியறிந்திருப்பதை உணர்ந்தான். அம்மொழிப் பற்று சாதுவன் உயிரைத் தப்பவைத்தது.

அத்தலைவன் தன் ஏவலாட்களை நோக்கினான்.

“ அருந்துத லின்றி யலைகட லுழந்தோன்
வருந்தின னளியன் வம்மின் மாக்காள்
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென
அவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்
பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்
குண்டோ ஞாலத் துறுபயன் உண்டெனிற்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாகென ”
(மணிமேகலை 16, 74—82)

இவன் உணவின்றி வருந்துகிறான். இவனுக்கு ஏராளமான கள்ளையும் இறைச்சியையும் உணவாகக் கொடுங்கள். என் தங்கையை மனைவியாகக் கொடுங்கள். கூட்டிச் செல்லுங்களெனக் கட்டளையிட்டான். அதை வேண்டாமெனத் தடுத்தான் சாதுவன். இவ்வுலகில் உண்டியும் பெண்டிருமின்றேல் வாழ்வேது? அப்படி ஏதாவதிருந்தால் காட்டு. நாங்களும் அறிந்துகொள்கிறோம் என்று கடுகடுத்துக் கூறினான் தலைவன். அவனுக்கு தங்கள் குலவொழுக்கத்தையும், தான் மனை வாழ்க்கையிலீடுபட்டிருப்பதையும், கொண்ட மனையாளுக்கிரண்டகம் செய்யேன், இன்னுமொரு பெண்ணைக் கைப்பற்றேன் என்பதையும் எடுத்து விளக்கினான் சாதுவன். என்னே! சாதுவனின் வீரம்! தனக்கு யாரும் துணையில்லை. பிறருடைய பூமி. அதிலும் மக்களைத் தின்னும் மாக்கள். அவர்கள் மனம் மாறுபட்டால் தன்னுயிர் மாய்வது திண்ணம். அவைகளுக்கு அஞ்சினானா சாதுவன்! இல்லை!! உயிர் பெரிதா? ஒழுக்கம் பெரிதா? என்பதை எண்ணினான்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்"

என்ற வள்ளுவரின் வாக்கை நினைத்தான். தன் உயிரினும் ஒழுக்கமே சிறந்ததென்பதை ஓர்ந்தான். அதனால் நாகநாட்டாரின் வற்புறுத்தலை ஏற்கவில்லை. அவன் மறுக்காது தலைவனின் தங்கையைக் கைப்பற்றி, கள்ளையும் ஊனையும் உண்டிருந்தால், மறுபடியும் வணிகனாக வெல்லுமோ? நாகரோடு நாகராகவேண்டியதுதான். சாதுவன் அவ்வாறாகாது நாகருக்கு நற்புத்தி புகட்டினான். அவர்களும் இவனுறுதி கண்டனர். ஆச்சரியமுற்றனர். அன்பு பாராட்டினர். ஏராளமான செல்வத்தை அளித்தனர். அங்கு சின்னாள் வைத்திருந்தனர். அப்போது முன்கூறப்பட்ட "சந்திர தத்தன்" என்னும் வாணிபனுடைய மரக்கலம் இந்நாடு வந்து காவிரிப்பூம் பட்டினம் திரும்பியது. அதை நாகர்கள் கண்டழைத்தனர். அதில்,

"சந்திர தத்த னென்னும் வாணிகன்
வங்கம் சேர்ந்ததில் வந்துட னேறி"

(மணிமேகலை 16, 124—125)

சாதுவனும் ஏறினான். தாய்நாட்டை யடைந்து வாழ்ந்தான். அச்சாதுவன் போன்ற பலர் காட்டிய வழியைப் பின்பற்றுபவர்கள் இந்நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். அதனால் இங்கு குடியேறாது வாணிபங் கருதிவந்து சென்றார்கள்.

இவர்கள் பிற்காலங்களில் இந்நாட்டில் நடைபெற்ற கலவரங்களால் வாணிபத்திற்காக வரவில்லை. இந்நாட்டின் குழப்பங்கள் அமைதி பெற்றபின் வந்து லேவாதேவித் தொழிலை ஆரம்பித்தார்கள். இவர்கள் இந்நாட்டுக்கு வந்த காலங்கள் நாட்டின் பிரிவிற் கூறப்பெறும். இவர்கள் நூற்றுக்கு நூறு தாய் மொழியாகிய தமிழைப் படித்தவர்கள். இவர்கள் முன்காலத்தில் உத்தியோகங்களில் அமரவில்லை. இப்போது காலத்திற்கேற்றவாறு ஆங்கிலம் தமிழைக் கற்று சிலர் பாரிஸ்டர்கள், வக்கில்கள், பண்டிதர்களாக இருக்கிறார்கள். அரசியல்களிலும் கலந்துள்ளார்கள். பத்திரிகாசிரியர்களாகவும், ஆகாய விமானம் ஓட்டுவதில் திறமை வாய்ந்தவர்களாகவும், கவர்ன்மெண்டு ஆலோசனை சபையில் அங்கத்தினர்களாகவும் இருந்து வருகிறார்கள். இவர்கள் எல்லோருமே சைவ

சமயத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் தங்கள் தொழில் வளர்ச்சிக்காக இந்நாட்டில் பல வர்த்தக சங்கங்களை நிறுவியுள்ளார்கள். இவர்களுக்கு கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பும், சுல்தான்மார்களின் துணையும் அதிகமுண்டு.

ஐரோப்பிய யூரேஷியர்கள்

இதற்கடுத்தபடியாக ஐரோப்பியர்கள், யூரேஷியர்களாவர். இவர்களில் ஐரோப்பியர்கள் தங்கள் அரசியலை நடத்தவும், வியாபாரங்களைப் பெருக்கவும், ரப்பர் தோட்டங்களைப் பயிரிட்டுப் பலன் பெறவும், இங்கு வந்துள்ளார்கள். யூரேஷியர்கள் போர்த்துக்கிய, டச்சிய வழி வந்தவர்களாகக் கூறப்பெறுவர். இவர்கள் கிறிஸ்துவ மதத்தைக் கொண்டவர்கள். இவர்கள் போர்த்துக்கிய மொழியைப் பேசுபவர்களாக இருந்தாலும், ஆங்கிலேயத்தையே தங்கள் மொழியாகவும், எழுத்தாகவும் கொண்டுள்ளார்கள். இவர்களில் ஒரு சிலர் பெரும் உத்தியோகங்களில் இருக்கிறார்கள். சிலர் குமஸ்தாக்களாகவும், உபாத்தியாயர்களாகவும், பாரிஸ்டர்களாக்வும், டாக்டர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களில் பெண்கள் பலர் உத்தியோகங்களில் இருக்கிறார்கள். ஆங்கிலேயரைப்போல பெண்களுக்கு சகல சுதந்தரங்களுமுண்டு. இவர்கள் பழக்கங்கள் முழுதும் ஆங்கிலக் கலப்புற்றவைகளாகவே இருக்கும். இவர்களுக்கு கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பும், ரோமன்காதலிக் கன்வெண்ட்களின் பாதுகாப்பும் அதிகமுண்டு.

மற்றவர்களும் கற்றவர்களும்

இம்மலாயாவில் மற்ற வகுப்பினரும் பலருண்டு. அவர்களில் பல நாடு, பல சமயம், பல பிரிவினர் இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் மிகக் குறைந்த தொகையினர். அதனால் பொதுவாக மற்றவர்கள் என்ற கணக்கில் கூறப் பெற்றுளது. இவர்களில் எந்நாட்டிலிருந்தும் இந்நாட்டுக்கு வந்து தனிப்பட்டவர்களாய் இருந்தாலும், அவர்களையும் கவர்ன்மெண்டார் ஆதரிக்கிறார்கள். அவரவர்களுக்கும் சுதந்தரமுண்டு.

இவ்வாறு பல பிரிவாக வாழும் மக்கள் இங்கு சுமார் 69 மொழிகளைப் பேசுகிறார்கள் எனத் தெரிகிறது. இவர்களில் 1000க்கு 371 பேர் மலாய் மொழியைப் பேசுகிறார்கள். 1000-க்கு 218 பேர் சீன மொழிகளைப் பேசுகிறார்கள். அரச மொழியாகிய ஆங்கிலத்தை 1000-க்கு 230 பேர்களே கற்றுள்ளனர். ஆங்கில மொழிக்காக அதிக சிரத்தை எடுக்கிறார்கள் கவர்ண்மெண்டாரும், கன்வெண்ட்காரர்களும். அவ்வாறிருந்தும் 100-க்கு 23 பேரே கற்றிருப்பதானது வருந்தத் தக்கது. இந்த 23 பேர்களிலும் பலர் வெளிநாடுகளில் ஆங்கிலத்தைக் கற்று இங்கு உத்தியோக, வியாபாரங்களுக்காக வந்தவர்கள். எல்லா வகையாலும் முன்னேற்றமடைந்து வரும் மக்கள் முற்றிலும் இன்னும் கற்காதிருப்பது பெருங் குறைதான். அதைக் கூடிய விரைவில் மாற்றி 100-க்கு 100 படித்தவர்கள் என்ற பெரும் பெயரை மக்கள் பெற விரைவில் முன் வருவார்களாக. அதைக் கவர்ண்மெண்டாரும் கருதுவார்களாக.

மக்கள் முன்னேற்றமும் மனதிற்கினிய வாழ்வும்

மேற்கூறப் பெற்ற மக்களுக்கு வேண்டும் பாதுகாப்புகளை கவர்ண்மெண்டார் செய்து வருகிறார்கள். அதனால் வாணிபம் பெருகுகின்றன. வந்தேறுங் குடிகள் அதிகரிக்கின்றன. பல நாட்டாரின் தொடர்புகள் ஏற்படுகின்றன. பலரின் நற் பழக்கங்கள் சேர்கின்றன. இவைகள் ஒருங்கே கூடப்பெற்றிருப்பதால் இந்நாட்டில் வாழும் மக்கள் முன்னேற்றமடைந்துள்ளார்கள். எங்கு பார்த்தாலும் பல பிரிவினரும் ஒற்றுமையோடு வாழ்கின்றார்கள். மக்கள் ஒற்றுமையில் இந்நாட்டைப்போல எங்கும் பார்ப்பதரிது. இந்நாட்டில் எந்த ஊரைப் பார்த்தாலும் எத்தெருவை நோக்கினாலும் ஒவ்வொன்றிலும் பலநாடு, சமய, சாதிப் பிரிவினை கொண்டவர்கள் நிறைந்திருக்கிறார்கள். அவரவர்களும் தத்தம் சமய, சாதிக் கோட்பாடுகளின்படி சடங்குகளை நடத்துவார்கள். அதற்காக அண்மையிலுள்ள அயலார் வேற்றுமைகொள்ளமாட்டார்கள். எதனால்? அதுதான் நாகரிகத்தின் கூட்டுறவு. நாட்டுப் பழக்கங்களின் உயர்வு. பல வகுப்பாருடன் சேர்ந்து மக்கள் முன்னேற்றமடைந்ததின் பலன். இது மிகப் போற்றுதற்குரியது.

இவ்வாறு முன்னேற்றமடைந்து வாழுமக்களுக்கு ஏற்ற சுகாதாரங்களைச் செய்கிறார்கள் கவர்ன்மெண்டார். இந்நாட்டில் சுகாதாரங்களைக்கவனிக்க, போதிக்க, அதன்படி மக்கள் நடக்கிறார்களா வென ஆராய, அதற்குரியவாறு நடத்தப் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் பெருத்த நகரங்களில் இருப்பார்கள். அண்மையிலுள்ள சிறிய ஊர்களுக்கும் தோட்டங்களுக்கும் அடிக்கடி செல்வார்கள். ஒவ்வோரிடங்களிலும் தண்ணீர்த் தேக்கமில்லாதிருக்க தக்க வடிகால்களை வெட்டச் செய்வார்கள். அவைகளிலுள்ள கொசுகுகள் மாய எண்ணெய்களை அடிப்பார்கள். அதனால் மலேரியாக் காய்ச்சல் மக்களைப் பீடிக்காமல் காப்பார்கள். நகரங்களிலும் தக்க சுகாதார வசதிகளைச் செய்வார்கள். இவர்கள் தேடும் சுகாதாரங்களுக்கு, ஏற்ற தொழில்களைச் செய்வதற்கு உற்ற தொழிலாளர்கள் தமிழ் மக்களே யாவர். இவ்வதிகாரிகள் கூறுகிறபடி நடந்தால், மக்கள் இல்லங்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டால், உடலைப் பேணினால் மக்களுக்கு நோய் வராதென்பது திண்ணம். அதன்படி எல்லோரும் நடக்கிறார்களா? சிலர் நடக்கிறார்கள். பலர் நடக்கவில்லை. அவர்களை நோய் பற்றுகிறது. அவ்வாறு நோயால் துன்புறும் மக்களை உடனேக்குடன் கவனிக்க ஏராளமான வைத்தியசாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன. இதற்குமேல் தனிப்பட்ட வைத்தியசாலைகளு முண்டு. அவைகளால் மக்கள் பெறும் பலன்கள் பல. மக்களில் எல்லோரும் வைத்தியசாலைகளுக்கு வரமுடியாது. அதற்காக ஏழை மக்கள் வாழும் ஒவ்வோரிடங்களுக்கும் மருந்துகளைக் கார்களில் வைத்துக்கொண்டு போய்க்கொடுத்து மக்களின் நோய்களை அகற்றுகிறார்கள். இவ்வைத்தியசாலைகளில் பெண்மக்களின் பிரசவங்களையும், குழந்தைகளின் வளர்ச்சி, பாதுகாப்புகளையும் கவனிக்க, ஏராளமான உத்தியோகஸ்த்தர்கள் நியமிக்கப்பெற்றுள்ளார்கள். இவ்வசதிகளும், சுகாதார முறைகளும், ஏராளமாகவிருக்கிறது. இவைகளோடு மக்கள் வாழும் நகரம், சிறிய ஊர் ஒவ்வொன்றிலும், இரவைப் பகலாக்கும் மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்றுள்ளன. போக்கு வரத்து வசதிக்காக, ஏராளமான கார்கள், ரிக்ஷாக்கள், பஸ்கள், வண்டிகள் பலவும் இருக்கின்றன. அதனால் மக்கள் எந்த நேரத்திலும் எவ்விடங்களுக்கும் செல்லவும், எண்ணியதை முடிக்கவும் இயலுகிறது. எல்லாச் சாதனங்களும் நிறைந்திருப்பதால் இந்நாட்டு மக்கள், மனதிற்கினிய வாழ்வைப் பெற்று மகிழ்வுடன் வாழ்கிறார்கள்,

முன்னேற்றமடைந்தவரில் முதல்வர்

இங்கு வாழும் மக்களில் பலர் தம்தம் அறிவாலும், தொழிலாலும் அதிகச் செல்வாக்கு அடைந்துள்ளார்கள். அவர்களிற் சிலரின் சிறப்பு அங்கங்கே கூறப்பெறும். அவர்களில் சிலரைத்தான் உலகறியும். அறிந்தாலும் என்ன? அவரவரின் வாழ்நாளோடு, அவரை அறிந்த ஒருசிலரின் வாழ்நாளோடு அவை மாறிவிடும். அவ்வாறு மாறாதிருக்க வேண்டுமாயின் அவர்களின் ஆற்றல், தொண்டு நிறைந்த வாழ்க்கை வரலாறு வரையப் பெற்றிருக்க வேண்டும். அப்புகழையோ, தன்னைப் பிறர் அறியவேண்டுமென்ற அவாவையோ நம்முன்னோர்கள் எண்ணவில்லை. இதை உணர்ந்தோர் இந்திய நாட்டில் சிலரே. அவர்களின் வாழ்க்கை வரலாறுகளே, இப்போது சரித்திரங்களாக விளங்குகின்றன. இதை உணர்ந்தவர்களில் ஆங்கில நாட்டினர் அதிகம். அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றி, இக்காலத்தில் அநேகர் வாழ்க்கை வரலாற்றைக் குறிக்கின்றனர். அவை அவசியம் என்பதை ஓர்ந்து, சிலரின் வாழ்க்கை வரலாற்றையும், சிறந்தோங்கும் இம்மலாயாவின் பண்டைக்காலத் தோற்றம் (உற்பத்தி,) இக்காலத் தோற்றங் (பார்வை, மாட்சி,) களையும், விளக்குவதற்கேற்பட்டது இந்நூல். இந்நூல் வெளிவர முன்னேற்றமடைந்த மக்களில் ஒருவர் முதற்காரணமாய் நின்றார் அவர்தான்,

[நேரிசை வெண்பா]

"தொன்மை மலாயாவின் தோற்றமதை மக்களெலாஞ்
சொன்னலத்தா னோர்காணத் தோற்றுவித்தா—னின்னாலே
முட்டிலாச் செல்வமுயர் முத்துப் பழநியப்ப
செட்டியா ரென்றிடுநற் றீரன்."

இவர் எங்கு தோன்றினர்? எவ்வாறிங்கு வந்தார்? எத்தகைய குணம் பெற்றவர்? கவனிப்போம்.

திரு. பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியார், J.P, அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

"தமிழறம் பேணும் தகைமையாளர்"
உ. அரு. அருணசலம் செட்டியார் வரைவது.

தமிழ்த்தாய் வணக்கம்
(நேரிசை வெண்பா)

"தத்துவங்க ளார்ந்த தமிழ்த்தாயே தன்னிகரில்
முத்துப் பழநியப்பர் மூதறிவோ—நித்தரையில்
ஆற்றுதொண் டன்பரெலா மார்வமுடன் காண்பதற்குச்
சாற்றுவாய் முன்னின்று தான்"

உலகில் மக்களை அளித்தழிக்கும் தெய்வங்கள் திருமாலும் சிவனும். அவ்விருவரும் அண்மையில் ஒன்ருகக் குடிகொண்டிருக்கும் தலம், அழகிய குன்றும் சிதைவுற்ற கோட்டையும் அமைந்த ஊர் திருமெய்யம். நாட்டுக்கோட்டைச் செட்டியார் நகரங்களிற் சிறந்தது காரைக்குடி. அவை இரண்டுக்கும் நடுவே 7, 6 மைல்களுக்கிடையில் அமைந்துளது ஆத்தன்குடி. அந்நகரில் தொன்று தொட்டு வாழுங்குடி. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் மரபு. வயிரவன் கோயில் தெய்வ நாயகர் வகுப்பின் பிரிவு. அப்பிரிவினரில் வருவிருந்தோம்பி வைகலும் வாழ்பவர். தெய்வந் தொழுவதே திடமெனக் கொண்டவர். நாடிவந்தோர்க்கு நல்லுதவி புரிபவர் நாகப்ப செட்டியார். அவரின் வாழ்க்கைத் துணைவி, மகிழ்நனுரை மருத மாதரசி, வந்தாரைப்பேணுபவள் மீனுட்சி ஆச்சி. அவர்களின் அருந்தவப் புதல்வராக சுக்ல ஹூ கார்த்திகை மீ 30 உ திங்கட்கிழமை (13-12-1869) அவதரித்தார் நமது பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியார். இவருக்கு இளையாளுகத்தோன்றியவர் பெரியகருப்பன் செட்டியார்.

இவர்களில் நமது முத்துப் பழநியப்ப செட்டியார் ஏழாவது வயதுவரை பிறந்த நகரிலேயே தமிழ்க்கல்வி பயின்றார். அதற்கு மேல், விரையாச்சிலை என்ற ஊரிலுள்ளவர், தனது தந்தையின் தாய் மாமன் அடைக்கலவன் செட்டியார். அவர் கணித நிபுணர். தொழிலின் தொன்மை கண்டவர். செந்தமிழ் வல்லுநர். இலக்கிய இலக்கணமறிந்தவர். அவரிடம் தமது பதினான்காம் வயதுவரை பல பயிற்சியும் பெற்றார் நமது முத்துப் பழநியப்பர். “இளமையிற்கல்” என்பது மூதாட்டியின் பொன்னுரை. அதைப் பின்பற்றினார் அன்பர். அதனாலன்றோ அவரை இன்று இத்தகைய நிலையில் நாம் காண்கிறோம். அவரிடம் கல்விகற்று தங்கள் குலத்தொழில் கருதி கொழும்பிலுள்ள சி. ராம. க. கடைக்குச் சென்றார். அங்கு வெகு தானியளு முதல் தாரணளு வரை இருந்தார். தொழில்முறை நுணுக்கங்களைத் தெரிந்தார். தாய்நாட்டை அடைந்தார்.

இவரின் கல்வி, தொழில், கற்றாரைப்பேணல், மற்றவரையும் விரும்பல், பெரியாரைப்போற்றல், சிறியாரை ஏற்றல், குலவொழுக்கங் குன்றாமை, பலவறிஞரின் கூட்டுறவுகளை அறிந்தார்கள் கானாடு காத்தான் தூ. கரு. முதலாளிகள். தங்களுக்கு சொந்தமாக வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்த கடைக்கு பொறுப்பாளியாக அனுப்பினார்கள். அங்கு பார்த்திவளு சென்றார் அன்பர். தொழிலைச் சிறப்புற நடத்தினார். அத்துடன் ஊர் திரும்பினரா இவர்? அது மக்களில் பல்லோரும் செய்யக்கூடியவொன்று. அதற்குமேல் அறப்பணி கொண்டோர் செய்யுங்காரியம் வேறு. அவ்வறப்பணி நமது அன்பருக்குப் பிறப்புடன் தொடர்பு. அதனால் அவ்வேளூர் முத்தையனுக்கு ஆலயத்தின் இராஜகோபுரம், தீர்த்தவாரி முதலிய திருப்பணிகளைக் கட்டிமுடித்தார். அவனருள் அன்பருள்ளத்தில் அன்றே பதிந்து அவ்வருள் வித்து இன்று ஓர் பெரிய மரமாகி, பூத்துக் காய்த்துப் பொற்கனிகளைப் பொழிந்து நிற்கிறது. அத்துடன் அவ்வேளூரிலிருந்து சர்வதாரிளு தாயில்லம் அடைந்தார்.


இவரின் ஒழுக்கம், இறைவன்பணி எல்லாவற்றையும் கண்டார் திரு. ஏகப்ப செட்டியார். ஏகப்ப செட்டியார் மகிபாலன் பட்டியில் பிறந்தவர். இளையாத்தக்குடிக் கோயிலில் ஒக்கூருடையார் பிரிவைச் சேர்ந்தவர். இவர் பல ஆண்டுகள் பினங்கில் இருந்தவர். பன்னாள் பினங்கு க. வீ. அழ. கடையின் பொறுப்பை ஏற்றவர். இவரைப் பினங்குப் பகுதியில் அறியாத எச்சமுகத்தினருமில்லை. இவர் தன் தந்தை ராமன் செட்டியார் காலஞ் சென்றதால் தன் சிறிய தந்தை பினங்கில் செட்டிக் கிச்சு என்று பெயர் வழங்கிய

மு. எ. முத்துப்பழநியப்ப செட்டியாரின் சம்மதத்தையும் பெற்று தங்கை “வள்ளியம்மை” என்ற வாய்மை சேர் மங்கையைத் திருமணம் செய்து கொடுத்தார். அன்று முதல் அன்பர் முத்துப் பழநியப்பாவும் வள்ளியம்மை ஆச்சியும் தங்கள் இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்தினர். நடத்துகின்றனர். இவர்களின் பெயர்ப் பொருத்தப்படி இவர்களுக்கு, மக்கள், மனை, செல்வமெலாம் மிக்கப் பெருகின.

இதற்குமேல் விகிர்தி௵ பினாங்குக்கு அண்மையிலுள்ள சுங்குரும்பை ராம. கு. அ. அ. கும. கடைக்குப் பொறுப்பாளராக வந்தார். அத்தொழிலை அழகுபெற நடத்தினார். அதனால் அக் கடையில் ஓர் பங்காளியாகவும் ஆனார். அவர் நடத்திய தொழில் எது? நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் நடத்தும் நற்றொழில் ஒன்றுதானா? செட்டியார்களுக்கு வட்டித்தொழில் ஒன்றே தெரியும். வேறு ஒன்றையுமறியார்கள் என்பது சிலரது கூற்று. அவர்களின் அறியாமையைப் போக்க முற்பட்டார் நமது அன்பர். செட்டியார்கள் எத்தொழிலைச் செய்தாலும் செவ்வனே நடத்துவார்கள் என்பதைக்காட்டினார். தங்கள் குலத் தொழிலோடு தக்க காண்ட்ராக்டுகளையும் எடுத்தார். அவைகளையும் திறம்பட நடத்தினார். இத்தகைய பல தொழிலின் பயிற்சியால் அன்று முதல் இன்று வரை தாய்நாடேகித் திரும்பும் சின்னாள் விடுத்து மிகப் பன்னாளை சுங்குரும்பையிலேயே கழித்தார். கழிக்கிறார்.

இவர் தொழிலநுபவத்தோடு தன்பிறவிக்குணம் ஒன்றுண்டு. அதுதான் அரன்பணி. அப்பணியாற்ற வெண்ணினார். முதலில் சுங்குரும்பையில் நகரத்தார் தெண்டாயுதபாணி கோயிலைக்கட்டினார். பிறகு மங்களாம்பிகை கோயிலையும் கட்டினார். இவரின் பொது நலத்தொண்டால், தனக்கென வாழாது பிறர்க்கென வாழுந்தகைமையால் இவரைப் பல சமூகத்தினரும் ஆதரிக்கின்றனர். அதனால் இவர் ஓர் பிரபல இந்தியக்கனவானாக விளங்குகிறார். இவரின் நீதி, நிர்வாகங்களை அறிந்த கவர்ண்மெண்டார் 1923௵ பிப்ரவரிமீ 12உ பினாங்கு இந்து அட்வைசரிப் போர்டு (அறப்பாது காப்பு நிலைய) அங்கத்தினரில் ஒருவராகத் தேர்ந்தெடுத்தனர். அத்துடன் 1928௵ ஜனவரிமீ தொடுவாய்ப் பகுதியின் மேன்மை தங்கிய கவர்னர் அவர்களால் இவரை பினாங்கு வெல்லஸ்லி மாகாணத்தின் ஓர் சமாதான நீதிபதியாகவும் ஆக்கப்பெற்று அப்பட்டமும் வழங்கப்பெற்றது.

நாகரிக பாவா சினர் குடும்பம்.



Dr. Guan Yong Oon.
Mrs. Beng Hong Oon.

இத்துணை சிறப்புகள் வாய்ந்த இவர், தான் சுங்குரும்பை வந்த 35 ஆண்டுகளுக்குப் பின் அ. கும. கடையில் தனக்கிருந்த பங்கை விலகிக்கொண்டார். அதன் கூட்டாளி என்ற பொறுப்பையும் மாற்றிக்கொண்டார். அத்தொழிற் பிரிவில் ஒருவருக்கொருவர் மனமாறுதலின்றி விலகிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. அதற்குக் காரணம் இவரிடத்திலுள்ள பெருங்குணங்களே. அதன்மேல் தன் சொந்தமாக சுங்குரும்பையிலேயே பெ. நா. மு. விலாசம் வைத்துப் பழய தொழில்களை நடத்தி வருகிறார். இவர் முன்னவர்களுடன் தொழிலில் இருந்து விலகியதும் 1926, 1927-ம் ஆண்டுகளில் அரு. கா. முத்தய்யா செட்டியார், ராம. நா. நாகப்ப பிள்ளை இருவர் களுடனும் கூட்டாக இரு தொழில்களை ஆரம்பித்தார், அவைகள் முன்னவரின் மரணத்தாலும் பின்னவரின் மற்ற தொழில்களின் முறிவாலும் மாறுபட்டு விட்டன. அப்பால் சொந்தத்தொழிலையே திறம்பட நடத்தினர். அதனால் தக்க செல்வத்தையும் பெற்றார். தன் வருவாயின் நிலை தெரிந்ததும் 1926-ம் ஷ சுங்குரும்பையில், இராமநாதன் கலாசாலை என்ற பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டியமைத்தார். அப்பள்ளியில், இன்று ஏராளமான மாணவ, மாணவிகள் கல்விப்பயிற்சியும், கைத்தொழிற்பயிற்சியும் பெறுகின்றனர். இவரின் உள்ளத் தூய்மைக்கேற்ப செல்வ வளர்ச்சி பெற்றிருப்பதோடு இப்போது ஒரு குமாரரும் நான்கு பெண்களும் இருக்கின்றனர். அவர்களுக்கும் தக்க குடும்பங்களில் திருமணங்கள் செய்யப்பெற்று அவரவர்களும் தங்கள் குடும்பங்களை அழகு பெற நடத்தி வருகின்றனர்.

இவர் ஆண்டில் முதியவர். ஆனால் சுருசுருப்பிலும் சமய, சமூக சீர்திருத்தத்திலும் இளைஞர். எச்சபையிலும் அஞ்சா துரையாற்றும் ஏறு. இன்றும் தன் சொல்வன்மையால் எவருடைய உள்ளத்தையும் கவரும் ஆற்றல் இவருக்குண்டு. பினாங்கில் அரன்பணி, அன்பர் பணி, தாய் மொழிப்பணி, சமூகப்பணி எல்லாவற்றிலும் முற்பட்ட இவர், தன் சமூகத்தவரில் தாய் நாட்டில் இருந்து வருவோரும் செல்வோரும் தங்கி இளைப்பாற ஓரில்லங் காண எண்ணினர். அதற்காக அதிகச் சிரத்தை கொண்டார். இவரின் அரு முயற்சியும், அன்பர்கள் ஆதரவும், நகரத்தார்களளித்த பொருளுங்கூடி, ஆங்கிரச ஷ ஆவணி மீ 26 உயில், ஓர் "நகரவிடுதி" யாகத் தோன்றியது. அவ்விடுதியின் ஓவியம் பிறகு கூறப்பெறும். அப்பெரும்பணியோடு தன் சமூகத்தவரின் சிறப்பையும், தாய் நாட்டின் பெருமையையும், இந்திய மக்களின் ஏற்றத்

தையும், தான் அதிக நாளாக வாழும் இம்மலாயாவின் தோற்றத்தையும், மக்கள் கண்டு களிக்க இந்நூலை உண்டு செய்ய முற்பட்டார். இதற்காகப் பெரும் பொருளும் செலவு செய்துள்ளார். இவர் இயற்கையிலேயே வருநிதி பிறர்க்கார்த்தும் வள்ளல். அறப்பணியாளர். திருப்பணிச் செல்வர். அதற்கேற்பத் தன் தொண்டைப் பொது மக்கள் முன்னேற்றமடைய ஆற்றி வருகிறார். உத்தேசம் 25 வருடத்திற்கு முன், பினாங்கு இந்து சபா இருக்கும் கட்டிட சம்பந்தமாகவும், இந்தியாவிற்குப் போய் வரும் பிரயாணிகளுக்குக் கப்பலில் போதிய சௌகரியம் செய்து கொடுக்கவும் பெரு முயற்சி யெடுத்தார். இவருக்கு இந்தியர்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளனர். இவரும் இவரைச்சார்ந்தோரும் என்றென்றும் வாழ இறைவன் அருள் புரிவானாக.

[நேரிசை வெண்பா]

“பார் புகழு முத்துப் பழநியப்ப வள்ளலுட
னோர் மக்கள் பேரர்க ளில்லாளு—மார்வநிறை
சுற்றத்தா ருற்றவர்கள் சூழ்ந்தாரு மென்றென்றும்
வெற்றியுடன் வாழ்ந்திடுவர் மேல்”

மேன்மைதங்கிய தேசாதிபதி
ஸர் ஷெண்டன் தாமஸ், ஜி. ஸி. எம். ஜி., ஒ. பி. இ.



His Excellency Sir Shenton Thomas, G.C.M.G., O.B.E.,
Governor and High Commissioner, Malay States.

நான்காம் அதிகாரம்

நாட்டின் பிரிவு

(1) தொடுவாய்ப்பகுதி

எந்நாட்டினும் சிறந்து, எச்செல்வமு முயர்ந்து, யாவருக்கும் இன்பத்தைத் தருகின்ற இம்மலாயாவானது இரண்டாமதிகாரத்திற் கூறியபடி பலபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுளது. அவைகளில் ஆங்கிலேய அரசியலுக்குச் சொந்தமாக, "கிரேட்பிரிட்டனின் கிரௌன் காலனி" யாக விளங்குவது தொடுவாய்ப் பகுதி. இதில் சிங்கப்பூர், பினங்கு, பிராவின்ஸ் வெல்லஸ்லி, மலாக்கா, லாபுவான், கொக்கோ தீவுகள் சேர்ந்துள்ளன. இவைகளோடு "டின்டிங்ஸ்" சேர்ந்திருந்தது. அப்பகுதியை இப்போது ஐக்கிய மலாய்நாட்டினுடன் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இதன் சுற்றளவு முன் கணக்குப்படி 1607 சதுரமைல்கள். அதில் டின்டிங்ஸின் சுற்றளவு கழித்து இப்போதுள்ள கணக்குப்படி 1424 சதுரமைல்கள் ஆகும். இதில் 1936ஆம் ஜனக்கணிதப்படி 1,146,984 மக்கள் வசிக்கிறார்கள். இத்தொடுவாய்ப்பகுதி 1826ம் ஆண்டில் இந்தியா கவர்ன்மெண்டின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அப்போது சிங்கப்பூர், பினங்கு,மலாக்கா மூன்றும் சேர்ந்து ஒரு மாகாணமாக இருந்தது. அதன் தலைநகர் பினங்கு. 1836ல் இத்தலைநகரம் சிங்கப்பூருக்கு மாற்றப்பட்டது. 1867ம் ஆண்டில் இந்தியாக் கவர்ன்மெண்டின் ஆதிக்கத்தை மாற்றி காலனிகளின் செகரெட்டரி ஆப் ஸ்டேட் அவர்களின் கண்காணிப்புக் குட்படுத்தப்பட்டது. இப்போதும் அவர்களின் கண்காணிப்பில் சிங்கப்பூரையே தலைநகராகக்கொண்டு சட்டைசபையுடன் கூடிய மேன்மைதங்கிய கவர்னர் அவர்களினால் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நாட்டின் தேசாதிபதியாக சிங்கப்பூரில் இருந்து அரசியலை நடத்தும் கவர்னர் மேன்மைதங்கிய ஸர் தாமஸ் ஷெண்டன் ஒயிட் லெக் தாமஸ். ஜி. ஸி. எம். ஜி. ஓ. பி. இ. ஆவர். இவரின் உருவப்படம் இங்கு சேர்க்கப்பெற்றிருக்கிறது. இவர் ரெவரெண்டு டி. டப்ளியு. தாமஸ். எம். ஏ. அவர்களின் செல்வனாக 1879ம் ஆண்டில் பிறந்தார். முறைப்படி கல்வி கற்றார். அதன்

மேன்மையால் 1909ம் ஆண்டில் கிழக்கு ஆப்ரிக்கா புரோடெக்டரேட்டின் உதவி டிஸ்டிரிக்ட் கமிஷனராக, கலோனியல் சர்வீஸ் உத்தியோகம் ஏற்ருர். 1910ம் ஆண்டில் செகரெட்ரியேட்டிற்கு மாற்றப்பட்டார். 1918ம் ஆண்டில் ஊகண்டாவின் உதவித்தலைமைக் காரியதரிசியானர். 1923ம் ஆண்டில் டிபுடி சிப் செகரெட்ரியானர். 1927ம் ஆண்டில் கோல்ட் கோஸ்ட் காலனியின் கலோனியல் செகரெட்ரியானர். 1929ம் ஆண்டில் நியூஜிலாந்து புரோடெக்டரேட்டின் கவர்னரானர். 1932ம் ஆண்டில் கோல்ட் கோஸ்ட்டின் கவர்னரானர். 1934ம் ஆண்டில் மலாயா நிபகல்பத்தின் கவர்னர் (தேசாதிபதி) ஆனர். இப்பதவியை ஏற்ற இவர் சாந்தம், பொறை, கருணைகளைத் தனக்கணியாகக் கொண்டவர். அரசியலை நடாத்துவதில் அறிஞர். செய்வன திருந்தச்செய்யும் சிலர். இவரால் இந்நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள நலன்கள் பல.

ஆங்கிலேய அரசுக்குச் சொந்தமான இத்தொடுவாய்ப்பகுதியில் மட்டும் சுமார் 1000 மைல்களுக்கு அதிகமாக நல்ல ரோடுகள் இருக்கின்றன. இவைகளை சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முனிசிபாலிடியார் பரிபாலித்து வருகிருர்கள். கவர்ன்மெண்டின் சார்பாக பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்டுமெண்டும் கவனிக்கின்றன. இத்தார் (கில்) ரோடுகளுடன் சுமார் 131 மைல் சரளைக்கல் ரோடுகளுமிருக்கின்றன. இத்துடன் தபால் வசதிக்காக சுமார் 57 தபால் நிலையங்களிருக்கின்றன. இவைகளில் தந்தி, டெலிபோன் மற்றவைகளும் தபால் நிலையங்களின் மேற்பார்வையிலேயே இருக்கின்றன. சிங்கப்பூருக்கடுத்த பாயாலேபாரிலும்,வெல்லஸ்லி மாகாணத்திலுள்ள பினைக்காவிலும் கவர்ன்மெண்ட் ஆகாயத்தந்தி நிலையங்கள் இருக்கின்றன. இவைகளோடு ஜாவா, சியத்துக்கும் டெலிபோன் இணைப்புகள் இருக்கின்றன. இப்பகுதியின் எந்த நிலையங்களுக்கும் தலைமை ஆபிஸ் சிங்கப்பூரிலேயே இருக்கிறது.

(1) அ. சிங்கப்பூர்ச் செல்வங்கள்

(நேரிசை வெண்பா)

"வங்கமலி யாழி வளைத்திருக்குந் தீவிலுறை
சிங்கப்பூ ரோவியத்தைச் செப்புதற்கு—பங்கமறக்
கற்றபெரும் பாவலருங் காணர்கள் மேற்கோளென்
சொற்றிறத்தா லொல்லுமோ தோது"

தண்மை நிறைந்தது மேல் நாடு. தட்பமும் வெப்பமும் சமமாய் உள்ளது நந்தாய்நாடு. அவ்விரு நாட்டினரும் வாழ ஏற்றது இந்நாடு. எதனால்? நம் தாய்நாட்டைப் பார்க்கினும் தட்பமும் மேல்நாட்டுக்கு மேல் வெப்பமும் மிகுந்துளதால். வெப்பமுள்ள நாட்டினர் மிகக்குளிர்ச்சியான நாட்டில் வாழவியலாது. குளிர்ச்சியான நாட்டிற் றோன்றியோர் அதிக வெப்பமுள்ள நாட்டில் வாழுவதும் அருமை. அதை நம் நாட்டில் வாழும் ஆங்கிலேயராலும், ஆங்கில நாட்டில் வாழும் நம் நாட்டினராலும் காண்கின்றோம். அவ்விருநாட்டில் வாழ்பவர்களும் அவரவர்களுக்கு ஏற்ற சாதனங்கள் மிகத் தேடவேண்டியதிருக்கிறது. அவ்விருநாட்டினரும் இந்நாட்டில் வாழ அதிக சாதனங்கள் தேடவேண்டியதில்லை. தாய்நாட்டில் இருந்து வந்த பின்னரில் இந்நாட்டின் தட்ப, வெப்பங்கள் ஒவ்வொருவர் உடலுக்கும் ஏற்றுக்கொள்கின்றன. அதனால் இந்நாட்டில் வாழ்வோர் தாய்நாடு சென்றாலும் மறுபடியும் இங்கு வரவே எண்ணுகின்றனர். இதை திரு "ரோலண்ட் பிராடல்" தான் எழுதிய சிங்கப்பூர் ஒளி என்ற புத்தகத்தில் கூறும்போது "இந்நாடு லண்டனுக்குமேல் வெப்பம் மிகுந்தது. அவ்வாறிருந்தும் இங்கு எங்கள் நாட்டினர்பலர் குடியேறி இருக்கின்றனர். மிகுதியாக சிங்கப்பூரிலேயே வசிக்கின்றனர். இவர்கள் தாய்நாடேகும்போது மறுபடியும் வரவேண்டாம் என நினைப்பர். நினைத்துச்சென்றாலும் அங்கேயே இருக்க உள்ளம் இடங்கொடாது. மறுபடியும் சிங்கப்பூருக்கே வர விருப்பமுண்டாகும். அதன் காரணம்? சிங்கப்பூரிலுள்ள ஓர்விதச் சக்தியாகும். அச்சக்தி இன்னதென்றறிய என்னால் முடியவில்லை." என்று கூறுகிறார்.

அவ்வாறு பொருந்த சக்தி நிறைந்த சிங்கப்பூரின் ஒவியத்தை எவ்வாறு கூறவியலும்? இயற்கை வளம் நிறைந்தது. எப்பக்கமும் கடலால் வளைக்கப்பட்ட ஓர் தீவு. இதன் எத்துறையிலும்ஏராளமான கப்பல் வந்து குவியும். இவ்வெழில் நிறைந்த சிங்கப்பூரின் செல்வத்துக்கு உவமைகூற எப்பாவலராலும் இயலாது. அத்தகைய சிங்கப்பூரின் சிறப்பை யானோ கூறவியலும்? இயலாதெனினும் கண்ணாற் கண்டவைகளையும், காதாற் கேட்டவைகளையும், கற்றோரால் தரப்பட்ட எழுத்தாதாரங்களையும் கொண்டு இயன்ற அளவு எழுதுகின்றேன். அதனை அழகுபெறச்செய்ய வேண்டுவது தமிழ்த் தாயின் கடமை. ஆதரிக்க வேண்டுவது அறிஞர்களின் பொறுமை.

இச்செல்வமிகுந்த சிங்கப்பூர் இந்தியாவுக்கும், சினத்துக்கும் மத்தியில் உள்ள ஓர் தீவாகும். இதன் நீளம் 27 மைல். அகலம்

14 மைல். சுற்றளவு 217 சதுர மைல்களாகும். இத்தீவு மலாயர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. 1252ம் ஆண்டில் ஜாவானியர் இத்தீவின் மீது படை எடுத்தனர். அதனால் பெருஞ்சேதமேற்பட்டது. பிறகு ஜோஹோர் சுல்தான் ஆதிக்கத்துக்குட் பட்டிருந்தது. 1819ம் ஆண்டில் இப்போதுள்ள ஜோஹோர் சுல்தானின் முன்னோர்களே இத்தீவையும் ஆண்டனர். அப்போது அதன் தலைவராக "தெமாங்கான்" என்பவரிருந்தார். இவர்காலத்தில் 1819ளு ஜனவரிமீ 28உ "ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ்" சிங்கப்பூர் தீவில் வந்து நுழைந்தார்.

இவர் கிழக்கிந்திய வியாபாரக் கப்பல்களில் இருந்த ஓர் தளபதியின் மகன். அதனால் தனது 14வது வயதிலேயே அக்கம்பெனியின் எழுத்தாளர் வேலையில் அமர்ந்தார். 1807ல் கல்கத்தாவுக்குச் சென்றார். இவரின் நுண்மறிவை அறிந்தார் கல்கத்தா கவர்னர் லோட்பிந்தோ. இவரின் ஆலோசனையை ஏற்றார். இருவரும் ஜாவாவைக் கைப்பற்ற எண்ணினர்கள். அதற்காக 600 இந்தியத் துருப்புகளுடனும் 600 ஐரோப்பியத் துருப்புகளுடனும் புறப்பட்டார்கள். 1811ளு ஆகஸ்ட்மீ 4உ மலாக்கா வந்தார்கள். அம்மாதம் 9உ பத்தாவியா சென்று போர் ஆரம்பித்தார்கள். 25உ வெற்றிபெற்றுத் தங்கள் கொடியை நாட்டினர்கள். அதன் தலைவராக "ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸை" நியமித்துவிட்டு கவர்னர் லோட் பிந்தோ கல்கத்தா சென்றார். அங்கிருந்த "ராபிள்ஸ்" 1818ம் ஆண்டில் சுமத்திராவிலுள்ள "பென்கூலன்" கவர்னர் பதவியை ஏற்றார். 1819ம் ஆண்டில் சிங்கப்பூருக்கு அண்மையில் இருந்த "பெந்தோங்" வர எண்ணிப் புறப்பட்டார். 1819ளு ஜனவரிமீ 28உ இவர் ஏறிவந்த கப்பல் எதிர்பாரா விதமாய் சிங்கப்பூரில் ஒருபகுதியைச் சேர்ந்தது. ஆச்சரிய முற்று இறங்கினர். தீவில் நின்று நாற்றிசையும் நோக்கினர். இத்தீவு எதிர்காலத்தில் நமது அரசியலுக்குப் பெரும் பலனைத் தருமென்பதை எண்ணினர். அப்போது அங்கு வந்து சேர்ந்தான் "தெமாங்கான்." இவரைக்கண்டு பணிந்தான். இவரின் புன் சிரிப்பில் ஈடுபட்டான். அவன் நிலை தெரிந்த இவர் 1819ளு ஜனவரிமீ 30உ சிங்கப்பூரின் ஓர் பகுதியை ஆங்கிலேயருக்குச் சொந்தமாக எழுதி வாங்கினர்.

அவ்வாறெழுதி வாங்கிய "ஸர். ராபிள்ஸ்" ஆழ்ந்த ஆலோசனையுடையவர். எச்சாதியினராயினும் சமமாய் எண்ணிப் பழகும் குணமுடையவர். எல்லோரிடமும் மரியாதை காட்டுபவர். தாராள சிந்தை யுடையவர். சரித்திரங்கள் படிப்பதில் ஆர்வமுடையவர்.

அச்சரித்திரங்கள் படிக்கும்போது ஓர் யோகியைப்போன்றிருப்பார். யோகிகளோ மனதை ஒருவழிப்படுத்தி இருப்பர். ஐம்புலன்களை யும் தனக்கடங்கி நடக்கச் செய்வர்.

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்பது நாயனர் வாக்கு. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐவகை வேட்கைகளை வாய், கண், மெய், செவி, மூக்கு, என்ற ஐம்பொறிகளைக்கொண்டு பெறுவது அறிவு. அவ்வைம்புல வேட்கையில் இன்ப துன்ப மிரண்டு முண்டு. அவ்விரண்டுக்கும் ஆட்படாது இன்பம் ஒன்றை அநுபவிக்க வேண்டுவதே அறிஞரின் கடமை. அதற்கு ஒவ்வொருவரும் தனதறிவை அவை செல்லும் வழிவிடாது தன் உள்ளத்துக்கு அடங்கி நடக்கப் பழக வேண்டும். அவ்வாறு பழகுவதே யோகமுறை. அதில் தேர்ந்தோரே யோகிகள். இவர்களில் கர்ம யோகிகளுமுண்டு. அந்த யோகிகள் தங்கள் மனதைக்கட்டுப்படுத்தி யோகத்திலிருந்தால் அண்மையில் நடப்பது தெரியாது. வேறொருவர் வந்து தன்னுடலை வாட்டினாலும், அடித்தா லும் அறியார்கள். அவ்வாறுள்ள யோகிகள், இருந்த யோகிகள், ஆத்மசித்தி பெறுவர், பெற்றார்கள் என்பதை நூல்களால் அறி கிறோம். அநுபவ ஞானிகளும் கூறுகின்றனர். அவர்களைப்போன்று "ஸர் ராபிள்ஸ்" தேச சரித்திரங்களையும் வீரர்களின் வாழ்க்கை களையும் படிக்கும்போது தன் முழுக்கவனத்தையும் செலுத்தினர். "அவர் சரித்திர ஆராய்ச்சி செய்யும்போதோ எழுதும்போதோ யார் எதைச்செய்தாலும் அறியார். பேசினாலும் கேளார்." என்று கூறுகிறார் திரு. "பிராடல்." அவ்வாறு தன் முழுமனதையும் ஒருவழிப்படுத்தி ஒவ்வொன்றையும் ஆராய்ந்ததாலன்றோ அவர் எண்ணியவாறு சிங்கப்பூர் சிறந்து விளங்குகிறது.

இத்தகைய சிறந்த குணங்களால் "தெமாங்கான்" இடம் முதலில் ஒரு பகுதியைப் பெற்ற "ஸர் ராபிள்ஸ்" 1824ளு ஆகஸ்ட்மீ 2உ ஏற்பட்ட உடன்படிக்கையினால் அத்தீவு முழுதை யும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கினர். அவரால் தங்களுக்குச் சொந்தமாகப் பெற்ற சிங்கப்பூரை மலாக்கா, பினங்குடன் சேர்த்து ஆங்கிலேயர் ஆட்சி செலுத்தினர். இவைகளுக்குத் தலைநகராகப் பினங்கை ஆக்கினர்கள். 1826ம் ஆண்டிலிருந்து வங்காளத்தி லிருந்த இந்தியா கவர்ன்மெண்டின் பார்வையில் அரசியலை நடத்தி னர்கள். 1836ம் ஆண்டில் தொடுவாய்ப் பகுதியின் தலைநகராக

சிங்கப்பூரை ஆக்கினார்கள். 1867ம் ஆண்டில் இந்தியாக் கவர்ன்மெண்டின் ஆதிக்கத்தை மாற்றினார்கள். காலனிகளின் செகரெட்ரி ஆப்ஸ்டேட் அவர்களின் ஆதிக்கத்துக் குட்படுத்தினார்கள். அன்று முதல் அதே முறையில் ஆட்சி செலுத்தப்பட்டு வருகிறது.

இவ்வரசியலை நடத்த சிங்கப்பூரில் நிர்வாக சபை ஒன்றும் (Executive Council) சட்டசபை (Legislative Council) ஒன்றும் உண்டு. கவர்னர் உள்பட நிர்வாக சபையில் 11 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். சட்டசபையில் உத்தியோகப் பற்றுடையோர் 13 பேர்களும் உத்தியோகப் பற்றில்லாத நியமன அங்கத்தினர் 13 பேர்களும் ஆக 26 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களின் ஆலோசனையைக்கொண்டு காலனிகளின் செகரெட்ரி ஆப் ஸ்டேட் அவர்களின் உத்தரவுப்படி கவர்னர் ஆட்சியை நடத்துகிறார். சிங்கப்பூர் நகரத்தின் மத்தியில் ஓர் அழகிய குன்றில் கவர்னருக்கு ஓர் உன்னத மாளிகை அமைக்கப்பெற்றுளது. கவர்னர் அதில் வசிப்பதால் நகரில் நடைபெறும் ஒவ்வொரு காரியங்களையும் தானே நேரிற் காண மிகப் பொருத்தமாய் இருக்கிறது.

தெருக்களின் சிறப்பு

நகரங்களை அழகுபடுத்துவது தெரு. அம்மறுகுகளை சிறப்பிப்பது மஞ்சபடியும் மாடமாளிகைகள். அம்மாளிகைகளை அலங்கரிப்பது வாணிபம். அவ்வாணிபம் நிறைந்த தெருவை ஆவண வீதி (வியாபாரஸ்தலம்) என்று அறிஞர் கூறுவர். அவ்வாவண வீதியையும் கடலையும் ஒன்றென உவமை கூறுவதுண்டு. எதனால்?

"வரிவளைக் குலக்குவை யினன் மணிகளான் மணிகள்
தெரிதருங் கரவல வனல் வயின்வயிற் றிரண்ட
விரிகருப் புரவெண் மணற் குன்றினு லொலியாற்
பொருவிலா வணமறு திரைக் கடலினைப் பொருவும்
(நைடதம். நகரப்படலம். 14)

என்று அதிவீரராம பாண்டியர் கூறியபடி கடற்கரையிலுள்ள சங்குகள், மணிகள், நண்டுகள், மணற் குன்றுகள், அலைகளின் ஒலிகளைக் கடைத்தெருவிற் காணலாம். கடைத்தெருவிற் குவியலாகக் கிடக்கும் சங்குகளும், வளையல்களும் கடற் சங்குகளைக் காட்டும். மாணிக்கங்களை, இரத்தினங்கள் காட்டும். நண்டுகளை, இரத்தினங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் அளக்கின்ற, எண்ணுகின்ற கை

விரல்கள் காட்டும். மணற் குன்றங்களை கடைத்தெருவிற் குவிக்கப் பட்டுள்ள கருப்புரக் குவியல்கள் காட்டும். அலையின் ஒலியை பண்டங்கள் வாங்கவரும் மக்களின் பேரிரைச்சல் காட்டும். இதே போன்று வாணிபம் நிறைந்து கடலைப் போன்று உவமை கூறக் கூடிய ஆவண வீதி நகரங்களில் ஒவ்வோரிடங்களில்த் தானிருக்கும். சிங்கப்பூரிலோ எங்கு பார்த்தாலும் ஆவண வீதிதான் (கடைத் தெருதான்)

அவைகளிற் சிறந்து மேகமானது மாடியிற்படிய வானளாவி உயர்ந்து நிற்கும் மாடமாளிகைகளைத் தன்னிடத்தேகொண்ட தெரு க்கள் பல. அவற்றுள் "ராபிள்ஸ் பிளேஸ்" "ராபிள்ஸ்கி" "குவாலியர் கி" "ஹைஸ்ட்ரீட்" "நார்த் பிரிட்ஜ் ரோடு" "சவுத் பிரிட்ஜ் ரோடு" "பாட்ரி ரோடு" "மார்க்கெட் ஸ்ட்ரீட்" முதலிய வைகள் பெருத்த வியாபாரங்கள் நடைபெறுந் தெருக்கள். இத் தெருக்களில் நார்த், சவுத் பிரிட்ஜ் ரோடுகள் சுமார் 2½ மைல் நீள மிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொருநாளும் வியாபார நேரத்தில் ஏராளமான கார்கள், ட்ராலி பஸ்கள், லாரிகள், வண்டிகள், கை வண்டிகள், ரிக்ஷாக்கள் வந்து நின்று சென்றுகொண்டிருக்கும். கால் நடையாய்ச் செல்பவர்கள் இவைகளினிடையே புகுந்து வெளி யேறுவதென்பது இயலாது.

இத்தெருவில் ஏராளமான பொருட் செலவில் கட்டப்பட்ட பெருத்த மாளிகைகள் தங்களைக் காணவரும் மக்கள் கண்களுக்கு நல் விருந்தளிக்கின்றன. அத்துடன் அவர்களைப் பார்த்து மக்களே! நீங்கள் பெருத்த மாளிகைகளை வேறு எங்கும் கண்டிருக்கமாட்டீர் கள். ஒருவாறு பார்த்திருந்தாலும் அலைகடல் தென்றலை அள்ளி வீச, அதனலையால் மோதுண்டும் அசையாது நிற்கும் எங்களைப் போன்று பார்த்திருக்க மாட்டீர்கள். அதனால் நாங்கள் உங் களுக்குக் கீழ்ப்படியோம். கர்வமே கொள்வோம் என்று கூறுவது போல தலை நிமிர்ந்து நிற்கின்றன. அவ்வாறு நின்றாலும் பெரியார் தன்னை நாடி வருவோரை அவமதியார்கள். அன்போடு இருகையை யும் காட்டி ஆட்டி வரவேற்பார்கள், என்பதின் அறிகுறியைக் காட்டுவது போல அம்மாளிகைகளில் கட்டப்பட்ட கொடிகள் காற்றினால் அசைந்து ஆடிக்கொண்டே இருக்கின்றன. இத்தகைய கட்டிடங்களில் சிறந்தவைகள், ஜெனரல் போஸ்டாபீஸ் (தலைமை தபால் நிலையம்) யூனியன் பில்டிங், முனிசிபல் கட்டிடம், ஒங்கம் சங்காய் பாங், ஓஷன் பில்டிங் (மகா சமுத்திரம்) மெர்க்கன்டைல் பாங், விக்டோரியா ஹால் மற்றவைகளாகும். இவைகளில் தலைமை

தபால் நிலையம் எழுடுக்குகள் கொண்ட ஓர் கட்டிடம். அதில் இன்னுமொரு சிறப்புண்டு. அந்நிலையத்துக்கு வரும் தபால்களை கடலில் இருந்து கட்டிடத்துக்குக் கொண்டுவர இடையில் ஓர் பாட்டையைக் (ரோடு) கடக்கவேண்டும். அதற்கு நேரம் பிடிக்கும். அத்துடன் அத்தெரு அதிகப் போக்குவரத்துள்ளது. அதனல் தடையும் எற்படும். அதற்காக தபால் நிலையக் கட்டிடத்துக்கு அடித்தரையில் ஓர் கட்டிடம் கட்டப் பெற்றிருக்கிறது. அதே மட்டத்தில் கடலில் ஓர் அறை அமைக்கப்பட்டிருக்கிறது. இவை இரண்டுக்கும் பாட்டையின்கிழ் ஓர் சுரங்க வழி அமைக்கப் பெற்றிருக்கிறது. அச்சுரங்கத்தின் வழியாகவே கடலில் இருந்து தபால்களை எடுக்கவும், கடலில்நிற்கும் மோட்டார் போட்டுகளுக்கு அனுப்பவும் எற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதேபோல இன்னும் பலவுண்டு.

வாணிபத்தின் வளம்

தெருக்களையும் சிறந்த மாளிகைகளையும் சிறப்பிக்கும் வாணிபத்தில் வளஞ் சிறந்தது சிங்கப்பூர். இது ஓர் எற்றுமதி, இறக்குமதி நிறைந்த துறைமுகம். அதனல் பல நாட்டின் வியாபாரிகள் குடியேறி இருக்கின்றனர். இவ்வியாபாரப் பெருக்கத்திற் கேற்ப அயல் நாடுகளோடு நாணயத்தின் தொடர்பு வைத்துக்கொள்பவைகள் பாங்குகளாகும். அவைகளில் "நேஷனல் சிட்டிபாங் ஆப் அமெரிக்கா" "சார்ட்டர்ட் பாங்" "ஓங்கம் அண்ட் சங்காய் பாங்" "மெர்க்கண்டைல் பாங்" "ஓவர்சிஸ் சைனிஸ் பாங்" "பி அண்டு ஓ பாங்" "சைன அண்டு சதர்ன் பாங்" "ரீ இண்டோ சைன பாங்" "பாங் ஆப் சைன" "டைவான் பாங்" "ஈஸ்ட்ரன் பாங்" "உலாந்தா பாங்" "யுனைடெட் சைனிஸ் பாங்" "யோகோ காமாஸ்பெசி பாங்" எனப் பதினன்கு பாங்குகள் இருக்கின்றன. இவைகளோடு மார்க்கெட் ஸ்ட்ரீட்டில் எராளமான நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் லேவாதேவிக் கடைகள் இருக்கின்றன. இவர்களில் பாங்குகளைப்போல பெருத்த லேவாதேவி நடத்துபவர்கள் சிலரிருக்கிறுர்கள். எராளமான சொத்துக்குடையவர்கள் பலரிருக்கிறுர்கள். இவர்கள் வாணிபத்திற் சிறந்தவர்கள். வற்றுத செல்வத்தைப் பெற்றவர்கள். அறப்பணியாளர்கள். திருப்பணிச் செல்வர்கள். இவைகளை முன்பே கூறப்பெற்றிருக்கிறது. அவ்வழித் தோன்றல்களான இவர்கள் இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் சிங்கப்பூரில் குடியேறினர்கள். அன்றுமுதல் தங்கள் தொழிலைத் தக்க முறையில் நடத்தி வருகிறுர்கள். இவர்கள் லேவாதேவித் தொழிலோடு வியாபாரங்களிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்களில் சிலருக்குச் சொந்தமாக மார்க்கெட் ஸ்ட்ரீட்டில் "கண்ணப்பா கம்பெனி" "தேனப்பா கம்பெனி லிமிட்டெட்" என்ற வியாபார நிலையங்களும், தஞ்சங் ரூ ரோட்டில் ராம. பெரி. சித. ராமசாமி செட்டியாருக்கு சொந்தமாக ஓர் மா ஆலையும் இருக்கிறது.

இவ்வாணிபத்தில் இந்தியர்கள் பலர் சிறந்து விளங்குகிறார்கள். லண்டன், ஜப்பான், இந்தியாவிலிருந்து இவர்களுக்கு ஏராளமான பட்டு, துணி, அரிசி, பருப்பு, நெய், தீன் சாமான்கள், மற்றவைகள் வந்து இறங்குகின்றன. அவைகளை மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கிறார்கள். இவர்களில் "மாகன்லால் நாகிம்தாஸ் அண்ட் கம்பெனி" "டௌலத்ராம் அண்ட் கம்பெனி" "G. ராமச்சந்த்" "வாஸ்மால் அசோமால் அண்ட் கம்பெனி" "சிங்கப்பூர் சில்க் ஸ்டோர்" "R. E. முகமட் காசிம் அண்ட் கம்பெனி" "நயினா முகமது அண்ட் சன்ஸ்" "S. A. அல்லாப் பிச்சை அண்ட் கம்பெனி" "P. கோவிந்தசாமி பிள்ளை கம்பெனி" "O. ராமசாமி நாடார் அண்ட் கம்பெனி" களுக்குடையவர்கள் பெருத்த வியாபாரிகளாவர். இவர்களைப் போன்று இன்னும் பல பெரிய வியாபாரிகள் இருக்கின்றனர். இவர்களால் வாணிபத்தின் வளம் பெருகி நகரம் சிறப்புற்றிருக்கிறது. இவர்களின் வாணிபத்தையும் ஒற்றுமையையும் பெருக்கப் பல சங்கங்கள் காணப் பெற்றிருக்கின்றன. அவைகளில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கம் டாங் ரோட்டில் நிறுவப்பெற்றிருக்கிறது. இச்சங்கம் தோன்றி 10 ஆண்டுகளாகின்றன. இதற்கு மூலகாரணமாய் இருந்தவர் திரு. அரு. அண்ணாமலை செட்டியாராவர். இவர் இளமைப் பருவத்திலேயே ஆங்கிலத் தேர்ச்சி பெற்றார். தான் பிறந்த ஊராகிய ராமச்சந்திர புரத்திலேயே கல்வி பயின்றார். பல அறிஞர்களின் கூட்டுறவைக் கொண்டார். அதனால் இவர் சிங்கப்பூரில் இருக்கும்போது செட்டியார்களுக்கென ஓர் சங்கம் காண எண்ணினார். அதற்கு ஆண்டவனருளும், அன்பர்களின் கூட்டுறவும், நகரத்தார்களின் நல்லுதவியும் கூடிற்று. அவரின் முயற்சியால் காணப்பெற்ற இச்சங்கம் மலாயாவில் உள்ள நகரத்தார்களுக்குப் பல நலன்களைச் செய்திருக்கிறது. இதன் இவ்வாண்டுத் தலைவர் திரு. ந. பழ. சித. அழகப்ப செட்டியாராவர். காரியதரிசி திரு. சொ. மு. அரு. மெ. அழகப்ப செட்டியாராவர். இதேபோல இந்தியர்களின் வாணிபத்தைக் கவனிக்க "இந்திய வர்த்தக சங்கம்" ஒன்றும் நிறுவப் பெற்றிருக்கிறது. இதன் தலைவர் திரு. G. மாகன்லால் அவர்கள், காரியதரிசி திரு. G. B. நாயரவர்கள்,

இந்தியர்களின் ஒற்றுமை, முன்னேற்றங்களைக் கருத "இந்தியர் சங்கம்" ஒன்றும் "தமிழர் சீர்திருத்த சங்கம்" ஒன்றும் நிறுவப் பெற்றிருக்கிறது. இச்சங்கங்களைப்போல இன்னும் பல சங்கங் களும் உண்டு. இச்சங்கங்களால் இந்தியர்கள் பெறும் நலன்கள் பல.

ஆலயங்களின் அமைப்பு

வாணிபத்தில் சிறந்துவாழும் இந்தியர்களுக்குச் சொந்தமாக சிங்கப்பூரில் பல ஆலயங்கள் இருக்கின்றன. "கோயில் இல்லாவூரில் குடி இருக்க வேண்டாம்" என்பது ஔவையின் முதுமொழி. அதை ஏற்பவர்கள் தென்னாட்டுத் தமிழ் மக்கள். ஆகவே தாங்கள் சென்றுவாழும் இடங்களில் எல்லாம் தக்க ஆலயங்களைக் கண்டுள் ளார்கள். அதேபோல சிங்கையிற் கண்ட தென்னாட்டார் ஆலயங் களிற் சிறந்து விளங்குவது மாரியம்மன் கோயில், சித்தி விநாயகர் கோயில், தெண்டாயுதபாணி கோயில், நரசிம்மப்பெருமாள் கோயில்களாகும். இவைகளில் மாரியம்மன் கோயில் 1828ம் ஆண் டில் கவர்ன்மெண்டாரிடம் கிராண்டு பெற்று நிறுவப்பெற்றதாகும். (இதை முதல் அதிகாரத்திற் கூறப்பெற்றிருக்கிறது) இக்கோயில் சவுத் பிரிட்ஜ் ரோடில் பெருத்த ஆலயமாகக்கட்டப்பெற்றிருக்கிறது. இக்கோயிலில் மாரியம்மனோடு விநாயகர், துரோபதை அம்மன், சுப்பிரமணியர், இன்னும்பல தெய்வச்சிலைகளும் இருக்கின்றன. இவை தமிழ் மக்களின் பொருளுதவிகொண்டு எண்டௌமெண்ட் போர்டாரின் கண்காணிப்பில் நடத்தப்பெறுகிறது. இதிலுள்ள துரோபதை அம்மனுக்கு தீமிதி உற்சவம் நடைபெறும். அவ்வமயம் ஏராளமான தமிழ் மக்கள் நெருப்பில் இறங்கிக் குதித்து விளையாடு வார்கள். அதனால் அவர்களின் அன்பையும் இறைவனின் அருளை யும் தெரிந்து கொள்ளலாம். அத்தீமிதி விழாவன்று அதிகமான ஆங்கிலேயர்கள் கவர்னர் உள்பட வந்து கண்டு களிப்பர்.

இதற்கடுத்தேற்பட்டது சித்தி விநாயகர் கோயில். சிதம்பரத் தில் சிவாநுபூதி பெற்ற திரு. பொன்னம்பல சுவாமிகளால் இவ் வோங்கார மூர்த்தி நிறுவப்பெற்றது. சுவாமிகள் இல்வாழ்க்கையில் இருந்தவர். பட்டாளத்தைச் சேர்ந்தவர். சிங்கப்பூருக்கு வந்த இந்தியப் பட்டாளத்தில் இவரும் ஒருவராக வந்தார். அப்போது ஓர் விநாயகரை வைத்து வணங்கினார். அவ்வுத்தியோக மாறுதலில் தாய்நாடு செல்ல நேர்ந்தது. விநாயக உருவத்தை எடுத்துச்செல்ல எண்ணவில்லை. அவர் எங்கு மிருக்கிறார் என்பதை உணர்ந்தவர். ஆகவே தான் பூசித்த ஓங்கார வடிவை அங்கிருந்தோரிடம் ஒப்பித் தார். அதற்குப்பூசை செய்யும்படியாகக் கூறினார். அன்பர்களும்

ஐங்கரனார் தங்குமிந்த ஆலயத்தை அன்புடனற்
சிங்கைநகர் வாழும் செட்டியார்கள் கட்டினது.



Vinayagar Temple, Singapore.


ஏற்றார்கள். வணங்கினார்கள். பலரால் ஓர் ஓங்காரமூர்த்தி வணங்கப் படுகிறதென்பதை அறிந்தார்கள் நகரத்தார். அச்சித்திவிநாயகருக்கு ஆலயம் அமைத்தார்கள். விழாக்கொண்டாடினார்கள். அவ்வாலய மிருந்த இடம் பிறகு கவர்ன்மெண்டாருக்கு தேவையாய் விட்டது. அவ்விடத்திற்காக ஓர்சிறியதொகையைக் கவர்ன்மெண்டார் கொடுத்தார்கள். அதைப்பெற்று மேற்கொண்டு பெருந்தொகை செலவு செய்து இப்போதுள்ள சித்திவிநாயகர் ஆலயத்தை நகரத்தார் கட்டினார்கள். இவ்வாலயத்துக்கு தைப்பூச விழாவில் முதல்நாள் தெண்டாயுதபாணி வருவார். • இங்கு இருந்தே பலரும் காவடி கட்டித் தூக்குவார்கள். இவ்வாலயத்தின் படமும் இந்நூலில் சேர்க்கப் பெற்றுளது.

இதன் மேலுள்ளது டாங்ரோட்டிலுள்ள தெண்டாயுதபாணி கோயில். இக்கோயில் 1859ம் ஆண்டில் நகரத்தார்களால் நிறுவப் பெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சைவ சமயத்தினர் என்பதை முன்பே கூறப்பெற்றிருக்கிறது. இவர்களில் வேறு சமயத்தினரே இல்லை. அச்சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அதற்குமேல் சமயத்தின் முடிவுகண்டோர், சித்தாந்தத்தின் திற மறிந்தோர் கூறுகிறபடி பரசிவம் ஒன்றுண்டு. அச்சிவமே உயிர்களுக்கு வாழ்வைத்தருவது. அப்பெரும்பொருளே உலகில் ஐந் தொழிலையும் ஆற்றுகிறது. அதற்காக இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சத்திகளோடு கூடுகிறது. அச்சத்திகளில் ஒவ்வொன்றோடு கூடும்போதும் ஒவ்வொரு பெயரைப்பெறுகிறது. அவைகளைச் சித்தாந்த நூல்களிற் காண்க. அவ்வாறு ஒவ்வொரு பெயரோடு கூடிய தெய்வங்களைப் பல சமயத்தாரும் அவரவருக்கு ஏற்ற பெயரோடு அழைப்பர். வழிபடுவர். அப்பரம்பொருளும் அவரவரின் குறிக்கோளை நிறைவேற்றும். அவ்வுருவிலாச்சோதியில் உருவாகத்தோன்றிய சிவபெருமான் தன் சத்தியோடு கூடித் தோற்றுவித்த பேருருவே தண்டபாணி. சத்தியும் சிவமும் ஒன்றாகக்கூடியது தண்டபாணியாதலால் சிவபெருமான் வேறு, தண்டபாணி வேறெனச் சைவசமயத்தார் கொள்வதில்லை. அத்தண்டபாணிக்குப் பல பெயர்களுண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் தத்துவங்களுமுண்டு. அதில் சிலபெயர்கள் முருகன், கந்தன், குமரன், வேலன், செவ்வேள், மயிலோன் என்பவைகள். இப்பெயர்களாலேயே அவனைப் பெரும்பான்மையான மக்கள் அழைப்பர். வழிபடுவர். "கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்புடை" அக்கந்தனும் கலியுகவரதனாக நின்று மக்கள் குறையை மாற்றுவான். அக்குமரன்தான் நகரத்தாரின் குலதெய்வம். ஆகவே தாங்கள் குடியேறிய ஒவ்வோரிடங்களி

லும் அவனுக்கு ஆலயம் அமைத்தனர். அதற்கு இன்னும் பல காரணங்களுமுண்டு. அவை ஒவ்வோரிடங்களிலும் கூறப்பெறும். இத்தண்டபாணிக்கென அமைத்த அழகிய கோயிலில் ஓங்கார மூர்த்தியையும் உடன் வைத்து வணங்கினர்கள். கொஞ்சநாட்களில் அங்கு வதிந்த சமயப்பெரியார்கள் சிலர் சிவபெருமானையும் ஆலயத்தில் வைத்து வணங்க எண்ணினர்கள். அதேபோல 60 ஆண்டுகளுக்குமுன் அவன் திருவுருவெனக் கொள்ளும் இலிங்கமும், அவரின் சத்திவடிவாம் அம்மையும் வைக்கப்பெற்றிருக்கிறது. அவைகளுக்கு சொக்கலிங்கம், மீனுட்சி என்ற பெயரையும் சூட்டித் தொழுது வருகின்றனர். இவைகளோடு மற்ற தெய்வங்களையும் வைத்து இவ்வாலயத்தை திறம்பட நடத்துகிருர்கள் செல்வ வணிகர்கள். இவர்கள் தன்னலங்கருதாப் பொதுநலப் பிரியர்கள். ஆகவே தாங்கள் பெறும் அருளைப் பொதுமக்களும் பெறவேண்டுமென்ற எண்ணத்தோடு தண்டபாணிக்குப் பல விழாக்களை நடத்துகிருர்கள். அவ்விழாக்களில் பலரும் வந்து கலந்துண்டு களிபெறுவர். அவைகளில் சிறந்தது தைப்பூசவிழா. இவ்விழாவை மூன்றுநாட்கள் நடத்துவார்கள். இதற்கென 22 அடியுள்ள ஓர் வெள்ளி ரதமும், ஓர் வெள்ளிக் கேடகமும் செய்து வைத்துள்ளார்கள். அவ்விரண்டிலும் இரண்டு நாட்கள் அரன் திரு மைந்தனை, அன்பர்க்கெளியனை ஊர்வலமாகக்கொண்டு வருவார்கள். அவைகளில் இரதப்பவனி இப்போது நின்றிருக்கிறது. காரணம்? டிராம் பஸ்கள். முன்னர் நகரத்தில் சில தெருக்களில் தண்டவாளத்தின் மேல் டிராம்பஸ்கள் ஓடின. இப்போதோ அப்பஸ்கள் எல்லாம் காற்றடைத்த டயர் போடப்பட்டு பெரிதாகவுள்ள எத்தெருக்களிலும் ஓடுகின்றன. இரதத்தை இழுத்துச் சென்ருல் பஸ்களை ஓட்டுகின்ற மின்சாரக் கம்பிகளைப் பல இடத்தில் தூக்கவேண்டும். அத்தொந்தரவால் வெள்ளிக் கேடகத்திலேயே வேலனின் பவனி நடைபெறுகிறது.

இவ்விழாவின்போது ஏராளமான மக்களுக்கு உணவளிக்கப் பெறும். உலகில் மக்களின் உயிரை வளர்ப்பது உடல். உடலை வளர்ப்பது உணவு. அதனுற்ருன் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ருர் மணிமேகலையில். "அன்னதான மகில நற்ருனங்கள்" என்ருர் கம்பர். அவர் கூறியபடி தானங்களிற் சிறந்தது அன்னதானம். அதை நன்குணர்ந்தவர் நகரத்தார். இவர்கள் சோறு போடுவது இன்றல்ல. இவர்களின் முன்னேர்

சிங்கப்பூர் அன்பரெலாம் சென்றுபணி வேலனுக்குப்
பொங்கு மன்பால் நகரத்தார் பொருத்திவைத்த பொற்கோயில்.
1859ம் ஆண்டு நிறுவியது.



Sri Thandayuthapani Temple of Singapore.

களும் எளியாருக்குச் சோறுபோட்டே வாழ்ந்தவர்கள். இவர்கள் ஓர் காலம் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தார்கள். (இதை முன்னர் கூறப்பெற்றிருக்கிறது) இவர்கள் அங்கு வாழ்ந்தபோது இவர்கள் வசித்ததெரு எவ்வாறிருந்தது ?

> " புலிப்பொறிப் போர்க்கதவிற், திருத்துஞ்சுந் திண் காப்பிற்,
> புகழ்நிலைஇய மொழிவளர, வறநிலைஇய வகனட்டிற்,
> சோறுவாக்கிய கொழுக்கஞ்சி, யாறுபோலப் பரந்தொழுகி,
> யேறுபொரச் சேறாகித், தேரோடத் துகள்கெழுமி "
>
> (பட்டினப்பாலை 40—47)

என்று உருத்திரங் கண்ணனார் கூறியபடி தாங்கள் வாழும் இல்லங்களில் சேர்த்துப் பொருதப் பெற்றிருக்கும் கதவுகளில் அரசனின் கொடியாகிய புலியின் உருவத்தைப்பதித்துவைத்தார்கள். " நாங்கள் என்றென்றும் செல்வத்தில் வாழ்வோம். எங்களை விட்டுத் திருமகள் எப்பொழுதும் நீங்காள். அதை யாவருக்கும் காட்டு கிறோம் " என்று கூறுவது போல் திருமகளின் உருவத்தை தங்கள் இல்லத்தின் திருமதில்களில் அமைத்திருந்தார்கள். தாங்கள் இம்மையில் புகழ் பெறுவதற்குக் காரணமாகவுள்ள இன்மொழி களையே பேசி கீர்த்தியை வளர்த்தார்கள். மறுமையிற் பேறுபெற அறப்பணியைக் கைப்பற்றினார்கள். அப்பணி எது ? அதுதான் எளியாருக்குச் சோறிடுதல். அதற்காக தாங்கள் வாழும் இல்லங் களில் உள்ள அடுக்களை (அடுப்பு) களில் ஏராளமான சோற்றை வடித்தார்கள். அவ்வாறு வடிக்கப்பெற்ற சோற்றின் கொழுக்கஞ்சி (கழுநீர்) ஓர் ஆறுபோலத் தெருவில் ஓடிற்று. அககஞ்சியைக் குடிப் பதற்காக அங்கு பல எருதுகள் வந்து கூடின. அவைகளில் ஒன்றுக் கொன்று சண்டை ஏற்பட்டது. அதனால் அவைகளின் கால்கள் கஞ்சியாற்றில் பதிந்தன. அக்கஞ்சி, மண்ணோடு கூடிச் சேறாகியது. அப்போது அங்கு சில தேர்கள் வந்தன. அதிற் பூட்டப்பட்ட குதிரைகளின் காலடிகள் பட்டன. தேர்ச் சக்கரங்கள் வேகமாகச் சுற்றின. அதனால் சேறு தூசியாகிப் பறந்தது. இவ்வாறு தாங்கள் எளியாருக்கிடும் சோற்றின் கழுநீரையும், வடி கஞ்சியையும் ஆறு போல வடித்த வணிகர்களின் வழித்தோன்றல்கள் இவர்கள். அதனால் அப்பழக்கத்தை இன்னும் கைக்கொண்டுள்ளார்கள். தங்கள் தாய்நாட்டில் நடாத்தும் மகேசுர பூசையைப்போல இங்கும் நடத்துகிறார்கள். இப்பூசை ஒவ்வொரு ஊர் விழாவிலும் நடை பெறும். அதே போல சிங்கப்பூர் தைப்பூச விழாவில் நடைபெறும் மகேசுரபூசை மிகச் சிறந்தது.

இந்நகரத்தார் பூசையிட்டு விழாக் கொண்டாடும்போது சர்க்கரைக்காவடிகள் கட்டி எடுப்பார்கள். தமிழ் மக்கள் பல்லோர் காவடி கொண்டு வருவார்கள். அக்காவடிகளின் அற்புதங்களைக் காட்டச் சொற்றிறமில்லை. ஏராளமாகப் பால், வேல், தேர்க்காவடிகள் வரும். அவைகளுக்காக தங்கள் உடலை வருத்தும் அன்பர்கள் பலர். இவ்வுடலை வருந்து முறை, காவடி எடுக்கும் காட்சி வேண்டாமென்பது சிலரது கொள்கை. அதிற் சில உண்மைகள் இருக்கலாம். ஆனால் வேல் குத்துவதிலோ, பால்க்காவடி எடுப்பதிலோ, மக்களுக்கு ஒருவித இடையூறு மேற்படாது. அதனால் பல நலன்களுண்டு. அது அவரவர் அன்பைப் பொறுத்தது. நம்பிக்கைக்கேற்றது. முறைப்படி காவடி செலுத்துவோருக்கு இறைவன் திருவருள் கிட்டுமென்பது திண்ணம். அவ்வருள் கூடு முன்பு காவடி செலுத்தும் அன்பர்கள் கொள்ளும் நோன்பு உடலுக்கு சுகாதாரத்தையும் தருகிறது. இதை ஆங்கிலேயரும் ஏற்கின்றனர். இக்காவடிகளையும் மாரியம்மன் கோயில் தீமிதியையும் நேரிற்கண்டு களித்தவர்களில் திரு. ரோலண்ட் பிராடல் (Roland Braddell) ஒருவர். அவர் தமது நூலில் "தைப்பூச விழாவில் பலவித காட்சிகளை எவருங்காணலாம். அதில் காவடி எடுப்போர் தங்கள் உடலை வருத்தும் கோரமான காட்சி ஒன்று. இதைச் சமயப் பற்றுடையவர்கள் தன்னல மறுப்பு என்ற கொள்கையோடு செய்கிறார்கள். அவர்கள் கொள்ளும் அன்புக் கேற்ப தம் உடலைத் துன்பத்தில் ஆழ்த்திக்கொள்கிறார்கள். இதே போல மாரியம்மன் கோயிலில் நடைபெறும் தீமிதியிலும் காணலாம். இது இந்து மதக் கொள்கைகளில் ஒன்று. இந்துக்கள் கடவுளிடம் ஆத்மபோதத்தைப் பெறுவதற்கு உடல் வெறுப்பு வேண்டுமெனக் கருதுபவர்கள். இக்காரியங்கள் சில ஐரோப்பியக் கண்களுக்கு அனுவசியமான பீதியைக் கொடுக்கலாம். இவைகளை நடவடிக்கையில் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஒரு பெரிய காரியமல்ல. இதனால் அவர்களை அறிய முடியாத ஓர் ஆத்மீக வாழ்வைப் பெறுகிறார்கள். இத்துடன் இதில் ஓர் வைத்திய முறையும் அமைந்திருக்கின்றது. இதைக்காரணமாகக் கொண்டு உடலை வருத்துவதிலும் தீமிதியாற் சுடுவதிலும் உடலைப்பற்றிய பல பிணிகள் நீங்க ஏதுவாக இருக்கிறது. இத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டே இந்துக்கள் காவடி எடுக்கிறார்கள். தீமிதி நடத்துகிறார்கள். இவைகள் கண்களுக்குக் காட்சி அளிப்பதோடு பெருத்த அன்பையும் காட்டுகிறது" என்று கூறுகிறார். இதே போல நேரிற் கண்டு களித்தோர் பலர் கூறுகின்றனர்.

இவ்விழாவில் தைப்பூசத் தன்று இளங்குமரனின் சொர்ணத் திருவுருவை பொன்னூலாக்கிய உன்னத மயிலில் வைத்து அலங்கரிப்பார்கள். விழாவின் மூன்று நாட்களிலும் அவ்வாறே அலங்கரிப்ப துண்டு. ஒரேமாதிரியாக அலங்கரித்தாலும் முதல்நாள், மூன்று நாளுக்குமேல் இரண்டாம் நாளணி எல்லோருக்கும் இன்பத்தைத் தரும். அதன் காரணம் யாருமறியார். அது அவனருள். அவ் விரண்டா நாள் பூசத்தன்றே சிங்கையிலுள்ள தேசாதிபதி முதல் செல்வர் பல்லோரும் வந்து செவ்வேளை ஆலயத்திற் கண்டு களிப்பர். அவ்வாறு பல சமயத்தவரும் தன்னுலயத்தில் வந்து காட்சி பெறு கின்றனரே என்ற களிப்போ! ஏராளமான அன்பர்கள் நமது அருளின் திறமறிந்து இன்று காவடி கொண்டுவந்தனரே என்ற செழிப்போ! நமதடியார்களாகிய நகரத்தார் தம்முடைய செல்வ மெல்லாம் நம்முடைய தென்றெண்ணிப் பெரும் பொருட் செலவில் எளியாருக்கு உணவூட்டுகிறார்களே என்ற கனிவோ! குன்றிலுறை யும் நமதுருவை மன்றத்தில் வைத்து இன்று பலருங் காணச் செய் தனரே என்ற இனிப்போ! எதை யாமறிய முடியும்? அவன் தானறிவான். அன்று பெரு விழாக் கொண்டாடும் நகரத்தார் அவனருளை என்றும்போற் பெறுவர். அநேக சீனர்கள், மற்றவர் களும் தங்கள் காணிக்கைகளையும் வேண்டுதலைப் பொருள்களையும் கொண்டுவந்து செலுத்தி அருள் பெறுவர். அவ்வாறு வரும் அன்பர்களை நகரத்தார் வரவேற்பர். அவ்வைபவத்தை நேரிற் கண்டே ஆநந்திக்கவேண்டும்.

விழாவின் மூன்றும் நாள் மாலை வள்ளிலோலனை மயில்வாகனத் தமர்த்தி வயிர வணிகளால் அலங்கரிப்பார்கள். வெள்ளிக் கேட கத்தில் ஏற்றுவார்கள். அச்சா ரோட் வழியாக கடற்கரையோரத் தில் பீச் ரோடுக்குக் கொண்டுவருவார்கள். அங்கு இரவு மணி 8க்கு வாணவேடிக்கை நடைபெறும். அக்காட்சி காண அங்கு கூடும் மக்கள் எண்ணிக்கையிலடங்கார். அண்மையிலுள்ள கடல் அலையின் பேரிரைச்சலை அம்மக்கள் கூட்டத்தின் ஒலி மறைத்து விடும். இவ்வாண வேடிக்கை இறைவனுக்குப் பிரீதி என்பதற்காக நடத்துவதல்ல. அதை ஆரம்பித்த முன்னோர்களின் நோக்கம் வேறு. அதன் உட்கருத்தை அங்கு வந்து கூடும் மக்களின் கூட்டமே காட்டும். அக்கூட்டத்தில் பல சாதியினரும், பல சம யத்தினரு மிருப்பர். அவரவர்களும் வாணவேடிக்கைக்காக வந்த வர்களே. அவ்வொன்றைத்தானா காண்கிறார்கள்? அத்துடன் மயில் வாகனின் மாண்புமிக்க காட்சியைக் கண்டு மகிழ்கிறார்கள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவ்வுருவின் வனப்பில் ஈடுபடு

கிறார்கள். அதனால் அன்றேனும் அவனருளைப் போற்றி அன்பு கொள்கிறார்கள். அதற்குரிய பலனையும் பெறுகிறார்கள். இவ்வாறு எல்லோருக்கும் பலன் தரும் வாண வேடிக்கை கடந்த ஆண்டில் எங்கும் நிறுத்தப்பெற்றது. அதற்குக் காரணங்கள் பல. அதனால் மற்ற சமூகத்தவரில் வருந்தினோர் அநேகர். இதேபோல இந்துக்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இறைவன் திருவிழாக்களில் கொண்டாடும் ஒவ்வொரு காரியங்களுக்கும் கருத்தொவ்வொன்று உண்டு.

இவ்வாறு நடக்கும் விழாக்களை நகரத்தார் எல்லோரும் கவனித்து நடத்துவர். இவைகளைப் பொறுப்போடு நடத்தவும், தினப்படி ஆலயத்தில் நடைபெறும் பூசை நிர்வாகங்களைக் கவனிக்கவும் நகரத்தார்களில் ஆண்டுக் கொருவர் (ஓர் கிட்டங்கிக்காரர்) நியமிக்கப் பெறுவர். அவர்களுக்கு "காரியக்காரர்" என்று பெயர். இக்காரியக்காரர்கள் எக்காரியங்களையும் மிகப் பொறுப்போடு கவனிக்கவேண்டும். இவ்வாண்டு "காரியக்காரராக" நியமிக்கப் பெற்றிருப்பவர் திரு. மெ. செ. மெ. ச. கடையின் பொறுப்பாளர் நாராயணன் செட்டியார். இவர் தென்பாண்டி நாட்டில் கோட்டையூரில் ராமன் செட்டியாரின் செல்வனாக தாதுஞு தைமீ 23உ பிறந்தார். இப்போது இவருக்கு வயது 62 ஆகிறது. இவர் உடல் திடத்துடனிருக்கிறார். இவர் 1888ம் ஆண்டிலேயே சிங்கப்பூருக்கு வந்தவர். சுமார் 50 வருட அநுபவங்கொண்டவர். யாருடனும் நேசமாய்ப் பழகும் குணம் பெற்றவர். சமயப் பற்றுடையவர். முன் காலப் பெரியார்களின் பழக்கங்களைக் கொண்டவர். இக்காலத்துக்கு ஏற்பவும் நடப்பவர். அதனால் இவ்வாண்டின் காரியத்தனத்தையும், தான் இருக்கும் கடையின் நிர்வாகத்தையும் நல்ல முறையில் நடத்துகிறார்.

இவைகளோடு சிராங்கூன் ரோடில் ஓர் பெருமாள் கோயில் இருக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் மக்கள் மிகுதியாக வசிப்பது சிராங்கூன், செலிகி ரோடுகள். இவைகள் ஒன்றில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன் நரசிம்ம நாயுடு என்று ஒருவர் வசித்தார். அவர் ஓர் திருமால் உருவத்தைக் கண்டெடுத்தார். அம்மூர்த்திக்கு "நரசிம்மப் பெருமாள்" என்ற பெயரைச் சூட்டினார். அதற்கு ஓர் கோயிலும் கண்டார். அவ்வாலயத்தை தமிழ் மக்கள் ஆதரித்து வருகின்றனர். இப்போது இந்து எண்டௌமெண்ட் போர்ட்டார் கண்காணிப்பில் நிர்வாகம் நடைபெறுகிறது. இதே போல் அச்சா ரோடில் இந்தியர்களால் நிறுவப் பெற்ற ஓர் சிவன் கோயிலும்

இன்னும் பல இடங்களில் விநாயகர் கோயில், கண்ணன் கோயில் மற்றவைகளும் இருக்கின்றன. அவைகளும் எண்டௌமென்ட் போர்டாரின் பார்வையிலேயே இருக்கின்றது. இவ்வாலயங்கள் இந்து மக்களின் மதப் பற்றையும், தமிழ் மக்களின் சமய மேன்மைகளையும் காட்டுவதற் கறிகுறிகளாக விளங்குகின்றன.

மூவுலக வின்பம்

உலகங்கள் பல. அவைகளை மேலுலகம், நடுவுலகம், கீழுலகம் என மூன்ருக வகுத்துள்ளார்கள். இவைகளில் நாம் வாழ்வது நடுவுலகம். (மத்தியவுலகம்) ஆகும். இவ்வுலகில் தோன்றும் மக்களும் மூவுலக வின்பத்தைப் பெறுகின்றனர். இந்த மூன்றெனும் எண்ணுக்கும் இந்து மக்களுக்கும் பல தொடர்புண்டு. அதிலும் தமிழ் மக்களுக்கும் மூன்றுக்கும் அதிக சம்பந்தம். இவர்கள் தெய்வங்களை மும்மூர்த்திகளாகக் கொண்டவர்கள். முப்பொருளுண்மை (பதி, பசு, பாசம். கடவுள், உயிர், உலகம்) கண்டவர்கள். முத்தமிழை (இயல், இசை, நாடகம்.) அறிந்தவர்கள். அதனுல் மும்மலங் (ஆணவம், கன்மம், மாயை) களைவென்றவர்கள். மூந் நாடுகளில் (சேர, சோழ, பாண்டி நாடு) வாழ்ந்தவர்கள். வாழ்பவர்கள். இதே போல பல மூன்றுகளோடு தொடர்புள்ள நாம் இன்றும் மூன்று உலகங்களின் சம்பந்தத்தைப் பெறுகிறோம். முதலில் இப் பெரிய உலகத்தில் பிறக்கின்றோம். அடுத்து உலக விவகாரங்களில் ஈடுபட்டு மனதுக்கினிய வாழ்வு தரும் புது உலகத்தைப் (நாகரிகத்தை) பின்பற்றுகின்றோம். அவ் வாழ்வில் உண்டாகும் இன்பங்களுக்கேற்ப இறுதியில் ஆநந்த வுலகத்தை அடைகின்றோம்.

இவ்வின்பத்தை அகவின்பம், புறவின்பமெனப் பிரிக்கலாம். உலகில் தோன்றிய நாம் வினைகளின் பயனை அறியவேண்டும். உணர்ந்து நல்வினையைப் பற்றினுல் அகவின்பமாகிய ஆநந்தம் (சச்சிதானந்தத்தைப்) பெறலாம். இன்றேல் புறவின்பந்தைத்தான் பெறமுடியும். அகவின்பம் பெறப் புறவின்பமும் வேண்டியது தான். அகவின்பத்தைப் புறவின்பமில்லாது பெற சில அறிஞர்களாலேயே சாலும். மற்றவரால் இயலாது. அதற்காகவே உலகில் புறவின்பம் பெறப் பல வழிகளை அறிஞர்கள் கண்டார்கள். அவ்வாறு காணப்பெற்றவைகளில் சில சிங்கப்பூரில் உண்டு. அவைகளில் மூவுலக வின்பத்தைத் தரும் சாதனங்களும் இருக்கிறது. நேரிற் சென்ருல் காணலாம்.

(நேரிசை வெண்பா)


"கார்மேவு மாடங்கள் காட்சியளி சிங்கப்பூர்
நேர்காணு மக்களுக்கு நேர்மையாற்—பிரளிக்கு
மூவுலக வின்பமெலா முன்னின்று கூட்டிவைக்குந்
ஷோவென்னு மூவுலகுந் தோன்றி"

இங்கு மூன்று ஷோக்கள் (கண்காட்சிசாலைகள்) இருக்கின்றன. இவைகளின்பெயர் பெரியவுலகம் (Great World) (கிரேட் வொர்ல்டு) புது உலகம் (New World) (நியு வொர்ல்டு) ஆநந்தவுலகம் (Happy World) (ஹாப்பி வொர்ல்டு) களாகும். பெரிய உலகிற் பிறந்து, நாகரிக உலகில் வாழ்ந்து, ஆநந்த வுலகை அடையும் உயிர்களுக்குப் புறவின்பகளாக இம்மூன்று ஷோக்களும் அமைந்திருக்கின்றன. இவைகள் ஒவ்வொரு நாளும் இரவு 8 மணிக்கு திறந்து 12 மணிக்கு மூடப்பெறும். அந்த நேரத்தில் அங்கெரியும் மின்சார விளக்குகள் இரவைப் பகலாக்கும். பகலவன் ஒளியிலோ பல நிறங்கள் தோன்றும். அந்நிறங்களை ஷோவில் எரியும் பல கலர் விளக்குகள் காட்டும். அவ்வொளி நிறைந்த ஷோக்களில் ஐம்புலன்களுக்கும் இன்பந்தரும் காட்சிகள் பலவிருக்கின்றன. அவ்வின்பம் இக்கால வுலகுக்கு வேண்டுவதவசியமே. இதை யாரும் எற்பர். அதில் அளவு கடப்பதைத்தான் எவரும் தடுப்பர். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது பழமொழி.

இவ்வுலக வாழ்வில் இன்ப துன்பம் இரண்டு முண்டு. மக்களிற் பெரும் பான்மையோர் வியாபாரம், தொழிலில் உள்ளவர்கள். இவர்கள் பகல் முழுதும் உழைப்பார்கள். அவ்வுழைப்புக்கேற்ற பலனைப்பெற்றால் ஆநந்தம் பெறுவார்கள். இன்றேல் அதற்கு மாறாகக் கவலையுறுவார்கள். அவர்களின் கவலை மாற ஷோவுக்குச் சென்றால் போதும். அவலத்தை மாற்றி ஆநந்தத்தைப் பெறலாம். இன்பத்தை அடைந்தவர் சென்றால் மேற்கொண்டு ஆநந்தத்தைப் பெறுவர். எதனால்? அச்ஷோக்களிற் காணும் காட்சிகளால். அக்காட்சிகள் பல. அவைகளில் சிலது இன்பத்தைத்தரும். சிலது துன்பத்தைத்தரும். உலகம் பலவிதம். நல்லார் கூட்டுறவு நலனைத்தரும். தீயோர் கூட்டுறவு அதன் பலனைத்தரும். அதே போல ஷோவுலகில் நடைபெறும் பல சாதியாரின் கூத்துகள், ஆட்டங்கள், பாடல்கள், விளையாட்டுகள் இன்பத்தைத் தருவனவாகும். அவைகளுக்கு அண்மையில் அமைக்கப்பெற்றுள்ள சூதாக்கடைகள், நாரியரோடு ஆடவர்கைகோர்த்து, தோளுராய்ந்து ஆடும் நடனசாலை

(17)

காப்டன் பிரான்ஸிஸ் லைட் கல்லறை.



Tomb of Captain Francis Light.

கள், பெற்றவளும் வெறுப்புற ஒருவரின் உணர்வை மாற்றிப் பித்தேறச் செய்யும் பீர், பிராந்திக்கடைகள், பலருக்குத் துன்பத்தைத் தருவனவாகும். இவ்வின்ப துன்பம் இரண்டையும் தரும் ஷோக்களில் உள்ளே நுழைவதற்கு 10 செண்டுதான். அதோடு அங்கு நடைபெறும் வேடிக்கைகளை அமர்ந்து பார்க்கவும், களைப்பேற்பட்டால் "காபி" யோ "கலரோ" பருகுவதற்கும் உரிய சில தொகையோடு சென்முல், காட்சி ஒன்றையே கண்டால் மூவுலக வின்பத்தையும் புறவின்பமாகப் பெறலாம். இன்றேல்! கிடைப்பது துன்பந்தான். அது மக்களின் அறிவு, கூட்டுறவைப் பொருத்தது. அவரவர்கள் உள்ளப்படி, விலைவிட்டபடி புறவின்பங்களை மூவுலக வாயிலாக மக்களுக்கு உதவும் பெருமை சிங்கப்பூருக்கே உண்டு.

இச்ஷோவுலகம் மூன்றோடு பல சினிமா, டிராமா தியேட்டர்கள். (கூத்துமேடைகள்) இருக்கின்றன. "கேபிடல்," "பாவிலியன்," "நியூ அல்ஹாம்ப்ரா," "மால்பரோ," "ஜுபிலிஹால்," "ராயல் தியேட்டர்," "எம்பைர்," "அலெக்ஸாண்ட்ரா ஹால்," "பாலஸ்கே," "பால்ஸ்," "கேரிக், ரிக்ஸ்," "ராக்ஸி," எனும் 13 தியேட்டர்களில் கேபிடல் சிறந்தவையாகும். "அலெக்ஸாண்ட்ரா ஹால்" செ. சித. செல்லப்ப செட்டியாருக்கு சொந்தமானது. இம்மேடைகளில் தினப்படி சினிமா, கூத்துகள் நடந்துகொண்டே இருக்கின்றன.

துறைமுகத்தின் தோற்றம்


வியாபாரம் பெருக வேண்டுமானல் துறைமுகத்தின் துணை வேண்டும். இந்தியாவில் தங்கள் வாணிபத்தைப் பெருக்க வந்தவர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியார். அவர்கள் தங்கள் வியாபாரத்தை மேலும் பெருக்க விருப்பமுற்றார்கள். இந்தியாவுக்கும், சீனத்துக்கும் இடையில் ஓர் துறைமுகம் இருந்தால் நலமென எண்ணினர்கள். அவ்வெண்ணத்தை 1786ம் ஆண்டில் நிறைவேற்றினர் "காப்டன் பிரான்ஸிஸ் லைட்." அவர் கண்ட துறைமுகம் பினங்கு. அதற்கு மேலும் ஓர் துறைமுகம் வேண்டுமென எண்ணினர்கள். அதை 1819ம் ஆண்டில் நிறைவேற்றினர் "ஸர் ஸ்டாம் போர்ட் ராபின்ஸ்." அவர்கண்ட துறைமுகமே இன்று உலகத்தில் சிறந்தவைகளில் ஒன்ருக விருக்கிறது. அத்துறைமுகமே சிங்கப்பூரின் செல்வங்களிற் சிறந்தது. மேற்கே இருந்து கிழ்ப்பகுதியை நாடிச்செல்லும் கப்பல்கள் சிங்கப்பூர் துறைமுகம் பிடித்துத்தான் செல்லவேண்டும்.

இத்துறைமுகம் "ஹார்பர் போர்டாரால்" கவனிக்கப் பெறுகிறது. இதில் 12,774 அடிகளுக்கு (சுமார் $2\frac{1}{2}$ மைல் நீளம்) பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்பாலங்களில் சராசரி நாள் ஒன்றுக்கு 14 கப்பல்கள் வந்து பிடிக்கப்படுகின்றன. இவைகளில் வரும் பண்டங்களை இறக்கிவைப்பதற்கும், ஏற்றக்கூடிய சாமான்களைச் சேர்த்து வைப்பதற்கும் 65 பண்டக சாலைகள் (godowns) கட்டப்பட்டிருக்கின்றன. பழுது நேர்ந்த மரக் கலங்களைச் செப்பனிட பல டோக்குகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இத்துறைமுகத்தில் பாலங்களிற் பிடிக்கும் கப்பல்கள் சில. கடலில் நின்றபடியே படகுகளில் பண்டங்களை இறக்கி ஏற்றும் கப்பல்கள் நாள் ஒன்றுக்குப் பல. அவைகள் எண்ணிக்கையில் சேரவில்லை. இக் கப்பல்கள் நிற்கும் கடலை இரவில் நோக்கினால் எண்ண முடியாத விளக்குகளைக் காணலாம். இவ்வாறு பல கப்பல்கள் வந்து பண்டங்களை இறக்குவதாலும், ஏற்றுவதாலும் ஏழை மக்கள் பலருக்குப் பிழைப்புண்டு. இதற்கென படகு ஓட்டுபவர் பலர். லாரி ஓட்டுபவர் சிலர். கைவண்டி இழுப்போர் மிகுதி. ஏற்றி இறக்க ஏற்பட்ட கூலிகளுக்குக் கணக்கில்லை. இத்தனை பேருக்குப் பிழைப்புத் தரும் துறைமுகத்தின்பெருமைபோற்றுதற்குரியதே!

பறவைக் கப்பலும் பந்தயக் குதிரையும்

உலகம் வரவரமேலேறுகிறது. அதில் வாழும் மக்கள் அதற்கு மேலேற வேண்டியதிருக்கிறது. அவ்வேற்றத்துக்கு உறுதுணை தருபவைகள் ஆகாய விமானங்கள். அப்பறவைக் கப்பல்கள் வந்திறங்கவும் தங்கவும் ஓர் கட்டிடம் சிங்கப்பூர் "காலாங்" "குரோவ்" ரோடுகளில் அமைக்கப் பெற்றுளது. பறவைக் கப்பலுக்கென கட்டப்பட்ட அக்கட்டிடமும் ஓர் கப்பலாகவே இருக்கிறது. கடற் கரையோரம்! பரந்த திடல்! பல மைல் நீளம் சிமிண்ட் போடப்பட்ட தரை! எங்கும் கண்ணாடியால் அமைக்கப் பெற்ற கதவுகள்! கட்டிடத்திற்குள் ரப்பர் தளம் போடப்பட்ட தரை! அதில் ஓர் ஹோட்டல்! அக்கட்டிடத்தின் இருபக்கத்திலும் எவ்வளவு பெரிய விமானங்களையும் தனக்குள் அடக்கிக்கொள்ளும் இரு ஸ்டால்கள்! இவைகளுக்குப் பக்கத்திற் கண்ணுக் கெட்டிய வரை பசும் புற்றரைகள்! இவ்வளவையும் ஒரே காலத்தில் பார்க்கும் போது கண்ணுக்கு நல்விருந்தையும், கருத்துக்குப் பெரு மகிழ்வையும் தருகின்றன. இத்திடலில் இம்பீரியல் விமானம் வந்திறங்கும் போதும், ஏறும்போதும் ஒரு தனி யழகைத் தரும். இங்கு பல விமானங்கள் இருக்கின்றன.

நகரமக்கள் பல்லோர்கள் நற்கல்வி பயில்வதற்கு
நகரத்தார் சிங்கையில் நாட்டிய பள்ளிக்கூடம்.



இப்பறவைக் கப்பல்கள் வானத்தில் பறப்பன. அதனாற்றான் இவைகளுக்கு வான ஊர்தி என்ற பெயர் கொடுக்கப் பெற்றது. இவைகளைப்போல தரையில் பறப்பவை பந்தயக் குதிரைகள். அக் குதிரைகளை ஓட்டிப் பெயர் பெறுவதில் அநேகருக்கு விருப்பம். இதில் அரசர்கள் எல்லாம் கலப்பார்கள். அதிலும் இந்நாட்டில் மிகுதி. அதற்காகப் பல இடங்களில் பந்தயம் நடைபெறும். எல்லா நகரங்களுக்கும் தலைநகர் சிங்கப்பூர். அதேபோல இதிலும் தலைமை பெற்று விளங்குகிறது. இதற்கென முன் சிராங்கூன் ரோடுக் கண்மையிலிருந்த திடலை "புக்கெட் திமா" வுக்கு மாற்றி விட்டார்கள். இத்திடல் இயற்கையிலேயே எழில் நிறைந்தது. அதோடு பேரழகு தரும் செயற்கைக் கட்டடம் ஒன்றுமுண்டு. அதன் அமைப்பு அற்புதம் நிறைந்தது. அதன் மாடியிலிருப்போர் எப்பக்கத்திலுமோடும் குதிரைகளையும் பார்க்கலாம். அதற்கேற்ப இடைஇடையே தூண்கள் நிறுத்தாது ஒரு சில பிடிப்போடு காங்க்ரெட்டால் மேங்கூரை போடப்பட்டிருக்கிறது. இதை அமைத்த இன்சினீரின் திறம் பாராட்டற் குரியது. பந்தயத்தன்று இங்கு கூடும் கூட்டம் ஓர் கடலைப் போன்றிருக்கும். பந்தயம் பார்க்க வரும் மக்கள் ஏறிவரும் கார்களைப் பந்தி பந்தியாய் நிறுத்துவார் கள். அவைகள் எண்ணிக்கையி லடங்கா. இத்தகைய,

(நேரிசை வெண்பா)

"வான விமானங்கள் வந்திறங்கு நற்றிடலும்
ஊனமிலா மாவினங்க ளோடுதற்—கானதொரு
பேரிடமுந் சிங்கப்பூர் பெற்றதனு லிவ்வுலகில்
ஓரூரும் நேரிலையென் றோது."

பறவைக்கப்பல்கள் வந்திரங்க ஓர் பரந்ததிடலையும், பந்தயக் குதிரைகள் ஓடுகின்ற பெருத்த திடலையும் தன்னிடத்தே கொண் டிருக்கும்சிங்கப்பூருக்குத் தோதாக வேறு எவ்வூரும் இவ்வுலகில் இல்லை என்றே கூறலாம்.

நகரமண்டபமும் நகரத்தார் கலாசாலையும்

ஒவ்வொரு நகரங்களிலும் வாழும் மக்கள் ஒருங்கே கூடுவதற் கேற்றது நகர மண்டபம். இம்மண்டபம் இருந்தாற்றான் நகரத்துக் கழகு. அதிலும் எல்லோருக்கும் உபயோகப்படக்கூடிய முறையில், ஏற்ற இடத்தில் இருப்பது மிகப்பொருத்தம். இவைகளிற் சிறந்து

விளங்குவது சிங்கப்பூர் நகர மண்டபம். இதற்கு "விக்டோரியா மிமோரியல் ஹால்" என்று பெயர். அதன் பெயருக்கேற்ப மண்டபமும் மகாராணியாரைப்போலவே இருக்கிறது. மகாராணியாரோ தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவர். தன் குடி மக்களை தனது பிள்ளைகளுக்கு மேலாக எண்ணியவர். புன் சிரிப்பும் கருணையும் தோற்றும் வதனமும் திடமான உள்ளமும் பெற்றவர். (உருவப்படம் இந்நூலில் சேர்க்கப்பட்டுளது) இத்தகைய குணம் பெற்றவராகவே, தன்னிடந்து நாடி வந்தோர் அனைவோரையும் வரவேற்று நல்லுரை கூறினார். அவர்களுக்கு இருக்க இடங்கொடுத்தார். பெருத்த உதவிகளையும் புரிந்தார். இவைகளைச் சரித்திரங்களிற் காண்கிறோம். அதே போல இந்நகர மண்டபமும் யார் வரினும் ஏற்று இருக்க இடந்தருகிறது. அம்மண்டபத்தின் எழிலும், அவை அமைந்திருக்கும் இடமும், அதன் முன்னால் நிறுத்தப்பெற்றிருக்கும் (அந்நகரைக் கண்டதற்காக) ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸின் உருவச்சிலையும் சிங்கப்பூருக்கே ஓர் தனி அழகைத் தந்து கொண்டிருக்கின்றன.

இச்சிங்கப்பூரில் வாழும் நகரத்தார்கள் இதற்கு முன் கோயில் விழாக்களையே சிறப்பாக நடத்தினார்கள். இப்போது காலமாறுதலுக்கேற்ப, உலக முன்னேற்றத்துக்கொப்ப ஓர் கலாசாலையும் நடத்த முன் வந்துள்ளார்கள். இக்கலாசாலையை ஓர் உயர்தரப் பள்ளியாக நடத்தவேண்டுமெனப் பலர் விரும்பினர். அதற்காக முயற்சி எடுத்தவர் அநேகர். அவர்களில் ஒருவர் திரு. எ. செ. செல்லப்ப செட்டியார். இவர் தேவகோட்டையில் விசுவாவசு ௵ பங்குனி ௴ 19௳ (1-4-1906) யில் பிறந்தார். 1920ல் சிங்கப்பூருக்கு வந்தார். ஆங்கிலோசைனிஸ் ஸ்கூலில் ஆங்கிலம் பயின்றார். பிறகு சில செட்டியார்கள் கடைக்குப் பொறுப்பாளியாக வந்தார். அவைகளில் ஒன்று முத்து. கரு. அரு. கரு. கடை. அக்கடையிலிருந்த போது செட்டியார்கள் வர்த்தக சங்கக் காரியதரிசியாகவுமிருந்தார். இத்துடன் பள்ளிக்கூடத்துக்குப் பலர் முயற்சித்தது போலஇவரும் முயற்சித்தார். இவர்கள் எல்லாம் எண்ணியபடி அப்பள்ளிக்கூடம் காணப்பெற்றிருந்தால் இன்று ஓர் பெரிய கலாசாலையாக விளங்கும். அவை ஏதோ சில காரணங்களால் தடைப்பட்டுவிட்டது. அப்பால் இப்போது அச்சா ரோடிலிருக்கும் பள்ளிக்கூடத்தை ஒருவரிடமிருந்து நகரத்தார் பொருட்செலவில் வாங்கி தங்கள் ஆதரவில் நடத்துகிறார்கள். இவர்கள் எண்ணியவாறு ஓர் பெருத்த கலாசாலை விரைவிற்காண இறைவனருள் புரிவானாக.

சிங்கப்பூரைப்பெற்ற ஸர். ஸ்டாம் போர்ட் ராபின்ஸ்.



Sir. Stamford Raffles.

கடற்படையின் பாதுகாப்பு

இந்நாட்டை ஆளுவது ஆங்கில வரசு. இவ்வரசியலார் தங்கள் குடிகளைக்காக்கவும் மாற்றாரை வெல்லவும் ஏராளமான படைகளை வைத்திருக்கிறார்கள். அவைகளில் ஒருபகுதிசிங்கப்பூரில்இருக்கிறது. அவைகள் தரைப்பாதுகாப்புக்குரியவை. அதற்குமேல் கடற்பாது காப்புக்கும் வழிதேட எண்ணினார்கள். சிங்கப்பூரிலிருந்து வடக்கே 14½ மைலில் இதற்காக ஓர் துறைமுகம் கண்டார்கள். இதற்கு "நேவல் பேஸ்" என்று பெயர். இத்துறைமுகத்துக்கு யாரும் எளிதிற் செல்ல இயலாது. அங்கமைக்கப்பெற்றிருக்கும் பாலத்தில் ஒரே காலத்தில் மூன்று யுத்தக் கப்பல்கள் பிடிக்கலாம். அத்துடன் ஓர் மிதப்புப் பாலமும் இருக்கிறது. அப்பாலத்தைக் கடலுக்குள் எங்கு வேண்டுமானாலும் இழுத்துச் செல்லலாம். நடுக்கடலில் பாலத்தை நிறுத்தலாம். அதன் மேல் கப்பல்களை ஏற்றிப் பழுது பார்க்கலாம். அப்பாலத்துக்குள் கடல் நீரோடு கப்பலை இழுக்கவும் வெளியேற்றவும் வழிகளிருக்கிறது. அவ்வழியாக கப்பலை மறுபடியும் கடலில் மிதக்கவிடலாம். அப்பாலத்தில் இவைகளுக்கேற்பப் பல இயந்திரங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இத்துறைமுகமுள்ள "நேவல் பேஸ்"லில் கூலிவேலை செய்பவர்கள் தமிழ் மக்களே. இதில் சுமார் 2,000 தமிழ் மக்கள் பிழைக்கிறார்கள். தமிழ் மக்களிடத்தில் கவர்ன்மெண்டாருக்கு நம்பிக்கை மிகுதி. அவர்களும் அந்நம்பிக்கைக்கு துரோகமாக நடக்கமாட்டார்கள். தமிழ் மக்கள் எப்பொழுதுமே இரக்க சிந்தையுடையவர்கள். அறமே வெல்லும் என்ற எண்ணங்கொண்டவர்கள். கையிலிருக்கும் பொருளனைத்தையும் தருமத்துக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைப்பவர்கள். இதற்குச் சான்றாக சிங்கப்பூரில் சின்னாள் முன் வாழ்ந்த திரு. சிதம்பரம்பிள்ளையின் வாழ்க்கையிற் சில குறிப்புகள் காணலாம். இவர் தஞ்சாவூர் ஜில்லா கிளையூரில் 1860ஆ மார்ச்சுமீ 18உ பிறந்தவர். வேளாளர் குலம். தந்தையார் முத்துராமலிங்கம் பிள்ளை. தாயார் அம்மணி ஆச்சி. இருவருக்கும் இரண்டாவது புதல்வராகத் தோன்றிய சிதம்பரம்பிள்ளை, தமிழ், வடமொழி இரண்டையும் இளமையில் கற்றார். 1876ம் ஆண்டில் சிங்கப்பூர் வந்தார். ராபிள்ஸ் கலாசாலையில் ஆங்கிலம் பயின்றார். தொழிலில் ஈடுபட்டார். தான் செய்யும் தொழிலில் வரும் ஊதியத்தை தருமமே செய்வது என்ற திடத்தைக் கொண்டார். அதனால் சிங்கப்பூர் தெண்டாயுதபாணிக்கு "கலிக்கத் துறை" என்ற ஓர் ஆபரணம் செய்தார். பினுங்கு தெண்டாயுத

பாணிக்கு தைப் பூசத்தின் மறுநாள் நடைபெறும் சந்தனபிஷேகத் துக்கு நிதி கொடுத்தார். ஈப்போவில் கஞ்சித் தொட்டிக்காக ஓர் வீட்டை ஒதுக்கி வைத்தார். இதேபோல தாய் நாட்டில் பல தலங் களிலும் தர்மங்கள் செய்துள்ளார். இவர் ஆயுளுடன் இருந்திருந் தால் சிங்கப்பூரில் இன்னும் பல தர்மங்களைச் செய்திருப்பார். இவரைப் பின்பற்றுவோர் தமிழ் மக்களில் பல்லோர். தங்களிடம் பொருளிருந்தால் அறப்பணி நாடுவார்கள். இல்லாவிடினும் இன்னு மொருவருக்கு துரோகம் செய்து பொருள் தேட எண்ணார்கள். அதனாற்றான் இந்நாட்டில் தமிழ் மக்களிடம் கவர்ன்மெண்டாருக்கு நம்பிக்கை மிகுதி. இந்நேவல்பேஸைப் போன்ற பல முக்கிய மான இடங்களில் எல்லாம் தமிழ்க் கூலிகளே வேலை செய்கிறார்கள். இத்தகைய "நேவல் பேஸ்" அமைத்துப் பல கருவிகளையும் அதிற் கொண்டுவந்து அரசாங்கத்தார் சேர்த்துவைத்திருப்பதால் இந் நாட்டுக்கு கடற்படைப் பாதுகாப்பு மிகுதியாக இருக்கிறது.

பரவையைத் தூர்த்த பாலம்

சிங்கப்பூர் ஓர் தனித் தீவு. அவ்வாறழைக்கச் செய்தது, அத் தீவுக்கும் ஜோஹோர்பாருக்கும் இடையிலுள்ள சுமார் $\frac{3}{4}$ மைல் அகல நீர்ப் பரப்பு. அவை இன்றுமுண்டு. இருப்பினும் சிங்கப் பூரும் ஜோஹோர் பாரும் இணைக்கப்பட்டுவிட்டது. எதனால்? பரவையைத் தூர்த்துக் கட்டியுள்ள பாலத்தால். அன்று இராமர் தன் படைகளுடன் இலங்கையை நாடிச் சென்றார். செல்லும் வழி யில் ஆழி குறுக்கிட்டது. அக்கடலைக் கடக்கப் பல மரக்கலங்கள் வேண்டும். அவைகளோ எதிரியினிடமிருக்கின்றன. ஆகவே கடலைத் தூர்க்க எண்ணினார். தன் தோழன் சுக்ரீவனிடம் சொன் னார். அவன் தன் படைத் தலைவர்களில் நளனை அழைத்தான்.

"வந்தனன் வானரத் தச்சன் மன்னநின்
சிந்தனை யென்னெனச் செறிதிரைக் கடல்
பந்தனை செய்குதல் பணிநமக் கென
நிந்தனை யிலாதவன் செய்யநேர்ந் தனன்"

"காரியங் கடலினை யடைத்துக் கட்டலே
சூரியன் காதலே சொல்லி யென்பல
மேருவு மனுவுமோர் வேறுறு வகை
ஏருற வியற்றுவென் கொணர்தி யென்றனன்"

(இராமாயணம். சேதுபந்தனம் 3—4.)

என்ற கம்பச் சித்திரப்படி வானரத் தச்சனாகிய நளன் ஓடிவந்தான். தனது மன்னனைப் பணிந்தான். எதற்காக அழைத்தீர்? உமது கருத்தென்னவெனக்கேட்டான். சுக்ரீவன், நளனைப்பார்த்து நம தரசர் இவ்வலை ஒலிக்கும் கடலை அடைக்கும்படி கட்டளையிட்டுள்ளார். அடைக்கவியலுமா வென்றான். இதற்கா யோசனை? எத்தனை யோசனை தூரமாக இருந்தாலும் என்னால் அணைகட்ட முடியும். அதற்கு மலைகளைக்கொண்டுவர நம்மிடம் ஏராளமான படைகள் இருக்கிறது. அவைகள் கொண்டுவரும் மலைகள் மேருவைப்போன்று பெரிதாக இருந்தாலும், அணுவைப்போன்று சிறிதாக இருந்தாலும் இசைபொருத்திக்கட்டுவேன். அழகுபெற முடிப்பேன். ஆலோசனை வேண்டாம் எனக்கூறி மலைகளைக்கொண்டுவரத் தன் படைகளை ஏவினான் நளன். அவைகள் கொண்டுவந்த மலைகளை வாங்கி அணையை அமைத்தான்.

"அய்யன் வேண்டினது விதுவா மன்றே
வெய்ய சியமும் யாளியும் வேங்கையும்
மொய்கொள் குன்றின் முதலின மொய்த்தலால்
நெய்தல் வேலை குறிஞ்சி நிகர்த்ததால்"
(இராமாயணம். சேதுபந்தனம் 27)

அதனால், நீராளை, மீன்கள் வாழும் இடமாய் இருந்த நெய்தற்றிணையாகிய கடல், சிங்கம், யாளி, வேங்கைப்புலி மற்ற குறிஞ்சி நிலத்துக்குரிய விலங்கினங்கள் வாழும் குறிஞ்சித்திணையாகிய மலைபோல மாறிற்று. அவ்வாறு பெருத்த மலைகளாற் கட்டப்பெற்ற அணைவழி சென்றே இராமர் இலங்கையை வென்றார். அவ்வணையின் ஓர்பகுதியிற்றான் இன்று பாம்பன் பாலம் போடப்பட்டிருக்கிறது. S. I. R. இரயில்கள் ஓடுகின்றன.

அதேபோல சிங்கப்பூருக்கு செல்வோர்களுக்கு ஓர் தடையாக இருந்தது ஜோஹோர் நீர்ப்பரப்பு. அப்பரப்பும், தீவும், ஊரும் ஆங்கிலவரசுக்கு உட்பட்டது. அதனால் அப்பரப்பைக் கடக்க மரக்கல வசதிகள் இருந்தன. இருந்தாலும் எண்ணியவுடனே செல்ல இயலாதிருந்தது. அதை நீந்த எண்ணினார்கள் ஆங்கிலேயர்கள். ஜோஹோர் சுல்தானோடு கலந்தார்கள். அவரும் ஏற்றார். பரவையைத் தூர்க்க ஆரம்பித்தார்கள். பெரிய இன்சினீர்களின் ஆலோசனைப்படி பெருத்த மலைகளையும் கற்களையும் போட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் ஓர் அணையாக்கினார்கள். அவ்வணையின் நீளம் 3465 அடி. அகலம் 45 அடி. இதன்மேல் இரண்டு வழிக

ளுண்டு. ஒன்று இரயில் வழி. ஒன்று கார், வண்டிகள் செல்லும் வழி. இவ்வணையால் இரு பக்கங்களிலும் செல்லும் மரக்கலங்களுக்கு தடைபேற்படா வண்ணம் ஓர் தூக்குப் பாலமும் அமைத்துள்ளார்கள். அதன் நீளம் 170 அடி. அகலம் 32 அடி. இப்பாலம் நாளொன்றுக்கு ஒரு முறை தூக்கப்பெறும். அதன் வழியாகப் பரவையின் இருபுறமும் பல மரக்கலங்கள் போய் வரும். அன்று ராமர் கட்டிய திருப்புல்லாணி அணை நெய்தற்றிணையைக் குறிஞ்சித் திணையாக்கியது. அதைக்கம்பனின் கட்டென்பர் சிலர். இன்று ஆங்கிலேய அரசால் கட்டப்பெற்ற ஜோஹோர் அணை நெய்தற்றிணையைக் குறிஞ்சித் திணையாக்கி விளங்குகிறது. இதைக் கண்ணாற காண்கின்றோம். இதற்கென்ன கூறுவார்களோ தெரியவில்லை. அன்று கட்டிய அவ்வணை அயோத்தி மன்னர் இலங்கையை அடையச் சாதகமாய் அமைந்தது. இன்று கட்டப்பட்ட இவ்வணை இந்நாட்டிலுள்ள மக்கள் எறிய இரயிலுடனும், காருடனும், வண்டியுடனும், கால் நடையிலும் சிங்கப்பூரைச் சேர எற்ற சாதகமாய் இருக்கிறது. இவ்வணை கட்டியதால் கோலாலம்பூரிலிருந்து புறப்படும் இரயில் நேராகச் சிங்கப்பூருக்குச் செல்ல நேர்ந்தது. அதனால் சிங்கப்பூர் இரயில்வே நிலையமும் மிகப் பெரிதாக கட்டப்பட்டது. "தஞ்சோங் பாக்கார்" துறைமுகத்துக்கு அண்மையில் ஓங்கி நிற்கும் ஓர் கட்டிடம் இரயில்வே நிலையந்தான். இந்நிலையத்தின் தரையில் பல இடங்களில் ரப்பர் போடப் பெற்றிருக்கின்றன. அதில் சேர்க்கப்பெற்றுள்ள கலர்கள் மக்களின் கண்ணைக் கவர்கின்றன. இத்தனை சிறப்புக்கும் காரணம் இவ்வணைதான். இவ்வணையில் எற்படும் பெருமையிற் பெரும் பகுதி ஜோஹோர் சுல்தானுக்குண்டு. அவரின் அருமுயற்சியே இவ்வணையாக நிற்கிறதென்று கூடக் கூறலாம்.

இயற்கையின் எழிலும் செயற்கையின் திறனும்

இயற்கையாகிய நீர்ப்பரப்பைச் செயற்கையால் அடைத்தழகு செய்தார்கள் ஆங்கிலேயர்கள். இதேபோல இன்னும்பலவிடங்களில் இயற்கையோடு செயற்கையும் சேர்ந்து வனப்பைத்தருவது சிங்கப்பூர். அவைகளில் "முனிசிபல் பூந்தோட்டம்" ஒன்று. இத்தோட்டத்தில் பல சிறிய குன்றுகள் இருக்கின்றன. அக்குன்றுகளில். மரம், செடி, கொடிகள் வளர்ந்து மக்கள் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. இதற்குமேல் நீர்நிலையத் தேக்கங்கள். இத்

தேக்கங்களே நகரைக் காப்பாற்றுகிறது. இதற்காக கவர்ண்மெண்டார் கொண்ட சிரத்தை மிகுதி. இதோடு இயற்கை வளத்தை அதிகமாகக்கொண்டுள்ள இடம் "தஞ்சோங் காத்தாங்." மாலைப் போதில் அங்கு சென்றால் மக்களுக்கு நீராட்டும் தென்னஞ் சோலைகளில் அமரலாம். அலைகடற் றென்றலைப் பெறலாம். அண்மையில் செயற்கையாலாக்கிய பல அரண்மனை போன்ற பங்களாக்களைப் பார்க்கலாம். அவைகளில் "காதர் சுல்தானால்" கடலுக்குள் கட்டப்பட்ட "காரைக்கால் மாஹாலே"க் (பங்களா) காணலாம். இதேபோல இயற்கையாலும் செயற்கையாலும் மக்களுக்கு இன்பத்தைத்தருவது சிங்கப்பூர். இச்சிங்கப்பூரின் எழிலையும், அரசியற் றிறனையும், ஒழுக்கம், உள்நாட்டுச்செய்தி, அயல்நாட்டின் நன்மைகளை மக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க இங்கு பல பத்திரிகைகள் இருக்கின்றன. இவைகளில் "ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்" "சிங்கப்பூர் ப்ரீபிரஸ்" "மலாயா டிரிபியூன்" "மார்னிங் டிரிபியூன்" என்ற ஆங்கிலப்பத்திரிகைகள் தினசரிகளாகும். "சண்டே டைம்ஸ்" "சண்டே டிரிபியூன்" என்பவைகள் ஆங்கில வாரப்பத்திரிகைகளாகும். இவைகளோடு "தமிழ் முரசு" என்ற தினசரிப் பத்திரிகையும் "முன்னேற்றம்" என்ற வாரம் மும்முறை பத்திரிகையும் தமிழ்ப் பத்திரிகைகளாகும். இப்பத்திரிகைகளால் மக்களுக்குப் பல நலனுண்டு. இப்பத்திரிகைகளின் உதவியையும் பலவின்பங்களையும் மக்கள் பெறக்காரணமாய் இருப்பது ஆங்கிலவரசு. அவ்வரசியலும் அதற்கு இந்நாட்டின் தலை நகராக விளங்கும் சிங்கப்பூர் செல்வங்களும் என்றென்றும் ஓங்கி வளர்ந்து, மக்கள் இன்னும்பல நலன்களையும் பெற இறைவன் அருள்புரிவாராக.

(1) ஆ. பினங்கின் பெருநிதி

நிதி வளர வேண்டுமாயின் நீருயர வேண்டும். "நீருயர வரப்புயரும், வரப்புயர நெல்லுயரும், நெல்லுயர நிதியுயரும்" என்பது முதுமொழி. நீரின்றேல் உலகமே இல்லை. நீரை ஆற்றுநீர், ஊற்றுநீர், மேநீர் என மூன்றாகக் கூறுவதுண்டு. அம்மூன்நீரும் மழையிலிருந்து உண்டாவதே. அதனாற்றான்,

> "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
> வானம் வழங்கா தெனின்"

என்றார் பொய்யா மொழியார். அவர் கூறியதுபோல மழை பெய்யாவிட்டால் உலகில் தானங்கள் எங்கே! தவங்கள் எங்கே!

ஆலயங்கள் எங்கே! ஆண்டவனின் பூசைகள் எங்கே! மக்களின் வாழ்வுகள் எங்கே! மறுவுலக இன்பங்கள் எங்கே! இயற்கையின் எழில்கள் எங்கே! செயற்கையின் தோற்றங்கள் எங்கே! ஒன்றுமே இல்லை. இதை உணர்ந்தே வள்ளுவர் தன் திருக்குறளில் கடவுளுக்கு அடுத்து "வான்" சிறப்புக் கூறினர். அவ்வான் தரு நீரை எந்நேரமும் தான்தரும் ஓர் மலையைப் பெரிய நிதியாகப் பெற்றிருப்பது பினங்கு.

தமிழ்த் தாய் வணக்கம்

[நேரிசை வெண்பா]

"வெற்பூற்று நீரருவி மேவி நகரெங்கும்
பெற்றிதரு மேரார் பினங்கி—னற்புதத்தைக்
கண்டிடவே மக்களுக்குக் காவியத்தி லோவியமீ
தண்டமிழே முன்னின்று சாற்று."

இப்பெருநிதி பெற்ற பினங்கின் ஒவியத்தை தமிழ்த்தாயின் துணைகொண்டு காண்போம்.

பினங்கைப் பெற்றவர் பிரான்ஸிஸ் லைட்

பெரும் பேற்றைத்தரும் இப்பினங்கு ஓர் தனித்தீவாகும். இத்தீவின் சுற்றளவு 107 சதுர மைல்கள். நீளம் 15½மைல். அகலம் 10½ மைல்களாகும். இத்தீவு முன்பு கெட்டா சுல்தானுக்குச் சொந்தமாக இருந்தது. இதை அச்சுல்தானிடம் பெற்றவர் 'காப்டன் பிரான்ஸிஸ் லைட். இவர் இங்கிலாந்தில் ஸ்போல்க் மாகாணம், உட்பிரிட்ஜ் பகுதி, டாலிங்கூ என்னும் கிராமத்தில் 1740ம் ஆண்டு பிறந்தார். ஆங்கிலக் கவிஞர் மில்டனின் உறவினரான உவில்லியம் நிக்ஸ் என்பவர் இவரை சுவீகாரம் செய்து கொண்டார். அவர் புதல்வனுக வளர்க்க இவர் சிறிதுகாலம் கல்வி பயின்று கடற்படையைச் சேர்ந்தார். 1761ல் "எச். எம். எஸ். ஆர் கோனட்" என்ற கப்பலில் வேலையில் அமர்ந்தார். 4 ஆண்டுகளில் இவ்வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டார். பிறகு "க்ளேவ்" என்ற கப்பலில் "கல்கத்தா" சென்றார். அங்கு, சியம், மலாயா, முதலிய நாடுகளுக்குச் சென்று வியாபாரம் செய்து வரும் ஓர் கப்பலின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1763ல் கெட்டாவில் தங்கி ஓர்

ஆலயை நிறுவினர். ஸ்பெயின் பிரதிநிதியாகவும் வேலைபார்த்தார். அப்போது இந்நாட்டு மக்களுடனும் சியநாட்டினருடனும் நெருங்கிப் பழகினர். சின்னாட்களில் "டொங்கோ" என்ற இடத்தை தன் தலைமை நிலையமாகக் கொண்டார். அதனால் அங்குள்ளவர்கள் இவரைக் "காப்டன் லைட்" என்று அழைத்தனர்.

இந்நாட்களில் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சொந்தமாக சுமத்திராவில் "பென்கூலன்" துறைமுகம் ஒன்றுதான் இருந்தது. அதற்கும் சமீபத்தில் ஓர் துறைமுகம் இருந்தால் நலமென எண்ணினர்கள். அதை அறிந்தார் "காப்டன் பிரான்ஸிஸ்லைட்" 1771ம் ஆண்டில் பினங்குத்திவை ஓர் துறைமுகம் ஆக்கலாம் என இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக விருந்த "லார்ட் வாரன் ஹேஸ்டிங்ஸி" ற்கு எழுதினர். அதை அவர் ஏற்று இவரை கல்கத்தாவுக்கு அழைத்தார். இவர் அப்போது செல்ல இயலவில்லை. பிறகு 1780ல் சென்றார். அப்போது கல்கத்தாவில் இராஜப்பிரதிநிதியாக "ஸர். ஜான்மக் பிர்ஸன்" இருந்தார். அவரிடம் பினங்குத்திவு கெட்டா சுல்தானுக்குச் சொந்தமானது. அவருக்கு ஆண்டொன்றுக்கு ஸ்பானிய டாலர் 6000 கொடுத்தால் குத்தகைக்கு வாங்கித்தர முடியும் என்று கூறினர். இராஜப்பிரதிநிதியும் ஏற்றார். அதிலிருந்து இவர்களுக்கும் கெட்டா சுல்தானுக்கும் கடிதப்போக்குவரத்துகள் நடந்தன. கெட்டா சுல்தானும் இவர்கள் நோக்கத்துக்கு இணங்கினர். 1786ஆ பிப்ரவரி 23உயில் சுல்தானுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள "காப்டன் பிரான்ஸிஸ்லைட்"டுக்கு "கவர்னர் ஜெனரல்" அதிகாரமளித்தார். காப்டன் லைட் தன்னுடன் கூட 5 ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள், 15 பீரங்கிப் பட்டாளவீரர்கள், 30 இந்திய ராணுவ வீரர்கள், 100 வங்கக் கடற்படை வீரர்களையும் அழைத்துக்கொண்டு "குலாகேடா" என்ற கப்பலில் வந்தார். வந்ததும் "லாபந்தரில்" கெட்டா சுல்தான் மிகக் கௌரவமாக வரவேற்றார். அவரிடம் சகல விபரங்களையும் தெரிவித்து சம்மதி பெற்றுத்திரும்பினர் காப்டன்லைட்.

1786ஆ ஜூலை 1உ கவர்னர் ஜெனரல் இடமிருந்து வந்த கடிதத்துடனும் பரிசுச் சாமான்களுடனும் மறுபடியும் கெட்டாவுக்குச் சென்றார் காப்டன்லைட். ஏற்கனவே கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் விபரத்தில் சுல்தானுக்கு திருப்தியில்லை. அதனால் தன் படைகளை நிறுத்தி காப்டன்லைட்டை வரவேற்றார் சுல்தான். இதை உணர்ந்தார் காப்டன்லைட். மறுபடியும் உடன்படிக்கையின் பொருளை சுல்தானுக்கு விளக்கினர். முதலில்

பொருள் விளக்கப்பட்டது மொழி பெயர்ப்பாளரின் தவறென் பதைக் கூறினர். இவைகளைச் சரியாய் தெரிந்துகொண்டு ஜூலைமீ 3உ உடன்படிக்கையில் கையெழுத்திட்டார் சுல்தான். கையெழுத்து வாங்கிய காப்டன்லைட் 9 நாட்கள் வரை அங்கு தங்கி இருந்து பிறகு "குவாலா" வந்து சேர்ந்தார். அங்கிருந்து 3 நாட்கள் வரை படைகளையும் பண்டங்களையும் புதுத் தீவுக்கு அனுப்பினர். ஜூலைமீ 15உ மிஸ்டர் "ஸ்பிட்வெல்," "பிரின்ஸ் ஹென்ரி" என்ற இருவருடனும் புறப்பட்டுப் புதுத் தீவுக்கு வந்தார். எல்லோரும் இருதினங்கள் வரை கப்பலிலேயே தங்கினர்கள். 17உ லெப்டினெண்ட் "கிரேயை"யும் கடற்படையையும் "எஸ்பிளேனெட்"டிற் கடுத்த "பாயிண்ட் பிளேகார்" என்னுமிடத்தில் இறக்கித் தானும் இறங்கினர். பட்டாளங்களைக்கொண்டு காடுகளை அழிக்கச் செய்தார். மறுநாள் பல ஐரோப்பியர்கள் கப்பலில் வந்தார்கள். கெட்டாவிலிருந்து அத்தாப்புகள் வந்தன. குடிசைகள் கட்டினர்கள். கூடாரங்கள் அடித்தார்கள். கிணறுகள் வெட்டினர்கள். குடியேற ஏற்பாடு செய்தார்கள்.

ஆகஸ்ட்மீ 11உ கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சொந்தமான "வாலண்டைன்" "வான்ஸிடார்ட்" என்ற இருகப்பல்கள் வந்தன. அன்றையதினமே புதிய தீவை ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கி தங்கள் கொடியை நாட்டினர்கள். 1786ஆ ஆகஸ்ட்மீ 11உ யாகிய அன்று 4வது ஜார்ஜ் மன்னர் பிறந்த நன்னாள். ஆகவே புதுத் தீவுக்கு "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" தீவு என்றும், நகருக்கு "ஜார்ஜ் டவுன்" என்றும் பெயர் வைத்தார்கள். அன்றிருந்து ஓர் பெருத்த நகரமாக்க முற்பட்டார்கள். இத்தீவோ "பாக்கு மரங்கள்" அடர்ந்தவை. அதோடு மற்ற மரங்கள் நிறைந்த காடாகவுமிருந்தது. அக்காட்டை அழிப்பதற்காக கெட்டாவிலிருந்து ஒரு பிரான்ஸ் பாதிரியாரும் 100 கிறிஸ்துவர்களும் வந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து காட்டை அழித்தார்கள். அவர்களோடு மற்றவர்களும் வந்து குடியேறினர்கள். எல்லோரும் வரவே பாக்குமரங்கள் நிறைந்த இத்தீவுக்கு "பொக்கோ பினங்" என்ற மலாயப் பெயரை வைத்தார்கள். அப்பெயர் "பூலோ பினங்" காக மாறியது. இப்பெயர் வரவே இளவரசர் பெயரால் கூறப்பட்ட "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" தீவு என்றபெயர் மறைந்து விட்டது. இவ்வாறு "காப்டன்லைட்" முயற்சியால் செப்பனிடப்பட்ட இத்தீவில் முதலாவதாக சோலியாமுஸ்லீம்கள் வந்து குடிகளாகச் சேர்ந்தார்கள். இவர்களுக்குப்பிறகு சீனர்களும் கிறிஸ்துவர்களும் வந்து குடியேறினர்கள். மலாக்காவில் இருந்து சில இந்நாட்டுச்

ஹானரபிள் மிஸ்டர் எ. எம். குட்மென்.



Hon'ble Mr. A. M. Goodman.

சினர்களும் வந்தார்கள். இவர்கள் குடியேற்றத்துக்கேற்ப தீவும் மலைவளம், நீர்வளம், மண்வளம் பொருந்தி இருந்ததால் ஜாதிக்காய், லவங்கம், மிளகு முதலியவைகளைப் பயிரிட்டார்கள். மண்வளத்தால் பிரம்பு, அபின் மற்றவைகள் விளைந்தன.

இவைகளைக் கண்ட உலாந்தாக்காரர்கள் பொறாமை கொண்டார்கள். கெட்டா சுல்தானைத் தூண்டினார்கள். விளைபொருள்களில் பாதியைக்கேட்கச் சொன்னார்கள். இல்லாவிடில் பிரிட்டிஷாரை இத்தீவை விட்டுத்துரத்த வேண்டுமென்றார்கள். அதேபோல கெட்டா சுல்தானும் 1791ம் ஆண்டில் முயற்சித்தார். அம்முயற்சி கைகூடவில்லை. அதனால் கெட்டா சுல்தான் காப்டன் பிரான்ஸிஸ்லைட்டின் விருப்பத்துக்கு மறுபடியும் இணங்கவேண்டியதாய் விட்டது. அன்றிருந்து வேறு எக்கலகங்களுமில்லை. இவ்வளவுக்குங் காரணமாய் இருந்த காப்டன் பிரான்ஸிஸ்லைட் "மலேரியா" சுரத்தால் பிடிக்கப்பட்டார். இவர் பினங்கு தீவுக்கு வந்ததில் இருந்தே பலமுறை காய்ச்சல் வந்தது. மற்றவராக இருந்தால் அதைத்தாங்க முடியாது வேற்றிடம் செல்ல எண்ணுவர். இவரோ அவ்வாறு செல்ல எண்ணவில்லை. தங்கள் சமூகத்தவர் மேலேற வேண்டும்! தாய் நாட்டின் அரசியல் சிறந்தோங்க வேண்டும்! அதனால் அநேக மக்கள் பிழைக்க வேண்டும்! தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்! அதுவே இவ்வுலகிற் பிறந்ததின் பயன்! உயிர் பெரிதல்ல! புகழே பெரிது! என்றவைகளை நினைத்தார். அதனால் இங்கேயே தங்கி 1794ஆ அக்டோபர்மீ 21உ ஊனுடலை நீக்கிப் புகழுடலைப் பெற்றார். இப்பெருந்தீவை ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்க பெருமுயற்சி எடுத்து எண்ணியபடி முடித்ததால் அவர் இறந்தும் இறவாதவராக இருக்கிறார்.

இவருக்குப் பிறகு சில ஆங்கிலேயர்களைத் தலைவர்களாக வைத்து கிழக்கிந்தியக்கம்பெனியார் ஆளுகையில் வைத்திருந்தனர். இத்தீவுக்கு 1796ல் அந்தமானிலிருந்து ஆயுள்வரை சிறைத்தண்டனை பெற்ற 700 கைதிகள் கொண்டு வரப்பட்டனர். அதற்குமேல் 1805ல் இத்தீவு சென்னை, பம்பாய்களுக்கொப்ப ஒரு இராஜதானியாகியது. 1826ல் சிங்கப்பூர், மலாக்கா, இரண்டுக்கும் தலை நகராக விளங்கியது. 1837ல் தொடுவாய்ப்பகுதியின் தலைநகரை சிங்கப்பூருக்கு மாற்றிவிட்டார்கள். 1867ம் ஆண்டில் இந்தியாக் கவர்ன்மெண்டின் பார்வையை நீக்கி காலனிகள் செகரெட்டரி ஆப் ஸ்டேட் அவர்களின் கண்காணிப்புக்கு தொடுவாய்ப் பகுதி உட்படுத்தப்பட்டது. அதில் இருந்து ஓர் ரெஸிடெண்ட்

கவுன்ஸிலரின் கீழ் இப்பினாங்கின் நிர்வாகம் இருந்து வருகிறது. இவருக்கு உதவியாக ஸ்டைட்ஸ் சிவில் சர்வீஸ் உத்தியோகஸ்தர்கள் உள்ளனர்.

இன்றுள்ள, ரெஸிடெண்ட் கௌன்ஸிலர்


இயற்கை எழில் நிறைந்த இப்பினாங்கின் இன்றைய ரெஸிடெண்ட் கவுன்ஸிலராக இருப்பவர் மேன்மை தங்கிய "ஹானரபிள் மிஸ்டர் எ. எம். குட்மென்" ஆவர். இவர் 1886ஆு டிசம்பர்மீ 15உ பிறந்தார். 1909ஆு நவம்பர்மீ 9உ "காடெட்" ஆனார். 1912ஆு எப்ரல்மீ 24உ சிங்கப்பூர் சைனீஸ் அஸிஸ்டெண்ட் புரோடெக்டர் ஆனார். மூன்உ 26உ "காடெட்" பரீட்சையில் தேறினார். பல உத்தியோகங்களில் அமர்ந்தார். 1917ஆு ஜனவரிமீ 8உ பினாங்கு சைனீஸ் அஸிஸ்டெண்ட் புரோடெக்டர் ஆனார். 1918ஆு பிப்ரவரிமீ 21உ சைனீஸ் ஹொக்கின் லாவில் தேர்ச்சிபெற்றார். ஜூலைமீ 26உ ரெண்ட் அஸெஸ்மெண்ட் போர்ட் தலைவரானார். 1921ஆு செப்டம்பர்மீ 10உ பேராக் சைனீஸ் புரோடெக்டர் ஆனார். 1931ஆு ஜூலைமீ 19உ தொடுவாய்ப்பகுதியின் நிர்வாக சபை அங்கத்தினரானார். (இதற்கிடையே பல உத்தியோகங்களில் இருந்தார். ஓய்வும் பெற்றார்.) 1933ஆு எப்ரல்மீ 21உ பினாங்கு ஆக்டிங் ரெஸிடெண்ட் கௌன்ஸிலர் ஆனார். அக்டோபர்மீ 14உ ரெஸிடெண்ட் கௌன்ஸிலரானார். 1934ஆு நவம்பர்மீ 4உ ஓய்வு பெற்றார். 1935ஆு ஆகஸ்ட்மீ 29உ மறுபடியும் வந்து பினாங்கு ரெஸிடெண்ட் கௌன்ஸிலர் பதவியை ஏற்றார். இப்பதவி வகிக்கும் இவர் தாராள சிந்தையுடையவர். யாருடனும் எளிதில் பழகும் குணமுடையவர். நிர்வாகத்திறம் பெற்றவர். நுண்ணறிவுடையர். எப்பொழுதும் சுருசுருப்புடனும், ஊக்கத்துடனுமிருப்பவர். இவரின் நிர்வாகம் போற்றுதற்குறியது.

எஸ்பிளேனெட்டின் எழில்

காப்டன் பிரான்ஸிஸ் லைட் எஸ்பிளேனெட்டுக்கு அண்மையிலேயே முதலில் வந்திறங்கினார். இந்த எஸ்பிளேனெட்டின் படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இது ஓர் பழங்கோட்டை, பல கொடி மரங்கள், பரந்த திடல், பக்கத்தில் பினாங்கு ஸ்போர்ட்ஸ் கிளப், கிரிக்கெட் கிளப், நகர மண்டபம் (டவுன் ஹால்) முனிசிபல் கட்டிடங்களைக்கொண்டு விளங்குகிறது. இதற்கண்மையிலுள்ள கடற்

(21)

பினங்கு பழய கோட்டையும், லைட் ஹவுஸும்,
கொடி மரமும் இருக்குமிடம்.



Penang Esplanade.

றுறைமுகத்தின் கவின் பிறகு கூறப்பெறும். இயற்கையின் எழிலும், செயற்கையின் திறனும் சேர்ந்த இவ் "எஸ்பிளேனெட்" பிறங்கில் ஓர் முக்கியமான இடம். பெருத்த வியாபார ஸ்தலங்களுக்கு அண்மையிலுள்ள இதன் திடலில் மாலை நேரம், இரவுப் போது களில் அநேக மக்களைக் காணலாம். பெருநிதி படைத்தோரும், கார்களிற் செல்லத் தகுதி யுடையோரும் மாலை நேரங்களில் உலாவு வதற்குப் பல இடங்கள் இருக்கின்றன. மற்றவர்களின் உடல் அயர்வைத் தீர்ப்பதற்கு உரியவிடமாக இருப்பது இதுவே. நகரத்தைப் பரிபாலிக்கும் நகரசபை (முனிசிபாலிடி) அண்மையில் இருப்பதால் திடலை நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். அங்கு வந்து கூடும் மக்கள் பசும் புற்றரையில் அமரலாம்! பக்கத்திற் கடற் கரையில் கட்டப்பெற்றுள்ள சுவற்றில் உட்காரலாம்! மழை வந்தால் நகர மண்டபம், நகர சபைக் கட்டிடங்களின் முன் தங்கலாம்! நடக்கவெண்ணினால் நாற்புறமும் சுற்றி வரலாம்! அவரவர்களுக்கு உரிய முறையில் உறுதுணையாக அமைந்துள்ள இவ்விடத்தில் கடலன்னை தன் அலையின் காற்றை அள்ளி வீசுவாள். தென்றற் காற்றைத் திருப்பி அடிப்பாள். அதனால் அங்கு மாலையிலும், இரவிலும் மக்கள் பல்லோர் வந்து கூடி இன்பம் பெறுவார்கள்.

இதற்குமேல் மக்களுக்கு வசதியளிப்பது "நியூ பீச்" (நார்த் பீச்) ஆகும். திரை கடலோரத்தில் செயற்கையின் திறனைக் காட்டும் அப்பீச் ரோடின் அழகு அளவிடற்கரியது. அவ்விடத் துக்குக் காதலரைப் பிரிந்துவாழும் காதலிகள் சென்றால் நோதல் உறுதி. எதனால்?

"காதல ரில்வழி மாலை கொலைக்களந்
ஏதிலர் போல வரும்"

என்றார் வள்ளுவர். தன் காதலன் பொருள் தேடுவதற்காகப்பிரிந்து சென்றான். அவன் வருவான் என்று வழிபார்த்துக் கொண்டிருக் கிறாள் ஓர் உண்மைக் காதலி. காலமோ கார்கால ஆரம்பம். அத் துடன் மாலைப்போதும் வந்துவிட்டது. வந்ததும்,

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்"

என்றபடி காலையில் அரும்பாகத்தோன்றிய தன் காதல் நோய், பகலெல்லாம் பூவாகி, மாலைநேரம் வரவும் மலரவும் ஆரம்பித்து விட்

டது. மலர்ந்த காதலைத் தாங்கத் தலைவியால் ஒல்லுமோ? ஒல்லாது நோகின்றாள். வேறென் செய்ய வியலும்! இம்மாலைப்போது ஒன்றே தலைவியை இந்நிலைக் குள்ளாக்குகிறது. அத்துடன் திங்களும் தோன்றித் தன் ஒளியைப் பரப்பினால்! அலைகடற் றென்றலை அள்ளி வீசினால்! அத்தலைவி என்ன செய்வாள்? அந்தோ! "காதல் இன்றேல் சாதல்" என்று பாரதியார் கூறிய நிலைக்கு உள்ளாக வேண்டியதுதான். இந்நிலையை "நியூ பீச்" சானது செயற்கையின் திறனால் தருகிறது. மாலை நேரம்! அலை கடற் றென்றல்! அந்திப் போது! அத்துடன் வானத்துறையும் வளர்மதி அன்மையிற்றோன்றியது போன்ற பல (லைட் புளுகலர்) மின்சார விளக்குகளின் ஒளி! இவைகளோடு "துணைவர் சூழ் மாலை எங்கும்" என்று சேக்கிழார் அன்று கூறியபடி இன்று கைகோத்து களிப்புறு வதனத்தோடு வரும் காதலர்களின் தோற்றம்! கார்களில் உலாவும் கவின் நிறைந்த தம்பதிகளின் காட்சி! இவைகளைத் தனியாகச் சென்ற ஓர் தலைவி கண்டால் எந்நிலையை அடைவாள்? இன்னமும் கூறவா வேண்டும். உலகம் இன்றுள்ள நிலையில் அக்காதலின் உண்மை அறிந்த ஒரு சிலருக்கே அந்நோய் உண்டாகும். அதன் தன்மை உணராது, நாகரிகம் இன்னதென்றறியாது, நவீன நாகரிகத்திற் புகுந்ததாய் எண்ணி "கண்டதே காட்சி, கொண்டதே கோலம், உண்டதே லாபம்" என்ற கொள்கைகளைக் கொண்டு வாழ்பவர்களுக்கும் அவரவர்கள் விருப்பத்துக் கேற்ப நல்விருந்தளிப்பது நார்த்பீச். (நியூ பீச்.) எல்லோருக்கும் இன்பத்தைத்தரும் எஸ்பிளேனெட்டும், நவீன நடைக்கேற்ற பலனைத்தரும் நார்த் பீச்சும் இருப்பது பினாங்குக்கு ஓர் பெரும் சிறப்பாகும்.

வர்த்தகத்தின் உயர்வு

வளத்தைப் பெருக்குவது வர்த்தகம். அவ்வியாபாரம் பினாங்கில் எங்கும் நிறைந்திருக்கிறது. பினாங்கில் முனிசிபல் கணக்குப்படி இப்போது 284 தெருக்கள் இருக்கின்றன. இவைகளிற் பெரும்பான்மையாக உள்ள நீண்ட தெருக்கள் எல்லாம் வியாபார ஸ்தலந்தான். இவ்வியாபாரத்தின் நாணயச்செலாவணிகளுக்காக பல பாங்குகள் இருக்கின்றன. அவைகளில் "மெர்க்கன்டைல் பாங்" "சார்ட்டர்ட் பாங்" "ஹொங்காங்ஷாங்காய் பாங்" "நெதர்லாண்ட் பாங்" "பன்ஹின்லி பாங்" "ஓவர்சிஸ் சைனிஸ் பாங்" "இந்தியன் ஓவர்சிஸ் பாங்" என்பவைகள் பெருந்த லேவாதேவி செய்பவைகள் ஆகும். இவைகளோடு பினாங்கு ஸ்ட்ரீட்டில் பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் இருக்கின்றன.

இவர்கள் இங்குவந்து சுமார் 110 ஆண்டுகள் ஆகின்றன. இவர்களிடம் பொருள் பெற்றுத் தொழிற் செய்து பெருநிதி திரட்டியோர் பலர். அவர்களிற் சிலர் இன்னுமிருக்கின்றனர். இவர்களின் தொழில் முறையைப்பற்றி முன்பே கூறப்பெற்றிருக்கிறது. இவர்களாலும் பாங்குகளாலும் இவ்வூரின் வாணிபம் சிறந்து விளங்குகிறது. இவ்வாணிபம் சிறக்கக் காரணமாய் உள்ளவர்கள் இந்தியர்களாவர். அவர்களில் "B. H. T. டவுலட்ராம் அண் கம்பெனி" "பர்மானந்தா அண் பிரதர்ஸ்" "ஈஸ்ட்ரன் பஜார்" "காஷிராம் H. சிவிலி" "D. R. பின்வானி அண் கம்பெனி" "K. P. முகம்மது காசிம்" "E. P. முகம்மது நார்தின் அண் கம்பெனி" "P. K. சக்கரை ராவுத்தர்" "B. P. டி சில்வா லிமிடெட்" "M. S. அலி அண் கம்பெனி" "வாசியாமுல் அசோமுல் அண் கம்பெனி". "K. கிமாட்ரை அண் கம்பெனி" "P. அகம்மது அண் சன்ஸ்" "R. S. அழகிரிசாமி செட்டியார்" "K. V. K. M. RM. கொண்டசாமி செட்டியார்" "இந்தியன் லேபர் கம்பெனி" "K. M. முகம்மது கவுஸ்" களுக்குடையவர்கள் பெருத்த வியாபாரிகளாவர்.


இவர்களோடு நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குச் சொந்தமாக பினாங்கு ஸ்ட்ரீட்டில் "ஓரியண்டல் கம்பெனி லிமிட்டெட்" ஒன்றும், "இந்தியா டிரேடிங் கம்பெனி" ஒன்றும், சோலியா ஸ்ட்ரீட்டில் "சுந்தரம் கம்பெனி" ஒன்றும் இருக்கிறது. பாங்குகளில் "இந்தியன் ஓவர்சிஸ்" பாங்கின் மூலதனத்தில் பெரும்பகுதி நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுடையதாகும். இதன் தலைமை ஆபிஸ் சென்னையிலிருக்கிறது. இதன் மானேஜிங் டைரக்டர் திரு. எம். ஸி டி. சிதம்பரம் செட்டியாராவர். இவரோடு இன்னும் 3 டைரக்டர்கள் செட்டியார்கள். அவர்களில் இப்போதுள்ளவர்கள் பாரிஸ்டர் ராம. அழகப்ப செட்டியார். பி. கு. நா. நாகப்ப செட்டியார். ப. வ. பழநியப்ப செட்டியார் ஆகும். இவர்கள் முயற்சியால் நடைபெறும் இப்பாங்கின் கிளையை பினாங்குக்குக் கொண்டுவர முயற்சித்த செட்டியார்களில் திரு. நா. கு. கடையின் பொறுப்பாளர் காரைக்குடி ராம. மு. வி. வெ. குப்பான் செட்டியார் என்ற காசிவிஸ்வநாதன் செட்டியார் ஒருவர். இவர், காரைக்குடியில் தோன்றியவர். தனவணிக நாட்டிற்சிறந்தது காரைக்குடி. அந்நகரில் பண்டை நாள்முதல் பரம்பரையாய் வாழுங்குடி. பிள்ளையார் பட்டிக்கோயில். கோயிலூர் ஆண்டவர் மரபு. அவ்வழித்தோன்றல் திரு. ராம. மு. வி. வெ. வெங்கிடாசலம் செட்டியார். சிவன் கழல் போற்றும் சிந்தையார். அவரின் அரு

முயற்சியால் அரனாருக் கோராலயம் (கற்றிருப்பணி) அமைக்கப் பெற்றுளது. எங்கு? ஈழ நாட்டில். திருஞானசம்பந்தர், திருநாவலூரர் இருவராலும் பாடப்பெற்ற திருக்கேதீச்சரத்தில். அவை ஒன்றுதானா? இன்னும் பல! சிலோனைச்சார்ந்த மாதம்பையில் கோயிற்பார்வை. காரைக்குடிக்கடுத்த திருக்கோயிலூரில் கோச்சாலை. (பசுமடம்) இன்னும் சிலவுண்டு. இவ்வறப்பணியாளருக்கு இரண்டாவது மனைவி மீனாட்சி ஆச்சியின் மணிவயிற்றுதித்த இரு செல்வன், செல்விக்குப்பின் மூன்றாவதாக சுபகிருது ௵ ஆடி ௴ 23௳ தோன்றினார் திரு. குப்பான் செட்டியார்.

வளம் பெருக்கும் வணிகரின் முறையைப்பின் பற்றினார். அதற்காக நள ௵ பினாங்குக்கு வந்தார். அங்கு வந்தது முதல் இந்நாள்வரை பன்முறை தாய்நாடேகித் திரும்பினார். சென்று திரும்பினாலும் தன்னிடத்தமைந்த ஒழுக்கம், உயர்குணம், உண்மை, வாராருக்குதவல் என்ற பெரும்பழக்கங்களால் பினாங்கில் முதலிற் புகுந்த இல்லமாகிய 134ம் நம்பர் கிட்டங்கியிலேயே இருந்து சில கடைகளின் தொழிலை நடத்தினார். இவருக்கு துந்துபி ௵ தை ௴ 23௳ பள்ளத்தூரில் திரு. கருப்பன் செட்டியார் மகள், இல்லறத்திற் கேற்ற எந்திழை, இன்மொழி கூறும் எழிலார் மங்கை, உத்தமகுண நிறை உமையாளை மணம் செய்யப்பெற்றது. இவர் காங்கிரஸ் பற்றுடையவர். அதனால் ஏழைகளைக்காக்கும் கத்தரை 20 ஆண்டுகளாகக் கட்டி வருகிறார். இவர் கத்தரிடங்கொண்ட ஆர்வத்தை தன் திருமணத்திலும் காட்டினார். அன்றுள்ள நிலையில் தன் மணக் கோலத்தை கத்தரால் அலங்கரித்தாரென்றால் அவ்வீரம் போற்றுதற் குரியதன்றோ?

இவர் ஓவர்சீஸ் பாங்கின் கிளையை பினாங்கில் நிறுவப் பெரு முயற்சி எடுத்ததுடன் அக்கிளையின் ஆலோசனை கூறுபவர்களான லெ. சித. லெ. மெய்யப்ப செட்டியார், சா. நா. அ. அழ. அ. ராமனாதன் செட்டியார் இருவர்களுடன் இவரும் ஒருவராக இருந்தார். இவரின் பெரு முயற்சியாலும் மற்ற செட்டியார்களின் தூண்டுதலாலும் இந்திய மக்களின் ஆதரவாலும் இப்பாங்கின் கிளையாக "கோலாலம்பூரில் ஓர் நிலையம் திறக்கப்பெற்றிருக்கிறது. இப் பாங்குக்கு முயற்சிசெய்த குப்பான் செட்டியார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கத்தில் ஓராண்டு காரியதரிசியாகவு மிருந்து பெருந்தொண்டாற்றியுள்ளார். இவர் இத்தகைய பொதுத் தொண்டுகளில் ஈடுபடுவதுடன் பினாங்குத் தண்ணீர்மலை யாண்டவரின் தாளிணை போற்றும் தாசனும் ஆவார். அவ்வன்பின் பெரு

ஹானரபிள் மிஸ்டர். எச். எச். அப்துல்காதர், ஸி. பி. இ.



Hon. Mr. H. H. Abdoolcader, C. B. E.

க்கை தன் செல்வனுக்கு "தண்ணீர்மலே" என்ற பெயரை இட்டமைப்பதால் காட்டுகின்ருர். இப்பெருந்தகை யாளருக்கு நமது சமூகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

மேற் கூறப்பெற்ற பாங்கு, லேவாதேவிக் கடைகளின் நாணயச் செலாவணியால் வாணிபம் பெருக்கங் கொண்டிருக்கின்றன. அவ் வர்த்தகத்தின் உயர்வால் இந்நகரில் 25 ரப்பர் வியாபாரிகள், 16 ஈய வியாபாரிகள், 3 ரப்பர் தொழிற்சாலைகள், 16 பட்டு வியாபாரிகள், 6 பாக்கு வியாபாரிகள், 30 அச்சு இயந்திர சாலைகள், 20 நகை வியாபாரிகள், 95 இன்சூரன்ஸ் கம்பெனிகள், 51 கப்பல் ஏஜண்டுகள், 16 லாயர் ஆபீஸ்கள் மற்றவைகள் இருக்கின்றன. இருக்கிருர்கள். இவைகளில் லாயர் ஆபீஸ்களில் "ராகவன் கம்பெனி," "குரு சரன் அன் கூ," "ஐசக் இபுராகிம்,""எச்.எச். அப்துல்காதர்," "ஸி. காசிம்" என்ற லாயர் ஆபீஸ்கள் இந்தியர்களுக்குச் சொந்தமானவை. இவைகளில் உள்ள லாயர்களில் சிலர் பொது நலத் தொண்டில் ஈடு பட்டவர்கள். ஈடு படுபவர்கள். இவர்களில் "ஹானரபிள் திரு. எச். எச். அப்துல் காதர்" இந்தியர்களின் பிரதிநிதியாக தொடுவாய்ப் பகுதி சட்ட சபையில் இருப்பவர்.

இவர் பம்பாய் மாகாண சூரத் நகரில் திரு. எச். ஏ. காதர். ஜே. பி. அவர்களின் மூத்த புதல்வராக 21—9—1890ல் பிறந்தார். 1912ம் ஆண்டு பாரிஸ்டர் ஆனர். 1912ஹ மார்ச்சுமீ மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு அறிமுகப்படுத்திவைக்கப்பட்டார். இப்போது இந்தியன் லேபர் கமிட்டியின் அங்கத்தினராகவும், பினங்கு ஜார்ஜ டவுன் முனிசிபால்டியின் கமிஷனராகவும், தொடுவாய்ப்பகுதியின் சட்டசபையில் இந்தியர்களின் பிரதிநிதியாக நான்காமுறையும் அரசியலாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராகவும் இருக்கிருர். இவரின் பெருந் தொண்டுக்காக 1935ஹ மன்னர் வெள்ளி விழாப் பதக்கமும், 1937ம் ஆண்டு மன்னர் முடிசூட்டு விழாப்பதக்கமும் கவர்ண்மெண்டாரால் கொடுக்கப்பெற்றிருக்கிறது. அத்துடன் 1938ஹ புதுவருட கௌரவப் பட்டங்களில் "ஸி. பி. இ." பட்டமும் அளித்திருக்கின்றனர். இப்பட்டத்தை பிரிட்டிஷ் மலாயாவில் முதன்முதலாகப் பெற்ற இந்தியர் இவரே. இத்தகைய கௌரவத்தை இந்தியர்களுக்குப் பெற்றதுடன் தீபாவளியின் விடுமுறைக்காகப் பெரும் பாடுபட்டு சட்டசபையில் பேசி விடுமுறை வாங்கிய பெருமை இவரையே சார்ந்ததாகும். பல வழியாலும் இந்தியர்களுக்கு நலத்தைத் தேடும் இவரின் உருவப்படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

இன்னுமுள்ள மற்ற லாயர்களில், திரு. ராகவன், K. சிதம்பரம் பிள்ளை இருவரும் கூட்டாய் தொழில் நடத்துகிறார்கள். இவர்களில் ராகவன் 23-6-1900ல் சென்னை மாகாணத்தில் பிறந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் B. A. பட்டம் பெற்றார். இன்னர் டெம்பிளியில் பாரிஸ்டர் பட்டம் பெற்றார். 1928ல் இருந்து பினாங்கில் தொழில் நடத்திவருகிறார். இவருக்கு காலஞ்சென்ற ஒறானரபின் P. K. நம்பியாரின் புதல்வி ராதா நம்பியாரைத் திருமணம் செய்யப் பெற்றது. இவ்வம்மையின் சகோதரன் டாக்டர் மேனனுருவர். திருமதி ராதாநம்பியாரும் திரு. ராகவனும் இல்லறவாழ்க்கையை பூவும் மணமும்போல் செவ்வனே நடத்திவருகின்றனர். இவ்வம்மையார் கற்பின் பூஷணமாய் தூய நல் அறங்கள் கொண்டொழுகுவர். திரு. ராகவன் தன் தொழிலோடு இந்தியர்களின் முன்னேற்றத்துக்குப் பெருந் தொண்டாற்றி வருகிறார். இப்போது பினாங்கு இந்தியர் சங்கத்தின் தலைவராகவும், பினாங்கு ஸ்ரேட்ஸ் செட்டில்மென்ட் அசோஷியேஷனின் உபதலைவராகவும், மலாயா மத்திய இந்தியர் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினராகவும், மற்றும் பல சங்கங்களின் நிர்வாக அங்கத்தினராகவும் இருக்கிறார். இவர் சுதந்தர நோக்கம் கொண்டவர். உடற்பயிற்சி மக்களுக்கு அவசியம் என்பதை எல்லோருக்கும் ஊட்டுபவர். அதைத் தன் செய்கையால் காட்டுவதுபோல டென்னிஸ் ஆடுவதிலும், நடப்பதிலும், நீந்துவதிலும் விருப்பங் கொண்டவர். எல்லாத் தொண்டிலும் ஈடுபடும் இவரின் திறன் போற்றுதற்குரியது. இவருடைய உருவப்படமும் இந்நூலில் சேர்க்கப் பெற்றுளது.

இவருடன் இப்போது சேர்ந்து தொழிலாற்றும் K. S. பிள்ளை என்ற லாயர் திரு. K. சிதம்பரம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அங்கேயே B. A. பரீட்சையில் தேறினார். 1906ம் ஆண்டில் இரங்கூன் சென்றார். செயின்ட் பால்ஸ் உயர்தரப் பள்ளியில் 8 ஆண்டுகள் தலைமை உபாத்தியாயராக இருந்தார். அவ்வமயம் நார்மல் பள்ளிக்கூடத்தின் பல நார்மல் பரீட்சைகளிலும் தேர்வு பெற்றார். சட்டகலாசாலையில் பயின்றார். பர்மா மொழியிலும் பயிற்சி பெற்றார். அச்சட்டங்களிலும் தேர்ச்சி பெற்றார். 1915ல் வக்கில் பரீட்சையில் தேறினார். 1917வரை வக்கில்தொழிலை நடத்தினார். அவ்வாண்டில் தன்தொழிலை தாட்டன் ஜில்லாவுக்கு மாற்றினார். 1922 முதல் 1924வரை தாட்டன்ஜில்லா முனிசிபால்டியில் இந்து சமூகத்தின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். 1923, 1924ம் ஆண்டுகளில் அம்முனிஸிபாலிடியின் உபதலைவராகவுமிருந்தார். 1924ஆ ஐக்கோர்ட் வக்கில் பரீட்சையில் தேறி

[மிஸ்டர் யென். ராகவன், பாரிஸ்டர்-அட்-லா.



Mr. N. Raghavan, Barrister-at-Law.

மிஸ்டர். கே. எஸ். பிள்ளை, பாரிஸ்டர்-அட்-லா.



Mr. K. S. Pillay, Barrister-at-Law.

மெர்க்கெண்டைல் பிரஸ் அதிபர் கனம் வே. நடேசம் பிள்ளை, J. P.



Mr. V. Nadasam Pillay, J. P.

இரங்கூன் ஐக்கோர்ட் வக்கிலானார். (1917௵ டிசம்பர்௴ கல்கத்தாவில் நடந்த அகில இந்திய காங்கிரசுக்கு பர்மாவின் பிரதிநிதியாகச் சென்றார்.) 1924௵ டிசம்பர்௴ இங்கிலாந்து சென்று மிடில் டெம்பிளில் மாணாக்கனாகச் சேர்ந்தார். 1926௵ பிப்ரவரி௴ ஆங்கில சட்டப் பரீட்சையில் தேர்ச்சிபெற்றார். 1926௵ நவம்பர்௴ கோலாலம்பூர் சுப்ரீம் கோர்ட்டில் அட்வோகேட் சோலிசிட்டராகப் பதிவுசெய்துகொண்டார். 1927ல் சிங்கப்பூர் சுப்ரீம் கோர்ட்டில் பதிவுசெய்துகொண்டார். கோலாலம்பூரிலும் பினாங்கிலும் தொழில் நடத்தினார். 1929ல் அசௌகரியத்தால் குடும்பத்துடன் நாட்டின் சென்றார். 1935௵ டிசம்பர்௴ வரை அங்கு தொழில் நடத்தினார். இக்காலத்தில் 6 மாதங்கள் நாட்டின் ஜில்லா பப்ளிக் பிராஸிகூடராக வேலைபார்த்தார். 1936௵ ஜனவரி௴ பினாங்கு வந்தார். இப்போது ராகவன் & கம்பெனியின் பங்குக்காரராக இருந்து தொழில் நடத்துகிறார். பினாங்கு இந்தியர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். இவர் இந்தியர்களுக்காக உழைப்பவர்களில் ஒருவர். பல தொண்டுகளிலும் ஈடு படுபவர். இவரின் உருவப்படமும் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

பினாங்கில் உள்ள அச்சாபீஸ்களில் "மெர்க்கண்டைல் பிரஸ்" "தேசநேசன் பிரஸ்" "ராயல் பிரிண்டிங் ஒர்க்ஸ்" "கணேச அச்சியந்திரசாலை" மற்றவைகள் இந்தியர்களுக்குச் சொந்தமாகும். இவைகளில் மெர்க்கண்டைல்பிரஸின் அதிபர் திரு. வே. நடேசம்பிள்ளை J.P. ஆவர். இவர் தஞ்சைஜில்லா கருந்தட்டாங்குடியில் வேளாள மரபில் 1874ம் ஆண்டு பிறந்தார். இவரின் தந்தையார் தி. வேலாயுதம் பிள்ளை. தாயார் கமலத்தம்மாள் ஆவர். இவர்களின் தவப்புதல்வனாய்த்தோன்றிய திரு. நடேசம்பிள்ளை தஞ்சை "செண்ட்பீட்டர்ஸ் காலேஜில்" கல்வி பயின்றார். 1888ம் ஆண்டு இம்மலாயாவுக்கு வந்தார். தனது கல்வியின் திறன், கற்றோரின் கூட்டுறவு, மற்றவரின் போற்றுதலால் 1890ம் ஆண்டில் பினாங்கு "கெஜட்" பத்திரிகை நிலையத்தில் நியூஸ் சூப்பிரண்டெண்ட் பதவியை ஏற்றார். 1933௵ வரை அத்தொழிலைத் திறம்பட நடத்தினார்.

இத்தொழிலோடு இந்து மக்கள் இந்நாட்டில் நலம் பெறப் பல தொண்டுகளை ஆற்றினார். இவைகளை விரிப்பிற் பெருகும். சிலவற்றைக் காண்போம். தொண்டிற் சிறந்த இவர் 1917ம் ஆண்டு " இந்து அட்வைசரி போர்டு "எனும் ஆலோசனைக்கழகம் ஒன்றைக் கவர்ன்மெண்டாரால் நிறுவச் செய்தார். 1924ம் ஆண்டில் அதன் காரியதரிசியாய் அமர்ந்தார். 1934ம் ஆண்டு வரை அத்தொண்டைத்

திறம்பட நடத்தினார். அவ்வாண்டில் இவரின் பொது நலத்தொண்
டைப் போற்றி கவர்ன்மெண்டார் ஜே. பி. (சமாதான நீதிபதி)
பட்டத்தை அளித்தனர். இதற்கிடையில் 1931ம் ஆண்டில் இந்தியன்
இமிகிரேஷன் கமிட்டி அங்கத்தினராக கவர்ன்மெண்டாரால் நிய
மிக்கப்பெற்றார். அதிலும் 3 ஆண்டுகள் இருந்து தொண்டாற்றினார்.
இத்துடன் பூலோ ஜர்ஜா குவாரண்டைனின் மேற்பார்வையாளராக
12 ஆண்டுகளாக இருந்து வருகிறார். பினாங்கு "இந்து சபா"
"இந்தியர் சங்கம்" "மருத்துவ சங்கம்" "ஆதித்திராவிட சங்கம்"
"செந்தமிழ்ச் சங்கம்" மற்றவைகளில் பல ஆண்டுகள் தலைவராக
வும், போஷகராகவும் இருந்தார். ஒவ்வொருசங்கங்களுக்கும் இந்திய
மக்களுக்கும் இவரால் ஏற்பட்ட நன்மைகள் பல. இவ்வாறு தாய்
நாட்டுமக்களுக்கும் தமிழ்மொழிக்கும் தொண்டாற்றும் இவர், தனது
மெர்க்கன்டைல் பிரஸின் உதவியால் இந்நூலை வெளியாக்கப் பெரும்
உழைப்பெடுத்துள்ளார். இவரின் தொண்டு போற்றுதற்குறியது.
இவருக்கு இந்திய மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்
பட்டிருக்கின்றனர். இப்பெருந்தகையாளரின் உருவப்படமும் இந்
நூலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம்

வர்த்தகத்தால் உயர்ந்த பினாங்கில் வர்த்தகங்களைப் பொதுவாகக்
கூடிக் கவனிக்க பினாங்கு வர்த்தக சங்கம், சீனர்கள் வர்த்தக சங்கம்,
சயாம் வர்த்தக சங்கம், முஸ்லீம் வர்த்தகர்கள் சங்கம், நாட்டுக்
கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம் என ஐந்து சங்கங்கள்
இருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகப் பல
காரியங்களிற் கலந்துகொள்ளும். இவைகளுக்குமேல் ஒவ்வொரு
சமுகத்தினரும் ஒற்றுமையோடு நடப்பதற்காகப் பல சங்கங்கள்
இருக்கின்றன. இவைகளில் இந்தியர்களுக்காக "இந்தியர் சங்கம்"
ஒன்றும் "இந்து சபா" ஒன்றும் "முஸ்லீம் மகாஜன சங்கம்"
ஒன்றும் இருக்கிறது. இவைகளில் நாட்டுக் கோட்டைச் செட்டி
யார்களின் வர்த்தக சங்கம் பவஹு வைகாசியீ 5ம் உ (18-5-1934)
யில் நிறுவப் பெற்றது. இச்சங்கம் தோன்றி செட்டியார்களுக்குப்
பல நலன்களைச் செய்திருக்கிறது. இச்சங்க நிலையம் இப்போது
பினாங்கு ஸ்ட்ரீட்டிலேயே இருக்கிறது. அதன் படமும் இந்நூலில்
சேர்க்கப் பெற்றிருக்கிறது. இச்சங்கம் தோன்றக் காரணமாய்


இம்மலாயாத் தோற்றத்துக்கு ஆங்கில நூல்களை ஆராய்ந்து திரட்டிய
சுவாமி அற்புதாநந்தா, பினங்கு.



Adbuthananda Swami, Penang.

(27)

பினங்கு துறைமுகம்.



Penang Harbour.

இருந்தவர்கள் பலர். அவர்களில் மு. ராம. கடையின் பொறுப்பாளராக இருந்த தேவகோட்டை மு. வெ. வெள்ளையப்ப செட்டியார் ஒருவர். இவரே சங்கம் தோன்றிய ஆண்டில் தலைவராகவு மிருந்தார்.

இவரையும் மற்றவரையும் சங்கம் காணும்படி தூண்டுதல் செய்தவர்கள், திரு. பெ. நா. மு. முத்துப் பழநியப்ப செட்டியாரும் திரு. பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியாருமாவர். இவர்களில் திரு. பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியார் இராமநாதபுரம் ஜில்லா அமராவதி புதூரில் பிறந்தவர். இவருக்கு இருபதாண்டுகள் நிரம்பும்வரை ஈப்போவில் இவர்களுக்குச் சொந்தமான வட்டித் தொழிலில் ஈடுபட்டிருந்தார். பிறகு சமூக சீர்திருத்தத் தொண்டிலும் தொண்ணூற்றுருநர் கூட்டம் கூட்டுதற்கு வேண்டிய முயற்சியிலும் பெரிதும் உழைத்தார். இவரின் சொல்வன்மை சொல்லுந்தரமன்று. "கேட்டார்ப் பிணிக்குந் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாஞ் சொல்" என்ற வள்ளுவர் குறளுக் கொப்பப் பேசும் திறன் பெற்றவர். அதனால் இவரை எச்சபையும் ஏற்றது. பல விடங்களுக்கும் சென்று பற்பல முறையாலும் தொண்டாற்றினார். அவைகளில் இரங்கூன் தனவைசிய இளைஞர் சங்க முதலாவது மகாநாட்டின் தலைமைப் பதவிக்காக இவர் சென்றது குறிப்பிடத்தக்கது. அங்கு சென்று அதை அழகுற நடத்தி பர்மா வெங்கணும் சுற்றி, மலாயாவுக்கும் வந்து சலிக்காது சமூக, தேசியப் பிரசாரங்கள் செய்து வந்தார்.

இவர் சமூகப்பணியில் தலை சிறந்து நிற்பதோடு தேசியப்பணியிலும் திடங்கொண்டவர். அப்பணியை மகாத்மாகாந்தி அடிகளின் கட்டளைப்படி நடந்த முன்வந்தவர். அதனால் அவ்வடிகளுடன் கொழும்புக்குச்சென்றார். அங்கும்பல உருக்கமான சொற்பொழிவுகள் ஆற்றித்திரும்பினார். அதோடு காந்தி அடிகளைக் காண்பதற்கு அடிக்கடி பலவிடங்களுக்கும் செல்வார். அவரின் ஏவலைத்தலைமேற்றாங்குவார். அப்பணியில் ஈடுபட்டதால் கதரில் எல்லையற்ற பற்றுடையவரானார். இவர் இப்பற்றுகளோடு விரிந்த மனப்பான்மையும், திறன்கொண்ட உளவலியுமுடையவர். இவைகளோடு தன் இல்லத்திலேயே மருத்துவசாலை ஒன்று ஏற்படுத்தியுள்ளார். அதைக்கொண்டு கைமாறு கருதாது ஏழை மக்களுக்கு தானே சிகிச்சை செய்கின்றார். இத்தகைய முறையைக்கொண்ட இவரின் கருணை அளவிடற் கரியது. இத்தொண்டுகளோடு தன்னிடம் பழகும் அன்பர்களிடம் எப்போதும் மிக நேசமாய்ப் பழகுவார். எந்த

தோறும் தனது மலர்ந்த முகத்தையே காட்டுவார். இவரின் கருணை ததும்பும் பார்வையும், கனிவு மிகுந்த வதனமும், அகத்தன்மைப் புறத்தே காட்டும் அழகும், தூய உடையும், சொல் வன்மையும், தன்னலங் கருதாப் பொதுநலத் தொண்டும், தமிழார்வமும் போற்றுதற்குரியது. இவரால் நாட்டுக்கும் சமூகத்துக்கும் பல நலன்கள் விளைந்திருக்கின்றன.

இவ்வறப் பணியாளரின் பெருந்தொண்டால், முயற்சியால் ஏற்பட்ட பினாங்கு & பிராவென்ஸ் வெல்லஸ்லி மாகாணத்தின் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கம் இன்று ஓர் பெரிய கழகமாக விளங்குகிறது. இதன் இவ்வாண்டுத் தலைவர் திரு. க. வெ. ராம. அழகப்ப செட்டியாராவர். இவர் ஆண்டில் இளைஞர். அறிவில் முதியவர். இவர் கானாடு காத்தானில் பிறந்தவர். இவரின் தந்தையார் க. வெ. ராம. வெங்கிடாசலம் செட்டியாரவர்களை அறியாதார் இரார். இவரின் செல்வனாக 1912ம் ஆண்டில் தோன்றிய திரு. அழகப்ப செட்டியார் ஐந்தாவதாண்டிலேயே (1917) சென்னைக்கு கல்வி பயிலச் சென்றார். எச்செல்வத்திலும் உயர்ந்த புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த தமது முன்னோர்களின் முறைப்படி கல்வி பயின்றதோடு பல நற்பழக்கங்களையும் நண்பர்கள் கூட்டுறவையும் கைக்கொண்டார். இவருக்கு குல முறைப்படி குடும்பநிலைக்கேற்றபடி திருமணமும் முடிக்கப்பட்டது. இப்பொறுப்புகளோடு தனது படிப்பில் கவனத்தை அதிகம் செலுத்தி ஆங்கிலத்தோடு, தமிழ்க்கலையும் பயின்று 1931ம் ஆண்டு தமதில்லமடைந்தார். 1933ம் ஆண்டில் தங்கள் தொழில்கருதி பினாங்குக்கு வந்தார். இப்போது தனது இல்லாள், மகனுடன் இங்கு வாழ்க்கையை நடத்தி வருகிறார்.

இவர் தங்கள் தொழிலோடு 1935ம் ஆண்டில் வர்த்தக சங்கத்தின் உதவிக் காரியதரிசியாகவும், சென்ற ஆண்டில் இச்சங்க உபதலைவராகவும் இருந்து தொண்டாற்றினார். இவ்வாண்டு தலைவராக இருந்து தொண்டாற்றுகிறார். இத்துடன் கோலாலம்பூர் மத்திய இந்தியர் சங்கத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாகவும் அச்சங்கத்தின் உபதலைவராகவும் இருக்கிறார். சென்ற ஆண்டில் மலாயா செட்டியார்கள் இளைஞர் சங்கத்தின் தலைவராக இருந்தார். இவ்வாண்டில் அதன் உபதலைவராகவும் நிதியாளராகவும் இருக்கிறார். இப்பதவிகளை மற்றசிலரைப் போல பெயரளவில் ஏற்காமல் செய்கையால் காட்டுகிறார். இவர் தேசத்தொண்டே தெய்வப்பணி. நாடு சீர்பெறின் நாம் நலம் பெற

வாட்டமிலாப் பினங்கில் வர்த்தகர்கா ளேங்குதற்கு
நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் நாட்டிவைத்த சங்கமிது.



Nattukkottai Chettiar's Chamber of Commerce, Penang.

தனவணிக ரெல்லோருந் தாயகம்போற் றங்கி
மனங்களிக்கச் செய்நகர மஹால்.



Nattukkottai Chettiar's Hall, Penang.

லாம் என்ற நன்னோக்கம் கொண்டவர். எக்காரியத்தையும் ஆராய்ந்து செய்யும் ஆற்றலுடையவர். அரசியல், பொருளாதாரங்களில் நிபுணர். தான் செய்யும் காரியங்களை நன்கு ஆராய்ந்து செய்பவராகவே அதைச்செய்யத்துணியும்போது எவ்விடர் வரினும் பொருட்படுத்தாது கொண்ட குறிக்கோளை முடிக்கும் உளவலியுடையவர். ஆண்டில் இளைஞராகிய இவர் நிர்வாகத்திறன் அமைந்து, ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் சொல்வன்மையும் பெற்றிருப்பதாலன்றோ பினாங்கு நகரத்தார்கள் மிகப்பொறுப்பு வாய்ந்த தங்கள் சங்கத்தின் தலைவர் பதவியை இவரிடம் ஒப்பித்திருக்கின்றனர். இத்திறமைபெற்ற அறிவால் சமூக, நாட்டுப்பணியாற்றும் இவருக்கு நமது சமூகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இவரின் தலைமையிலும் பல அன்பர்களின் கூட்டுறவிலும் நடைபெறும் இச்சங்கத்துக்கு திரு. சா. நா. அ. சொ. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் ஓர் ஆதரிப்பாளராவர். அவர் பவஹூ கார்த்திகை மீ 15உயில் தாய்நாடேகும்போது ஓர் உபசாரம் அளிக்கப்பெற்றது. அதற்குப்பதில் தரும்போது திரு. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் சங்கத்துக்குநன்கொடையாக ஓர்கட்டிடம் வாங்கிக்கொடுப்பதாய் வாக்களித்துள்ளார்கள். அதன்படி நிறைவேற இறைவன் அருள்புரிவானாக.

நகரவிடுதியும் நல்லதுறைமுகமும்

இந்நாட்டில் உள்ள மக்கள் தாய்நாடு செல்லவும் வந்திறங்கவும் முன்னணியில் நிற்பது பினாங்குத் துறைமுகந்தான்.

(நேரிசை வெண்பா)


“தென்னாட்டில் வாழுகின்ற நிந்தமிழார் மக்களெலாம்
இந்நாடு வந்திடவு மேகிடவும்—தொன்மைத்
துறைமுகமாய் முன்னின்று தோற்றும் பினாங்கி
னிறையழகுக் குண்டோவூர் நேர்”

இத்தகைய சிறப்பு வாய்ந்த துறைமுகத்துக்கு “சுவெட்டன்ஹாம்பியர்” என்று பெயர். இதிற் கட்டப்பட்டுள்ள பாலத்தின் நீளம் 1,200 அடி. ஆழம் 32 அடி. இத்துறைமுகத்தில் ஒரே காலத்தில் 41,000 டன் சாமான்கள் இறக்கி வைக்கக்கூடிய பண்டக

சாலைகள் இருக்கின்றன. அச்சாமான்களை 5 முதல் 15 டன் வரை ஒரே தடவையில் தூக்கக்கூடிய 25 இயந்திரங்கள் இருக்கின்றன. இத்துறைமுகத்தில் பல நாட்டுப் பெரிய கப்பல்களும் பிடிப்பது போல நமது தாய் நாட்டில் நாகையில் இருந்து வரும் மரக்கலமும் முதலாவதாகப் பிடிக்கப்படும். இந்நாட்டில் சிங்கப்பூரிலிருந்து புறப்படும்போதும் இங்கு வந்துதான் நாகைக்குப் புறப்படும். ஆதலால் அநேக தமிழ் மக்கள் இத்துறைமுகத்தில் தான் மரக்கலம் ஏறுவார்கள். இறங்குவார்கள். இவர்களில் செட்டியார்கள் அதிகம்.

இவர்களுக்காக சைனு ஸ்ட்ரீட்டில் ஓர் விடுதி (கட்டிடம்) உண்டு. அதன் படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இக் கட்டிடம் திரு. பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியாரின் பெரு முயற்சியால் காணப்பெற்றது. இவ்விடுதி இங்கிருப்பதானது தாய் நாட்டிலிருந்து வருவோருக்கும் தாய் நாடேகுவோருக்கும் ஓர் தாயில்லம் போன்றிருக்கிறது. அன்னை நாடு விட்டு அயல் நாட்டை அடைய எண்ணுவோர் மரக்கலம் ஏறியே ஆக வேண்டும். அதிலும் இந்நாட்டுக்கு வருவோர் குறைந்தது ஆறு நாள் மரக்கலத்தில் இருக்கவேண்டும். அம்மரக்கலத்துக்கு நாகைத் துறையில் படகேறும்போது திரை கடல்த் தாண்டி திரவியம் தேடச் செல்கிறோம் என்ற மகிழ்வு முன்னிற்கும். அத்துடன் அங்கு நின்று வழியனுப்பும் நகரத்தார் தாகு முத்து ரெத்னம் செட்டியாரின் புன் சிரிப்பும், இன்சொலும் திடத்தைத் தரும். ஓடமும் ஓட ஆரம்பிக்கும். கடலன்னையின் காற்றும், அலையும் அமைதியாய் இருப்பின் களிப்போடு கப்பலை அடைவர். இன்றேல்! படகிலேயே பலர் மயக்கத்தில் ஆழ்வர். அத்துடன் 5 நாளும் மரக்கலத்தில் உண்டாகும் மயக்கம், வாந்திகளுக்குக் கணக்கில்லை. இதிலும் பலர் திடமாயிருப்பார்கள். எவ்வாறிருப் பினும் நாகையிற் கப்பலேறிய மக்கள் அனைவோரும் எப்போது பினங்கைக் காண்போம் என்ற ஏக்கத்துடனேயே இருப்பர். அவ் வேக்கம் பினங்குத் துறைமுகத்தைக் கண்டுதான் மாறும். அத் துடன் மரக்கலம் பாலத்தை அடைந்ததும் முதலில் ஏறிவரும் நகர விடுதியின் குமஸ்தா "இளைய குட்டித் தம்பி பிள்ளையின்" புன் சிரிப்பும், சந்தனம் குங்குமப் பொட்டுக்கூடிய வதனமும், இன் சொலும் வந்தவர்களின் ஏக்கத்தோடு களைப்பையும் மாற்றும். அதற்கு மேலுள்ள உடற் சோர்வை மாற்றி, நல்லுணவை ஊட்டி, நற்சுகத்தைத் தருவது நகர விடுதிதான். இந்நகர விடுதியால் இந்நாட்டில் வதியும் செட்டியார்கள் நலன் பெறுகின்றனர். இவ் விடுதிக்கு முயற்சிக்குநாளில் இந்நாட்டில் தனவணிகப் பெண்மக்கள்

நன்னீர்மைப் பினாங்கில் நகரத்தார் கட்டிவைத்த
தண்ணீர்மலை யாண்டவன் றன்தலைக் கோயில்.
1854-ம் ஆண்டில் நிறுவியது.



Thanneermalai Temple, Penang.

வந்து குடியேறவில்லை. பிறகு காரைக்குடி முத்துப்பட்டினம், அரு. ஆ. ராம. சொக்கலிங்கன் செட்டியாரும். மேற்படியூர் சுப. தண்ணீர்மலை செட்டியாரும் அவரவர்கள் மனைவியாருடன் ஆங்கிரசஹு தைமீ 28உ (9-2-33) தண்ணீர்மலை பூச விழா தினத்தன்று முதன் முதலாக பினங்குமா நகர் வந்து தைப்பூசத் திருவிழாவில் கலந்துகொண்டார்கள். அன்று முதல், மிகுதியாக வந்து இருக்கிறார்கள். இன்னும் பலர் வரத்தயாராக இருக்கிறார்கள். இவர்களுக்காக அன்று தேவை இல்லாதிருந்த விடுதி இன்று அவசியமாக இருக்கிறது. அதையும் நிறுவிவிடவேண்டுமென்ற அவா பலருக்கு உண்டு. அதற்குரிய முயற்சிகளும் நடந்து வருகிறது. அவை விரைவிற்கூட அன்பர்கள் உதவி புரிவார்களாக.

பினங்கு ஆலயங்களின் பெருமை


பல்வளங்களும் நிறைந்த பினங்கில் பல சமயத்தாருக்கும் ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளில் இந்துக்களுக்காக தண்ணீர் மலைக்கோயில், சிவன்கோயில், மாரியம்மன்கோயில், கிருஷ்ணன் கோயில் என்ற பல கோயில்கள் உண்டு. இக்கோயில்களில் தண்ணீர் மலையாண்டவரின் தலைக்கோயிலில் உள்ள சத்திவேல் யாரால் எக் காலத்தில் ஏற்பட்டதென்பதை அறியக்கூடவில்லை. அவ் வேல் அநேக மக்களுக்கு உணவூட்டுவதற்கு ஆதாரமாய் உள்ள அருவி நீர் வீழுமிடத்தில் ஊன்றப்பட்டிருந்தது. அதனைக்கண்ட தமிழ் மக்கள் அச்சத்திவடிவேலனுக்கு விழாக்கொண்டாட ஆரம்பித்தனர். அவ்விழா வரவரப் பெரிதாயிற்று. வேலனின் விழாப் பெருக்க முற்றதுபோல பினங்கில் பலசமய, சமூகமக்களும் நிறம்பினர். மக்கள் பெருக்கமுறவே அவர்களுக்குவேண்டிய ஊற்றருவி நீரைப் பாதுகாக்க வேண்டிய கடமை கவர்ன்மெண்டாருக்கு அதிகமாய் விட்டது. அதற்கு அவர்கள் முற்பட்டார்கள். நீரைச்சுத்தம் செய்ய நினைத்தார்கள். அந்நீரைச்சொரிகின்ற அருவியின் அடித் தலத்திலோ வேலனின் அடையாளமாகிய சத்திவேல் ஊன்றப் பெற்றிருக்கிறது. அவ்வேலை வணங்கவரும் அடியார்களோ! அன் பின் பெருக்கால் அபிஷேகங்களைச்செய்து அழகிய பூக்களையும் சாத்துகிறார்கள். இவர்கள் அன்பிற்குத் தான் இளைத்தவள் அல்லள் என்று காட்டுவதுபோல இயற்கை அன்னை தன்னால் வளர்க்கப் பெறும் மலைக்காவிலிருந்து மணம் நிறைந்த மலர்களையும், மதுவைக் கொட்டும் கனிகளையும், பசுமை மிகுந்த தழைகளையும், பசையற்ற சருகுகளையும், குச்சி கோல்களையும் கொண்டுவந்து கொட்டுகின்றாள். இவைகள் எல்லாம் ஒன்றாகச்சேரவே தண்ணீரைச் சுத்தம்செய்யத்

தடங்கல் எற்பட்டது. ஆகவே அங்கிருந்த வடிவேலனின் அடையாளத்தை அப்புறப்படுத்தினால் நலமென எண்ணினார்கள். அதற்கு இந்துமக்களும் இணங்கினார்கள். எல்லோருமாக அவ்வள்ளி மணாளனின் அடையாளத்தைக் கொண்டுவந்து இப்போது ஆலயமும் கட்டப்பெற்றிருக்கிற மலைக்கோயிலுக்கு மேல்வைத்தார்கள். இங்குண்டான அவன் அடையாள உருவம் இன்றும் எல்லோருக்கும் காட்சியளித்து வருகின்றது.

இக்காட்சிதரும் இடத்திலும் ஓர் அருவி நீரைச்சொரிந்து கொண்டே இருக்கிறது. அத்தண்ணருவியின் அண்மையில் நின்று நோக்கினால் வானளாவி நிற்கும் மரங்களையும், அவைகளைச்சுற்றிப் படர்ந்துள்ள கொடிகளையும், ஓடையிற் செறிந்துள்ள உன்னதக் கொடிகளையும் காணலாம். அவைகளில் மரத்தழைகளின் பசுமை, மரகதத்தைக்காட்டும்! மதுநிறைந்த பூக்களின் வெண்மை, வயிரம், புஷ்பராகங்களைக்காட்டும்! கனிகளின் செம்மை, பவளம், இரத்தினங் (சிவப்பு) களைக்காட்டும்! பக்கத்தில் நிற்கும் கமுக மரங்களிற் சரஞ்சரமாய்த்தொங்கும் பூக்கள், முத்துகளைக்காட்டும்! தெங்கின் பழத்திலுள்ள முத்துக்கள், வைடூரியம், கோமேதகங்களைக்காட்டும்! ஓடையில் நிறைந்த கருங்குவளைப் பூக்கள், நீலத்தைக்காட்டும்! இயற்கையின் தோற்றத்தால் நவரத்னங்களையும் காட்டும் அம்மலையருவிக் கண்மையில் அமைந்துள்ள மயிலோன் ஆலயம். தமிழ் மக்களுக்குச் சொந்தமானது. "அவ்வாலயத்தில் மயிலோன் இருக்கின்றான்! அவனைக்கண்டால் ஆநந்தம் பெறலாம்! நான் அவனுக்கு வாகனமாய் இருக்கின்றேன்! எனக்கு எப்பொழுதும் இன்பத்தையே தருகின்றான்! அதனால் களியாட்டம் ஆடுகின்றேன்! கவலை என்பதை அறியேன்! நீங்களும் அவனைத் தொழுதால் என்னைப் போலாகலாம்! இது உண்மை", என்பதை அங்கு வரும் மக்களுக்குச் செய்கையாற் காட்டுவதுபோல அழகிய மயில்கள் தங்கள் தோகைகளை விரித்து ஆடிக்கொண்டே இருக்கும். உயிருள்ள அம்மயில் இனங்கள் தினந்தோறும் ஆடும் அவ்வாலய தரிசனத்துக்கு அநேகர் எந்நாளிலும் வருவர். வந்தாலும் கார்த்திகை நாளன்றுதான் கணக்கிலா மக்களைக் காணலாம்.

அந்நாளன்று அடிவாரத்தில் இருந்து அன்பர்கள் கையில் பால், பழம், தேங்காய், பூக்களைக்கொண்டு மலையில் படிப்படியாய் எறி வருவதைக் காண மிக மாட்சியாய் இருக்கும். அவ்வாறு எறி அலயத்தை அடைந்த அடியார்கள் கலியுக வரதனைக் கண்டானந்தித்து, கைகளைக் கூப்பித்தொழுது, தமது அன்பின் பெருக்கைக்

எழிலார் பினாங்கில் இந்துக்கள் கட்டி வைத்து
வழிபட்டுய் யுநல்ல மாரியம்மன் கோயிலிது.
1833-ம் ஆண்டில் நிறுவியது.



Mariamman Temple, Penang.

காட்டி அவனருள் பெறுவர். அவ்வமயம் கார்த்திகேயனின் தரிசனங்காண இன்று பலர் வருவார்கள் என்று எதிர்பார்த்திருப்பது போல அம்மலைக் காவில் வளரும் குரங்குகள் பல ஆலயத்தின் பக்கங்களிற் காத்திருக்கும். அவைகளுக்கு அன்பர்கள் தாங்கள் கொண்டு வந்த பழங்களைப்போடுவார்கள். அப்பழங்களைப் பற்றக் குரங்குகள் ஒன்றோடு ஒன்று சண்டையிடும். சில கிடைத்தவற்றைப் பற்றிக் கொண்டு பக்கத்தில் உள்ள மரக்கிளைகளில் தாவும். சில சிறு குட்டிகள் எடுத்த பழங்களைப் பெருங் குரங்குகள் பறிப்பதற்காகப் பாயும். இதைப்போன்ற பல காட்சிகளைக் காணும்போது உலக மக்களில் நல்லோர் கூட்டுறவும் நற்பழக்கமும் இல்லாதவர்கள், ஒன்றுபட்டு வாழாதவர்களின் திறத்தையும், தான் ஒருவன் வாழ்ந்தால் போது மென்றெண்ணிக் கிடைத்தவற்றைப் பற்றிக்கொண்டு இல்லத்தை அடையும் ஒருவரின் செய்கையையும், எளியாரை வலியார் வாட்ட நினைக்கின்ற கூற்றையும் பார்ப்பது போல விருக்கும். இவ்வியற்கை இன்பங்களோடு செயற்கை இன்பத்தையும் தருகின்ற இம்மலைக்கோயிலுக்கு தைப்பூச விழாவில் ஏராளமான காவடிகள் வரும். இளநீர், பால், சர்க்கரைகளைக் கொண்டு அக்காவடிகளைத் தூக்கி வரும் அன்பர்கள் உடலிற் குத்தப்பட்ட வேல்களுடனும், முதுகின் புறத்தே குத்தி இழுத்துவரும் தேர்களுடனும் மலையிற் படிப்படியாய் ஏறி வருவார்கள். அவ்வைபவங்களையும் அங்கு பூச விழாக்காண வரும் அன்பர்களுக்கு தமிழ் மக்கள் அன்னதானம் செய்யும் பெருமையையும் நேரிற் கண்டானந்திக்க வேண்டுமேயன்றி எழுத வொல்லாது. இச்சிறப்பு வாய்ந்த மலைக்கோயில் இந்து எண்டௌமெண்ட் போர்டாரின் கண்காணிப்பில் நடைபெற்று வருகிறது.

இம்மேல் மலையிலிருந்து மெய்யன்பர்களைக் காக்கும் கந்தன் எங்கும் இருக்கிறான். ஆயினும் அவனுக்கு உரியவையாக ஆறு படை வீடுகளைப் போற்றிப் பாடினார் நக்கீரர். அவர் பாடியவைகளில் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) திருவினன்குடி (பழநி) திருவேரகம் (சுவாமி மலை) குன்றுதோறாடல் (மலைக்கோயில் கொண்டுள்ள இடம் எங்கும்) பழமுதிர் சோலை (அழகர் கோயில்) களில் பழநியை ஞாபகப்படுத்துவது பினங்கு. பழநியில் அடிவாரக்கோயில், மலைக்கோயில் என இரண்டுண்டு. அதேபோல பினங்கிலும் மேற்கூறப்பெற்ற மலைக்கோயிலும் இனிக் கூறப்போகிற அடிவாரக்கோயிலும் சேர்ந்து இரண்டு இருக்கிறது. இவ்வடிவாரக்கோயில் 1857௵ டிசம்பர்௴ 12௳ நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் நிறுவப்பெற்றது. இவ்வாலயத்தின் மேற்

புறம் அமைந்துள்ள குன்றும், பூங்காவும் இயற்கையின் எழிலைக் காட்டுகின்றது. அக்குன்றிலிருந்து ஊறும் நீரைத்தான் கவர்ண்மெண்டார் ஊருக்குதவக்கட்டிபுள்ள குளத்தில் பெருக்குகின்றனர். (அவ்வழகிய குளத்தின்படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது) அக்குளத்துக்கு ஒதுக்கப்பெறும் நீரோ கொஞ்சம். ஊற்று நீரோ மிகுதி. அதனால் மிகுதியாகவுள்ள தண்ணீர் ஓர் ஆறுக ஓடுகின்றது. அவ்வாறு நகரத்தார்களால் நிறுவப்பெற்ற தண்ணீர்மலைக்கோயிலில் இருந்து தன்னடியார்களுக்குத் தண்ணருள் சுரக்கும் தண்ணீர்மலை ஆண்டவனின் தாளிணைகளைக்காணும் வணங்க ஓடிவருவது போல ஆலயத்துக்கு மேற்புறமாகவந்து வலப்புறமாக ஓடுகின்றது. ஆலயத்தின் கீழ்ப்புறமும், இடப்புறமும் ஆகாயத்தை யளாவி வளர்ந்த தெங்கின் சோலையும், மணத்தைத்தருகின்ற மலர் வனங்களும் இருக்கின்றன. மேற்புறம் ஓடிவரும் ஆற்றின் அண்மையில் அவ்வாற்றைத் தனக்குள் அடக்கிய தோட்டம் ஒன்றுண்டு. அதில் நகரத்தார் விழாக்காலங்களில் தங்குவதற்காக ஓர் அழகிய கட்டிடமும், நந்தவனமும் அமைத்திருக்கிறார்கள். இவ்வியற்கைத் தோற்றங்களின் எல்லைக்குள் மயிலேறும் பெருமானுக்கு அமைக்கப்பெற்றிருக்கிறது பெருத்த ஆலயம். அதனுள் பழநிமலையில் இருப்பதைப்போல பார்வதி பாலன், பத்தருக்குற்றவன், பாலதண்டாயுதன், தண்ணருட்சீலன், தண்ணீர்மலையாண்டவன் தங்கி இருக்கின்றான்.

அவனைக்காண பழநியிலோ மலையேற வேண்டும்! அன்பர்கள் அதனைப் பொருட்படுத்தாது ஏறுவர். அவனருள் பெறுவர். அம்மலையேற்றம் சிலர் உடலுக்குப் பொருந்தாது. அவர்களுக்கும் காட்சிகொடுக்கவேண்டுமென்று என்னுபவன் கந்தன். ஆகவே அங்குமலையிலிருக்கும் அத்தன், இங்கு (பினங்கு) அடிவாரக்கோயிலில் அமர்ந்து அன்பர்களைக் காக்கின்றான். இச்சிறப்பு வாய்ந்த இளங்குமரனுக்கு ஏராளமான விழாக்களை நகரத்தார்கள் நடத்துகிறார்கள். அவைகளில் தைப்பூச விழாச்சிறந்தது. அவ்விழாவன்று


[நேரிசை வெண்பா]

"தன் காவில் வண்டுமது தானுண் பினங்கிற்
றண்ணிமலை யாண்டவர்க்குத் தைப்பூச—மெண்ணி
நகரத்தார் கொண்டாடும் நல்லவிழாவன்று
நகரமெலாஞ் சேருமலை நாடி."

பினங்கு நகரத்திலுள்ள மக்கள் பல்லோரும் அங்குவந்து கூடி-

(32)

தண்ணீர்மலைத் தண்ணீர் குளம்.



Water Tank, Penang.

பிநெங்கு வெள்ளி இரதம்.



Silver Ratham Penang.

விடுவர். அவர்களோடு வெளியூர் அன்பர்கள் பலர் வந்து சேரு வர். இவர்கள் அனைவோரையும் வரவேற்று உபசரிப்பார்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்.

இவ்விழா நான்கு நாட்கள் கொண்டாடப் பெறும். அந்நாட்களில் தைப்பூசத்துக்கு முதல்நாள் காலை பினங்கு ஸ்ட்ரீட்டில் நகரத்தார்களால் அமைக்கப் பெற்றுள்ள தனது ஆலயத்திலிருந்து சந்தி வடிவேலன் வெள்ளி ரதமேறி வீதிகளில் உலாக்கொள்வான். அப்போது மாசற்ற வெண்டாமரை மலரைப் போன்று பல வயிர அணிகளால் அலங்காரங் கொண்ட கந்தனை அன்பர்கள் பல்லோர் சூழ்ந்து வருவர்! சிலர் காவடி தூக்குவர்! சிலர் தேவார, திரு வாசகங்களை ஓதுவர்! சிலர் பஜனை பாடுவர்! சிலர் பூதங்களைத் தூக்கி ஆடுவர்! பலர் பல வாத்தியங்களை முழக்குவர்! பலர் ஆல வட்டம், சுருட்டி, குடை, தோரணை விருதுகளைப் பிடிப்பர்! பல போலீஸ் வீரர் எல்லாவற்றையும் பாதுகாப்பர்! அத்துடன் ஒரு தெருச் சந்திப்பில் புறப்பட்ட இரதம் மறு சந்திப்பைச் சேரும் வரை அந்த வழியில் கார், ரிக்ஷா, டிராம் பஸ்கள் வராமல் தடுப்பர்! எலக்ட்ரிக், டிராம் கம்பெனிக்காரர் மின்சாரக் கம்பிகள் இரதத்தின் மேற்படாவண்ணம் தங்கள் ஆட்களைக்கொண்டு தூக்கிக் கொடுப்பர்! இவ்வையவங்களோடு இரதம் செல்லும் வீதிகள் எங்கும் முனிசிபாலிடியார் தண்ணீர் தெளிப்பர். இத்தகைய சிறப்புடன் விழாக்கொண்ட கந்தன் பகற்போதில் தண்ணீர் மலையிலுள்ள தனது ஆலயத்தைச் சார்ந்து தன்னை நாடிவரும் அன்பர்களுக்குத் தண்ணருள் சுரப்பான். அவனை நாடிவரும் அன்பர்களுக்கும், விழாக் காணவரும் மேலோர்களுக்கும் அங்கு நகரத்தார்களால் அன்னமளிக்கப் பெறும்.

அவ்வன்னதானமும் விழாவும் வேண்டுமா? என்பது இக் காலத்தில் சிலரது கேள்வி. அவை வேண்டுவது அவசியம். அதுவே இம்மை மறுமைப் பயன் இரண்டையும் தரும் என்பது சித்தாந்தக்காரர்களின் துணிபு. இவ்விறைவன் விழாவையும் அடியார்களுக்கு அன்ன மிடுவதையும் கைக்கொண்டவர்களே உலகில் தோன்றியதின் பயனைப் பெறுவர். இது உண்மை என்பதை எடுத்துக் காட்டினார் சைவ சமய ஆச்சாரியார்களில் ஒருவரான தமிழ் ஞானசம்பந்தர். அத்திருஞான சம்பந்தரின் அன்பர் சிவநேசச் செட்டியார். அவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர். அவரின் அருந்தவத்தால் ஓர் பெண் மகவைப் பெற்றார். "பூம்பாவை" எனப்பெயருமிட்டார். பாவையும் வளர்ந்து பேதைப்பருவத்தைப்

பெற்றாள். இப்பாவையின் கணவனாக வருவோனுக்கே எனது நிதியைக் கொடுப்பேன். அவன் அதைக் காக்கத் தகுதியுடையவனாய், அரனாருக்கன்பனாய், அடியாருக்கெளியனாய் இருக்கவேண்டும். இதுவே உறுதி என்று கூறினார் சிவநேசர். அப்போது அங்குவந்த அன்பர்கள் பல்லோர் ஞானக்கன்று மதுரையில் நடத்திய அற்புதங்களைக் கூறினார்கள். அதைக்கேட்டதும் ஞானசம்பந்தமே தனது உயிர். அதுவே தனது தவப்புதல்வியின் பதி எனத்திடங்கொண்டிருந்தார். திடமுற்ற சின்னாளில் ஓர் நாள் தந்தையின் பூசைக்குப் பூக்கொய்யப் பூம்பாவை சேடியருடன் நந்தவனம் புகுந்தாள். அங்கு மல்லிகைப் பந்தலில் மறைந்து கிடந்த நல்லரவு தீண்டிற்று. அதனால் பூம்பாவையின் உடல் உயிர் நீங்கிய பொற்பாவையாக மாறிவிட்டது! தாதியர் தவித்தனர்! தந்தையாருக்கு அறிவித்தனர்! எல்லோரும் கூடினர்! மந்திர, தந்திரங் கற்ற பலர் வந்தனர்! யார் வந்தும் பலனில்லை. செல்வமாய் வளர்த்த சேயிழை உயிர் நீத்தாள்! உடலை வைத்துக்கொண்டு உருகிய சிவநேசருக்கு மெய்யறிவு தோன்றியது! அதற்கு நாம் என் வருந்துகின்றோம்! இவ்வுடல் ஞான சம்பந்தருக் குரியதன்றோ! அப்படியே வைத்திருந்து அவர் வரும்போது கொடுப்போம்! இதுவே சரி! என்றெண்ணினார். அவ்வுடலைச் சுட்டுச் சாம்பராக்கினார். ஓர் குடத்தில் அடைத்தார். அக்குடத்தை அலங்கரித்து கன்னிகாமாடத்து வைத்தார். தெய்வமாக எண்ணித்தினப்படி பூசை நடத்தினார். சின்னாட்கள் கழிந்தது. ஓர் நாள் திருவொற்றியூருக்கு வந்தார் திருஞான சம்பந்தர். அவரை வரவேற்று வணங்கினார் சிவநேசர். அண்மையிலுள்ள தனது (மயிலாப்பூர்) ஊரில் நடந்தவைகளைக் கூறினார். ஞானப்பாலுண்ட நாவலர் அக்குடத்தைக் கொண்டுவரச் சொன்னார். அதற்கு முன்னதாக தமிழ் மறையை ஓதினார். அம்மறைக்கு அருள் புரிந்தார் அரனார். பூம்பாவையாரும் குடத்துனுள்ளிருந்து பன்னிரண்டு வயதைப்பெற்ற மங்கைப் பருவத்தோடு வெளிவந்தார். சம்பந்தரின் தாளிணைகளைப் பணிந்தார். அப்பாவையாரை உருப்பெற்று வரும்படி அழைக்கும்போது ஞான சம்பந்தர் எதை உவமை கூறினார் ?

“மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்”

(பெரியபுராணம். திருஞானசம்பந்தர். 1087)

என்றுகூறி அழைத்ததாய்ச் சேக்கிழார் பெருமான் தெரிவிக்கின்றார். இறைவன் திருவிளையாடல்களையும் அவனன்பர்களின் பக்திமேலீட்டையும் பாடிப்பாடிப் பரவசம் அடைவோருக்கு இவை உண்மை என்பது புலப்படும். இவ்வுண்மையைப் பின்பற்றி இறைவனுக்கு விழாக்கள் நடத்துவதும் அவனடியார்களுக்கு அ[illegible] இவ்வுலகிற் பிறந்தவர்கள் பெறும் பயன் என்பதை எற்பவர்கள் சித்தாந்திகள். அவர்களைச்சார்ந்தவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். ஆகவே இவர்கள் கொண்டாடும் விழாக்களிலும் ஏழைகளுக்கு அன்னமிடுகிறார்கள்.

இங்கு (பினங்கில்) கொண்டாடப்பெறும் தைப்பூசவிழாவில் பூசத்தன்று ஏராளமான மக்கள் வருவார்கள். இவர்கள் கொண்டு வரும் காவடிகள் எண்ணிக்கையில் அடங்கா. வேல், இரதங்களுடன் வரும் காவடிகள் சந்நிதியில் நின்று ஆடும் காட்சி அளவிடற்கரியது. இக்காவடிகளோடு மாதர்கள் மஞ்சள் ஆடைபுனைந்து மாவிளக்கை கையிற்கொண்டுவரும் காட்சி மனதிற்குப் பரவசத்தைத்தரும். இவ்வாறுவரும் மக்கள் அனைவோருக்கும் சோறுபோடப் பரிமாறு முறைகளை நகரத்தார் தங்களுக்குள் பல பந்திகளாய்ப்பிரித்து முறையோடு பரிமாறுவர். இவ்விழாவைச் சிறப்பாக நடத்துவதற்காக பினங்கில் உள்ள நகரத்தார் அனைவோரும் தாங்கள் வசிக்கும் பினங்கு ஸ்ட்ரீட் வீடுகளைவிட்டு நான்கு நாளும் தண்ணீர்மலைக் கோயிலிலேயே இருப்பர். பெருத்த லேவாதேவித்தொழிலைச் செய்யும் இவர்கள் இங்கு வசிக்கிறார்கள்! அதனால் பொருட்குவியலும் இங்குதான் இருக்கும்! அத்துடன் பூசவிழாக்கான நகரமே திரண்டு வந்துவிட்டது! தமிழ் மக்கள் பல்லோர் இருக்கின்றனர்! இனி நாம் மட்டிலும் நகரில் இருந்து என்ன செய்வது! நாமும் தண்ணீர்மலையை நாடுவோம்! அங்கு எற்படும் பலனையும் பெறுவோம்! என்று எண்ணிப்பல வியாபாரிகள் அங்குவந்து கடைகளைத் திறப்பார்கள். ரிக்ஷா, வாடகைக்கார், டிராலிபஸ்காரர்கள் வந்து தண்ணீர்மலை—பினங்கு என்று கூறிக்கொண்டே நிற்பார்கள். இக்கூட்டங்களையும் இறைவனின் அலங்கார அணிகளையும் கண்டுகளிக்க பினங்கிலுள்ள ரெஸிடெண்ட் கவுன்சிலர் மற்ற உத்தியோகஸ்தர்களும் பல ஐரோப்பியர்களும் கூட்டம் கூட்டமாய் வருவர். இவர்களையும் வரவேற்று உபசரிப்பார்கள் நகரத்தார்.


இவ்வுபசாரங்களாலும், விழாக் காணவருவோர் அனைவோருக்கும் சோறு போடுவதாலும் செட்டியார்களில் இளைஞர், வாலிபர், முதியோர் எல்லோரும் உடற் சோர்வைப் பெறுவர். இவ்விழா

வைக்காண வெளியூர்களில் இருந்து பல நகரத்தார் வருவர். இவர்கள் தங்குவதற்கும், உள்ளூர் அன்பர்களில் சோர்வு பெற்றார் உடலுளைப்பை மாற்றிக் கொள்வதற்குமாக ஆலயத்தின் மேற்புறம் ஆற்றின் அண்மையில் தெற்கு முகமாய் அமைக்கப் பெற்றுள்ள அழகிய பங்களா ஒன்றுண்டு. (முன் கூறப்பெற்றிருக்கிறது) அதில் காலை, மாலை, இரவு நேரங்களில் தங்கி சிற்றுண்டி, உணவு அருந்துவர். அவ்வுணவோடு அவ்வமயம் ஆங்கு ஓடிவரும் அருவி நீரின் தன்மையும் பக்கத்திலுள்ள மலைப் பூங்காவின் மந்தமாருதமும் இன்பத்தை யூட்டும். அதனால் மறுநாளும் தங்கள் தொண்டுகளைச் செவ்வனே ஆற்ற ஒவ்வொருவராலும் இயலும். இவ்வாறு எல்லா வசதிகளுக்கும் பெரும் பொருட் செலவு செய்துள்ள நகரத்தார் அங்கேயே தங்கி நான்கா நாள் மாலை மறுபடியும் மயிலோனை மின்சார விளக்குகளின் ஒளி மிகுந்த வெள்ளி ரதத்தேற்றிக் காண்போர் மகிழக் கொண்டுவருவர். அன்று வாண வேடிக்கை நடைபெறும். அக்காட்சி காண வரும் மக்கள் கணக்கில் அடங்கா! பினாங்கிலுள்ள மக்களைக் கணக்கெடுக்க கவர்ன்மென்டார் நினைத்தால் அன்று எடுக்கலாம். அதுகூடக் கொஞ்சம் சிரமந்தான். எதனால்? பெருங் கூட்டத்தின் மக்களை எண்ணமுடியாததொன்று. மற்றொன்று வெளியூர்களில் இருந்து இதற்கென வந்துள்ள கூட்டம். (இப்பெருங் கூட்டத்தைத் திரட்டுகின்ற வாண வேடிக்கை கடந்த ஆண்டில் சில காரணங்களால் நின்றுவிட்டது.) பல வழியாலும் பல சமூகத்தினரையும் மகிழ்விக்கச் செய்யும் பால்வடிவேலனை அன்றிரவு தமது பினாங்கு ஸ்ட்ரீட்டின் ஆலயத்திற் சேர்த்து பூசைகள் நடத்திப் பலன் பெறுவார்கள் நகரத்தார். இவர்கள் நடத்தும் விழாவுக்குப் பல வழியாலும் கவர்ன்மெண்டார் உதவி புரிகிறார்கள்.

இவ்வாறு பலருக்கும் காட்சி கொடுக்கும் கந்தன், நகரத்தார்களின் பெருநிதியாகிய நம்பன், வேண்டுவார் வினையெலாம் போக்கும் வேலனைத் தினம் துதிப்பவர்கள் செட்டியார்கள். அவ்வாறு துதிக்கும் இவர்கள் பினாங்கில் குடியேறினார்கள். பினாங்கிலுள்ள அருட்சத்திவேலோ அருவியில் நின்றது. அதனால் அவ்வுருவைத் தினம் சென்று வணங்க இயலாதிருந்தது. அதற்காக அவ்வேலனுக்கு தாங்கள் வசிக்கும் இடத்திலேயே ஆலயம் காண எண்ணினார்கள். அவ்வெண்ணம் 1850௵ ஆகஸ்ட்மீ 9உ கைகூடியது அன்றுமுதல் கந்தனுக்குச் சொந்தமாய் வாங்கிய பினாங்கு ஸ்ட்ரீட் 138ம் நம்பர் இல்லத்தின் மேல்மாடியில் ஓர் ஆலயம் அமைத்து வேலன் திருவுருவை வைத்து வணங்கி வருகின்றனர். இங்கு காலை,

(34)

பட்டினமாம் பினாங்கில் பன்னாளாய் வாழ்நகரச்
செட்டியார்கள் கட்டிவைத்த சிவன்கோயில்.



Sivan Temple of Penang.

மாலை இரு நேரங்களிலும் அன்பர்கள் வந்து போற்றி இன்பம் பெறுவர். இங்கிருந்தே தைப்பூச விழாவுக்கு இரத்தினலங்காரத்துடன் இரதமேறிச் சென்று வருவான் கந்தன். இவ்வாலயத்தையும் தண்ணீர்மலையில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணியின் ஆலயத்தோடு சேர்த்து நடத்தி வருகிறார்கள் நகரத்தார்.

இத்துடன் டத்தோ கிராமா ரோட்டிலுள்ள சிவன் கோயிலையும் நடத்தி வருகிறார்கள். இவ்வாலயம் இந்துக்களால் நிறுவப்பெற்றது. சிறு கட்டிடத்தில் இருந்த சிவபெருமான் வழிபாட்டைச் செவ்வனே நடத்த எண்ணினார்கள் நகரத்தார். 1871ஆம் ஜூலை 3உயில் தங்கள் ஆதீனத்துக்குட்படுத்திச் சுதந்தரம் பெற்றார்கள். ஆலயத்தைப் பெரிதாக்கினார்கள். மகா மண்டபம், சுற்றுப் பிரகாரம், கோபுரம், திருமதில் முதலிய திருப்பணிகளைச் செய்தார்கள். அவ்வாலயத்திற் குடிகொண்டிருந்த ஓங்காரமூர்த்தி, மார்க்கண்டேசுவரர், மங்களாம்பிகையுடன் மற்ற பரிவார தேவதைகளையும் வைத்தார்கள். கும்பாபிஷேகம் செய்தார்கள். இப்போது தினப்படி பூசை நடத்தி சில திருவிழாக்களும் கொண்டாடுகிறார்கள். இவ்வாலயத்துக்கு நகரத்தார்களும், மற்றவர்களும் தினப்படி வந்து தரிசித்து இன்புறுவர். வெள்ளி, திங்கட்கிழமைகளிலும், விசேட நாட்களிலும் பலர் வந்து தொழுது பலன் பெறுவர். எல்லோருக்கும் காட்சி கொடுத்து இன்னருள் சுரக்கும் இறைவனின் சிவன் கோயில் இன்று உன்னத நிலையில் இருக்கிறது. இதற்குக் காரணம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்தான் என்பதை இன்னுமொரு முறை கூற வேண்டுமோ?

இக்கோயில்களோடு குவீன் ஸ்ட்ரீட்டில் மாரியம்மன் கோயில் ஒன்றிருக்கிறது. இவ்வாலயம் இந்து மக்களால் 1833ஆம் நிறுவப் பெற்றது. இத்துடன் பினாங்கு ரோட்டில் கிருஷ்ணன் கோயில் ஒன்றிருக்கிறது. இவ்வாலயத்தின் பூசகர் பெங்கால் பிராமணராவர். கண்ணன் தரிசனத்துக்கு வரும் அன்பர்களிடம் அவர் காட்டும் அன்பு குறிப்பிடத்தக்கது. இவ்வாலயங்கள் இந்து என்டௌமென்ட் போர்டார் கண்காணிப்பில் இருக்கின்றன. இவ்வாலயங்களில் மேல்மலைக்கோயில், தண்ணீர்மலையாண்டவர் கோயில், சிவன் கோயில், மாரியம்மன் கோயில்களின் படங்கள் இந்நூலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

இந்து மக்களைப் போல ஆலயங்கள் கட்டுவதில் சீனர்களும் சிறந்தவர்கள். இவர்களிற் பெரும்பான்மையோர் பௌத்த சமயத்

மாலை இரு நேரங்களிலும் அன்பர்கள் வந்து போற்றி இன்பம் பெறுவர். இங்கிருந்தே தைப்பூச விழாவுக்கு இரத்தினலங்காரத்துடன் இரதமேறிச் சென்று வருவான் கந்தன். இவ்வாலயத்தையும் தண்ணீர்மலையில் எழுந்தருளியிருக்கும் தண்டபாணியின் ஆலயத்தோடு சேர்த்து நடத்தி வருகிறார்கள் நகரத்தார்.

இத்துடன் டத்தோ கிராமா ரோட்டிலுள்ள சிவன் கோயிலையும் நடத்தி வருகிறார்கள். இவ்வாலயம் இந்துக்களால் நிறுவப்பெற்றது. சிறு கட்டடத்தில் இருந்த சிவபெருமான் வழிபாட்டைச் செவ்வனே நடத்த எண்ணினார்கள் நகரத்தார். 1871௵ ஜூலை 3உ-யில் தங்கள் ஆதீனத்துக்குட்படுத்திச் சுதந்தரம் பெற்றார்கள். ஆலயத்தைப் பெரிதாக்கினார்கள். மகா மண்டபம், சுற்றுப் பிரகாரம், கோபுரம், திருமதில் முதலிய திருப்பணிகளைச் செய்தார்கள். அவ்வாலயத்திற் குடிகொண்டிருந்த ஓங்காரமூர்த்தி, மார்க்கண்டேசுவரர், மங்களாம்பிகையுடன் மற்ற பரிவார தேவதைகளையும் வைத்தார்கள். கும்பாபிஷேகம் செய்தார்கள். இப்போது தினப்படி பூசை நடத்தி சில திருவிழாக்களும் கொண்டாடுகிறார்கள். இவ்வாலயத்துக்கு நகரத்தார்களும், மற்றவர்களும் தினப்படி வந்து தரிசித்து இன்புறுவர். வெள்ளி, திங்கட்கிழமைகளிலும், விசேட நாட்களிலும் பலர் வந்து தொழுது பலன் பெறுவர். எல்லோருக்கும் காட்சி கொடுத்து இன்னருள் சுரக்கும் இறைவனின் சிவன் கோயில் இன்று உன்னத நிலையில் இருக்கிறது. இதற்குக் காரணம் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்தான் என்பதை இன்னுமொரு முறை கூற வேண்டுமோ ?

இக்கோயில்களோடு குவீன் ஸ்ட்ரீட்டில் மாரியம்மன் கோயில் ஒன்றிருக்கிறது. இவ்வாலயம் இந்து மக்களால் 1833௵ நிறுவப் பெற்றது. இத்துடன் பினாங்கு ரோட்டில் கிருஷ்ணன் கோயில் ஒன்றிருக்கிறது. இவ்வாலயத்தின் பூசகர் பெங்கால் பிராமணராவர். கண்ணன் தரிசனத்துக்கு வரும் அன்பர்களிடம் அவர் காட்டும் அன்பு குறிப்பிடத்தக்கது. இவ்வாலயங்கள் இந்து எண்டௌமெண்ட் போர்டார் கண்காணிப்பில் இருக்கின்றன. இவ்வாலயங்களில் மேல்மலைக்கோயில், தண்ணீர்மலையாண்டவர் கோயில், சிவன் கோயில், மாரியம்மன் கோயில்களின் படங்கள் இந்நூலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

இந்து மக்களைப் போல ஆலயங்கள் கட்டுவதில் சீனர்களும் சிறந்தவர்கள். இவர்களிற் பெரும்பான்மையோர் பௌத்த சமயத்

தினர். அச்சமயத்துக்கும் நமக்கும் அதிகத் தொடர்புண்டு. (அதை பௌத்த சமயமும் புத்தர் சங்கமும் என்பதில் விளக்கிக் கூறப்பெறும்.) அவர்களால் இந்நாட்டில் ஏராளமான ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் இங்கு (பினங்கில்) உள்ள ஆயர் ஈத்தாம் கோயில் மிகச் சிறந்தது. இக்கோயில் ஓர் உயர்ந்த குன்றில் அமைக்கப் பெற்றுளது. இதனடியில் இருந்து பலபடிகள் வளைவு வளைவாய்க் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் வளைவுகள் முடிவுபெறும்போதும் ஒவ்வோர் ஆலயமும் பல சிலைகளும் இருக்கின்றன. அவைகள் பலவற்றையும் கடந்து சென்றால் பெரிய புத்த உருவமுள்ள ஆலயத்தை அடையலாம். அதற்கு மேலுள்ள உச்சிமலையில் ஓர் மாமிருக்கிறது. ஓர் ஆலயமும் கட்டப் பெற்றிருக்கிறது. இம்மலை ஏறுவது கொஞ்சம் கடினமாய் இருக்கும். இருப்பினும் அங்கு செல்லும் அச்சமயத்தினர். அன்பின் பெருக்காலும், மற்றவர்கள் அக்காட்சியைக்காண வேண்டுமென்ற அவாவாலும் ஏறியே தீர்வர். அங்கு ஏறிநின்று பார்த்தால் பினங்கின் பெரும் பகுதியைக் காணலாம். அவ்வுயரிய கோயிலில் பல துறவிகள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு உரிய கட்டிடங்களும் இருக்கின்றன. அவ்வாலயத்தின் அடிவாரத்தின் ஓர் பகுதியில் இரண்டு சிறிய குளங்கள் கட்டி அதில் பல ஆமைகளை வளர்க்கிறார்கள். இந்துக்கள் பல பிராணிகளை இறைவனின் வூர்திகள் எனக்கொள்வது போல சீனர்களும் ஆமையை எண்ணுவார்கள். அதனால் அக்குளங்களில் வளர்க்கப் பெறும் ஆமைகளுக்கு அங்கு செல்வோர் ரொட்டி, கிரைகளை வாங்கிப்போடுவர். இவைகளை ஆமைகள் தின்று இன்புறும். அவைகளைக் கண்டு மக்கள் அகமகிழ்வர்.

இவ்வாலயத்தோடு பினங்கிலிருந்து வாயலெப்பாஸ் செல்லும் வழி 9வது மைலில் ஓர் ஆலயமுண்டு. அதில் பல வகையான பாம்புகள் வளர்கின்றன. இவ்வாலயத்தை மக்கள் பாம்புக் கோயில் என்றழைப்பர். இங்கு பாம்புகளைக் காணவரும் மக்களை அவைகள் துன்புறுத்தா. அப்பாம்புகளுக்கு பார்க்க வருவோர் முட்டைகளை வாங்கி வைப்பர். அவைகளைக் குடித்துப் பாம்புகள் மகிழ்வுற்று ஆலயத்திலுள்ள தூண்களில் ஏறிக்கொள்ளும். இதனைக் கண்டு மக்கள் இன்புறுவர். இக்காட்சிகளை யளிக்கும் ஆலயங்களை சீன மக்கள் நடத்தி வருகின்றனர். இதேபோல உள்ள பல ஆலயங்களில் அவர்கள் நடத்தும் விழாக்களும், கொண்டாட்டங்களும், கூத்துகளும், பூசைகளும், சுவாமியாட்டங்களும் மிகுதி. அவைகள் ஒவ்வொன்றும் நமது பண்டைக்கால இலக்கியங்களிற் கூறப் பெறும்

கதைகளையும், வடிவங்களையும் ஞாபக மூட்டும். அவைகளை நேரிற் கண்டாநந்திப்பதே சிறந்தது.

செட்டியார்களும் சீர் திருத்தமும்

செட்டியார்கள் கோயில்களைக் கட்டுவார்கள்! விழாக்களைக் கொண்டாடுவார்கள்! லேவர்தேவித் தொழிலைச் செய்வார்கள்! வேறொன்றும் அறியார்கள்! உலகப் போக்கை உணரார்கள்! சீர் திருத்தம் இன்னதென்பதைத் தெரியார்கள்! என்று சிலர் குறை கூறுகின்றனர். எழுதுகின்றனர். அப்படிக் கூறுபவர்களும், எழுதுபவர்களும் யார்? அவர்கள் தான் யாரைத் தூற்றுவோம்! எச் சமூகத்தைப் பழிப்போம்! எச்சமயத்தை இழிவு கூறுவோம்! எவ்வினத்தவரைக் கழிப்போம்! என்ற கோட்பாடுள்ள ஒரு சிலர். அவர்கள் கூறும் குறைகள் பல. அவைகளிற் சில எவரிடமும், எந்நாட்டிலும் இருக்கும். அதை அறிஞர்கள் ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள். ஒவ்வொரு நாட்டாரிடமும் உள்ள உயர்வுகளையே கைக்கொள்வார்கள். அதைப்பலர் அறியவும் விளக்குவார்கள் எழுதுவார்கள். இதுவே அறிஞர்களின் கடமை. இவ்வாறு இன்றி குறைகளையே எழுதுபவர்கள் அறிஞர்கள் அல்லவா? அவர்களும் கற்றுத் தேர்ந்தவர்கள் தானே? அவர்கள் அறியாது எழுதுவார்களா? என்று சிலர் கேட்கக் கூடும். அப்படிக் கேட்பவர்களுக்கு அவர்கள் அறியாமல் தான் எழுதுகிறார்கள் என்று துணிந்து கூறலாம். எதனால்?

ஒவ்வொரு நாட்டவருக்கும் ஒவ்வொரு சமூக, சமயத்தவருக்கும் பழக்கங்கள், கொள்கைகள் வெவ்வேறு. அவரவர்களும் அந்தந்தக் கொள்கைப்பழக்கங்களைப் பின்பற்றி நடப்பார்கள். அவர்களில் உள்ள பேரறிஞர்கள் காட்டிய வழி, காட்டும் வழிகளை உயர்வெனக் கருதுவார்கள். அப்படிக் கருதுவோரின் கொள்கைகளை உணராது, அவர்கள் சீர் திருத்தம் அறியாதவர்கள் என்று ஒருவர் எழுதினால், அவரை அறிஞர் என்று எவ்வாறு ஏற்பது? சின்னாள் முன் இம்மலாயாவைப்பற்றிய சரித்திரம் ஒன்று எழுத ஓர் அறிஞர் வந்தார். அவருக்குப் பல மேனாட்டு அன்பர்கள் பணங்கொடுத்து உதவினார்கள். அவரும் இங்கு ஓராண்டு இருந்தார். சில ஆங்கிலேய நண்பர்களுடன் பழகினார். பல இடங்களுக்கும் சென்று ஆராய்ந்தார். இறுதியில் தன் ஆராய்ச்சிகளைத் திரட்டி எழுதினார். அதில் "மலாயாவில் ஐரோப்பியர்களுக்கே சொத்து அதிகம். அவர்களை அடுத்துப் பல சீனர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு

கூலி வேலை செய்பவர்களாக இந்தியர்கள் இருக்கிறார்கள்." என்று எழுதியிருக்கிறார். அவர் கூறி இருப்பதில் இருந்து அவர் ஆராய்ச்சியில் தோட்ட வேலை செய்யும் ஒரு பகுதியினரே தென்படுகின்றனர். பல சொத்துக்களுக்கு உடையவர்களான செட்டியார்களும், இந்தியர்களும் தென்படவில்லை எனத் தெரிகிறது. இதே போல இன்னும் பலர் எழுதி இருக்கிறார்கள். அப்படி எழுதியவர்கள், எழுதுபவர்கள் எல்லாம் திரு. சோலன்ட் பிராடல் எழுதிய புத்தகத்தில் பொதுவாக இந்தியர்களையும் சிறப்பாக செட்டியார்களையும் குறித்து எழுதி இருப்பவைகளை ஓர் முறை படித்துப் பார்க்க வேண்டும். பார்த்தால் தெரிந்து கொள்வார்கள்.

இதேபோல செட்டியார்களின் பழக்க வழக்கங்கள் தெரியாத ஒரு சிலரே இவர்களைக் குறை கூறுகின்றனர். அதை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆயினும் அவர்கள் கூறுவது போல செட்டியார்கள் சீர்திருத்தம் உணராதவர்களா? சீர்திருத்தம் என்பதுதான் என்ன? உலகப் போக்கை உணர்ந்து, காலத்துக்கு ஏற்றவாறு தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்வதே. அப்படி மாற்றுவதில்தான் பலர் பலவித நோக்கங் கொள்வர். அவைகளில் தங்கள் கொள்கை, பழக்கங்களுக்கு முரண் ஏற்படாதவைகளைக் கைக்கொள்ள வேண்டுவதே அறிஞர் கடன். அவ்வாறு கைக்கொண்டு நடப்பதில் செட்டியார்கள் பிற்போக்குடையவர்கள் அல்லர். அத்துடன் உலகம் எவ்வழிச் செல்கிறதோ அதைப் பின்பற்றுபவருமாவர். உலகம் என்பது எது? "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது தொல் காப்பியம். உயர்ந்தோர் யார்? கற்றுத் தேர்ந்த பேரறிஞர்கள். அவர்கள் கூறும் வழியாதோ? அதைக் கடைப்பிடிக்க வேண்டுவதுதான். அவ்வாறாயின் இப்போது சீர்திருத்தம் என்பதை செட்டியார்கள் உணரவில்லை என்று கூறுவோரும் கற்றுத் தேர்ந்தவர்கள் தானே? அவர்கள் கூறுவதை ஏன் கைக்கொள்ளக் கூடாது? என்ற கேள்விகள் பல எழலாம். அதைப் பின்பற்றுபவர்களும் சிலர் இருக்கின்றனர். அது அவரவர் அறிவு, ஆராய்ச்சித் திறனைப் பொறுத்தது. ஆயினும் அவர்கள் கூறுவது பொருந்தத் தக்கதல்ல. அவர்களைப் பேரறிஞராகக் கொள்ளவு முடியாது என்பது பலரது துணிபு. எதனால்? அவர்கள் எத்துணை நூல்களைக் கற்றிருந்தாலும் உலகத்தோடு சேர்ந்து வாழ்வதைக் கற்கவில்லையாதலினால்.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்பது வள்ளுவர் வாக்கு. அவர் கூறியதுபோல உலகக் கல்வியை, பழக்கத்தைக் கற்காதவர்களை ஒன்றுமே கற்காதவர்கள் என்று விட்டுவிட வேண்டியதுதான். அதைவிடுத்து ஒவ்வொருவரும் தம் தம் சமய, சமூகப் பெரியார்கள், உலக அநுபவ முதிர்ந்த பேரறிஞர்கள் கூறுவதைப் பின்பற்றி நடக்க வேண்டியதுதான். அதுவே உலக வாழ்க்கையின் பலனையும் தரும். இதைச் செட்டியார்கள் சமூகம் எத்தனையோ ஆண்டுகட்கு முன்பே அறிந்திருக்கிறது. இதைத் தங்கள் சமூகத்தில் புகுத்த முயற்சி எடுத்த அன்பர்கள் பலர். அவர்களாற் காணப்பட்டதே தனவைசிய ஊழியர் சங்கம். அச்சங்கம் செய்த வேலையால் பலர் முன்னேற்றமடைந்தனர். சிலர் பண்டிதரானார்கள். சிலர் பத்திரிகாசிரியர்கள் ஆனார்கள். சிலர் நூலாசிரியராயினர். சிலர் பாரிஸ்டர் ஆயினர். சிலர் வக்கீல்கள் ஆனார்கள். இன்னும் சிலர் பல தொழில்களிலும் ஈடுபட்டனர். அவர்களில் திரு. ஆவிடையப்ப செட்டியார் பறவைக் கப்பலைச் செலுத்தப் பயின்றார். நான்கு ஆண்டுகட்கு முன்பு அவர் சொந்தமாக ஓட்டி வந்த விமானம் "வாபலெப்பாஸ் திடலில்" வந்திறங்கிய போது நேரிற் கண்டு களித்தவர் பலர். இவர்களில் ஆங்கிலேயர் சிலர். இவரைப்போல இன்னும் சிலர் விமானம் ஓட்டக் கற்றிருக்கின்றனர். இதேபோல செட்டியார்களால் எதையும் செய்து காட்ட முடியும் என்பதை செய்கையால் பல இளைஞர்கள் காட்டுகின்றனர். இன்னும் காட்ட விழைகின்றனர்.

இதைச் செட்டியார்கள் சமூகத்தில் புகுத்திய அன்பர்கள் பல்லோரில் திரு. மு. சின்னையா செட்டியார் ஒருவர். இவர் மகிபாலன் பட்டியில் பிறந்தவர். இவருடைய தமையனாரே "பண்டிதமணி" என்ற பட்டம் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்போது தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் திரு. மு. கதிரேசச் செட்டியாராவர். அவர் 1881-ம் ஆண்டிற் பிறந்தவர். அவருக்கு இளையாராக சில ஆண்டுகள் பின் தோன்றிய திரு. சின்னையா செட்டியார் இளமையிலேயே தீவிர சீர்திருத்த வாதியாக விளங்கினார். குலத் தொழில் கருதி இங்கும் (பினாங்கு) நங்குரும்பையிலும் பலகாலம் வசித்தார். அவ்வமயம் சுமார் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே சமூக சீர்திருத்த சம்பந்தமாய் எங்கும் சொற்பொழிவாற்றினார். அன்று உலகம் இருந்த நிலையில் இவருக்கும் பல எதிர்ப்புகள் இருந்தன. அவைகளை இவர் பொருட்படுத்தவில்லை. தன் சமூகம் எப்படியும் முன்னேற்றமடைந்தால் போதும் என்று ஒன்றையே எண்ணினார். அதற்காக ஆற்றிய சொற்பொழிவுகளோடு பல பத்திரிகைகளில் கட்டுரைகளை

எழுதினார். சில நூல்களை (புத்தகங்களை) வெளியிட்டார். அதனால் சமூகத்துக்கு ஏற்பட்ட நலன்கள் பல. அத்தொண்டாற்றிய இவருக்கு இப்போது வயது 50 ஆகும். இன்னமும் சீர்திருத்த ஆர்வத்தால் இளைஞர்களைப் போன்று சுறுசுறுப்புடன் கட்டுரைகளை எழுதிப் பத்திரிகைகளின் வாயிலாக சமூகத்துக்கு தொண்டாற்றிக்கொண்டே இருக்கிறார். இவர் கூறுகின்ற, எழுதுகின்ற சீர்திருத்தங்களிற் பல, பலருக்கும் உலகத்துக்கும் பொருந்தக் கூடியனவாய் இருக்கின்றன. ஆகவே அவைகளைப் பலர் பின்பற்றுகின்றனர். இவரைப் போன்று இன்னும் பல சீர்திருத்த வாதிகள் இருக்கின்றனர். அவர்கள் எல்லோருமே உலகப் போக்கை உணர்ந்து, காலநிலைக் கேற்றவாறு சமூகத்தை சீர்திருத்தத் தொண்டாற்றுகின்றனர். அதனால் செட்டியார்களிற் பல்லோர் சிறந்து விளங்குகின்றனர். இத்தொண்டாற்றுவோரின் கொள்கை எக்காரியங்களையும் பதறாது செய்யவேண்டும். சமூகத்தில் சீர்திருத்தத்தைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் புகுத்த வேண்டும் என்பதாகும். அதை அனைவரும் ஏற்கின்றனர். அதன்படி நடக்கின்றனர். அது கூடாது. இன்னும் தீவிரமாகச் செல்லவேண்டும் என்பது சிலர் கொள்கை. அது பொருந்தாது. எவரையும் படிப்படியாகத்தான் உயர்த்த வேண்டும். திடீரென உயர்த்தினால் நிர்வகிக்க முடியாது. இது உலகம் அறிந்ததே.

ஓர் நண்பர் புதிதாகப் பணக்காரர் ஆனார். அவருக்கு ஓர் பட்டமும் கிடைத்தது. அவரை ஓர் ஆங்கிலக் கனவான் விருந்துக்கு அழைத்தார். நண்பரும் அதை ஏற்றார். பக்கத்தில் இருந்தோர் ஆங்கிலருடன் விருந்துண்ணச் செல்லும்போது அதற்கேற்ற நாகரிகத்துடன் செல்ல வேண்டுமெனக் கூறினர். உடைகளை மாற்ற வேண்டுமென்றனர். இவரோ தன்னாட்டு உடையிலேயே பழக்க முற்றிருந்தவர். ஆங்கில முறையில் ஹாட்டும், சூட்டும், பூட்ஸும் அன்று வரை அணிந்து பழக்கமில்லாதவர். என்ன செய்வது! விருந்து ஒரு புறம்! அவ்விருந்தில் கலந்து கொள்ளும் ஆங்கிலேயருடன் தானும் ஓர் ஆங்கிலனாக வேண்டும் என்ற ஆசை ஒரு புறம்! அண்மையிலுள்ள நண்பர்கள் கூறியபடி நடக்கவேண்டும் என்ற அவா ஒரு புறம்! இவ்வுடைதான் நமக்குப் பெருத்த கௌரவத்தைத் தரும் என்ற எண்ணம் ஒரு புறம்! எல்லாம் சேரவே புதிதாக உடைக்கும் ஆர்டர் கொடுத்து அன்றே வந்த "சூட்டுகளை" அணிந்தார். "பூட்ஸை" காலில் மாட்டினார். "தொப்பியை" தலையில் தரித்தார். புறப்பட்டார் விருந்துக்கு. ஆங்கிலேய நண்பரும் தன் பங்களா வாயிலில் தயாராக நின்று வரவேற்றார். புது

நண்பரைக்காண பல பேர் முன்னதாகவே வந்து அம்மாளிகையில் கூடி இருந்தனர். அவர்களோடு விரைவிற் சென்று கை குலுக்க வேண்டுமென்ற ஆவலுடன் நடந்தார் நண்பர். நண்பர் போட்டிருந்த பூட்ஸோ வழுக்குந் தன்மையுடையது. அம்மாளிகையின் தரையிலோ பளிங்குக் கற்கள் பாவி இருக்கின்றன. நண்பரின் பார்வையோ கூட்டத்தை நோக்கியது. நடையோ விரைவைக் கொடுத்தது. அதனால் பூட்ஸுகள் வழுக்கின. நண்பர் தொப்பென்று விழுந்தார். அவ்வளவுதான்! அங்கிருந்தவர்களிற் பல்லோர் சிரித்தனர். சிலர் பரிதாபப் பட்டனர். அப்போது நண்பரின் நிலை எவ்வாறிருந்திருக்கும் என்பதை அன்பர்களே! சிந்தித்துக்கொள்ளுங்கள். அந்தோ! ஐரோப்பியரைப் போல நாமும் ஆக வேண்டும். அதற்காக உடையை மாற்றவேண்டும். உல்லாசமாய்த் திரியவேண்டும் என்று திடீரென எண்ணாமல், நண்பர் படிப்படியாய் உடைகளை அணிந்து பழகினரானல் அன்று இவ்வவமானம் நேராதன்றோ? ஆகவே சீர் திருத்தங்களையும் படிப்படியாகத் தான் புகுத்தவேண்டுமென்பது பலரது நோக்கம். அதைப் பலரும் பின் பற்றுவதால் இப்போது இயன்ற அளவு சீர் திருத்தத்தில் சிறந்துள்ள செட்டியார்கள் சமூகம் இன்னும் சின்னளில் அதிகம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பௌத்த சமயமும் புத்தர் சங்கமும்

உலகில் மதங்கள் பல. அவைகளில் அதிகமான மக்களைக் கொண்ட கிறிஸ்து, கன்பூஷியர், ஹிந்து, முகமதிய மதங்களைப் போல பௌத்த சமயமும் சிறந்ததாகும். பௌத்த மதமும் இந்து மதத்தைப்போன்று நீண்ட நாட்களாக உலகத்தில் பரவி வரும் ஒன்று. அதிலும் இந்து மதத்தில் உள்ள பாகுபாடுகள்போன்று "மஹாயன புத்தம்" "ஹினயன புத்தம்" என இருவகையுண்டு. அவற்றுள் "மஹாயன புத்தம்" நேபாளம், திபெத், சைன, ஜப்பான் நாடுகளிலும் "ஹினயன புத்தம்" இலங்கை, பர்மா, சைகோன், சயாம், மற்ற நாடுகளிலும் பரவியுள்ளது. இவ்விரண்டில் ஹினயன சம்பிரதாயங்களே நந்தமிழ் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்ருகிய "மணிமேகலை" யிற் கூறப்பட்டுள்ளது. அதற்கும் நமக்கும் அதிகத்தொடர்புண்டு. அதேபோல இந்துமதத்தில் வேதாந்தத்தைப் போதிக்கும் வேதங்களே புத்தமதத்தின் மூலங்களாகும். இதைப் பல பேரறிஞர்கள் எடுத்துக்காட்டி இருக்கின்றனர்கள். அவர்களில் வேதங்களை மொழிபெயர்த்த திரு. "மாக்ஸ் முல்லர்" கூறும்போது "என் புத்திக்கேற்ப உபநிடதங்களே புத்த

மதத்திற்கு மூலம். புத்தமதம் பலவாற்றானும் உபநிடதத்தின் கொள்கையை எந்தமுடிபு வரையிற்கொண்டு செலுத்தலாமோ அந்த முடிபாகவுள்ளது. அதுவின்றியும் அந்த உபநிடதங்களின் கொள்கையே தன்னுடைய நூதனமான கோட்பாட்டிற்கு ஆதாரமாகவுமுடையது. கொள்கையைப் பற்றிச் சொல்லப் புகுங்கால், வேதாந்தத்தால் காட்டப்படுவதும் எவற்றிற்கும் மேலான முடிவானதுமாகிய ஆத்மதத்துவ ஞானமானது பௌத்தர்களுடைய நல்ல ஞானமேயாம். ஆசாரத்தைப் பற்றிப் பேசுங்கால், இந்து சந்யாசியே பௌத்த பிக்ஷுவாம். ....உண்மையில் வேதத்தைப் பற்றி நிற்கும் உலகமும், திரிபிடகத்தைப் பற்றி நிற்கும் உலகமும் தொடர்ச்சி அற்றவையே அல்ல. அவ்விரண்டிற்கும் தேச சரித்திரத்தால் தொடர்புண்டு" என்று கூறுகிறார்.

அவர் கூறியபடி ஆத்மதத்துவ ஞானங்களையும், ஆசாரங்களையும் பார்க்கும்போது இரு சமயங்களுக்கும் பல ஒற்றுமையுண்டு. சில வேறுபாடுகளும் உண்டு. அவ்வேறுபாடு ஒவ்வொரு சமயங்களிலும் முடிவு கூறும்போது ஏற்படுவது. அதை விடுத்து மக்கள் வாழ்க்கையைக் குறிக்கும்போது பல சமயங்களும் ஒன்றுபட்டே கூறும். உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டா? இல்லையா? என்பதிலும் மதங்களில் சில வேறுபாடுகள் ஏற்படும். அதிலும் இந்து சமயமும் புத்த சமயமும் ஒன்றை ஒன்று தழுவி, உயிர்கள் செய்வினைக்குத் தக்கபடி பிறப்பைப் பெறுகின்றன என்றே கூறுகிறது.

"மக்களும் தேவரும் பிரமரு நரகரும்
தொக்க விலங்கும் பேயு மென்றே
நல்வினை தீவினை என்றிரு வகையாற்
சொல்லப்பட்ட கருவிற் சார்தலும்"

(மணிமேகலை 30, 57—60)

"கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்—"

(திருவாசகம். சிவபுராணம். 27—30)

இவை இரண்டையும் போன்று இன்னும் பல ஆதாரங்களைக் காணலாம். இவ்வாறு ஒன்றுக்கொன்று ஒற்றுமையோடு கூடிய

இந்து, புத்த சமயங்களில் புத்த சமயத்தை உலகில் அதிகமாகப் பரவச் செய்தவர் கௌதம புத்தர். இவரும் ஓர் ஹிந்துவாகவே பிறந்தார், என்பதை திரு. ரைஸ் டேவிட்ஸ் தமது நூலில் விளக்கிக் கூறி இருக்கிறார். அவர் கூறும்போது,

"கௌதமர் இந்துவாகவே பிறந்தார். இந்துவாகவே வளர்ந்தார். இந்துவாகவே பிழைத்தார். இந்துவாக இறந்தார். கௌதமருடைய கொள்கையை அநுசரித்த பௌத்த சமய இல்லறத்தாரில் மிசப் புகழ்பெற்ற 'அசோகன்" என்பவனை இவை காருண்யமும் நல்லெண்ணமும் உள்ளவனாக இருந்த பௌத்த சக்கரவர்த்தி என்று இப்பொழுதும் பல முறை சொல்கிறார்கள். ஆனாலும் அவன் தன்னைத் தேவர்களுடைய அன்புக்கு உரியவனை அசோகன் என்று சொல்லிக்கொள்வதில் அதிக விருப்பமுள்ளவனாக இருந்தான். அவன் மிக்க உள்ளன்போடு கூடிய பௌத்தனாக இருந்தாலும் அவனைப் பௌத்த வகுப்பைச் சேர்ந்த இந்துவென்று சொல்வதுதான் உண்மைக்கு ஒத்ததாகும். கௌதமருடைய தத்துவ சாஸ்திரத்திலும், மானஸ சாஸ்திரத்திலும் இந்துக்களுடைய வழி வழியாக வந்துள்ள சமயங்களில் யாதேனும் ஒன்றில் இல்லாதது ஒன்றுமில்லை. அவர் வகுத்த அறநெறிக் குறியவிதிகளோ, அவருடைய காலத்துக்கு முன்னாவது பின்னாவது உள்ள இந்துக்களுடைய புத்தகங்களில் இருந்து எடுத்துக்காட்டக் கூடியவைகளாகவே இருக்கின்றன." என்று கூறுகின்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கௌதமரின் பிள்ளைத் திருநாமம் "சித்தார்த்தர்" ஆகும். இவர் இற்றைக்கு 2,500 ஆண்டுகட்கு முன்பு "கபிலவாஸ்து" என்னும் நகரத்தில் இக்ஷுவாகு பரம்பரையில் உதித்த "சுத்தோதனன்" என்ற அரசரின் புதல்வராகப் பிறந்தார். இவரைப் பெற்ற தாய் மாயாவதி. வளர்த்த தாய் கௌதமி. இவர் பிறக்கு முன்பே மாயாவதி பல அதிசயங்களை கனவிற் கண்டதாய் கூறப் பெறுகிறது. இவர் பிறந்த நேரத்தைக் கணித்த நிமித்திகன் ஒருவன் "இக்குழந்தை ஒரு காலத்தில் துறவு பூண்டு உலகைக் காக்கும்" என்று கூறினான். அதைக் கேட்ட அரசர் குழந்தையை மிகப்பாது காப்புடன் வளர்த்தார். வயது பதினைந்தானதும் இளவரசாக்கினர். இளவரசருக்கு எவ்வித வெறுப்பும் ஏற்படாவண்ணம் இன்பங்களை ஊட்டி வந்தார். இளவரசராகிய சித்தார்த்தருக்கு பத்தொன்பதாவது வயதில் "யசோதரை" என்ற பெண்ணை திருமணமும் செய்யப்பட்டது. இருவரும் பூவும், மணமும் போற் கூடி பூங்காவிலுள்ள இன்ப மாளிகையில் தங்கள் காதல்

வாழ்க்கையை நடத்தினர். சில ஆண்டுகள் கழிந்தன. இளவரசர் இன்பம் ஒன்றையே பெறுகிறார். அரசியலை நடத்தும் முறையைக் கற்கவில்லை. என்று பலர் கூறினர். அதை அறிந்த அரசர் இளவரசருக்கு எல்லாம் தெரியும் என்பதைப் பலருக்குக் காட்ட எண்ணினார். அதற்காக ஓர் நாள் தன்னை வந்து காணும்படி சித்தார்த்தருக்கு ஓர் திருமுகம் அனுப்பினார். அதேபோல அரசரைக் காண சித்தார்த்தர் சிவிகையில் வந்தார். அவ்வமயம் தன் முன்வந்த பிணியாளர், வயோதிகரைக் கண்டார். மற்றொரு நாள் குதிரையேறி வந்தார். அழுகிக் கிடந்த பிணம் ஒன்றைக் கண்டார். இவைகளைக் கண்டதுடன் எல்லோரும் இதேபோல் பிணிவாய்ப் பட்டு, மூப்பெய்தி, இறப்பர் என்பதை குதிரைக்காரனாகிய சந்தகனால் அறிந்தார். "இப்பிணி, மூப்பு, சாக்காட்டிற்குக் காரணமாகிய பிறப்பிற்கு இடங்கொடாத நல்வழியை அறிந்து நாமும் உய்ந்து உலகத்தையும் உய்வித்தல் எப்பொழுது கூடுமோ" என்ற கவலையைக் கொண்டார்.

சில நாள் கழிந்தது. ஓர் நாள் சித்தார்த்தர் தோட்டத்தை அடைந்தார். அங்கு பிரம கணங்களில் ஒன்று துறவியாக வந்து உபதேசம் செய்து சென்றது. அன்றையிலிருந்து சித்தார்த்தர் ஞான மார்க்கத்தை நாடினார். இதை அறிந்த அரசர் மாற்ற முற்பட்டார். பல வேடிக்கைகளை நடத்தினர். பலனொன்றுமில்லை. இவ்வைபவங்களோடு சித்தார்த்தரின் இருபத்தொன்பதாவது வயதில் அவரின் வாழ்க்கைத் துணைவி யசோதரை ஓர் ஆண்மகவைப் பெற்றாள். அன்றிரவே தனது பந்தம் நீங்கியது என்று அறிந்த சித்தார்த்தர் தனது குதிரைக்கார "சந்தகனை" அழைத்துக் குதிரையைக் கொண்டுவரச் செய்தார். அதிலேறி அவனையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். மறுநாட் காலை அநோம நதிக் கரையை அடைந்தார். அங்குள்ள "பார்க்கவர்" என்னும் தாபதருடைய தவப் பள்ளியுள்ள சோலையில் விரைவாக வந்த குதிரையும் நின்றது. சித்தார்த்தரும் இறங்கினார். கழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக் கழற்றி குதிரைக்காரனுக்குக் கொடுத்தார். அத்துடன் தனது முடிமணியை எடுத்து அரசனிடம் கொடுக்கும்படி அவனிடமே கொடுத்தார். அவைகளை ஏற்கக் குதிரைக்காரன் மறுத்தான். அவனுக்கு நன்மொழி கூறித் தேற்றி அவைகளைக் கொடுத்து விடையும் கொடுத்தார். பின்பு அநோம நதியின் மணலில் தங்கி உடைவாளால் தமது மயிர் முடியை அறுத்தெறிந்து விட்டு தான்கொண்ட குறிக்கோளை எண்ணி ஆராய்ந்தார். பிறகு துறவியானார். இதையறிந்த தந்தையாரும் சுற்றத்தாரும் வருந்தி

னர்கள். இவரை அரசராக்க எவ்வளவோ முயன்றார்கள். ஒன்றும் பலனில்லை. விட்டுவிட்டார்கள். சித்தார்த்தரும் தனது கொள்கையை நிறைவேற்ற தவக்கோலம் கொண்டார். மலைகள் ஏறினர். குகைகளை அடைந்தார். காடுகளை நாடினர். ஞானமும் பெற்றார். பிறகு மக்களுக்கும் வழங்கினர்.

இவர் தான் பெற்ற ஞானத்தை, தன் பௌத்த சமயத்தை மக்களுக்குப் போதிக்கக் கண்டது ஓர் சங்கம். அச்சங்கவாயிலாகவே அனைவருக்கும் ஞானத்தைப் போதித்தார். அச்சங்கத்தில் இளைஞரும், முதியரும், பார்ப்பனரும், அல்லாரும், வறிஞரும், செல்வரும், அறிஞரும், பேதையரும் எல்லோருமே சேரலாம். பெண் மக்களும் சேர்ந்து பிக்ஷுக்கள் ஆகலாம். ஞானத்தைப்பெறலாம். என்ற சில திருத்தங்களைச் செய்தார். செய்கையாலும் காட்டினர். இவர் காட்டிய அன்பால் இவருக்கு முன்னிருந்த புத்தர்கள் பல்லோரால் காணப்படாத முறையில் பௌத்த சமயம் பெருகியது. இதைப் பின்பற்றி இவரின் மாணக்கரை இற்றைக்கு 2,300 ஆண்டுகட்கு முன் தோன்றிய அசோக அரசர் பல தேசங்களிலும் சங்கத்தை நிறுவி பௌத்த சமயத்தைப் பெருக்கினர். இவர்கள் காட்டிய வழியைக் கொண்டு சமயத்தைப்பெருக்க இன்றும் புத்த சங்கங்கள் பலவிடங்களில் இருக்கின்றன.

அவைகளில் ஒன்று இங்கு (பினங்கு) ஆன்ஸன் ரோட்டில் நிறுவப்பெற்றிருக்கிறது. அச்சங்கத்துக்கு அமைத்துள்ள கட்டிடத்தை அநேகர் வந்து பார்த்து மகிழ்கின்றனர். இக்கட்டடத்தின் மத்தியிலுள்ள ஒரே ஹால் 100 அடி நீளமும் 65 அடி அகலமும் இருக்கிறது. இதன் நடுவில் ஓர் உயர மேடையில் பளிங்குச் கல்லால் ஆக்கப்பெற்ற பெரிய புத்த உருவம் ஒன்றிருக்கிறது. அதைச் சுற்றியுள்ள ஹாலின் சுவர்களில் அங்கங்கே "சித்தார்த்த கௌதம புத்தரின்" வாழ்க்கைக் குறிப்பைக் காட்டும் படங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அப்படங்களில் ஆங்கிலம், பர்மா எழுத்துக்களால் அவரின் வாழ்க்கை விபரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அப்படங்களின் ஓவியம் பார்ப்பவரின் உள்ளத்தைக் கவர்கின்றன. அவ்வோவியங்களைக் கண்ட ஒருவர் கௌதமரின் வாழ்க்கைக் குறிப்பை என்றும் மறவார் என்பது திண்ணம். இவ்வெண்ணத்தோடு தான் முன்னோர்கள் பல சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள். அதன் தத்துவங்களைச் சரித்திரங்கள் காட்டுகின்றன. அச்சரித்திரங்களைப் படிப்பதற்கும் ஓவியங்களைக் கண்டு மகிழ்வதற்கும் ஓர் நிலையமாக விளங்கும் புத்த சங்கம் பினங்குக்கே


பேரழகைத் தருகிறது. இங்கு வரும் ஒவ்வொருவரும் இச்சங்க கிலையரதைக் கண்டு ஆனந்திக்க வேண்டியது அவசியம்.

காவியத்தின் ஓவியத்தைக் காட்டும் கொடிமலை

புத்தர் சங்கத்தில் உள்ள சித்திரப்படங்கள் காவியச் சிறப்பை (சரித்திரத்தை) விளக்குகின்றன. அச்சரித்திரத்தைப் படிக்கும்போது, அக்காவியத்தில் மலை, காடு, வயல், நிலம் முதலிய நானில வளங்களை ஓவியமாகக் காண்கலாம். அவ் ஓவியத்தை தனது இயற்கை வடிவாய்க் காட்டுகின்றது பினாங்குக் கொடிமலை. இம்மலை கடல் மட்டத்திலிருந்து 2,700 அடி உயரமுள்ளது. இதன் உச்சியில் இயற்கை அழகைச் சிறப்புச்செய்ய பல செயற்கைக்கட்டிடங்கள் (பங்களாக்கள்) கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வியற்கை செயற்கைத் தோற்றங்களை மக்கள் கண்டு களிப்பதற்கு ஏறி இறங்க அடிவாரத்தில் இருந்து 2,300 அடி உயரத்துக்கு 17 லட்ச வெள்ளி செலவில் கட்டப்பட்ட ஓர் இரயில் தொடருண்டு. இதற்கு "ஹில் ரயில்" என்று பெயர். (இதன் படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது.) இந்த ரயில் ஓடும்வழி செங்குத்தாக உள்ளது. இவ்வழியிலும் எப், எம், எஸ் இரயில்வேயைப்போல சில பாலங்கள், குகைகள் இருக்கின்றன. இவ்வழியிலுள்ள தண்டவாளத்தில் காலை மணி 8 முதல் இரவுமணி 8வரை அரைமணி நேரத்திற்கு ஒருமுறை இரயில் ஏறி இறங்கும். ஏறி இறங்குவது இருவண்டிகள். ஒன்று மேலேறும். ஒன்று கீழிறங்கும். இவ்விரண்டையும் ஏற்றி இறக்க பல சிறு கம்பிகளைச் சேர்த்து முறுக்கிய பெரிய கம்பிக்கயிறு ஒன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. அக்கம்பியை உயரவுள்ள கட்டிடத்தில் அமைத்திருக்கும் இயந்திரத்தால் இழுத்து, விடுகிறார்கள். அக்கயிறே வண்டிகளை ஏற்றி இறக்குகின்றன. அதன் வழியாகச் சென்று இறங்கும் வண்டிகள் இரண்டும் நடுவில் சந்திக்கும்போது விலக, விலக்குவழி அமைக்கப்பெற்றிருக்கிறது. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள இரயிலை சில இடங்களில் நிறுத்துகிறார்கள். அவ்வமயம் இறங்கி மலையில் அங்கங்கே அமைக்கப் பெற்றிருக்கும் கட்டிடங்களுக்கும் தோட்டங்களுக்கும் செல்லலாம். இந்த ரயில்களை 2300 அடிவரைக்கும் ஏற்றி இறக்குவது அபாயம் நேருமோவெனக் கருதி மத்தியில் ஓர் இரயில்வே நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பிரயாணிகள் வண்டி மாறவேண்டும். மாறி உயரத்திலுள்ள கட்டிடங்களைச் சேர்ந்தால்! அங்கு பல இடங்களுக்குப் பிரிந்து செல்லும் வழிகளைக் கண்டால்! இயற்கையின் எழிலைக் கண்டு இன்புறலாம். அங்கு சில பேர் வசிக்கிறார்கள். நம்போன்றோர் அங்கு சில நாள்

(35)

பினங்கு கொடிமலை ரயில்.



Penang Hill Railway.

சேர்ந்தார்ப்போல தங்கமுடியாது. காலையில் இரயிலேறி அங்குள்ள காட்சிகளைக் கண்டு மாலையில் இறங்குவது நலம். அங்கு செல்பவர்கள் அமர்ந்து இளைப்பாற பல ஹோட்டல்கள் இருக்கின்றன. அக்காட்சிகளைக் காண காலையில் இரயிலேறினால், இரயிலில் செல்லும் போது,

"பளிக்கு மணி மரகதவல் லியிற்கோத்த பான்மை எனத்
துளித்தலைமேல் அறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்."

(பெரிய புராணம். திருஞானசம்பந்தர் 329

என்று சேக்கிழார் கூறியபடி பசும் புற்கள் மேல் படிந்து கிடக்கும் பனித்துளிகள் பச்சைக்கொடிகளில் முத்துக்களைக்கோத்தது போன்றும், அப்பனியின் குளிருக்கு ஆற்றாமல் அம்மலையே வெள்ளைப்போர்வையால் தன்னுடலை மூடிக்கொண்டு இருப்பதுபோன்றும் உள்ள காட்சியைக் காணலாம்.

அப்பனிக்கு ஆற்றாது மலையே போர்வையால் மூடிக்கொண்டு கிடக்கும்போது, அம்மலை உச்சியைச்சாரும் நாம் எவ்வாறு தாங்க முடியும்? அப்பனி நாட்டிற் பிறந்த ஆங்கிலேயர் சிலரும், அங்கு உத்தியோகத்துக்காக இருக்கும் மற்றும் சிலரும் அங்கு வசிக்கிறார்கள். அவர்களைப்போல சின்னாட் பழகினால் நாமும் அங்கு வாழலாம்! இக்குளிர் மிகுந்த மலையின் உச்சியே காவியத்தின் ஒவியத்தைக் காட்டுகின்றது. காவியங்களில் கூறப்பெறும் நானில வளங்களில் குறிஞ்சி நிலத்தை அம்மலை காட்டுகிறது. முல்லை நிலத்தை அங்குள்ள காடு காட்டுகிறது. மருத நிலத்தை அதன் அடிவாரத்திலுள்ள பல வயல்கள் காட்டுகின்றன. நெய்தல் நிலத்தை அம்மலையின் இருபுறங்களில் வளைந்துள்ள கடல் காட்டுகிறது. இந்நானில வளங்களையும் ஒருங்கே காட்டும் அம்மலையின் உச்சியில் "கவர்னர்" தங்குவதற்காக ஓர் பங்களா அமைக்கப்பெற்றிருக்கிறது. அதைப் பார்ப்பதற்கு அங்குள்ள போலீஸில் உத்தரவு பெற்றுச் செல்ல வேண்டும். சென்றால்! கண்ணுக்கு நல்விருந்தாகிய காட்சியையும், மூக்குக்கு மணத்தையும், செவிக்குக் கானத்தையும் பெறலாம். காதலர் இருவர் கூடிச்சென்றால், உலகவாழ்க்கையின் உயரிய கருத்துகளைப் பெறலாம். எதனால்?

அப்பங்களாவைச் சுற்றிப் பல அழகிய மலர்ச் செடிகளும், கொடிகளும் வைத்து வளர்க்கப் பெறுகின்றன. அவைகளில் மலர்கள், காட்சியையும், மணத்தையும், அம்மலர்களில் மதுவை உண்ணும் வண்டுகளின் ஒலி கானத்தையும் தருகின்றன. அத்துடன் பல கொடிகள் கொழுக்கொம்புகளைப் பற்றிக்கொண்டு படர்ந்து நிற்கின்றன. அவைகளை நோக்க கொழுக் கொம்பைப்போன்று காதலன் காதலியை அணைத்துக்காக்க வேண்டிய முறையையும், அக் காதலன் இன்றேல் பூங்கொடியைப்போன்ற காதலி வாடி வதங்கி தவிக்க நேருவாள் என்பதையும் காட்டுகின்றன. இத்துடன் அங்கு பூத்துப் பறிப்பாரற்று செடிகளில் இருந்து அழகு செய்யும் மலர்களும், கொட்டிக்கிடக்கும் பூக்களும், வாடிவதங்கிய சருகுகளும் அங்கு செல்பவர்களைப்பார்த்து "ஏ மக்களே! உங்கள் வாழ்நாட்களையும், செல்வங்களையும் எங்களைப்போல் பாழாக்காதீர்கள். நாங்கள் ஓர் தனி இடத்தில், பலவளங்களும் நிறைந்த மலையில், மக்கள் எங்களைப்பெற்று உபயோகிக்க முடியாத நிலையில் பிறந்தோம். அதனால் எங்களை யாரும் பற்றவில்லை. மணத்தைப்பெற்று மகிழவில்லை. அழகைப்பெற்று ஆநந்திக்கவில்லை. எங்கள் வாழ்நாளையும் இங்கேயே கழித்து விட்டோம். இறுதியில் இதோ கொட்டிக்கிடக்கும் சருகுகளாகவும் ஆகிவிட்டோம், எங்களைப்போல் நீங்களும் இருக்கவேண்டாம். நகரங்களில் பலரால் பயிர் செய்யப்பட்ட தோட்டங்களில் எங்கள் இனத்தவர் பலர் வளர்கிறார்கள். அவர்களால் பலருக்குப் பலனுண்டு. அதேபோல நீங்களும் வாழுங்கள்." என்றுகூறி அறிவுறுத்துகின்றன. இப்பூங்காவைப்போன்று பல இடங்களில் செடி, கொடிகள் வளர்ந்து பலநிறப் பூக்களைப்பூத்து நிற்பதைப் பார்க்கப் பார்க்க பெருத்த இன்பத்தைத்தரும். இப் பூங்காவின் ஒவியத்தையும், அண்மையிலுள்ள காட்டின் வளத்தையும், பசும்புற்றரைகளையும் கண்டதும் மக்கள் உள்ளம் மகிழ்வு பெறும் என்பது திண்ணம். இம்மலையின் உச்சியில் அரசியல் கொடிகள் தொங்குகின்றன. அக்கொடிகள் ஆங்கிலவரசின் திறம் இவ்வளவு உயர்ந்தது என்பதைக்காட்டுகின்றன. அக்கொடிகளைத் தன் தலைமேல் தாங்கி நிற்பதால் இம்மலைக்கு "கொடிமலை" என்ற பெயர் வந்தது.

பொருப்பைத் தகர்க்கும் பொறிகள்

கொடிமலையைப் போன்ற பல மலைகளும், இன்னும் உயர்ந்து வளர்ந்த மலைகளும் மலாயாவில் பல இருக்கின்றன. அவைகளிற் சில கல் மலைகளும் உண்டு. அம்மலைகளில் இயற்கையின் எழிலை

சாலச் சிறந்த தனவணிகர் கட்டிவைத்த
வாலப்பூர் முத்து மாரியம்மன் கோயிலிதே.



Valapur Mariamman Temple.

அதிகமாகக் காணமுடியாது. ஆயினும் அம்மலைகளும் மக்களுக்குத் தன்னால் இயன்ற உதவியைப் புரிகின்றது. இம்மலையை உடைத்துக் கற்களாக்கவும், அவைகளைத் தூள்கள் ஆககவும் பல கிரெஷர்கள் (இயந்திரங்கள்) இருக்கின்றன. அம்மலைகள் தரும் கற்களே நம் நாட்டில் ஆலயங்களாய்த் திகழ்வது. அக்கற்களே பெருத்த கட்டிடங்களுக்கு அடிப்படையாய், தூண்களாய் நிற்பது. அக்கற்களே பெருத்த பாட்டைகளாக (வழிகளாக) விளங்குவது. அக்கற்களால் போடப்பட்ட ரோடுகள், போடும் ரோடுகள், கட்டிய கட்டிடங்கள் இந்நாட்டிற் பல. அந்த ரோடுகளுக்கும், கட்டிடங்களின் காங்க்ரெட்களுக்கும் இம்மலையின் கற்கள் உபயோகப்படுகின்றன.

வாயலெப்பாஸ் திடலும் வாலப்பூர் கோயிலும்

பொருப்பைப் பொறிகளால் தகர்க்கப்பெற்ற கற்களைக் கொண்டு செப்பனிடப்பட்டது வாயலெப்பாஸ் வழியும், விமானத் திடலும். இத்திடலின் சுற்றளவு 4 மைல்கள் இருக்கும். இத் திடல் பினங்கிலிருந்து வடமேற்கில் 11வது மைலில் கடற்கரை யோரத்தில் அமைந்திருப்பது பெருத்த காட்சியைத் தருகிறது. இத்திடலுக்கு அண்மையிலுள்ள பெரிய மலைகள் இயற்கையின் எழிலைக் காட்டுகின்றன. இவ்வழகிய திடலில்தான் திரு. ஆவிடையப்ப செட்டியார் சொந்தமாக ஓட்டிவந்த விமானத்தை இறக்கியது. இத்திடலிலும் சிங்கப்பூரைப்போல் ஓர் அழகிய கட்டிடமும் ஹோட்டலும் உண்டு. இங்கிருந்து பல இடங்களுக்கும் விமானங்கள் புறப்படுகின்றன. அவ்வமயம் ஓர் பெருத்த காட்சியைக் காணலாம்.

இவ்வாய லெப்பாஸைப் போன்று வாலப்பூரும் பினங்கைச் சேர்ந்ததே. வாலப்பூர் பினங்கில் இருந்து 24 மைலில் இருக்கிறது. இங்கும் சில நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் கடைகளும் உண்டு. ஓர் முத்துமாரி அம்மன் கோயிலும் இருக்கிறது. இக்கோயில் 28 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இதற்கு வைகாசி விசாகத்தில் விழாக் கொண்டாடுகிறார்கள். அவ்வமயம் தமிழ் நாடகங்கள் நடைபெறும். அதற்கு ஏராளமான தமிழ் மக்கள் வருவார்கள். அவ்விழா வைபவமும், அம்பாளின் அருளும் போற்றுதற்குரியது.


தினசரிப் பத்திரிகையும், சினிமா, ஷோவும்.

பினங்கின் பெருநிதியைப் பிறர் அறியவும், பினங்கில் வாழும் மக்கள் உணரவும், செய்திகளை வெளியிடப் பல பத்திரிகைகள்

இருக்கின்றன. அவைகளில் "மார்டன் டெயிலி நியூஸ்" "பினங்கு கெஜட்" "ஸ்ட்ரைட்ஸ் எக்கோ" என்ற ஆங்கிலப் பத்திரிகைகளும் "பினங்கு ஸன்போ" என்ற சீனப் பத்திரிகையும் "தேச நேசன்" என்ற தமிழ்ப் பத்திரிகையும் சிறந்தவைகளாகும். இப்பத்திரிகைகளை நடத்தும் ஆசிரியர்கள் சிறந்தவர்கள். இவர்களில் ஸ்ட்ரைட்ஸ் எக்கோவின் ஆசிரியர் திரு. சரவணமுத்து.

இவர் 21-9-1895ல் பிறந்தவர். கொழும்பு அர்ச். தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றவர். மலாய்நாட்டின் குவீன்ஸ் ஸ்காலர்ஷிப்பிற்கொத்த இலங்கை சர்வகலாசாலைப் பரிசுபெற்று 1915ல் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையின் அர்ச். ஜான்ஸ் கல்லூரியில் பயின்றவர். இச்சமயம் இங்கிலாந்தில் பிரபலஸ்தர்களாக விளங்கும் யுத்த மந்திரி மிஸ்டர். லெஸ்லி ஹோர் பேலிஷா என்பவர் போன்றார் இவருடன் அக்கல்லூரியில் கல்வி பயின்றனர். இளமையில் பல பரிசுகளைப்பெற்றும், கிரிக்கெட் விளையாட்டில் மிகச்சிறப்புற்றுமிலங்கியவர். பத்திரிகை தொழிலில் பெரும் ஆர்வம் கொண்டிருந்ததினால், 1922ல் இலங்கை திரும்பி "இலங்கை அப்ஸர்வரில் ஸ்போர்ட்ஸ்" ஆசிரியாகினர். 1928ல் சிலோன் இண்டிபெண்டெண்ட் என்ற பத்திரிகைக்கு உதவி ஆசிரியாக இருந்தனர். 1930ல் மலாய்நாடு வந்து, பினங்கு ஸ்ட்ரைட்ஸ் எக்கோ உதவி ஆசிரியராகச்சேர்ந்தார். 1931ல் இப்பத்திரிகையின் ஆசிரியராகினர். இன்று இப்பத்திரிகை மலாயாவில் தலை சிறந்த ஆங்கில தினசரியாகத் திகழ்வது போல், ஐரோப்பியரல்லாத ஆங்கிலப்பத்திரிகை ஆசிரியர்களில் இவர் ஒருவராகவே காண்கப்படுவர்.

இவருடைய குடும்பம் இலங்கையில் மிக கௌரவம் வாய்ந்ததில் ஒன்று. இவர் தகப்பனர் டாக்டர் வி. சரவணமுத்து. எம். டி. (டர்ஹம்) இலங்கையின் சிறந்த வைத்தியராகவும், இலங்கை வைத்திய கவுன்சலின் அங்கத்தினராகவும் இருந்தார். 1850ஆம் கண்டியைக் கைப்பற்ற பிரிட்டிஷார் முற்பட்ட சமயம், இவரது முதாதைகளில் ஒருவரான முதலியார் நித்சிங்கி தலைவ சிங்கம் என்பவர் 2000 இராணுவ வீரர்களின் தலைவனாக, கப்தான் என்ற கௌரவப்பதவியில் இராணுவத்தை நடத்தி கண்டியைக் கைப்பற்ற உழைத்தனர். இவரது சகோதரர் டாக்டர் ஆர். சரவணமுத்து, இலங்கை, கொழும்புவின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இன்று இலங்கை சட்டசபையில் அங்கத்தினராக இவரும் இவரது மனைவியாரும் உள்ளனர். இவரது அடுத்த சகோதரர்கள் இருவரும் கொழும்பு முனிஸிபல் கவுன்சலின் அங்கத்தினராகவுள்ளனர்.



கனம் கொ. ப. முகம்மதுகாசிம் அவர்களுக்கு கவர்ண்மெண்டாரால் கொடுக்கப்பெற்ற ஜே. பி. பட்டத்தை பாராட்டுவதற்கு கூடியிருந்த பல்லோர்கள்.

மிஸ்டர் பி. சரவணமுத்து என்ற மற்ற சகோதரர் இலங்கை சிவில் சர்விஸினர். இலங்கை ரப்பர் தேயிலை கண்ட்ரோலராக வுள்ளனர். இவருக்கு இளைய சகோதரர் மிஸ்டர் டி. வி. சரவணமுத்து இலங்கை எக்ஸைஸ் இலாகாவின் டிபுடி கமிஷனராகவுள்ளனர். இவரது சகோதரிகள் இருவர். ஒருவரின் கணவன் மிஸ்டர். ஆர் எ. எம். துரையப்பா, இலங்கை பிடப்ளியுடியின் வடமாகாண புரொவின்ஷியல் இன்சினியராகவுள்ளனர். மற்ற சகோதரியின் கணவன் மிஸ்டர். டி. ஸி. எஸ். ஜெயரத்தினம், இந்தியா சிவில் சர்விஸ் பரிட்சையில் தேறி, இப்பொழுது மத்திய மாகாணத்தின் தலை நகரமாகிய நாகபுரியின் கலெக்டராக இருக்கின்றார். நமது ஆசிரியர் மிஸ்டர். எம். சரவணமுத்தோ மிகச்சிறந்த எழுத்தாளர். மலாயாவின் முன்னேற்ற விஷயங்களுக்கு பெரும் உழைப்பெடுத்து விஷய விளக்கம் செய்பவர். ஆட்சிமுறைக்கும் அஞ்சாது ஆட்சிமுறை தத்துவங்களை எடுத்துக்காட்டுபவர். இந்தியரிடம் பெரும் பற்றுடையவர். அதிலும் தமிழ்மொழிபேசும் மக்களிடை பேரன்பு பூண்டவர். தினம் காலை வெளிவரும் ஸ்ட்ரைட்ஸ் எக்கோவை, பினாங்கு, வெல்லஸ்லி மாகாணம், பேரா, கெட்டா முதலிய பகுதிகளில் வாங்கிப் படியாத ஆங்கிலேயரே கிடையாது என்றால், அவரது எழுதுகோல் வன்மையை செப்பவும் வேண்டுமோ? பொதுஜன உழைப்பில் பெரும் பங்கெடுத்து உழைப்பவர். மலாய், சின, இந்திய சமுகத்தின் விஷயங்களைத் தளரவிடாது எடுத்துரைக்கும் பேரபிமானி. இத்தகைய நற்குடும்பத்தினரும், சிறந்த குணாதிசயங்களும்கொண்ட இவர், நீண்ட ஆயுளுடன் இருந்து, தமிழ் மக்களுக்கு தொண்டாற்ற சிவபெருமான் அருள் பாலிப்பாராக!

தேசநேசன் என்ற தமிழ் பத்திரிகையைக் கண்டவர். திரு. அ. ந. பு. ஹமீது களஞ்சியம் அகுவர். இராமநாதபுரம் பனைக்குளவாசி. புலவர் மரபினர். இவருடன் ஒத்துழைப்புகொண்டு அப்பத்திரிகையை வாரம் இருமுறை மும்முறை, தினசரியாக நடக்க உதவி புரிந்தவர் திரு. அற்புதானந்தா ஆகுவர். இவ்வமயம் இப்பத்திரிகை வாரம் இருமுறையாக, ஒரு லிமிடெட் கம்பெனியினால், ஹாபிஸ் எ. என். முகம்மது யூஸுப் பாகவி என்பவரை ஆசிரியராகக் கொண்டு, மலாய் நாடு வாழ் தமிழ் முஸ்லிம்களிற் கென, நடத்தப்பட்டாலும், திரு. அற்புதானந்தா, அதன் காரியதரிசியாகவும், மானேஜராகவும் இருந்து வந்தனர். இதிலிருந்து இப்பொழுது விலகி நிற்பதாகத் தெரிகிறது. இருந்தாலும், இந்நூலுக்கு வேண்டிய அளவு, ஆங்கில நூல்களை ஆராய்ந்து விஷயங்களைத் திரட்டி ஆக்கியோனாகிய எனக்குத் தந்தனர். இவர் வட

நாட்டில் பிறந்தவர். இப்போது மலாய்நாடு வாசியாக விளங்குகின்ருர். இவர் ஓர் துறவி. இவருக்கு இப்போது வயது 60 ஆகிறது. இன்றும் உடல் திடத்துடன் இருக்கிருர். இவர் ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, சமஸ்கிருதம் என்ற பாஷைகளை நன்குணர்ந்தவர். இவைகளில் பேசும் வன்மையும், எழுதும் திறனும் கொண்டவர். மிகச் சுரு சுருப்பு வாய்ந்தவர். அஞ்சா நெஞ்சம் பெற்றவர். எந்த நேரமும் உள்ள மகிழ்வோடு இருப்பவர். அதனுல் நோய் எவ்வாறு இருக்கும் என்று பிறரைக் கேட்பவர். தானறிந்திருப்பதைப் பலருக்கும் கூறவேண்டுமென்ற கருத்துகள் கொண்டவர். அதற்காக, நமது இந்திய நாட்டிலும், பர்மா நாட்டிலும் இங்கும் பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தவர். பல அரசர்களையும், பல நாட்டினரையும் நேரிற் கண்டவர். அத்துடன் பல பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதித் தேர்ந்தவர். கட்டுரை எழுதுவதைப்போன்று சொற்பொழிவும் ஆற்றுபவர். பல நூல்களை ஆராய்ந்து, பத்திரிகைகளைப் படித்து, உலக சமாச்சாரங்களை நன்கு அறிந்தவர். அறிபவர். இவர் திரட்டி வைத்திருந்த குறிப்புகளிலிருந்து, பல சரித்திரங்கள், புள்ளி விபரங்கள், எடுக்கப்பட்டு, இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எனக்குப் பல வருடங்களாகத் தெரிந்தவர். இத்தகைய தொண்டாற்றும் இவருக்கு, நம் தமிழ் மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

இக்காலத்தில் மக்களுக்கு அறிவையும், உலக சமாசாரங்களையும் போதிப்பது பத்திரிகைகள். அதே போல மனதுக்கின்பத்தையும் கண்ணுக்குக் காட்சியையும் தருவது சினிமா, ஷோக்கள். இக்காட்சிகளைத் தினப்படி காட்ட "லிபர்டி" "மெஜஸ்டிக்" "குவின்ஸ்" "ராயல்" "வின்ஸர்" என்ற ஐந்து சினிமாத் தியேட்டர்களும் "வெம்பிளி" "பன் அண்ட் பிராலிக்" என்ற இரண்டு ஷோக்கள் (கண் காட்சி சாலைகளும்) இருக்கின்றன. இவைகளை ஒவ்வோர் நாளும் பினங்கில் வாழும் மக்கள் கண்டு களிக்கின்றனர்.

சுகாதாரமும் தோட்டப்பூங்காவும்

பலவித இன்பங்களைப் பெறுவதாலும், நகரத்தில் குடிகள் நெருக்கமாக இருப்பதாலும் சுகாதாரக் குறைவும் தொத்து நோய்களும் ஏற்படுகின்றன. இவைகளைத் தடுக்க நகர பரிபாலன சபையார் பல சுகாதார நிலையங்களைக் கண்டுள்ளார்கள். அவை

களில் ஏராளமான உத்தியோகஸ்தர்களை வைத்துக் கண்காணித்து வருகிறார்கள். இவைகளிலும் மீறி நோய் வாய்ப்படும் மக்களைப் பாதுகாக்க ஜெனரல் ஆஸ்பத்திரி ஒன்று மிகப் பெரிதாகக் கட்டப் பட்டிருக்கிறது. இதிலுள்ள கட்டிடங்கள் ஐந்தடுக்குகள் கொண்டவைகள் ஆகும். இவைகளிலுள்ள வார்டுகளை ஏ. பி. ஸி. என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் பிரசவ ஆஸ்பத்திரியும் உண்டு. பல டாக்டர்கள் இருக்கிறார்கள். இதன் மூலம் ஒவ்வொரு நாளும் பல மக்களுக்கு வைத்தியம் செய்யப்பெறுகிறது. இதற்கு மேல் குஷ்ட ரோகிகளைக் கவனிக்க ஆண்களுக்கு "பூலோர் ஜர்ஜா"விலும் பெண்களுக்கு "ஜெலுடாங்"கிலும் ஆஸ்பத்திரிகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அதன் மூலம் பலபேர் சிகிச்சை பெற்று குஷ்ட நோயைப் போக்கிக் கொள்கிறார்கள்.

இச்சுகாதார வசதியுள்ள பினாங்கு ஓர் பெருத்த துறைமுகம். இத்துறைமுகத்தில் பல நாட்டு மக்கள் வந்திறங்குகின்றனர். இவர்களில் இந்திய நாட்டில் இருந்து வரும் தமிழ் மக்கள் எங்கே தொத்து நோய்களைக் கொண்டுவந்து விடுவார்களோ வென்றெண்ணி கப்பலில் வரும் 3வது வகுப்பு பிரயாணிகளை "பூலோஜர்ஜா"வி லுள்ள புறமலையில் இறக்குகிறார்கள். அதனால் தமிழ் மக்கள் படும் அல்லல் மிகுதி. அதில் ஒன்றும் பலனில்லை. புறமலைக்கு மக்களை அனுப்பவேண்டாம் என்பது சிலரது எண்ணம். ஆயினும் அரசாங்கத்தார் வகுத்துள்ள திட்டப்படி அவை நடைபெறுகிறது.


இத்தகைய சுகாதாரங்களுக்கு மேல் இயற்கை இன்பத்தை மக்கள் பெற தண்ணீர்மலை அடிவாரத்தில் ஓர் பூந்தோட்டம் அமைக்கப் பெற்றுளது. அம்மலை அருவியிலிருந்து விழும் தண்ணீரில் குளத்துக்குப் பெருக்கும் ஓர் பகுதி போக மற்ற நீர் இப்பூங்காவின் மத்தியில் ஓடுகிறது. அந்நீரோட்டம் ஓர் ஆறாகப் பாய்ந்து தண்ணீர்மலை ஆண்டவரின் கோயிலுக்கு மேற்புறம் உள்ள நகரத்தார் பங்களாத் தோட்டத்துக்குள் ஓடி வருகிறது. (முன்பும் கூறப்பெற்றிருக்கிறது) இவ் வாறு பாயும் மாட்சியும், அங்குள்ள பூச்செடிகளின் காட்சியும், தாமரைக் குளத்தின் தன்மையும், கார் ரோடுகளின் வன்மையும், மாலை நேரத்தில் கார்களில் மக்கள் வந்துலாவும் தோற்றமும், அவர்களைக் கண்டும் அஞ்சாது அப்பூங்காவில் சுற்றி ஆடித்திரிகின்ற குரங்குகள் மரங்களில் தாவும் ஏற்றமும், மலையிலிருந்து வீழும் நீர் வீழ்ச்சியின் ஓசையும், மரங்களில் மது வுண்ணும் வண்டுகளின் ஒலியும், கண்ணுக்குக் காட்சியையும் மனதுக்கு இன்பத்தையும் தரும். அங்கு வீசுகின்ற மலைக்காற்றும், மலர்

களின் மனமும் உடலுக்கு நலனைத்தரும். இவ்வியற்கைச் சிறப்பு வாய்ந்த பூங்காவை செயற்கையாலும் அழகு படுத்த முனிசிபாலிடியார் மிகக் கவனமாகப் பாதுகாக்கின்றனர். இதைச் சுத்தம் செய்து செடி கொடிகளை வளர்த்துப் பாதுகாப்பதற்காக ஆண்டு ஒன்றுக்கு $1,200 செலவு செய்கிறார்கள். இதே போல பல சுகாதாரங்களைக் கவர்ன்மெண்டார் செய்து கொண்டிருப்பதால் மக்கள் உடல் நலத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வியற்கை செயற்கைச் சிறப்புகளைத் தன்னிடத்தே கொண்ட பினாங்கின் பெருநிதிகளை ஒவ்வொருவரும் நேரில் காணவேண்டும். இப்பெருநிதியைப் பல வழியாலும் நல்ல முறையோடு பாதுகாக்கும் ஆங்கில அரசும், அதன் பலனைப் பெறும் மக்களும் என்றென்றும் வாழ இறைவனும், தண்ணீர்மலை ஆண்டவன் இன்னருள் பாலிப்பானாக.

1 இ, வெல்லஸ்லி மாகாணம்

இம்மாகாணம் 1798ம் ஆண்டு கிழக்கு இந்தியக் கம்பெனிக்காக கெட்டா சுல்தானிடம் இருந்து வாங்கப்பெற்றது. அன்றிருந்து பினாங்கைத் தலைநகராகக்கொண்டு தொடுவாய்ப்பகுதியுடன் சேர்க்கப் பெற்றிருக்கிறது. இம்மாகாணத்தையும் பினாங்கையும் கெட்டா சுல்தானிடம் இருந்து குத்தகைக்கு வாங்கித் தங்கள் சொந்தமாக்கிக் கொண்டதற்காக இன்றும் ஆண்டு ஒன்றுக்கு $10,000 கெட்டா சுல்தானுக்குக் கொடுத்து வருகிறார்கள். இப்போது ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாக இருக்கும் இம்மாகாணத்தின் சுற்றளவு 280 சதுர மைல்கள். இம்மாகாணம் பினாங்கு ரெஸிடெண்ட் கௌன்ஸிலரின் பார்வையில் டிஸ்ட்ரிக்ட் ஆபிஸர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. இம்மாகாணத்தில் பட்டர்வொர்த் (கோலப்பிறை) புக்கெட் மர்ட்டஜம் (சுங்குரும்பை) சிம்பாங் அம்பாட், நிபோங்திபால் (ரத்தப்பாஞ்சான்) என்ற ஊர்கள் சிறந்தவைகளாகும். இவைகளில் "கோலப்பிறை" என்ற ஊர் பினாங்குக்கு இக்கரையில் உள்ளது. இங்குதான் பினாங்கிலிருந்து இக்கரைக்கு வருபவர்கள் இடையிலுள்ள நீர்ப் பரப்பைக் கடக்க ஏறும் கப்பல்கள் பிடிக்கும் துறைமுகம் இருக்கிறது. இத்துறைமுகம் அமைந்திருப்பதால் எந்தநேரமும் மக்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கும். இங்கு பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் இருக்கின்றன. இங்கு வெல்லஸ்லி மாகாணத்தின் தலைமை வைத்தியசாலை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இயற்கை அமைப்போடு நல்ல கடற்காற்றைத் தரும் அவ்விடம் மக்களுக்கு ஏற்ற ஆரோக்கியத்தைத் தரும். இக்கோலப்பிறை ஊருக்கும்

வண்ணிமிகு சங்குரும்பை வளர்தண்ட பாணிக்கி
தண்ணீர்மை நகரத்தார் தானமைத்த திருக்கோயில்.
1897ம் ஆண்டில் நிறுவியது.



Bukit Mertajam Chettiar's Temple.

நம்பியர்க்கும் நாரியர்க்கும் நற்கல்வி யூட்டுகின்ற
நம்பி இராமநாதன் நற்புகழ் சேர் கலாசாலை.
1923ம் ஆண்டில் நிறுவியது.
சுங்குரும்பை.



Bukit Mertajam Ramanathan School.

இரயில்வேப் பாலம் இருக்கும் இடத்துக்கும் சம்பந்தமில்லை. அது வேறு இடம். இங்கிருந்து இரயில்வேத் துறைமுகம் இருக்கும் பிறைக்குச் (Prai) செல்லவேண்டுமானால் பல மைல் தூரம் சுற்றியே செல்லவேண்டும். பினங்கிலிருந்து அக்கரைக்கு இரயிலில் செல்லாது காரில் செல்பவர்கள் அத்தனைபேரும் கோலப்பிறைக்கு வந்து தான் செல்லவேண்டும். அப்படி வருபவர்களுக்கும் இரயிலில் வருபவர்களுக்கும் "பிறை" தாண்டியதும் முதலில் தோன்றுவது சுங்குரும்பை.

சுங்குரும்பையின் தோற்றம்

வெல்லஸ்லி மாகாணத்தின் சிறந்த நகரம், சுங்குரும்பை. சுங்கை—ரம்பை என்ற இருமலாய் வார்த்தைகள் மருவி, சுங்குரும்பை என்ற பெயராகியது. சுங்கை என்றால் ஆறு, ரம்பை என்றால் உயர்ந்த வாசனைச் செடி. இவ்வாசனைச் செடிகள் இவ்வாற்றங்கரை ஓரம் அதிகம் இருந்ததால் சுங்குரும்பை என்று பெயராகியது. இந்நகரை ஆங்கிலேயர்களும், சீனர்களும் புக்கிட் மர்ட்டஜம் என்று கூறுவர். புக்கிட் என்றால் மலை, மர்ட்டஜம் என்றால் கூரிய சிகரம் என மலாய் பாஷையில் பொருள்படும். இம் மலைச் சிகரம். பினங்கின் கொடிமலையுடன் சமநீர் மட்டம் கொண்டதாக வுள்ளது. இங்கு ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவுங்கம் முதலிய பயிர்கள் பெரும் சாகுபடியாகிக் கொண்டிருந்தன. 1900ம் ஆண்டின் பின், இவ்விளைவுகள் குறைந்து, வேறு பயிர்களாகிய ரப்பர் முதலியன மிகுந்து வருகின்றன. இந்நாட்களில் இந்நகரம் ஒரு ஜில்லா ஆபீஸரின் இருப்பிடமாகவுள்ளது. இருப்புப்பாதை நிலையத்தின் கிளை ஆபீஸும் இங்குள்ளது. பினங்கிலிருந்து புறப்படும் எப். எம். எஸ். இரயில்கள் இங்குவந்துதான் இருவழிகளாகப் பிரிகின்றன. ஒன்று கோலாலம்பூர், சிங்கப்பூர் செல்லும் வழி. மற்றொன்று கெட்டா, பாடாங் புசார், சயாம் செல்லும்வழி. இவ்வழிகள் இங்கு பிரிவதால் எந்த இரயிலும் இங்கு வந்துதான் செல்லவேண்டும். இவ்வூர் மிகச் சிறியதாய் இருப்பினும் பல வளங்களும் பொருந்தியது. இங்கு தபால், தந்தி, டெலிபோன் நிலையங்களும், போக்குவரத்து வசதிகளுக்கேற்ற வழிகளும் இருப்பதால் கூடிய அளவு வாணிபம் செழித்தோங்குகிறது. இவ்வாணிபத்தைப் பெருக்க பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. நகரத்தார்கள் தொழிலுக்காகச் செல்லுமிடம் எல்லாம் கந்தனுக்கு ஆலயம் காண்பதைப் போல, இங்கும் ஓர் ஆலயம் கண்டிருக்கிறார்கள். இவ்வாலயம் 1897ம் ஆண்டில் நிறுவப் பெற்றது.

அதன் படமும் இந்நாலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது. இவ்வால யத்தில் எழுந்தருளி இருக்கும் கந்தனுக்கு பங்குனி உத்தரத்தில் விழா நடத்துவார்கள். அப்போது ஏராளமான அன்பர்கள் வந்து தரிசித்துப் பலன் பெறுவர். அவர்களுக்கு நகரத்தார் அன்ன தானம் இடுவார்கள். அவ்வைபவமும் விழாவின் மேன்மையும் நேரிற் கண்டானந்திக்க வேண்டியவைகளில் ஒன்று.

இவ்வாலயத்தைப் போல மங்களாம்பிகைக்கு ஒரு ஆலயமும் நிறுவப்பெற்றிருக்கிறது. அம்மங்களாம்பிகை கோயிலில் நடை பெறும் நிமிதியன்று ஏராளமாக சீனர்களும், ஆங்கிலேயர்களும், மற்றவர்களும் வந்து பார்த்து இன்புறுவர். இவ்வாலயம் இரண் டையும் கட்டுவதற்கு முன் நின்றவர் திரு. முத்துப்பழநியப்ப செட்டியார். இவைகளில் மங்களாம்பிகை ஆலயத்துக்கு வலப் பாகத்தில் அமைந்திருக்கிறது ஓர் கல்வி நிலேயம். இந்நிலேயத்தை தன் சொந்தப் பொறுப்பில் அமைத்து நடத்தும் திரு. முத்துப் பழநியப்ப செட்டியார் இதற்கு "இராமநாதன் வித்தியாசாலே" என்ற பெயரைச் சூட்டி இருக்கிறுர். இந்த வித்தியாசாலேயில் பல ஏழை மாணவ, மாணவிகளுக்கு தமிழ்க் கல்வியும், தையல், பின்னல் மற்ற தொழில்களும் கற்றுக்கொடுக்கப் பெறுகிறது. இதனுல் தமிழ் மக்கள் பெறும் பலன் பல. இதேபோல ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடங்களே நடத்தப் பலர் முன் வந்தால் தமிழ்மக்கள் மிக விரைவில் முன்னேற்றம் பெறுவார்கள் என்பது திண்ணம். இவ் வாலயங்களேயும், பள்ளிக்கூடத்தையும், வாணிபச் சிறப்பையும் பெற்று விளங்கும் சுங்கும்பையின் தோற்றம் போற்றத்தக்கதே. இதற்கு மேல் கார் வழியாகச் சென்ருல் "ஜாவி"க் கோயிலேக் காணலாம்.

ஜாவிக் கோயிலின் தன்மை

இவ்வாலயம் சுங்கைப் பாக்காவிற்கும், நிபோங் திபாலுக்கும் இடையில் பெரிய ரோட்டில் அமைந்திருக்கிறது. இவ்வாலயம் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் ஓர் சிறிய ஆற்றங்கரையில் நகரத்தார் களால் கட்டப்பட்டது. இதில் சிவசுப்பிரமணியனேயும், மாகாளி அம்மனேயும் வைத்து வணங்கி வருகிறுர்கள். சிவசுப்பிரமணிய னுக்கு சித்திரா பௌர்ணமியில் நகரத்தார்களால் விழாக் கொண் டாடப்பெறும். இவ்விழாவைப் பாரிட் பந்தார், பாக்கான் சிரூப், சிலாமா, நிபோங் திபால் நகரத்தார் கவனித்து நடத்துவார்கள். இவ்விழாவைக் கண்டு களிக்க இறைவன் அருள் பெற்றுய்ய பல

தேவிமா காளிக்கும் தெண்டாயுதனுக்கும்
ஜாவியில் நகரத்தார் தானமைத்த திருக்கோயில்.



Jawi Temple.

ஊர்களில் இருந்தும் அன்பர்கள் வருவார்கள். அவர்களை வரவேற்று உபசரிப்பதோடு அங்கு வரும் மக்களுக்கும் விழாக்காலத்தில் அன்னதானம் செய்யப்பெறும். இக்கோயில் ஓர் எஸ்ட்டேட்டின் பக்கத்தில், தனிப்பட்ட இடத்தில் இருந்தாலும் இதன் விழாக் காலத்தில் பெருத்த நகரத்தைப் போன்றிருக்கும். அன்று அங்கு வரும் கார்கள், பஸ்கள், வண்டிகள் ரிக்ஷாக்களை எண்ணமுடியாது. இவைகள் எங்கே வரிசையாக நின்று வழியை அடைத்து விடுமோ என்ற பயத்தால் அவைகளை ஒதுக்கி நிறுத்துவதற்கு அங்கங்கே போலீஸ்காரர்கள் நிற்பர். அத்துடன் அங்கு வரும் மக்களையும் பாதுகாப்பர். இப்பாது காப்புகளால் அங்கு வரும் மக்கள் எவ்வித துன்பமும் இன்றி விழாவைக் கண்டின்புற்று இறைவன் அருளும் பெற்றுச் செல்வர். இவ்வாறு வரும் மக்களுக்கு இன்னருள் புரியும் கந்தனுக்கு தினப்படி இருகாலப் பூசை நடத்தப் பெறுகிறது. அதனால் ஆலயத்தில் என்றும் திருநாளாகவே இருக்கும்.

இத்தகைய பல ஆலயங்களையும் வாணிபச் சிறப்புகளையும் கொண்டுவிளங்கும் இம்மாகாணத்தில் ரப்பர், தென்னை, பாக்கு மரங்கள் மிகுதி. இவைகளோடு கரும்பு, நெல்விளைவுகளும் உண்டு. அதனால் ஒவ்வொருவரும் தக்க வருவாயைப் பெறுகின்றனர். தொடுவாய்ப்பகுதியைச் சேர்ந்த இச்சிறப்பு வாய்ந்த மாகாணம் தனிப் பட்டதாக இருப்பினும் இதன் தலைமைக் காரியாலயங்கள் அத்தனையும் பினாங்கிலேயே இருக்கிறது. அதனால் இம்மாகாணம் பினாங்கைச் சேர்ந்த பல ஊர்கள் கொண்டதாக விளங்குகிறது.

1. ஈ. மலாக்காவின் மாட்சி

தமிழ்த்தாய் வணக்கம்

[நேரிசை வெண்பா]

“ மண்ணீர் வளஞ்செல்வ மன்னு மலாக்காவின்
பண்டைப் பெரும்புகழைப் பாரிலுள்ளோர் கண்டிடவே
பன்மொழியைத் தோற்றுவித்த பாவார் தமிழ்த்தாயே
கன்னலைப்போற் பொன்மொழியாற் காட்டு ”

நீர்வளம் நிறைந்து நிலவளம் மிகுந்து நிலைபெற்ற புகழை உடையது மலாக்கா. இம்மலாக்காவின் பண்டைப் பெருமைகளையும்

இன்றைய மாட்சிகளையும் இவ்வுலகிலுள்ள மக்கள் யாவரும் கண்டின்புற வேண்டும். அதற்குப் "பலவுயிரும் பலவுலகும் படைத்தழித்துத் துடைக்கினும் ஓர் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்த படி இருப்பதுபோல்" பல மொழியைத் தன்னிடத்து இருந்து தோற்றுவித்தும் குறைவுபடாது நிறைந்த பாக்களால் இலக்கிய இலக்கணங்களைக்கொண்டு விளங்கும் தமிழ்த்தாயே! நீயே துணை. நீ முன்வந்து கரும்பைப்போன்ற உன் இனிய பொன்மொழிகளால் காட்டுவாயாக.

மலாக்காவின் மன்னர்கள்

பல் வளங்களும் செறிந்த இம்மலாக்கா மலாயாவில் ஓர் பழைய நகரமாகும். இதற்கும் இந்திய நாட்டுக்கும் பன்னாட்களாகவே தொடர்புண்டு. அவ்விளக்கம் முதலாவது அதிகாரத்திலேயே கூறப் பெற்றிருக்கிறது. (பக்கம் 17-19 பார்க்க) நமது இந்தியநாட்டுக்குத் தொடர்புகொண்ட இம்மலாக்காவை ஆண்ட இந்து அரசர் ஆட்சி கி. பி. 1414ல் இறந்த ஸ்ரீ பரமேஸ்வர மன்னன் காலத்துடன் முடிவு பெற்றது. ஸ்ரீ பரமேஸ்வரா அல்லது பரமிஸௌரா என்ற இவரும் ஜாவாவில் இருந்தே மலாக்காவுக்கு வந்ததாய்த்தெரிகிறது. இவர் ஜாவாவில் "ஏமான்" என்ற பட்டப்பெயருடன் இருந்தவர். அங்கு ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியினால் இவர் தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தன் ஆட்களுடன் இந்நாட்டுக்கு வந்தார். மூவார் நதிக்கரையை அடைந்து சிலகாலம் தங்கி இருந்தார். அப்போது மலாக்காவில் இருந்த கடல் நாடோடிகளான "சிலட்டர்கள்" என்ற ஒரு பிரிவினர் இவரை மலாக்காவுக்கு அழைத்தனர். இவரும் ஏற்று மலாக்கா நதியின் முகத்துவாரத்தின் வழியாகப் புகுந்தார். "பர்டிராப்" என்ற குன்றை தனக்கு இருப்பிடமாகக்கொண்டு இருந்தார். அப்போது அங்கிருந்த குடிகளுக்கு வேறு அரசரில்லை. இவரையே அரசராக நியமித்தார்கள். இவரும் அரசராக அமர்ந்து நாட்டைக் காத்துவந்தார்.

சின்னாட்களில் மலாக்காக் கடலில் கொள்ளையிட்டுத் திரிந்த கூட்டத்தினர், குடிதண்ணீருக்காக மலாக்காவை நாடினார்கள். அரசரும் அவர்களை வரவேற்று உபசரித்தார். அதனால் அவர்களும் இங்கு குடியேறினார்கள். தாங்கள் சேகரித்து வைத்திருந்த பொருள்களையும் கொடுத்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் இங்கு பல வகையாலும் 2,000 குடிகள், குடியேறி விட்டார்கள். அதனால் மலாக்காவின் ஜனத்தொகை பெருகியது. பொருளாதாரப் பெருக்

கமும் உண்டாகியது. துறைமுகமும் பெரிதாகியது. மேற்கு, தெற்குக் கடல் வியாபாரத்துக்கும் மலாக்கா துறைமுகமே சிறந்ததாக இருந்தது. அரேபியா, இந்தியா, ஜப்பான், சைனு மற்ற நாடுகளில் இருந்தும் வியாபாரக் கப்பல்கள் வந்து குவிந்தன. இவ்வாறு பெருக்கமுறவே அரசர் தங்கி இருக்கவும், அரசியல் நிலையங்களை வைத்து நடத்தவும் மலாக்கா நதியின் முகத்துவாரத்தில் உள்ள "அர்ச் பால்" மலையில் சில கட்டிடங்களைக் கட்டினார்கள். அவைகளில் தங்கி அரசர் அரசியலை நடத்தினர், அவருடைய சிப்பந்திகள் பலர் அம்மலைக்கு அண்மையில் குடியேறினார்கள். இவ்வாறு பலர் குடியேறிய காலத்தில் மலாக்கா நகரம் வடபுறம் கடற்கரை ஓரத்தில் "ஊபே" என்ற இடம் வரையிலும், தென்புறம் கடற்கரை ஓரத்தில் "ஹீலர்" என்ற இடம் வரையிலும் எல்லையாகக் கொண்டு விளங்கியது. இவ்விருபகுதிக்கும், இடையில் ஓடுவது மலாக்கா நதி. அதைக்கடப்பதற்காக ஓர் மரப்பாலத்தை அமைத்தார்கள். பாலம் அமைந்தபின் நகரத்தின் இருபுறங்களிலும் குடிகள் நெருங்கின. பல ஜாவானியரும் வந்து குடியேறினர். வாணிபப் பெருக்கமும் ஏற்பட்டது. வாணிபம் வளர்ச்சி பெறவே பலபகுதிகளில் இருந்தும் வந்த பாய்க்கட்டிக் கப்பல்களில் "பொன், பட்டு, துணி, பீங்கான், கோதும்பை" மற்றவைகள் வந்து இறக்குமதியாகின. பலநாட்டு மக்களின் தொடர்புகள் ஏற்பட்டன. இவ்வாறு வாணிபம் பெருக்கமுறவே மலாக்காவுக்கும் சைனுவுக்கும் அதிகத் தொடர்புண்டாகியது. அரசர்களும் ஒருவருக்கொருவர் நட்பினராயினர். அதனல் கி. பி. 1403ம் ஆண்டில் மலாக்கா மன்னரான பரமிஸௌராவுக்கு சின சக்கரவர்த்தியானவர் "ஹிங்சிங்" என்ற தூதுவனிடம் பொன் ஜரிகைகள் சேர்த்து நெய்யப்பெற்றபட்டாடை ஒன்றை அனுப்பினர். இதேபோல பல தூதுவர்கள் 1508ம் ஆண்டு வரை மலாக்காவுக்கு வந்து சென்றுர்கள். மலாக்கா மன்னரும் பலருடனும் நட்புக்கொண்டிருந்தார். இருந்தாலும் சயாம் அரசருக்கு ஆண்டு ஒன்றுக்கு 40 தாஹில் பொன் கப்பமாக (பகுதிப் பணம்) கட்டி வந்தார்.

இந்நிலையில் 1414ம் ஆண்டில் ஸ்ரீ பரமேஸ்வர மன்னன் காலம் முடிந்தது. அப்போது "ராஜா பேஸார் மூடா' வாக இருந்தவரும் பரமேஸ்வர மன்னனின் புதல்வருமானவர் பட்டத்துக்கு வந்தார். பட்டத்துக்கு வந்ததும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். தன் பெயரையும் "சுல்தான் முகம்மது இஸ்கிந்தர் ஷா" என்று மாற்றிக்கொண்டார். இவரைப் பின் பற்றிப் பல குடிகள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். அதனல் இவர்கள் தங்கி

இருந்த மலையின் அடிவாரத்தில் ஓர் மசூதியையும் கட்டினார்கள். அரசியலையும் மதமார்க்க விதிப்படி நடத்தினார்கள். இதன் காரணமாக சயாம் அரசாங்கத்துக்குக் கொடுத்து வந்த பகுதிப் பணத்தை நிறுத்திவிட்டார்கள். அதனால் சயாம் அரசர் இவர்கள் பேரில் இரண்டு படை எடுப்பை கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் அமைத்தார். அப்படை எடுப்பால் வெற்றிபெற முடியவில்லை. இரு முறையும் தோல்வி அடைந்ததால் சயாம் அரசர் மறுபடி போர் தொடுக்க எண்ணவில்லை. இரு முறையும் போரில் வெற்றி பெற்ற மலாக்கா சுல்தானும் குடிகளும் மகிழ்வோடு அரசியலை நடத்தினர். அத்துடன் துறைமுகத்தின் பலனால் வியாபாரப் பெருக்கமும் சேரவே பொருளாதாரம் சிறந்து விளங்கியது. மலாயாவின் வியாபாரத்துக்கு வரும் பல நாட்டின் மரக்கலங்களும் மலாக்கா துறைமுகத்தையே வந்து முதலில் பிடித்தன. அதனால் பெருத்த கடலுக்கும் “ மலாக்கா கடல் ” என்ற பெயர் விளங்கியது. இன்றும் அப்பெயரே விளங்குகிறது. இச்சிறப்பு வாய்ந்த மலாக்காவை ஆண்ட சுல்தான் மதமாறினாலும் வியாபாரத்துக்காக வரும் பல நாட்டினருடனும் மிக மரியாதையாக நடந்துவந்தார். இவருடன் பல அரசர்களும் நட்புக்கொண்டனர். அந்நட்பின் மிகுதியால் அப்போது இந்தியாவில் கள்ளிக்கோட்டையை ஆண்ட அரசர் 10 அடி நீளமுள்ள பீரங்கி ஒன்றைக் கொடுத்தார். (இப்பீரங்கியே பிறகு போர்த்துக்கியரால் கைப்பற்றப்பட்டது) இவ்வாறு பல நாட்டுடனும் தொடர்பு கொண்ட சுல்தான் முகம்மது இஸ்கிந்தர் ஷாவின் ஆட்சிக்குப் பிறகு இவர் மகன் “ இராஜா இப்ராஹீம் ” பட்டத்துக்கு வந்தார். இவருக்குப் பிறகு இவர் மகன் “ சுல்தான் முகம்மது ஷா ” பட்டத்துக்கு வந்து ஆட்சியை நடத்தினார். இவர்கள் ஆட்சியில் மலாக்காவின் செல்வவளம் சிறந்திருந்தது. ஆயினும் இச் சுல்தான்கள் பெரும் செலவினராக இருந்ததால் பொருளாதாரம் கொஞ்சம் சீர் குலைய நேர்ந்தது. இவர்கள் பெருஞ் செலவினர். ஆடம்பர வாழ்க்கையைக் கொண்டவர் என்பவைகளை லாயர் திரு. சில்வா அவர்கள் “ மலாக்கா இளவரசி ” என்று ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலில் காண்கலாம். இவர்களில் “ சுல்தான் முகம்மது ஷா ” வின் காலத்தில் தான் மலாக்காவில்,

போர்த்துக்கியர் புகுந்தது

வியாபாரத்தில் மலாக்கா சிறந்து விளங்குவதை போர்த்துக்கியர் கண்டனர். தங்கள் வியாபாரத்தையும் பெருக்க எண்ணினர். அதற்காக ஓர் படைக் கப்பலை 1509ம் ஆண்டில் மலாக்காவுக்கு

மேன்மைதங்கிய மலாக்கா போர்த்துக்கிய கவர்னர்.



Portuguese Governor.

அனுப்பினர். "டிசி ரிபுரியர்" என்பவரைத் தலைவராகக் கொண்டு மலாக்காவுக்கு வந்த அக்கப்பற் படையை "சுல்தான் முகம்மது ஷா" வரவேற்கவில்லை. அக்கப்பலில் இருந்து "அரா டி அரான் ஜோ" எனபவருடன் இறங்கி மலாக்காவுக்குள் வந்த 20 பேரையும் சுல்தான் சிறைப்படுத்தி விட்டார். அன்றிருந்த நிலையில் சுல்தானை வெல்ல முடியாதென்பதை உணர்ந்த போர்த்துகியரின் படைக் கப்பல் திரும்பி விட்டது. பிறகு 1511ம் ஆண்டில் "அல்போன் சோ டி அல்ப் போர்க்" என்பவர் தலைமையில் மலாக்காவுக்கு 19 போர்த்துக்கிய யுத்தக் கப்பல்கள் வந்தன. "பூலோஜா" வென்ற மலையோரத்தில் கப்பல்கள் நங்கூர மிடப்பட்டன. தலைவர் "அல்ப் போர்க்" சுல்தான் முகம்மது ஷா வுக்கு சிறைப்பட்டிருக்கும் 20 போர்த்துக்கியரையும் விடுதலை செய்யும்படி கூறி அனுப்பினர். "சுல்தான் முகம்மது ஷா"வும் "நீனுசாபு" மற்றவர்கள் கூறிய ஆலோசனையின்படி 20 பேரையும் விடுதலை செய்தார். அவர்கள் தங்கள் கப்பலுக்கு வந்து சேர்ந்ததும் "அல்போர்க்" போரைத் தொடுத்தார். மலாக்கா "சுல்தான் முகம்மது ஷா"வும் தன் படைகளைக்கொண்டு தடுத்தார். போர்த்துக்கியப் படைகளோ கப்பலில் இருந்தபடியே பீரங்கிகளைப் பிரயோகிக்கின்றன. மலாக்கா சுல்தானின் படைகளோ தரையில் நின்றபடியே சண்டை செய்கின் றன. இவ்வாறு இருமுறை போர் நடைபெற்றது. அவ்விரண்டு முறையும் போர்த்துக்கியரை மலாக்காவுக்குள் புகுத விடாமல் சுல் தான் படைகள் தடுத்து விட்டன. மூன்றும் முறை கொஞ்சம் கடுமையாக போர்த்துக்கியர் பீரங்கிகளைப் பிரயோகித்தனர். சுல்தா னிடமும் பல பீரங்கிகள் இருந்தன. இருந்தாலும் அவைகளை உப யோகிக்கும் முறை அதிகமான ஆட்களுக்கு தெரியாதிருந்தபடியால் பயனில்லாது போய்விட்டது. இதை உணர்ந்த போர்த்துக்கியர் கள் பீரங்கிகளைக் கொஞ்சம் அதிகமாகப் பிரயோகித்து தங்கள் கப்பல்களையும் மலாக்கா துறைமுகத்தில் கொண்டுவந்து சேர்த்து விட்டனர். அதை அறிந்த "சுல்தான் முகம்மது ஷா"வும் மற்ற தலைவர்களும் மலாக்காவை விட்டுவிட்டு ஓடிவிட்டனர். போர்த்துக் கியப் படையின் தலைவராக வந்த "அல்போன்சோ டி அல்போர்க்" கும் வேறு எவ்வித இடையூறுமின்றி மலாக்கா நகரத்துக்குள் புகுந்து தங்கள் கொடியை நாட்டினர்.

மலாக்கா சுல்தானுக்கு கள்ளிக்கோட்டை அரசரால் கொடுக்கப் பட்டிருந்த 10 அடி உள்ள பீரங்கியை எடுத்தார். தங்கள் தேயத் தில் உள்ள "லிஸ்பன்" இராணுவ மியூஸியத்துக்கு அனுப்பினர். (அப்பீரங்கி இன்னும் அங்கு இருக்கிறது) மலாக்காவின் துறை

முகத்துக்கும், மக்களுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தினர். சயாம், பர்மா மற்ற அரசியல்களுக்கும் தங்கள் தூதுவரை அனுப்பினர். அரசாட்சியையும் திறம்பட நடத்தினர். சுல்தான்மார்களால் கட்டப்பட்ட கட்டிடங்களுக்குமேல் பல கட்டிடங்களைக் கட்டினர். "அர்ச் பால்" மலை என்ற 120 அடி உயரமுள்ள பழைய குன்றின் முன்புறம் ஓர் கோட்டையைக் கட்டினர். அக்குன்றின் உச்சியில் 1511ம் ஆண்டிலேயே ஓர் பெரிய மாதா கோயிலையும் கட்டினர். நாணயங்களை எல்லாம் போர்த்துக்கிய நாணயமாக்கினர். வியாபாரத்தைப் பெருக்கினர். வாணிபத்தைப் பெருக்கி அரசியலைத் திறம்பட நடத்தினாலும் உள்நாட்டுக் கலகங்கள் கொஞ்சம் இருந்து கொண்டே இருந்தன. அவைகளில் "ஊபே" பகுதியில் இருந்த ஜாவானியர் குழப்பமே மிகுதி. அக்குழப்பங்களை அடக்கி அங்கங்கே போர்த்துக்கியர்களை உத்தியோகத்தில் அமர்த்தினர். ஆசியாக்காரர்களுக்கு ஓர் "கப்பித்தானை" நியமித்தார். அதனால் நகரம் அமைதியுற்றது. மக்களும் சமாதானத்தைப் பெற்றனர். நகரமும் அமைதியுற்று, வாணிபமும் பெருக்க முறவே அரசியலை நடத்தப் பல உத்தியோகஸ்தர்களை நியமித்துவைத்து தலைவர் "அல்ப்போர்க்" கொஞ்ச நாட்களில் கொச்சிக்குச் சென்று விட்டார்.

"அல்போன்சோ டி அல் போர்க்" சென்றதும் மலாய் சுல்தான்கள் பலர் மலாக்கா மீது படை எடுத்தனர். ஜாவாவில் இருந்த "பாட்டே உனூஸ்" என்பவன் ஓர் படையைத் திரட்டி யுத்தம் தொடர்ந்தான். மலாக்காவை விட்டு ஓடிய சுல்தான் முகம்மது ஷாவும் அவன் சுற்றத்தாரும் "பின்டாங்" என்ற இடத்தில் இருந்து கொண்டு போர் தொடுத்தனர். ஜோஹோரும் படை எடுத்து மலாக்காவைக் கைப்பற்ற முற்பட்டது. யார் படை எடுத்தும் போர்த்துக்கியரை வெல்ல முடியவில்லை. இத்துடன் சமாதானமாக இருந்த பல சிற்றரசியல்கள் போர் தொடுத்துப் பெருந்தோல்வி யடைந்தன. இதேபோல 9 ஆண்டுகள் வரை பல சிறு சிறு சண்டைகள் நடந்தன. பிறகு 1529ம் ஆண்டில் "அச்சே" யின் "சுல்தான் இஸ்கிந்தர் மூடா" திடீரென ஓர் படையைத் திரட்டி வந்து மலாக்காவில் யுத்தம் செய்தார். அதிலும் போர்த்துக்கியரை வெல்ல முடியாமல் தோல்வி அடைந்து திரும்பி விட்டார். அதற்குப் பிறகு மலாய் நாட்டு அரசர்கள் படை எடுப்பு எதுவுமின்றி மலாக்காவில் போர்த்துக்கியரின் ஆட்சி நடைபெற்றது. 1595ம் ஆண்டில் உலாந்தாக்காரர் (டச்சு) மலாக்காமீது போர் தொடுக்க எண்ணினர். இயலவில்லை.

1606ம் ஆண்டில் யுத்தக்கப்பல்களை மலாக்காவுக்கு அனுப்பினர். அவர்களுக்கு உதவியாக “அச்சே”யின் சுல்தானும் இருந்தார். இருவரும் சேர்ந்து போர்த்துக்கியருடன் போர் தொடுத்தனர். அப்பொழுதும் வெல்லமுடியவில்லை. மறுபடி போர் தொடுத்து வெற்றிபெறும்வரை கடலில் வழி மறிப்பதே சிறந்தது என எண்ணிப் போரை நிறுத்திவிட்டனர். அன்றுமுதல் உலாந்தாக்காரரும் அச்சேனியரும் சேர்ந்து மலாக்கா வரும் கப்பல்களை கடலில் வழி மறித்தனர். அதனால் மலாக்கா துறைமுகம் அடைபட்டது. பஞ்சமும் ஏற்பட்டது. போர்த்துக்கியரின் செல்வாக்கும் கொஞ்சம் குறைந்தது. குறைந்தாலும் பன்னாட்கள் வரை உலாந்தாக்காரர் மலாக்காவை கைப்பற்ற முடியவில்லை.

உலாந்தாக்காரரின் உறுதி

பல நாட்களாக மலாக்காவைக் கைப்பற்ற முடியவில்லையே என எண்ணிய உலாந்தாக்காரர் எப்படியும் வெற்றிபெறவேண்டும் என உறுதிகொண்டனர். அதற்காக மூன்றுமுறையாக 1640ம் ஆண்டில் மலாக்கா துறைமுகத்துக்கு பல பீரங்கி கப்பல்ப்படைகளை அனுப்பினர்கள். அவைகள் வந்து மலாக்காவில் யுத்தத்தைத் தொடங்கின. போர்த்துக்கியர்களிடமோ படை, மருந்து வலுவு அதிகமில்லை. அதனால் உலாந்தாக்காரர்களை எதிர்த்துப் போராட முடியவில்லை. உலாந்தாக்காரரும் தங்கள் பீரங்கிகளின் வலுவால் போர்த்துக்கியர் கட்டி இருந்த மலாக்கா கோட்டையைத் தகர்த்தனர். பல கட்டிடங்களை இடித்தனர். துறைமுகத்தில் இருந்த ஓர் பாலத்தை அழித்தனர். இவைகளுக்கு ஆற்றாது போர்த்துக்கியர் மலாக்காவை உலாந்தாக்காரர்களிடம் ஒப்படைத்துச் சரண் அடைந்தனர். இவ்வெற்றி பெற்ற உலாந்தாக்காரருக்கு 1641ம் ஆண்டில் மலாக்கா சொந்தமாகியது. அவ்வாறு மலாக்காவை சொந்தமாக்கிய உலாந்தாக்காரரும் அரசியலை நல்ல முறையிலேயே நடத்தினர். போர்த்துக்கியரால் கட்டப்பட்ட கோட்டையையும் சில கட்டிடங்களையும் அழித்தாலும் அதன் அடையாளமாக “கோட்டையின் வழி (Old Gateway) யை நிறுத்திவைத்தனர். அவ்வடையாளம் இன்றுமிருக்கிறது. அதில் உள்ள கல்வெட்டில் “அல்போன்சோ டி அல்போர்க் என்பவரால் கட்டப்பட்ட பண்டைய காலக் கோட்டையில் எஞ்சி இருக்கும் பாகம் இதுதான். அவரால் “வாமோசா” 1511 எனப் பெயரிடப்பட்டது. இதனருகில்தான் சந்தியாகுவின் கோபுரம் நின்றது” என்று ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருக்கிறது. இதற்குமேல் மலை உச்சியிலிருந்த மாதா கோயிலிலும் பல பாகம்

அழிந்துவிட்டது. அதில் மிஞ்சிய பாகத்தை அப்படியே வைத்திருக்கிறார்கள். அவ்வாலயத்தில் இன்றும் ஆண்டுக் கொருமுறை விசேஷப் பூசை நடைபெறுகிறது. இவ்வாலயத்தின் ஓர் பாகத்தையும் அழகிய கோட்டையையும் அழித்த உலாந்தாக்காரரும் அரசியலை நடத்த அதே மலையில் பெருத்த கட்டிடங்களைக் கட்டினார்கள். (அக்கட்டிடங்களில்தான் இன்றும் ஆபீஸ்கள் இருக்கின்றன.) புதிதாகப் பல மாதா கோயில்களைக் கட்டினார்கள். ஆசியாக்காரர்களுக்கு போர்த்துக்கியரால் கொடுக்கப்பட்ட "கப்பித்தான்" பட்டங்களை அதிகமாக்கினார்கள். தமிழ் மக்களுக்காக மலாக்கா செட்டியார்களில் ஒருவருக்கு "கப்பித்தான்" பட்டத்தைக் கொடுத்தார்கள். பொய்யாத விநாயகர் ஆலயத்துக்கு இடம் விட்டுக்கொடுத்தார்கள். குடிகளுக்கு விடுகட்டக் கொடுத்த இடங்களுக்கு வரி இல்லாது ஆக்கினார்கள். (அவர்கள் கொடுத்த கிராண்டுகளிற் பல இன்றும் வரியில்லாதிருக்கிறது) தங்கள் மதத்தைப்போல மற்ற மதங்களையும் பாதுகாத்தார்கள். இவர்கள் ஆட்சி காலத்தில் மலாக்காவில் பல ஆலயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்விபரம் பின்பு கூறப்பெறும். இவர்கள் ஆட்சியும் நல்லமுறையிலேயே நடைபெற்றிருக்கிறது.

ஆங்கில வரசின் ஆதரிப்பு

உலாந்தாக்காரரிடமிருந்து 1795ஆ ஆகஸ்ட்மீ 12உயில் ஆங்கிலேயர்கள் மலாக்காவைக் கைப்பற்றினார்கள். தங்கள் ஆதரவில் அரசியலை நடத்தினார்கள். அவ்வரசியல் நடக்கும்போது சிங்கப்பூரைப்பெற்ற திரு. "ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ்" 1811ஆ ஆகஸ்ட்மீ 4உ மலாக்கா வந்திறங்கினார். மலாக்காவிலிருந்தே ஜாவாவின் தலைநகராகிய பத்தாவியா சென்று உலாந்தாக்காரருடன் போர் தொடுத்தார். வெற்றியும் பெற்றார். ஆங்கில வரசின் ஆதரிப்பில் இருந்த மலாக்கா 1814ம் ஆண்டில் மறுபடியும் உலாந்தாக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு 1824ஆ மார்ச்சுமீ 17உ ஏற்பட்ட ஹாலண்ட் உடன்படிக்கையிற் கண்டபடி ஜாவா, சுமத்திராவை உலாந்தாக்காரருக்குக் கொடுத்து மலாக்காவை பிரிட்டிஷாருக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். அன்றிருந்து இந்தியா கவர்ன்மெண்டின் கண்காணிப்பில் பினாங்கைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி நடத்தப்பெற்றது. 1837ம் ஆண்டில் தொடுவாய்ப்பகுதியின் தலைநகராக சிங்கப்பூரை ஆக்கியதில் இருந்து சிங்கப்பூர் கவர்னர் ஆதிக்கத்தின் கீழ் ஒரு ரெசிடெண்ட் கௌன்ஸிலராலும், சில ஸ்ட்ரைட்ஸ் சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களாலும் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. பண்டைக்காலத்தில் தோன்றி, பல அரசர்களின்

ஆதிக்கத்தில் இருந்து, பலருக்கும் பலனைத்தந்த இம்மலாக்கா நகரம் இன்றும் பண்டைப் பெருமைகளைக்காட்டிப் பலருக்கும் நலனைத் தந்துகொண்டே இருக்கிறது.

இன்றைய மலாக்காவும்
ரெஸிடெண்ட் கௌன்சிலரும்


ஆங்கில வரசின் ஆதரிப்பில் இன்று எவ்வித இன்னலும் இன்றிச் சிறப்புற்று விளங்கும் இம்மலாக்காவின் சுற்றளவு 820 சதுர மைல்கள். இதன் நீளம் 42 மைல். அகலம் 8 முதல் 25 மைல்கள் வரை. இதைப் பரிபாலிக்கும் இன்றைய ரெஸிடெண்ட் கௌன்சிலராக இருப்பவர் திரு. ஜார்ஜ் வில்லியம் பிராண்ட் M.A. ஆவர். இவர் 1887௵ மார்ச்சுமீ 22உ இங்கிலாந்தில் பிறந்தவர். 19-11-1910ல் "காடெட்" ஆனார். 21-11-1911ல் குவாந்தான் ஆக்டிங் அசிஸ்டெண்ட் டிஸ்ட்ரிக்கட் ஆபிஸர் ஆனார். 17-12-1912ல் "காடெட்" தேர்ச்சி பெற்றார். பல உத்தியோகங்களில் அமர்ந்தார். 20-4-1927ல் எப், எம், எஸ் கவர்ன்மெண்டின் ஆக்டிங் அசிஸ்டெண்ட் செகரட்ரி ஆனார். 4-9-1930ல் பினாங்கு முனிசிபல் கமிஷனர்களின் பிரசிடெண்ட் ஆனார். 5-7-1932ல் பினாங்கு ஆக்டிங் ரெஸிடெண்ட் கௌன்சிலராக இருந்தார். 16-2-1934ல் பினாங்கு முனிசிபல் பிரசிடெண்ட் ஆனார். இவைகளுக்கு இடையில் இன்னும்பல உத்தியோகங்களில் இருந்ததுடன் பலமுறை ஓய்வும் எடுத்திருக்கிறார். 23-11-1934ல் மலாக்காவின் ரெஸிடெண்ட் கௌன்சிலர் பதவியை ஏற்றார். அன்றுமுதல் தனது உத்தியோகப் பொறுப்பைச் செவ்வனே நடத்துகிறார். இவர் மிக நல்லகுணம் பெற்றவர். இவர் தங்கி வசிப்பதற்குப் பண்டைய அரசியல்கள் கண்ட "அர்ச்பால்" மலையின் உச்சியில் ஓர் பங்களா அமைக்கப்பெற்றிருக்கிறது. அதனால் எந்நேரமும் நகரத்தின் நிலையைக்கவனிக்கப் பொருத்தமாக இருக்கிறது. நல்ல குணமும், திடமும், உறுதியும், பொறுமையும் வாய்ந்த இவரால் மலாக்கா நகரம் கொஞ்சம் திருந்தி வருகிறது. இவரைப்போல மற்ற உத்தியோகஸ்தர்களும் நகரைத்திருத்துவதில் முற்பட்டுள்ளார்கள். அதனால் மிகப்பழமையான கட்டிடங்கள் புதிப்பிக்கப் படுகின்றன. சில தெருக்கள் பெரிதாக்கப்படுகின்றன. இவைகளால் மக்களுக்கும் நலன் மிகுதி.

மலாக்காச் செட்டியார்களின் மரபு

பண்டைச் சிறப்பு வாய்ந்த மலாக்காவில் பழங்காலக் குடிகளாக மலாக்காச் செட்டியார்கள் என்ற ஒரு பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் இந்நாட்டுக் குடிகளாக இருப்பினும் முதலில் தமிழ் நாட்டில் இருந்து வந்தவர்களின் மரபினர் ஆவர். இவர்களின் முன்னோர்கள் வியாபாரத்துக்காக தமிழ் நாட்டில் இருந்து இங்கு வந்தவர்கள். மலாக்காவில் போர்த்துக்கியர் ஆட்சி நடந்த காலத்தில் பல நாட்டில் இருந்தும் வியாபாரக் கப்பல்கள் வந்தன. அதே போல தமிழ் நாட்டில் இருந்தும் கப்பல்கள் வந்திருக்கின்றன. அக்கப்பல்களில் சில, ஆண்டுக்கொரு முறை தமிழ் நாட்டில் இருந்து இங்கு வரும். அதில் ஓர் கூட்டத்தினர் துணி, கைலி, புகையிலை, தின் சாமான்களைக் கொண்டு வருவார்கள். இங்கு வியாபாரம் செய்வார்கள். அவ்வியாபாரம் நடைபெறும் வரை சுமார் 3,4 மாதங்களுக்கு இவர்கள் வந்த கப்பலும் துறைமுகத்திலேயே கிடக்கும். அதற்குள் இவர்கள் கொண்டுவந்த சாமான்களையும் விற்றுவிடுவார்கள். அவைகளுக்குப் பதிலாக இங்கிருந்து பாக்கு, கத்தைக்காம்பு, மிளகு, பிரம்பு மற்றவைகளை வாங்குவார்கள். கப்பலில் ஏற்றிக்கொண்டு புறப்படுவார்கள்.

இதே போல் பல நாள் வந்து சென்று கொண்டிருந்தார்கள். ஒரு முறை இக்கூட்டத்தினரில் 17,18 பேர்கள் கூடிவந்த கப்பல் பேராவுக்கு சமீபத்தில் கடலில் மூழ்கி விட்டது. கரையோரத்தில் கப்பல் மூழ்கியதால் சில உதவிகளைக்கொண்டு ஆட்கள் அனைவரும் தப்பிப் பிழைத்தனர். அங்கிருந்து பல சிறு படகுகளில் மலாக்கா துறைமுகம் வந்து சேர்ந்தனர். இங்கு வந்ததும் திரும்பித் தாய் நாடு செல்ல மார்க்கமில்லை. வேறு கப்பல்கள் வந்து இவர்களை ஏற்றிச் செல்லும் என்று எண்ணவும் இடமில்லை. ஆகவே இங்கேயே குடியாக இருக்க நினைத்தார்கள். அவ்வாறு குடிகள் ஆவதற்கு தக்க பெண்கள் வேண்டும். தமிழ்ப் பெண்களோ அதிகமில்லை. வந்த தமிழர்களிலும் வியாபாரச் செட்டி, படையாச்சி, நாயக்கர், பிள்ளை என்ற பல பிரிவினர் இருந்தனர். ஆகவே எல்லோருமாக இந்நாட்டில் பல பெண்களையும் எடுப்பது. அவர்களைத் தங்கள் சமயம், கொள்கைகளுக்கு மாற்றிக்கொள்வது என்று முடிவெடுத்தனர். அதே போல சீனர், மலாயர், போர்த்துக்கியர் என்ற பல வகுப்பிலும் பெண்களை எடுத்தனர். அவர்களுக்கு சைவசமய அசாரப்படி "தாலி" கட்டி தங்கள் மனைவிகள் ஆக்கிக்கொண்டனர். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் தங்களுக்குள்ளேயே மணம்

மெய்யன்பர் பல்லோரால் மிகநாள்முன் மலாக்காவிற்
பொய்யாத விநாயகர்க்குப் பொருந்தமைத்த பொற்கோயில்.



Malacca Vinayagar Temple.

முடிப்பது. ஆண்களுக்குப் பெண்கள் வேண்டியதிருந்தால் மட்டும் மற்ற வகுப்புகளில் தங்கள் ஆசார முறைப்படி எடுத்துக்கொள்கிற தென்ற வரம்போடு வாழ்க்கையை நடத்தினர்.

அவர்கள் கொண்ட கொள்கையை மிக உறுதியாகக் கடைப் பிடித்ததால்,

> “எண்ணிய எண்ணியாங் செய்துவர் எண்ணியர்
> திண்ணிய ராகப் பெறின்”

என்ற வள்ளுவர் குறளுக்கேற்ப எண்ணியபடியே எல்லாம் நடந்தது. இவர்கள் மரபும் பெருகியது. இவர்கள் அனைவரும் சைவசமயப் பற்றுக்கொண்டவர்கள். ஆகவே பல ஆலயங்களைக்கண்டார்கள். அவைகளில் முக்கியமானது பொய்யாத விநாயகர் கோயில். இக் கோயில் ஏற்பட்டு இற்றைக்கு 300 ஆண்டுகள் ஆகின்றன. மலாயா வில் இப்போதுள்ள ஆலயங்களில் இதுவே முதலில் ஏற்பட்ட இந்துக்கோயிலாகும். இக்கோயிலை நிறுவி ஆலயத்துக்கென உலாந் தாக்காரர் ஆட்சியில் ஓர் இடமும் பெற்றார்கள். அவ்வாலயத்துக் குப் பக்கத்தில் பல வீடுகளைக்கட்டிக் குடியும் ஏறினார்கள். இவர் களில் பலர் “கப்பித்தான்” பட்டம் பெற்றும் வாழ்ந்திருக்கிறார் கள். இவ்வாறு செல்வாக்குடன் வாழ்ந்த இவர்கள் பல பிரிவின ராக இருந்தாலும் இங்கு ஒரே குழுவினராகவே இருந்தனர். இவர்களில் செட்டியாரின் புதல்வியை, பிள்ளையின் புதல்வனுக்குக் கொடுப்பார்கள். பிள்ளையின் புதல்வியை நாயக்கரின் புதல்வனுக் குக் கொடுப்பார்கள். இப்படி ஒருவருக்கொருவர் பெண்களைக் கொடுத்து, எடுத்தாலும் அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தை களுக்கு “செட்டியார், பிள்ளை, நாயக்கர்” என்ற தகப்பன் வழிப் பட்ட பெயர்களையே சூட்டுவார்கள். இவர்கள் பெண்களை புதிதாக வரும் சைவசமயத்தைச்சார்ந்த தமிழ் மக்களுக்கும் கொடுப்பார்கள். இவர்களுக்குப்பிறக்கும் எந்தக் குழந்தைகளுக்கும் தெய்வங்களின் பெயர்களான “கணேசன், அன்னைபலே, கனகசபை, லெட்சுமணன், வள்ளியம்மை, மீனாட்சி, பார்வதி, லட்சுமி” என்ற உயர்ந்த பெயர் களையே வைப்பார்கள். இவர்கள் வீட்டில் நடைபெறும் எந்தச் சடங்கும், திருமணமும் இந்து, சைவசமய முறைப்படியே நடை பெறும். இன்றும் அதேபோலவே நடைபெற்று வருகிறது.

இவர்களில் முன்னிருந்தவர்கள் தமிழும் கற்றிருந்தார்கள். அவர்கள் படித்த ஏட்டுப் பிரதிகள் இன்றும் இருக்கின்றன. இப்

போதுள்ளவர்களில் இரண்டொருவருக்கே தமிழ் படிக்கத்தெரியும். மற்றவர்கள் எல்லாம் ஆங்கிலமே கற்றிருக்கிறார்கள். இம்மரபினர் ஒரு காலத்தில் 150 குடிகள் இருந்தனர். இப்போது 60, 65 குடும்பங்களே இருக்கின்றன. இவர்களில் 100 ஆண்டுகளுக்கு முன் "தெய்வநாயகம் செட்டியார்" என்று ஒருவர் தோன்றினார். இவர் மறைந்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கும். இவர் "கப்பித்தான்" பட்டம் பெற்றவர்களின் வழித்தோன்றல். இவர் ஒருவரே இறக்கும் வரையும் ஆலயத்துக்கு அண்மையில் இருந்த இல்லத்தில் இருந்து கோயிற் காரியங்களைக் கவனித்தவர். இவர் காலத்தில்தான் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிடம் நட்புக்கொண்டு ஆலயங்களை அவர்களிடம் ஒப்படைத்தது. இவரின் வழித்தோன்றல்களில் இன்றும் பலர் பெரிய உத்தியோகங்களில் இருக்கின்றனர். அவர்களில் திரு. "எல். கே. செட்டி" என்னும் லெ. கனகசபை செட்டியார் ஒருவர். "எல். ஏ. செட்டி" என்னும் லெ. அண்ணாமலை செட்டியார் ஒருவர். இவர்கள் இருவரும் சகோதரராவர். இவர்களில் மூத்தவரான எல். கே. செட்டி நன்கு கற்றவர். தமிழும் அறிந்தவர். ஆண்டில் முதிர்ந்தவர். (இப்போது வயது 68 இருக்கும்) இன்றும் லாயர் ஆபிஸில் பெரிய குமஸ்தாவாக இருக்கிறார். இவர் தம்பி எல். ஏ. செட்டி என்பவர் சின்கெங் லி அண் கம்பெனியின் மானேஜராக இருக்கிறார். இவருக்கு கவர்ன்மெண்டார், ஜே. பி. (சமாதான நீதிபதி) பட்டம் கொடுத்திருக்கின்றனர். அத்துடன் முனிசிபல் கமிஷனராகவும் இருக்கிறார். இவர்களில் எல். கே. செட்டியாரின் மகன் கே. எல். செட்டி என்பவர் கவர்ன்மெண்ட் உயர்தரப் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர். இன்று உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார். இவரைப்போல இன்னும் சிலர் பள்ளிக்கூட ஆசிரியர்களாகவும், பலர் கவர்ன்மெண்ட் உத்தியோகங்களிலும் இருக்கின்றனர். திரு, எஸ். வி. பிள்ளை என்பவர் பார் அட் லா பரீட்சையில் தேறி சிங்கப்பூரில் லாயராக இருக்கிறார். இவர்கள் எந்த உத்தியோகங்களில் இருந்தாலும், மலாய், ஆங்கில மொழிகளைப் பேசினாலும், சீனர்களைப்போல உடை உடுத்தினாலும் சைவசமய ஆசாரங்களில் தவறாது நடக்கின்றனர். இவர்களில் பெண்கள் தங்கள் மாங்கல்யங்களுக்கு வெள்ளி, திங்கட்கிழமைகளில் பொட்டிட்டு வணங்குவார்கள். இல்லங்களில் திருவிளக்கேற்றிக் கும்பிடுவார்கள். விசேட காலங்களில் மாவிலை, தோரணங்கட்டி, மஞ்சள் நீர் கொண்டு வந்து தெருவில் தெளிப்பார்கள். எக்காரியங்களையும் இந்துகளைப்போலவே நடத்தி எதற்கும் இந்தியர்களுடனேயே கலந்து கொள்வார்கள். அத்துடன் பொய்யாத விநாயகர் ஆலயத்தில் சில விழாக்களையும் நடத்துகிறார்கள். ஆகவே இன்றும் இவர்

கள் இந்தியர்கள், சைவசமயத்தினர் என்றே மதிக்கப்படுகின்றனர். இவர்கள் ஒற்றுமையோடு நடப்பதற்கும், பொய்யாத விநாயகர் கோயில் மற்ற ஆலயங்களைக் கவனித்து நடத்துவதற்கும் இவர்களில் சில பஞ்சாயத்தார்கள் உண்டு. அவர்களால் எக்காரியங்களையும் சரிவரக் கவனித்து நடத்தப்பெறுகிறது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும்
நாட்டுக்கேற்படும் நன்மையும்

செல்வமிருந்த மலாக்காவில் செல்வத்தை வளர்க்கும் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் இங்கு குடியேறி இற்றைக்கு 130 ஆண்டுகள் ஆகின்றன. மலாய் நாட்டிலேயே மலாக்காவில் தான் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் முதலில் குடியேறியது. மலாக்காவில் குடியேறிய இவர்கள் தங்கள் வாணிபத்தை வளர்த்தார்கள். இவர்கள் எப்போதும் செல்வர்களாக உள்ளவர்கள். பெருநிதிக்கு உடையவர்கள். அதேபோல மலாக்காவில் வாழ்ந்த இவர்களில் சில செட்டியார்களின் செல்வத்தை 100 ஆண்டுகட்கு முன்பு கவர்ன்மெண்டார் மதிப்பிட்டார்கள். அப்போதே ஒவ்வொருவரிடம் 60 குவிந்தல் என்று மதிப்பிடும் சொத்துகள் இருந்திருக்கின்றன. ஒரு குவிந்தல் என்பது 15 பஹார். ஒரு பஹார் என்பது 400 பவுண்டு நிறையாகும். அவ்வாறு பாக்கும்போது 6,000 பவுண்டு நிறைகொண்ட பொன்களுக்குச் சிலர் அதிபராய் இருந்திருக்கிறார்கள். அப்படி இருந்தவர்கள் தங்கள் செல்வத்தைப் பலவழியாலும் வளர்த்தார்கள்.

தங்கள் செல்வத்தைப் பெருக்க வந்த இவர்கள் வாணிபத்தைப் பெருக்கினாலும் இவர்களால் மலாக்கா மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள், ஏற்படும் நன்மைகள் பல. இங்குள்ள ஒரு சில ஆங்கிலேயருக்குச் சொந்தமான எஸ்டேட்டுகள் நீங்கலாக மற்ற எஸ்டேட்டுகள், தோட்டங்கள் எல்லாம் இவர்களிடம் பணம் பெற்றுப் பயிர் செய்தவைகளாகவே இருக்கும். நகரை அலங்கரிக்கும் கட்டிடங்களில் பெரும்பான்மை இவர்கள் பணத்தால் கட்டியவைகளாகவே இருக்கும். தோட்டங்களைப் பயிர்செய்தவர்களும், கட்டிடங்களைக் கட்டியவர்களும் வாங்கிய பணத்தை மறுபடி திரும்பக்கொடுத்திருப்பார்கள். கொடுத்தாலும், தருணத்தில் உதவியது இவர்கள் பணமே. இச்சமூகத்தவரால் இந்நாட்டுக்கு ஏற்பட்ட நலனை முன்பும் கூறப்பெற்றிருக்கிறது. (பக்கம் 40-43பார்க்க)

அச்சிறப்பு வாய்ந்த இவர்களால் இம்மலாக்கா, மலாயா மக்கள் பலர் பலன் பெற்ருர்கள், பெறுகிருர்கள் என்பதை யாரும் எற்பர். இவ்வாறு பலருக்கு உதவி புரிந்த, புரியும் மலாக்கா நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் தங்கள் தொழிலில் வரும் ஊதியத்தில் ஒருபகுதி இங்கும் தர்மங்களில் செலவுசெய்கிருர்கள். அத்துடன் உலகப்போக்குக்கு எற்ப ஒவ்வொன்றிலும் கலந்து கொள்வார்கள். அதனுல் இவர்களுக்கு மலாக்காவில் வாழும் எச்சமூகத்தவரிடமும் செல்வாக்குண்டு. இவர்களும் எக்காரியங்களிலும் கௌரவமாகவும் நம்பிக்கையுடனும் நடந்து கொள்வார்கள்.

இவர்களின் சார்பாக 1925ஆ எப்ரல்மீ திரு. J. S. W. ஆர்தருக்கு ஓர் விருந்தளிக்கப்பெற்றது. திரு. ஆர்தர் 9-3-1881ல் இங்கிலாந்தில் பிறந்தவர். முறைப்படி படித்து, M. A. பட்டம் பெற்று, பார் அட் லாவில் தேர்ச்சிபெற்று "காடெட்" ஆனவர். அத்துடன் சின ஒக்கின் லாவிலும் தேர்ச்சி பெற்றவர். இவர் மலாயாவில் பல உத்தியோகங்களில் அமர்ந்து 16-1-1924ல் மலாக்கா டிஸ்ட்ரிக்கட் ஜட்ஜ் ஆனர். அப்பதவியிலிருந்து 2-5-1925ல் மாற்றிச் சென்ருர். அப்போதுதான் அவரின் அருங் குணத்தைப் புகழ்ந்து பாராட்ட விருந்தளிக்கப்பெற்றது, அவ் விருந்தில் திரு. உ. அரு. அருணுசலம் செட்டியார் "நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் உயர்வைப்பற்றி எடுத்துரைத்தார். அதை ஆங்கிலத்தில் விளக்க லாயர் திரு. "M. N. மாலிக்" எழுந்து பேசும் போது "செட்டியார்கள் ஒரு சட்டையுடனும், வேஷ்டி துண்டுடனும் இருக்கிருர்கள். நம்மைப்போல ஹாட்டும், சூட்டும் அணியவில்லே என்று கருதவேண்டாம். அவர்கள் செல்வத்தில் சிறந்தவர்கள். அவர்களால் தான் இம்மலாயாவிலுள்ள காடுகள் எல்லாம் நாடாகியது. நாடெல்லாம் நகரமாகியது. அவர்கள் இந் நாட்டுக்கு வராதிருந்தால்! தங்கள் செல்வத்தைக் கண்டவர்களுக் கெல்லாம் கொடுத்து உதவாதிருந்தால்! இம்மலாயாவை நாம் இந்த நிலேயில் காணமுடியாது. இதை உணராது சிலர் அவர்களேக் குறை கூறுகின்றனர். அது அறியாமையாகும்." என்று கூறினுர். விருந்தினரான திரு. ஆர்தர் இவைகளுக்குப் பதில் கூறும்போது "செட்டியார்களேப் பொறுத்தவரை திரு. மாலிக், கூறியவைகள் உண்மை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அத்துடன் செட்டி-யார்கள் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள். உண்மையிற் சிறந்தவர்கள். நான் இங்கு ஜட்ஜாக வந்தபின் பல வியாச்சியங்கள் வந்தன. அதில் மற்ற சமூகத்தவர்கள் கொண்டுவந்தவைகளில் சில புரட்டுக் கேஸ் களும் இருந்தன. செட்டியார்கள் கொண்டு வந்த கேஸ்களில்

புரட்டு என்பதே கிடையாது. அதுவுமன்றி அவர்கள் வைத்திருக்கும் கணக்கும் மிக நேரானது. அதனால் எனக்கு எவ்வித தொந்தரவும் நேரவில்லை. அதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று கூறினர். இதேபோல பலரால் நன்கு மதிக்கப் பெற்றவர்கள், பெறுபவர்கள் மலாக்காவிலுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். இவர்களில் பலர் லேவாதேவித்தொழில் செய்வதோடு பெருத்த எஸ்டேட், தோட்டம், வீடு, சொத்துகளுக்கு உடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களால் நாட்டுக்கு ஏற்படும் நன்மைகள், சிறப்புகள் பல.

ரப்பர்த் தோட்டங்களின் ஏற்றம்

செல்வத்தாலும், சிறப்பாலும் உயர்ந்த செட்டியார்களிடம் இப்போதுள்ள சொத்துகள் எல்லாம் பிறரிடம் இருந்து எடுக்கப் பட்டவை என்று சிலர் குறை கூறுகிறார்கள். அது அறியாமையாகும். இம்மலாயாவில் இப்போது எங்கு பார்த்தாலும் ரப்பர் உற்பத்தியாகிறது. இந்த ரப்பர் விளைவே காடும், மேடுமாக இருந்த மலாயாவை நாடும், தோட்டங்களுமாக்கியது! ஒரு ஊருக்கு ஒரு ஊர் வண்டிகள் செல்லக்கூட வகையில்லாதிருந்த ஒத்தையடிப் பாதைகளைப் பெரும் பாட்டைகளாக (தார் ரோடுகளாக) ஆக்கியது! ஆள் தலைகளிலும் மாட்டு வண்டி, குதிரை வண்டிகளிலும் கொண்டுசென்ற தபால்களை, காரிலும், இரயிலிலும், விமானங்களிலும் கொண்டு செல்லச் செய்தது! பலகை வீடுகளில் வாழ்ந்தோரைப் பல மாடிகள் உள்ள பக்கா கட்டிடங்களில் வாழ வைத்தது! செப்புக் காசுகளையும், வெள்ளி நாணயங்களையும் ஆயிரக்கணக்காக கட்டிவைத்த நிதிச்சாலைகளில் (பொக்கிஷத்தில்) பொற் காசுகளையும் கரன்ஸி நோட்டுகளையும் கோடிக் கணக்காய் கட்டிவைக்கச் செய்தது! இவைகளோடு மக்கள் உருவம் பெற்று அறிவால் மக்கள் இனத்தைச் சேராதவர்களையும் மக்களாக்கும் தன்மையும் பெற்றது.

> "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல் லதில்லை பொருள்"

என்று வள்ளுவர் கூறியபடி உலகில் வேறு எத்தன்மையானும் ஒரு பொருட்டாக, கௌரவமாக மதிக்கக்கூடாத ஒருவரை தன் செல்வத்தால் மதிக்கும்படியாகச் செய்வது பொருளாகிய பணம் ஒன்று அன்றி வேறில்லை. அப்பணத்தைத் திரட்டித் தருவதும் ரப்பரே. இத்தகைய ரப்பர் எப்படி உற்பத்தியானது?

1493—6ம் ஆண்டுகளில் அமெரிக்காவைக் கண்ட திரு. கொலம்பஸ் இரண்டாம் முறையாக உலக சுற்றுப்பிரயாணம் செய்தார். அவ்வமயம் "ஹாய்தி" பகுதியிலுள்ள மக்கள் ஒரு மரத்தின் பிசினுல் செய்யப்பட்ட பந்துகளைக்கொண்டு விளையாடுவதைக் கண்டார். இப்பிசினையே 1536ம் ஆண்டில் ரப்பர் என்றனர். 1735ல் "மான்ஷியர் டிலா கோண்ட மைன்" என்ற பிரான்சுக்காரர் தென் அமெரிக்கா சென்று திரும்பினர். அப்போது இந்த ரப்பர் மரங்களை அவர் கண்டார். 1751ல் அமெரிக்கா சென்ற "பிரஸ்னியன்" என்ற பிரான்சுக்காரர் முன்னவர் கண்டு வெளியிட்ட நுட்பங்களை விளக்கி இம்மரத்தின் பிசினுல் பல சாமான்கள் செய்யலாம் என்று கூறினர். 1770ல் டாக்டர் "பிரீஸ்ட்லி" என்ற விஞ்ஞான அறிஞர் ரப்பரின் தன்மைகளை ஐரோப்பாவில் விளக்கச் செய்தார். 1839ல் அமெரிக்காவின் "சார்லஸ் குட்ஈயர்" என்பவர் ரப்பரைப் பதனிடும் முறையைக் கண்டனர். அதிலிருந்து பல நாடுகளுக்குப் பரவியது. மலாயாவில் ரப்பர் உற்பத்தி செய்ய பிரிட்டிஷாரே முற்பட்டனர். இவர்கள் முயற்சியைக் கைகூடச் செய்தது மலாக்காதான். மலாக்காவில் சீனர்களில் பாபாக்காரர் (இந்நாட்டுக் குடிகள்) மிகுதி. அவர்களில் தவக்கே "தன் சேயான்" என்று ஒருவரிருந்தார். இவருக்குப் பல சாகூ (சவ்வரிசி) உற்பத்தி செய்யும் இடங்கள் இருந்தன. அச்செல்வத்தில் சிறந்த இவருக்கு ஆங்கிலேயரின் பழக்கங்கள் அதிகம். அதனுல் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு மேனுட்டிலிருந்து ரப்பர் கொட்டைகளை வரவழைத்து "புக்கேலிந்தான்" என்ற இடத்தில் முதன் முதலில் பயிர் செய்தார். அதற்குப் பண உதவி புரிந்தவர்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். அவ்வமயம் இவரை எள்ளனஞ் செய்தோர் பலர். அவர்களே பிற்காலத்தில் பல தோட்டங்களின் முதலாளிகள் ஆனுர்கள்.

தவக்கே தன் சேயான் பயிர்செய்த ரப்பர் பலன்தரும் என்பதைப் பலர் உணர்ந்தனர். அதற்குமேல் சில ஐரோப்பியர்கள் பயிர் செய்தனர். அவர்களே பல எஸ்ட்டேட்டுகளை உண்டு செய்தவர்கள். அப்படி உண்டுசெய்த எஸ்ட்டேட்டுகள் இப்போது மலாக்காவில் 75வரை இருக்கின்றன. இவைகளில் பல எஸ்ட்டேட்டுகள் "டன்லப்ரப்பர் பிளான்டேசன் கம்பெனி லிமிட்டெட்"டுக்குச் சொந்தமாகும். இவர்களுக்கு மலாயாவில் பல இடங்களில் எஸ்ட்டேட்டுகள் உண்டு. இதன் தலைமை நிலையம் மலாக்காவிலேயே இருக்கிறது. இவர்களைப்போல பல எஸ்ட்டேட்டுகளை வைத்து நிர்வகிப்பவர்களும், மேற்பார்ப்பவர்களுமான "சைமன் டார்பி

கம்பெனி லிமிட்டெட்" நிலையம் ஒன்றும் மலாக்காவில் இருக்கிறது. இவர்களைப்பார்த்துப் பல சீனர்களும், சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் ரப்பர் பயிர் செய்தனர். இவர்களில் "பெ. ராம." "மு. ராம. மு." "மு. பெ. மு." கடைகளுக்கு உடையவர்களான திரு. ராமன் செட்டியார். திரு. ராமன் செட்டியார். திரு. கருத்தான் செட்டியார் என்ற பெரிய கருப்பன் செட்டியார் மூவரும் சிறந்தவர்கள். இம்மூவரும் இறைவனடி சேர்ந்தாலும் அவர்களால் பயிர் செய்யப்பட்ட தோட்டங்கள் பல ஆங்கிலேயருக்கு விற்கப் பட்டு பெரிய எஸ்ட்டேட்டுகளாக இருக்கின்றன. அதற்குமேல் பயிர்செய்த தோட்டங்கள் பல, ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இம் மூவரில் இரு ராமன் செட்டியார்களின் புதல்வர்கள், சகோதரர் இடம் இருக்கின்றன, இவர்களைப்பின்பற்றி அக்காலத்தில் "ப. வ." "ப. மு. சு." கடை முதலாளிகளும் மற்றவர்களும் சீனர்களோடு கூட்டாகப் பல தோட்டங்களைப் பயிர் செய்தார்கள். அவைகளிற் சில இன்றும் செட்டியார்களுக்கு சொந்தமாக இருக்கின்றன.

இதற்குமேல் பிற்காலத்தில் க. வீ. அழ. கடைக்கு சொந்தமாக மூவாரிலிருந்து 10வது மைலில் 400 ஏக்கர் சிறு கன்றுகளும், 600 ஏக்கர் காடுமுள்ள ஓர் தோட்டம் வாங்கப்பெற்றது. அக் காட்டை திரு. உ. அரு. அருணசலம் செட்டியார் அக்கடையின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் (1925-26ல்) அழித்துப் பயிர் செய்தார். அதற்கு அண்மையிலுள்ள சில தோட்டங்களையும், வாங்கிச்சேர்த்தார். (இவரின் மற்ற தொண்டுகளை வாழ்க்கைக்குறிப் பிற் கூறப்பெறும்) அவரின் அரு முயற்சியாலும், முதலாளிகளின் செல்வப்பெருக்காலும் பயிர்செய்யப் பெற்ற அத்தோட்டத்தின் பரப்பு 1260-1-11 ஏக்கர்களாகும். அத்தோட்டம் "ஆயர்மானிஸ் ரப்பர் எஸ்ட்டேட் லிமிட்டெட்" என்ற பெயரோடு இன்று ஓர் லிமிட்டெட் கம்பெனியாக விளங்குகிறது. இக்கம்பெனி நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் பலருக்கும் சில இந்தியருக்கும் சொந்த மாக இருக்கிறது. அதன் சேர்களில் பெரும் பகுதி திரு. க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியாரவர்களிடமும், திரு. க. வீ. அழ. ராம. பாரிஸ்டர் அழகப்ப செட்டியாரவர்களிடமும் இருக்கிறது. பாரிஸ்டர் அழகப்ப செட்டியாரே கம்பெனியின் மேற்பார்வையாள ராவர். இவர் கோட்டையூர் க. வீ. அழ குடும்பத்தில் ராமன் செட்டியாருக்கு மூன்றுவது புதல்வரான காசிவிஸ்வநாதன் செட்டி யார் என்ற திரு. ராமநாதன் செட்டியாரின் இரண்டாவது புதல்வ ராகப்பிறந்தவர். திரு. காசிவிஸ்வநாதன் செட்டியார் பினங்கில் பல காலம் இருந்தவர். அவரைப் பலரும் அறிவர். அவருக்கு இரண்

டாவது புதல்வராகத் தோன்றிய அழகப்ப செட்டியாருக்கு இப்போது 32 ஆண்டுகள் இருக்கலாம். ஆண்டில் சிறியவராகிய இவர் அறிவிற் பெரியவர். இவர் சிறுவயதிலேயே கல்விகற்க ஆரம்பித்து சென்னையில் பல நாளிருந்து படித்தார். M. A. பட்டமும் பெற்றார். பாரிஸ்டர் பட்டம் பெற லண்டனுக்குச் சென்றார். அங்கு பரீட்சைக்குப் படிக்கும்போதே "சார்ட்டர்ட் பாங்கில்" சேர்ந்து பாங் தொழிலில் அநுபவமும் பெற்றார். லண்டன் சார்ட்டர்ட் பாங்கில் அநுபவம்பெற முதலாவதாகச் சேர்ந்த இந்தியர் இவரே. சார்ட்டர்ட் பாங்குக்கும் க. வி. அழ. குடும்பத்துக்கும் பல தொடர்புண்டு. அதற்குக்காரணம் திரு. க. வி. அழ. (பெரிய) முத்தய்யா செட்டியாரவர்கள். (விபரம் கோலாலம்பூரில் கூறப்பெறும்) அச்சார்ட்டர்ட் பாங்கில் சேர்ந்து பாங் தொழிலில் அநுபவம்பெற்று இந்தியர்களுக்குப் பெரும்புகழைத் தேடியதுடன் பாரிஸ்டர் பரீட்சையிலும் தேறி தாய் நாட்டுக்கு வந்தார். அங்கிருந்து இந்நாட்டுக்கும் வந்தார். அப்போது பல இடங்களிலும் வரவேற்பளிக்கப்பட்டது. இச்சிறப்புவாய்ந்த இவரின் மேற்பார்வையில் "ஆயர் மானிஸ் ரப்பர் ஸ்டேட்" இன்றும் நல்ல நிலையில் இருக்கிறது.

இதேபோல பயிர்செய்யப்பட்டது சிபெங்காவில் "பி. கு. நா." கடைக்குச் சொந்தமான "நாகப்பா" ரப்பர் எஸ்ட்டேட். இந்த எஸ்ட்டேட் ஜோஹோர் அரசியலுக்குட்பட்ட செகாமெட்டிலிருந்து, தங்கா, மூவார் வரும் வழியில் 15½ மைலில் பெரிய ரோடிலிருந்து உள்ளே 3 மைலில் இருக்கிறது. அம் மூன்று மைலுக்கும் அழகான மண் ரோடு போடப்பட்டிருக்கிறது. இத்தோட்டம் சொந்தத்தில் பயிர் செய்வதற்காகவே 1926ல் காடாக வாங்கப்பட்டது. இத்தோட்டத்தின் சொந்தக்காரர்களான பி. கு. நா முதலாளிகள் பெருத்த நிதியாளர்கள். இவர்களுக்கு பல நாடுகளில் லேவாதேவி, வியாபாரம், சொத்துகள் உண்டு. யாழ்ப்பாணத்தில் சில கப்பல்களும் இருக்கின்றன. அதேபோல இந்நாட்டில் மலாக்கா, மூவாரிலும் தொழிலுண்டு. (மலாக்கா கடையை சின்னாள் முன்னம் செகாமெட்டுக்கு மாற்றிவிட்டார்கள்) இக்கடைகளின் முதலாளிகளில் இப்போதுள்ளவர்களிற் பெரியவர்களாக பி. கு. நா. கும. நாகப்ப செட்டியார், பி. கு. நா. பெரி. நாகப்ப செட்டியார் என்ற இருவரும் மற்ற சகோதரர்களும் இருக்கிறார்கள். இவர்களில் கும. நாகப்ப செட்டியாரவர்களே "இந்தியன் ஓவர்சிஸ் பாங்கின்" டைரக்டர்களில் ஒருவர். அத்துடன் புதுக்கோட்டை ஸ்டேட்டின் சட்டசபையில் நியமன அங்கத்தினருமாவர். இவர் உதாரகுணம் பெற்றவர். மற்றவரான பெரி. நாகப்ப செட்டியாரவர்கள்.

ஓர் பேரறிஞர். நிர்வாகத்திறன் மிகவாய்ந்தவர். எதிரியின் என்ணத்தை எளிதில் உணரும் குணம்பெற்றவர். பஞ்சாயத்தில் பாரபட்சமின்றி வழக்குத் தீர்க்கும் அறிஞர். இவர்கள் குடும்பத்தாரால் செய்யப்பட்ட அறப்பணிகள் அதிகம். இவர்களுக்கு சொந்தமாக வாங்கப்பட்ட சிபெந்தா "நாகப்பா" எஸ்டேட்டின் பரப்பு 1,709-2-0 எக்கர்கள். இதை வாங்கிப் பயிர் செய்தவர் மலாக்கா, செகாமெட் பி. கு. நா. கடையின் பொறுப்பாளரான வ. வி. ராமன் செட்டியார். இவர் ஆத்தங்குடியில் தோன்றியவர். இவருக்கு இப்போது 50 ஆண்டுகள் இருக்கலாம். இவர் தமிழ், சித்தாந்த, வேதாந்த நூல்களை நன்கு கற்றவர். அதனால் பொறுமையே தனக்கு அணியாகப் பூண்டவர். பிறரைத் தூற்றும் குணம் பெறாதவர். இவராலேயே "நாகப்பா" எஸ்டேட் பயிர் செய்யப்பட்டது. அவர் பயிர் செய்த எக்கர் 1700க்கு மேல் இப்போது 412 எக்கர் காடு வாங்கி இருக்கிறார்கள். இதைப் புதிய முறைப்படி பயிர் செய்யத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். இவர்களால் பயிர் செய்யப்பட்ட தோட்டமும் இன்று ஓர் ஆங்கிலேயர் தோட்டத்தைப்போல் சிறப்புற்று விளங்குகிறது.

இதேபோல் இன்னும் பல தோட்டங்களை செட்டியார்கள் பயிர் செய்துள்ளார்கள். பயிர் செய்த தோட்டங்களை விலைக்கு வாங்கிச் செப்பனிட்டும் இருக்கிறார்கள். அவர்களில் திரு ப. அரு. நா. அரு. அருணாசலம் செட்டியார் ஒருவர். இவர் கோட்டையூரில் திரு. நாராயணன் செட்டியாரின் மூத்த புதல்வராக விரோதி ௵ சித்திரை ௴ 9௳ பிறந்தார். இவருக்கு இளையாராகத் தோன்றியவர் திரு. சிதம்பரம் செட்டியார். இவர்களில் அருணாசலம் செட்டியார் 9வது வயதில் சிங்கப்பூரில் இருந்த தங்கள் கடைக்கு வந்தார். 3 கணக்குகள் அங்கிருந்தார். 1913ம் ஆண்டு மலாக்கா வந்தார். இவர்களுக்கும் பினாங்கு தீ. சொ. கடையின் ஏஜண்டாக இருந்த திரு. சிதம்பரம் செட்டியாருக்கும், ஈப்போ பெ. சு. கடையின் ஏஜண்டாக இருந்த திரு. முத்துக்கருப்பன் செட்டியாருக்கும் கூட்டாகத் தொழிலை ஆரம்பித்தார். அன்று முதல் நல்ல முறையில் நடைபெற்ற அக்கடையின் பாகம் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பே பிரிவினையாயிற்று. இக்கடையை மிகத்திறமையாக நடத்தி கூட்டுக்காரர்களின் புதல்வருக்கும், தனது சகோதரருக்கும் முறையோடு பிரித்துக் கொடுத்தவர் திரு. அருணாசலம் செட்டியார். இவர் ஓர் பேரறிஞர். கணக்கில் நிபுணர். எக்காரியங்களையும் ஆலோசித்துச் செய்யும் தீரர். அஞ்சா நெஞ்சம் பெற்றவர். எக்கணக்குகளின் நுட்பங்களையும் தெரிந்து, யாருடனும் பேசி, பாரபட்சமற்ற முறை

யில் பஞ்சாயத்துச் செய்வதில் தேர்ச்சி பெற்றவர். இந்நாட்டிலும் தாய் நாட்டிலும் இவரால் செய்யப்பட்ட பஞ்சாயத்துகள், தீர்க்கப்பட்ட வழக்குகள் மிகுதி. இவரது சொந்தக் காரியத்தைப்போல பொதுக்காரியங்களையும் பார்க்கும் குணம் பெற்றவர். மலாக்காவில் சந்நாசிமலை ஆண்டவரின் மாசிமக விழாவுக்கு நகரத்தார் செய்த உற்சவ வேல், அலங்கார உருவம், வெள்ளி விமானங்கள் இவர் மேற்பார்வையிலேயே (தங்கள் ஊரில்) செய்யப்பெற்றது. இத்திறம் வாய்ந்த இவர் எஸ்டேட்டுகளை செப்பனிட்டு நல்ல முறையில் வைத்திருப்பதிலும் தேர்ச்சி பெற்றவர். இவருக்கு சொந்தமாக பல தோட்டங்கள் இருக்கின்றன. அவைகளில் தம்பினுக்கு அண்மையில் ஓர் தோட்டம் உண்டு. அதற்கு "செனுகா" எஸ்டேட் என்று பெயர். அதன் பரப்பு 928 எக்கர். அத்தோட்டத்தையும் ஆங்கிலேயர்கள் தோட்டங்களைப்போல வைத்திருக்கிறார். இவரின் தோட்டங்களுக்கு மேற்பார்வையாளராக உள்ளவர் "சொங்தேக்" என்ற சீனர். இவரின் முயற்சியால் வாங்கப்பட்டது மூவாருக்கு அண்மையிலுள்ள "ஜெயங்கொண்டார்" எஸ்டேட் என்ற தோட்டம். இதன் பரப்பு 960 எக்கர். இத்தோட்டம் இப்போது திரு. அருணாசலம் செட்டியாரின் சகோதரர் திரு. ப. அரு. நா. சித. சிதம்பரம் செட்டியாருக்கும் மற்றசிலருக்கும் கூட்டாக இருக்கிறது. இதேபோல பல தோட்டங்களை வைத்துப்பராமரிக்கும் செட்டியார்கள் பலர் இருக்கின்றனர். இவர்களிற் பெரும்பான்மையோர் மலாயாவில் உள்ள மற்ற தோட்டக்காரர்களைப்போல ரப்பர் உற்பத்தி செய்வதிலோ, அதைப் பராமரிப்பதிலோ மிகத்தேர்ந்தவர்களாவர்.

இதற்குமேல் பலரிடம் வரவேண்டிய தொகைகளுக்காகப் பெற்ற தோட்டங்களும் செட்டியார்களிடம் பல இருக்கின்றன. அவைகளின் தன்மையை வைத்து அநுபவிப்பவர்களே அறிவார்கள். அவ்வாறு பெரும் பொருளைக் கொடுத்துப் பெற்ற தோட்டங்களைச் செப்பனிட அதிகப் பணங்கள் செலவு செய்யவேண்டியதாய் நேர்ந்தது. குறை கூறுபவர்கள் அதை உணர்ந்திருக்க மாட்டார்கள். செட்டியார்கள் செய்வது வட்டித் தொழில். அந்த லாபம் ஒன்றையே கருதுபவர்கள் என்பது பலரது எண்ணம். அவர்கள் எண்ணுவதுபோல செட்டியார்கள் மற்றவர்களிடம்பெற்ற தோட்டங்களுக்கு கொடுத்துள்ள தொகைகளுக்கும், பின் செப்பனிடச் செலவு செய்த தொகைகளுக்கும், வட்டித் தொகைகளுக்கும், இடையிற் பன்னாள் வருவாய் இல்லாதிருந்த காலத்தில் பட்ட துன்பங்களுக்கும், கணக்குச் செய்து பார்த்தால் உண்மையை உணர்ந்து கொள்வார்கள். செட்டியார்கள் தாங்கள் கொடுத்த தொகைகளுக்கு

செட்டியார் காந்தி

ஸ்ரீமான் தி. ஆ. மு. ப. முத்துப்பழநியப்ப செட்டியார், மலாக்கா.



Chettiar Gandhi

Mr. T. A. M. P. Muthupalaniapa Chettiar, Malacca.

ஏற்ற சொத்துகளைப் பெறவில்லை என்பதைப் பலரறிவர். அவர்கள் சொத்துகளைப் பெறும்போது மிகக் குறைந்த மதிப்புள்ளவை களையே பெற்றார்கள். சில சொத்துகள் கூடிய மதிப்புள்ளவைகளும் இருக்கலாம். அவை அதிகமில்லை. அப்படி இருந்தும் அவைகளை இலகுவில் பெறமுடிந்ததா ? அந்தோ ! அவைகளால் ஏற்பட்ட அல்லல்கள், பணச்செலவுகள் எவ்வளவு ? நேரிற்கண்டவர்களுக்கு, கேட்டவர்களுக்கு அதனருமை தெரியும். அவைகளை உணராது கூறுபவர்கள் இனியேனும் தெரிந்து கொள்வார்கள் அன்றோ !

ரப்பரை முதலில் உற்பத்தி செய்தவர்களான செட்டியார்கள் கடைகளில் "மு. பெ. மு." "ப. வ." "பெ. ராம." கடைகளின் ஏஜண்டாக இருந்து அநுபவம் பெற்றவர். "செட்டியார் காந்தி" திரு. ஆ. முப. முத்துப்பழநியப்ப செட்டியார். இவர் கூரிபிறை யில் தாதுஸ்ரு மார்கழிமீ 9உ பிறந்தார். தந்தையார் ஆறுமுகம் செட்டியார். தாயார் பொய் சொல்லா மெய்யம்மை ஆச்சி. இவர் களின் தவப் புதல்வனாகத் தோன்றிய திரு. முத்துப் பழநியப்ப செட்டியார் முறைப்படி கற்று குலத் தொழில் கருதி மதுரைக்குச் சென்றார் அங்கு 10 ஆண்டுகள் இருந்தார். பிறகு சென்னையில் 20 ஆண்டுகள் இருந்தார். அவ்வூர்களில் இருந்து தொழிலில் பயிற்சி பெற்றபின் இராக்ஷதஸ்ரு வைகாசிமீ மலாக்கா. மு. பெ. மு. கடையின் பொறுப்பாளராக வந்தார் பிறகு, ப. வ. கடை, பெ. ராம. கடைகளின் பொறுப்பாளராகவும் வந்தார். இப்போது மெ. பழ. கடையின் பொறுப்பாளராக இருக்கிறார். இவர் ஆண் டில் முதியவர். அறிவிற் சிறந்தவர் அநுபவம் வாய்ந்தவர். எக் காரியங்களிலும் இளைஞரைப் போன்று சுருசுருப்புள்ளவர். சமயப் பற்றுடையவர். அதனால் தினப்படி ஆலய வழிபாட்டை இருகாலமும் செய்பவர். பொறுமையே தனக்கு அணி எனப் பூண்டவர். பிறருக்குத் துன்பம் செய்யவேண்டும் என்பதைக் கன விலும் கருதாதவர். சினத்தைத் தவிர்த்தவர். உள்ளப் பரிசுத்த முடையவர். உருவத்தால் மகாத்மா காந்தியடிகளைப் போன்றிருப் பவர். கதராடையே கட்டுபவர். அதனால் இவரை இன்று மலாக்காவில் உள்ளவர்கள் அனைவோரும் "செட்டியார் காந்தி" என்றே அழைக்கின்றனர். இப்பெருமை வாய்ந்த இவரின் உருவப் படமும் இந்நூலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது.

வர்த்தக சங்கங்களின் வளர்ச்சி

ரப்பரால் செல்வமிகுந்து விளங்கும் மலாக்காவில் வர்த்தக மும் சிறந்து விளங்குகிறது. இத்துறைமுகத்தில் இருந்து ஏரா ள

மான ரப்பர், சவ்வரிசி, பிரம்பு, மற்ற சாமான்கள் ஏற்றுமதியாகின்றன. பல நாடுகளில் இருந்து எல்லாச் சாமான்களும் வந்து இறங்குகின்றன. அதனுல் பல வியாபாரிகளும் இருக்கின்றனர். இவர்களில் இந்தியர்களுக்குச் சொந்தமாக 96 கடைகள் இருக்கின்றன. இவ்வாணிபத்தைப் பெருக்க "ஓங்கம் சங்காய் பாங்" "ஓவர்சிஸ் சைனிஸ் பாங்" என்ற இரு பாங்குகள் உண்டு. இப்பாங்குகளைப் போல லேவாதேவி செய்யும் பல வியாபாரிகளும் இருக்கிருர்கள். இவர்களுக்குள் ஒற்றுமையோடு வர்த்தகத்தை நடத்த "சைனிஸ் வர்த்தக சங்கம், "நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம்" "இந்தியர் வர்த்தக சங்கம்" என மூன்றும் இந்தியர்களுக்கு வேண்டும் காரியங்களைக் கவனிக்க "இந்தியர் சங்கம்", "தமிழர் சீர்திருத்த சங்கம்" "இந்தியர் இலங்கையர் சங்கம்" "சங்கித அபிவிருத்தி சபா" என்ற பல சங்கங்களும் இருக்கின்றன. இவைகள் எக்காரியங்களிலும் ஒன்றுகூடி ஒன்றுக்கொன்று ஒற்றுமையோடு நடந்துவருவது போற்றுதற்குரியது. இவைகளில் இந்தியர் சங்கம் 1928ம் ஆண்டிலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம் ஆங்கிரசஞு தைமீ 4உ (16-1-1933) யிலும் நிறுவப்பெற்றதாகும். இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் அதனதன் கடமையைச் செய்துகொண்டிருப்பதால் மலாக்காவில் உள்ள இந்திய மக்கள் தக்கபலனைப் பெறுகிருர்கள். இச்சங்கங்கள் தோன்றக் காரணமாய் இருந்த பலரில் திரு. உ. அரு. அருணசலம் செட்டியார் ஒருவர். அவருக்கும் இச்சங்கங்களில் பலவற்றுக்கும் தொடர்புண்டு. அத்துடன் அவர் சமூகத்துக்கும், சமயத்துக்கும், தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டாற்றுபவருமாவர். அத்தொண்டுகளை அவரின் வாழ்க்கைக் குறிப்புகள் காட்டும்.

" தமிழறம் பேணும் தகைமையாளர் "

உ. அரு. அருணசலம் செட்டியாரவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

(" பி. திருநாவுக்கரசு, எழுதியது.)

தமிழ்த் தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

" கற்பகம்போ லுற்றபொருள் கற்றவர்க்கீ நற்றமிழே
சொற்பொழிவா லுன்பெருமைத் தொன்மையெலா—மெற்றிசையு
நாட்டுமரு ணசலத்தி னற்புகழை மக்களெலாம்
கேட்டிடநீ வந்து கிளத்து. "

இத்தோற்றத்தை எளியநடையில் எழுதிய "தமிழறம் பேணும் தகைமையாளர்" திரு. உ. அரு. அருணசலம் செட்டியார், மலாக்கா.



Mr. O. AR. Arunasalam Chettiar, Malacca.

திருமாலும் சிவனும் ஒருங்கே குடிகொண்டிருப்பது திருமெய்யம். அதற்குக் கிழக்கே 3 மைலில் இருப்பது ராமச்சந்திரபுரம் (கடியாபட்டி) அவ்வூரே புதுக்கோட்டை ஸ்டேட்டில் தலை சிறந்து நின்றது. அவ்வூரைச் சேர்ந்த ஓர் பகுதி விசுவநாதபுரம். அவ்வூரில் பன்னாளாய் வாழுங்குடி. பெருங்குடி வணிகர் மரபு. வயிரவன் கோயிலில் பெரிய வகுப்பு. அப்பிரிவைச்சேர்ந்தவர் திரு. உத்தமன் செட்டியார். இவரின் வாழ்க்கைத்துணைவி தெய்வானை ஆச்சி. இருவரும் பூவும் மணமும் போற் கூடி இல்வாழ்க்கையைப் பொருத்தமாய் நடத்தினர்கள். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்த சிலர்கள். ஊருக்கு அண்மையிலுள்ள ஊனையூரிற் குடிகொண்ட செந்தாமரைக் கண்ணன் ஆலயத்தின் திருமதிற் திருப்பணி செய்த உத்தமர்கள். இவர்களின் மூத்த புதல்வர் முருகப்ப செட்டியார். அவருக்கு அடுத்துத் தோன்றியவர் அருணாசலம் செட்டியார். இவர் பிலவஸூ புரட்டாசிமீ 10உ. புதன்கிழமை (1901) கடக லக்னத்தில் பிறந்தார். தாய் தந்தையர்களாலும், தன் தாய் மாமன் ராயவரம். கு. ராம. மு. அ. அருணாசலம் செட்டியாராலும் வளர்க்கப் பெற்றார். இவர் சிறுவயதிலேயே கல்வி கற்பதில் ஊக்கங்கொண்டார். அன்றிருந்த கிராமப்பள்ளிக் கூட முறைப்படி பல ஏடுகளையும் படித்தார். இவரின் சுருசுருப்பை உணர்ந்த ஆசிரியர் அப்போதே இவருக்கு திருக்குறளில் ஓர் பகுதியைப் பாடமாகக்கொடுத்தார்.

ஆசிரியர் கொடுக்கும் பாடங்களைச் செவ்வனே கற்ற இவரை 12வது வயதில் பிரமாதீசஸூ கார்த்திகைமீ 15உயில் இவர்களுக்கும் இவர்கள் தாய் மாமன்களுக்கும் கூட்டாயிருந்த நத்தலின் (பர்மா) கடைக்கு அனுப்பினர்கள். அங்கு சென்ற இவர் பர்மா மொழியைப் பயின்றார். அத்துடன் தொழில்களையும் கற்றார். இவர் பர்மாவில் இருக்கும்போதுதான் உலக யுத்தம் ஏற்பட்டது. அதனால் அன்று முதலே உலகத்தை உணரப் பத்திரிகை படிப்பதிலும், நூல்களைக் கற்பதிலும் ஆர்வங் கொண்டார். அங்கிருந்து திருமணத்துக்காக நளஸூ சித்திரைமீ 20உ விசுவநாதபுரம் வந்தார். அவ்வாண்டு வைகாசித் திங்கள் முப்பதாம் நாளில் இவருக்கு உள்ளூரில் இராமச்சந்திரபுரம் சு. கும. சிதம்பரம் செட்டியார் மகள் "பெரியநாயகி" என்ற மங்கையை திருமணம் செய்யப்பட்டது. அன்றிருந்து புது மணத் தம்பதிகள் இருவரும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டனர். இவர்கள் ஆண்டில் சிறியவராய் இருந்தாலும் ஒருவருக்கொருவர் கொண்ட உள்ளன்பாலும், தாய் தந்தையரின் ஒற்றுமையாலும் இவர்கள் வாழ்க்கை இன்பத்

தைப் பெருக்கியது. அவ்வாழ்வைப் பெற்ற இவர் காளயுக்திஞு தைமீ மறுபடியும் நத்தலினுக்குப் புறப்பட்டார். இவர் கல்கத்தா சென்றதும் நத்தலினில் தந்தையார் சிவன்பதம் சேர்ந்தார் என்ற செய்தியைக் கேட்டார். துன்பத்தில் ஆழ்ந்தார். துணைவரைப் பிரிந்து வாழவிருக்கும் தன் தாயாரைப் பேணுவதே தனது கடன் என எண்ணி தாயில்லத்துக்குத் திரும்பிவிட்டார். அங்கு சேர்ந்து அன்னைக்கு ஆறுதல் கூறினர். இவர் சிறியாராகவே நத்தலினில் இருந்த சிறு தொழிலையும் நிறுத்தினர். இவர்களைச் சேர்ந்த மற் றொரு குடும்பதின் பெரியவர் திரு. உ. ராம. நாகப்ப செட்டியார். அவரின் நோக்கப்படி அவர்களின் மலாக்கா உ. ராம. வெ. கடைக்கு அடுத்தாளாக சித்தார்த்திஞு கார்த்திகைமீ 15உ (1919) வந்தார். இவர் வரும்போது வாழ்க்கைத் துணைவி கருவுற்றிருந்தாள். அக் கருமுற்றிப் பிரசவித்தவுடன் ரௌத்திரிஞு வைகாசிமீ 30உயில் பெரியநாயகி மண்ணுலக வாழ்வை நீத்தாள். அவ்வாழ்க்கைத் துணைவியைப் பிரிந்த அருணசலம் செட்டியார் மனத்திடம் பெறப் பன்னாட்கள் ஆயின.

அதற்குச் சின்னாட்களில் தனவைசிய ஊழியர் சங்கம் தோன்றி யது. அச்சங்கத்தின் கிளை ஒன்றை மலாக்காவில் நிறுவினர்கள் அதிற்சேர்ந்து பல விடங்களிலும் சொற்பொழிவாற்றினர். எச் சபையிலும் அஞ்சாது கேட்போர் மகிழும் வண்ணம் பேசிப் பேரும் பெற்றார். அத்துடன் துந்துபிஞு பங்குனிமீ (1923) தாய் நாடேகினர். அங்கு இவருக்கு மறுமணம் பல இடங்களில் பேசப் பட்டது. அவைகளில் தனக்கு வாழ்க்கைத் துணைவியாய் வரு பவள் பெரிய நாயகியைப் பின்பற்றக் கூடியவளாய் இருக்க வேண்டு மெனக் கருதினர். அதற்கேற்ப ருத்ரோற்காரிஞு ஆவணிமீ 15உயில் நச்சாந்துபட்டியில் பெ. ந. பெ. பெரியகருப்பன் செட்டி யாரின் இரண்டாவது புதல்வி தெய்வானையைத் திருமணம் செய்யப் பட்டது. திரு. பெரியகருப்பன் செட்டியார் என்ற காசி செட்டி யார் கோலாலம்பூரில் பன்னாள் இருந்தவர். அங்கு "பெரி. ஆ." விலாசத்துடன் இருந்த இவர்கள் கடையையும் இவரையும் பலருமறி வர். அச் சிறப்பு வாய்ந்த காசி செட்டியார் நன்கு கற்றவர். நற் பழக்கமுள்ளவர். இரக்க சிந்தையுடையவர். அவரின் புதல்வி, அருங்குண நங்கை, எழில் நிறைமாது தெய்வானையை தனது இல் லத்துணைவியாய் ஏற்ற அருணசலம் செட்டியார் அன்று முதல் தனது இல்லற வாழ்க்கையைச் செவ்வனே நடத்திவருகிறார்.

இவர் மலாக்காவில் இருக்கும் போதே இவரின் ஒழுக்கம், உண்மை, நிர்வாகத்திறன், அறிவின் மேன்மைகளைக் கண்டார் க. வீ. அழ. முத்தய்யா செட்டியார். அதனால் இவரை தங்கள் மலாக்கா கடைக்கு இரத்தாட்சிஸு சித்திரைமீ 20உயில் (1924) கூட்டி அனுப்பினார். அங்கு வந்த இவர் அக்கடையின் பொறுப்பை கார்த்திகை மாதத்தில் ஏற்றார். அன்றிருந்து தனது உழைப்பாலும், நிர்வாகத் திறத்தாலும் பல நலன்களைச் செய்தார். அப்போது தான் மூவாரில் ஆயர்மானிஸ் ரப்பர் எஸ்ட்டேட் பயிர்செய்யப்பெற்றது. ஆண்டில் சிறியவராகிய இவர் பெரிய கடையின் பொறுப்பை ஏற்று நடத்தினாலும் அதனால் கர்வங்கொள்ளாது, பெரியாரைப்பேணல், சிறியாரை அணைத்தல், கற்றவரைப் பணிதல், மற்றவரையும் நேசித்தல், தன்னலங் கருதாமை, பொது நலத் தொண்டு என்பவைகளைக் கைக்கொண்டு அதற்கேற்றபடி நடந்தார். அதனால் பல சமுகத்தவரிடமும் செல்வாக்குப் பெற்றார். இவர் கணக்கோடு க. வீ. அழ. கடையும் பிரிக்கப்பட்டது. அக்கடையைப் பிரித்துக் கொடுத்து தாய் நாடு செல்லுமுன்பே மலாக்காவில் "இந்தியர் இலங்கையர் சங்கம்" கண்டது. அத்துடன் சங்நாசி மலை ஆண்டவர் கோயிலில் பல கட்டிடங்கள் கட்டியது. தண்ணீர் வசதிக்காக ஓர் குளம் வெட்டியது. அக்குளத்திலிருந்து தண்ணீரைப் பல இடங்களுக்குக் கொண்டுபோக குழாய் போட்டது. மாசிமக விழாவின் உற்சவருக்கு ஏற்பாடு செய்தது. இன்னும் பல பொதுக்காரியங்களிலும் ஈடுபட்டு நிறை வேற்றியது. இவைகளுக்கு இடையில் தன் தமயனாரை வரவழைத்து "மு. அ." விலாசத்துடன் ஓர் லேவாதேவித் தொழிலையும் ஆரம்பித்தார். இக்காரியங்களைக் குறைவறச் செய்து பெரும் புகழோடு பிரபவஸு ஆடிமீ 6உ தாய் இல்லம் அடைந்தார்.

மறுபடியும் சுக்கிலஸு ஆவணிமீ 30உ மலாக்காவுக்குப் புறப்பட்டு வந்தார். (1929) மார்கழிமீ வரை மலாக்காவில் தங்கினார். அவ்வமயந்தான் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் மலாயாவுக்கு வந்தது. அவரை மலாக்காவில் வரவேற்க முன்னின்றவர்களில் பெரும் பங்கெடுத்தவர் இவரே. அத்துடன் அவ்வாண்டு தைத்திங்கள் 3ம் நாள் தாயில்லம் அடைந்தார். அங்கு சுக்லஸு மாசிமீ 1உயில் இவர் இல்லத்துணைவி ஓர் ஆண் மகவைப்பெற்றார். அம்மகவுக்கு தனது முதல் மனைவியின் பெயராகிய "நாகப்பன்" என்ற பெயரை இட்டு வளர்த்து வருகிறார்கள். அந்நாகப்பன் ஒருவனே இப்போது இவர்களின் பெருநிதியாக இருந்து வருகிறான். அதன் பிறகு சின்னாளில் வாணிபத்தின் பெருக்கம் குறைந்தது. அதை

மாற்ற பிரஜோத்பத்தி ஞு புரட்டாசி மீ 12உ யில் (1931) புறப்பட்டு மலாக்கா வந்தார். அப்போது இந்தியர் சங்கம் வீழ்ச்சியுறும் நிலையில் இருந்தது. அதை நிலைபெறச் செய்து ஓராண்டு அதன் தலைவராகவும் இருந்தார். அத்துடன் செட்டியார்களுக்கு ஓர் சங்கம் காணப் பெரு முயற்சி எடுத்தார். இவருடன் பல அன்பர்களும் ஒத்துழைத்தனர். அவர்களில் திரு. ராம. அழ. சித. சிதம்பரம் செட்டியார் ஒருவர். இவர்கள் முயற்சியால் 16-1-1933ல் காணப் பெற்ற வர்த்தக சங்கம் இன்று உன்னத நிலையில் இருக்கிறது.

இவரால் சமூக, சமய, நாடுகளுக்கு நன்மை ஏற்பட்டாலும் சொந்தக் காரியங்கள், தொழில்கள் பாதகத்தையே விளைவித்தன. அதற்காக இவர் தன் பொறுமையையும், பிறர் நலம் பேணும் பெற்றியையும் இழக்கவில்லை. பிறரை நோகவில்லை. பலரை வஞ்சிக்க நினைக்கவில்லை. இயன்றவரை ஒவ்வொரு காரியங்களையும் செய்து வைத்து விட்டு ஸ்ரீமுக ஞு வைகாசி மீ 26உ (1933) மலாக்காவை விட்டுப் புறப்பட்டார். விசுவநாதபுரத்தைச் சேர்ந்தார். அங்கிருந்து தனது வாணிப நிலைகருதி ஸ்ரீமுக ஞு ஆனி மீ 20உ யில் காரைக்காலுக்கு தன் மனைவி, மகனுடன் சென்று தாய் மொழியையும் கற்க முற்பட்டார். ஏற்கனவே பத்திரிகைப் பயிற்சியும், பேசுந்திறனும் உண்டு, அத்துடன் அங்கு காணப்பெற்ற சைவசித்தாந்த வித்தியாச் சிரமத்தில் சேர்ந்தார். அதை நன்னிலைக்குக் கொண்டுவர அருந்தொண்டாற்றினர். அதனால் பல பண்டிதரின் கூட்டுறவு நேர்ந்தது. சென்னை முதல் திருச்சி வரை பல இடங்களுக்கும் சொற் பொழிவுக்குச் சென்றார். இவரின் கல்வித் திறனையும், சொற்பொழிவின் சுவையையும், தமிழுக்குச் செய்யும் தொண்டையும் கண்ட பண்டிதர்கள், காரைக்கால் சைவ சித்தாந்த வித்தியாச் சிரமத்தின் இரண்டாவது ஆண்டு விழாவில் இவருக்கு "தமிழறம் பேணும் தகைமையாளர்" என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். அதைப்பெற்ற இவரின் சொற்பொழிவின் திறம் சொல்லுந் தரமன்று. இவர் சைவ சித்தாந்தம், தமிழ் மொழியின் தொன்மை மற்றவைகளை விரிவுரையிற் காட்டிப் பேசுவதுபோல எழுதுவதற்கொப்ப, அரசியலைப்பற்றிப் பேசுவதிலும் திறமை வாய்ந்தவர். அவைகளைச் செய்கையாலும் காட்டுபவர். இதைச் சிறப்பித்து இவருக்கு கொடுத்த உபசாரப் பத்திரங்கள் ஒன்றில் கூறப் பெற்றிருக்கிறது. அதில்,

"அரசியலில் மிகத் தேர்ந்தோர் அறிவியலை
உணரார்கள் அதினுந் தேர்ந்தோர்
உரைசெய்யும் ஞானவியல் உணரார்கள்
உலகநிலை இவ்வா றாக
பரசுதல்செய் பலவகையும் சிறப்புறவே
பயின்றதுடன் பயிற்றும் சான்றோய்
அரசத்தி கிருபையினால் அனைத்தின்பம்
அடைந்துபுகழ் எய்தி வாழ்க."

(தியாகராஜ ஞானியார். திருவாரூர்)

என்ற ஒரு பாட்டே இவரின் பெருமையை விளக்கும். அதிற் கூறியபடி இவர் அரசியலிலும் அதிகப் பற்றுடையவர். மகாத்மா காந்தியடிகளை 1927ம் ஆண்டு தென் இந்திய சுற்றுப் பிரயாணத்தின் போது தங்கள் ஊரில் வரவேற்றவர். மறுமுறை அவர் தென் இந்திய சுற்றுப் பிரயாணம் செய்தபோது 1934ம் ஆண்டில் காரைக்காலில் வரவேற்றதோடு பெருத்த கூட்டத்தில் பேசும் பேறும் பெற்றவர். அவரைப்போல திரு. இராஜேந்திரப் பிரசாத். பண்டித ஜவஹர்லால் நேருஜீ இருவரையும் காரைக்கால், நாகபட்டினத்திலும் வரவேற்புக் கமிட்டியிற் கலந்து வரவேற்றவர். அத்துடன் மலாக்காவில் "பண்டித ஜவஹர்லால் நேருஜீ." வந்த போதும் கலந்துகொண்டவர். ஒவ்வொரு முறையும் பண்டிதரைக் காணக் கூடிய ஜனத்திரள் (மக்கட் கடல்) இவரின் சொற்பொழிவால் நிம்மதி பெற்றிருந்தது எனின் இவரின் சொல் வன்மையைச் சொல்லவும் வேண்டுமோ ?

இச்சிறப்பு வாய்ந்த இவரை மறுபடியும் மலாயாவுக்கு வரும்படியாக இவரின் நண்பர் சிங்கப்பூர் N. இளைய தம்பியும் மற்றவர்களும் தூண்டினார்கள். அதனால் ஈசுரவருட சித்திரைமீ 12உ காரைக்காலிலிருந்து புறப்பட்டு தனது வாழ்க்கைத் துணைவியுடனும், செல்வன் நாகப்பனுடனும் சிங்கப்பூர் வந்திறங்கினார். சின்னாட்களில் பழைய மலாக்காவைச் சேர்ந்த இன்சூரன்ஸ் தொழிலை ஏற்று வாழ்க்கையை நடத்துகிறார். அத்துடன் பல சங்கங்களிலும் சேர்ந்து தொண்டாற்றுகிறார். இவர் வந்ததும் இந்தியர் சங்கத்துக்கு இரண்டாம் முறை இவரை தலைவராக்கினார்கள். அப்பதவியைச் செவ்வனே நடத்தியதோடு "தான்பெற்ற இன்பம் பெறுக வையகம்"

என்ற மணிவாசகரின் வாக்கின்படி இவர் பெற்ற தமிழ் இன்பத்தைப் பலரும் பெறுவதற்காக தன் இல்லத்திலேயே "திருவள்ளுவர் நூல் நிலையம்" என்ற ஒன்றை நிறுவி அதன் மூலம் பலரைப் படிக்கும் படி செய்கிறார். இவர் செய்யும் தொண்டுகளுக்குத் துணையாக இவரின் வாழ்க்கைத் துணைவியாரும் இருக்கிறார். இத்தொண்டுகளை தன்னலங் கருதாது ஆற்றும் இவருக்கு செட்டியார்கள் சமுகமும், தமிழ் மக்களும், இந்தியர்களும் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். எல்லோருக்கும் இயன்ற தொண்டாற்றும் இவர்கள் நீண்டநாள் வாழ, எச்செல்வமும் பெற இறைவன் அருள் புரிவானாக.

(நேரிசை வெண்பா)

"தாய்நாடுந் தென்மொழியுந் தானோங்கத் தொண்டாற்றும்
நேயனரு ணாசலமும் நேர்குணமும்—வாய்மைபுஞ்சேர்
இல்லாளுஞ் சேய்சுற்றம் யாவருமே என்றென்றும்
நல்லாராய் வாழ்ந்திடுவர் நன்று."

இச்சிறப்பு வாய்ந்த அருணாசலம் செட்டியாரின் அருமுயற்சியால் காணப்பட்ட மலாக்கா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கத்தின் ஆரம்பத் தலைவர் திரு. பி. கு. நா. ராமசாமி செட்டியாராவர். காரியதரிசி திரு. உ. அரு. அருணாசலம் செட்டியாராவர். இவர்கள் வகுத்த திட்டப்படி காலத்துக் கேற்றவாறு திருத்தத்துடன் நடந்து வரும் இச்சங்கத்தின் இவ்வாண்டுக் தலைவர் திரு. மு. ராம. மு. முத்துராமன் செட்டியாராவர். காரியதரிசி திரு. ப. சி. லெ. அண்ணாமலை செட்டியாராவர். இவர் கோட்டையூர் பெ. லெ. பெ. குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் ராமநாதன் செட்டியாரை உலகம் அறியும். இவர் சார்வரிஸு புரட்டாதிமீ 18உ (1900) பிறந்தார். சிறுவயதிலேயே ஆங்கிலம் கற்க முற்பட்டார். மதுரைக் காலேஜில் சேர்ந்து படித்தார். 1914 முதல் 1916ம் ஆண்டு வரை கொழும்பு வெஸ்லி காலேஜில் படித்தார். மறுபடியும் மதுரையில் படித்தார். அதனால் இவர் இன்று ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் எழுதும் வன்மையோடு பேசுந்திறனும் பெற்றிருக்கிறார். இவர் தொழில் கருதி 1918ல் ரெங்கூன் சென்றார். 1922ல் தாய் நாட்டைச் சேர்ந்தார். 1923ல் மலாயாவுக்கு வந்தார். அன்று முதல் பலமுறை வந்து சென்ற இவர் இப்போது "ப. சி. லெ." "ப. சி. ராம." கடைகளின் பொறுப்பாளராக இருக்கிறார். இவர் பேசுவதைப் போல

செய்கையிலும் காட்டுபவர். தெய்வ பக்தி நிறைந்தவர். நாட்டுப் பற்றுக்கொண்டவர். சமூகம் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற ஆர்வங் கொண்டவர். அதற்காக இவர் ஆற்றுந் தொண்டுகள் பல. அத்துடன் சங்கக் காரியதரிசிப் பதவியையும் ஏற்று நல்ல முறையில் நடத்தி வருகிறார். இவருக்கும் சமூகம் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது. இத்தகைய அறிஞர் பல்லோரால் நடத்தப்பெறும் சங்கங்கள் வளர்ச்சி பெற்றிருப்பதைப் போல மலாக்காவின் வர்த்தக மும் ஓங்கி நிற்கிறது. அதனால் நகர மக்கள் பல்லோர் நல்வாழ்வைப் பெற்றிருக்கின்றனர்.

மலாக்கா ஆலயங்களின் மகிமை

வர்த்தகத்தால் உயர்ந்து மக்கள் பல்லோர் வாழும் மலாக்கா வில் ஆலயங்களும் மிகுதி. அவ்வாலயங்களில் இந்து, மகமதிய, சீனர்களின் ஆலயங்கள் மூன்றும் உள்ள தெருவுக்கு "கம்பம்பள்ளி" (கோயிற்குடி இருப்பு) என்றே பெயர். இத்தெருவிலேயே மலாக் காச் செட்டியார்களால் 300 ஆண்டுகட்கு முன் நிறுவப்பெற்ற பொய்யாத விநாயகர் ஆலயமும் இருக்கிறது. மலாயாவில் இப் போதுள்ள இந்து ஆலயங்களில் இதுவே முதலாவது ஏற்பட்ட தாகும். இவ்வாலயத்தைக் கட்டுவதற்காக 1781ம் ஆண்டில் உலாந் தாக்காரர்கள், இப்போது ஆலயம் உள்ள இடத்தை விட்டுக்கொடுத் தார்கள். இவ்வாலயத்தின் பக்கத்திலுள்ள இருகட்டிடங்கள் மலாக் காச் செட்டியார்களால் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அக்கட்டிடங்களுக்கு அடுத்தது மலாய்க்காரர்களின் பெரிய பள்ளி. அப்பள்ளிக்குக் கொஞ்ச தூரத்தில் சீனர்களின் பெரியகோயில். பொய்யாத விநாயகர் ஆலயத்துக்கு வலப்புறத்திலும் சீனர்களின் கோயிலுண்டு. இவ்வாறு பல கோயில்களைக் கொண்ட இத்தெரு வில் ஆலயத்தின் தலைவர்களும், மதப்பெரியார்களும் வசித்திருக் கிறார்கள். அப்படி இருந்தும், இவர்களுக்குள் எவ்வித சச்சரவும் ஏற்படவில்லை. அவை அங்கு வாழ்ந்த மக்களின் ஒற்றுமையையும், இந்நாட்டின் பழக்கத்தையும் காட்டுகிறது. பலரும் ஒற்றுமையோடு அமைத்த ஆலயங்கள் மூன்றும் இன்றும் சிறந்து விளங்குகிறது.

இவைகளில் சீனர்களைச் சேர்ந்த பெரிய கோயிலில் ஓர் மாரி யம்மன் உருவம் (வெண்கலச்சிலை) இருக்கிறது. இவ்வுருவம் 200 ஆண்டுகளுக்குமுன் வைக்கப்பட்டதென்று பலர் கூறுகின்றனர். இச்சிலையை அங்கு வைக்கக்காரணம் ஒன்றுண்டு. பல சீனர்கள் மலாக்கா கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்றார்கள். வலை வீசினர்

கள். ஓர் வலை சேற்றில் பதிந்தது. அதை எடுக்க இறங்கினார்கள். அங்கு (சேற்றில்) ஓர் அம்மனின் உருவம் (கற்சிலை) ஒன்று அகப் பட்டது. அதைக் கொண்டுவந்து தங்கள் கோயிலில் வைத்தார்கள். அவ்வுருவம் பெரிதாகவும் கற்சிலையாகவும் இருந்ததால் அதற்குப் பதிலாக இப்போதுள்ள சிறிய உருவத்தை (வெண்கலச் சிலையை) சில தமிழ் மக்கள் ஆதரவின்பேரில் வைத்து வணங்கிவருகிறார்கள். அச்சிலையை இன்றும் காணலாம். அக்கோயிலில் நடைபெறும் பூசை முறைப்படி ஒவ்வொரு நாளும் அம்மனுக்கும் பூசை நடை பெறுகிறது. இவ்வாலயத்தில் பல விழாக்கள் கொண்டாடுவார்கள். அவ்வமயம் பல கூத்துகள் நடைபெறும். இதேபோல "பன்டை ஹீலர்" என்ற இடத்தில் நீண்ட நாட்களுக்குமுன் ஏற்பட்ட சின ஆலயம் ஒன்றிருக்கிறது. அவ்வாலயத்தில் நாம் "மாமாங்கம்" கொண்டாடுவதுபோல 12 ஆண்டுக்கொருமுறை விழாக் கொண் டாடுவார்கள். அவ்விழாவில் சுவாமி புறப்படும் ரதத்தைப் படகு களைப்போல அலங்கரித்துக் கொண்டுவரும் காட்சியும்; கடலில் கொண்டாடும் விழாவும் கண்டுகளிக்க வேண்டியவைகளில் ஒன்று. அவைகளை நோக்கும்போது நமது இலக்கியங்களில் கூறப்பெறும் சரித்திர உண்மைகள் புலப்படும்.

இதேபோல தமிழ் மக்கள் கொண்டாடுவது பொய்யாத விநாயகர் கோயில். இவ்வாலயத்தை மலாக்காச் செட்டியார்கள் கட்டினார்கள் என்பதை முன்பே கூறப் பெற்றிருக்கிறது. அவர் களால் கட்டப்பட்ட ஆலயத்தில் ஓங்கார மூர்த்தியுடன், சுப்பிர மணியரையும், ராமரையும், மாரியம்மனையும் வைத்து வணங்கினார் கள். அவர்களுடன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் சேரவே ஆலயத்தைப் பெரிதாக்க எண்ணினார்கள். சிவபெருமான் திருவுரு வாகிய இலிங்கத்தையும், சத்திவடிவாகிய அம்பிகையின் உருவத்தை யும் வைக்க நினைத்தார்கள். இவ்வெண்ணம் இற்றைக்கு 75 ஆண்டு களுக்கு முன்கைகூடியது. அவ்வுருவங்களை நகரத்தார்கள் பொறுப் பில் வைத்து "சுந்தரேஸ்வரர், மீனாட்சி" என்ற பெயரோடு வணங்கி வருகிறார்கள். பொய்யாத விநாயகரை முன்பும் சுந்தரேஸ் வரரைப் பின்பும் நிறுவப்பெற்றதால் சுவாமி சந்நிதி, விநாயகர் சந் நிதிக்குப் பக்கத்தில் இருக்கிறது. இவ்வாறு தெய்வங்களைவைத்து எல்லோரும் வணங்கும் பொய்யாத விநாயகர் ஆலயத்தின் பொறுப் பை மலாக்காச் செட்டியார்கள் சில நாள் முன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிடம் ஒப்படைத்தார்கள். அன்றிருந்து நகரத்தார் களும் ஆலயத்தை நல்லமுறையில் நடத்திவருகிறார்கள். இப்போது நடத்தப்பெறும் பூசை மற்ற செலவுகளை நகரத்தார்களே கொடுத்து

வருகிறார்கள். இதில் ஒருபகுதித் தொகையை மலாக்காச் செட்டியார்களும் கொடுக்கிறார்கள். அத்துடன் அவர்கள் பொறுப்பில் நவராத்ரி, கந்தர் சஷ்டி உற்சவங்களையும் நடத்துகிறார்கள். அவ் விரு நாட்களிலும் பல ஆண்டுகள் முன் (சுமார் 100 ஆண்டுகள் இருக்கலாம்) அவர்களால் செய்து வைக்கப்பெற்ற மர இரதங்கள் மூன்றிலும் விநாயகர், சுப்பிரமணியர், இராமர் மும்மூர்த்திகளையும் ஏற்றி விழா நடத்துவார்கள். அன்று அவர்கள் வசிக்கும் இல்லங் களில் சைவசமய முறைப்படி மாவிலை, தோரணங்கள் கட்டி, அத் தெருக்களுக்கு இரதங்களையும் இழுத்துச் செல்வார்கள். அங்கு தான் அம்பு போடுதலும், சூர சம்ஹாரமும் நடைபெறும். அதற்கு மேல் நகரத்தார் வசிக்கும் தெருவுக்கு வந்து இரதங்கள் ஆலயத் தைச் சேரும். இவ்விழாக்கள் பல சிறப்புடன் நடக்கும் பொய்யாத விநாயகர் ஆலயம் இன்றும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஆதரவில் மிக உன்னத நிலையில் நடைபெறுகிறது. ஆழியில் வந்து சேரும் ஆறு வலமாய்ச் சூழ்ந்து அழகுசெய்யும் மலாக்காவில் எழுந் தருளி இருக்கும் இறைவன், பொய்யாத விநாயகனும் தம்மைப் பணிவார்க்கு வேண்டு நிதி கொடுத்து உதவுகின்றான். அவனை,

[நேரிசை வெண்பா]

“அகன்ற கடலலைபா யாறுவலஞ் சூழ்ந்து
புகழார் மலாக்காவிற் பொற்றாள்—அகத்திருந்தி
மெய்யன்பால் வந்திப்பார் வேண்டுநிதி யீந்தருளும்
பொய்யாத வைங்கரனைப் போற்று”

என்று கூறியபடி அனைவரும் போற்றி அவனருள் பெறுகின்றனர்.

இவ்வாலயத்தைப்போல சிறந்து விளங்குவது சந்நாசிமலை ஆண்டவர் கோயில். இக்கோயில் மலாக்காவில் இருந்து 5½ மைலில் “சிங்” என்ற இடத்தில் இருக்கிறது. இவ்வாலயத்தில் அமைந் துள்ள இலிங்கவடிவை சுப்பிரமணியராக வைத்து “சந்நாசிமலை ஆண்டவர்” என்ற பெயரால் மக்கள் வணங்கிவருகிறார்கள். சைவ சித்தாந்திகள் சுப்பிரமணியத்தையும் சிவன் என்று வணங்குபவர் கள். (பக்கம் 75 பார்க்க) இதைப் பல பெரியார்களும் விளக்கி இருக்கிறார்கள். அதில்,

"ஆதலி னமது சத்தி அறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதகமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்."

(கந்தப்புராணம். திருவிளையாட்டு—19)

என்று கச்சியப்ப சிவாச்சாரியார் கூறியபடி குகனை வணங்குவது சிவனையே சாரும் என்று உணர்ந்தவர்கள். ஆகவே இலிங்க வடிவை கந்தனாகவைத்து வணங்கி வருகிறார்கள். இவ்விலிங்க வடிவை பன்னாட்களுக்கு முன் ஓர் வங்காளச் சந்யாசி வைத்துப் பூசை செய்தார். இதேபோல "பத்துப்பிரண்டாம்" "தம்போய்" என்னும் இரண்டிடங்களிலும் வைத்துப் பூசை செய்து வந்தார். இம்மூன்றிடங்களிலும் "சிங்" என்று கூறப்பெறும். சந்நாசி மலையிலேயே அதிகமாகத் தங்கி இருந்தார். அப்போது தனது இலிங்கத்தை வைத்துப் பூசிப்பதற்காக செங்கற்களால் ஓர் சிறிய வளைவுள்ள கட்டிடத்தை ஆலயமாகக் கட்டினார். அதில் இறைவனை வைத்துப் பூசித்து வந்தார். (அவ்வாலயம் இன்று மிருக்கிறது) இவருக்குத் துணையாக ஓர் பசு தான் இருந்தது. அப்பசுவையும் சந்நாசி மலையிலேயே வைத்திருந்தார். அவருக்கு வேறு துணையில்லை. ஆயினும் பக்கத்தில் இருந்த மலாய்க்காரர்கள் இவரை ஏக தேசத்தில் வந்து பார்த்துச் செல்வார்கள். அவர்களிடம் தனது இறுதிக் காலம் சந்நாசி மலையிலேயே முடிவுபெறும். முடிவுபெற்றதும், தனதுடலை அங்கேயே சமாதி வைக்க வேண்டுமென்றும் கூறி இருந்தார். அதே போல இவர் இறைவனடி சேர்ந்ததும் அவருடலை அங்கேயே ஆண்டவனுக்கு அண்மையில், இடப்பக்கத்தில் சமாதி வைத்தார்கள். அச்சமாதி இன்றும் இருக்கிறது. அதற்கும் பூசை நடத்தப்பெறுகிறது.

இவர் அடங்கிப் பன்னாள் வரை அவ்வாலயத்தை ஒருவரும் கருதவில்லை. இற்றைக்கு 60 ஆண்டுகள் முன் நகரத்தார் கவனித்தார்கள். அன்றே காடு மண்டி இருந்த அவ்விடத்தைச் சுத்தம் செய்தார்கள். ஆண்டுக்கிருமுறை அங்குசென்று பூசை போட்டார்கள். 1880ம் ஆண்டில் பங்குனி உத்தரத்தன்று காவடி கட்டி எடுத்து விழாக்கொண்டாடினார்கள். அப்பால் அவ்வாலயத்தைப் பெரிதாக்க நினைத்தார்கள். ஆண்டவரிருக்கும் இடத்தை 1891ஆு ஜூலைமீ 13உயில் கிராண்டு போட்டு வாங்கினார்கள். அன்றிருந்து நகரத்தாருக்குச் சொந்தமான அவ்வாலயத்தைப் பல கட்டிடங்களால்

பெரிதாக்கினார்கள். இப்போது பல கட்டிடங்களும் விழாக்காலத்தில் ஒரே நேரத்தில் 1000 பேர் இருந்து உணவுருந்தக்கூடிய ஓர் கட்டிடமும் இருக்கிறது. பன்னாள் முன் பூசையில்லாதிருந்த இவ்வாலயத்தில் 20 ஆண்டுகளாகப் பூசகரை வைத்து தினப்படி பூசை நடத்தி வருகிறார்கள். அப்பூசைக்கு வேண்டும் மலர்களுக்காக நந்தவனம், செங்கழுநீர், நீலோர்ப்பல ஓடைகளும் அமைத்திருக்கிறார்கள். அபிஷேகத்துக்குப் பால் தரும் ஆச்சாலையும் நிறுவியுள்ளார்கள். இவர்களின் அன்பைக் கண்ட இயற்கை அன்னை, இறைவனின் அருள் சுரப்பது போல, ஆலயத்துக்கு அண்மையில் ஓர் தண்ணீர் ஊற்றைத் தந்துதவியுள்ளாள். அந்நீரைப் பார்க்கப் பால் போலிருக்கும். அருந்தினால் இளநீரைப் போன்றினிக்கும். இவ்வியற்கை ஊற்றிலும், இதற்கண்மையில் தோண்டிய குளத்திலும் இருந்தே குழாய் போட்டு நீரை எடுத்து எங்கும் உபயோகப் படுத்துகிறார்கள். இவ்வியற்கை, செயற்கை இன்பத்தைத் தரும் ஆலயம் இன்று உன்னத நிலையில் இருக்கிறது.

இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான் திருவுருவாகிய இலிங்க வடிவுக்கு ஒவ்வொரு நாளும் பல அபிஷேக ஆராதனைகள் நடக்கும். அவ்வடிவையே ஆண்டவன் எனக் கொண்டாடுவதால், உற்சவ உருவத்தை பால சுப்பிரமணியராகவே செய்யப்பெற்றிருக்கிறது. அப்பால சுப்பிரமணியனுக்கு, சத்தி வடிவேலனுக்கு மலாக்கா நகரத்தார் மாசி மகத்தன்று விழாக்கொண்டாடுவார்கள். இவ்விழாவுக்கு முன் மலாக்கா நகரத்தார் கொண்டாடியது பெரியமலை விழா. அவ்விழா சில காரணங்களால் நிறுத்தப்பட்டது. அதற்குப்பின் ஓர் நாள் உத்தரத்தன்று காவடி எடுத்துக் கொண்டாடிய சந்நாசிமலை ஆண்டவர் விழாவை 3 நாள் ஆக்கினார்கள். அப்பங்குனி உத்தரவிழா பன்னாட்களாக கோலாலம்பூரில் கொண்டாடப் பெறுகிறது. ஆகவே அவ்விழாவை மாற்றி சந்நாசி மலையில் மாசி மகத்துக்கு விழாக் கொண்டாடினார்கள். அவ்விழா இப்போது இரண்டு நாட்களில் கொண்டாடப் பெறுகிறது. இவ்விழாவுக்கு, மாசி மகத்துக்கு முதல்நாள் அதிகாலை மலாக்கா பொய்யாத விநாயகர் ஆலயத்திலிருந்து வெள்ளி விமானத்தில் வேலன் புறப்படுவான். அவனைப் பல அன்பர்கள் சூழ்ந்து வருவார்கள். சிலர் சர்க்கரைக் காவடி தூக்குவர். பல வாத்தியங்கள் முழங்கும். மற்ற ஆலவட்டம், சுருட்டி, கொடி, குடை விருதுகளும் மிகுதி. இவ்வைபவங்களோடு பகல் சந்நாசிமலைக் கோயிலைச் சார்வான் சரவணன். அன்றும், மறுநாள் மாசி மகத்தன்றும் அங்கு மகேசுர

பூசைகள் நடைபெறும். அப்பூசைகளை நகரத்தார் உயரிய முறையில் நடத்துவார்கள். அவ்வைபவங்காண,

(நேரிசை வெண்பா)

"மாசிமகத் தன்று மலாக்காவின் வாணிபர்கள்
பூசையிடுங் காட்சிகண்டு போற்றிநீ—ளாசிபெறத்
தண்டா மரைநிறைந்த சங்காசிக் குன்றுகுடி
கொண்டிடுவர் பன்மக்கள் கூடி."

பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்குவந்து குடிகொள்வர். அவர்கள் கொண்டுவரும் காவடிகள், கரும்புத் தொட்டிகள், மாவிளக்குகள் எண்ணிக்கையில் அடங்கா. இவ்விழாவில் மலாக்காச் செட்டியார்களில் ஆண், பெண் பல்லோர் மஞ்சள் ஆடை புனைந்து காவடிகள் கொண்டுவருவது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு வரும் மக்கள் அனைவருக்கும் நகரத்தார் அன்னமிடுவார்கள். அத்துடன் கந்தன் விழாக் கண்டுகளிக்க வருவோர் கண்ணுக்குக் காட்சியையும், செவிக்கு இனிமையையும், உள்ளத்துக்கு உணர்வையும், உயிருக்கு ஒழுக்கத்தையும், இம்மைக்குரிய அறிவையும், மறுமைக்குரிய பலனையும் பெறுவர். எதனால்? மலாக்காவிலுள்ள செட்டியார் இளைஞர்கள் நடத்தும் சொற்பொழிவு, கற்பனைக் கதைகளால். இக்கதைகள் ஒவ்வோராண்டிலும் நடைபெறும். இதற்கும் முதற் காரணர் திரு. உ. அரு. அருணாசலம் செட்டியாரே. இவரால் எழுதப் பெற்று, புத்தகமாக வெளிவந்திருக்கும் "உத்தம நாதன் அல்லது சத்தியபுரி ஜமீன்தார்" என்ற கற்பனைக் கதையை சென்ற மாசி மக விழாவில் இளைஞர்கள் நடித்துக் காட்டினார்கள். இவ்விளைஞர்களுக்குப் பேசும் வன்மையும், நடிப்பின் திறனும் வருவதற்காக மலாக்காவில் மாதமிரு முறை சொற்பொழிவுகளும், கற்பனைக் கதைகளும் கற்பிக்கப்பெறுகிறது. அதில் தேர்ச்சிபெறும் இளைஞர்கள் விழாக்காலத்தில் அஞ்சாது பேசுகிறார்கள். நடிக்கிறார்கள். அதனால் விழாக்காண வருவோர் பெருமகிழ்வைப் பெறுகின்றனர். இவ்வாறு பலருக்கும் மகிழ்வைத்தந்து விழாக்கொள்ளும் வேலன் மகத்தன்று மாலை சங்காசிமலையில் இருந்து வெள்ளி விமானத்தேறுவான். மலாக்கா வருவான். வாணக்காட்சி காண்பான். பலருக்குக் காட்சி கொடுப்பான். அடியார்களுக்கு அருள் புரிந்து தமதிருக்கை சேர்வான். இவ்விழாவைச் சிறப்புற நடத்தும் நகரத்தார்களுக்கு கவர்ன்மெண்டாரும் பொது மக்களில் பல்லோரும் துணையாக நிற்பர்.

இதே போல முன்பு கொண்டாடப்பட்டது பெரியமலை விழா. இப்பெரிய மலை என்பது மலாக்காவுக்கு அண்மையில் கடலில் உள்ள "பூலோ புஜார்" ஆகும். இம்மலை மலாக்கா துறைமுகத்தில் இருந்து 10வது மைலிலும், "உம்பை" என்ற இடத்தில் இருந்து 3வது மைலிலும் இருக்கிறது. இதற்கு மோட்டார் போட், படகு களில் செல்லலாம். இங்கு பன்னெடுங்களுக்கு முன் மகமதியப் பெரியார்கள் அடங்கிய சமாதிகள் இருக்கிறது. அவைகளில் சிறந்த பெரியாரின் சமாதி ஓர் மாமரத்தினடியில் இருக்கிறது. இதற்குப் பெருத்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாண்டவரின் மனைவி எனக் கூறப்பெறும் அம்மன் ஆலயம் ஒன்றும் இருக்கிறது. இவ்வாலயங்களுக்கே பலரும் சென்று வணங்குவது. இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் ஆண்டவருக்குத்தான் செட்டியார்களும் பூசை நடத்துவது. செட்டியார்கள் சைவசமயத்தினர். ஆயினும் எச்சமயத்தையும் தங்கள் சமயமாகக் கொள்வர் என்பது இதனால் விளங்கும். இவ்விழாக் கொண்டாட ஆரம்பித்து 80 ஆண்டுகள் ஆகிறது. முதலில் மலாக்காவில் உள்ள செட்டியார்கள் மட்டிலும் சென்று 3 நாள் தங்கி ஆண்டவனைத் தரிசித்துத் திரும்பினார்கள். பிறகு வெளியூர்களில் இருந்தும் பலர் வர ஆரம்பித்தனர். அதற்கு மேல் ஒவ்வோர் ஆண்டிலும் பங்குனி மாதத்தில் சென்று 5 நாட்கள் தங்கித் திரும்பினர். இவர்களோ ஆண்டுக்கொரு முறை தான் அங்கு செல்வார்கள். முதல் வருடம் சென்று திரும்பியவர்கள் மறு வருடம் செல்லு முன் அங்கு காடுகள், செடிகள் அடர்ந்து விடும். அவைகளை வெட்டிச் சுத்தம் செய்யவேண்டும். நடுக்கடலில் உள்ள மலைத்தீவில் குடிக்கத் தண்ணீர் வேண்டும். அதற்கும் மே மலையிலிருந்து வரும் ஓருருவிவைச் சுத்தம் செய்ய வேண்டும். இவை களுக்காக முன்பே அங்கு ஆளனுப்ப வேண்டும்.

இக்காரியங்களில் ஒவ்வோர் ஆண்டிலும் அங்கு முன்னதாகச் சென்று தேர்ச்சி பெற்றவர் திரு. வெங்கட்டராம ரெட்டியார். இவர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கமலாபுரம் என்ற ஊரில் 1857ம் ஆண்டில் பிறந்தவர். 1878ம் ஆண்டில் மலாக்கா வந்தவர். அன்று முதல் செட்டியார்களுடன் தொடர்பு கொண்டவர். அத்தொடர்பு இன்றுமிருக்கிறது. இவரையே பெரிய மலைக்கு முன்னதாக அனுப்பு வார்கள். இவர் அங்கு சென்று ஒவ்வோர் காரியங்களையும் கவனித்துச் சுத்தம்செய்து வைப்பார். இவ்வாறு சுத்தம் செய்யப்படும் இடத்தில் கட்டிடங்கள் இருப்பது நலம் என நினைத்தார்கள். அதற்காக 1909ளு எப்ரல்மீ 20உயில் ஓர் இடத்தையும் நகரத்தார் பேருக்கு கிராண்டுபோட்டு வாங்கினார்கள். இதில் சில கட்டிடங்

களைக் கட்டினார்கள். இக்கட்டிடங்களும் செட்டியார் பார்வையி லேயே கட்டப்பட்டது. அக்கட்டிடங்கள் ஏற்பட்ட பிறகு விழாவும் விரிவுற்றது. முதலாவதாண்டில் நூற்றுக்கணக்கில் கூடிய மக்கள் வரவர ஆயிரக்கணக்கில் கூடினார்கள். அவைகளுக்கேற்ற முறையில் மலாக்கா நகரத்தார்களும் வேண்டிய சௌகரியங்களைச் செய்தார் கள். வருபவர்களை வரவேற்று ஓரிரண்டு படகுகளில் கூட்டிச் சென்றவர்களை கப்பல்களை நியமித்துக் கூட்டிச்சென்றார்கள். விழா வையும் மிகச்சிறப்பாக நடத்தினார்கள். இவ்வாறு விழா நடந்து வந்ததில் ரௌத்திரி வருடத்தில் இருந்து 3 ஆண்டுகள்வரை ஒன்று மாற்றி ஒன்றாகப்பல இன்னல்கள் நேர்ந்தன. ஆகவே துந்துபி வருடத்துடன் எல்லோருமாகச் செல்வதை நிறுத்தினார்கள். அதற்கு அடுத்த ருத்ரோற்காரி வருடத்தில் இருந்து ஒரு நாள் மலாக்கா நகரத்தார் மட்டிலும் சென்று ஆண்டவனைத் தரிசனம் செய்து வரு கிறார்கள். அவ்வமயம் சில அயலூர் அன்பர்களும் வந்து செல்வார் கள். மலாக்கா நகரத்தார் கொண்டாடிய இப்பெரிய மலை விழாவை நிறுத்திய பின்பே சங்காசிமலை ஆண்டவர் விழாவை சிறப்பாய் நடத்தி வருகிறார்கள்.

மலாக்கா நகரத்தார்கள் தமிழ் மக்கள்கள், பெரியமலை ஆண்ட வரைத் தரிசிக்கச் சென்று வருவது போல மற்ற சமுகத்தவர்களும், சீனர்களும், மலாய்க் காரர்களும் சென்று வருவார்கள், வருகிறார் கள். அத்துடன் மலாய்க்காரர்கள் “சப்பர் மண்டி” என்ற கடல் நீராடுதலைக் கைக்கொண்டு ஆண்டுக்கொரு முறை 2, 3 நாட்கள் பெரிய மலையில் தங்குவார்கள். அவ்வமயம் பல ஊர்களில் இருந்து மலாய்க்காரர்கள் வருவார்கள். மலாய்க்காரர்கள் கொண்டாடும் இச் “சப்பர் மண்டி” விழாவை பெரியமலையைப் பார்க்கினும் மலாக் காவுக்கு 8வது மைலில் உள்ள “தஞ்சோங்” என்ற கடற்கரையி லேயே அதிகமாகக் கொண்டாடுவார்கள். அவ்விழாவன்று கடலில் குளிக்க மலாய் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மலாய்க் காரர் கள் பலர் வருவார்கள். இந்து மக்களை இராமேஸ்வரம், வேதார ணியம், கோடிக்கரைகளில், காண்பது போல மலாய்க்காரர்களை “தஞ்சோங், சப்பர் மண்டி”யிற் காணலாம். அச்சப்பர் மண்டிக்கு வருவோரிற் பல்லோர் நாடுகளிலுள்ளவர்கள். அவர்கள் வந்து திரும்புவது மாட்டு வண்டிகள். அவ்வண்டிகளிற் செல்லும்போது வழி நடையைக் கழிப்பதற்கு அவர்கள் சில வாத்தியங்களைக் கைக் கொள்வார்கள். அவைகளை வண்டிகளில் இருந்தபடியே வாசித்துப் பெண்கள் பாடுவார்கள். அவை கேட்போருக்கு மகிழ்வைத் தரும். இவர்களாலும் மற்றவர்களாலும் கொண்டாடப்பெறும் பெரியமலை

ஆண்டவர் கோயில் மலாய்க்காரருக்கே சொந்தமானது. அதைப் பலர் பராமரித்து வருகின்றனர். இப்பெரிய மலையைப் போல இன்னும் பல இடங்களில் ஆண்டவர் கோயில்கள் இருக்கின்றன. அக்கோயில்களுக்கும் பலர் சென்று வணங்குவார்கள்.

இவைகளைப் போல இந்துக்களுக்குச் சொந்தமாக துரோபதை அம்மன் கோயில், கைலாச நாதர் கோயில், ஐயனார் கோயில் என்ற பல கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் துரோபதை அம்மன் கோயில் தமிழ் மக்களால் 1902ம் ஆண்டில் ஏற்பட்டவை ஆகும். இவ்வாலயத்தில் தீமிதி உற்சவம் நடைபெறும். இதிலும் மலாக்காச் செட்டியார்கள் கலந்து கொள்வார்கள். அன்றிரவு அவ்வாலயத்தில் உள்ள துரோபதை அம்மனையும், சுப்பிரமணியரையும் நகர் வலங்கொண்டு வந்து விழா நடத்துவார்கள். விசாகத்தன்று சுப்பிரமணியருக்கு விழா நடத்துவார்கள். இக்கோயில் எண்டௌமெண்ட் போர்ட்டார் பார்வையில் தமிழ் மக்கள் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இதே போல பல விழாக்களையும் நடத்தும் ஆலயங்கள் பல மதத்தினராலும் பரி பாலிக்கப் பட்டு வருவதால் மலாக்கா நகரத்தில் நம் தாய் நாட்டைப்போன்று என்றும் விழாக் கொண்டாட்டமாகவே இருக்கும். ஒவ்வொரு சமுகத்தவரும், சமயத்தினரும் உற்சவங்களைக் கொண்டாடுவதால் உன்னத நிலை பெறும் மலாக்காவில் உள்ள ஆலயங்கள் பலவும் மகிமையுடனேயே விளங்குகின்றன. அவைகளை முறைப்படி வணங்கும் மக்களும் இறைவனருள் பெற்று இன்பமாய் வாழுகின்றனர்.

மலாக்காவின் பழமையும் புதுமையும்


அந்நாட்டின் நகரங்களில் மிகப்பழமையானது. பண்டைக் காலச் சிறப்புவாய்ந்தது. பழங்காலச் சரித்திரங்களை நினைவுப் படுத்துவது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் முதலில் குடியேறியது. நாட்டின் செல்வங்களைப் பெருக்கும் ரப்பர் விளைவை முதலில் தோற்றுவித்தது மலாக்கா நகரம். இந்நகரத்தை, இப்பகுதியின் எல்லையை இந்து, முகமதிய மன்னர்கள் ஆண்டனர், பிறகு ஆங்கிலேயர் வந்தனர். இவர்கள் ஆட்சியில் தான் புதுமை புகுந்துளது. 14ம் நூற்றாண்டில் 2,000 குடிகள் வசித்த மலாக்காப் பகுதியில் இன்று 1936ம் ஆண்டுக்கணக்குப்படி 169,518 மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் வாழ்வதற்கு அமைந்துள்ள மலாக்கா நகரம் ஓர் முனிசிபாலிடியால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இம்முனிசிபல் எல்லைக்குள் 72 தெருக்கள் இருக்கின்றன. அவைகளில் உள்ள

விடுகள் 5,132. வசிக்கும் மக்கள் 38,042. இந்த முனிசிபல் எல்லைக்கு மேற்பட்ட மலாக்கா நகரைச்சேர்ந்த மற்ற பாகங்களை ரூலர் போர்டார் கவனித்து வருகிறார்கள். இதற்குமேல் உள்ள நாடுகளை அலோர்காஜா, ஜாசின் டிஸ்ட்ரிக்கட் ஆபீஸர்கள் கவனித்து வருகிறார்கள். அவைகளுக்குட்பட்ட விடுகள், வசிக்கும் மக்கள் மற்ற விபரங்களைத் தொடுவாய்ப் பகுதியின் காலக்குறிப்பு, புள்ளி விபரங்களிற் காண்க.

இச்சிறப்பு வாய்ந்த மலாக்கா நகரத்தில் வசிக்கும் மக்கள் தினம் காட்சிகளைக்கண்டு களித்து இன்புற "காப்டல்" "ரியால்டோ" "நியூ ரியால் டோ" "சாவோய்" என்ற நான்கு சினிமாத் தியேட்டர்களும் "கம்போங் ஜாவா டிராமா ஹால்" என்ற ஓர் கூத்துமேடையும் "சிட்டி பார்க்" என்ற ஓர் ஷோவும் இருக்கின்றன. இவைகளில் "நியூரியால் டோ" "கம்போங் ஜாவாடிராமா ஹால்" இரண்டும் செட்டியார்களுக்குச் சொந்தமானது. இக் காட்சியைத்தரும் மலாக்காவில் வாணிபத்தைப் பெருக்கப் பல வியாபாரிகள் உண்டு அவர்களில் இந்தியர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்கள் 96. இவைகளில் செட்டியார்கள் வசிக்கும் "பஸ்ட் கிராஸ் ஸ்ட்ரீட்"டில்உள்ள "சுந்தரம் அன் கோ" "அ.தெய்வானை அன் கோ" இரண்டும் செட்டியார்களுக்குச் சொந்தமானவை. இவ்வியாபாரிகளைப்போல பல லாயர் ஆபீஸ்களும் உண்டு. இவைகளில் "ஆலன் கிளேடிகல், டோனல்ஸன் பர்க்கின் ஸாப், சால்ட், கார்வர், எஸ். ஜி. கோகோ, ஜெயஸ்வால், கோத்தியாவான், டி. சில்வா, ஜென்டர் ஆபீஸ்கள் சிறந்தவைகளாகும். இந்த லாயர்களில் எஸ். ஜி. கோகோ, ஜெயஸ் வால்,என்ற இருவர்களும் இந்தியர்களாவர். இவர்களில் கோகோ ஆபிஸில் இப்போதுள்ள லாயர் பானர்ஜி என்பவரே இந்தியர் சங்கத்தின் இவ்வாண்டுத் தலைவராவர். இவர் இந்தியர்களிடத்தில் மிகப்பற்றுடையவர். நன்றாகப் பேசுந்திறனும் பெற்றவர்.

வாணிபப் பெருக்கங்கொண்ட மலாக்கா நகரத்தின் தெருக்களில் பல அகலத்தால் குறுகியவை. அத்துடன் விடுகளும் நெருக்கம். அத்தெருக்களை ஆங்கில வரசாட்சியின் திறத்தால் கூடியவரை பெரிதாக்கி இருக்கிறார்கள். இன்னும் பெரிதாக்க முயற்சிக்கிறார்கள். பழய கட்டிடங்களைப் புதிதாக்க முனிசிபாலிடியார் மிகச் சிரத்தை எடுக்கிறார்கள். அதனால் பண்டைய மலாக்கா திருந்தி இன்றைய புதிய உலகத்தின் நகரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இப்புதிய நகரத்தில் மக்கள் சுகமாக வாழ வட பகுதிக் கடற்கரை

அனைவருக்கு மருளளிக்கும் ஆண்டவர்க்கு மலாக்காவின்
தனவணிகர் கட்டிவைத்த சந்நாசி மலைக்கோயில்.



Malacca Sannasi Malai Temple.

யோரத்தில் 9 மைல்கள் வரை பல பங்களாக்கள் இருக்கின்றன. இவைகள் சுகாதார வசதிகளுக் கேற்ப கட்டப்பட்டிருப்பவைகள். அத்துடன் கடற் காற்று. அதனால் அங்கு சில நாள் தங்கி வாழ மலாய் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருவர். இவ்வாறு இயற்கை, செயற்கை அமைப்பால் விளங்கும் இக்கட்டிடங்கள் பேரழகைத் தருகின்றன. இவ்வட பகுதிக் கடற்கரையில் "தஞ்சோங்" என்ற இடத்தில் கடலில் குளிப்பதற்கு வசதி உண்டு. இதே போல இயற்கை வெந்நீரில் குளிப்பதற்கும் மலாக்காவில் ஓர் இடமிருக்கிறது. அதற்கு "ஆயர் பனஸ்" என்று பெயர். அவ்விடம் மலாக்காவில் இருந்து $15\frac{1}{2}$ மைலில் இருக்கிறது. அங்கு பூமியிலிருந்து "வெந்நீர்" ஊற்றுக் கிளம்புகிறது. அதை மக்கள் உபயோகிக்கத் தக்க முறையில் சில கேணிகளாகக் கட்டிவிடப்பட்டிருக்கிறது. இவ்வூற்று வெந்நீரில் பலர் குளித்து துர்நீர் வியாதியைப் போக்கிக் கொள்கின்றனர்.

இவ்வாறு இயற்கை, செயற்கை இன்பங்களை அநுபவித்து வாழும் மக்களுக்கு சுகாதாரத்தைப் போதிக்க கவர்ண்மெண்டார் பல நிலையங்களை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவைகளில் பல உத்தியோகஸ்தர்கள் இருந்து கவனித்து வருகின்றனர். அவைகளை மீறி நோய்வாய்ப் படுவோர் ஔடதம் அருந்த பல மருந்துச் சாலைகளும், நோயைக் கவனித்து மருந்து கொடுக்கப் படித்துப் பட்டம்பெற்ற டாக்டர்கள் 13 பேரும் இருக்கிறார்கள். இம்மருந்துச் சாலைகளுக்கு மேல் உள்ளது ஜெனரல் ஆஸ்பத்திரி. இத்தலைமை வைத்தியசாலை "பிரிங்கிட்" என்ற இடத்தில் ஓர் சிறிய குன்றில் கட்டப்பட்டிருக்கிறது. இப்போது மலாயாவிலுள்ள ஆஸ்பத்திரிக் கட்டிடங்களில் மலாக்காக் கட்டிடங்களே சிறந்தவைகள். இக்கட்டிடங்கள் ஆறு அடுக்குகள் கொண்டவைகளாகும். இவைகளை ஏ. பி. ஸி. என்று 3 வார்டுகளாகப் பிரித்துள்ளார்கள். இதில் பல டாக்டர்களும், பல மருத்துவச்சிகளும், பிரசவ ஆஸ்பத்திரியும் இருக்கின்றன. இதனால் மலாக்கா மக்கள் அடையும் நலன்கள் பல. இச்சுகாதார வசதிகளையும் வாணிபப் பெருக்கத்தையும் கொண்டு விளங்கும் மலாக்கா நகரம் இன்று உன்னத நிலையில் இருக்கிறது.

மலாக்கா நீரிணையின் கலங்கரை விளக்கங்கள்

மலாயா தீப கற்பத்திற்கும் சுமத்திராவுக்கும் இடையிலுள்ள நீர்ப்பரப்புக்கு (கடல்) மலாக்கா ஜலசந்தி (நீரிணை) என்று பெயர். இக்கடலிலேயே எத்துறை முகங்களுக்கும் செல்லும் மரக்கலங்கள்

ஓடவேண்டும். அம்மரக்கலங்களுக்கு எல்லைகளைக் காட்ட இந்நாட்டி னின் கரையோரங்களில் 59 கலங்கரை விளக்கங்கள் (விளக்குக்கூண்டு Light House) இருக்கின்றன. அவைகளில் மலாக்கா "அர்ச் பால்" மலையின் (அரசாங்கக் கட்டிடங்கள் இருக்கும் குன்று) உச்சி யில் உள்ள விளக்குக் கூண்டு 140 அடி உயரமுள்ளது. இதன் ஒளி 12 மைல் தூரம் பரவும். இக்கூண்டு 1849ம் ஆண்டில் கட்டப் பட்டது. இதேபோல மலாக்கா கடலில் பெரியமலைக்கு அண்மை யில் உள்ள "பூலோ உண்டான்" மலையில் 1880ம் ஆண்டில் ஓர் விளக்குக் கூண்டு கட்டப்பட்டிருக்கிறது. இதன் உயரம் 175 அடி. இதன் ஒளி 18 மைல் தூரம் பரவும். இதற்கு மேலுள்ள பெரிய விளக்குக் கூண்டுகளில் முதன்மை பெற்றது பினாங்கின் வடமேற்குப் பகுதியில் உள்ள "முகா ஹெட்" மலையில் இருப்பது. இக்கூண்டு 1914ம் ஆண்டில் கட்டப்பட்டது. உயரம் 795 அடி. ஒளி 35 மைல் தூரம் பரவும். இதற்கடுத்தது "பூலோபிசாங்" மலையி லுள்ளது. 1886ம் ஆண்டில் கட்டப்பட்டது. உயரம் 493 அடி. ஒளி 30 மைல் தூரம் பரவும். இதற்கடுத்தது போர்ட் டிக்ஸன் "ராக்கோடா" முனையிலுள்ளது. 1863ம் ஆண்டில் கட்டப் பட்டது. உயரம் 388 அடி. ஒளி 26 மைல் தூரம் பரவும். இதற்கடுத்தது "பூலோகிராமன்" மலையில் உள்ளது. 1913ம் ஆண்டில் கட்டப்பட்டது. உயரம் 215 அடி. ஒளி 21 மைல் தூரம் பரவும். இதற்கடுத்தது சிங்கப்பூர் "கானிங்கோட்டை" யிலுள்ளது. 1855ம் ஆண்டில் கட்டப்பட்டது. உயரம் 202 அடி. ஒளி 18 மைல் தூரம் பரவும். இதற்கடுத்தது "பூலோ சாகிஜாங் பிஸியா" மலையில் உள்ளது. 1913ம் ஆண்டில் கட்டப் பட்டது. உயரம் 195 அடி. ஒளி 12 மைல் தூரம் பரவும். இவைகளுக்கு மேலுள்ள 51 விளக்குக் கூண்டுகளும் இவைகளுக்கு முன்பும் பின்பும் கட்டப்பட்டிருந்தாலும், உயரத்தாலும், ஒளியைப் பரப்புவதிலும் குறைந்தவைகளே.

கடலில் ஓடும் கப்பல்களுக்கு கரைகளின் குறிப்பைக் காட்டு வது கலங்கரை விளக்கங்கள். இவ்விளக்குக் கூண்டுகளை இந்நாட்டில் முதலில் நிறுவியவர்கள் ஆங்கிலேயர்களே. இவைகளை 1849ம் ஆண்டில் மலாக்கா "அர்ச் பால்" மலையில் முதலில் கட்டியதில் இருந்து மற்ற பல இடங்களிலும் கட்டி இருக்கிறார்கள். இவ்விளக் கங்களால் துறைமுகங்களின் சிறப்புகளும் அதிகரிக்கின்றன. இவ் வாறு எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் மலாக்கா, சிங்கப்பூர், பினாங்கு, வெல்லஸ்லி மாகாணங்களைக் கொண்டவைகளே தொடு வாய்ப் பகுதி.

பணமிகுந்த நகரத்தார் பாலதண்ட பாணிக்கென்று
குணமிகவே கட்டிவைத்த கோலாலம்பூர்க் கோயில்.
1893-ம் ஆண்டில் நிறுவியது.



Kualalumpur Temple,

தொடுவாய்ப் பகுதியின் கணக்குப்படி ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, வெல்லஸ்லி மாகாணங்களைப்போல கோகோஸ் தீவுகள், கிறிஸ்துமஸ் தீவு, லாபுவான் என்பவைகளும் தொடுவாய்ப் பகுதிக்கு உட்பட்டவைகளாகும். இவைகளில் கோகோஸ் தீவுகள் என்பது ஜாவா தேசத்தில் இருந்து தென்மேற்கே சுமார் 700 மைல்களுக்கு அப்பால் இந்து சமுத்திரத்தில் சுமார் 20 குன்றுகள் கொண்ட கூட்டத்துக்குப் பெயராகும். இதன் பரப்பு 10 சதுர மைல்கள். இதில் 1936ம் ஆண்டுக் கணக்குப்படி 1,142 மக்கள் வசிக்கிறார்கள். கிறிஸ்துமஸ் தீவு என்பது ஜாவாவுக்கு தெற்கே 190 மைல் தூரத்தில் உள்ளது. இதன் சுற்றளவு 62 சதுர மைல்கள். இதில் 1,059 மக்கள் வசிக்கிறார்கள். லாபுவான் என்பது போர்னியோவுக்கு வடகிழக்கே 6 மைல் தூரத்தில் உள்ளது. இதன் சுற்றளவு 28 சதுர மைல்கள். இதில் 7,507 மக்கள் வசிக்கிறார்கள். இவைகளும் சிங்கப்பூர் தேசாதிபதியின் கண்காணிப்பிலேயே இருக்கின்றன. லாபுவானில் ஒரு ரெசிடெண்டும் உண்டு. இவைகளையும் சேர்த்தே எந்தப் புள்ளி விபரங்களையும் கணக்கிடவேண்டும்.

இத்தொடுவாய்ப் பகுதியின் சர்க்கார் வரவு செலவுக் கணக்குப்படி 1938ல் வருமானம் 376 லக்ஷம். செலவு 396 லக்ஷம். தற்பாதுகாப்புக்காக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கொடுப்பது 5 லக்ஷம். செலவு வகையில் புதிய தொழிற் பள்ளிக்கூடம் கட்ட 5 லக்ஷம் ஒதுக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர், பினுங்கு, மலாக்கா மூன்றிடங்களிலும் புதிதாக தாய் மொழிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படும். 1939ல் வருமானம் உத்தேசம் 395 லக்ஷம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இத்தொடுவாய்ப் பகுதியின் பண்டைப் பெருமைகளையும், இக்கால மாட்சிகளையும், ஆங்கில வரசின் திறத்தையும், அவர்களால் "காலனி"க்கு ஏற்பட்ட நலத்தையும் இதுவரை கண்டோம். அடுத்து ஆங்கிலவரசின் கண்காணிப்பில் உள்ள ஐக்கிய மலாய் நாட்டின் பெருமைகளைக் காண்போம்.

தொடுவாய்ப் பகுதியின் காலக்குறிப்புகள்

கி. பி. ஆண்டு		
1252	பழய சிங்கப்பூராமீது ஜாவானியர் படை எடுத்தது. (68ம் பக்கம் பார்க்க)	
1403	மலாக்காவின் இந்து, மன்னர் பரமேசுவராவுக்கு சினத்திலிருந்து பரிசு வந்தது.	(141)
1414	மலாக்காவில் பரமேசுவர மன்னரின் காலம் முடிந்தது. அவர் மகன் இஸ்லாம் மார்க்கம் தழுவி சுல்தான் முகம்மது இஸ்கிந்தர் ஷாவானது.	(141)
1511	மலாக்காவில் போர்த்துக்கியர் புகுந்தது.	(143)
1529	மலாக்காவின் மீது அச்சே சுல்தான் படை எடுத்தது.	(144)
1606	மலாக்காவின் மீது உலாந்தாக்காரர் படை எடுத்தது.	(145)
1641	மலாக்காவை உலாந்தாக்காரர் கைப்பற்றியது.	(145)
1781	மலாக்காவில் பொய்யாத விநாயகர் ஆலயத்துக்கு கிராண்டு பெற்றது.	(167)
1786	பினங்குத் தீவை கெட்டா சுல்தானிடம் காப்டன் பிரான்ஸிஸ் லைட் பெற்றது.	(93)
1794	காப்டன் பிரான்ஸிஸ் லைட் பூதவுடல் நீத்தது.	(95)
1795	மலாக்காவை ஆங்கிலேயர் கைப்பற்றியது.	(146)
1796	பினங்குக்கு அந்தமான் கைதிகள் வந்தது.	(95)

1798 வெல்லஸ்லி மாகாணத்தை கெட்டா சுல்தானிடம் வாங்கியது. (136)

1805 பினாங்கை இராஜதானி ஆக்கியது. (95)

1807 ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் கல்கத்தா சென்று கவர்னர் லார்ட் மிண்டோவைக் கண்டது. (68)

1811 இருவரும் மலாக்கா வந்தது. பத்தாவியாவைக் கைப்பற்றியது. அதன் தலைவராக ஸர் ராபிள்ஸை நியமித்தது. (68)

1814 மலாக்காவை உலாந்தாக்காரருக்குக் கொடுத்தது. (146)

1818 ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் பென்கூலன் கவர்னர் ஆகியது. (68)

1819 ஸர் ஸ்டாம் போர்ட் ராபிள்ஸ் சிங்கப்பூர் தீவைக் கண்டது. அதில் ஒரு பகுதியைப் பெற்றது. (68)

1824 சிங்கப்பூரை ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கியது. (69) மலாக்கா ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. (146)

1826 தொடுவாய்ப் பகுதியில் இந்தியாக் கவர்ன்மெண்ட் ஆட்சி நடத்தியது. (69)

1828 சிங்கப்பூரில் மாரியம்மன் கோயில் கட்டப்பட்டது. (74)

1833 பினாங்கில் மாரியம்மன் கோயில் கட்டப்பட்டது. (117)

1836 சிங்கப்பூரை தொடுவாய்ப் பகுதியின் தலை நகராக்கியது. (69)

இக்காலங்களில் தான் மலாய் நாட்டுக்கு நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் வந்தது. மலாக்காவுக்கு வந்து சுமார் 130 ஆண்டுகள். (151)

பினங்குக்கு வந்து 110 ஆண்டுகள். (99)

சிங்கப்பூருக்கு வந்து 100 ஆண்டுகள். (72)

1849 மலாக்காவில் கலங்கரை விளக்கம் கட்டியது. (177)

1850 பினங்கில் நகரத்தார் தெண்டாயுதபாணி கோயில் நிறுவியது. (116)

1857 தண்ணீர்மலையில் நகரத்தார் கோயில் நிறுவியது. (111)

1859 சிங்கப்பூரில் நகரத்தார் தெண்டாயுதபாணி கோயில் நிறுவியது. (75)

1867 தொடுவாய்ப் பகுதியில் இந்தியா கவர்ண்மெண்ட் ஆட்சி நீங்கியது. காலனிகளின் செக்ரெட்ரிக்கு உட்படுத்தியது. (70)

1868 ஜாவிக்கோயில் நிறுவியது. (138)

1871 பினங்கு சிவன் கோயில் செட்டியார்கள் ஆதீனத்துக் குட்பட்டது. (117)

1891 மலாக்கா சந்நாசி மலை ஆண்டவர் கோயிலுக்கு நகரத் தார் கிராண்டு பெற்றது. (170)

1897 சுங்குரும்பையில் நகரத்தார் தெண்டாயுதபாணி கோயில் நிறுவியது. (137)

1902 மலாக்காவில் துரோபதை அம்மன் கோயில் நிறுவியது. (175)

மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான்.



His Highness Sultan Hasanuddin Alam Shah.
K. C. M. G. Selangor.

1909 மலாக்கா பெரியமலை கிராண்டு பெற்றது. (173)

1910 வாலப்பூர் கோயில் நிறுவியது. (131)

1923 சிங்கப்பூரில் நேவல் பேஸ் கண்டது. (87)

பினங்கு ஹில் ரயில்வே திறந்தது. (128)

1924 ஜொஹோர் பாலம் கட்டியது. (89)

1928 சிங்கப்பூரில் செட்டியார்கள் சங்கம் நிறுவியது. (73)

1932 பினங்கில் நகர விடுதி ஏற்பட்டது. (108

1933 மலாக்காவில் செட்டியார்கள் சங்கம் நிறுவியது. (160)
ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியாரும், நன்னீர்மலை செட்டியாரும் வாழ்க்கைத் துணைவி களுடன் முதன் முதலாக மலாயாவுக்கு வந்தது. (109)

1934 ஸர். ஷெண்டன் தாமஸ் மலாயாவின் தேசாதிபதி யானது. (65)

மிஸ்டர் ஜார்ஜ் வில்லியம் பிரான்ட் மலாக்கா ரெசி டெண்ட் கௌன்ஸிலர் ஆனது. (147)
பினங்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் நிறுவியது. (04)

1935 ஹானரபிள் மிஸ்டர் குட்மென் பினங்கு ரெசி டெண்ட் கௌன்ஸிலர் ஆனது. (96)

1938 சிங்கப்பூர் நேவல் பேஸில் மிதப்புப் பாலம் திறக்கப் பட்டது. (87)

குறிப்பு ( ) இவ்வடையாளத்துக்குட்பட்ட எண்கள் இந்நூலின் பக்கங்களைக் குறிப்பவைகளாகும்.

தொடுவாய் பகுதியின் வீடுகள், ஜனத்தொகை.
1936-ம் ஆண்டுக் கணக்குப்படி

ஊர்	குடியேறியுள்ள வீடுகள்	காலி வீடுகள்	ஆண்கள்	பெண்கள்	கூடுதல்
சிங்கப்பூர் பகுதி ...	58,273	9,202	353,601	206,863	560,464
சிங்கப்பூர் முனிஸிபாலிடி ...	39,200	6,604	284,486	161,233	445,719
சிங்கப்பூர் ரூரல் போர்ட் ...	17,095	2,177	63,591	41,446	105,037
லாபுவான் ...	1,676	413	3,943	3,564	7,507
கிருஸ்த மஸ் தீவு ...	106	8	973	86	1,059
கோகோ கீலிங் தீவுகள் ...	196		608	534	1,142
பினங்குப் பகுதி ...	58,367	9,202	187,539	136,722	324.261
பினங்கு முனிஸிபாலிடி ...	16,149	1,959	89,050	60,358	149,408
பினங்கு வடகிழக்கு ரூரல் போர்ட் ...	4,084	486	10,971	7,187	18,158
பாலிக் புலாவ் ...	7,673	1,203	17,376	13,929	31 305
பட்டர் வொர்த் ...	13,833	2,016	30,723	25,453	56,176
புக்கிட் மர்ட்டஜம் ...	10,511	2,292	24.270	18,580	42,850
நிபோங் டிபால் ...	6,117	1,246	15,149	11,215	26,364
மலாக்கா பகுதி ...	34,967	4,112	93,933	75,585	169,518
மலாக்கா முனிஸிபாலிடி ...	4,756	376	22,801	15.241	38,042
மலாக்கா ரூரல் போர்ட் ..	9,839	900	22,093	20,967	43,060
அல்லோர் காஜா ...	11,427	1,709	26,449	22,293	48,742
ஜாசின்	8,945	1,127	22,590	17.084	39,674
தொடுவாய்ப் பகுதி மொத்தம், ...	151,607	22,516	635.073	419,170	1,054,243

தொடுவாய்ப் பகுதி ஆஸ்பத்திரிகள்

1936ம் ஆண்டுக் கணக்குப்படி

ஆஸ்பத்திரிகளின் பெயர்	வைத்தியம் செய்து கொண்டவர்கள் ஆண்	பெண்	மொத்தம்
சிங்கப்பூர் ஜெனரல் ஆஸ்பத்திரி ...	11,659	6,758	18,417
,, டன்டோக் செங் ஆஸ்பத்திரி	10,409	—	10,409
,, பிரசவ ஆஸ்பத்திரி ...	—	3,824	3,824
பினங்கு ஜெனரல் ஆஸ்பத்திரி ...	7,612	1,781	9,393
,, பிரசவ ஆஸ்பத்திரி ...	—	2,187	2,187
பாலிக்புலாவ் ஆஸ்பத்திரி ...	214	3	217
கோலப்பிரை ஆஸ்பத்திரி ...	1,838	492	2,330
சுங்கை பக்காப் ஆஸ்பத்திரி ...	2,544	858	3,402
சுங்குரும்பை ஆஸ்பத்திரி ...	1,817	483	2,300
மலாக்கா ஜெனரல் ஆஸ்பத்திரி ...	5,605	2,411	8,016
அல்லோர் காஜா ஆஸ்பத்திரி ...	195	108	303
ஜாசின் ஆஸ்பத்திரி ...	278	158	436
லாபுவான் ஆஸ்பத்திரி ...	166	21	187
	42,337	19,084	61,421

தொடுவாய்ப் பகுதி சிறைச் சாலைகள்

1936ம் ஆண்டுக் கணக்குப்படி

நகரங்களின் பெயர்		சிவில் கைதிகள்	கிரிமினல் கைதிகள்	மொத்தம்
1. சிங்கப்பூர்	...	5,014	7,741	12,755
2. பினங்கு	...	1,210	983	2,193
3. மலாக்கா	...	264	453	717
		6,588	9,177	15,765

தமிழ் நேசன் பத்திராதிபர் காலம் சென்ற பிரம்ம ஸ்ரீ
கே. நரஸிம்ம அய்யங்கார், கோலாலம்பூர்.



Late Mr. K. Narasimha Ayengar, Editor, Tamil Nesan,
Kuala Lumpur.

சிங்கப்பூர் துறைமுக இறக்குமதி ஏற்றுமதி

1936-ம் ஆண்டுக் கணக்குப்படி.

	தேசங்களின் பெயர்.	இறக்குமதி. கப்பல் களின் எண்கள்	இறக்குமதி செய்த டன்கள்	ஏற்றுமதி. கப்பல் களின் எண்கள்	ஏற்றுமதி செய்த டன்கள்
1.	பிரிட்டிஷ் ...	2,235	4,988,114	2,242	4,991,178
2.	அமெரிக்கா ...	38	195,573	38	195,573
3.	சீனம் ...	94	54,829	94	54,829
4.	டானிஷ் ...	96	329,520	96	329,520
5.	டச்சு ...	2,152	3,445,615	2,153	3,445,512
6.	பிரான்சு ...	190	882,296	188	880,965
7.	ஜெர்மன் ...	170	874,028	171	884,272
8.	கிரீக் ...	14	42,975	13	39,417
9.	இத்தாலி ...	60	363,007	60	363,007
10.	ஜப்பான் ...	656	2,765,688	657	2,770,404
11.	நார்விஜியன் ...	538	945,598	534	936,529
12.	பானமா ...	1	5,283	1	5,283
13.	ருஷ்யா ...	19	34,249	19	34,249
14.	சாரவா ...	86	44,317	85	43,511
15.	சியாம் ...	151	90,559	151	90,810
16.	ஸ்விடிஷ் ...	30	114,026	31	118,689
17.	யூகோஸ்லேவகியா	1	3,543	1	3,540
		6,531	15,179,220	6,534	15,187,291

பினாங்கு ஏற்றுமதி இறக்குமதி

1936ம் ஆண்டேக்கணக்குப்படி

தேசங்களின் பெயர்	இறக்குமதி கப்பல்களின் எண்ணிக்கை	இறக்குமதி செய்த டன்கள்	ஏற்றுமதி கப்பல்களின் எண்ணிக்கை	ஏற்றுமதி செய்த டன்கள்
1. பிரிட்டிஷ்	1,386	3,923,800	1,382	3,918,869
2. அமெரிக்கன்	37	196,910	38	200,381
3. சீனம்	7	10,489	7	10,489
4. டானிஷ்	46	179,114	46	179,114
5. டச்சு.	557	710,668	559	711,417
6. ஜெர்மன்	103	591,163	103	591,163
7. இத்தாலியன்	4	14,688	4	14,688
8. ஜப்பான்	196	856,852	196	856,852
9. நார்விஜியன்	111	177,543	111	177,543
10. ஸ்விடிஷ்	11	40,641	11	40,641
	2,458	6,701,868	2,457	6,701,157

மலாக்கா ஏற்றுமதி இறக்குமதி

1936ம் ஆண்டுக் கணக்குப்படி

தேசங்களின் பெயர்		இறக்குமதி		ஏற்றுமதி	
		சப்பல்களின் எண்ணிக்கை	இறக்குமதி செய்த டன்கள்	சப்பல்களின் எண்ணிக்கை	ஏற்றுமதி செய்த டன்கள்
1. பிரிட்டிஷ்	...	66	230,951	66	230,951
2. சினம்	...	4	5,556	4	5,556
3 டானிஷ்	...	33	133,052	33	133,052
4. டச்சு	...	9	44,223	9	44,223
5. பிரான்சு	...	1	9,400	1	9,400
6. ஜெர்மனி	...	13	61,769	13	6:,769
7. நார்விஜியன்	...	91	73,955	91	73,955
8. சியம்	...	5	3,940	5	3,940
		222	562,846	222	562,846

சிங்கப்பூர் கவுன்ஸல்கள்.

ஆர்கன்டைன் ரிபப்ளிக், ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரேஜில், சில்லி, சீனம், ஜெக்கோஸ்லேவியா, டென்மார்க்கு, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஹங்கேரி, இத்தாலி, ஜப்பான், நெதர்லான்ட்ஸ், நார்வே, பேரு, போலாண்டு, போர்த்துகல், ருஷ்யா, சியம், ஸ்பெயின், ஸ்விடன், ஸ்விஜ்ஜர்லாந்து, அமெரிக்கா, கவுன்ஸல்கள் உள்ளனர். இவர்கள் சிங்கப்பூர், ஜோஹூர், புரூனைப், பிரிட்டிஷ் வட போர்னியோ, சராவாக், ஐக்கிய மலாய் நாடுகள். முதலிய எல்லைகளின் விஷயங்களைக்கவனித்துக் கொள்வர்.

பினாங்கு கவுன்ஸல்கள்.

பெல்ஜியம், சீனம், டென்மார்க், பிரான்சு, இத்தாலி, நெதர்லாண்ட்ஸ், நார்வே, போர்த்துகல், சியாம், ஸ்விடன், ஸ்விஜ்ஜர்லாந்து, அமெரிக்கா, கவுன்ஸல்கள் உள்ளனர். இவர்கள் பினாங்கு, வெல்லஸ்லி மாகாணம், பெர்லிஸ், கெட்டா, கிளந்தான், திரெங்கானு முதலிய எல்லைகளின் விஷயங்களைக்கவனித்துக் கொள்வர்.

மிஸ்டர் எஸ். என். வீராசாமி பாரிஸ்டர்-அட்-லா.



Mr. S. N. Veerasamy, Barister-at-Law.

தொடுவாய்ப்பகுதியின் சம்பள விகிதங்கள்

கவர்னர்		வருடம்		5,500	பவுன்கள்
	அலவன்ஸ்	,,		2,500	,,
ஹைகமிஷனர்		,,		2,750	,,
காரியதரிசி		,,	$	5,500.00	
	அலவன்ஸ்	,,	,,	600.00	
மெய்க்காப்பாளர்		,,	,,	5,500.00	
	அலவன்ஸ்	,,	,,	1,080.00	
ஆபீஸ் அசிஸ்டெண்ட்		,,	,,	4,560.00	
சுருக்கெழுத்தாளர்		,,	,,	3,900.00	
கலோனியல் செக்ரட்டரி		,,	,,	23,400.00	
பினங்கு ரெசிடெண்ட் கவுன்ஸிலர்		,,	,,	16,800.00	
மலாக்கா ரெசிடெண்ட்	,,	,,	,,	14,400 00	
பொக்கிஷதார்		,,	,,	15,600.00	
கல்வி இலாக்கா தலைவர்		,,	,,	14,000.00	
சின விஷயங்களின் காரியதரிசி		,,	,,	12 000.00	
கஸ்டம்ஸ் கமிஷனர்		,,	,,	14,400.00	
சிங்கப்பூர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்		,,	,,	12,600.00	
பினங்கு	,,	,,	,,	12,600.00	
வெல்லஸ்லி மாகாண	,,	,,	,,	12,600.00	
மலாக்கா	,,	,,	,,	12,000.00	
சோலிஸிட்டர் ஜெனரல்	,,	,,	,,	12,000.00	
அபிஷியல் அஸைனி	,,	,,	,,	12,600.00	

அரசியல் அமைப்பு செலவுகள்

கல்விக்காக	...	$	2,170,691-83
போலீஸ்	...	,,	2,868,294-47
இராணுவம்	...	,,	4,000,000-00
சிவில் சர்விஸ்	...	,,	1,181,967-24
வைத்திய இலாக்கா	...	,,	2,310,389-85
பப்ளிக் வொர்க்ஸ்	...	,,	3,881,930-61

தபால் நிலையம்

செலவு	வருமானம்
$ 1,821,303-88.	$ 2,353,111-02.

வருமான விபரம்

ஸ்டாம்பு விற்பனை	...	$	1,556,988-86
மணியாடர்கள்	...	,,	74,644-11
தந்திகள்	...	,,	186,327-55
டெலிபோன்	...	,,	375,919-24
சேவிங்ஸ் பாங்கு	...	,,	61,593-00
ரெயில்வே தந்தி	...	,,	15,090-28
இதர வருமானம்	...	,,	72,978-77
		$	2,353,111-02

மேன்மை தங்கிய நகரி செம்பிலான் சுல்தான்.



His Highness Tunku Abdul Rahman.
K. C. M. G., Yang-di-Pertuan Besar,
Negri Sembilan.

தொடுவாய்ப் பகுதி முனிஸிபாலிடிகள், ரூரல்போர்டு

வரவு செலவுகள்

		வருமானம்		செலவு
சிங்கப்பூர் முனிஸிபாலிடி	...	$13,584,526-00	$	12,288,035-00
பினங்கு ,,	... ,,	4,153,081-00	,,	4,010,586-00
மலாக்கா ,,	... ,,	467,475-81	,,	496,391-60
ரூரல் போர்ட், சிங்கப்பூர்	... ,,	440,756-29	,,	440,756-29
,, ,, பினங்கு	... ,,	188,936-01	,,	188,236-01
,, ,, வெல்லஸ்லிமாகாணம்	,,	461,[illegible]26-94	,,	452,765-98
,, ,, மலாக்கா	.. ,,	404,451-64	,,	404,451-64
,, ,, லாபுவான்	... ,,	24,461-45	,,	18,374-80

ஹார்பர் போர்ட் வரவு செலவுகள்

		வருமானம்		செலவு
சிங்கப்பூர் ஹார்பர்போர்ட்	...	$ 7,029,874-89	$	6,485,526-64
பினங்கு ,,	... ,,	1,585,868-23	,,	1,380,963-37

கடலினுட் தந்திகள்

பினங்கு —சென்னை	...	2,778—72	மைல்கள்
,, —கொழும்பு	...	2,867—67	,,
சிங்கப்பூர்—ஹாங்காங்	...	1,521—04	,,
,, —பட்டேவியா	...	1,101—55	,,

[2] ஐக்கிய மலாய் நாடு.

தமிழ்த்தாய் வணக்கம்.

[நேரிசை வெண்பா]

"மெய்ப்பொருளைத் தந்துதவு மென்மைத் தமிழ்த்தாயே
ஐக்கியம லாய்நாட்டின் அற்புதத்தை—மக்களெலாங்
கண்டுகேட் டின்புறவிக் காவியத்தில் உன்னருளைக்
கொண்டெழுத முன்னின்று கூட்டு"

ஐக்கிய மலாய் நாடு என்பது பேரா, சிலாங்கூர், பாஹாங் சுல்தான்களின் அரசியல்களுக்கு உட்பட்டிருந்த மூன்று நாடுகளையும், நகரி செம்பிலான் என்ற 9 சிற்றரசியல்களுக்கு உட்பட்டிருந்த நாடுகளையும் ஒன்று சேர்க்கப் பட்டவைகளாகும். இப்போதுள்ள இந்நாட்டின் பரப்பு 27,825 சதுர மைல்கள். இதில் 18,87,150 மக்கள் வசிக்கிறார்கள். இந்நாடுகள் முன்பு பல தலைவர்களுக்குள் இருந்தது. அதனால் எல்லைத் தகராறுகளும் குழப்பங்களும் நேர்ந்தன. (அதன் விளக்கங்கள் அங்கங்கே கூறப்பெறும்) இவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளையும், குழப்பங்களையும் தீர்ப்பதற்கும் நாடுகளை நல்லமுறையில் காப்பதற்கும் ஒவ்வொருவரும் ஆங்கில வரசின் துணையை நாடினார்கள். அவர்கள் விருப்பத்துக் கிணங்க மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் காலத்தில் 1895ம் ஆண்டில் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. அவ்வுடன்படிக்கையில் மூன்று சுல்தான்மார்களும் ஒன்பது சிற்றரசியல் தலைவர்களும் கைபொப்பமிட்டு ஐக்கியப்பட்டார்கள்.

உடன்படிக்கையின் விளக்கம்

மலாய் நாட்டு சிற்றரசியல்களான பேரா, சிலாங்கூர், பாஹாங், நகரி செம்பிலான் என்ற சமஸ்தானங்களின் மாட்சிமிக்க மன்னர்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைவியும், இந்தியாவின் சக்கரவர்த்தினியுமாகிய மாட்சிமிக்க விக்டோரியா மகாராணி அவர்களின் சார்பாக தொடுவாய்ப் பகுதியின் மேன்மை தங்கிய கவர்னருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை,

மேன்மை தங்கிய பேரா சுல்தான்.



His Highness Sir Sultan Iskander
Shah. G. C. M. G., K. C. V. O.
Kuala Kangsar, Perak.

1. முன்னாட்களில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்களை உறுதிப் படுத்தி பேரா சுல்தானும், சிலாங்கூர் சுல்தானும், பாஹாங் சுல்தானும், நகரி செம்பிலான் என்ற ஒன்பது சிற்றரசியல்களின் தலைவர்களும் ஆகிய நாங்கள் தனித் தனியாக எங்கள் ஆட்சியின் கீழுள்ள நாடுகளின் பரப்புகளை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டின் பாதுகாப்பில் வைக்கிறோம்.

2. மேற்கண்டுள்ள அரசர்களும் தலைவர்களும் தங்களுடைய நாடுகளை எல்லாம் ஐக்கிய மலாய் நாடு எனக் கருதவும், அவைகளின் மலாய் அரசியல்களை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டின் ஆலோசனையில் ஆட்சி புரியவும் சம்மதிக்கின்றோம்.

3. இந்த ஏற்பாடுகளினால் எந்த அரசரோ அல்லது தலைவரோ தன் எல்லையினுள் ஆட்சியையும், அதிகாரத்தையும் கொண்டிருப்பதற்கு மேல் வேறு எல்லை, அல்லது பரப்புகளில் அதிகாரம் செலுத்துவதில்லை என்பதை விளக்கப் படுத்துகிறோம்.

4. மேற்கூறிய ஒவ்வொரு அரசியலும் ஒரு பிரிட்டிஷ் ஆபீஸரை ரெஸிடெண்ட் ஜெனரல் எனக்கொண்டிருக்கும். இவர் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டின் ஏஜண்டாகவும், பிரதிநிதியாகவும் தொடுவாய்ப்பகுதியின் கவர்னரின் கீழ் இருப்பர். அவருக்கு மாட்சிமிக்க மகாராணியாரவர்களின் கவர்ண்மெண்ட் தீர்மானிக்கும் சம்பளத்தையும், தங்குவதற்கு ஏற்ற இல்லங்களையும், வசதிகளையும் இவ்வரசர்கள் அளிப்பதுடன், முகமதியமார்க்க விஷயங்களை விடுத்து மற்ற எக்காரியங்களிலும் அந்த ரெசிடெண்ட் ஜெனரலுடைய ஆலோசனையைப் பின்பற்றி நடப்பர். இத்தகைய பாதுகாப்புகளைக் கொண்டு அரசியல்களில் அவ்வமயம் உத்தியோகங்களில் இருக்கும் உத்தியோகஸ்தர்களையோ அல்லது இனி நியமனமாகும் உத்தியோகஸ்தர்களையோ, இவ்வமயம் நியமனமாகும் ரெஸிடெண்ட் ஜெனரலின் உத்தியோகம் எந்த வகையாலும் பாதிக்கப்படமாட்டாது.

5. மேற்குறிப்பிட்டுள்ள அரசர்கள் ஐக்கியப்பட்ட நிபந்தனையில் ஈடுபட்ட மற்ற அரசியல்களுக்கு வேண்டியதெனக் கருதும் மக்கள், பொருள் மற்றவைகளை பிரிட்டிஷ் கவர்ண்மெண்டின் ஆலோசனைப்படி கொடுத்துதவுவார்கள். இவைகளுடன் மாட்சிமிக்க மகாராணியாரவர்கள் கவர்ண்மெண்ட், மற்ற வல்லரசுகளுடன்போர் தொடுக்குமானால், கவர்னர் விரும்புவதற்கொப்ப தொடுவாய்ப்பகுதிக்கு ஆயுதபாணிகளாக உள்ள படைகளை அனுப்பவும் அநுமதித்துள்ளோம்.

6. இவ்வுடன்படிக்கை மேற்கண்ட அரசர்களின் ஆட்சியின் தத்துவங்களை அவரவர் சமஸ்தானத்தில் எவ்வகையாலும் குறைவுபடச் செய்யவோ அல்லது இந்த அரசியல்களுக்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள சம்பந்தங்களை மாற்றவோ முற்படவில்லை.

இவ்வுடன்படிக்கை 1895ஞ ஜூலை மாதத்தில் கீழ்க்கண்ட அரசர்களாலும், தலைவர்களாலும் கையொப்பமிடப்பட்டு முத்திரையும் வைக்கப்பட்டன.

(3 சுல்தான்களும் 9 தலைவர்களும் கையொப்பம்)

நாட்டைக் காக்கும் முறை

இவ் உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் இருந்து இந்நாடுகளை நான்கு அரசியல்களாக்கி ஆங்கிலேய அரசினர் பாதுகாத்து வருகின்றனர். அதற்காக மலாயாவின் மத்திய பாகத்தில் உள்ள கோலாலம்பூரைத் தலைநகர் ஆக்கினுர்கள். அங்கு பல ஆபீஸ்களை நிறுவினுர்கள். ஓர் ஹைற கமிஷனரையும், அவரின்கீழ் பல உத்தியோகஸ்தர்களையும் நியமித்தார்கள். அவர்களும் மக்களும் நடந்து கொள்ள வேண்டிய முறைக்குப் பல சட்டதிட்டங்களை வகுத்தார்கள். அரசியலை நடத்தினுர்கள். நடத்துகிறுர்கள். அவ்வரசியலை நடத்த முதலாவதாக 1896ம் ஆண்டில் லெப்டினெண்ட் கர்னல் ஸர். ஸி. பி. எச். மிச்சல். ஜி. ஸி. எம். ஜி., ஹைற கமிஷனர் பதவியை எற்ருர். 1898ல் ஸர். ஜெ. ஏ. ஸ்வெட்டன் ஹாம். கே. ஸி. எம். ஜி., ஹைற கமிஷனர் ஆனுர். 1904ல் ஸர். ஜான் ஆண்டர்ஸன். கே. ஸி. எம். ஜி., ஹைற கமிஷனர் ஆனுர். 1911ல் காப்டன். ஸர். ஆர்தர் யங். ஜி. ஸி. எம். ஜி., கே. பி. இ. ஹைற கமிஷனர் ஆனுர். 1920ல் ஸர். லாரென்ஸ் நான்ஸ் குல்லிமார்ட். கே. ஸி. பி., ஹைற கமிஷனர் ஆனுர். 1927ல் ஸர். ஹியூஜ் கிளிப்பர்ட். எம். ஸி. எஸ்., ஜி. ஸி. எம். ஜி., ஜி. பி. இ., ஹைற கமிஷனர் ஆனுர். 1930ல் ஸர். சிஸில் கிளிமெண்டி. ஜி. ஸி. எம். ஜி., ஹைற கமிஷனர். ஆனுர். 1934ல் ஸர். ஷெண்டன் தாமஸ். ஜி. ஸி. எம். ஜி, ஓ. பி. இ, ஹைற கமிஷனர் அனுர். இவரே இப்போது ஆட்சி செலுத்துபவர். மலாய் நாட்டின் தேசாதிபதியும் இவரே.

இவர்களில் ஸர். ஜான் ஆண்டர்சன் காலத்தில் 1909ம் ஆண்டில் ஓர் பெடரல் சட்டசபை ஏற்பட்டது. அதை ஸர் ஹியூஜ் கிளிப்பர்ட் காலத்தில் 1927ம் ஆண்டில் திருத்தினார்கள். அதில் உத்தியோகப் பற்றில்லாத பல அங்கத்தினர்களையும் நியமனம் செய்தார்கள். அத்துடன் 24-2-1936ல் ஐக்கிய மலாய் நாட்டுக்குத் தனியாக ஓர் பெடரல் செகரெட்ரியை நியமித்தார்கள். இப்போது இவரே ஹைகமிஷனருடன் ஐக்கியப்பட்ட சமஸ்தானங்கள் செய்யும் கடிதப் போக்கு வரத்து தஸ்தாவேஸ்களின் பொறுப்பாளியாக இருக்கிறார். இவரின் மூலமாக ஹை கமிஷனர் அரசியலை நடத்தி வருகிறார். இவர்களுடன் ஒத்துழைக்கவும், ஒவ்வொரு அரசியலின் காரியங்களைத் தனித்தனியே கவனிக்கவும் ஒவ்வோர் சமஸ்தானங்களிலும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகள் இருக்கிறார்கள். இவர்கள் எக்காரியங்களிலும் சுல்தான்மார்களுடன் கலந்து அரசியலை நடத்துவார்கள். இவர்களின்கீழ் பல சிவில் சர்வீஸ் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிறார்கள். அவ்விபரங்கள் அங்கங்கே கூறப் பெறும்.

பெடரல் சட்ட சபையின் பெருமை.

தலை நகரான கோலாலம்பூரில் இருக்கும் பெடரல் சட்ட சபையில் உத்தியோகப் பற்றுடைய 16 அங்கத்தினர்களும் உத்தியோகப் பற்றில்லாத நியமன அங்கத்தினர்கள் 12 பேரும் மொத்தம் 28 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இதே போல ஒவ்வொரு சமஸ்தானங்களுக்கும் தனித்தனிச் சட்டசபைகளும் உண்டு. அவை அங்கங்கே கூடும். இங்கு கூடும் பெடரல் சட்ட சபையின் தலைவர் ஹைகமிஷனர். இவருடன் நான்கு பிரிட்டிஷ் ரெஸிடெண்டுகளும் பெடரல் செகரெட்ரியும் சபையில் அமர்வார்கள். இவர்களுக்கு அடுத்த முறையே சட்ட ஆலோசனையாளர், (Legal Advisor) நிதி நிர்வாக ஆலோசனையாளர், (Financial Advisor) வைத்திய ஆலோசனையாளர், (Medical Advisor) தொழிலாளர்களின் லேபர் ஆபீஸ் தலைவர் (Controller of Labour இரயில்வே ஜெனரல் மானேஜர். (Railway General Manager) கல்வி இலாகா ஆலோசனையாளர் (Educational Advisor) சுங்க இலாகா கமிஷனர் (Commissioner of Customs) சீனர்களின் பாதுகாப்பாளர், (Protector of Chinese) விவசாய இலாகா ஆலோசனையாளர் (Agricultural Advisor) ஹை கமிஷனரால் நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றுடைய ஓர் அங்கத்தினர், ஹை கமிஷனரால் நியமிக்கப்பட்டு மன்னர் பிரானல் அங்கிகரிக்கப்பெற்ற உத்தியோ

கப்பற்றில்லாத 12 அங்கத்தினர்களும் அமர்ந்திருப்பார்கள். இச்சபை ஆரம்பிக்கும் போது சுல்தான்மார்கள் நால்வர்களும் வந்து கலந்து கொள்வர். இவர்கள் ஒவ்வொருவர்களின் ஆலோசனைகளையும் தெரிந்து முடிவுகட்டி பணப்பொறுப்பு மற்றவைகளில் ஒவ்வொரு அரசியலுக்கும் தனிப்பட்ட முறையில் திட்டங்கள் வகுத்து அதன்படி அரசியலை நடத்தி வருகிறார்கள்.

இச்சட்டசபையில் இந்தியர்களுக்காக ஓர் பிரதிநிதியும் உண்டு. இவர்களில் முதலாவதாக நியமிக்கப்பட்ட பிரதிநிதி லாயர். திரு. S. N. வீராசாமி ஆவர். இவர் பினாங்கில் பிறந்தவர். பினாங்கு பிரீஸ்கூலிலும், செயின்ட் சேவியர்ஸ் பள்ளிக்கூடத்திலும் கல்வி பயின்றார். சட்டப் பரீட்சைக்காக இங்கிலாந்துக்குச் சென்று தேர்ச்சி பெற்றார். கோலாலம்பூர் (சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு) அட்வோகெட் சொலிஸிட்டர் ஆனார். இவர் பேசும் வன்மை பெற்றவர். சட்ட ஆராய்ச்சியில் நிபுணர். உயர்ந்த குணமும், ஊக்கமும், உறுதியும் பெற்றவர். அதனால் பெடரல் கௌன்ஸிலுக்கு இவரையே இந்தியப் பிரதிநிதியாக கவர்ண்மெண்டார் நியமனஞ் செய்தார்கள். அத்துடன் சிலாங்கூர் ஸ்டேட் கௌன்ஸிலிலும் அநேக ஆண்டுகள் அங்கத்தினராக இருந்தார். இக்கௌன்ஸில்களில் அங்கத்தினராக இருந்து தேர்ச்சி பெற்ற இவரை சின்னாள் முன் ஐக்கிய மலாய் நாட்டின் சூப்ரீம் கோர்ட்டின் ஆக்டிங் ரிஜிஸ்ட்ராராக நியமித்துள்ளார்கள். அவ்வேலையை ஏற்று திறம்பட நடத்தி வருகிறார். இந்நாட்டில் மிக கௌரவம் வாய்ந்த இவ்வுத்தியோகத்தில் அமர்ந்துள்ள இவரால் இந்தியர்களுக்குப் பெரும் புகழுண்டு.

இவருக்குப் பதில் இப்போது பெடரல் சட்ட சபையில் இந்தியர்களின் பிரதிநிதியாக இருப்பவர் ஹானரபிள். மிஸ்டர். எஸ். ஆர். கிருஷ்ணன், ஜே. பி., எம். எப். ஸி., எம். எஸ். ஸி., எம். பி., பி. எஸ்., எல். எம். எஸ். ஆவர். இவர் சிங்கப்பூர் வைத்தியக் கல்லூரியிலும் ஹாங்காங் சர்வகலாசாலையிலும் படித்து டாக்டர் பரீட்சையில் தேறியவர். இவர் சிறம்பானில் இருந்து தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார். இவர் ஓர் சமாதான நீதிபதி. அத்துடன் நகரி செம்பிலான் ஸ்டேட் கௌன்ஸிலிலும் அங்கத்தினராக இருக்கிறார். சிறம்பானில் இந்துக்கோயில் மானேஜிங் கமிட்டித் தலைவராகவும், நகரி செம்பிலான் இந்தியர் சங்கத்தின் ஆதரிப்பாளராகவும், பல போர்டுகளின் அங்கத்தினராகவும் இருக்கிறார். சிறம்பான் ரோட்டரி கிளப்பின் தலைவராக இருந்தவர். இவர் உதார குணமும், புன் சிரிப்போடு கூடிய வதனமும், வாக்கு வன்மையும்

பெற்றவர். இவர் மலாயாவில் உள்ள இந்தியர்கள் காரியங்களில் பெருங்கவலை கொண்டு உழைப்பவர். இவரால் இந்திய மக்களுக்கு ஏற்படும் நலன்கள் பல. இவ்விருவர்களின் படங்களும் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது.

கோலாலம்பூரின் பெருமை

தமிழ்த்தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

"சிலாங்கூரும் பேராவுஞ் சேர்ந்த நகர்செம்
பிலான்பஹான் நான்கரசைப் பெற்ற—தலைநகராங்
கோலாலம் பூர்ப்பெருமை கூறுதற்குத் தண்டமிழே
சீலமுடன் முன்வந்து செப்பு"

நான்கு அரசியல்களுக்குப் பொதுவாகவும், சிலாங்கூர் சமஸ்தானத்துக்குத் தனிப்பட்ட முறையிலும் தலைநகராக விளங்குவது கோலாலம்பூர். இந்நகரம் ஓர் சானட்ரி போர்ட்டால் (சுகாதார நிலையம்) கவனிக்கப்படுகிறது. இங்கு 226 தெருக்கள் இருக்கின்றன. லாயர் ஆபீஸ்கள் 18 உண்டு. அவைகளில் "கே. கே பென்ஜமின், சந்திரன் அண்ட்பூக், ஜி. கே. நாராயணன், எஸ். எம். சர்மா, ஷாக்லிம் அண்டு ரமணி" என்ற ஆபீஸ்கள் இந்தியர்களுக்குச் சொந்தமானவைகள், தொடர்புள்ளவைகள் ஆகும். இவைகளோடு வியாபார நிலையங்கள் பலவிருக்கின்றன. அவைகளில் 42 மருந்துச்சாலைகளும், பல டாக்டர்களும், 58 பல் வைத்தியர்களும், 68 இன்சூரன்ஸ் கம்பெனிகளும், 329 ரப்பர்த் தோட்டங்களின் தலைமை நிலையங்களும், 68 ஈயச் சுரங்கங்களின் ஆபீஸ்களும், ரப்பர் ஆராய்ச்சிக் கழகமும் இருக்கின்றன. இம்மலாய் நாட்டின் ரப்பர் விளைவை நிர்ணயித்துக் கோட்டாமுறை விகிதப்படி கூபன்கள் கொடுத்துதவும் ரப்பர் கண்ட்ரோலரின் தலைமை ஆபீஸும் இங்கேயே இருக்கிறது. இந்நகர் மலாயாவின் மத்திய பாகத்தில் இருப்பதால் இந்நாட்டின் தபால், தந்தி, டெலிபோன் இலாகாவின் தலைமை தந்தி இன்சினீர் ஆபீஸும் (சிப் இன்சினீர்) இங்கேயே இருக்கிறது. இந்தியர்களின் பிரதிநிதியாக, இந்தியாக் கவர்ண்மெண்டாரால் அனுப்பப் பெறும் இந்தியன் ஏஜன்ஜி இருக்கும் ஆபிஜும் இங்கேயே இருக்கிறது. இதேபோல பல நிலையங்களின்

தலைமை ஆபீஸ்களைக் கொண்ட இந்நகரத்தின் அமைப்பு பார்ப்பவர்கள் கண்களுக்கு நல்விருந்தை அளிக்கிறது. இந்நகரத்தில் உள்ள தெருக்களில் பல சிறந்தவை. அவைகளில் ஜாவா ஸ்ட்ரீட், ஜாலன் ராஜா என்ற தெருக்களில் பல பெரிய கட்டிடங்கள் இருப்பதுடன் மாலை நேரத்தில் ஏற்றும் விளக்குகள் சந்திரன் ஒளியைத் தருகின்றன. இத்தெருக்களில் இருளைப் போக்க இருபுறமும் மின்சார விளக்குகள் உள்ள பல கம்பங்கள் உண்டு. அவைகளில் போடப்பட்டிருக்கும் "பல்ப்" புகள் லேட்புளுக் கலரில் போடப்பட்டிருப்பதே அதி அழகாக இருக்கிறது. இவ்வழகிய தெருக்களில் ஜாலன் ராஜாவின் ஓர் பகுதியில் கோலாலம்பூர் இரயில்வே நிலையம் இருக்கிறது. இந்நிலையமே எப். எம். எஸ். தலைமை நிலையம்.

எப். எம். எஸ். இருப்புப் பாதைகள்

இந்நாட்டில் போக்குவரத்து வசதியை அதிகமாக அளிப்பது எப். எம். எஸ். இரயில்வே. இந்த ரயில்வே திறக்கப்பட்டு 53 ஆண்டுகள் ஆகின்றன. முதன்முதலில் 1885ஷ ஜூன்மீ "போர்ட் வெல்த்" திலிருந்து "தைப்பிங்" கிற்கு 8 மைல் தூரம் பாதை திறந்து பரீட்சை பார்க்கப் பெற்றது. பிறகு 1886ஷ செப்டம்பர்மீ கோலாலம்பூருக்கும் கிள்ளானுக்கும் ஓர் பாதை திறக்கப்பட்டது. அப்போது கோலாலம்பூர் இரயில்வே நிலையம் ஓர் அத்தாப்பு (கூறை)க் கட்டிடமாக இருந்தது. 1891ல் சிறம்பான்—போர்ட்டிக்ஸன் பாதை திறக்கப்பட்டது. 1893ல் டெலுகான்சன்—தாப்பா ரோட் பாதை திறக்கப்பட்டது. 1899ல் பல இடங்களுக்குப் பாதை திறக்க வேலைகள் நடைபெற்றன. 1903ல் கோலாலம்பூர்—சிறம்பான், ஈப்போ—பிறை, புக்கெட்தீமா—சிங்கப்பூர் (டாங் ரோட்) பாதைகள் திறக்கப்பட்டன. 1905ல் சிறம்பான்—தம்பின், தம்பின்—மலாக்கா பாதைகள் திறக்கப்பட்டது. 1908ல் தம்பின்—செகாமெட், ஈப்போ—துரோனோ பாதைகள் திறக்கப்பட்டது. 1909ல் செகாமெட்—ஜோஹோர் பாரு பாதை திறக்கப்பட்டது. இப்பாதைகளுடன் பிறையில் இருந்து (பினாங்கு) ஜோஹோர் வரை செல்வதற்கு நேரான வழிகள் அமைக்கப்பட்டன. 1915ம் ஆண்டில் புக்கெட் மர்ட்டஜம்—அலோர் ஸ்டார் (கெடா) பாதையும் 1917ல் கிமாஸ் கோலப்பிலா பாதையும் திறக்கப்பட்டன. இத்துடன் பிறைக்கும் பினாங்

கீர்த்திவளர் கிள்ளானில் கிழமையால் அன்பர் பலர்
சேர்ந்தமைத்த தெய்வம் நிறை திருக்கோயில் நிலையமிதே.



Klang Temple.

தைப்பினில் அன்பரெலாம் தாம்வணங்க நகரத்தார்
மெய்ப்புகழ்சேர் வேலனுக்கு விருப்புடன மைத்தகோயில்.



Taiping Temple.

குக்கும் பிறைக்கும் இடையிலுள்ள நீர்ப்பரப்பைக் கடப்பதற்கும், ஜோஹோர்பாருக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலுள்ள நீர்ப்பரப்பை கடப்பதற்கும் கப்பல்கள் வைக்கப்பட்டன. இக்கப்பல்கள் பிடிப்பதற்காக பினங்கில் 1901ம் ஆண்டில் ஓர் இரயில்வேப் பாலமும், பிறையில் 1923ம் ஆண்டில் ஓர் கடல் துறைமுகமும் கட்டப்பட்டிருக்கிறது. ஜோஹோர்பாருக்கும் சிங்கப்பூருக்கும் இடையில் குறுக்கிட்டிருந்த நீர்ப்பரப்பையும் 1923ம் ஆண்டில் அடைத்து வழி திறக்கப்பட்டன. (88ம் பக்கம் பார்க்க) இப்பாலம் கட்டிய பிறகு 1932ம் ஆண்டில் சிங்கப்பூர் டாங் ரோட்டிலிருந்த இரயில்வே நிலையத்தை மாற்றி "தஞ்சோங் பாகா"ரில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

இப்பாதைகளோடு சயாம் இருப்புப் பாதையுடன் சேர்ப்பதற்காக 1918ம் ஆண்டில் அலோர்ஸ்டாரில் இருந்து பாடாங் புசார் வரை ஓர் பாதை திறக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடாங் புசார் இரயில்வே நிலையத்தின் பெயரை 6 மொழிகளில் எழுதப்பெற்றிருக்கிறது. இத்துடன் சிங்கப்பூரில் இருந்து டிரங்கானு, பாங்காக் செல்லும் கிழக்குக்கரை இருப்புப் பாதையும் 1931ல் திறக்கப்பட்டது. இப்பாதையில் பல பெரிய மலைகளைக் கடப்பதற்காக 9 குகைகள் இருக்கின்றன. இதேபோல தைப்பினுக்கும் பாடாங் ரங்காசுக்கும் இடையில் 4 குகைகள் இருக்கின்றன. இந்த இருப்புப் பாதைகளின் பெரிய பாலம் கிளந்தான் நதிமீது "தானுமேரா" வுக்கு அண்மையில் கட்டப்பட்டுள்ளவை. இப்பாலம் 1923ம் ஆண்டின் முற்பகுதியில் ஆரம்பித்து 1924ம் ஆண்டின் பிற்பகுதியில் முடிவுபெற்றது. இப்பாலத்தை அவ்வமயம் இருந்த கவர்னரின் பெயரால் "குலிமார்ட் பாலம்" என்று கூறப்பெறுகிறது. இவ்வாறு பாதைகள் விரிவு பெறவே பல நிலையங்களை அப்போதைக்கப்போது கட்டினார்கள். அவைகளில் கோலாலம்பூரில் இப்போதுள்ள அழகிய நிலையம் 1909ம் ஆண்டில் கட்டப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இந்நிலையம் இக்காலத்திலும் ஓர் ஓவியமாக விளங்குகிறது. இந்நிலையத்துக்கு அண்மையில் ஓர் பெரிய காரியாலயம் (ஆபிஸ் கட்டிடம்) கட்டப்பட்டிருக்கிறது. இப்போது இந்நிலையத்தின் கீழ் 213 இரயில்வே நிலையங்களும் 76 தங்குமிடங்களும் (Hold) இருக்கின்றன. இவ்விருப்புப் பாதை இதுவரை 1,321 மைல் நீளம் போடப்பட்டிருக்கிறது. இந்நிலையத்து

க்குச் சொந்தமாக உள்ள இரயில் மற்றவைகளை முன்பே கூறப் பெற்றிருக்கிறது (45ம் பக்கம் பார்க்க) இவ்வண்டிகளையும் சாமான் களையும் உற்பத்தி செய்ய கோலாலம்பூர் "செந்தூல்" என்ற இடத் தில் ஓர் ஓர்க்ஷாப் (வேலை செய்யுமிடம்) இருக்கிறது. அங்கு பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், இவர்களும் இரயில்வே நிலையங்களில் வேலை செய்பவர்களுமாக 1920ம் ஆண்டில் 25,000 தொழிலாளர் இருந்தனர். இப்போது 11,643 தொழிலாளர் இருக் கின்றனர். இவர்களில் இந்தியர், இலங்கையர் 8,911. மலாயர்கள் 1570. சினர்கள் 868 பேர்களாவர். இவர்களுக்கு மேலுள்ளவர் ஆங்கிலேயர், யூரேஷியர்களாவர். இந்நிலையத்தின் பொறுப்பும், வரவு செலவுகளும் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்தவைகளே. இந் நிலையம் இருப்பது கோலாலம்பூர் நகருக்கே ஓர் தனிச் சிறப்பாகும்.

பாங்குகளின் பலன்

பல தலைமை நிலையங்களும் உள்ள கோலாலம்பூரில் பண லேவா தேவியைப் பெருக்குவது பாங்குகள். அவைகளில் "சார்ட்டர்ட் பாங், ஒங்கம் ஷங்காய் பாங், மெர்க்கண்டைல் பாங், கொங்யிக் பாங். ஓவர்சிஸ் சைனிஸ் பாங், பாங் ஆப் மலாயா, இந்தியன் ஓவர்சிஸ் பாங்" (இப்பாங்கின் விபரம் முன்பே கூறப்பெற்றிருக்கிறது. 99ம் பக்கம் பார்க்க) என எழு பாங்குகளும் பெருத்த லேவாதேவி செய்பவைகளாகும். இவைகளைப்போல "செட்டிநாடு பாங்" "மு. சித. மு. பாங்" என்ற இரு பாங்குகளும், லேவாதேவித் தொழிலைச் செய்பவர்களான நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் கடைகள் பலவும் அம்பாங் ஸ்ட்ரீட்டில் இருக்கின்றன. இவர்கள் இங்கு குடியேறி 57 ஆண்டுகள் ஆகின்றன. இவர்களில் பெரும் சொத்துகளுக்கு உடையவர்கள் அதிகம். இவைகளில் "செட்டி நாடு பாங்" என்பது சர்ச் ஸ்ட்ரீட்டில் இருக்கிறது. இதன் மூல தனம் 3 கோடி ரூபாய். இதற்கு தலைமை ஆபீஸ் கானாடுகாத்தான் (செட்டிநாடு) புதுக்கோட்டையில் இருக்கிறது. இதன் கிளைகள் பல நாடுகளில், பல தேசங்களில் இருக்கின்றன. இதன் அதிபராக, (சேர்மேனாக) விளங்குபவர், ராஜா. ஸர். அண்ணாமலை செட்டியாராவர். இவரை உலகத்தில் அறியாதாரிரார். பலரும் அறியும் பண்புடன் புகழ்பெற்ற இவர் எத்தகைய சிறப்பு வாய்ந்தவர்?

இராஜா ஸர். சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டியாரவர்களின் வாழ்க்கை வரலாறு

தமிழ்த்தாய் வணக்கம்.

(நேரிசை வெண்பா)

" கற்றவர்கள் போற்றிடனற் கானாடு காத்தானி
லுற்பவித் தெவ்வுலகு மோங்குபுகழ்—பெற்றவரா
மண்ணா மலைவள்ள லாற்றுதொண் டன்பருக்கு
ஒண்டமிழே முன்னின்று ஓது "

பல்வளம் செறிந்தது பாண்டிநாடு. இந்நாட்டையே சிவலோகம் என்றார் திருவாசகத்தில் மணிவாசகர். இப்பகுதியிலேயே முதலில் மக்கள் தோன்றினர் என்கின்றனர் ஆராய்ச்சியாளர். அத்துடன் தென்னாட்டைப் பசுவின் பால் சொரியும் மடிக்காம்பென்கின்றனர் அறிஞர் சுந்தரம்பிள்ளை. அவர்,

" தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வாத வூரர் மொழிந்தனர் அன்றியும்,
தரணியே பசுவெனச் சாற்றலு மற்றதிற்
பரதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்
பால்சொரி சுரைதென் பாண்டி என்பது,
மேல் விளம்பாதே விளங்கும்..........,

(மனோன்மணீயம் 1, 1, 46—51)

கூறியபடி இவ்வுலகம் ஓர் பசு. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் காமதேனுவையும் ஒரு பசு வென்றே கூறுவர் அறிஞர். அத்தேனுவைப் போல விரும்புவார்க் குற்றவாறு, அவரவர் உழைப்புக்கேற்றவாறு பெருநிதி தரும் மண்ணைக்கொண்ட இவ்வுலகமும் ஓர் பேராவே யாகும். அதன் பரப்பை உற்று நோக்கி, படத்தை ஓர் பசுவடிவாக வைத்துப் பார்த்தால் அதன் பால் சுரக்கும்மடியாக நம் தாய் நாடும் (இந்தியா) பால் சொரியும் காம்பாகத் தென்னாடும் தோன்றும். இச்சிறப்பு வாய்ந்த தென்பாண்டி நாட்டில், தமிழ்ச் சங்கம் தோன்றிய தனிப்பெரு நாட்டில், இக்காலம் சிறந்து விளங்குவது கானாடுகாத்தான். இந்நகரில் பெருங்குடி வணிகர் மரபிற் றோன்றியவர் ! பெருநிதிக்குடையவர் ! பெரும் புகழ் பெற்றவர்

பேரறிஞர்! அறப்பணியாளர்! திருப்பணிச் செல்வர்! வருவிருந் தோம்பி வைகலும் வாழ்ந்தவர்! திரு. சா. ராம. முத்தய்யா செட்டியார். இவரின் புதல்வர்களில் மூன்றாவதாக 1881ஆ செப்டம்பர் மீ பிறந்தவர் திரு. அண்ணாமலை செட்டியார்.

சிறுவயதும் திருமணவாழ்க்கையும்

செல்வக் குடும்பத்திற் பிறந்த இவர் சிறுவயதில் அக்கால முறைப்படி கல்விபயின்றார். பள்ளியிற் பயலும் போதே இவரின் கூரிய மதியையும், குணத்தின் உயர்வையும், சுருசுருப்பின் தோற்றத்தையும், சோம்பலின்மையையும் கண்ட தந்தையார் இவர் எதிர் காலத்தில் இராஜா வாவார் என்பதை எண்ணி மிகச் செல்வமாக வளர்த்தார். இவருக்கு வணிகரின் முறைப்படி சிறு பிராயத்திலேயே செல்வத்திற் பிறந்து, செல்வத்திலேயே வளர்ந்த திருநிறை செல்வி சிதை ஆச்சியைத் திருமணம் செய்தார்கள். இவர்கள் இருவரும் இல்லற தர்மத்தை இன்பமாய் நடத்தினார்கள். நடத்தியும் வருகிறார்கள். இவ்வாழ்க்கையிற் சிறந்த இவரும் தந்தையாரைப்போல தங்கள் குலத்தொழிலைத் தக்கமுறையில் நடத்தினர். இவரின் முன்னோர்களைப்போல பல அறப்பணிகளையும் செய்தார். அவர்களால் உண்டாக்கப்பட்ட அறநிலையங்களையும் பாதுகாத்ததோடு அதிகமாகவும் ஆக்கினர். கரூர், சிதம்பரம் திருப்பணிகளைச் செப்பனிட்டார். காசி முதல் கன்னியா குமரிவரையுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் தர்மநிலையங்களிற் பலவற்றை மேல் பார்த்தார். இவைகளோடு தன்னை நாடிவரும் எவருக்கும் இல்லை என்னாது கொடுத்துதவினர். அதனால்,

"இல்லையென் றேற்பாருக் கித்தரையி லெப்பொருளு
மில்லையென் றோதாம லீத்துவக்கு—மேரரசர்
நன்னாரை வென்றுபுகழ் நாட்டு மிராஜாசர்
அண்ணா மலைச்செட்டி யார்"

பெரும் புகழும் பெற்றார். இவ்வாறு பல அறப்பணிகளையும் ஆற்றும் அண்ணாமலை செட்டியார், பண்டைய முறைகளோடு புது உலக வாழ்விலும் புகுந்தார். அதற்காக சென்னையிற் பலகாலம் தங்கினர். அவ்வமயம் ஆங்கிலத்தில் அதிகப் பயிற்சி பெற்றார். அத்துடன் ஆங்கில வரசின் திறத்தை உணர்ந்தார். அவ்வரசியலை நடத்தும் அதிகாரிகளுடன் நட்புக்கொண்டார். பல நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். வாழையடி வாழையைப்போல வணிகரின் மர

யினில், பெருங்குலத்துதித்து, அவர்களைப்பன்பற்றித் தொழிலைப் பெருக்கி, அறப்பணிகளை யாற்றிச் சிறப்புற்று விளங்குவதோடு, வருநிதி பிறர்க்கார்த்தும் இவரின் வள்ளற்றன்மையைத் தெரிந்த கவர்ண்மெண்டார் 1912ம் ஆண்டில் "ராவ் பஹதூர்" பட்டத்தை அளித்தனர், இப்பட்டங்களும் செல்வ வளமும் சேர்ந்தால் என்ன ஆகும்?

பட்டங்களின் பண்பு


இப்பட்டங்கள் சிலருக்குப் புகழையும் பலருக்கு இகழ்வையும் கொடுக்கும். எவ்வாறு? பொருள் எவ்வாறிருககும் என்றுணராத வர்க்குப் பெருநிதி கிடைத்தால்! அதனருமையை உணராத ஒருவரிடம் பொருளிருந்தால்! அத்துடன் பட்டம் பதவிகளும் கிடைத்தால்! அவர்கள் அதன் பலனைப் பெற அறியார்கள்! அதனால் கர்வத்தையே கொள்வார்கள்! அவர்களுக்கு முன்பு கேட்டுக்கொண்டிருந்த காதுகளும் இறுமாப்பால் கேளாததாகி விடும்! விழித்திருக்கும் கண்களும் பெருமையால் தெரியாததாகி விடும்! இவ்வாறே உலகில் பலரைக் காண்கின்றோம். இவரோ அக்குலத்தைச் சார்ந்தவரன்று. அதை எவ்வாறு உபயோகிப்பது என்பதை உணர்ந்த உயர்குலத்தைச் சேர்ந்தவர். ஆகவே தனது சரியான வயதில் 31வது ஆண்டில் பெற்ற "ராவ் பஹதூர்" பட்டத்தை, அதனால் உண்டான செல்வத்தை, "நிதிபெற்றோர்க்கழகு நீள்பொருள் வளர்தல்" என்ற முதுமொழிப்படி பெருக்கினர். பெருக்கி "வணிகர்க் கழகு வரும்பொரு ளீட்டல்" என்ற முதுமொழிப்படி வருவாயை அறப்பணிகளில் செலவிட்டார். சென்னையில் ஓர் மாளிகையை வாங்கி "வில்லிங்டன் மாளிகை" என்ற ஓர் சுகாதார நிலையமாக்கினர். தங்கள் ஊரில் (கானாடுகாத்தானில்) "லேடி பெண்ட் லண்ட்" ஆஸ்பத்திரி என்ற ஓர் பிரசவ வைத்திய சாலையை நிறுவினர். (இவ்வைத்தியசாலையில் இன்று செட்டியார் நாட்டுமக்கள் பெரும்பலன் பெறுகின்றனர்) இவைகளால் புகழ் பெற்ற இவரை 1916ம் ஆண்டில் சென்னை சட்டசபையில் ஓர் அங்கத்தினர் ஆக்கினர்கள். அச்சபையில் இருந்து பலதொண்டாற்றிய இவர் பிறகு 1, 2, 3வது அரசாங்க சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராகவுமிருந்தார். இவைகளில் தேர்ச்சிபெற்ற இவரின் உதார குணத்தையும், உறுதி நிலையையும், எதற்கும் அஞ்சாதிருக்கும் இயல்பினையும், எதிரிகளுக்கு இடங்கொடாது எக்காரியங்களையும் செய்யும் துணிவையும், மாற்றாரை எப்படியும் வெல்லும் திறத்தையும், மாண்புமிக்க புகழையும் கண்டு உணர்ந்த பல்லோர் இவ

ரைப் பின்பற்றினர். இத்துடன் கவர்ன்மெண்டார் இவருக்கு 1922ம் ஆண்டில் "திவான்பஹதூர்" பட்டத்தையும், 1923ம் ஆண்டில் "ஸர்" பட்டத்தையும் அளித்தனர். இப்பட்டங்களைப் பெற்ற இவர் இதுவரை தன் குடும்பத்துக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து விட்டார். தன்னைச் சார்ந்தோருக்கும் பல நலனைத் தேடி வைத்து விட்டார். முன்னோர்களின் தர்மங்கள் குறைவற நடக்கவும் ஏற்பாடு செய்துவைத்து விட்டார். இனிச்செய்ய வேண்டியது என்ன ? உலகத்துக்கோர் நன்மை. உலகத்துக்கு எப்படி நன்மை செய்வது ?

பல்கலைக் கழகத்தின் பயன்

உலகம் பயன்பெற முன் காலத்து அறிஞர்கள் கோயில்களைக் கட்டினார்கள் ! குளங்களை வெட்டினார்கள் ! சத்திரங்களை வைத்தார்கள் ! சாவடிகளைக் கட்டினார்கள் ! அவைகளால் இக்காலத்தில் பக்தி மார்க்கத்தைப்பற்றிய சிலரும், ஒழுக்கத்தாலுயர்ந்த சிலருமே பலன் பெறமுடியும். அது அரிது. மற்றவர்களுக்கு இக்காலம் அவைகள் மாண்பளிக்கவில்லை. அம்மாண்பைப் பெறவும், ஒழுக்கம் உயர் குணம் பெறவும் உறுதுணை செய்வது கல்வி. அக்கல்வியிலும் பல வகை உண்டு அவைகளை நல்ல முறையிற் கற்றுத்தேர்ந்தவர்களையே இக்கால உலகம் அறிஞர் என்றேற்கிறது. இவ்வறிஞர்களை வெளியாக்குவது பல்கலைக் கழகங்கள். மற்ற உயர்தரப் பள்ளிகளிற் படிக்கும் மாணவர்களும் அறிஞராகலாம். அதில் மொழி, இரு மொழிப் புலமையும் சில அறிஞர்களின் கூட்டுறவுமே சேரும். பல் கலைக் கழகப்படிப்போ அவ்வாறன்று. அங்கு பலக்லைகளும் உண்டு. பன் மொழிகளில் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் கூடுவர். பல தேய மக்களும் வருவர். அதனால் பல துறைகளிலும் பயிலவியலும். அத்தகைய பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ எண்ணினர். இவ்வெண்ணம் யாருக்கு வரும் ? பல்கலைக் கழகம் நிறுவப் பெரும் பொருள் வேண்டும் ! பராமரிக்க நிதிக் குவியல் வேண்டும் ! ஆகவே இவ்வெண்ணத்தை சமஸ்தானாதிபதிகளும் கூடக் கனவிலும் கருதார் ! அவர்களைப் போன்றவரா நமது அண்ணாமலை வள்ளல் ? அன்று ! அன்று !! உதாரகுணம் பெற்ற உத்தமர் ! பெருநிதி பெற்ற பெருந்தகை ! எண்ணிய எண்ணியாங் கெய்தும் திண்ணியர் ! ஆகவே சென்னைக் கவர்ன்மெண்டாருடன் கலந்தாலோசித்தார். இவரின் குறிப்பையும், கொடைத்தன்மையையும் உணர்ந்த கவர்ன்மெண்டாரும் ஏற்றனர். அதன் படி 1928ம் ஆண்டில்,

மருவார் ஈப்போவில் மாதண்ட பாணிக்கென்று
ஒருமையாய் நகரத்தார் உண்டாக்கிய கோயில்.
1904-ம் ஆண்டில் நிறுவியது.



Ipoh Temple.

" நற்றமிழோ டாரியமிந் ஞானமுத லாங்கிலமுங்
கற்றிடவே மக்களுக்குக் கட்டிவைத்தார்—கற்பகம்போ
லார்ந்தபெருந் தன்மைபெராம் அண்ணாமலைநகரி
லோர்பல் கலைக்கழக மோர்ந்து."

அண்ணாமலை நகரில் ஓர் பல்கலைக் கழகத்தை நிறுவினர்.

அண்ணாமலை நகரின் அமைப்பு

இந்நகர் சிதம்பரத்துக்கு அண்மையில் இருக்கிறது. இரயில்வே நிலையத்தில் இருந்து ஒரு மைல். அந்நிலையத்தில் சிதம்பரம், அண்ணாமலை நகர் என்ற இரு பெயரும் எழுதப்பட்டிருக்கிறது. அங்கிருந்து நேர்வழி. அவ்வழியாகச் சென்றால் முதலில் தோன்றுவது கழகத்தை நடத்தும் தலைமை அதிகாரி (வைஸ்சான்ஸலர்) வசிக்கும் ஓர் உன்னத பங்களா. அதற்கண்மையில் பல ஆசிரியர்கள் வசிக்கும் கட்டிடங்கள்! அவைகளைத் தாண்டிச் சென்றதும் உயர்ந்து நிற்கும் கழகத்தையும், செனெட் ஹாலையும், மாணவர்கள் தங்குமிடங்களையும் (Boarding) இயற்கைத் தோற்றங்களையும், செயற்கை வளங்களையும், விளையாட்டு மைதானங்களையும் காணலாம். அதற்கு மேல் தோன்றுவது திருவேட்கள நாதரின் திருக்கோயிலும், குளமும், பல கட்டிடங்களும். இங்கும் பல ஆசிரியர்களும் மற்றவர்களும் வசிக்கிறார்கள். இந்நகரின் நாற்புறமும் செந்நெற்கதிர்களை, தினம் வளர்த்துதவும் வயல்களும், பல ஓடைகளும் சூழ்ந்திருப்பதும் கொஞ்சத்தொலைவிலுள்ள கடற்கரையின் தோற்றமும் காண்பவர் கண்களுக்கு அழகையும், கருத்துக்கு மகிழ்வையும் தரும். இச்சிறப்பு வாய்ந்த அண்ணாமலை நகருக்குச் சென்றால் எதைப் பெறலாம்?

அண்ணாமலையும் ஆர்கல்விக் கழகமும்

இந்திய நாட்டின் எல்லையைக் குறிப்பது! எதற்கும் அஞ்சாது உயர்ந்து நிற்பது! இன்றுவரை அதன் உச்சியை எவரும் காணு திருப்பது! இமயம். அவ் இமயத்திலும் சிறந்தது பொதிகை. இதை,

" எல்லா மாகிய கண்ணுத லிறைவனும்
பல்லா யிரத்த தேவரும் பிறரும்


நிலைபெற நின்ற பனிவரை தலையின்
ஒருதலை யாக, உருவஞ் சிறிய
குறுமுனி தனியா யுறுமலை மற்றோர்
தலையாய்ச் சமமாய் நின்றதேல், மலைகளில்
மலையமோ அலதுபொன் வரைபோ பெரிது ?

(மனோன்மணீயம் 1, 1, 52—58)

என்று அறிஞர் சுந்தரம் பிள்ளை விளக்கியபடி கைலயங்கிரி என்று கூறப்பெறும் பனிவரையில் சிவபெருமானுடன் மற்றத் தேவர்களும் கூடியபொழுது வட பாகத்திலுள்ள அம்மலை தாழ்ந்தது. தென் பாகத்துள்ள பொதிகையுடன் கூடிய பரப்புகள் உயர்ந்தன. அதைச் சமனுக்குவதற்காக அகத்தியர் வந்து பொதிகையில் அமர்ந் தார் என்பது அறிஞர் கருத்து. அப்பொதிகையினின்றுமே தமிழ்ப்பிறந்தது. என்பதை யாரும் ஏற்பர். இதை “ பிறந்ததெங் கள் பிரான் மலையத்திடை ” என்று சேக்கிழாரும் சுந்தரர் புராணத் தில் கூறி இருக்கின்றார். தமிழை வளர்த்துத் தனிப்பெருமை கொள்வது பொதிகை. இப்பொதிகையினும் உயர்ந்து வளர்ந்த இன்னும் பல மலைகள் தென்னாட்டில் உண்டு. அவைகளில் சிறந்தது திருவண்ணாமலை. அம்மலைக்கும் நமது அண்ணாமலை வள்ளலுக்கும் பல தொடர்புண்டு. அம்மலையிற் குடிகொண்டு, அடிவாரத்திற் கோயில் கொண்ட இறைவனுக்கும், அங்குள்ள பல அறநிலையங் களுக்கும் பல பொருள் கொடுத்துதவியவர்கள் இவரின் குடும்பத் தார். அப்பற்றுக்கொண்டே இவருக்கும் அண்ணாமலை என்ற பெய ரைச் சூட்டினர். இத்தனிச்சிறப்பு வாய்ந்த திரு. அண்ணாமலையின் பெருமைகளை அண்ணாமலை நகரிலும் காணலாம்.

திருவண்ணாமலையின் அடிவாரத்தில் உள்ளது அருணாசலேஸ் வரர் கோயில். இவ்வாயத்தின் நாற்புறமும் கட்டப்பட்டுள்ள கோபுரங்கள் வானளாவி நிற்கின்றன ! அவைகளில் உள்ள சிற்பங் களின் ஒவியம் செப்புந் தரமன்று! இவ்வாலயத்தில் நடக்கும் விழாக் களில் திருக்கார்த்திகை சிறந்தது. அன்று மலையின் உச்சியில் ஓர் தீபம் ஏற்றுவார்கள் ! பெருத்த மழையும் அணைக்க முடியாத அத் தீபத்தின் ஒளி பலமைல் தூரம் பரவும்! அதனால் எங்கும் புற இருள் மறையும் ! இதன் உட்கருத்தை உணர்ந்த பலரின் அஞ்ஞான இரு ளும் நீங்கும் ! அங்கு பல துறவிகள் வாழ்கின்றனர் ! அவர் களிடம் பயிற்சி பெறப் பல மாணக்கர்களும் இருக்கிறார்கள் ! அவர்களால் மக்கள் ஞானத்தைப் பெறுகின்றனர். அவைகளுக்

ஈப்போ நகரத்தார் பள்ளிக்கூடம்.



Ipoh Chettiars School.

கொப்ப இவ்வண்ணாமலை நகரும் விளங்குகிறது. இந்நகருக்குள் திருவேட்களக் கோயிலிருக்கிறது. இதர்கண்மையிலுள்ளது சிதம் பரம் கோயில். அதில் தில்லை நடராஜன் சித்தாந்தச் செம்பொருளை விளக்கித் திருநடனம் செய்கின்றான். அவ்வாலயத்தின் ஓவியத் தைச் செப்புந்தரமன்று. அதன் தத்துவங்களை விளக்குவது அண்ணாமலை நகரில் அமைந்த பல்கலைக் கழகத்தின் தமிழ்மொழி. அப்பெருமையைப் பெற்ற கழகத்தில் தினப்படி கல்வி என்னும் ஞானவிளக்கை ஏற்றுகிறார்கள். அதற்காகப் பல ஆசிரியர்கள் வாழ்கின்றார்கள்! பல மாணவர்கள் படிக்கின்றார்கள்! ஞானத்தைப் பெறுகின்றார்கள்! இவ்வாறு ஞானத்தைப் போதிக்கும் கல்வித் துறைகள் பலவும் சிறந்துவிளங்கினாலும் தமிழ்மொழி மணம் தனிப் பெருமை கொண்டிருக்கிறது. அச்சிறப்பால் சங்கம் வளர்ந்த தமிழ் நாட்டின் மேல் அண்ணாமலை வள்ளலுக்கு உள்ள பற்றுதலைக் காட்டு கிறது. இத்தமிழ் மொழியைக் கற்றுப் பண்டிதப்பட்டம் பெறு வதற்காக 80 மாணவர்களுக்குமேல் படிக்கிறார்கள். இவர்களுக்கு இலக்கண, இலக்கியங்களைப் போதிக்கவும், பண்டைய இலக்கியங் களை ஆராய்ந்து பல நூல்களை வெளியிடவும் பண்டிதப்பட்டம் பெற்ற 12 தமிழ் ஆசிரியர் இருக்கிறார்கள். இவர்களில் பண்டித மணி. கதிரேசன் செட்டியாரும், பண்டித லெ. ப. கரு. இராம நாதன் செட்டியாரும் வணிகர்களாவர். இவர்களில் பண்டிதமணியே இவ்வமயம் தமிழ்ப் பேராசிரியர் (தலைமை அதிகாரி) ஆக இருக் கிறார். இதைப்போல பல மொழிகளும், சங்கிதமும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும், வைத்திய முறைகளும் கற்றுக்கொடுக்கப்பெறு கிறது. இப்பல்கலைக் கழகத்துக்கு இதுவரை சுமார் 50 லட்ச ரூபாய் கொடுத்துதவி இருக்கிறார் அண்ணாமலை வள்ளல். இவரின் வள்ளற் றன்மையையும், கொண்டு செலுத்தும் முறையையும் உணர் ந்த கவர்ண்மெண்டார் இவருக்கு 1929ம் ஆண்டில் "இராஜா" பட்டத்தைக் கொடுத்தார்கள். இப்பட்டத்தை இவர்கள் குடும்பத் தினர் பரம்பரையாய் அநுபவிக்கும் பெருமையையும் அளித்தார் கள். இப்பட்டம் பெற்றதிலிருந்து இராஜாவான இவரின்வாழ்க் கைத்துணைவியார் இராணி சீதை ஆச்சியானர். இப்பட்டத்துடன் சென்னைப் பல் கலைக் கழகத்தின் செனெட் சபையில் இவருக்கு இருந்த அங்கத்தினர் பதவியையும் ஆயுள்வரை நீடித்திருக்கச் செய் தார்கள். இவரால் நிறுவப்பெற்ற பல் கலைக் கழகத்தில் இப்போது தலைமை அதிகாரியாக (Vice Chancellor). இருப்பவர் ரைட்

ஹானரபிள். வி. ஸ்ரீனிவாச சாஸ்திரியார். பி. ஸி. ஆவர். இவர் இந்தியாவின் பிரதிநிதியாக சின்னுள்முன் மலாயாவந்து சென்றவர். இவரை உலகம் அறியும். இவரின் நிர்வாகத்தில் பல்கலைக் கழகம் சிறப்புற்றோங்கி விளங்குகிறது.

செட்டிநாடு பாங்கின் சிறப்பு.

"செந்தமிழும் ஆங்கிலமுந் தேர்ச்சிபெறக் கற்றதனுற்
றந்தொழிலைப் பாங்முறையிற் றான்மைந்தா—ரிந்திரன்போல்
மன்னுபுக ழண்ணு மலைவள்ள லிவ்வுலகில்
நன்னிலஞ்சே ரூர்பலவு நாடி."

இராஜாவான இவர் செல்வம் நிலையற்ற தென்பதை உணர்ந்தவர். ஆங்கிலமும், தமிழும் நன்கு கற்றவர். இம்பீரியல் பாங் ஏற்பட்ட காலத்தில் இருந்து 1934-ம் ஆண்டுவரை அதன் கவர்னராக இருந்தவர். அதனுல் தங்கள் குல முறைப்படி செய்து வந்த தொழிலைச் சீர்ப்படுத்த எண்ணினுர். தங்கள் தொழில் உள்ள நாடுகளான இலங்கை, பர்மா, சயாம், கொச்சின் சைனு, (சைகோன்) சுமத்திரா மற்ற இடங்களுக்கும் சென்ருர். இங்கும் (மலாயாவுக்கும்) வந்தார். (மலாயாவுக்கு மும்முறை வந்துள்ளார். கொஞ்ச நாள் முன் வந்தபோது மலாயா மாணவர்கள் இருவருக்கு தங்கள் பல்கலைக் கழகத்தின் ஸ்காலர்ஷிப் அளித்தார்) இவைகளுடன் உலகத்தின் பல பாகங்களிலும் சுற்றினுர். இத்திறம் வாய்ந்த இவரிடம் நிர்வாகத் திறனும் மிகுதி. அதற்காக ஒவ்வொரு நாளும் சுமார் 14 மணி நேரம், காரிய மிருந்தால் 18 மணி நேரங்கள் கூட உழைக்கும் வன்மையும் உண்டு. அதனுல் ஒவ்வொன்றையும் நேரிற் கண்டார். தங்கள் தொழிலை பாங் முறைப்படி அமைத்தார். அம்முறைப்படியே இன்று பல இடங்களின் லேவாதேவியும் நடைபெற்றுவருகிறது. இவர் பாங் நிறுவியபின்பே பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. அதனுல் அங்குள்ள இந்தியர்களுக்குப் பல இடுக்கண்கள் வருமென்று செட்டியார்கள் கருதினுர்கள். அதற்காக லண்டனுக்குத் தூது அனுப்ப நினைத்தார்கள். தூது செல்வது யார்?

"இதனை இதனுல் இவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை இவன்கண் விடல்"

என்ற குறள்ப்படி இவரே சென்று முடித்து வரவேண்டுமென்று

பெருமைசேர் பேராவிற் பெற்றிதரும் வேலனுக்கு
ஒருமையாய் நகரத்தார் உண்டுசெய்த திருக்கோயில்.



Perak Chettiars Temple.

கேட்டனர். பர்மாப் பிரிவினையால் இவரையோ, இவர் தொழிலை யோ அதிகம் பாதிக்காது. ஆயினும் தனது நாட்டுமக்கள், சமுகத் தின் நலங்கருதி அதை எற்று லண்டனுக்குச் சென்றார். அவ்வமயம் தனது வாழ்க்கைத் துணைவி இராணி சீதை ஆச்சியையும் அழைத் துச் சென்றார். அங்கு இந்தியா மந்திரியையும், மன்னர் பிரானையும் கண்டு பேசி சில நலன்களைப் பெற்றார். அப்போது அறப்பணி யாலும், செல்வச்சிறப்பாலும், அறிவின் மேன்மையாலும், உழைப் பின் உயர்வாலும் இராஜாப் பட்டத்தைப் பெற்ற இவரையும் இரா ணியையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இராஜாவும் இந்தியாவின் சக்கரவர்த்தியுமான ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் அவரின் வாழ்க்கைத் துணைவியாரான மேரி ராணியாரும் தங்கள் பர்க்கின்ஹாம் அரண் மனையில் வரவேற்று விருந்தளித்தனர். அவ்விருந்தோடு பர்மா வாழ் மக்களுக்கும் பல நலன்களை இவர் பெற்றுவந்ததனால்,

"பாதிக்கும் வாணிபரைப் பர்மாப் பிரிவினையென்
றோதிடவே லண்டனுக்கு ஒண்மதிசேர்—தூதினராய்
அன்றுசென்று ராரவமுட னண்ணா மலையதனா
லின்றங்கு துன்பங்க ளில்."

துன்பங்கள் பல குறைந்தது. இதேபோல செட்டியார்களுக்கு வேண்டிய பல நலன்களை இன்றும் செய்து கொண்டே இருக்கிறார்.

மக்கட் பேறு

உலகில் வாழும் மக்கள் பல செல்வங்களைப் பெறலாம். அவை கள் முயற்சியால் கைகூடும். அம்முயற்சியாலும் கைகூடாதது மக்கட் பேறு. இதை,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"

என்றார் வள்ளுவர். அவர் கூறியபடி அப்பேற்றைப் பெறு வது பிரயாசை. ஒருவர் மக்கட் பேறு பெற முயற்சிப்பர். இறைவ னருளும் கூடும். மக்களும் கிடைத்து விடுவர். கிடைத்தாலும் அவரால் பெறக்கூடிய பேற்றை அடைவது துர்லபம். எதனால்? தன்னைப்போல சேயும் ஆகவேண்டுமெனத் தந்தை விரும்புவான். மகன் அதற்கிணங்க நடக்கமாட்டான். இருவர், மனமும், கொள்கையும், அறிவும் வேற்றுமைப்படும். அதனால் பல முரண்க

ளேற்படும். அவ்வாறு எற்பட்டால் என்ன ஆகும்? அத்துடன் செல்வம், அறிவிற் சிறந்த ஓர் தந்தைக்கு மந்த புத்திபுடைய மகன் ஒருவன் தோன்றினல்! அம்மகனல் தந்தை பெறுவது யாது? சொல்லவும் வேண்டுமோ? அதனல்தான் எச்செல்வத்தைப் பெற் ருலும் மக்கட் பேற்றைப் பெறுவதருமை. அப்பேற்றையும் அறி வுடை மகனெருவனைப் பெற்றுவிட்டால் அதற்குமேல் வேறென்றும் வேண்டுவதில்லை என்றும் கூறினர். அவர் கூறியதற்கேற்ப பல செல்வங்களையும் பெற்ற நமது அண்ணமலை வள்ளல் மக்கட் பேற்றி லும் உயர்ந்து விளங்குகிறுர். இவருக்கு ஆண் மக்கள் மூவரும் பெண் மக்கள் நால்வரும் உண்டு. இவர்களின் மூத்த மகனே குமார ராஜா. முத்தய்யா செட்டியார். இவர்,

"மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னேற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்ற குறளுக் கொப்ப இவரைப் பெற்ற தந்தை என்ன தவம் செய் தாரோ! என்று பலரும் வியப்புறும் வண்ணம் சிறந்து விளங்கு கிருர். இவர் முறைப்படி கற்று B. A. பட்டம் பெற்றவர். இவர் சென்னையில் பல பதவிகளைப் பெற்றவர். இவர் சென்னை கார்போ ரேஷனின் தலைவராய் இருந்த தருணமே "மேயர்" என்ற பட்டத் தைப் பெற்றது. சென்னையின் முதலாவது மேயர் இவரே. மறு முறை ஓராண்டும் மேயராக இருந்தார். கொஞ்சநாள் முன் சென்னை அரசாங்க மந்திரிகளில் ஒருவராகவும் இருந்தார். இப்போதும் சென்னை சட்ட சபையின் அங்கத்தினராகவும், ஓர் பிர தம தலைவராகவும் இருக்கிறுர். தனயனின் புகழ் எங்கும் பரவத் தன் கண்ணுற் பார்க்கும் தந்தை அண்ணமலை வள்ளல். இவருக்கு,

"சென்னைக் கவர்ன்மெண்டிற் சீர்திகழும் பட்டமெலாந்
தன்னைநேர் மூத்தமகன் தான்பெற்று—முன்னேற
அன்புடனே கண்டிட்டா ரண்ணு மலைவள்ளல்
பின்பவர்க்கு வேண்டுவதென் பேறு"

இவ்வுலகில் இனி எச்செல்வம் வேண்டும்? இவர் மருமகன்களில் ஒருவர் இராமநாதபுரம் ஜில்லாப் போர்டு தலைவராகவும், ஒருவர் இரங்கூன் கார்போரேஷனின் அங்கத்தினராகவும் இருக் கிறுர்கள்.

இராஜ வாழ்க்கையின் இன்பம்

இராஜப் பட்டத்தைப்பெற்ற இவருக்கு அறிவின் திறமையைப் பாராட்டி "டாக்டர்" (அறிஞர்) என்ற பட்டத்தையும் கவர்ன்மெண்டார் கொடுத்தார்கள். இப்பட்டங்களைப்பெற்ற இராஜாவாகிய இவரும் இவரைச் சார்ந்தோரும் வாழ்க்கையிலும் இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவருக்குச் சொந்தமான கானாடுகாத்தான் மாளிகை மிகப்பெரிது. அரண்மனையைப் போன்ற அம்மாளிகையில் 600 பேர்கள் ஒரே காலத்தில் இருந்து உணவருந்துவதற்கேற்ற ஓர் ஹால் உண்டு. அம்மஹாலைப்போன்ற பல சிங்கார ஹால்களைக்கொண்ட அம்மாளிகையின் பரப்பு எவ்வளவென்பதைக் கூறவும் வேண்டுமோ ? இவர்கள் வாழும் அம்மாளிகையில் என்றும் விருந்தினர் நிறைந்திருப்பர். வரும் விருந்தினரை வரவேற்றுணவூட்டப் பல பொறுப்பாளிகள் இருக்கின்றனர். அவர்கள் இராஜாவை நாடிச்செல்வோர்க்கு அவர் வேறு எங்கு சென்றிருந்தாலும் உணவூட்டி அனுப்புவார்கள். இதேபோல சிதம்பரம், அண்ணாமலை நகர் மற்ற இடங்களில் உள்ள பங்களா, சத்திரங்களிலும் நடைபெறுகிறது. இவைகளுக்கு மேற்பட்டது சென்னையில் "அடையாறில்" உள்ள அரண்மனை. அவ்வரண்மனை அமைந்துள்ள இடத்தின் இயற்கையின் எழிலும், பசும் புற்றரையின் தோற்றமும், வானளாவி வளர்ந்த தருக்களின் வனப்பும், அவைகளுக்கு மேலுயர்ந்து மஞ்சு தவழும் மாடங்களைப்பெற்ற மாளிகையின் மாண்பும், செயற்கைக் குன்றுகளின் சிறப்பும், ஓடைகளின் உன்னதமும், மலர்களின் மணமும், வெளியில் நின்று காண்போரின் கண்ணைக்கவரும். உள்ளே சென்றால் உள்ளங்குளிரச் செய்யும். இங்கேயே குமாரராஜா மிகுதியாக வசிப்பார். அங்கு செல்பவரை அவர் வரவேற்று உபசரிப்பார். அங்கு யார் சென்றாலும் "பூவோடுசேர்ந்த நாரும் மணம்பெறும்" என்ற முதுமொழிப்படி அவர்கள் வாழ்க்கையின் இன்பத்தைப்பெறுவர். தாங்கள் பெறும் இன்பத்தைப் பலரும் பெறவேண்டுமென்று என்னும் இவர்களைப்போல வேறு எவரையும் காண்பதரிது. இத்தகைய இன்ப வாழ்வைப்பெற்று எல்லோருக்கும் நலனைச்செய்யும் அண்ணாமலை வள்ளல் எப்பலனைப் பெறுவர் ? கூறவா வேண்டும் ?

" இன்னறுங் கனிச்சோலைகள் செய்தல்
இனியநீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்ன ருள்ள தர்மங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக்கு எழுத்தறிவித்தல்."

என்று பாரதியார் கூறியபடி பல தர்மங்களைச் செய்வது புண்ணிய மாகும். இங்கு கூறப்பட்ட அறங்களில் பலவற்றையும் செய்தவர் இவர். ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதே போதும் என்கிறார் பாரதி யார். இவரோ தன்னால் நாட்டப்பட்ட பல்கலைக் கழகத்தில் பல ஏழை மாணவர்களைப் பண்டிதராக்குகிறார். அதனால் இப்பிறப்பின் பலனைப் பெற்றுக்கொண்டார். அறப்பணியாற்றியோர் மறுமையி லும் இன்பத்தை அடைவர் என்பது அறிஞர் கருத்து. அதனால் பல அறப்பணிகளையும் செய்துள்ள இவர் மறுமையின் பேரின்பத் தையும் பெறுவரென்பது உறுதி. இவ்வள்ளலும் இவரைச்சார்ந் தோரும் பன்னாள் வாழ இறைவன் அருள் பாலிப்பானாக.

"ஆர்ந்தநிதி கீர்த்திவள ரண்ணா மலைச்செட்டி
யாரில்லாள் மக்களுட னன்டினோர்—பேரன்மார்
மற்றவரு மிவ்வுலகில் மங்கைப்ங்கன் றன்னருளாற்
பெற்றிடுவர் வாழ்வுடனற் பேறு."

இச்சிறப்புவாய்ந்த இராஜாவின் உருவப்படம் இந்நூலில் முன் னணியில் வைக்கப்பெற்றிருக்கிறது.

கோலாலம்பூரில் இவரால் நடத்தப்பெறும் பாங்கைப்போ லுள்ள மற்றொரு பாங்கான "மு. சித மு. பாங்கும்" இவர் தமைய னார் குடும்பத்தைச் சார்ந்ததே. அக்குடும்பத்தில் இப்போதுள்ள வர் திரு. மு. சித. மு. சிதம்பரம் செட்டியார். இவர் ஆண்டில் சிறியவராயினும் அறிவிற் பெரியவர். ஆங்கிலம் நன்கு கற்றவர். சென்னையில் பல நிலையங்களின் அதிபராக இருப்பவர். இந்தியன் ஒவர்சிஸ் பாங்கின் மானேஜிங் டைரக்டரும் இவரே. இதேபோல பல பதவிகளைப் பெற்றவர். நிர்வாகத்திறனும் வாய்ந்தவர். இவர் களால் நடத்தப்பெறும் பாங்குகளாலும் நாட்டுக்கோட்டைச் செட்டி யார்களின் லேவாதேவித் தொழிலாலும் கோலாலம்பூரில் வாழும் மக்களும் பிறவூர் மக்களில் பல்லோரும் பலன் பெறுகின்றனர்.

செட்டியார்கள் சங்கமும் சிறந்த வாலயங்களும்

மலாயாவின் வாணிபத்தைப் பெருக்கப் பெரும்பங்கெடுத்தவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள். இவர்கள் ஐக்கிய மலாய் நாட்டில் பல இடங்களில் வாழ்கிருர்கள். இவர்களின் வாணிபத்தை வளர்க்க நான்கு தலைநகரங்களிலும் சங்கங்களும் இருக்கின்றன. (அவைகள் அங்கங்கே கூறப்பெறும்.) அச்சங்கங்களை ஒன்று சேர்த்து நடத்தவும், செட்டியார்களுக்கு வேண்டிய நலன்களைத் தேடவும் நான்குக்கும் தலைநகரான கோலாலம்பூரில் ஓர் "நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தக சங்கம்" (ஐக்கிய மலாய் நாடு) 18-1-1931ல் நிறுவப் பெற்றிருக்கிறது. இச்சங்கம் தோன்றக் காரணமாய் இருந்தவர்கள் பல அன்பர்கள். இச்சங்கம் அரசாங்கத்தாரிடம் செட்டியார்களுக்குக் கிடைக்கவேண்டிய அநுகூலங்களைத் தேடும். இந்நாட்டின் செழிப்புக்கும் சமுகத்தின் முன்னேற்றத்துக்கும் தொண்டாற்றும். இதன் இவ்வாண்டுத் தலைவர் முத்து. மு. முத்தய்யா செட்டியாராவர் (கோலக் கங்சார்.) இவரை மலாய் நாட்டில் பலருமறிவர். இவர் கோலக்கங்சாரில் பன்னுளாய் வாழ்பவர் சொத்துகளுக்குடையவர். பேரா சுல்தானுடன் பெருநட்புக் கொண்டவர். பந்தயக்குதிரைகளை நடத்துவதில் பயிற்சி பெற்றவர். சில குதிரைகளை வைத்திருந்து பரிசும் பெற்றவர். தினம் உற்சாகத்துடனும், சுருசுருப்புடனும், திடத்துடனும் இருப்பவர். இவருக்கு வயது 60க்கு மேலாகிறது. இன்றும் இளைஞர்களைப் போன்றே விளங்குகிருர்.

இச்சங்கத்தில் இவ்வாண்டுக் காரியதரிசிகள் இருவர். இவர்களில் அழ. ராம. கருப்பன் செட்டியார் கௌரவ காரியதரிசியாவர். வெ. ராமசாமி செட்டியார் B. A. நிரந்தரக் காரியதரிசியாவர். இவர் 2-3-1913ல் காரைக்குடியில் வணிகர் மரபில் தோன்றினர். எஸ். எம். எஸ். வித்தியாசாலையில் S. S. L. C. வரை பயின்ருர். அதற்கு மேல் சென்னைக் கவர்ன்மெண்ட் மாகாணக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் படித்தார். 1934ஆ மார்ச்சுமீ பரீட்சை எழுதி B. A. பட்டம் பெற்ருர். 1937ஆ பிப்ரவரிமீ மலாயா வந்தார். சங்கத்தின் காரியதரிசி பதவியை ஏற்று நடத்தி வருகிருர். இவர் இளைஞர். தீவிர வாதி. தாய் நாட்டின் விடுதலை, சமுக முன்னேற்றத்தில் அதிக ஆர்வங்கொண்டவர். "ஏழை மக்கள் உணவுக்காக வருந்துகிருர்கள்! தொழிலாளர்கள் வேலையின்றித் துயருறுகிருர்கள்! சிலர் ஓர் தொழிலும் செய்யாது சோம்பேறிகளாக வாழ்ந்து உண்டு களிக்கிருர்கள்!"

என்ற எண்ணங்கள், பழக்கங்கள் நம் நாட்டைவிட்டு அகலவேண்டும். அதற்காக அனைவரும் பாடுபடவேண்டும். ஒவ்வொருவரும் சுதந்தரமாக வாழவேண்டும். அடிமை என்பது இவ்வுலகில் இல்லை என்ற பெயரை அனைவரும் பெறவேண்டும் என்ற நன்னோக்கங்களைக் கொண்டவர். அதைச் செய்கையாலும் காட்டுபவர். இவர் ஐக்கிய மலாய் நாட்டின் சங்கக் காரியதரிசியாக வந்த பின் சமுகத்துக்காக, செட்டியார்களின் தொழில் முன்னேற்றத்துக்காக செய்துள்ள வேலைகள் பல. இத்தகைய தீவிர நோக்கங்கொண்ட இவருக்கு நமது சமுகம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

இச்சங்கத்தில் கடந்த ஆண்டுத் தலைவராக இருந்தவர் திரு. மு. க. பெரி. முத்தைய்யா செட்டியார். இவரை தூச்சோ (எழு) மார்க்கா முத்தய்யா செட்டியார் என்றும் சொல்வதுண்டு. இவர் செட்டியார்கள் நாட்டில் மிகப் பெரிதான, செல்வமிகுந்த தேவகோட்டையில் வயிரவன் கோயிலில், பெரிய வகுப்பின் பிரிவினரான பெரியனான் செட்டியாரின் புதல்வனாக இரத்தாட்சிஹு சித்திரைமீ 15உ பிறந்தார். இப்போது 75வது ஆண்டு நடைபெறுகிறது. இவர் 1884ம் ஆண்டில் பினங்கு அழ. சுப. சு. அரு. கடைக்கு ஏஜண்டாக இருந்தார். சின்னாட்களில் கோலாலம்பூரில் இருந்த இவர்களின் கூட்டுக்கடையைப் பிரித்து வாங்கினர். இவர் மலாயாவில் பல நாட்களின் அநுபவம் பெற்றவர். 1886ம் ஆண்டில் மலாக்கா பெரியமலை ஆண்டவர் விழாவுக்கு பினங்கிலிருந்து கப்பலில் சென்று வரும்போது கிள்ளான் துறைமுகத்தில் இறங்கினர். அந்நாட்களில் கப்பல் ஒவ்வோர் துறைமுகங்களிலும் ஓர் நாள் இரண்டு நாள் தங்குவது வழக்கம். அதனல் கிள்ளானில் இறங்கிய இவர் ஆறு வழியாக படகில் கோலாலம்பூருக்கு சமீபத்தில் இறங்கி மாட்டு வண்டியில் அவ்வூரைச் சேர்ந்தார். அதே முறையில் 1889ம் ஆண்டில் மறுபடியும் கோலாலம்பூர் சென்ருர். கூட்டுக்கடையைப் பிரித்து வாங்கினர். மு. க. பெரி. விலாசம் வைத்து தொழிலை ஆரம்பித்தார். அத்தொழிலே இன்றும் நடந்து வருகிறது. ஆண்டிலும் அநுபவத்திலும் முதிர்ந்த இவர் தீர்த்து விட்ட கேஸ்களும், செய்த பஞ்சாயத்துகளும் மிகுதி. அதனல் இவரை லாயர் முத்தய்யா செட்டியார் என்றும் கூறுவதுண்டு. அப்பெயருக்கேற்ப இன்றும் பலபஞ்சாயத்துகளில் ஈடுபட்டு முடிக்கிருர். இவரைப் போன்ற பல்லோரால் கண்காணித்து நடத்தப்பெறும் செட்டியார்கள் சங்கம் மிக உன்னத நிலையில் இருக்கிறது.

வளநிறைந்த ஐக்கிய மலாய்நாட்டில் வாழ்வணிகர்
நலம்பெருகத் தொண்டாற்றும் நகரத்தார் சங்கமிதே.



Chettiars' Association Kuala-Lumpur.

செல்வமிகு நகரத்தார் செல்வ விநாயகர்க்குச்
செல்வம்வளர் சிறம்பானில் செய்துவைத்த திருக்கோயில்.



Seramban Vinayagar Temple.

இச்சங்கங்கத்தை நடத்தும் செட்டியார்களாலும், தமிழ் மக்களாலும், இந்துக்களாலும் நடத்தப்பெறும் ஆலயங்கள் பல கோலாலம்பூரில் இருக்கிறது. அவைகளில் அதிக நாட்பட்டது பத்துமலைக் கோயில். இம்மலை கோலாலம்பூரில் இருந்து $7\frac{1}{2}$ மைலில் இருக்கிறது. உயர்ந்த மலையில் பல செங்குத்தான படிகள் ஏறிச் சென்றால் பத்துமலைச் சந்நிவடிவேலன் இருக்குமிடத்தை அடையலாம். இவ்வடிவேலன் இருக்குமிடம் இக்காலத்தவர்களால் ஆக்கப்பட்டதன்று. இயற்கையாகவே குடைபோல படர்ந்துள்ள அம்மலையின் ஓர் குகையில் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மலையின் உச்சிவரை துளைத்துவிடப்பட்ட பெரிய துவாரங்கள் அங்கு வெளிச்சத்தைத் தருகின்றன. அக்கோயில் அமைந்துள்ள இடத்தின் தரை மட்டமாகவே இருக்கிறது. அங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கலாம். இச்சிங்கார வடிவேலனுக்கு தினப்படி பூசை நடைபெறுகிறது. இங்கு தைப்பூச விழாக்கொண்டாடப் பெறும். அவ்வமயம் வரும் காவடிகள் கணக்கிலடங்கா. அன்று வரும் காணிக்கை பல ஆயிர வெள்ளிகள். இவ்வாலயம் இந்து எண்டௌமெண்ட் போர்டார் கண்காணிப்பில் தமிழ் மக்கள் ஆதரவில் இருக்கிறது.

இதே போல தமிழ் மக்களால் நடத்தப்பெறுவது மாரியம்மன் கோயில். இதுவும் மிகப் பழமையானதே. இவ்வாலயத்துக்கும் செட்டியார்களுக்கும் பன்னாட்கள் வரை தொடர்பிருந்தன. இவ்வாலயத்துக்குப் பல சொத்துகள் இருக்கின்றன. இங்குள்ள சுப்பிரமணியரை தைப்பூசத்துக்கு முதல் நாள் அலங்கரித்து இரதத்தில் பத்து மலைக்குக் கொண்டு செல்வார்கள். அங்கு 3 நாட்கள் வரை விழாக்கொண்டாடுவார்கள். பல மக்களுக்கு அன்னதானம் நடைபெறும். 3 நாட்களிலும் கந்தனுக்கு அபிஷேக ஆராதனைகள் அதிகமாக நடைபெறும். மூன்றா நாள் வேலன் மறுபடியும் இரதமேறி மாரியம்மன் கோயிலைச் சார்வான். இவ்விழா தமிழ் மக்களாலேயே கொண்டாடப்பெறுகிறது. இவர்கள் ஆதரவில் நடைபெறும் ஆலயங்கள் நல்ல நிலையில் இருக்கின்றன.

இவைகளைப்போல செட்டியார்களுக்குச் சொந்தமாக உள்ளது பத்துரோட் தெண்டாயுதபாணி கோயில். இக்கோயில் ஏற்பட்டு 45 ஆண்டுகள் ஆகின்றன. இப்போதிருக்கும் ஆலயத்தை நகரத்தார் சொந்தத்தில் கட்டி சோபகிருதுஞு ஆவணிமீ (1902) கும்பாபிஷேகம் செய்தார்கள். அன்று முதல் ஆலயம் உன்னத நிலையில் நடைபெறுகிறது. இவ்வாலயத்தில் கொண்டாடப்படும்

விழா பங்குனி உத்தரம். இவ்வுத்தரத்துக்கு முதல் நாள் நகரத்தார்களால் செய்துவைக்கப் பெற்ற 26 அடி உயரமுள்ள வெள்ளி ரதத்தில் வேலன் (செட்டியார்கள் வசிக்கும் அம்பாங் ஸ்ட்ரீட்டில் இருந்து) புறப்படுவான். பல வைபவங்களோடு ஆலயத்தை அடைந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பான். அன்று முதல் 3 நாட்கள் அங்கு நகரத்தார் தங்கி விழா நடத்துவார்கள். வரும் அடியார்களுக்கு அன்னமிடுவார்கள். 3ம் நாள் மாலை மறுபடியும் மயிலோன் இரதமேறுவான். வாணக் காட்சிகளையும், வைபவங்களையும் கண்டு இரவு செட்டியார்கள் தெருவுக்கு வந்து சேர்வான். இவ்வேலனின் விழாவை 3 நாளும் ஆலயத்தில் இருந்து நடத்துவதற்கு, அங்கு நகரத்தார்கள் தங்குவதற்கு, ஆலயத்துக்கு அண்மையில் ஓர் பெரிய ஹால் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு "செட்டியார் ஹால்" என்று பெயர். இப்பெரிய மாஹாலைக் கட்டுவதற்கும், வேலனுக்கு வேண்டும் அணிகளையும், வெள்ளி இரதத்தையும் செய்வதற்கும், மூல காரணமாய் இருந்தவர் திரு. க. வீ. அழ. முத்தய்யா செட்டியார். இவரை உலகமறியும். மிகப் பெருந்தன்மை வாய்ந்தவர். பெருத்த கொடை வள்ளல். தொழிலில் நிபுணர். கோலாலம்பூரில் சார்ட்டர்ட் பாங்குக்கும் இவருக்கும் பல தொடர்புண்டு. இவர் கோலாலம்பூரில் உள்ளவரை அப்பாங்குக்கு வந்த மானேஜர்கள் இவரின் ஆலோசனையை ஏற்றே நடந்தார்கள். இவரால் பாங்குக்கு வருவாய் மிகுதி. இவருக்கும் அப்பாங்கினால் அதிக நன்மை உண்டு. இவர் இந்திய சமுகத்துக்குப் பெருந் தொண்டாற்றியவர். எட்டாம் எட்வர்ட் மன்னராயிருந்த "வின்ஸர் கோமகன்" இளவரசராய் இந்நாட்டுக்கு வந்தபொழுது கோலாலம்பூரில் வரவேற்ற இந்தியப் பிரமுகர் இவரே. இவரால் ஆலயத்துக்குச் செய்யப்பட்ட நலன்கள் பல. தூய சிந்தையும், தொன்மைப் பழக்கமும், அண்டினோரை ஆதரிக்கும் குணமும், அரனிடத் தன்பும் கொண்ட இவர் 1924ம் ஆண்டில் பூதவுடல் துறந்தார். ஆயினும் புகழுடல் மாறாதன்றோ? இவரின் புதல்வரே இவ்வமயம் க. வீ. அழ. மு. கடையின் அதிபராக இருக்கும் திரு. இராமநாதன் செட்டியார். இவர் இந்நாட்டுக்கு ஓர் முறை வந்து சென்றிருக்கிறார். இவர்கள் குடும்பத்தினருக்கும் மலாய் நாட்டுக்கும் அதிகத் தொடர்புண்டு. அவைகளை அங்கங்கே கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய அறப்பணியாளர்கள் பல்லோர் வாழும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சமுகத்தவரால் இங்கும் பல நலன்கள் உண்டு.

பத்திரிகையின் பலன்

உலகத்தைப் பெருக்குவது அறிவு. அறிவை வளர்ப்பது கல்வி. அக்கல்வியை எப்படிப்பெறுவது ? கல்வியிற் பலவகையுண்டு. எல்லாவற்றையும் ஒருவர் பெறமுடியுமா ? முடியும். எப்படி ? அதற்குச் சாதகமாக விளங்குவது பத்திரிகைகள். பத்திரிகையை ஒருவர் படித்தால் பல கல்வியையும் பெறலாம். பத்திரிகைகளில் பல அறிஞர்களின் ஆராய்ச்சி! பல நாட்டின் செய்திகள்! பல மொழிகளின் மொழி பெயர்ப்பு! அரசியல் செய்திகள்! பொருளாதாரத்தின் நிலைமைகள்! ஒழுக்கத்தின் உயர்வுகள்! எல்லாவற்றையும் காணலாம். இதனால்தான் பத்திரிகைக்கு "நியூஸ்" (News) என்ற பெயரை இட்டனர் ஆங்கிலேயர். "நியூஸ்" என்ற ஆங்கிலப்பதம் நான்கெழுத்துக்கள் கொண்டவை. இந்நான்கெழுத்துக்களும் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்ற நான்கெல்லைகளைக்குறிக்கும் North, Ea t, Wes', South என்ற பதங்களின் முதல் எழுத்துகளாகும் அதனால் பல எல்லைகளின் செய்திகளையும் திரட்டித்தருவது பத்திரிகைகள் என்றேற்படுகிறது. இவ்வுண்மையை இன்று நேரிற் காண்கின்றோம். இத்தகைய பத்திரிகைகளில் பல, கோலாலம்பூரில் இருக்கின்றன. அவைகளில் இந்தியர்களால் நடத்தப்பெறும் பத்திரிகைகள் "தமிழ் நேசன்" என்ற தமிழ்த்தினசரி ஒன்றும் "இந்தியன்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுமாகும். இவை இரண்டும் இந்தியர்களுக்காகவே உழைக்கின்றன. இவைகளில் "தமிழ் நேசனை" ஆரம்பித்தவர் திரு. கி. நரசிம்மய்யங்கார். இவர் ஓர் பேரறிஞர்.

இவர், திருச்சி ஜில்லாவில் காவிரியாற்றின் கரையோரமுள்ள நங்கைவரம் கிராமத்தில் வைஷ்ணவ குலத்தில் 3-7-1890ல் பிறந்தவர். சிறுவயதிலேயே நன்றாகக் கற்றவர். திருச்சி ஜெயின்ட் ஜோஸப் கல்லூரியில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினர். பிறகு எஸ். பி. ஜி. காலேஜில் சேர்ந்து படித்தார். அவ்வமயம் இவரின் கல்வித் துறையை நன்குணர்ந்து காலேஜில் ஸ்காலர்ஷிப்பும் கொடுத்தார்கள். அங்கு ஆங்கிலம் கற்ற இவர். தமிழ்ப் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரிடம் தமிழுங் கற்ருர். நாட்டார் ஓர் பேரறிஞர். பண்டைக் கால இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர். பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டவர். திருவிளையாடற் புராணத்துக்கு உரை கண்டவர். இலக்கண முறைப்படி பேசும் வன்மை பெற்றவர். இன்றும் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் பண்டிதர்களின் ஆசிரியராய் இருப்பவர். இவரிடம்பாடம்கேட்ட

நாசிம்ம அய்யங்கார் தமிழிலும் தேர்ச்சி பெற்றார். இத்துடன் 1915ம் ஆண்டில் இரங்கூன் சென்று அக்கவுண்டண்டு ஜெனரல் ஆபிஸில் வேலையில் அமர்ந்தார். திரேக அசௌகரியத்தால் 1920ம் ஆண்டில் அவ்வேலையை விட்டு விலகினர். பர்மாவில் பல இடங்களுக்கும் சென்றார். 1921ம் ஆண்டில் மலாய் நாட்டுக்கு வந்தார். தனது சகோதரர் மனேஜராய் இருந்த இண்டஸ்திரியல் பிரஸில் உதவி மானேஜராய் அமர்ந்தார். அத்துடன் "தமிழகம்" என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினர். 1923ம் ஆண்டில் அக்கம்பெனியிலிருந்து விலகினர்.

1924ம் ஆண்டில் தனது சகோதரருடன் சேர்ந்து "ஆர்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ்" என்ற அச்சாபீஸை நிறுவினர். 10-10 1924ல் "தமிழ் நேசன்" பத்திரிகையை ஆரம்பித்தார். இப்பத்திரிகை முதலில் வாரப்பதிப்பாக இருந்து, பிறகு வாரமிருமுறை, மும்முறையாகி 20-2-1937ல் தினசரியானது. இப்பத்திரிகையை நடத்த, நன்னிலைக்குக் கொண்டுவர, மலாயாவில் தமிழைப் பரப்ப, நரசிம்ம அய்யங்கார் கொண்ட சிரமம் மிகுதி. இதனால் அவருக்கு நேர்ந்த இடுக்கண்கள் பல. அவைகளை அவர் பொருட்படுத்தவில்லை. எப்படியும் தாய் நாட்டு மக்கள் வாழவேண்டும்! தமிழ் மொழி தழைக்கவேண்டும்! ஏழை மக்கள் பிழைக்கவேண்டும்! எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும்! என்ற உயர் நோக்கங்களையே கைக்கொண்டார். இதற்காக "தமிழ் நேசன்" பத்திரிகையுடன் "இந்தியன் பயோனியர்" என்ற ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையை 1-3-1929ல் ஆரம்பித்து நடத்தினர். அப்பத்திரிகையால் பெரும் பொருள் நஷ்டத்துக்கும் ஆளானர். அதற்காகவும் வருந்தவில்லை. தன் மனோதிடத்தை இழக்கவில்லை. இவைகளுக்கிடையில் இவர் உடல் பலமுறை நோய்வாய்ப்பட்டது. அதனால் துன்புறும் போதும் பத்திரிகை வளர்ச்சியிலேயே கருத்தைச் செலுத்தினர். அய்யங்காராகப் பிறந்த இவருக்கு சமயவேற்றுமைகளும், சாதிப் பிணக்குகளும் கிடையாது. கோலாலம்பூர் மாரியம்மன் கோயில் சம்பந்தமாய் இவர் கொண்ட முயற்சி மிகுதி. எப். எம். எஸ். பெடரல் சபையிலும், சிலாங்கூர் ஸ்டேட் கௌன்ஸிலிலும் இந்தியர்களுக்கு ஸ்தானம் வேண்டுமென்று மன்றாடியவர், பத்திரிகைகளில் எழுதியவர் இவரே. இவ்வாறு இந்தியர்களுக்குப் பெருந் தொண்டாற்றிய இவர் 4-2-38ல் இறைவனடி சேர்ந்தார். இவரின் பிரிவால் மலாய் நாட்டு இந்தியர்கள் ஓர் பெரு நிதியை இழக்க நேர்ந்தது. கோலாலம்பூரில் இருந்து பெருந்தொண்டாற்றிய இவர் அங்கேயே இறந்தாலும், பூதவுடல் நீங்கினும் அவரின் புகழுட

லும், அவரால் உண்டாக்கப்பட்ட "தமிழ் நேசனும்" இன்று மிருக்கிறது. அவர் நமது மக்களுக்குச் செய்துள்ள தொண்டு களுக்காக அவரால் ஏற்பட்ட "தமிழ் நேசனை" ஆதரிக்க வேண்டுவது நமது கடமை. இச்சிறப்புவாய்ந்த "நரசிம்ம அய்யங்காரின்" உருவப் படமும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அப்பர் சேவா சங்கமும் அருந் தமிழ்க் கல்வியும்

இவரைப் போன்ற பல பேரறிஞர்களின் பேருதவியால் சுவாமி ஆத்மராம் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது அப்பர் சேவா சங்கம். இச்சங்கத்தின் நோக்கங்கள் இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களைப் பாதுகாப்பதாகும். தமிழ் மக்களில் வாணிபத்திலும், உத்தியோகங்களிலும் இருப்பவர் சிலரே. பலர் தொழிலாளர் களாக இருக்கிறார்கள். இவர்களிடம் கல்வி அறிவில்லை. அதனால் பலசமுகத்தவரால் இகழப் படுகிறார்கள். அவ்விகழ்வைப் போக்க வேண்டும். ஏழைத் தொழிலாளர்களின் அறியாமையை அகற்ற வேண்டும். அவர்களுக்குப் பேறறிவைத் தரும் கல்வியை, தாய்மொழியைப் போதிக்க வேண்டும் என்பதாகும். இதன் பிரதம ஊழியரான சுவாமி எஸ். ஆத்மராம் அவர்கள் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்கைக் கடைப்பிடிப் பவர். அதன்படி நடப்பவர். அதனால் பலரின் உதவி பெற்று தனது உழைப்பால் பல பள்ளிக் கூடங்களை வைத்து நடத்துகிறார். அவைகளில் ஒன்று பத்துரோட்டில் உள்ள "அப்பர் தமிழ்ப் பள்ளிக்கூடம்." இப்பள்ளிக்கூடத்தில் 3 ஆசிரியர்கள் இருக்கிறார் கள் 70 மாணவர்கள் படிக்கிறார்கள். மற்றொன்று "செந்தூல்" பள்ளிக்கூடம். இங்கு ஆசிரியர் இருவர். மாணவர்கள் 70. இவர்களில் பெண்களும் மிகுதி. இப்பள்ளிக் கூடங்களில் கல்வி இலவசமாகவே கற்பிக்கப் படுகிறது. இவைகளோடு குருகுலம் ஒன்றை நடத்த "சுங்கைத்துவா" ரோடு 9வது மைலில் 20 ஏக்கர் நிலம் ஒன்றை வாங்கி இருக்கிறார். அதில் ஓர் அத்தாப்புக் கட்டட மும் கட்டப்பட்டிருக்கிறது. அதில் குருகுல முறைப்படி தொழி லும் தமிழ்க்கல்வியும் 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஆங்கில முறைப்படி கல்வி கற்பிக்கவும் முயற்சித்துக் கொண்டிருக் கிறார். இவரின் முயற்சி கைகூட இறைவனருள் கூட்டுவைப் பானாக.

இந்நாட்டில் வாழும் தமிழ்மக்கள் மதிப்புள்ள வாழ்க்கையைப் பெறவில்லை என்று பலர் குறைகூறுகின்றனர். அக்குறைக்குக்

காரணம் கல்வி இன்மையே. அதைப் போக்கப் பலரும் முற்பட வேண்டும். அதற்கேற்ப இப்போது பல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. (முன்பும் கூறப்பட்டிருக்கிறது. 37, 38ம் பக்கம் பார்க்க) அவைகளுக்கு மேற்பட்டது சுவாமி ஆத்மராம் அவர்களால் உண்டாக்கப் பெறும் குருகுலம். இவ்வளவு சாதனங்கள் இருந்தும் ஏழைமக்களைப் பெற்றவர்கள் பள்ளிக்கு அனுப்பாது இன்னும் பலர் இருக்கின்றனர். அந்தோ! அவர்களின் அறியாமையை என்னென்று கூறுவது? அவர்களைக் குறை கூறுவதிலும் பலனில்லை. அறிஞர் என்று கூறப் பெறுபவரும் அவர்களுக்கு இக்கருத்துகளை எடுத்து விளக்கவில்லை. அதை இந்நாட்டில் வாழ்பவர்கள் அனைவரும் கருதவேண்டும். நாம் எந்த நாட்டில் வாழுகின்றோம். இங்கு எப்படி வாழ வேண்டும் என்பதை உணரவேண்டும். பிறசமுகங்களின் வாழ்க்கையைப் பார்க்க வேண்டும். அவைகளில் வேண்டுவனவற்றைக்கைக்கொள்ளவேண்டும். இவைகள் ஒவ்வொன்றையும் கற்பிக்கும் கல்வியைப் பெற இனியேனும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களுக்கும், அப்பர் சேவா சங்கத்துக்கும் பிள்ளைகளைப் பெற்றவர்களே! அனுப்புங்கள். அதனால் நாட்டுக்கும், இந்திய தமிழ் சமுகத்துக்கும் உயர்வுண்டு.

இந்தியர்களின் பாதுகாப்பும் இரப்பர் ஆராய்ச்சிக் கழகமும்

இந்நாட்டின் வாழும் இந்தியர்களைக் கவனிப்பதற்காக இந்தியாக் கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பு நிலையம் ஒன்றுண்டு. அதற்காக ஓர் ஏஜன்டை நியமித்திருக்கிறார்கள் இந்தியா கவர்ன்மென்டார். அவ் ஏஜன்ஸி ஆபிஸ் கோலாலம்பூரிலேயே இருக்கிறது. அதில் இப்போதுள்ள இந்தியா ஏஜண்டு ஸி. எஸ். வெங்கடாச்சாரி, ஐ. ஸி. எஸ். இவரே மலாயாவுக்கு நியமித்த முதலாவது இந்தியன் சிவில் சர்வீஸ் உத்தியோகஸ்தர். இவரும் இவருக்கு முன்பிருந்த ஏஜண்டுகளைப்போல இந்தியர்கள் கண்காணிப்பில் கருத்தாய் இருக்கிறார். இந்தியாக் கவர்ன்மெண்டுடன் செய்துகொள்ளும் காரியங்களை இவர் மூலமாகவே செய்துகொள்ள வேண்டும். இவர் கோலாலம்பூரில் இருந்து பல இடங்களுக்கும் சென்று ஒவ்வொரு காரியங்களையும் நேரிற் கவனிப்பார். இந்தியர்களுக்கு வேண்டிய நலன்களை இயன்றவரையிற் செய்வார்.

இந்நிலையம் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பெற்றது. இதே போல பொதுமக்களால் உண்டாக்கப்பட்டது அகில மலாயா இந்தி

ஹானரபிள் டாக்டர் எஸ். ஆர். கிருஷ்ணசாமி.



Hon. Dr. S. R. Krishnasami.

யர் மத்திய சங்கம் (Gentra' Indian Associati m) இச்சங்கம் கோலாலம்பூரிலேயே இருக்கிறது. (52ம் பக்கம் பார்க்க). இச்சங்கத்தில் மலாயாவிலுள்ள பல சங்கங்களின் பிரதிநிதிகள், அங்கத்தினராயிருக்கின்றனர். அவர்கள் இந்தியர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளைச் செய்யத் தொண்டாற்றுபவர்கள். இவர்களும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும், இந்நாட்டுக் கவர்ன்மெண்டுக்கும் பல காரியங்களையும் தெரிவிப்பர். இவர்களால், சங்கத்தால் இந்தியர்களுக்கு ஏற்படும் நலன்கள் பல.

இதேபோல மலாய் நாட்டின் விளைபொருள்களில் முக்கியமான ரப்பர் விளைவைப் பெருக்க மலாயா ரப்பர் தோட்டக்காரர்கள் சங்கம் ஒன்று கோலாலம்பூரில் இருக்கிறது. இச்சங்கத்தில் பல சமுகத்தவரும் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வோராண்டிலும் பொதுக்கூட்டமும், பல முறை நிர்வாகக்கூட்டமும் கூடி ஆலோசிப்பார்கள். இரப்பர் சம்பந்தமாய் இந்நாட்டில் நடைபெறவேண்டியவைகளைக் கவனித்து கவர்ன்மெண்டாருடன் சம்பந்தப்பட்டு எக்காரியங்களையும் செய்வார்கள். இதற்குமேல் கவர்ன்மெண்டார் ரப்பர் ஆராய்ச்சிக்கழகம் ஒன்றை நிறுவி இருக்கிறார்கள். அதிலிருந்து மாதம் ஒரு முறை விவசாய சஞ்சிகை ஒன்றும் வெளியிடுகிறார்கள். இச்சஞ்சிகையில் ஒவ்வோர் விளைபொருளையும் பயிரிட வேண்டிய முறைகளைக் கூறப்படுகிறது. இவர்கள் விவசாயத்தில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்காக, அதை மக்கள் எல்லோரும் கண்டு அதன்படி விவசாயத்தைச் செய்வதற்காக ஆண்டுக் கொருமுறை ஜூலை௴ 30, 31, ஆகஸ்ட்௴ 1௳ களில் விவசாயக் கண்காட்சி ஒன்றை கோலாலம்பூரில் நடத்துகிறார்கள். இதற்காக ஏற்பட்டுள்ள நிலையத்தில் தோட்டக்காரர்கள் யார் வேண்டுமானாலும் சென்று எதையும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். தோட்டக்காரர்கள் பயிர் செய்ய எண்ணி மண்ணில் கொஞ்சம் எடுத்து அவர்களுக்கு அனுப்பினால் அதன் குணத்தை தெரிவிப்பார்கள். பயிர் செய்யவேண்டிய முறையை ஒவ்வொரு தோட்டக்காரரும் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக "செர்டாங்" என்ற இடத்தில் ஓர் தோட்டத்தில் பல விளைபொருள்களும் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தோட்டக்காரர்கள் பார்க்க எண்ணி அவர்களுக்குத் தெரிவித்தால் ஓர் நேரத்தைக் குறிப்பிட்டு அழைத்துக் கொண்டுபோய்க் காட்டுவார்கள். அதற்காக தோட்டக்காரர்கள் செலவு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. அவைகளை எல்லாம் கவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பிலேயே நடத்துகிறார்கள். இவ்வாராய்ச்சிக் கழகத்தை ஒவ்வோர்

தோட்டக்காரரும், பிறரும் பார்க்கவேண்டுவதவசியம். இதேபோல ரப்பர் விளைவுக்காக இன்னும் பல சௌகரியங்களை செய்கிறார்கள் கவர்ன்மெண்டார். இவைகளால் மக்கள் பெறும் பலன்கள் பல.

ஆற்றின் அமைப்பும் அழகிய மலர்க்குன்றும்

"ஆறில்லா ஊர்பாழ்" என்பது நமது நாட்டுப்பழமொழி. இந்நாட்டிலும் அவ்வாறு பல உண்டு. ஆனால் மக்கள் அதை எதிர்பார்ப்பதில்லை. எதனால்? மழைநீரும், ஊற்றுநீரும் மிகுதியாகக் கிடைப்பதால். இந்நீரை அதிகமாகக் கொண்டுவரும் ஆறு ஒன்று கோலாலம்பூர் நகரின் மத்தியில் ஓடுகின்றது. கடற்றுறை அண்மையில் இல்லா இந்நகருக்கு இந்த ஆறு பேரழகையும், பேருதவியையும் தந்துகொண்டிருக்கிறது. இதன் தண்ணீர் முன்பு நகருக்குள் அதிகமாகப் பெருக்கெடுத்தது. அதனால் சில தெருக்களில் 3, 4 அடி உயரத்துக்குக்கூட தண்ணீர் நிறைந்தது. சுகாதார நிலையத்தார் அதைமாற்ற பெரும் பிரயாசை எடுத்தார்கள். நகருக்குப் புறம்பில் அவ்வாற்றை புதிதாக வெட்டி தண்ணீரை அப்பகுதியில் செலுத்தினர்கள். நகருக்குள் ஓடிவரும் ஆற்றின் இருபுறங்களிலும் பெருத்த கரைகளை கட்டினர்கள். அதனால் நகருக்குள் பெருக்கெடுத்த வெள்ளம் குறைந்து அளவோடு நீர் ஓடி வருகிறது. அவ்யாற்றங்கரையின் இருபுறங்களிலும் பல இடங்களில் சுகாதார முறைப்படி பசும் புற்றரைகள், தோட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதற்குமேல் மக்களுக்கு இயற்கை எழிலோடு சுகாதாரத்தைத் தருவது மலர்வனம் நிறைந்த "பூமலை" இக்குன்றிலும் பினங்கைப் போல பல வழிகளும் நீரோடைகளும், பூச்செடிகளும், கொடிகளும், மரங்களும் இருக்கின்றன. இம்மலையில் சில ஹோட்டல்களும், கட்டிடங்களும் இருக்கின்றன. மேன்மை தங்கிய ஹை கமிஷனரின் பங்களாவும் இங்கேயே இருக்கிறது. இங்கு (பூமலைக்கு) மாலைநேரத்தில் பல மக்கள் உலாவ வருவார்கள். இம்மலையின் ஓர் பகுதியில் "பங்சார் ஆஸ்பத்திரி" விளங்குகிறது. இவ்வைத்திய சாலையில் உயர்தர வைத்தியம் நடைபெறும். இம்மலையின் எழிலும் இதனால் நகர மக்கள் பெறும் இன்பமும் அதிகம். அதனைநேரிற் கண்டநுபவிக்கவேண்டும். இதேபோல இன்னும் பல இயற்கை செயற்கை அமைப்புகளைக்கொண்ட கோலாலம்பூர், குதிரைப் பந்தயத்திலும் முதன்மை பெற்றதாகும். இங்குள்ள பந்தயத்திடலும் மிகுந்த பரப்பை உடையது.

மேன்மை தங்கிய பாஹாங் சுல்தான்.



His Highness Sir Sultan Abu Bakar.
K. C. M. G. Pahang.

ஐக்கிய மலாய் நாட்டின் கொடியும், மரியாதையும்

இந்நாட்டின் கூட்டுறவைக் காட்டும் கொடிகள் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், கருப்புகளான நான்கு நிறங்களால் அமைக்கப் பட்டவையாகும். இந்நான்கு நிறங்களையும் அடுக்காக அமைத் திருக்கிறார்கள். இவைகளுக்கு நடுவில் ஒரு வெள்ளைக் கேடயத்தில் பாயும் புலி உருவம் ஒன்று பொறிக்கப்பட்டிருக்கிறது. இக்கொடி-யை ஐக்கிய மலாய் நாட்டின் கவர்ண்மெண்டு கப்பல்கள், லாஞ்சுகள், படகுகள் முதலியவற்றில் பறக்கவிட்டிருப்பார்கள். தலைமை ஆபீஸ் களில் கட்டித் தொங்கவிட்டிருப்பார்கள். இதேபோல ஒவ்வொரு சமஸ்தானங்களுக்கும் தனித் தனிக் கொடிகள் உண்டு. அவைகளை அங்கங்கே கூறப்பெறும்.

இந்நாட்டுக்கு ஹைகமிஷனர் வந்திறங்கும்போது 17 குண்டு களாலும், 50 சிப்பாய்கள் அடங்கிய ஓர் படையினராலும் மரியாதை செலுத்தி வரவேற்கப் பெறுவர். இதேபோல கவர்ண்மெண்டின் காரியதரிசி 15 குண்டு, 50 சிப்பாய்களாலும், கடற்படை அதிகாரி அல்லது இராணுவத்தலைவர் 15 குண்டு, 50 சிப்பாய்களாலும், ரெசி டெண்டுகள் 13 குண்டு 50 சிப்பாய்களாலும், சுல்தான்மார்கள் 17 குண்டு 50 சிப்பாய்களாலும் மரியாதை செலுத்தி வரவேற்கப் பெறுவர். இக்கவர்ண்மெண்டின் வரவு செலவு கணக்கு புள்ளி விபரங்களைப் பிறகு கூறப்பெறும்.

[2.] அ. பேரா சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

பேராவின் பெற்றிதனைப் பேருலகோர் காண்பதற்குச்
சீரார்ந்த செந்தமிழே செப்பு.

ஐக்கிய மலாய் நாட்டின் நான்கு அரசியல்களில் மிகப்பெரியது பேரா சமஸ்தானம். இதன் பரப்பு 8,058 சதுரமைல்கள். இதன் நீளம் வட தெற்கில் சுமார் 150 மைல்களும் அகலம் கிழ, மேற்கில் சுமார் 60 மைல்களும் இருக்கின்றன. இதன் எல்லைகள் வெல்லஸ்லி மாகாணம், கெடா, சயாம், சிலாங்கூர்களாகும். இச்

சமஸ்தானத்தையும், சிலாங்கூர் சமஸ்தானத்தையும் பிரித்துக்காட்டுவது "பெர்னும்" நதியாகும். இச்சமஸ்தானத்தின் உயர்ந்த மலை கொர்பூ. இதன் உயரம் 7160 அடிகள். முக்கிய நதி பேரா நதியாகும். இந்நதி 100 மைல்கள் பாய்ந்து மலாக்கா நீரிணையில் (ஜலசந்தியில்) சங்கமம் ஆகின்றன.

இச்சமஸ்தானம் சுல்தான்களுக்குச் சொந்தமானது. இந்த சுல்தான்களின் மரபு மலாக்காவை ஆண்ட சுல்தான்களின் தொடர்பு கொண்டவை. அவர்களில் ஒருவரான சுல்தான் "முத்ஜாபர்ஷா" என்பவர் பதினேழாம் நூற்றாண்டில் ஆட்சியை ஆரம்பித்தார். அதிலிருந்து பல சுல்தான்கள் ஆட்சி செலுத்தி இருக்கின்றனர். இவர்களின் வாழ்க்கை விபரங்கள் முற்றிலும் கிடைக்கவில்லை. இவர்கள் ஆட்சியில் 1650ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் (உலாந்தா) பேராநதி சங்கமத்தில் சில தொழிற்சாலைகளை நிறுவினர். 1765ம் ஆண்டில் பேரா சுல்தானுக்கும் உலாந்தாக்காரருக்கும் ஓர் உடன்படிக்கையும் ஏற்பட்டது. அதனால் வியாபாரப் பெருக்கமும் உண்டானது. அதன்பிறகு 1818ம் ஆண்டில் பிரிட்டிஷார் ஓர் வியாபார உடன்படிக்கை செய்து கொண்டனர். அன்றுமுதல் பிரிட்டிஷாரிடம் பேரா சுல்தான் மதிப்புக்கொண்டார். 1825ம் ஆண்டில் பேரா சமஸ்தானத்துக்கும், சிலாங்கூர் சமஸ்தானத்துக்கும் எல்லைத் தகராறுகளும், குழப்பங்களும் ஏற்பட்டன. அதைத் தீர்த்து வைக்க இருவரும் பிரிட்டிஷாரை நாடினார்கள். அவ்வமயம் ஏற்பட்டதுதான் பங்கோர் உடன்படிக்கை. அப்போது பேரா சமஸ்தானாதிபதியாக இருந்தவர், பாதுகா ஸ்ரீ சுல்தான் "அப்துல்லா மா ஆலம்ஷா" வாவர்.

பங்கோர் உடன்படிக்கை.

1825-ஞு செப்டம்பர்மீ 6உ பேரா சமஸ்தானாதிபதிக்கும், பினாங்கு கவர்னருக்கும் பினாங்கில் நடைபெற்ற, எழுதப்பட்ட உடன்படிக்கை. சூரிய சந்திரான் இருக்கும் வரை மாறுபடாத ஒற்றுமையையும், ஐக்கியத்தையும், மாட்சிமை தங்கிய பாதுகாஸ்ரீ "சுல்தான் அப்துல்லா மா ஆலம்ஷா" என்ற பேரா சமஸ்தானாதிபதி, இன்றுமுதல், இங்கிலீஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் சார்பாக, பூலோ பினாங்கின் கவர்னராக இருக்கும் ஹானரபிள் ராபர்ட் புல்லர்டனின் ஏஜண்டாகிய மிஸ்டர் ஜான் ஆண்டர்சனுடன் நட்புக் கொண்டிருக்கவும் இன்னும் நீடித்து அவை பெருகிக்கொண்டிருக்கவும் விரும்புகின்றேன்.

1. பேரா சமஸ்தானத்தின் மாட்சிமை தங்கிய மன்னன், பேரா சமஸ்தானத்துக்கும், சிலாங்கூர் சமஸ்தானத்துக்கும் உள்ள எல்லையை "பெர்னம்" ஆற்றுடன் அமைக்க இதனுல் சம்மதிக்கின்றேன். எங்களுக்குள் இருதரத்தினர்களாலும் இன்று முதல் எத்தகைய பிளவுகளும் ஏற்படமாட்டாது. பேரா சமஸ்தானுதிபதி சிலாங்கூர் கவர்ண்மெண்டின் காரியங்களில் தலையிட முற்படமாட்டார். அந்நாட்டின்மீது எக்காரணங்கொண்டும் படை எடுக்கமாட்டார். பேராவின் குடிகள் வியாபாரத்துக்காக அங்கு செல்ல அநுமதிக்கப் படுவதிலும், அந்நாட்டின் வியாபாரச் செழிப்புக்கென ஏற்பட்டுள்ள சட்டதிட்டங்ளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவும் சம்மதிக்கிறுர்.

2. பூலோ பிணுங்கின் கவர்னரின் ஏஜண்டு மிஸ்டர் ஜான் ஆண்டர்ஸனுக்கும் மாட்சிமை தங்கிய சிலாங்கூர் சுல்தானுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப் பிரகாரம், பேரா சமஸ்தானத்தில் இருந்து ராஜா ஹஸனை நாடுகடத்தியதில் பேரா சமஸ்தானுதிபதி சம்மதங்கொண்டிருக்கிறுர். அவரை (ராஜா ஹஸனை) மறுபடியும் வரவேற்கவோ, அல்லது பேரா சமஸ்தானத்தின் எப்பகுதியிலும் திரும்ப வந்து வசிக்கவோ அநுமதிப்பதில்லை. பேரா சமஸ்தானுதிபதி தன் நாட்டின் வரிகளை வசூலிக்க வேறு எவரையும் நியமிப்பதில்லை. குத்தகைக்கும் விடுவதில்லை. அதனுல் நாட்டில் வாழ்வோரை எவ்வித குழப்பங்களுக்கும் உட்படுத்துவதும் இல்லை. பேரா சமஸ்தானத்தில் இருந்து ஏற்றுமதி ஆகும் ஈயத்துக்கு பாஹர் 6 டாலர் சுங்கவரி வசூலித்துக் கொள்கிறது. எங்கள் நாட்டில் தங்கள் வியாபாரங்களை நல்ல முறையில் பரவச் செய்வதற்கு தக்க வசதிகள் அளிக்கிறேம். அத்துடன் சயாம், சிலாங்கூர் முதலிய அரசியல்களின் குடிகள், வியாபாரிகள் முதலியவர்களுக்கு பேரா எல்லையில் குடியேறவோ, அல்லது வந்து தாமதித்துத் திரும்பிச் செல்லவோ தடங்கல்கள் செய்வதில்லை. அவர்கள் சுலபமாகவும், மகிழ்வுடனும் வரவும், கடிதப் போக்கு வரத்து, பேச்சு சுதந்தரங்களைக் கொண்டிருக்கவும் செய்துள்ளோம். பேரா ஆட்சியின் எல்லையில் உள்ள எல்லாத் துறைமுகங்களுக்கும், குடியேற்றங்களுக்கும், ஆற்று ஓட்டங்களுக்கும், அவைகளின் எப்பகுதிக்கும் செல்லவும், தாமதிக்கவும், திரும்பவும் வசதிகளையும், சுதந்தரங்களையும் எத்தகைய இடையூறுமில்லாது செய்துகொண்டிருக்கச் சம்மதிக்கிறேம்.

இக்கட்டுப்பாடுகளுக்கு சம்மதித்து பேரா சமஸ்தானுதிபதியாகிய மாட்சிமை தங்கிய மன்னர், தமது கையொப்பமும் முத்திரை

யும் இட்டு, பூலோ பினங்கின் கவர்னர் ஆகிய ஹானரபிள் மிஸ்டர் ராபர்ட்புல்லர்ட்டனின் எஜண்டான மிஸ்டர் ஜான் ஆண்டர்ஸனிடம் கொடுக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கை இங்கிலீஷ் 1825ஆ செப்டம்பர்மீ 6உக்குச் சரியான ஹிஜரி 1241ம் ஆண்டு முகராம் மாதம் 20உ திங்கட்கிழமையன்று எழுதப்பட்டது (கையொப்பம்)

ஆங்கிலவரசின் ஆதரிப்பு

இவ்வுடன்படிக்கை ஏற்பட்டதும் பேராவும் சிலாங்கூரும் ஒன்றுபட்டு சச்சரவுகள் இன்றி அரசியலை நடத்தின. 1826ம் ஆண்டில் சியத்துடன் ஓர் ஒப்பந்த உடன்படிக்கை ஏற்பட்டது. அதனால் பேராவும், சிலாங்கூரும் சியத்தின் கண்காணிப்பில் இருந்து விடுதலை பெற்றன. அதே ஆண்டில் பேரா சுல்தான் கிழக்கு இந்தியக் கம்பெனியுடன் செய்துகொண்ட மற்றொரு உடன்படிக்கையினால் அவர்களின் பாதுகாப்பைப் பெற்றார். அப்போது பேரா சமஸ்தானத்தில் மலாக்கா கடலில் திரிந்த கொள்ளைக்கூட்டத்தினர் புகுந்து மக்களை துன்புறுத்தினர். அவர்களை அடக்குவதற்காக பேரா சுல்தான் பிரிட்டிஷாருக்கு “பங்கோர் தீவை”க் கொடுத்தார். அவர்களால் கடற்கொள்ளைக்காரர்கள் அழிந்தனர். அதன் பிறகே மலாக்கா கடலில் கொள்ளைக்காரர்கள் இல்லை. 16-11-1934ல் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி “பங்கோர் தீவை” பேரா சமஸ்தானத்துக்கு மறுபடியும் திரும்பக்கொடுத்துவிட்டனர் பிரிட்டிஷார்.

பிறகு 1872—1874ம் ஆண்டுகளில் லாரூட் ஜில்லாவின் ஈயச் சுரங்கங்களில் வேலை செய்த சீனர்கள் பெருங் கலகங்களை விளைவித்தனர். அவைகளையும் பிரிட்டிஷார் முற்பட்டு அடக்கினர். 1874ம் ஆண்டில் அரசியல் விவகாரங்கள் ஏற்பட்டன. சுல்தான் மார்களில் பட்டம் பெறுவோர் யார் என்ற தகராறுகள் நேர்ந்தன. அதை “ராஜாமூடா அப்துல்லா”வுக்கே கிடைக்கவேண்டுமென ஸர் அண்டுராகிளார்க் முற்பட்டு நிலை நாட்டினார். அவருக்குப் பின்பே சமஸ்தானாதிபதிகள் நியமனம் சரியான முறையில் ஏற்பட்டது. அவர்காலத்துக்குப் பிற்பட்டவர்களில் வாழ்க்கை வரலாறு பிறகு கூறப்பெறும். பேரா சுல்தானாக “அப்துல்லா” ஆனதும் பிரிட்டிஷ் ரெசிடெண்டுகளின் ஆலோசனைகளை ஏற்று நடப்பதாக உடன்படிக்கை ஒன்றைச் செய்தார். அதிலிருந்து பேரா சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் ரெசிடெண்டுகள் நியமிக்கப்பட்டனர். அப்படி ஏற்பட்ட ரெஸிடெண்டுகளில் ஒருவரான மிஸ்டர் “ஜெ. டப்ளியு. டப்ளியு. பர்ச்” என்பவரை 1875ம் ஆண்டில் சில கலகக்காரர்கள் கொன்றுவிட்டனர். அதற்காக பல

ராணுவப் படைகள் புறப்பட்டு வந்தன. பேரா சமஸ்தானத்தின் கலகங்களை அடக்கின. இதில் பலர் தண்டிக்கப்பட்டனர். சுல்தான்களின் மரபைச் சேர்ந்த சிலரை சிங்கப்பூருக்குக் கொண்டு போய் பாதுகாப்பில் வைத்தனர். அன்றிருந்து வேறு எக்லகங்களும் இல்லை.

இதன் பிறகு 1895ம் ஆண்டில் ஏற்பட்டது ஐக்கிய உடன்படிக்கை (194ம் பக்கம் பார்க்க) அதன்படி பேரா சமஸ்தானத்தை மாட்சிமை தங்கிய சுல்தானின் தலைமை கொண்ட அரசியல் சபையாரின் ஆலோசனையின்படி பிரிட்டிஷ் ரெசிடெண்ட் நடத்திவருகிறார். இச்சபையில் சுல்தானுடன் பல மலாய் சிற்றரசர்கள் அங்கம் வகிப்பார்கள். ஹானரபிள் பிரிட்டிஷ் ரெஸிடெண்டு, அவரது காரியதரிசி, நியாய ஆலோசனையாளர், அரசியல் இலாக்காக்களின் தலைவர்கள், பேராப் பொதுமக்களின் பிரதிநிதிகள் இருவர், உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர் பலருமாக 26 அங்கத்தினர்கள் இருந்து சபையை நடத்துவார்கள். இவ்வரசியல் சபை ஆண்டு ஒன்றுக்கு நான்கு முறைக்குக் குறையாது கூடும். இதை கோலக்கங்சாரிலும், தைப்பிங்கிலும் கூட்டுவார்கள். இதன் நடவடிக்கைகள் முழுமையும் மலாய் மொழியிலேயே நடைபெறும். இத்துடன் சமஸ்தானத்தின் மதமார்க்கங்களைக் கவனிக்க இவ்வரசியல் சபையின் கீழ் சில சிற்றரசர்களும், உலாமாக்களும் சேர்ந்த சபை ஒன்று அடிக்கடி கூடும். இவ்வாறு கூடப்பெறும் பேரா ஸ்டேட் கவுன்சிலில் இந்தியர்களின் பிரதிநிதியாக இருப்பவர், ஈப்போவின் பிரபல லாயர் திரு. எஸ். சினிவாசகம் ஆவர். இவர் பெரும் புகழ் பெற்றவர். பல உத்தியோகங்களை வகித்தவர். சட்ட நிபுணர். பேசுவதில் வன்மை பெற்றவர். தான் எடுத்த கட்சியை வெற்றிபெறச் செய்யும் சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் இந்தியர்களுக்கு வேண்டிய உரிமைகளை ஸ்டேட் கௌன்ஸிலில் பெறுவார். இச்சபையின் தலைவர் மேன்மை தங்கிய பேரா சுல்தானவர்.

சமஸ்தானதிபதிகள்

இப்போதுள்ள சுல்தான் அவர்களின் தொடர்பு 1874ம் ஆண்டில் முடி சூட்டப்பெற்ற ராஜா அப்துல்லா பாதுகா ஸ்ரீ சுல்தான் அப்துல்லா முகமதுஷா இப்னிமர்ஹூம் சுல்தான் ஜாபர் முவாத் ஜாம்ஷா என்பவரில் இருந்து தொடர்பு கொண்டவை ஆகும். இவர் 1876ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். 1877ல் ராஜா யூசுப் பாதுகா ஸ்ரீ சுல்தான் யூசுப் ஷரிபுத்தின் பப்தாத்ஷா

இப்னிஅல்மர்ஹூம் சுல்தான் அப்துல்லா முகமத்ஷா இயா இத்துல் மர்ஹூம் இதிகாதுல்லா குரியான் ஸாபாடாங் சுல்தானுக இருந்தார். 1887 முதல் 1916 வரை ராஜா இத்ரிஸ் பாதுகா ஸ்ரீ சுல்தான் இத்ரிஷ் முர்ஷத் அல் ஆஜம்ஷா இப்னிஅல்மர்ஹூம் பெண்டாரா இஸ்கிந்தா ஜி. ஸி. எம். ஜி., ஜி. ஸி. வி. ஓ., சுல்தானுக இருந்தார். 1916முதல் 1918வரை இராஜா அப்துல் ஜலீல் பாதுகா ஸ்ரீ சுல்தான் அப்துல் ஜலீஸ் நனிருத்தின் மக்தாரம்ஷா இப்னி அல்மர்ஹூம் சுல்தான் இத்ரிஸ் ரஹமதுல்லாஷா கே. ஸி. எம். ஜி., சுல்தானுக இருந்தார். இவருக்குப் பிறகு 1918ல் பட்டத்துக்கு வந்த ராஜா அலாங் இஸ்கிந்தர் பாதுகா ஸ்ரீ சுல்தான் இஸ்கிந்தர்ஷா இப்னிம் அல்மர்ஹூம் சுல்தான் இத்ரிஸ் ரஹமதுல்லாஷா ஜி. ஸி. எம். ஜி., கே. ஸி. வீ. ஓ. ஆட்சி புரிந்து வருகிறுர்.

இவர் 10-5 1881ல் பிறந்தார். இவர் காலஞ் சென்ற சுல்தான் ஸர் இத்ரிஸியின் புதல்வர். இவர் தாய்மொழியைக் கற்றதோடு, தைப்பினில் ஆங்கிலமும் கற்ருர். 16வது வயதில் மேல்நாடு சென்ருர். ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்ருர். பயிற்சி பெற்று வந்தபின் இராஜா பண்டாராவாக இருந்தார். அப்போது ஐக்கிய மலாய் நாட்டின் போலீஸில் உதவி கமிஷனர் உத்தியோகத்தை ஏற்று 16ஆறு தொண்டாற்றினுர். இவருடைய சகோதரர் சுல்தான் அபுதுல் ஜலீஸ் காலமாகியதும் இவர் பட்டத்தை ஏற்ருர். இவரை 26-10-1918ல் பேரா சுல்தானுக பிரகடனம் செய்தார்கள். 10-4-1919ல் இவருக்கு முடி சூட்டினுர்கள். அன்று முதல் ஆட்சியை நல்ல முறையில் நடத்தி வருகிறுர். இவர் பட்டத்துக்கு வந்தபின் பேரா சமஸ்தானத்தில் செய்துள்ள காரியங்கள் பல. நெல் விவசாயத்தைப் பெருக்கினுர். நீர்ப்பாய்ச்சல் வசதியை ஏற்படுத்தினுர். கம்பங்களில் சுகாதாரம், குடிதண்ணீர், வைத்தியமுறை, நடைபாதை, மலாய்க்கல்வி, இறைவழிபாடு செய்யும் பள்ளிகள், முதலியவைகளை அதிகப்படுத்தினுர். முன்னிருந்தவைகளைச் செப்பனிட்டார். மதமார்க்க சம்பந்தங்களில் வேண்டிய உறுதுணை புரிந்தார். இவைகளோடு இவர் விளையாட்டில் விருப்பங்கொண்டவர். பந்தயக்குதிரையில் பயிற்சி பெற்றவர். அதற்காக தான் வாழுமிடமாகிய கோலக்கங்சாரில் பெரிய போலோ விளையாட்டுத் திடல் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். அத்திடலில் ஓர் கட்டிடத்தை அமைத்து இதற்கு "இஸ்கிந்தர் போலோ கிளப்" என்ற பெயரையும் சூட்டினுர். இப்போலோ விளையாட்டிலும், குதிரையில் இருந்தபடியே பந்து விளையாடுவதிலும் இவர் மிகத் தேர்ச்சி பெற்றவர். இவ்விளையாட்டு நேரத்தில் யாருடனும் கலந்து

விளையாடுவார். இவரிடம் பல பந்தயக்குதிரைகள் உண்டு. அவைகளை வைத்து ஓட்டியதில் பல பரிசும் பெற்றிருக்கிறார். 1937ம் ஆண்டில் பெருந்தொகை பெற்றவர்களில் இவர் ஒருவர். 1937ம் ஆண்டுக் கணக்குப்படி மலாயாவில் குதிரை வைத்திருப்பவர்கள் 136 பேர். இவர்களில் மிஸ்டர் ஏவான்டூரன் என்பவருக்கு $47,056ம் மெக்கென்ஸி கூட்டத்தாருக்கு $28,150ம் திருமதி லோடு என்பவருக்கு $25,050ம் பேரா சுல்தானுக்கு $20,030ம் குதிரைகளால் கிடைத்தவைகளாகும். இதேபோல ஒவ்வோராண்டிலும் குதிரைகளினால் வெற்றியே பெற்றிருக்கிறார். இவைகளில் வெற்றி பெறுவதைப்போல தனது வாழ்க்கையிலும் பெருவெற்றிபெற்றவர்.

இவருக்கு முன்னிருந்த சுல்தான்கள் கோலக்கங்சாரில் பழய கட்டிடங்களில் வசித்தார்கள். அவைகளைமாற்றி கோலக்கங்சாரிலேயே "புக்கெட்சந்தான்" என்ற சிறிய குன்றில் ஓர் புதிய அரண்மனையைக் கட்டினார். மலாயாவிலுள்ள மலாய் சுல்தான்களின் அரண்மனைகளில் இதுவே பெரிது. இவ்வரண்மனையில் உள்ள கொலுமண்டபமும், அதில் பரப்பியுள்ள நாற்காலிகள், சிம்மாசனமும் பார்க்கத்தக்கவைகளில் ஒன்று. இதைப்பார்ப்பதற்கு அதிகாரிகளின் ஆதரவு பெற்றே செல்லவேண்டும். இவ்வரண்மனையிலேயே சுல்தான் வசிக்கின்றார். இவருக்குச் சொந்தமான சொத்துகளையும் சுல்தான்மார்களின் வரவு செலவையும் நடத்த இவ்வரண்மனையில் ஓர் கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. இவ்வரண்மனையைச் சுற்றிப் பல கட்டிடங்களில் சுல்தானின் உறவினரும், மற்ற சிற்றரசியல் தலைவர்களும் வசிக்கின்றனர். இதையடுத்து குன்றுக்கு முன்னணியில் "உலுமியா மசூதி" கட்டப்பட்டிருக்கிறது. அதற்கண்மையில் ஓர் பெரிய மலாய் மொழிப் பள்ளிக்கூடம் உண்டு. இக்கட்டிடங்கள் கோலக்கங்சாரில் சிறந்தவைகளாகும். இவ்வாறு சிறந்த அரண்மனையைக் கட்டி வாழ்ந்துவரும் இவர் குடிகளிடத்து மிகப்பற்றுக் கொண்டவர். எந்தநேரமும் குதூகலத்துடன் இருப்பவர். மிக இரக்ககுணமுடையவர். யாருடனும் எளிதிற் பழகும் சுபாவமுடையவர். ஆங்கிலமும் தாய்மொழியும் நன்கு கற்றதனால் மத மார்க்கங்களுக்கு முரணில்லாதவாறு எக்காரியங்களிலும் ஈடுபடுபவர். இவரால் குடிகளுக்கு ஏற்படும் நன்மைகள் பல.

இவருக்கு அடுத்து பட்டத்துக்கு வரக்கூடியவர் ஸர் அபுதுல் அஜீஸ் ஆவர். இவர் இப்போது டெலுக் ஆன்சனில் ராஜாமுடாவாக இருக்கிறார். இவரும் மிக நல்லவர். வேட்டையில் விருப்பமுள்ளவர். எளிய வாழ்க்கையைப் பின்பற்றுபவர். உதார குண

மும், உறுதியுள்ள மனமும் பெற்றவர். எச்சபையிலும் அஞ்சாது பேசும் வன்மையுடையவர். இவரும் குடிகளை எல்லாம் தன்னைப் போல எண்ணுவதால் இவர் காலத்திலும் பேரா சமஸ்தானம் சிறந்து விளங்கும். மக்கள் பலரும் நன்மை பெறுவரென்பது திண்ணம்.

ஜில்லாக்களின் சிறப்பு

இவர்களுக்குச் சொந்தமான பேரா சமஸ்தானத்தை 10 ஜில்லாக்களாகப் பிரித்து ஆட்சி செலுத்திவருகிறார்கள்.

	ஜில்லா	தலை நகர்
1.	கோலக்கங்சார்	கோலக்கங்சார்
2.	லாரூட்	தைப்பிங்
3.	கிரியான்	பாரிட்பந்தார்
4.	சிலாமா	சிலாமா
5.	கிரீக் அண்ட் லொங்கோங்	கிரீக்
6.	குரோன் அண்ட் கிளியன் இந்தான்	குரோன்
7.	கின்டா	பத்துக்காசா. ஈப்போ
8.	பாடாங்பாடாங்	தாப்பா
9.	லோயர்பேரா	டெலுக் ஆன்சன்
10.	டின்டிங்ஸ்	லூமுட்


இவைகளில் கோலக்கங்சார் ஜில்லாவின் தலை நகரான கோலக்கங்சாரிலேயே சுல்தான் இருக்கிறார். இங்கு டிஸ்டிரிக்ட் ஆபீஸ் ஆஸ்பத்திரி மற்றவைகளும் பாங்குகளும் இருக்கின்றன. பொதுமக்கள் கல்விபயில "கிளிப்பர்ட்" ஸ்கூல் ஒன்றிருக்கிறது. இரண்டு தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றை தமிழர் சீர்திருத்த சங்கத்தார் 1931ல் நிருவி நடத்திவருகிறார்கள். இதில் இலவசமாக 70 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். இதற்கு நாட்டுக்கோட்டைச் செட்டியார்களிற் பலர் பொருளுதவி புரிகிறார்கள். ஜாலன் ராஜா என்ற தெருவில் பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவர்கள் தங்கள் குல முறைப்படி பெருத்த லேவாதேவித் தொழிலைச் செய்வதோடு பெரும் சொத்துகளுக்கு உடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களில் சுல்தானுடன் நட்புக் கொண்டோரும் இருக்கின்றனர். ஐக்கிய மலாய்

மேன்மை தங்கிய ஜோஹோர் சுல்தான்.



His Highness Sir Ibrahim. Sovereign Ruler. Johore.

தண்டலைசூழ் மூவாரில் தருமஞ்செய் நகரத்தார்
தண்டபாணி வீற்றிருக்கத் தானமைத்த பொற்கோயில்.



Muar Temple.

நாட்டின் செட்டியார்கள் வர்த்தக சங்கத்தின் இவ்வாண்டுத் தலைவர் முத்து. மு. முத்தய்யா செட்டியார் இங்கேயே வசிக்கிறார். (முன்பு கூறப்பெற்றிருக்கிறது) இவர் வசிக்கும் பங்களா குன்றில் இருக்கிறது. கோலக்கங்சாரில் எங்கோர் நதி பெருக்கெடுக்கும் சமயம் வெள்ளம் ஊருக்குள் அதிகமாக ஏறும். அதற்காகவே பல கட்டிடங்கள் குன்றுகளில் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாறு பெருக்கெடுக்கும் எங்கோர் நதி மிகப்பெரிது. இதைக்கடக்க கோலக்கங்சாரிலிருந்து ஈப்போ வரும்வழி 3வது மைலில் ஓர் மிதப்புப் பாலம் போட்டிருந்தார்கள். பல வளைவுகள் கூடிய அப்பாலத்தை 1927ம் ஆண்டில் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அப்பாலத்தை இப்போது மற்றோரிடத்தில் அணைத்துக்கட்டி இருக்கிறார்கள். முன்பாலம் இருந்த இடத்தில் இப்போது ஓர் பெரிய இரும்புப்பாலம் கட்டி இருக்கிறார்கள். இப்பாலம் இப்போதுள்ள சுல்தானால் கட்டப்பட்டது. ஆகவே அதற்கு "இஸ்கிந்தர்" பாலம் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். இப்பாலத்தின் உயரம் 50 அடி நீளம் 1000 அடி அகலமாகும்.

எங்கோர் நதி என்னும் பேரா நதியை "சென்டிரியான்" என்ற இடத்தில் மறித்து, அணைகட்டி மின்சாரம் எடுக்கிறார்கள். இதை பேரா ஹைடிராலிக் எலக்டிரிக் ஒர்க்ஸ் என்பர். இக்கம்பெனியை ஈப்போ சே. இ. டி. கம்பெனியார் மின்சார வேலை நடத்துகிறார்கள். இவ்வணை, தென்னாட்டில் மைசூரில் கட்டப்பட்டிருக்கும் கன்னம்பாடி அணையை ஞாபகப்படுத்துகிறது. அவ்வணை காவிரி நதியை தடுத்துக் கட்டப்பட்டது. அக்கரைக்குச் செல்ல வேண்டுமானால் அணையின் மேலேயே செல்லவேண்டும். இவ்வணை அப்படி அன்று. அணையை கட்டும்போதே மத்தியில் குகையாக வைத்துக்கட்டி இருக்கிறார்கள். அக்குகைக்குள் பல வெளிச்சங்கள் போடப்பட்டிருக்கின்றன. அதன் வழியாக அக்கரைக்குச் செல்லலாம். செல்லும்போது சில இடங்களில் கீழும் மேலும் தண்ணீர் ஓடுகின்ற காட்சி காண்பவர்களுக்கு களிப்பையும், ஓர்புறம் (தான் நிற்கும் நிலையை உணர்ந்தால்) பயத்தையும் தரும். இவ்வாறு கட்டப்பட்டுள்ள அணையினால் நீரைத் தேக்கி மைசூரைச் சேர்ந்த சிவசமுத்திரம் எலக்டிரிக் வொர்க்ஸைப்போல இயந்திரங்களுக்கு நீர் வீழ்ச்சியைக் கொடுத்து மின்சாரம் எடுக்கிறார்கள். இக்காட்சியே மைசூரின் கன்னம்பாடி அணையின் களிப்பையும் சிவசமுத்திரம் மின்சார நிலையத்தின் சிறப்பையும் காட்டிக்கொண்டிருக்கின்றன. இங்கு எடுக்கப்படும் மின்சார ஒளி பல இடங்களுக்குப் பரப்பப்படுகிறது. இந்நிலையம் கோலக்கங்சாரில் இருந்து 23 மைல்களில் இருக்கிறது.

லாருட் ஜில்லாவும் தைப்பின் தலை நகரும்

லாருட் ஜில்லா மிகப்பெரிது. இதன் தலைநகர் தைப்பின். இந்நகரே பேரா சமஸ்தானத்தின் தலைநகர்; சமஸ்தானத்தின் தலைமை ரிஜிஸ்டர் ஆபீஸ் இங்கேயே இருக்கிறது ஸ்டேட் கவுன்சில் ஆண்டுக்கிருமுறை இங்குகூடும். சமஸ்தானத்தின் பெரிய சிறைச்சாலை ஒன்றிருக்கிறது. இங்கு பெண்களுக்கு இருகல்வி நிலையமும், ஆண்களுக்கு "ஏமாம் எட்வர்ட்" உயர்தரப் பள்ளியும் இருக்கின்றன. இங்கு மலாய் நாட்டின் பாதுகாப்புக்காக "பர்மா" பட்டாளத்தைச் சேர்ந்த பலர் இருந்தனர். அவர்களுக்குப் பதிலாக இப்போது பஞ்சாபிகளின் இந்தியப்படைகள் இருக்கின்றன. இந்நகரம் மிக அழகுவாய்ந்தவை; மிகக் குளிர்ச்சியுள்ளவை. மலாய் நாட்டிலேயே நகரங்களில் குளிர் நிறைந்தவை தைப்பின் நகரந்தான். இயற்கையிலேயே தண்மை மிகுந்த இந்நகரில் தெருக்களின் பல இடங்களில் மரங்கள் வைத்துப் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் இல்லங்களில் வாழ்வோர் எந்த நேரத்திலும் கதிரவனின் கடுமைக் காட்படாது வாழ்வர்.

இந்நகரில் வாழ்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்னும் தண்மையைத் தருவது "மாக்ஸ்வெல் மலை." இம்மலை நகருக்கு அண்மையில் இருக்கிறது. இதில் 4530 அடி உயரத்தில் சில கட்டிடங்கள் இருக்கின்றன. இங்கு பல தமிழ்க்கூலிகள் வசிக்கிறார்கள். இவர்களால் பல காய்கறி, கிழங்கு வகைகள் பயிரிடப்படுகின்றன. இங்குள்ள ரோஜா மலர்கள் மிகப்பெரியவை. மணம் நிறைந்தவை. அதன் ஒவ்வோர் இதழும் தாமரையின் இதழ் போன்றிருக்கும். இவர்களால் அங்கு ஓர் மாரியம்மன் கோயில் கட்டப்பட்டு பூசை நடந்து வருகிறது. இவர்கள் வசிக்குமிடத்துக்கு மேல் உச்சியிலும் சில கட்டிடங்கள் இருக்கின்றன. அங்கு சுகாதாரத்துக்காகப் பலர் வந்து வசிப்பார்கள். அக்கட்டிடங்களுக்குச் செல்ல "டோலி" (ஆட்கள் தூக்குபவை) கள் ஏறவேண்டும். வலுவுள்ளவர்கள் நடந்து செல்லவும் வழியுண்டு. இம்மலையின் அடிவாரத்தில் இருப்பதே தைப்பின் லேக். (நீர் நிலையங்கள் நிறைந்த திடல்) இங்கு பல நீர் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளைச்சுற்றிப் பல வழிகள் உண்டு. இடைஇடையே பல மரங்களும், செடிகளும், கொடிகளும் படர்ந்து நிற்கின்றன. எங்கும் பசும் புற்றரை நிறைந்து விளங்கும் இத்திடலில் பல இடங்களில் நாற்காலிகள் போடப்பட்டிருக்கின்றன. சில நீர் நிலையங்களுக்குப் பாலங்கள் போட்டிருக்கிறார்கள். கரையோரத்தில் குளக்கரைகள் போட்டு கட்டியும் விட்டிருக்கிறார்கள்.

தன்மைபொருந்திய இந்த "லேக்" கில் ஒவ்வோர் நாளும் தைப்பின் நகரமக்கள் பல்லோர் வந்து பலனைப்பெறுவர். மாலை நேரத்தில் வந்து கூடும் மக்கள் எண்ணிக்கையிலடங்கார். இவ்வியற்கை மலையில் ஓர் நீர் வீழ்ச்சியுண்டு. அவை பார்க்கக்கூடியவைகளில் ஒன்று. இம்மலை ஊற்று நீரே நகர மக்களுக்கு உணவூட்டுவது! உணவாவது! உபயோகப்படுவது! அதனால் அங்கு வாழும் மக்கள் சுக வாழ்வைப் பெறுகின்றனர். இன்பத்தை அநுபவிக்கும் மக்கள் மேலும் காட்சிகளைக் கண்டுகளிக்க 3 சினிமா தியேட்டர்களும் ஓர் கண்காட்சியும் (ஷோவும்) இருக்கின்றன.

இந்நகரில் வாணிபத்தைப் பெருக்க 3 பாங்குகளும் மார்க்கெட் ரோட்டில் பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் இருக்கின்றன. இவர்களில் பலபேர் பெரும் சொத்துக்களுக்கு உடையவர்கள். இவர்களுக்கு ஓர் தெண்டாயுதபாணி கோயில் உண்டு. இக்கோயில் ஏற்பட்டு சுமார் 70 ஆண்டுகள் இருக்கலாம். இவ்வாலயத்தைப் பெரும் பொருட் செலவிட்டு 15 ஆண்டுகளுக்கு முன் பெரிதாகக் கட்டியுள்ளார்கள். இங்கு ஆடிப்பூர விழாக்கொண்டாடப் பெறும். அன்று கந்தன் சொந்த இரதமேறிச் சுற்றி வந்திறங்குவான். பல அடியார்களுக்கு அன்னமிடப்படும். அவ்வைபவங்களைக் கண்டு களிக்கப் பல ஊர் நகரத்தார்களும் வருவார்கள். அவ்விழாவில் அன்னமுண்பதைப் போல ஒவ்வோர் மாதக் கார்த்திகை, சைவ சமயாச்சாரியார்களின் குரு பூசைகளிலும் மக்கள் பல்லோர் அங்கே உண்டு களிப்பார்கள். அவ்வாலயத்தை ஒழுங்காக நடத்துவதில் பெருந் தொண்டாற்றுபவர் திரு. ராம. மு. சோம. சோமசுந்தரம் செட்டியார். இவர் பிள்ளையார்பட்டியில் சுவாநுவஸு வைகாசிமீ ௩௰கஉ தோன்றி கிழச்சிவல்பட்டியில் குடியேறியிருப்பவர். இவருக்கு இப்போது 55 ஆண்டுகள் ஆகிறது. இவர் சைவசமய முறைப்படி பூசை செய்பவர். ஒவ்வோர் நாளும் அப்பூசையைச் செய்யாமல் உணவுண்ண மாட்டார். மிக இரக்க குணமுடையவர். சுற்றத்தார் பலருக்கு உற்ற பொருள் கொடுத்துதவியவர். காஞ்சிபுரத்தில் ஓர் சித்தவைத்திய சாலையை நடத்தும் பேரறிஞர் ஒருவருக்குப் பெரும் பொருள் கொடுத்துதவுகிறார். அதனால் நோயை அகற்றிக்கொள்ளும் மக்கள் பல்லோர் இவரை வாழ்த்துகின்றனர். இதேபோல இன்னும்பல அறநிலையங்களுக்குப் பணங் கொடுத்தவர். இவ்வறப்பணியாளரான இவர் பன்னாட்களாக தைப்பினில் வாழ்கின்றார். இடைஇடையே தாய்நாடு சென்று வருவார். இவர் பெருஞ் சொத்துக்குடையவர். இப்போது தனது மனைவி மக்களுடன் தைப்பினிலேயே இருக்கின்றார். இப்பெருஞ்

தகையாளருக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களா வோம். இவரின் முயற்சியாலும், நகரத்தார்களின் பொருட் பெருக் காலும், பலரின் பார்வையாலும் நல்ல முறையில் நடந்து வருகிற தைப்பின் தெண்டாயுதபாணி கோயிலின் படமும் இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கிரியான்—பாரிட்பந்தார்.

கிரியான் ஜில்லாவில் நெல் விவசாயம் மிகுதி. இங்குள்ள நீர் வடிகால்கள் பல நிலங்களுக்கு தண்ணீர் உதவி அளிக்கின்றன. அவைகளில் கிரியான் நீர்த்தேக்கம் என்ற கால்வாய் 12 மைல் நீளங் கொண்டது. இதிலிருந்து பல கால்வாய்கள் பிரிகின்றன. இதன் கிளைகளையும் கணக்கிட்டால் சுமார் 200 மைல் நீளமாகும். இக் கால்வாய்களை உண்டுபண்ண தொடுவாய்ப்பகுதி கவர்ண்மெண்டும், பேரா சமஸ்தானமும் சேர்ந்து $376,495 செலவு செய்தன. அத ற்கு மேல் ஒவ்வோராண்டிலும் பராமரிப்புக்காக மிகுதியான செலவு செய்யப்படுகின்றன. 1937ம் ஆண்டில் இதன் பராமரிப்பும், பயிர்ச் செலவும் சேர்ந்து $70,821 ஆகின்றது. இத் தண்ணீர்த் தேக்கத் தால் சுமார் 70,000 எக்கர்கள் பயிர் செய்ய முடியும். 1937ம் ஆண்டுக்கணக்குப்படி பயிர் செய்யப்பட்ட எக்கர்கள் 49,580. இதில் விளைந்த நெல் 17,500,000 கந்தங்கள்.

இக்கால்வாய்களைப்போல பேரா சமஸ்தானத்தின் மற்ற ஜில் லாக்களான பாடாங் பாடாங் ஜில்லாவில் "சுங்கை மானிக்" என்ற இடத்தில் 7,000 எக்கர்களுக்குப் பாயக்கூடிய ஓர் நீர் வடிகாலும், கோலக்கங்சார் ஜில்லாவில் 11 மைல் நீளமுள்ள ஓர் நீர்வடிகாலும், புலுவாஸ் என்ற இடத்தில் 2,400 எக்கர்களுக்குப் பாயக்கூடிய ஓர் நீர்வடிகாலும், கம்போங் அணைக்கட்டும் மற்றும் இரு அணைக்கட்டு களும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் கவர்ண்மெண்டார் நல்ல முறையில் பாதுகாத்து வருகிறார்கள். இந்நீர்வடிகால்களைப் பெற் றுள்ள பேரா சமஸ்தானத்தில் மேநீராகிய மழையும் அடிக்கடி பெய் கின்றன. ஆற்றுநீர், ஊற்று நீர், மேநீர் என்ற மூந்நீர்களின் பெருக் கத்தால் பயிர்கள் ஓங்கிவளர்ந்து பலனைத் தருகின்றன. இதனால் விளைவிக்கப்பெறும் நெற்கதிர்கள் "கரும்பல்ல நெல்லென்னக் கமு கல்ல கரும்பென்ன" என்று சேக்கிழார் "திருநாட்டுச் சிறப்பிற்" கூறியவைகளை ஞாபகப்படுத்தும். அக்கதிர்கள் தூரத்தில் பார்ப் பவர்களுக்குக் கரும்பைப் போன்றே தோன்றும். அதற்கண்மை யில் சில இடங்களில் வளர்ந்திருக்கும் கரும்புகள் பாக்கு மரத்தைப்

போன்றே தோன்றும். நாம் அண்மையிற் சென்றால்! உற்று நோக்கினல்! நாம் எண்ணியபடி அல்ல! ஏமாந்தோம்! இவைகள் பாக்கு மரங்கள் அல்ல! கரும்புகள்! இவைகள் கரும்புகள் அல்ல! நெற்கதிர்கள்! என்ற தேற்றத்தைப் பெறலாம். இவ்வாறு மண், நீர் வளத்தால் வளர்ந்தோங்கிய நெற்கதிர்களை கட்டுகளாகக் கொண்டு வந்து குவிப்பார்கள். அவைகள் "ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற" என்ற சேக்கிழாரின் வாக்குப்படி பெருத்த குன்றுகளாக இருக்கும். அக்குன்றுகளில் மேகங்கள் வந்துபடிந்து தவழும் காட்சி பார்க்கத் தக்கவைகளில் ஒன்று. இந்நெற்குவியல்களை அரிசியாக்க கிரியான் ஜில்லாவின் தலைநகரான "பாரிட்பந்தர்," அதற்கண்மையிலுள்ள "பாக்கான் சிராய்" என்ற இடங்களில் பல இயந்திரங்கள் இருக்கின்றன. அவைகளில் அரைக்கப்படும் நெல்கள், இந்நாட்டின் விளையும் நெல்களின் அரிசி இங்கு வாழும் மக்களின் உணவுக்குப் போதாது. இதை இன்னும் விருத்தி செய்யக் கவர்ன்மெண்டார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதன் தலைநகரான பாரிட் பந்தரில் பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வசிக்கின்றனர். இவர்கள் ஜாவிக்கோவில் விழாவில் பெரும் பங்கெடுத்து உழைப்பார்கள். அக்கோயிலை மிகுதியாக ஆதரிப்பவர்களும் இவர்களே. இவர்களில் பெரும் சொத்துக்குடையவர்களும் உண்டு. இங்குள்ள "முத்தய்யா ஹால்" என்ற சினிமா தியேட்டர் செட்டியாருக்கு சொந்தமானது. இங்கு சுகாதார நிலையங்கள் பல இருக்கின்றன. அவர்கள் பெரும் பிரயாசை எடுத்து நகரை அலங்கரித்திருக்கிறார்கள். எவ்வளவு அலங்கரித்தாலும் அங்குள்ள "கொசுகு"களை இவர்களாற் போக்கமுடியவில்லை. நமது நாட்டில் "கொசுகு" கடியால் பேர் பெற்றது கும்பகோணம். அதையும் தோற்கடித்து விடும் பாரிட் பந்தார். அவ்வுபத்திரவத்தைப் பொருத்துக்கொள்ளலாம். அல்லது எப்படியாவது அதற்குத் தப்பிவிடலாம். ஆனல் வெளி நாட்டிலிருந்து பாரப்பந்தாவுக்குள் நுழைபவர்கள் வேறொன்றுக்குத் தப்பமுடியாது. செல்பவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் சரிதான்! கார் வழியாகவோ! இரயில் வழியாகவோ! நடையிலோ எவ்வாறு சென்றாலும் சரிதான்! அதற்குத் தப்பவேமுடியாது. அது எது? அதுதான் அங்குள்ள கஸ்டம்ஸ் ஆபிஸ் (சுங்கச்சாவடி) இந்நிலையத்தை கவர்ன்மெண்டார் வருவாய் கருதியும், ஒவ்வொரு நாட்டின் விளை பொருள்களும், கைத்தொழிலும் செழித்தோங்கவும் ஏற்படுத்தியுள்ளார்கள். அதைப்பற்றி அவர்களைக் குறைகூறவில்லை. அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளால் பிரயாணிகள் படும்

அல்லல்களை எண்ணினல்! அங்கு செல்லும் ஆண், பெண், குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் உள்ள பொருள்களையும், ஏழை மக்களிடம் உள்ள கட்டுச்சோறு முதல் கையில் வைத்திருக்கும் துணி மூட்டை வரையும் ஒவ்வொன்றையும் அவிழ்த்துப் பரிசோதிக்கும் முறையையும் கவனித்தால்! பல வகையாலும் மக்களுக்கு நலனைச் செய்கின்ற இந்நாட்டின் கவர்ண்மெண்டார் இதை என் வைத்து நடத்தவேண்டும்! மக்களுக்கு இவ்வளவு தொந்தரவை ஏன் கொடுக்க வேண்டும்! என்றெண்ண வேண்டியதாக இருக்கிறது. இதேபோல ஐக்கிய மலாய் நாட்டின் பல பகுதிகளிலும், ஐக்கியப்படாத மலாய் நாட்டின் ஒவ்வோர் எல்லைகளிலும் சுங்கச்சாவடிகள் இருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றாலும் பிரயாணிகளுக்கு அல்லலே நேர்கின்றன. சில இடங்களில் எல்லைக்குள் நுழையும்போது மூட்டைகளை, பெட்டிகளை திறந்து காட்டினல் போதும். சில இடங்களில் அவ்வெல்லையை விட்டு வெளியாகும் போதும் திறந்து காட்ட வேண்டும். எத்தனையோ வகைகளில் மக்களுக்குப் பல நலனைச் செய்கின்ற கவர்ண்மெண்டார் இதையும் கவனித்து போஸ்டாபீஸ் யூனியனைப்போல கஸ்டம்ஸ் யூனியனையும் ஒன்று படுத்தினர்களானல் இந்நாட்டு மக்களுக்கு மிகுந்த நலமாக இருக்கும்.

சிலாமா—கிரீக்—குரோன்

இம்மூன்று ஜில்லாக்களிலும் பல இடங்களில் நெல் விவசாயம் உண்டு. இங்கு அதிகமாகப் பயிராவது ரப்பரே. சில இடங்களில் ஈயச்சுரங்கங்களும் இருக்கின்றன. இவைகளில் சிலாமா ஜில்லாவின் தலை நகரான சிலாமாவில் சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. மற்ற இடங்களிலும் ஊர்களுக்குத் தக்கபடி ஒன்றிரண்டு கடைகள் இருக்கின்றன. இச் சில்லாக்களின் விளைபொருள் மற்ற விபரங்களைப் பிறகு பேரா சமஸ்தானத்தின் பொதுப்புள்ளியுடன் சேர்த்துக் கூறப்பெறும்.

கின்டா - பத்துக்காஜா - ஈப்போ

கின்டா ஜில்லாவின் தலைநகர் பத்துக்காஜா. பேரா சமஸ்தானத்திலேயே மிகப் பெரிய நகர் ஈப்போ. ஈப்போவிலேயே பேரா சுப்ரீம் கோர்ட் இருக்கிறது. இன்னும் சின்னட்களில் பல ஆபிஸ்களையும் ஈப்போவுக்கு மாற்றி விடுவார்கள். மலாயாவிலேயே ஈப்போ ஓர் அழகான நகரம். மற்ற நகரங்களில் பெரிய பெரிய கட்டிடங்கள் பலவற்றைக் காணலாம். ஆனலும் இந்நகரைப்

போல தெருக்களின் அழகையும், அத்தெருக்களில் இருபுறத்திலும் இல்லங்களை ஒரே மாதிரியாக அமைந்திருக்கும் முறையையும் எந்நகரத்திலும் காணமுடியாது. இந்நகரின் மத்தியபாகத்தில் ஓடும் நதியும், அதன் இருபுறங்களிலும் கட்டப் பட்டிருக்கும் அணையும் அதன் மேல் வளர்த்துக்காக்கப்படும் பசும் புற்றரையின் தோற்றமும் நகருக்குப் பேரழகைத் தருகின்றன.


இந்நகரில் வியாபாரத்தைப் பெருக்க "சார்ட்டர்ட் பாங், ஒங்கம் சங்காய் பாங், மெர்க்கென்டைல் பாங், ஓவர்சீஸ் சைனிஸ் பாங், லீவா பாங், செட்டிநாடு பாங்" என்ற 6 பாங்குகள் இருக்கின்றன. இப்பாங்குகளைப் போன்று லேவாதேவி செய்யப்பட்ட பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவர்களில் பலர் பெரும் சொத்துகளுக்குடையவர்கள். இவர்களால் கட்டப்பட்டது தெண்டாயுதபாணி கோயில். இக்கோயில் 1904ம் ஆண்டில் நிறுவப் பெற்றது. இதில் நகரத்தார்கள் வைகாசி விசாகத்தன்று விழா நடத்துகிறார்கள். இவ்விழாவை முதல்நாள் ஆரம்பிப்பார்கள். அன்றுமுதல் 3 நாள் வரை பத்தர்களுக்கு அன்னமளிக்கப் பெறும். விசாகத்தன்று வேலன் இரதமேறிப் பவனி வருவான். அன்று மாலையும் மறுநாளும் ஆலயத்துக்கு ஏராளமான ஆங்கிலேயர்களும் உத்தியோகஸ்தர்களும் வந்து கண்டு களிப்பர். அவ்விழாவை நகரத்தார் மற்ற ஊர்களைப் போலவே கொண்டாடுவார்கள். இதற்கு அயலூர்களில் இருந்து பலரும் வருவார்கள். இவ்விழாவை நடத்தும் இவர்களால் ஆலயத்துக்கு அண்மையில் நகரத்தாருக்கு சொந்தமாக உள்ள பங்களாவில் தமிழ்க் கல்வி நிலையம் ஒன்று நிறுவப் பெற்றிருக்கிறது. இதில் இலவசமாக கல்வி போதிக்கப் பெறுவதால் பல மாணவர்கள் படிக்கிறார்கள். இப்பள்ளிக் கூடத்தை நகரத்தார் மிகச் சிரத்தையோடு நடத்துவது போற்றக் கூடியவைகளில் ஒன்று.

இவர்கள் தங்கள் வாணிபத்தைப் பெருக்கவும் ஒற்றுமையோடு வாழ்வதற்கும் கண்டிருப்பது ஓர் வர்த்தக சங்கம். இச்சங்கத்தில் பேரா சமஸ்தானத்தில் உள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் அத்தனையும் அங்கத்தினராகச் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இச்சங்கத்தை ஐக்கிய மலாய் நாட்டின் செட்டியார்கள் வர்த்தக சங்கத்தின் கிளைச் சங்கமாக வைத்து நடத்துகிறார்கள். இதன் இவ்வாண்டுத் தலைவர். உ. ராம. மெ. சுப. சேவு கடையின் பொறுப்பாளரான திரு. இராமநாதன் செட்டியார். இவர் ஆங்கிலம், தமிழ் இரண்டும் கற்றவர். பேசும் வன்மையும் பெற்ற

வர். உதாரகுணமும், உறுதியுள்ள எண்ணமும், உடல் திடமும் கொண்டவர். சோம்பலில்லாது உழைப்பவர். சுருசுருப்பும் கொண்டவர். இவர் 12 ஆண்டுகளாக சுங்கப்பட்டாணியில் இருந்தார். இவருக்கு சுங்கப்பட்டாணியில் "மு. யெ. மு." என்ற விலாசமுள்ள ஓர் கூட்டுத் தொழிலு முண்டு. இவர் ஈப்போ சங்கத்தில் தலைவராய் இருப்பதுடன் பொதுத் தொண்டாற்றுவதிலும் சிறந்தவர். இவரால் சமுகத்துக்கும், இந்தியர்களுக்கும் நலனுண்டு.

இச்சங்கத்தை நிறுவுவதற்கும், ஐக்கிய மலாய் நாட்டின் சங்கத்தை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்தவர்களில் ஒருவர் திரு. சி. ராம. சு. இராமசாமி செட்டியார். இவர் மகிபாலன் பட்டியில் ஓர் பிரபல குடும்பத்தில் தோன்றியவர். இவர் தந்தையார் சின்னையா செட்டியார். அவரின் மூத்த புதல்வர் திரு. இராமசாமி செட்டியார். இவருக்கு இப்போது 38 ஆண்டுகள் இருக்கலாம். இவர் சிறுவயதிலேயே நன்குகற்றவர். தங்கள் ஊரில் பயின்றதோடு மேலச்சிவபுரி "சன்மார்க்க சபையில்" பாலபண்டித வகுப்பில் படித்துத் தேர்ச்சி பெற்றவர். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்ந்திருப்பவர் திருமதி அன்னபூரணி ஆச்சி. இவர் மேலச்சிவபுரி வ. பழ. சா. அ. அண்ணாமலை செட்டியாரின் புதல்வியாவார். இவர்கள் குடும்பத்தினராலேயே சன்மார்க்க சபை நடத்தப்பெறுகிறது. திரு. இராமசாமி செட்டியாரும், அவரின் இல்லக்கிழத்தியும் திருமணம் கொண்ட பிறகும் சன்மார்க்க சபையில் கல்வி பயின்றவர்கள். அதனுல் இருவரும் தமிழில் தேர்ச்சி பெற்றவர்களாவர். இவ்வாறு பயின்ற பின் இவர் தங்கள் கடைத்தொழிலுக்காக கொழும்புக்குச் சென்ருர். அங்கு பன்னாள் இருந்தார். 1922ல் மலாயா வந்தார். அன்று முதல் பல முறை ஈப்போவுக்கு வந்து திரும்பியவர். இப்போது ஈப்போவிலேயே இருக்கிருர். இவர் சமுகத்துக்காகப் பெருந்தொண்டாற்றுகிருர். இவரின் புலமை நிறைந்த அறிவும், சொற்சுவையும், எழுத்தின் வன்மை இனிமையும் போற்றுதற்குரியது. இவரின் புன்சிரிப்போடு கூடிய வதனமும், கருணை நிறைந்த பார்வையும் காண்பதற்குரியது. இவரை மலாய் நாட்டில் உள்ள பலரும் அறிந்திருப்பது போல தாய் நாட்டிலுள்ள பண்டித கூட்டத்தினரும் பேரறிஞர் பல்லோரும் அறிவர். இவரால் சமுகத்துக்கே பெரும் புகழுண்டு. ஆகவே இவருக்கு சமுகமும் இந்திய மக்களும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

உடற்பேணல் அவசியமென் றோர்ந்ததால் மூவாரில்
உடற்பயிற்சிக் கிடமளித்து உயர்ந்தோங்கும் கழகமிதே.



Muar Physical Culture Society.


இந்நகரத்தில் உள்ள கட்டிடங்களில் பல சிறந்தவை. இவைகளில் டவுன் ஹால் (நகர மண்டபம்) இரயில்வே நிலையம், போஸ்டாபீஸ், பாங்க் கட்டிடங்கள், மார்க்கெட்டுகள், மணிக்கூண்டு மற்றவைகள் உயர்ந்தவைகளாகும். இங்கு பேரா சுல்தானும், ரெஸிடெண்டும் தங்கி இருப்பதற்கு அழகிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஓர் பெரிய குதிரைப்பந்தயத் திடலும் உண்டு. ஆகாய விமானங்கள் வந்திறங்குவதற் கேற்ற ஓர் பெரிய திடல் இருக்கிறது. இங்குள்ள கிளப்பில் பல அங்கத்தினர்கள் சேர்ந்து விமானங்கள் ஓட்டிப் பழகுகின்றனர். அதனால் எந்த நேரமும் இங்கு விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டே இருக்கும். இந்நகரை நியூ டவுன், பழய டவுன் என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். நியூ டவுனில் புதிதாகப் பல கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இங்கு சுகாதார முறையோடு வசிப்பதற்குப் பல பங்களாக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் மிகப் பெரிய பங்களாக்களும் உண்டு. அவைகளின் அமைப்பும், அதன் தோட்டங்களின் அழகும் காண்பவர்களுக்கு களியூட்டும். இக்கட்டிடங்களைப் போல எங்கும் காண்பதரிது.

இச்சிறப்பு வாய்ந்த நகரத்தில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று இரும்புத் தொழிற்சாலை. இக் கம்பெனியின் மூலதனம் $1,027,396. இதில் நாள் ஒன்றுக்கு 565 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். மற்றொன்று புகையிலைத் தொழிற்சாலை. இதில் 100 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இச்சாலையிலுள்ள இயந்திரங்கள் ஒரு நிமிஷத்தில் சுமார் 1,500 சிகரெட்டுகளைத் தயாரிக்கக் கூடியவைகள். இன்னுமொன்று ரப்பர்த் தொழிற்சாலை. இதிலும் 100 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். இதில் தயாரிக்கப்படும் ரப்பர் தொட்டிகளையே சானட்ரி போர்ட்டார் கக்கூஸ் இலாகாவிற்கு உபயோகப்படுத்துகிறார்கள். எப். எம். எஸ் இரயில்வே முழுதும் இத்தொட்டிகளே உபயோகம். அதனால் இத்தொழிற்சாலையின் வேலை நன்கு நடைபெறுகிறது. இங்கு கவர்ன்மெண்டாரால் நடத்தப்பெறும் "டையரி பாம்" ஒன்றுண்டு. இது சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. இதில் பல பசுக்கள் வளர்க்கப்படுகின்றன. இதன் மூலம் பல மக்களுக்கு பால், வெண்ணெய் கொடுக்கப்படுகிறது.

ஈயத்தின் விளைவு

ஈப்போ நகரம் ஈய மார்க்கெட்டில் தலை சிறந்ததாகும். இங்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஈயம் எடுக்கின்றனர். முதன் முதல் சீயத்தினரும் மலாயருமாகச் சேர்ந்து "இன்டான்" சுரங்கம் என ஓர் சுரங்கத்தைக்கண்டு வேலை செய்து பயன் அடைந்தனர். இச்சுரங்கம் சயாம் எல்லைக்குள் இருந்தது. இதை ப்பிறகு பேராவுக்கு கொடுக்கப்பட்டது இதற்குப்பிறகே லாருட் பகுதியிலும், கோலாலம்பூர் பகுதியிலும், பாஹாங் பகுதியிலும் பல சீனர்கள் ஈயச் சுரங்கங்களைக்கண்டார்கள். இதை அதிகமாகப் பெருக்க ஆரம்பித்தவர்கள் பிரான்சுக்காரர். இவர்களே 1890ம் ஆண்டில் ஈப்போவுக்கு 24வது மைலில் உள்ள "கம்பார்" பகுதியில் பெரும் சுரங்கங்களாகக் கண்டவர்கள். இவர்களுக்கு இன்றும் ஈப்போவுக்கு 12வது மைலில் உள்ள "கோப்பிங்" என்ற பகுதியில் ஈயச்சுரங்கங்கள் இருக்கின்றன. இவர்களைப் போல பல பகுதிகளிலும் சீனர்களால் பெரும் சுரங்கங்கள் காணப்பட்டன. அதனால் 1896ம் ஆண்டில் டன் 60 பவுன் விலையாக இருந்த ஈயம் டன் 150 பவுன்களாயின. விலை உயரவே பல சீனர்களும், சயாம் காரர்களும், மலாயர்களும், இந்தியர்களில் பஞ்சாபியர்களும், ஈயம் எடுக்க ஆரம்பித்தனர். இவர்களில் பெரும் சுரங்கங்களைக் கண்டவர்கள் சீனர்கள். இவர்கள் ஒவ்வோர் சுரங்கங்களில் 4,000—5,000 கூலிகளை வைத்து வேலை செய்தனர். இன்றும் அதேபோல வேலை செய்யும் பல சுரங்கங்கள் இருக்கின்றன. இவர்கள் வேலை செய்வதைப் பார்த்து ஐரோப்பியர்களும் சுரங்கங்கள் காண ஆரம்பித்தனர். இவர்களில் ஓர் கூட்டத்தினர் 128,350,000 டாலர் மூலதனத்துடன் "மலாயா டின் டிரெட்ஜிங் கம்பெனி" என்ற பெயரால் ஓர் தொழிற்சாலையை நிறுவினார்கள். இவர்களே ஈயம் எடுக்கும் கப்பலை முதன் முதலில் மலாயாவுக்கு கொண்டுவந்தவர்கள். இப்போது இவர்களிடம் 117 கப்பல்கள் இருக்கின்றன. இதே போல பல கம்பெனிகள் இருக்கின்றன. இவைகள் தோன்றி வேலை செய்யவே 1895ம் ஆண்டில் 40,000 டன் எடுக்கப்பட்ட மலாயாவில் 1904ம் ஆண்டில் 51,140 டன்கள் எடுக்கப்பட்டன. அதிகமான ஈயம் உற்பத்தியாகவே உலகத்தில் ஈய விலைகள் குறைந்தன. அத்துடன் தொழிலாளர்கள் சம்பள விகிதத்தில் எடுக்கும் ஈயத்துக்கும் கப்பல்களால் எடுக்கப்படும் ஈயத்துக்கும் கூலி மற்ற வித்தியாசங்கள் சேர்ந்தன. அதனால் பல சுரங்கங்கள் வேலைகள் நிறுத்தப் பெற்றன. அவ்வாறிருந்தும் 1929ம் ஆண்டுக் கணக்குப்படி மலாயாவில் 67,000 டன்கள் ஈயம் எடுக்கப்பட்டது. இதனால் மார்க்கெட்டில் ஈயம் அதிக

வத்துப்பார் வாழ்வணிகர் வந்திக்க வென்று தங்கள்
பக்தியால் லாக்கிவைத்த பாலதண்ட பாணி கோயில்.



Batupahat Temple.

மாக கையில் இருக்க நேர்ந்தது. இதை ஒழுங்குப் படுத்துவதற்காக 1931ஆ மார்ச்சுமீ ஈயத்துக்கும் கோட்டா முறை ஏற்படுத்தினர் கள். அதன்படி 1933ம் ஆண்டில் மலாய் நாட்டில் எடுக்கப்பட்ட ஈயம் 22,000 டன்கள், இதற்குமேல் ஒவ்வோராண்டுகளிலும் கோட்டா முறைவிகிதப்படி ஈயங்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு எடுக்கப்படும் ஈயங்களின் கணக்குப்படி 1937ஆ செப்டம்பர்மீ முடிய ஓராண்டுக்கு உலக உற்பத்தி 1,977,000 டன்கள் இந்த ஈயத்தை அமெரிக்கா 17—7, பங்கும் பிரிட்டன் 12—2, பங்கும் ரஷியா 35—5, பங்கும் ஜெர்மனி 28—9, பங்கும் ஜப்பான் 17—8, பங்குமாக உபயோகப்படுத்தி வருகிறது. இங்கு மலாய் நாட்டில் எடுக்கும் ஈயங்கள் மணலாக இருப்பவைகளை உருக்கிக் கட்டியாக்க பினங்கில் "ஈஸ்டர்ன் ஸ்மெல்ட்டிங் கம்பெனி" என்ற ஓர் நிலையம் இருக்கிறது. அங்கிருந்துதான் அதிகமாக ஈயம் கட்டி ஆக்கி வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. மற்ற இடங்களில் இருக்கும் இயந்திரங்கள் மிகச் சிறியவைகளாகும். இந்நாட்டின் ஈய உற்பத்தியில் பெரும் பகுதி கின்டா ஜில்லாவிலேயே உண்டாகிறது. இதற்காக ஈப்போவில் ஏற்பட்டிருக்கிற கம்பெனிகள் அதிகம். அவைகளால் ஈப்போவின் வியாபாரம் பெருக்கமடைந்திருக்கின்றன.

இந்நகரத்துக்கு அண்மையில் பல பளிங்குக்கல் மலைகள் இருக்கின்றன. இம்மலையின் ஓர்பகுதியில் அக்கர்களில் சாமான்கள் செய்யும் தொழிற்சாலை உண்டு. அச்சாலை இப்போது அதிகமான வேலைசெய்யவில்லை. இதேபோல மற்றொரு மலையுண்டு, அங்குபல குகைகள் உண்டு. இதில் பல சீனக்கோயில்கள் இருக்கின்றன. ஏராளமான துறவிகள் வாழ்கின்றார்கள். இக்கோயில்கள் எல்லாம் மலையின் அடிவாரத்தில் ஒவ்வோர் அறைகளைப்போல கட்டப்பட்டிருக்கின்றன. இங்குள்ள முதற்கட்டை மலையின் ஓர் பகுதியில் பத்து மலையைப்போன்ற ஓர் வேல் அமைந்துள்ள ஆலயமும் உண்டு. இது அவ்வளவு பிரசித்தம் உடையதல்ல. இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது. அதனால் அங்கு யாரும் செல்ல கவர்ன்மெண்டார் அநுமதிக்கவில்லை. இந்நகருக்கு சமீபத்தில் பல சிறிய ஊர்கள் இருக்கின்றன. அவைகளில் சுங்கை சிப்புட் ஒன்று. இங்கும் பல ஈயச் சுரங்கங்கள் இருக்கின்றன. இதில் ஓர் சுரங்கத்தில் வேலைசெய்யும் போது "சுப்பிரமணியரின்" உருவம் அமைந்த வெண்கலச்சிலை ஒன்று அகப்பட்டது. அச்சிலை சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் புதைபட்டிருக்குமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சமீபத்தில் எடுக்கப்பட்ட அச்சிலையை "கம்பெனியார்" இங்கிலாந்துக்கு அனுப்பி இருக்கின்றனர்.

ஈப்போ நகருக்கு அண்மையில் குனுங்கர்பூ குன்றுகளின் ஓரத்தில் அமைக்கப்பெற்றுளது "தஞ்சோங் ரம்பூஸ்தான்" என்ற ஊர். இங்கு ஓர் "பைத்தியகாரர்களின்" ஆஸ்பத்திரியுண்டு. மலாய் நாட்டில் இதேபோல மிகப்பெரிதான நிலையம் வேறெங்குமே கிடையாது. அங்கு சென்று பார்த்தாலும் அவ்வாறுதான். அங்கு நடைபெறும் காட்சிகளைப்போல வேறெங்கும் பார்க்கவும் முடியாது. இந்நகரில் வைத்திய நிலையங்கள் பல இருக்கின்றன. இவைகளில் ஜெனரல் ஆஸ்பத்திரியை புதிதாகக் கட்டுவதற்காக 25 லெட்ச வெள்ளி திட்டம் போட்டிருக்கிறார்கள். இக்கட்டிடம் முடிந்தால் மலாயாவிலேயே மிகப்பெரிதான கட்டிடமாக விளங்கும். இதேபோல எவ்வகையிலும் சிறப்புற்று விளங்கும். ஈப்போ நகரைப் பார்க்காத கண்கள் கண்களாகா!

இந்நகருக்கு 12-வது மைலில் உள்ள "கோப்பிங்" 24-வது மைலில் உள்ள "கம்பார்" என்ற ஊர்களிலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவர்கள் எல்லாம் டெலுக் ஆன்சன் தெண்டாயுதபாணியின் சித்ரா பௌர்ணமி விழாவில் கலந்து கொள்பவர்கள். அவ்விழாவைச் சிறப்புற நடத்துபவர்களாகும். இவர்களில் பெரும் சொத்துகளுக்குடையவர்கள் பலருண்டு.

பாடாங் பாடாங்-தாப்பா

பாடாங் பாடாங் ஜில்லாவின் தலைநகரம் தாப்பா. இங்கு அரசியல் நிலையங்கள் (டிஸ்ட்ரிக்ட் ஆபிஸ்கள்) மற்ற இடங்களைப்போல இருக்கின்றன. இங்கும் சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவ்வூருக்கு 7 மைலில் உள்ளது தாப்பா ரோட். அங்குதான் ரயில்வே நிலையம். இங்கிருந்தே டெலுக் ஆன்சனின் கிளைப்பாதை பிரிகிறது. இப்பகுதியிலும் பல ஈயச் சுரங்கங்கள் இருக்கின்றன. ரப்பர் விளைவும் மிகுதி. தாப்பாவிலிருந்து "கமரன் ஹைலாண்ட்" தானுராத்தா செல்ல நல்ல ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் வழியாக கார்கள் ஏறி இறங்கும்போது அதிக பயமாக இருக்கும். இக்காமரன் ஹைலாண்டின் சிகரம் 7,186 அடி உயரமாகும். இதில் சுமார் 4,850 அடி உயரத்தில் சில கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அங்கு சிலர் வசிக்கின்றனர். அங்கு பயிராகும் காய்கறிகள், கிழங்குகள், மலர்கள் மிகப்பெரியவை. அங்குள்ள அருவிகளின் நீர் அதிகக் குளிர்ச்சியானவை. இம்மலையில் தங்குவதற்கும் பழக்கம் வேண்டும். இம்மலைக்குச் செல்லும் வழி தாப்பாவில் இருந்து 9 வது மைலில் சிறிது சிறிதாக ஏற்ற

முள்ளவை. இவ்வழியின் 14 வது மைலில் ஓர் நீர் வீழ்ச்சி யுண்டு. 29½ மைலில் ரெங்லெட் (Ring Let) என்னும் கடைத் தெருவும் போஸ்டாபீஸ் போலீஸ் ஸ்டேஷன்களும் இருக்கின்றன. 31 வது மைலில் சன் பீன் காட் என்ற ஓர் பங்களா இருக்கிறது. இதில் பலரும் தங்கலாம். 33 வது மைலில் பந்தயக் குதிரைகளை வைத்து வளர்க்கிறார்கள். 39½ மைலில் தானு ராத்தா கடைத்தெரு போஸ்டாபீஸ், போலீஸ் ஸ்டேஷனும் வாரம் 3 முறைகூடும் கோர்ட்டும் இருக்கிறது. இங்கு சில ஹோட்டல்கள் இருக்கின்றன. 42 வது மைலில் கிட்டா, ஜோஹோர், பேரா சுல்தான்களின் பங்களாக்கள் இருக்கின்றன. 47 வது மைலில் ஆஸ்ட்ரேலியா பசுவின் பண்ணை வைத்துள்ளார்கள். 50 வது மைலில் வரை ரோட்டு திறக்கப்பட்டிருக்கிறது. இதுவும் பார்க்கவேண்டிய வைகளில் ஒன்று. இம்மலை பாஹாங் எல்லைக்குட்பட்டது.

இந்த ஜில்லாவின் எல்லையையும் சிலாங்கூர் சமஸ்தானத்தின் எல்லையையும் பிரிப்பது தஞ்சமாலிம். இங்கும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இங்கு ஓர் பெரிய மலாய்ப் பள்ளிக்கூடம் உண்டு. அதற்கு சுல்தான் "இத்ரிஸ்" நார்மல் ஸ்கூல் என்று பெயர். இப்பள்ளிக்கூடத்தில் மலாய் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப்பெறுகிறது. இப் பள்ளிக்கூடத்தில் தேர்ச்சி பெற்றுப்பட்டம் வாங்கியவர்களே இப்போது மலாய் ஆசிரியர்களாகலாம். இது ஓர் சிறந்த நிலையம்! பெரிய கட்டிடம். பரந்த இடம்! இங்கு பல கைத்தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன! மலாயாவிலேயே மலாய் ஆசிரியர்களை வெளியாக்கும் பெருத்த நிலையம் இதுதான்.

லோயர் பேரா-டெலுக் ஆன்சன்

லோயர் பேரா ஜில்லாவின் தலைநகர் டெலுக்ஆன்சன். இங்கு ஓர் துறைமுகம் உண்டு. இதன் நீளம் 312 அடி. ஆழம் 23 அடி. இங்கும் 5 டன் சாமான்கள் தூக்கும் இயந்திரம் ஒன்றும், ஒரு டன் சாமான்கள் தூக்கும் இயந்திரங்கள் பலவும் இருக்கின்றன. இங்கு 36,052 சதுர அடிகள் கொண்ட சாமான் வைக்கும் பண்டகசாலை இருக்கின்றன. மலாக்கா கடலில் சங்கமம் ஆகும் இந்தப் பெரிய ஆற்றின் துறைமுகத்தில் உள்நாட்டுக்கப்பல்கள் வந்து பிடிக்கும். பேரா சமஸ்தானத்தின் பெரிய நகரான ஈப்போவுக்கு கடல் வழியாக வரும் சாமான்கள் இங்கேயே இறக்குமதியாகும். அதற்காக இங்கிருந்து ஈப்போவுக்கு நேராக பல இரயில்கள் ஓடுகின்றன. இவ்

விருப்புப்பாதை தாப்பா ரோட்டுடன் இணைக்கப்பட்டவை. இப்பாதையின் இருபுறங்களும் தண்ணீர்ப்பிடிப்புள்ள காடுகள் நிறைந்தவை. இக்காடுகளைப் பல இடங்களில் அழித்து நெல் விவசாயம் செய்யப்படுகிறது. இக்காடுகளில் முன்பு பல யானைகள் இருந்தன. இப்போது அதிகமில்லை. இப்பாதையில் 1894ம் ஆண்டில் ஓர் காட்டுயானை சென்று கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த இரயில் இன்ஜின் மோதி யானை இறந்துவிட்டது. அந்த யானையை வழியின் பக்கத்தில் புதைத்து 17-8-1894ல் ஓர் பெரிய போர்டும் போட்டிருக்கிறார்கள். அதில் "இரயிலுடன் மோதிய காட்டுயானையை இங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது" என்றெழுதப்பட்டிருக்கிறது. இவ்விருப்புப்பாதையோடு டெலுக்ஆன்சன் செல்ல சில மோட்டார் பாதைகளும் இருக்கின்றன.

இத்துறை முகத்தால் சிறப்புறும் டெலுக்ஆன்சனிலேயே பேரா சமஸ்தானத்தின் "ராஜா முடா" இருக்கிறார். இங்கு பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவர்களாலும் தாப்பா, கம்பார், கோப்பிங், சித்தியாவான் மற்ற ஊர் நகரத்தார்களாலும் கட்டப்பட்டது பேரா தெண்டாயுதபாணி கோயில். இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள தண்டாயுதன் பழநி மலையில் இருந்து வந்து குதித்தவன். இவன் பெருமைகளை முன்பே கூறப்பெற்றிருக்கிறது. பழநியைப் போன்று இங்கும் பல பல விதமாக அலங்கரிப்பார்கள். அத்தனையையும் ஏற்று அழகு படுத்துவான் ஆண்டவன். இவ்வாலயம் ஏற்பட்டு 60 ஆண்டுகள் ஆகின்றன. இதைப் புதிதாகக் கட்டி 12 ஆண்டுகள் ஆகின்றன. இங்கு கொண்டாடும் விழா சித்திரா பௌர்ணமி. அவ்விழாவை 3 நாட்கள் கொண்டாடுகிறார்கள். பௌர்ணமி அன்று அங்குவரும் மக்கள் கணக்கிலடங்கா. பக்கத்தில் பெருத்த எஸ்டேட்டுகள் மிகுதி. ஒவ்வோர் எஸ்டேட்டிலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் உற்சவங்காண வருவர். எல்லோருக்கும் உணவளிப்பர் நகரத்தார். மறுநாள் இரவு வேலன் வெள்ளி ரதத்தில் பவனி வருவான். அவ்வைபவம் பார்க்கத் தக்கவைகளில் ஒன்று. இவ்விழாவையும், ஆலயத்தையும் மிகப்பொறுப்பாக நடத்துபவர்கள் டெலுக்ஆன்சன் நகரத்தார். இவர்களில் பலர் பெரும் சொத்துக்குடையவர்கள். இவர்களால் வியாபாரிகளுக்கு பெருத்த உதவியுண்டு. அதனாலும் துறை முகத்தின் பெருக்கத்தாலும் டெலுக்ஆன்சன் சிறந்து விளங்குகிறது. இங்கு ரப்பர்த் தோட்டங்களும் தென்னந்தோட்டங்களும் மிகுதி. இத்தென்னை மரங்கள் பெருத்த எஸ்டேட்டுகளாக இருக்கின்றன. சில இடங்

களில் தேங்காய்களை சிறு குழந்தைகள் எட்டிப்பறிக்கக்கூடிய மரங்கள் பல இருக்கின்றன. இம் மரங்கள் உயரத்தால் குறுகியிருப்பதைப்போல தோன்றிய மூன்றுவதாண்டிலேயே காய்களைத் தந்து விடும். இதனால் டெலுக்ஆன்சனில் கொப்பரா வியாபாரமும் மிகுதி. இத்தோட்டங்களிற் பல ஆங்கிலேயருக்குச் சொந்தமானவை. அவர்கள் எஸ்டேட்டுகளிலேயே இயந்திரங்கள் வைத்து எண்ணை எடுக்கிறார்கள். இதேபோல சிலாங்கூர் சமஸ்தானத்திலும் பல தென்னந்தோட்டங்கள் இருக்கின்றன. தென்னந்தோட்டங்களின் விபரம் புள்ளி விபரத்தில் கூறப்பெறும்.

டின்டிங்ஸ்—லூமூட்.

டின்டிங்ஸ் ஜில்லாவின் தலை நகரம் லூமூட். இங்கு ஓர் கடற்றுறைமுகம் உண்டு. இத்துறைமுகம் தொடுவாய்ப் பகுதிபுடனிருந்து பேரா சமஸ்தானத்துடன் சேர்க்கப்பட்டது. இங்குள்ள துறைமுகத்தின் நீளம் 550 அடி. ஆழம் 30 அடி. இங்குள்ள பண்டகசாலையின் சதுர அடி 3,580. இத்துறைமுகம் அமைந்த லூமூட் ஓர் சுகாதார இடமுமாகும். இவ்வூருக்கு 7வது மைலில் உள்ளது சித்தியாவான். இது ஓர் சிறிய ஊர். ஆயினும் பார்க்க அழகுள்ளவை. இங்கு சில நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் கடைகளும், சார்ட்டர்ட் பாங்கும் இருக்கின்றன. இவ்வூரைச்சுற்றி பல ரப்பர்த் தோட்டங்கள் இருக்கின்றன.

பல ஜில்லாக்களாகப் பிரித்து ஆளப்பெறும் பேரா சமஸ்தானம் செல்வ வளத்தில் சிறந்தது. இதன் வரவு செலவு மற்ற விபரங்கள் ஐக்கிய மலாய் நாட்டின் மொத்தப் புள்ளி விபரங்களிற் கூறுவதால் இங்கு வேறு குறிக்கவில்லை. இச்சமஸ்தானத்தில் வாழும் மக்களை சுல்தானும் ஆங்கிலவரசும் நல்ல முறையில் காத்து வருகின்றார்கள். அதனால் வாணிபம் பெருக்கமுற்று, வளம் நிறைந்து எல்லோரும் இன்பவாழ்வைப் பெற்றிருக்கின்றனர்.

[2]. ஆ. சிலாங்கூர் சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)


"சிலாங்கூரின் செல்வவளச் செய்திபலர் காண
கலைநிறைந்த தண்டமிழே காட்டு"

ஐக்கிய மலாய் நாட்டின் மற்றொரு சமஸ்தானம் சிலாங்கூர். இச்சமஸ்தானம் வடக்கே பேராவையும், தெற்கே நகரி செம்பிலானை யும், கிழக்கே பாஹாங்கையும், மேற்கே மலாக்கா கடலையும் எல்லை யாகக் கொண்டுளது. இதன் பரப்பு 3195 சதுரமைல்கள். இச் சமஸ்தானத்தில் மலாக்காவில் போர்த்துக்கியர் ஆட்சி இருந்த காலத் தில் அவர்கள் புகுதவில்லை டச்சுக்காரர்கள் (உலாந்தாக்காரர்கள்) காலத்திலேயே கோலா சிலாங்கூரில் ஈயங்களை வாங்கி சுத்தப்படுத்த ஓர் தொழிற்சாலையைக் கண்டனர். அதனால் அங்கு பல குடிகள் வந்து சேர்ந்தன.

சிலாங்கூர் சுல்தான்களின் மரபு

குடிகள் அதிகமாகவே சில தலைவர்கள் தோன்றினர். இவர் களில் புக்கிஸ்களின் தலைவராக இருந்த "டாயிங் சேலாக்" என்ப வர் 1718ம் ஆண்டில் ஜோஹோர் ராஜகுமாரியை மணந்தார். இவர் களின் புதல்வர் "ராஜ லூமு" என்பவரை 1743ம் ஆண்டில் சிலாங் கூரின் முதலாவது சுல்தானாக ஆக்கினார்கள். "சுல்தான். சாலி ஹித்தின் ஷா" வென்ற பெயருடன் இவர் ஆட்சி செலுத்தினார். இவர் ஆட்சி 40 ஆண்டுகள் (1783) வரை நடந்தது. இவ ருக்குப் பிறகு இவர் மகன் "சுல்தான் இப்ராஹீம்ஷா" வென்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் ஆட்சி 43 ஆண்டுகள் (1826) வரை நடைபெற்றது. மூன்றாவதாக இவர்கள் மரபைச் சேர்ந்த "சுல்தான் முகமதுஷா" வென்பவர் பட்டம்பெற்று 30 ஆண்டுகள் (1856) வரை ஆட்சி புரிந்தார். நான்காவதாக "சுல்தான் அபுதுல் சமாத்" என் பவர் ஆட்சியை ஏற்றார். இவர் காலத்திலேயே பேராவுக்கும் சிலாங் கூருக்கும் எல்லைத் தகராறுகள் உண்டாகி பங்கோர் உடன்படிக்கை ஏற்பட்டது. (226ம் பக்கம் பார்க்க) அதன் பிறகு 1874ம் ஆண் டில் கடற்கொள்ளைக்காரரின் தொந்தரவும், உள்நாட்டின் சிற்றரசியல்

வத்துபகாட் வாழ் வணிகர் வர்த்தகசங்க நிலயமிது.
ஜாலன் சின்னுங்.



Batupahat Chettiars Association.

மேன்மை தங்கிய கிட்டா சுல்தான்.



His Highness Sir Abdul Hamid Halim Shah. K. C. M. G.
Kedah.

களின் குழப்பங்களும் ஏற்பட்டன. அதற்காக இவர் பிரிட்டிஷாரின் பாதுகாப்பை நாடினர். அன்று முதல் பிரிட்டிஷார் ஓர் ரெஸிடெண்டை அங்கு நியமித்தார்கள். கடற்கொள்ளைக்காரர்களையும் கலகங்களையும் அடக்கினர்கள். 1878ம் ஆண்டில் கோலசிலாங்கூரில் இருந்த துறைமுகத்தை கிள்ளானுக்கு மாற்றினர்கள். சுல்தான் மாளிகைகளை கிள்ளானில் கட்டினர்கள். அங்கு ஓர் தூக்குமேடை, சிறைச்சாலை, குதிரைப் பந்தயத்திடல்களை உண்டு பண்ணினர்கள். (இவைகள் எல்லாம் ஆங்கிலேயர் வருமுன்பே ஏற்பட்டிருந்ததாகவும் சிலர் கூறுகிறார்கள்) இவைகளை உண்டு பண்ணி சிலாங்கூரின் தலைநகராக கோலாலம்பூரையே ஏற்படுத்தி சுல்தான் ஆட்சி செலுத்திவந்தார். இவரின் ஆட்சி 41 ஆண்டுகள் (1897) வரை நடந்தது. இதற்கிடையில் 1895ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி (194ம் பக்கம் பார்க்க) ஐக்கிய மலாய் நாட்டின் சமஸ்தானங்களின் ஒன்றாக சிலாங்கூரும் ஆகியது.

சுல்தான் "அபுதல் சமாத்" என்பவரின் ஆட்சிக்குப் பிறகு மேன்மை தங்கிய "சுல்தான் அலாவுதீன் சுலேயுமான்ஷா, கே. ஸி. எம். ஜி., ஜி. ஸி. எம். ஜி., கே. ஸி. வி. ஓ., இப்னி அல்மர்ஹூம் ராஜாமூடா மூசா பட்டத்துக்கு வந்தார் இவர் சுல்தான் ராஜா மூசாவின் புதல்வர். 11-9-1865ல் பிறந்தவர். இவர் பட்டத்துக்கு வரும்போது சுல்தான் மரபைச் சேர்ந்த மற்றும் சிலர் வழக்காடினர். அதில் வெற்றிபெற்று 11-9-1897ல் பட்டத்துக்கு வந்த இவர் வாழ்க்கையிலும் வெற்றிபெற்றார்.

இவர் பட்டத்துக்கு வந்தபின் சிலாங்கூர் சமஸ்தானத்தில் காடுமுரடான பாதைகளைத் திருத்தி நேர் வழிகளாகவும், நல்ல ரோடுகளாகவும் ஆக்கினர். பலபல புதிய கட்டிடங்களைக் கண்டார். மலாய் பெண்களுக்குக் கல்வி போதிக்கக் கூடாது என்றிருந்த வழக்கத்தை மாற்றினர். தன் சொந்தச் செலவில் சிறுமிகளுக்குப் பல பள்ளிக்கூடங்களை நிறுவினர். மத சம்மந்தமான பல நூல்களை மலாய் மொழியில் வெளியிட்டார். பல இடங்களில் மசூதிகளை நிறுவி இமாம்களை வைத்தார். கிள்ளானில் தெசவுச்சாலை, கல்வி நிலையங்களை நிறுவினர். மலாய்த் தொண்டர்படை ஒன்றை தம் செலவில் ஏற்படுத்தினர். இவரின் ஆட்சியால் சிலாங்கூர் சமஸ்தான மக்கள் பல நலன்களைப் பெற்றனர். 11-9-37ல் இவர் பட்டம் பெற்று ஆட்சி செலுத்திய 40வது ஆண்டுவிழா எங்கும் கொண்டாடப் பெற்றது. இப்பெருந்தகைமை வாய்ந்த இவர் 1938ஞு ஏப்ரல் மாதத்தில் காலஞ்சென்றார்.

இவருக்குப் பிறகும் சுல்தான் பட்டத்தில் வழக்குகள் நேர்ந்தன. அதில் இவரின் இரண்டாவது குமாரன் இராஜமூடா தொங்கு ஆலம்ஷா அவர்களையே நியமித்தனர். இவர் 13-5-1898ல் பிறந்தவர். தந்தையாரைப் போன்று மதப் பற்றிலும், குடிகளிடத்து அன்பிலும் சிறந்தவர். தொங்கு லைத்மானுவென்ற பெயருடன் கோலக்கங்சார் கல்லூரியில் மலாய்மொழியும் ஆங்கிலமும் பயின்றவர். 1920ம் ஆண்டில் தகப்பனாரின் மெய்காப்பாளரானார். பிறகு சிலாங்கூர் செகரெட்டரி பேட்டில் சேர்ந்து வேலைகளைக் கற்றார். பலருடனும் பழகி நற்புகழும் பெற்றார். அதனால் 1936ல் இராஜா மூடாவாகினார். தந்தையாருக்குப் பின் 4-4-1938ல் இவரை சிலாங்கூர் சமஸ்தானாதிபதியாக "மேன்மை தங்கிய சுல்தான் ஹிஸாமுதீன் ஆலம் ஷா. கே. ஸி. எம். ஜி., இப்னி அல்மர்ஹூம் சுல்தான் அலாவுதீன் சுலைமான் ஷா. கே. ஸி. எம். ஜி., ஜி. ஸி. எம். ஜி., கே. ஸி. வீ. ஓ., என்ற பெயருடன் பிரகடனம் செய்யப்பட்டார். இவரே இப்போது சிலாங்கூர் சமஸ்தானாதிபதி. இவரின் முடிசூட்டு விழா ஓர் நல்ல நாளில் நடைபெறும். இவர்களுக்காக கிள்ளானில் புதிதாக ஓர் அரண்மனை கட்டப்படுகிறது. அவ்வரண்மனையை முடிசூட்டுவிழாவுக்குள் முடித்துவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு வேலைசெய்கிறார்கள். இதுவும் கோலக்கங்சார் அரண்மனையைப் போன்று ஓர் பெரிய கட்டிடமாகும்.

போர்ட்ஸ்வெட்டன்ஹாம் துறைமுகம்

சிலாங்கூர் சமஸ்தானத்தின் பெரிய துறைமுகம் முதலில் கோலாசிலாங்கூரிலேயே இருந்தது. அதை 1878ம் ஆண்டில் கிள்ளானுக்கு மாற்றினார்கள். இத்துறைமுகத்தை 1908ம் ஆண்டில் கோலக்கிள்ளானுக்கு மாற்றிவிட்டார்கள். இது கிள்ளானிலிருந்து 7வது மைல். இந்தத் துறைமுகத்துக்கே "போர்ட்ஸ்வெட்டன்ஹாம்" என்ற பெயர். இப்பெயர் மலாய் நாட்டின் தேசாதிபதியாய் இருந்தவரின் பெயராகும். இப்போது இத்துறைமுகத்திலேயே இந்தியாவிலிருந்துவரும் கப்பலும் மற்ற கப்பல்களும் பிடிக்கப்படுகிறது. இத்துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் நீளம் 1,008 அடி. ஆழம் 44 அடி. இங்கு 2, 3 டன்கள் தூக்கக்கூடிய இயந்திரம் ஒன்றும் இருக்கிறது. 11,000 டன் நிறையுள்ள கப்பல்கள் வந்து நிற்க வசதியுண்டு. 153,411 சதுர அடிகளின் பரப்புள்ள 17 பண்டகசாலைகள் இருக்கின்றன. இப்பாலத்தின் அண்மையில் 3 வரிசை இரயில் தண்டவாளங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளில் வந்துசெல்லும் இரயில்களால் ஏற்றுமதி, இறக்குமதி

வசதி அளிக்கப்படுகின்றன. இங்கு ஓர் குவாரண்டைனும் இருக்கிறது. இத்துறைமுகத்தில் இறக்குமதி சாமான்கள் பல இடங்களுக்கு ஏற்றுமதியாவதால் இங்கு பல வியாபாரிகள் இருக்கின்றனர்.

விவசாயமும், விளைபொருளும், வெந்நீர் ஊற்றும்

இச்சமஸ்தானத்தில் விவசாயத்தைப் பெருக்க வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அகில மலாயாவின் ரப்பர் ஆராய்ச்சிக் கழகத்தாரால் நடத்தப்பெறும் விவசாயக் கல்லூரி சிலாங்கூர் சமஸ்தானத்திலேயே "செர்டாங்" கில் இருக்கிறது. (இவ்விபரம் முன்பும் கூறப்பெற்றிருக்கிறது) இங்கு பல மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். 1938வது எப்ரல்-மீ வரை 48 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியானவர்கள். இப்போது பயிற்சி பெறும் மாணவர்கள் 40. இங்கு ரப்பரின் விளைவைக் காட்டுவதோடு, தென்னை பயிரிடும் முறை, ஜவ்வரிசி, புகையிலை, கரும்பு, இஞ்சி முதலியவைகளைத் தயாரிக்கும் முறையும் கற்றுக்கொடுக்கப்பெறுகிறது. அதுடன் பல கால்நடைப்பிராணிகளையும் வைத்து வளர்க்கின்றனர். அவைகளுக்காக "சினி" என்ற ஓர்வகைப்புல்லை வளர்க்கின்றனர் இவைகளைத்தின்று மாடுகள் செழித்திருக்கின்றன. இதேபோல பல இடங்களில் பல பயிற்சிகளுண்டு.

நெல் விவசாயத்துக்காக "பாச்சாங் பெடுனு தேக்கம்" என்ற ஓர் கால்வாய் அமைத்திருக்கிறார்கள். இதற்கு $250,000 செலவு. இக்கால்வாய் சுமார் 17,000 எக்கர் நிலங்களுக்கு நீர் வசதி அளிக்கிறது. இதேபோல 1935ம் ஆண்டில் பெர்னங் அணைக்கட்டும், கூவாக் அணைக்கட்டும், 1936 ம் ஆண்டில் ஜெண்டாராம் நீர்த்தேக்கமும், 1937ம் ஆண்டில் ஊலுலாங்காட் நீர்த்தேக்கமும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளால் பல ஆயிர எக்கர் நிலங்கள் நெல் வெள்ளாமை செய்யப்படுகின்றன. இச் சமஸ்தானத்தில் இரப்பரும், தென்னையுமிகுதி. அவைகளைப் பல தோட்டக்காரர்கள் பயிரிடுகின்றார்கள். விபரங்கள் புள்ளி விபரத்தில் காண்க.

இச் சமஸ்தானத்தின் தலைநகரான கோலாலம்பூரில் இருந்து காஜான் செல்லும் வழியில் 9வது மைலில் ஊலுலாங்காட் ரோட்டில் 16½ மைலில் உள்ளது டுசன்துவா. இங்கு ஓர் வெந்நீர்க் கிணறு இருக்கிறது. மலாயாவில் உள்ள வெந்நீர் ஊற்றுகளில் இதுவே மிகப்பெரிது. வசதியுமுள்ளது. இவ் வெந்நீரை குழாய் வழியாகக் கொண்டுவந்து ஓர் குளத்தில் பெருக்குகிறார்கள். அக்குளம் அழ

காக சிமிண்டினால் கட்டிவிடப்பட்டிருக்கிறது. இக்குளத்தில் உள்ளே இறங்கிச் செல்லச் செல்ல ஆழமாக இருக்கும். கரையிலிருந்தபடியே குதித்து விளையாட ஏற்றுமரங்களும் உண்டு. குளக்கரையின் இரு புறத்திலும் பல அறைகள் இருக்கின்றன. இவைகளில் உடை உடுத்தத் தோது. இக்குளத்துக் கண்மையில் நான்கு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தொட்டியில் தண்ணீரைப் பெருக்கிக் குளிக்க என்னுபவர்கள் அங்கு குளிக்கலாம். இங்கு ஓர் ஹோட்டலும் உண்டு. இங்கு குளத்தில் இறங்கி குளிப்பதற்கு ஆள் ஒன்றுக்கு 25 செண்ட் கொடுக்கவேண்டும். கொடுத்தாலும் இதேபோல சுத்தமான வெந்நீரையும், குளத்தின் அமைப்பு, அழகுகளையும் வேறெங்கும் காணமுடியாது. இயற்கையாகவே கெந்தகப் பூமியால் உண்டாகும் வெந்நீர் ஊற்று மலாயாவில் பல இடங்களில் இருக்கின்றன. அவைகளில் எல்லாம் சிறந்தவை காஜாஙுக்கு அண்மையில் உள்ள டுசன்துவா ஊற்றே. இந்நாட்டில் பார்க்கக் கூடியவைகளில் இதுவொன்று.

நிலக்கரிச் சுரங்கம்

இந்நிலக்கரிச் சுரங்கம் சிலாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ரவாங் நகருக்கு அண்மையில் இருக்கிறது. இதற்கு "பத்து ஆராங்" சுரங்கம் என்று பெயர். இதற்குச் செல்பவர்கள் ரவாங்கிலிருந்து ஓர் பெருங்காட்டு வழியாகச் செல்லவேண்டும். ஆனால் நல்ல ரோடிருக்கிறது. இதை "மலாயா சுரங்கக் கம்பெனி"யார் நடத்துகிறார்கள். இங்கு பல தொழிலாளர் வேலை செய்கின்றனர். இவர்கள் வேலை செய்ய சுரங்கத்தில் இறங்கும்போது கையில் ஓர் விளக்குடன் செல்வார்கள். வேலை செய்யும்போது அவ்விளக்கைத் தலையில் சொருகிக்கொள்வார்கள். இவ்விளக்குகளே அங்கு வெளிச்சத்தைத் தருவனவாகும். அங்கு எடுக்கப்படும் நிலக்கரிகளை வெளியே கொண்டுவர பல டிராக்குகள் இருக்கின்றன. இவைகளை வெளியே தனித்தனியாக இழுத்து வந்து இன்சினில் பிணைப்பார்கள். இச்சுரங்கத்தில் 1937ம் ஆண்டில் எடுக்கப்பட்ட நிலக்கரி 8,003,890 டன். இக்கரிகளை எப். எம். எஸ். இருப்புப்பாதையார் அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு சிறு பகுதி, தொழிற்சாலைகளும், செங்கல் சுண்ணாம்புக் காளவாய்களுக்கும் உபயோகமாகின்றன. இந்நிலக்கரியின் மலை உள்ள பூமி மலாயாவில் பல இடங்களில் இருக்கின்றன. அதிகமாக வேலை செய்து நிலக்கரியை எடுப்பது "பத்து ஆராங்" சுரங்கம் ஒன்றே.

செட்டியார்களும் ஆலயமும்

சுல்தான் வசிக்கின்ற கிள்ளானில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் குடியேறி இற்றைக்கு 70 ஆண்டுகள் ஆகின்றன. இவர்கள் இன்றும் உன்னத நிலையில் இருக்கிறார்கள். இவர்களிற் பெருஞ் சொத்துக் குடையவர்கள் பலர். இவர்களின் வாணிபத்தை வளர்க்க, ஒற்றுமையைப் பெருக்க இங்கும் ஓர் வர்த்தக சங்கம் உண்டு. இச் சங்கமும் ஐக்கிய மலாய் நாட்டின் செட்டியார்கள் வர்த்தக சங்கக் கிளைகளில் ஒன்றே. ஆயினும் இச்சங்கம் தோன்றிய காலந்தொட்டு ஆற்றிய தொண்டுகள், ஆற்றுந் தொண்டுகள் பல. இதன் இவ்வாண்டுத் தலைவர் திரு. மு. ராம. குமரப்ப செட்டியார். காரியதரிசி அழ. ப. சித. அரு. அண்ணாமலை செட்டியார். இருவரும் இளைஞர்கள். தீவிரமாக வேலை செய்பவர்கள். சமூக முன்னேற்றத்தில் பெருந்தொண்டாற்றுபவர்கள். இவர்களில் மு. ராம. குமரப்ப செட்டியாரையும் அவரின் குடும்பத்தாரையும் உலகம் அறியும். இவரின் தந்தையார் ராமன் செட்டியாரும், சிறிய தந்தையார் பெரிய கருப்பன் செட்டியாரும் கிள்ளானில் பல நாள் இருந்தவர்கள். பலருக்கு உதவி புரிந்தவர்கள். இவர்களிடம் உதவி பெறாத ஒருவரை இங்கு காண்பதே அரிது. இவர்களிருவரும் பெருங் குணம் பெற்றதைப் போன்று ஒற்றுமையிற் சிறந்து ஒன்றாக வாழ்ந்தவர்கள். இவர்களில் திரு. ராமன் செட்டியார் 1881ம் ஆண்டில் (விசுஹூல) அரிமளத்தில் பிறந்தார். 16வது வயதில் தங்கள் தொழில் கருதி கிள்ளான் வந்தார். அன்றுமுதலே புகழுக் குரியாரானார். 5 ஆண்டுகள் கிள்ளான் செட்டியார் சங்கத்தின் தலைவராக இருந்தார். ஐக்கிய மலாய் நாட்டின் சங்கத் தலைவராகவும் இருந்தார். கிள்ளானில் உள்ள இந்தியர்கள் எக்காரியங்களிலும் இவருடைய துணையையே கோரி நிற்பர். கிள்ளான் கோயிலுக்கு இவரால் செய்யப்பட்ட தொண்டுகள் பல. பொதுத் தொண்டுகளைச் செய்வதைப்போல தெய்வ பக்தியிலும் சிறந்தவர். இவர் அதனால் உயர்ந்தார் என்பதை இவரின் வாழ்க்கை முடிவே காட்டிவிட்டது. இவர் 6-2-36ல் கிள்ளான் ஆலயத்துக்குச் சென்று தெய்வ வணக்கம் செய்து கொண்டிருந்தார். அவ்வமயம் ஓர் மூர்ச்சை ஏற்பட்டது. அதுவே இவரின் இறுதித் தொண்டாகி இல்லத்துக்குத் தூக்கி வந்ததும் இறைவனடி சேர்ந்தார். அன்று கிள்ளான் இருந்த நிலையை யாரால் கூறமுடியும்! இவரின் தொண்டைப்போற்றி, இந்தியர்கள் ஓர் பெருநிதியை இழந்ததை எண்ணி பத்திரிகைகள் ஓலமிட்டதையே காணநேர்ந்தது.

இவரின் இளையார் திரு. பெரியகருப்பன் செட்டியார். இவர் சர்வசித்து௵ மாசி௴ (1887) பிறந்தவர். இவரும் தமையனாரைப் போன்று எல்லோரிடத்தும் அன்பு பூண்டவர். இவர் கிள்ளான் சங்கத்தில் நான்காண்டுகள் தலைவராகவும் 1936ம் ஆண்டில் கோலாலம்பூர் சங்கத்தலைவராகவும் இருந்தவர். இவர் மிக உதாரகுணமும், நிர்வாகத்திறனும் பெற்றவர். இவர்களிருவர் இடமும் அதிக ஆசை என்பதில்லை. அதிலும் திரு. பெரியகருப்பன் செட்டியார் மிகச் சிறந்தவர். இவர்களால் ஊரில் பல தர்மங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு இவர்கள் சொந்தப் பொறுப்பில் நந்தவனம் வைத்து நடத்துகிறார்கள். இத்துடன் திரு. பெரியகருப்பன் செட்டியாரும் இந்தியர்களின் முன்னேற்றத்துக்குப் பெருந்தொண்டாற்றுபவர். இவரிடமும் இந்தியர்களுக்கு மிகுந்த பற்றுதலுண்டு. கிள்ளானுக்கு பண்டித ஜவர்லால் நேருஜி வந்தபொழுது இவரே வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்தார். இப்போது தங்கள் சொந்த ஊரான அரிமளத்தில் நகரச் சிவன் கோயிற் திருப்பணி வேலையை மிகப் பொறுப்புடன் நடத்தி வருகிறார்.

இவருக்கடுத்து இவர்கள் குடும்பத்தின் பெரியவராக உள்ளவர், இவ்வாண்டுச் சங்கத்தலைவர் திரு. குமரப்ப செட்டியாரே. இவர் சோபகிருது௵ வைகாசி௴ 15௳ (1902) பிறந்தவர். இவரும் தங்கள் குடும்ப வழக்கத்தின்படி பல தொண்டுகளிலும் ஈடுபடுபவர். இன்றும் சிறிய தந்தையாரின் சொல்லைச் சிரமேற்றாங்குபவர். ஆதலால் பன்னாளாய் ஒற்றுமையோடிருந்த குடும்பம் இன்றும் ஒற்றுமையோடிருக்கிறது.

சிலாங்கூர் ஸ்டேட் கௌன்ஸில்

இவ்வளம் சிறந்த சிலாங்கூர் சமஸ்தானத்தை ஐக்கிய மலாய் நாட்டின் பெடரல் கௌன்ஸிலின் கீழ் அமைக்கப்பட்ட ஸ்டேட் கௌன்ஸிலால் நடத்திவருகிறார்கள். இக்கௌன்ஸிலும் கோலாலம்பூரிலேயே கூடும். இதன் தலைவர் மேன்மை தங்கிய சுல்தானாவார். இக்கௌன்ஸிலில் உத்தியோகப் பற்றுடையவர் 9ம் உத்தியோகப் பற்றில்லாதவர் 5ம் ஆக 14 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் இந்தியர்களின் பிரதிநிதியாக இருப்பவர் டாக்டர் ஜே. ஆர். வேதவனம் ஆவர். இவர் இத்துடன் கோலாலம்பூர் சானட்டரி போர்ட்டின் அங்கத்தினராகவும், ஒப். எம். ஸி. ஏ. யின் உபதலைவர், நிதியாளராகவும் இருக்கிறார். இவர் சட்ட சபையில் நன்கு பேசும் வன்மை பெற்றவர். அதனால் இந்தியர்களுக்கு

கிட்டாவில் வேலனுக்குக் கிழமை கொண்டு வணிகரெனும்
செட்டியார்கள் கட்டிவைத்த சீர் சேர்ந்த திருக்கோயில்.
1912ம் ஆண்டில் நிறுவியது.



Kedah Chettiars Temple.

வேண்டிய சௌகரியங்களைப் பெற்றிருக்கிறார். இன்னும் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இவருக்கு இந்திய மக்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவராவர்.

பிரேஸர் ஹில்

பிரேஸர் மலையும் பாஹாங் எல்லையைச் சேர்ந்ததே. ஆயினும் இதற்கு நேரான வழி கோலக்குபுவிலிருந்தே இருக்கிறது. இம் மலை கோலாலம்பூரில் இருந்து 65 மைலில் இருக்கிறது. இதற்குச் செல்லும் வழியும் ஏற்றமானதே. இம் மலையில் 4,280 அடி உயரத்தில் குடியேற்ற வசதிகளுண்டு. இங்கு சில பங்களாக்கள் இருக்கின்றன. இங்கும் பல காய்கறிகளும், கிழங்குகளும் பயிர் செய்யப் படுகின்றன. பால் பண்ணையும் உண்டு. பல தமிழ் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இம்மலையும் பார்க்கத்தக்கவைகளில் ஒன்று.

[2] இ. நகரிசெம்பிலான் சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

“நகர்செம்பி லான்பெருமை நாட்டிலுளோர்க் கின்று
செகமார் தமிழ்த்தாயே செப்பு”

ஐக்கிய மலாய் நாட்டின் மற்றொரு சமஸ்தானம் நகரிசெம்பிலான். இச் சமஸ்தானம் வடக்கே சிலாங்கூரையும், தெற்கே மலாக்கா, ஜோஹோரையும், கிழக்கே பாகாங்கையும், மேற்கே மலாக்கா சடலையும் எல்லைகளாகக் கொண்டுளது. இதன் பரப்பு 2,572 சதுர மைல்கள். இச் சமஸ்தானம் முன்பு ஒன்பது பிரிவுகளாக இருந்தது. இவைகளை “சுங்கை உஜோங், சிலேபு, ஜோஹோல், ரெம்பாவ், உலுமுவார், ஜெம்புல், டிராச்சி, குளுங் பாசேர், ரனுஸ்” என்று கூறுவர். இவைகளில் சுங்கை உஜோங் மற்ற ஊர்கள் 1365ம் ஆண்டில் ஜாவானியர் ஆட்சியில் இருந்தது. 15ம் நூற்றாண்டில் மலாக்கா மன்னர்கள் கைப்பற்றினார்கள். அவ்வமயம் சுமத்திரா “மீனங்காபூ” வில் இருந்து வந்து பலர் குடியேறினர். இதன் பிறகு மலாக்காவை உலாந்தாக்காரர்கள் கைப்பற்றிய சமயம் 1641ம் ஆண்டில் ஜோஹோரை ஆட்சி செய்த மலாய்

மன்னர்கள் நகரிசெம்பிலானின் பல பாகங்களைக் கைப்பற்றினர். இவ்வாட்சி 1773ம் ஆண்டுவரை நடைபெற்றது. இதற்கிடையில் சுங்கை ஊசோங், சிலேபு, ஜோஹோல், ரெம்பாவ் என்ற நான்கு நாடுகளின் தலைவர்களும் (ஊண்டான்கள்) சுமத்திராவில் இருந்து இராஜா மிலேவார் என்பவரை அழைத்து வந்தார்கள். அவருக்கு "யாம்துவான்" என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். அவரின் மரபினரே இப்போது ஆட்சி புரிகின்றவர்கள். தலைவர் "யாம் துவான்" காலத்துக்குப் பிறகு 1874ம் ஆண்டில் இந்தத் தலைவர்களுக்கும் மற்ற சிற்றரசியல்களுக்கும் சிலசில குழப்பங்கள் நேர்ந்தன. அதனால் சுங்கை ஊசோங் தலைவராக இருந்த "டத்தோ கிளானா" என்பவர் பிரிட்டிஷாரின் உதவியை நாடி ஓர் ஆலோசனை கர்த்தரைப் பெற்றார். 1883ம் ஆண்டில் சிலேபு தலைவர் ஓர் ஆலோசனை கர்த்தரைப் பெற்றார். 1887ல் ரெம்பாவ் தலைவர் ஓர் ஆலோசனை கர்த்தரைப் பெற்றார். இவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்துகொண்ட 1895ம் ஆண்டின் உடன்படிக்கையின்படி (194ம் பக்கம் பார்க்க) இவ்வொன்பது சிற்றரசியல்களும் நகரிசெம்பிலான் சமஸ்தானம் ஆக்கப்பட்டு ஐக்கிய மலாய் நாட்டுக்குட்பட்டன.

நகரிசெம்பிலான் சமஸ்தானாதிபதி

1898ம் ஆண்டில் பிரிட்டிஷ் ரெசிடெண்ட் இவ்வொன்பது தலைவர்களையும் ஒன்றுபடுத்தினார். நகரிசெம்பிலான் சமஸ்தானாதிபதியாக "ஸ்ரீமீனந்தி யாம்துவான்" என்பரை ஆக்கினார்கள். இப்போது இச்சமஸ்தானாதிபதியாக உள்ளவர் ஸ்ரீமீனம்தி யாம்துவான் மரபினரான மேன்மை தங்கிய யாங்டி பர்துவான் புசார், தொங்கு அபுதுல் ரஹமான், கே. ஸி. எம். ஜி., இப்னி அல்மர்ஹூம் தொங்கு முகமட் ஆவர். இவர் 24-8-1895ல் பிறந்தவர். மிக நல்லவர். தயாள குணமுள்ளவர். தன்னைப்போல பிறரையும் எண்ணுபவர். ஆங்கிலம் நன்கு கற்றவர். பல உத்தியோகங்களில் இருந்து அநுபவம் பெற்றவர். இவர் 25-4-1934ல் சிம்மாசனம் ஏறினார். மேன்மை தங்கிய ஆறாம் ஜார்ஜ் மன்னருக்கும் எலிசபத் மகாராணியாருக்கும் 12-5-1937ல் முடிசூட்டு விழா நடந்த தருணம் லண்டனுக்குச் சென்று அவ்வைபவத்தில் கலந்து கொண்டார். இவர்கள் வசிப்பதற்குரிய அரண்மனை கோலப்பிலாவில் கட்டப்பட்டிருக்கிறது. அங்கேயே இவர் வசிக்கிறார்.

சிறம்பானும் ஸ்டேட் கௌன்சிலும்

இவரால் ஆளப்படும் நகரிசெம்பிலானின் தலை நகராக விளங்கு வது சிறம்பான். இங்கு சூப்ரீம் கோர்ட்டும் ஸ்டேட் கௌன்ஸிலும் இருக்கிறது. இக் கௌன்ஸிலின் தலைவர் சுல்தானவர். இவருடன் சட்ட சபையில் உத்தியோகப் பற்றுடைய அங்கத்தினர்கள் 15 பேரும் உத்தியோகப் பற்றில்லாத அங்கத்தினர்கள் 6 பேரும் மொத்தம் 21 அங்கத்தினர் இருக்கின்றனர். இவர்களில் இந்தியர் களின் பிரதிநிதியாக இருப்பவர் டாக்டர் ஹானரபிள். எஸ். ஆர். கிருஷ்ணன். ஜே. பி., எம். எப். ஸி., எம். எஸ். ஸி., எம். பி. பி. எஸ்., எல். எம். எஸ்., ஆவர். இவரின் தொண்டுகளை முன்பே கூறப்பெற்றிருக்கிறது. (198ம் பக்கம் பார்க்க) இச் சட்ட சபையின் யோசனையையும் பெடரல் சட்ட சபையின் ஆலோசனை யையும் கொண்டு பிரிட்டிஷ் ரெசிடெண்ட் சமஸ்தானத்தை நிர் வகித்து வருகிறார்.

இவர்கள் வசிக்கும் தலைநகரான சிறம்பான் மிக அழகான நகரம். இதன் தெருக்கள் ஒவ்வொன்றும் நீளமும் அகலமும் கொண்டவை. நகரத்துடன் சேர்ந்துள்ள குன்றிலேயே பல ஆபீஸ் களின் கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்குன்றுடன் பல சிறிய குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் தொடர்ந்திருக்கின்றன. இப்பள்ளத்தாக்குகளில் பல நீர் நிலையங்கள் இருக்கின்றன. இந் நீர்த்தேக்கங்களின் தோற்றமும், குன்றின் இயற்கை அமைப்பும், அங்கு நிறைந்துள்ள மரங்களின் அழகும், பசும் புற்றரையின் பார் வையும், தென்றற் காற்றும் செல்பவர்களுக்கு நல் விருந்தளிக்கும். இதேபோல பல இயற்கை, செயற்கை அழகைக்கொண்ட சிறம்பானில் வியாபாரப் பெருக்கமும் உண்டு. இவ்வியாபாரத்தைப் பெருக்க பல வியாபாரிகள் இருக்கின்றனர். "சார்ட்டர்ட் பாங், ஓவர் சீஸ் சைனீஸ் பாங், சீன அண்ட் சௌத்ரன் பாங், பாங் ஆவ்டைவான், பாங்க் ஆவ் ஜாவ்வா," என்ற ஐந்து பாங்குகளும் பல கம்பெனிகளும் இருக்கின்றன. 23 பல் வைத்தியர்களும், 11 இன்சூரன்ஸ் ஏஜண்டு களும், பிரம்பு, ரப்பர், அனசிப்பழத்தோட்ட வியாபாரிகள் 232 பேர்களும் ஈயச் சுரங்கங்களின் அதிபர்கள் 20 பேர்களும் இருக்கி றார்கள். இவர்களும் நகர மக்களும் கண்டு களிப்பதற்கு "அஸ் டோரியா, பிளாஜா, ஸாப்பியர்" என்ற மூன்று சினிமாத் தியேட் டர்கள் இருக்கின்றன. இவைகளால் மக்கள் பெறும் பலன் பல.

மலையும் நதியும்

இச்சமஸ்தானத்தில் பல மலைகள் இருக்கின்றன. இவைகளில் குனோங் நவாங் 4,908 அடி உயரமும், குனோங் புசார் ஹந்து 4,799 அடி உயரமும் உள்ளவைகள். மற்ற மலைகள் இவைகளுக்குச் சிறியவைகளே. மத்திய பாகத்தில் குனோங் அங்ஸி என்றோர் மலை உண்டு. இதன் உயரம் 2,709 அடிகள். இங்கு சுகாதாரக் கட்டிடங்கள் பல இருக்கின்றன. இங்குள்ள மலைகளில் இருந்து பல நதிகள் உற்பத்தியாகின்றன. மூவார் நதி இச்சமஸ்தானத்தில் உற்பத்தியாகி மலாக்கா நீரிணையில் சங்கமம் ஆகின்றன. இதேபோல செர்டாங் நதியும் இங்கேயே உற்பத்தியாகி மூவார் நதியோரமாகப் பாய்ந்து பாஹாங் நதியின் கிளை நதியாகி பாஹாங் நதியில் சேர்கின்றது. திரியான் நதியும் இதேபோல உற்பத்தியாகிச் சேர்கின்றது. இந்நதியே சிலேபு ஜில்லாவில் பாய்ந்தோடுவது. இந்நதியின் கரையிலேயே சிலேபு ஜில்லாவின் தலைநகரான கோலா கிளாவாங் நகரம் அமைந்திருக்கிறது. மலாக்காவுக்கும் நகரிசெம்பிலானுக்கும் எல்லை பிரித்துக்காட்டும் லிங்கி நதியும் இங்கேயே உற்பத்தியாகிறது. இதேபோல பல நதிகளையும், குன்றுகளையும், மலைகளையும் கொண்டு விளங்கும் நகரிசெம்பிலான் சமஸ்தானத்தில் மழை வளம் மிகுதி. அதனால் இரப்பர் தோட்டங்களில் மரங்கள் நல்ல பாலைக் கறக்கின்றன. இம்மலைகள் நிறைந்துள்ள பகுதிகளான தம்பீன், கோலப்பிலா, ரெம்பாவ் மற்ற இடங்களில் ரப்பர்த் தோட்டங்கள் அதிகம். வருவாயும் மிகுதி. ரெம்பாவ் பகுதியில் விவசாய நிலங்களும் அதிகம். இங்கு முன்பு சுமத்திராவில் இருந்து குடியேறிய மீனாங்காபு மரபினர் பலர் வசிக்கின்றனர். இவர்களில் பெண்களுக்கே உரிமை அதிகம். இவர்களின் வழக்கப்படி ஓர் தாயின் சொத்துகளுக்கு இரண்டாவது மகளே அதிகாரியாவாள். மற்ற பெண்களுக்கு தகப்பனின் சொத்துகள் பகிர்ந்து கொடுக்கப்படும். இவையல்லாத மற்ற சொத்துகளே ஆண்களுக்கு உள்ளது. பெண் குழந்தைகள் இல்லாவிட்டால் ஒருவளின் சொத்துகளை அவளின் சகோதரியும், சகோதரிகளின் குழந்தைகளும் பெறுவர். இவ்வழக்கத்தைக் கொண்டுள்ளவர்கள் அதிகமில்லை.

செட்டியார்களும் செல்வவிநாயகர் கோயிலும்

இச்சிறப்பு வாய்ந்த சிரம்பானிலும், இதைச் சேர்ந்த கோலப்பிலா, தம்பீன், போர்ட் டிக்ஷன் மற்ற இடங்களிலும் பல நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் கடைகள் உண்டு. இவர்களுக்கு ஓர்

வர்த்தக சங்கம் இருக்கிறது. இச்சங்கமும் ஐக்கிய மலாய் நாட்டின் (கோலாலம்பூர்) சங்கத்துக்கு கிளைச் சங்கந்தான். ஆயினும் இங்கு ஓர் ஆசிரியரை வைத்து மாணவர்களுக்கு இரவில் தமிழ்ப் பாடம் கற்பிக்கிறார்கள். அதனால் செட்டியார்களின் இளைஞர்கள் நன்கு கற்பதுடன் பலர் பேசும் வன்மையும் பெற்றிருக்கிறார்கள். இவ்விளைஞர்கள் கால் பந்து விளையாட்டிலும் தேர்ச்சிபெற்றவர்கள். இவர்களுடன் போட்டியிட்டு இதுவரை விளையாடிய மற்ற ஊர் இளைஞர்கள் எல்லாம் தோல்வியே பெற்றார்கள். இவர்களை ஆதரித்து ஊக்கம் கொடுப்பவர்கள் செட்டியார்களிற் பலர். அவர்களில் ஒருவர் திரு. கரு. சா. சாத்தப்ப செட்டியார். இவர் சிறு வயலில் பிறந்தவர். இவருக்கு இப்போது 46 வயதிருக்கலாம். மிகச் சுருசுருப்பும் திடமும் உறுதியும் பெற்றவர். இவர் சிறு வயதிலேயே சிங்கப்பூருக்கு வந்தவர். அங்கு தீ. சொ. கடையில் அடுத்தாளாகவும், பொறுப்பாளராகவும் பன்னாள் இருந்தவர். அவ் வமயங்களில் இவரால் சிங்கப்பூர் நகரத்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட நன்மைகள் பல. அங்கும் இளைஞர்களுக்கு உற்சாக மூட்டியவர். அதன் பிறகு சிறம்பானில் உள்ள தன் சொந்தக் கடைக்கு தனது இல்லாளுடன் வந்தார். மனைவியையும் அழைத்துக் கொண்டு சைகோன், சயாம் மற்ற நாடுகளுக்கும் சென்று வந்தவர். இப்போதும் இல்லாளுடனேயே சிறம்பானில் வசிக்கின்றார். இம்முறை வந்தபிறகு ஓர் ஆண் குழந்தை கிடைத்தது. அதற்கு கணேசன் என்ற பெயரை இட்டு அழைக்கின்றார். அதனால் இவருக்கு சிறம்பான் செல்வ விநாயகரிடத்துள்ள அன்பைக் காட்டுகின்றார். பொது நலத்தொண்டில் ஈடுபடுவதைப் போன்று சீர்திருத்த நோக்கமும் கொண்டவர். அதைச் செய்கையாலும் காட்டுபவர். இவரின் தொண்டு போற்றுதற்குரியது.

இவரைப்போன்று பொதுத் தொண்டிற் சிறந்தவர் திரு. பழ. அ. பழ. பழநியப்ப செட்டியார். இவர் ஆவினிப் பட்டியில் 7-7-1898ல் பிறந்தார்: இவர் தந்தையார் பழ. அ. அண்ணாமலை செட்டியார். தாயார் கண்ணம்மை ஆச்சி. இவர்களின் புதல்வராய் தோன்றிய பழநியப்ப செட்டியார் சிறுவயதிலேயே கல்வியில் தேர்ச்சி பெற்றவர். இவருக்கு கிழச்சிவல்பட்டி, மு. சா. ராம. மு. இராமன் செட்டியார் புதல்வி திருமதி. அலர்மேலு மங்கையைத் திருமணம் செய்தார்கள். அந்நங்கை திருமணம் பெற்ற எட்டாம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரின் இளையாள் திருமதி. விசாலாட்சி எனும் வேய்தோள் நல்லாளை இவருக்கு மறுமணம் செய்தார்கள். அம்மாதரசியோடு இப்போதில்லறத்தை நடத்திக்

கொண்டிருக்கிறார். இவருக்கும் மலாய் நாட்டுக்கும் பல தொடர்புண்டு. இங்கு பல சீர்திருத்தங்களில் உழைத்தவர். ஒழுக்கத்திற் சிறந்தவர். உயர்குணம் பெற்றவர். அடுத்தவரை ஆதரிப்பவர். இரப்பவரை ஏற்பவர். கற்றோர் பக்கலில் எப்போதுமிருப்பவர். பொதுஜனத் தொண்டே பொன்னனரி என்றெண்ணுபவர். காங்கிரஸிலும், கத்தரிலும் பெரும் பற்றுடையவர். இவரால் ஏற்பட்டதே ஆளிவிப்பட்டி "விவேகாநந்தர்கல்விக்கழகம்" இதன் தொண்டையும் இவர் அதற்குச் செய்யும் உதவியையும் அறியாதாரிரார். அதே போல சிறம்பானில் இவரிருக்கும் சமயம் எல்லாம் ஏதாவது சொன்மாரி பொழிந்து கொண்டே இருக்கும்! ஆதலாலும் இவரின் தொண்டாலும் சமூகம் பெறும் பலனும், புகழுமிகுதி. இத்தொண்டாற்றுபவர்களான இவர்களுக்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இவர்களைப் போன்ற பலரால் நடத்தப்படும் செட்டியார்கள் சங்கமும், இளைஞர்களின் கல்வி நிலையமும் நல்ல நிலையில் இருக்கிறது.

இவர்களால் (நகரத்தார்களால்) நடத்தப் பெறுவது செல்வ விநாயகர் கோயில். இதே போல் மற்றொரு கோயில் நகருக்குள் உண்டு. அது பலருக்குச் சொந்தம். அவ்வாலயத்தில் செட்டியார்களுக்கும் தொடர்பிருந்தது. அதில் ஏற்பட்ட சில காரணங்களாலேயே இப்போது நகருக்குப் புறம்பேயுள்ள கோயில் நிறுவப் பெற்றது. இவ்வாலயத்தில் ஆவணிமீ சதுர்த்தி விழாக் கொண்டாடுவார்கள். இவ்விழா இரண்டு நாள் நடைபெறும். அங்கு வருபவர்களுக்கு அன்னமிடப்படும். ஓர் நாள் வேலனும் விநாயகனும் விமான ரதத்தமர்ந்து நகருக்குள் பவனி வருவார்கள். அவ்வமயம் காணும் காட்சி ஆநந்தத்தை அளிக்கும். அவ் விழாக் காலங்களில் செட்டியார் இளைஞர்களின் சொற்பொழிவுகள் நடைபெறும். அவை செவிக்கமுதூட்டும். பல வழியாலும் இன்பத்தைப் பெற இங்கும் பலர் வருவர். இச் சிறப்புவாய்ந்த ஆலயத்தைச் செவ்வனே நடத்தும் நகரத்தார்களில் பெரும் சொத்துகளுக்குடையோர் பல்லோர் இருக்கின்றனர். இவர்களால் சிறம்பான் செல்வவளம் செழித்தோங்குகிறது.

போர்ட்டிக்ஷன் துறைமுகம்

நகரிசெம்பிலான் சமஸ்தானத்தின் சிறந்த துறைமுகம் போர்ட்டிக்ஷன். இந் நகரம் சிறம்பானில் இருந்து 21 மைலில் இருக்கிறது. இங்கு கடற்றுறையில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தின் நீளம் 128

அடிகள். ஆழம் 29 அடிகள். இங்கு 6,470 சதுர அடிகள் கொண்ட பண்டகசாலைகள் இருக்கின்றன. இத் துறைமுகத்தால் சிறப்புற்ற போர்ட்டிக்ஷன் நகரம் மிகச் சிறியவை. ஆயினும் இதன் கடற்கரை நீண்ட தூரத்துக்கு நல்ல மணற் பரப்பைக் கொண்டிருப் பதால் பல பங்களாக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் சிவப்பு மணலும் உண்டு. இங்கு சுகவாசத்துக்காக தங்கவும், கட லில் குளிப்பதற்கும் மலாயாவின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருவர் இவர்களிற் பல சமூகத்தவரும் தங்குவதற்கேற்ற பல வசதி கள் உண்டு. இந் நகருக்கு ஐந்தாவது மைலில் கடற்கரையோரம் பிரிட்டிஷ் பட்டாளங்கள் தங்குவதற்கேற்ற இடங்களுண்டு. இங்கு ஆண்டுக்கிரண்டு மூன்றுமுறை பட்டாளங்கள் வந்து தங்கும். இங்கு வாழும் மலாயர்கள் கைத்தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் ஓர் வகைப் புல்லால் அழகிய பெட்டி, கூடை, பாய்களைப் பின்னுவார்கள். பிரம்பினால் கூடைகளைக் கட்டுவார்கள். இதே போல பல கைத்தொழில்களைச் செய்பவர்கள் இங்கு அதிகம். இவர்களாலும் போர்ட்டிக்ஷன் துறை முகத்தாலும் நகரிசெம்பி லான் சமஸ்தானம் சிறப்புற்று விளங்குகிறது.

[2] ௬. பாஹாங் சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

“பற்பலரும் போற்றுகின்ற பாஹாங்கின் தன்மையெலாங்
கற்பவர்க்குத் தண்டமிழே காட்டு”

ஐக்கிய மலாய் நாட்டின் நான்காவது சமஸ்தானம் பாஹாங். இச்சமஸ்தானம் வடக்கே டிரங்கானுே, கிளந்தானையும், தெற்கே ஜோஹோரையும், மேற்கே பேரா, சிலாங்கூர், நகரிசெம்பிலானையும், கிழக்கே சீனக் கடலையும் எல்லையாகக் கொண்டுளது. இதன் பரப்பு 13,820 சதுர மைல்கள். இச் சமஸ்தானம் அதிகமான மலைப்பிர தேசங்களையும், காடுகளையும் கொண்ட ஓர் பரந்த நாடாகும். இங் குள்ள மலைகளில் “டாஹன்” என்று சொல்லப்பெறும் மலையின் உயரம் 7,184 அடி. இதே போல பல மலைகளுண்டு. மலாய் நாட்டிலேயே இங்குதான் வன விலங்குகள் அதிகம். (அவைகளைப் பின்பு கூறப்பெறும்) இச் சமஸ்தானத்தின் பழய காலப் பெயர்

"இந்திரபுரா" வாகும். பிறகு பாஹாங் என மாறி சயாம் அரசியலுக்குட்பட்டிருந்தது. 1511ம் ஆண்டில் மலாக்காவை போர்த்துக்கியர் கைப்பற்றினர்கள். அவர்களிடம் தோல்வியுற்று ஓடிவந்த "சுல்தான் முகம்மதுஷா" பாஹாங் வந்து "பண்டாரா" வென்ற பெயருடன் ஆட்சி புரிந்தார். இச் சமஸ்தானத்தின் ஓர் சிறந்த நகரான "பிந்தோங்" என்ற இடத்திலிருந்தே சுல்தான் முகம்மதுஷா மறுபடியும் மலாக்காமீது படை எடுத்துத் தோல்வியுற்றது. (143, 144ம் பக்கம் பார்க்க) இவரின் மரபினர் நீண்ட நாட்கள் ஆட்சி புரிந்தனர்.

இவர்களிற் சிலர் 1699ம் ஆண்டில் ஜோஹோர் அரசியலில் சம்பந்தப்பட்டனர். 1882ம் ஆண்டுவரை சுல்தான் முகம்மதுஷாவின் மரபினரே பாஹாங்கில் ஆட்சி புரிந்தனர், அவ்வமயம் சுல்தான் மரபினர் பாஹாங்கில் இருந்தவர்களிற் சரியான தலைவர் இல்லாததால் பாஹாங் ஜோஹோரின் ஆட்சிக்குள்ளாகியது. இவர்கள் பாஹாங் தலைநகரை "லிங்கா" என்ற இடத்துக்கு மாற்றி "டத்தோ பண்டாரா" என்ற ஓர் தலைவரையும் நியமித்தார்கள். அவ்வாட்சியும் சரியாய் நடைபெறாமல் குழப்பங்கள் ஏற்பட்டன. அதனால் 1887ம் ஆண்டில் பிரிட்டிஷாரின் உதவியை நாடினார்கள். அப்போது ஏற்பட்ட உடன்படிக்கையின்படி 1888ம் ஆண்டில் பிரிட்டிஷ் ரெசிடெண்ட் நியமனமானார்.

சமஸ்தானாதிபதியின் ஆட்சி

1888ம் ஆண்டில் "டத்தோ பண்டாரா" வென்ற பெயரை மாற்றி சுல்தான் ஆக்கினார்கள். சுல்தான் இருக்கும் நகராக "பிகான்" என்ற இடத்தை ஆக்கினார்கள். டத்தோ பண்டாராவும் "அல் சுல்தான் அஹமத் அல் மௌத்ஜாம்ஷா. கே. ஸி. எம். ஜி., இப்னி அல்மர்ஹூம் பண்டாரா" என்ற பெயருடன் சிம்மாசனம் ஏறினர். இவர் ஆட்சி 1902ம் ஆண்டுவரை நடைபெற்றது. இவர் காலத்திலேயே 1895ம் ஆண்டில் ஐக்கிய மலாய் நாட்டின் உடன்படிக்கை ஏற்பட்டது. (194ம் பக்கம் பார்க்க). அதன்படி பாஹாங் சமஸ்தானமும் ஐக்கியப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் ரெஸிடெண்டும், ஸ்டேட் கௌன்ஸிலும் வைத்து நடத்த "கோலாலிப்பிஸை" தலை நகராக்கினர்கள். ஆயினும் சுல்தான்மார்கள் இருப்பது "பிகான்" நகரே. இவருக்குப் பின் வான் முகம்மது என்பவர் அல் சுல்தான் அகம்மது அல் மௌத்திஜாம்ஷா". கே. ஸி. எம். ஜி. யும் இவருக்குப் பின் அல் சுல்தான்

முகம்மது. ஸி. எம். ஜி. இப்னி அல்மர்ஹூம் அல் சுல்தான் அகம் மது அல் மௌத்திஜாம்ஷா. கே. ஸி. எம். ஜி. யும் இவருக்குப் பின் அல் இனுதவிம்பில்லா அல் சுல்தான் அப்துல்லா. கே. ஸி. எம். ஜி. இப்னி அல்மர்ஹூம் அல் சுல்தான் அகமத் அலியும் ஆட்சி புரிந்த னர். இவர்களுக்குப் பிறகு இப்போது ஆட்சி புரியும் மேன்மை தங்கிய அல் சுல்தான் அபுபக்கர் ரியாத்துத்தீன் அல் முவாத் ஜாம்ஷா. கே. ஸி. எம். ஜி., ஸி. எம். ஜி., இப்னி அல்மர்ஹூம் அல் முதசிம்பில்லா அல் சுல்தான் அபுதுல்லா 28-5-1933ல் பட்டத் துக்கு வந்தார். இவர் 29-5-1904ல் பிறந்தவர். இவருக்கு மேன் மை தங்கிய பேரா சுல்தான் இஸ்கிந்தர்ஷாவின் புதல்வியைத் திரு மணம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள சுல்தான்களில் இவரே இளைஞர். ஆயினும் அறிவிற் சிறந்தவர். ஆங்கிலம் நன்கு பயின்றவர். அதனால் மேன்மை தங்கிய ஆரும் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு 1937ல் நகரிசெம்பிலான் சமஸ்தானதிபதி யுடன் லண்டனுக்குச் சென்று வந்தவர். இவரால் குடிகளுக்கு ஏற்படும் நன்மைகள் பல.

பீகானின் பெருமை

மிகக் குளிர்ச்சி பொருந்திய காமெரன் ஹைலாண்டும், பிரேஸர் ஹில்லும் பாஹாங் சமஸ்தானத்தைச் சேர்ந்தவைகள். இவைகளில் பிரேஸர் ஹில்லில் இருந்து பீகான் செல்வதற்கு பல வழிகளிருக் கிறது. அவைகளில் பெனுேன் மலைத்தொடர்ப் பக்கம் சென்றால் "குனுேங் போனுேன்" என்ற 6,196 அடி உயரமுள்ள மலையைக் காணலாம். அதைத் தாண்டிச் செல்வதில் "பிந்தோங்" நகரைக் காணலாம். இதற்கண்மையில் ரப்பர்த் தோட்டங்களும், ஈயச் சுரங் கங்களும் உள்ளன. இங்கு "செட்டி நாடு பாங்கின்" கிளையும் இன்னும் சில செட்டியார்களின் லேவாதேவிக் கடைகளும் இருக் கின்றன. இங்கிருந்து "டெமர்லோ" செல்லலாம். இந் நகரம் "பாஹாங் நதிக் கரையில்" அமைந்துளது. இங்கிருந்து ஆற்று மார்க்கமாகச் சென்றாலும் "பீகான்" நகரைச் சேரலாம். இவ் வழியாகச் செல்லும்போது இரு கரையிலும் ஏராளமான மூங்கிற் காடுகளைக் காணலாம். இடையிடையே தென்னந் தோட்டங்களும், பழ வகை மரங்களும் நிறைந்த மலாய் கம்பங்களை (சிற்றூர்கள், வீடுகள்) பார்க்கலாம். இக்காட்சிகளைக் கண்டு "பீகான்" நகரத்தை அடைந்தால் "பாஹாங் சுல்தானின் அரண்மனையையும், பலவகைக் காட்சிகளையும் காண்கலாம். இந் நகருக்கு வேறு ரோட் டுப் பாதைகளும் உண்டு. "பீகான்" நகரம் ஆற்றின் முகத்துவா

ரத்தில் இருந்தாலும் ஓர் துறைமுகமாக விளங்கவில்லை. காரணம்? ஆற்றில் மண்மேடுகள் அதிகமிருப்பதால் பெருங் கப்பல்கள் நங்கூரமிடப் போதிய ஆழமில்லாதிருப்பதே. இவ்வாற்றில் மோட்டார் லாஞ்சுகள் ஓடுகின்றன.

இவைகளில் ஒன்றினால் ஆற்றைக் கடந்தால் அக்கரையில் அழகிய மோட்டார் ரோடுகள் இருக்கின்றன. அவ்வழியாகக் குவாந்தான் செல்லலாம். குவாந்தான் ஓர் சிறிய துறைமுகம். குவாந்தான் நதியில் சில நீராவிக் கப்பல்கள் ஓடுகின்றன. இத் துறைமுகத்தில் பாங்காக், கிளந்தான், டிரங்கானு மற்ற இடங்களில் இருந்து கப்பல்கள் வந்து பிடிக்கின்றன. இங்கு தென்னையும், ரப்பரும் விளைவுண்டு. "பிஸேரா" என்ற கிராமத்தில் மீன் பிடிப்பவர்கள் அதிகம். மீன் பிடித்துக் கருவாடாக்கி வியாபாரம் செய்வதில் குவாந்தான் வியாபாரிகள் சிறந்தவர்கள். இங்கிருந்து பல இடங்களுக்குக் கருவாடு ஏற்றுமதியாகிறது. இதற்கடுத்து "சுங்கை லெம்பிங்" என்ற இடத்தில் ஓர் ஈயச் சுரங்கம் உண்டு. இச் சுரங்கம் உலகத்தில் உள்ள பெரிய சுரங்கங்களில் ஒன்று. இதைப் பார்க்க வேண்டுமானால்? குவாந்தான் ஆற்றில் படகேறிச் செல்ல வேண்டும். இதே போல பல சுரங்கங்கள் பாஹாங் சமஸ்தானத்தில் இருக்கின்றன.

கோலாலப்பீஸூம் பொன் சுரங்கமும்

பாஹாங்கின் தலைநகரம் கோலாலப்பிஸ். இந் நகரம் ஜிலாய் நதிக்கரையிலுள்ளது. இங்குதான் பிரிட்டிஷ் ரெசிடெண்டு ஆபீஸூம், ஸ்டேட் கௌன்ஸிலும் இருக்கிறது. இக் கௌன்ஸிலின் தலைவர் சுல்தான். இதில் உத்தியோகப் பற்றுடையவர்கள் 12ம், உத்தியோகப் பற்றில்லாதவர்கள் 3மாக 15 அங்கத்தினர்கள் இருக்கின்றனர். இவர்களால் சமஸ்தானத்தின் அரசாட்சி நிர்ணயித்து நடத்தப் பெறுகிறது. இங்கு வியாபாரப் பெருக்கத்துக்காக "மெர்க்கன்டைல் பாங்" ஒன்றும் இருக்கிறது. 69 ரப்பர்த் தோட்டக் கம்பெனிகளும், 13 ஈயச் சுரங்கங்களின் கம்பெனிகளும். 4 பொன் சுரங்கங்களின் கம்பெனிகளும் இருக்கின்றன. இத் தலைநகருக்குட்பட்ட பாஹாங் சமஸ்தானத்தை "பிந்தோங், குவாந்தான், லிப்பிஸ், பிகான், ரூவாய், டிபெர்லோ" என்று ஆறு ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அங்கங்கே டிஸ்ட்ரிக்ட் ஆபீஸ்கள் இருக்கின்றன.

இச் சமஸ்தானத்தில் "ரவாப்" என்ற இடத்தில் பொன் சுரங்கம் இருக்கிறது. இச் சுரங்கம் கோலாலம்பூரில் இருந்து பிரேஸர் ஹில் மார்க்கம் சென்ருல் சிலாங்கூர் எல்லையைத் தாண்டி 23வது மைலில் இருக்கிறது. இதை "ரவாப் ஆஸ்ட்ரேலியன் பொன் சுரங்கக் கம்பெனி"யார் நடத்துகிறார்கள். இச் சுரங்கத்தார் வேலை செய்வதற்கு முன் மலாயாவின் பல பகுதிகளில் சீனர்களும், சயாம்காரர்களும் பொன்களைத் தோண்டி எடுத்தனர். அவர்கள் எல்லாம் அதிகமான பலனைப் பெறவில்லை. "ரவாப்" சுரங்கம் தோன்றிய பின்பே மலாயாவின் பொன் விளைவு அதிகரித்தது. இவர்கள் கம்பெனியை ஆரம்பித்து சுமார் 40 ஆண்டுகள் இருக்கலாம். இது வரை சுமார் 679,878 அவுன்ஸ் தங்கங்கள் எடுத்திருக்கிறார்கள். 1937ம் ஆண்டுக்கணக்குப்படி உலகத்தில் விளைந்த பொன் 31,600,000 அவுன்ஸுகள். அவ்வாண்டில் தென் ஆப்ரிக்காவின் விளைவு 11,000,000. ரஷ்யாவின் விளைவு 6,250,000. மலாய் நாட்டின் உற்பத்தி 30,000. இவைகளில் "ரவாப்" சுரங்கத்தில் எடுத்த தங்கம் 20,240. இத்தங்கம் எடுப்பதற்கு ஒரு அவுன்ஸ் பொன் தயாரிக்க '45 செலவாகின்றன என்று கம்பெனியார் தெரிவிக்கிறார்கள். இது அதிகமாகவே தெரிகிறது. இங்கு விளையும் பொன் மதிப்பு இப்போது அவுன்ஸ் ஒன்றுக்கு $59-50. இதில் லாபம் கிடைப்பது அவுன்ஸ் ஒன்றுக்கு $14-00. இதிலும் அரசியல் வரி, இன்சூரன்ஸ், சுத்தப்படுத்தும் செலவுகளைக் கொடுக்கும்போது லாபம் போதாது என்று கம்பெனியார் கூறுகின்றனர். அதன் உட்கருத்துகள் அநுபவப்பட்டவர்களுக்கே தெரியும். பொன் சுரங்கங்களின் தன்மையைக் கவனிக்கும்போது மலாயாவின் பூமியில் பொன் விளைவு அதிக ஆழத்திலில்லை. தென் ஆப்ரிக்காவில் பல சுரங்கங்களில் 10,000 அடிகள்வரை தோண்டிப் பொன் எடுக்கின்றனர். இங்கு "ரவாப்" சுரங்கத்திலோ 1,000 அடிகளுக்கு மேல் ஆழமில்லை. இதேபோல பல இடங்களில் பொன் இருப்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அதனால் இன்னும் சின்னாட்களில் பல சுரங்கங்கள் ஏற்படலாம். இப்போது "ரவாப்" சுரங்கத்தால் பாஹாங் கவர்ன்மெண்டிற்கு ஓர் பகுதி வரி வசூலாகின்றது.

கைத் தொழிலும் காட்டு மிருகங்களும்.

இச்சமஸ்தானத்தில் பல கைத்தொழில்கள் உண்டு. அவைகளில் நெசவுத்தொழில் அதிகம். இங்குள்ள பெண்கள் பட்டுக் கைலிகள் நெய்வதிலும், அவைகளில் பொன் ஜரிகை வேலைப்பாடமைப்பதிலும் கை தேர்ந்தவர்கள். பருத்தி நூலில் சாராங் என்ற

கைலிகளை நெய்வதிலும் சாமார்த்தியம் வாய்ந்தவர்கள். இவர்களின் நெசவுத்தொழிலால் மிக விலையுயர்ந்த கைலிகள் வெளியாகின்றன. அவைகளை மலாய்க்காரர்கள் மிகப்பிரியமாக வாங்கி உபயோகிப்பார்கள்.

இங்கு காட்டு மிருகங்களும் அதிகம். மலாயாவில், இந்தியா, ஆபிரிக்கா தேசங்களில் உள்ள வன விலங்குகளைப்போல பல மிருகங்கள் உண்டு. இம்மிருகங்களைப் பல இடங்களில், காடுகளில் பார்க்கலாம். மற்ற பகுதிகளிலும் காடுகள் இருந்தாலும் பாஹாங் சமஸ்தானத்தில் தான் விலங்குகள் அதிகம். இவைகளுக்கு கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பும் மிகுதி. இங்கு 30 பவுண்டு கனமுள்ள தந்தங்களைக் கொண்ட யானைகளுக்குச் சிறிய யானைகளைச் சுடக்கூடாது. புலிகளையும் சிறுத்தைகளையும் சுடலாம். அதற்கும்கூட சிலவரம்புண்டு. இதேபோல பல இடங்களிலும் உண்டு. இதனால் காட்டு மிருகங்கள் கொழுத்துத் திரிகின்றன. சில இடங்களில் காட்டானைகள் கூட்டங் கூட்டமாய் வரும். அதை பாஹாங் காடுகளிற் பார்ப்பதுபோல ஜோஹோர், பேரா, பகுதியிலுள்ள காடுகளிலும் பார்க்கலாம். இக்காட்டானைகள் இரப்பர் தோட்டப் பயிர்களை அழித்து விடும். அதற்காக காட்டின் ஓரத்தில் தோட்டப் பயிர் செய்பவர்கள் பெரிய மடுக்களை வெட்டி வைப்பார்கள். இதை சிபெந்தா “நாகப்பா” எஸ்டேட்டில் பார்க்கலாம். (156ம் பக்கம் பார்க்க.) தோட்டங்களை அழிப்பதைப்போல இரயில்வே வழிக (லைன்) ளையும் பெயர்த்து விடும். என்ன செய்தாலும் சிறு குட்டியானைகளைச் சுடுவதற்கு கவர்ன்மெண்டார் சம்மதியார்கள்.

இக்காடுகளில் காண்டாமிருகங்கள் அதிகம். இவைகளின் கொம்புகள் மருந்துக்கு உபயோகப்படுவதினால் இவைகளை மலாயர்கள் அடிக்கடி கொல்வார்கள். அதனால் இப்போது அதிகமில்லை. இவைகளில் இரட்டைக் கொம்புள்ள காண்டாமிருகங்களும் உண்டு. இவை டின் டிங்ஸ் பகுதியில் இருக்கின்றன. ஒற்றைக்கொம்புள்ள காண்டா மிருகங்கள் பேரா பகுதியிலும் வசிக்கின்றன. இதே போல கல்யானை என்ற ஓர் வகை மிருகம் உண்டு. இதை மலாய்க்காரர்கள் “டாபிர்” என்பர். இவைகள் யானையைப்போன்று துதிக்கையும் தந்தங்களும் இல்லாமல் நீண்ட பெருமூக்குகளைக்கொண்ட மிருகங்களாக இருக்கும். இம்மிருகங்கள் இளங்கன்றுகளில் பல நிறமாக இருந்தாலும் வர வர மாறி, தலையின் முன் பகுதியும் கால்களும் மங்கலான கருமை நிறமாகவும், காதுகளும் உடலின் மேற் பகுதியும் சிவந்த வெண்மை நிறமாகவும், மூன்று அடி உயரம்

கொண்டவைகளாகவும் இருக்கும். இம்மிருகங்கள் மக்களுக்குத் தீங்கு செய்யாது. இக்காட்டில் ஒட்டைச் சிவிங்கிகளும் அதிகம்.

இதற்குமேல் புலி, சிறுத்தை, கருப்பு வேங்கை, கருப்புக் கரடிகளும் இருக்கின்றன. சில வேங்கைகள் 8 அடி நீளமிருக்கும். இதற்குப் பெரிய விலங்குகளும் காட்டிலிருப்பதாய் கூறுகிறார்கள். இவைகள் நடுக்காட்டில் வசிப்பவைகள். இவைகளுக்கு கவர்ன்மெண்டாரின் பாதுகாப்பு மிகுதி. அநுமதிச் சீட்டு இன்றி இம் மிருகங்கள் வாழும் காட்டுக்கு யாருமே வேட்டைக்குச் செல்லக் கூடாது. இக் காடுகளில் இருந்து வெளியே வந்த புலி, சிறுத்தை கள் மலாயாவின் பல பகுதியில் ரப்பர் தோட்டங்களுக்கு அண்மை யில் உள்ள "லாலாங்" நாணல் காடுகளில் திரியும். இவைகளை சுட்டு வீழ்த்துபவர்களுக்கு கவர்ன்மெண்டார் பரிசளிக்கின்றனர். இதே போல கொடிய மிருகம் "சிலடாங்" (காட்டெருமை) இவை இப்போது அதிகமில்லை.

பல காட்டு வளங்களையும் பொன் சுரங்கம், ரப்பர், தென்னைத் தோட்டங்களையும் கொண்டு விளங்கும் பாஹாங் சமஸ்தானத்தில் பல இடங்களில் துறைமுகங்கள் இருக்கின்றன. அவ்விபரங்கள் அகில மலாயா அமைப்பில் கூறப்பெறும். இச்சமஸ்தான எல்லை யோடு ஐக்கிய மலாய் நாட்டின் எல்லை முடிவு பெறுகின்றன. ஐக்கிய மலாய் நாட்டின் எல்லைகளான பாஹாங் சமஸ்தானத்திலும், நகரி செம்பிலான் சமஸ்தானத்திலும் பல இடங்களில் சுங்கச் சாவடிகள் உண்டு. ஒவ்வோர் இடங்களிலும் பாரிட்பந்தாரைப் போன்று உபத்திரவந்தான். அவைகளைப் பொருட்படுத்தாது மக்கள் அதிக இன்பத்துடன் வாழுகின்றனர்.

இன்ப வாழ்க்கையைப் பெறும் ஐக்கிய மலாய் நாட்டின் மக்கள் நிலையையும், சமஸ்தானங்களின் தன்மையையும், ஆங்கிலவரசின் ஆதரிப்பையும், சுல்தான்மார்களின் தூய்மையையும் இதுவரை கண் டோம். இதற்குமேல் ஆங்கிலவரசியலாரின் மறைமுகமான பார் வையில் சுல்தான்மார்கள் சொந்தமாக நடத்தும் ஐக்கியப்படாத மலாய் நாட்டின் பெருமைகளைக் காண்போம்.

ஐக்கிய மலாய் நாட்டுக் காலக்குறிப்புகள்.

1365	கி. பி.	ஜாவானியர் ஆட்சி	(255)
1511	,,	மலாக்கா சுல்தான் முகம்மதுஷா, பாஹாங்கிற் புகுந்தது.	(262)
1641	,,	ஜோஹூர் மன்னர்கள் நகரிசெம்பிலானின் பாகங்களைக் கைப்பற்றியது.	(255)
1650	,,	பேரா நதிக்கரையில் டச்சுக்காரர் தொழிற்சாலை நிறுவியது.	(226)
1743	,,	சிலாங்கூரில் சுல்தானின் முதலாவது ஆட்சி.	(248)
1765	,,	பேரா சுல்தானும் டலாந்தாக்காரர்களும் உடன்படிக்கை.	(226)
1783	,,	சுல்தான் இப்ராஹீம்ஷா சிலாங்கூர் சிம்மாஸனமேறியது.	(248)
1818	,,	பேரா சுல்தானுடன் பிரிட்டிஷார் உடன்படிக்கை.	(226)
1825	,,	பேரா சமஸ்தானத்திலும் சிலாங்கூர் சமஸ்தானத்திலும் குழப்பங்கள்.	(226)
		பங்கோர் உடன்படிக்கை	(226)
1826	,,	சிலாங்கூர் பேரா உடன்படிக்கை.	(228)
		சுல்தான் முகமூதுஷா சிலாங்கூர் சிம்மாஸனமேறியது.	(248)
1856	,,	சுல்தான் அப்துல் சமாத் சிலாங்கூர் சிம்மாஸனமேறியது.	(248)

1874 கி. பி. 'டக்கோ கிளானு' பிரிட்டிஷ் உதவியை நாடியது. (229)

" " பேரா சுல்தானுக ராஜா அப்துல்லா சிம்மாஸன மேறியது. (229)

" " சிலாங்கூரில் குழப்பம். (248)

1878 " கோலசிலாங்கூர் துறைமுகம் கிள்ளானிற்கு மாற்றப் பட்டது. (249)

1883 " நகரிசெம்பிலான் ஜிலேபு தலைவர் ஆலோசனை கர்த் தரைக் கொண்டது. (256)

1885 " போர்ட்வெல்டிற்கு தைப்பிங்கிலிருந்து இரயில் போட்டது. (200)

1887 " ராஜா இத்ரிஸ் பேரா சுல்தானுக சிம்மாஸனம் ஏறியது. (230)

" " ரெம்பாவ் தலைவர் ஒரு ஆலோசனை கர்த்தரைக் கொண்டது. (262)

1890 " பேரா, கம்பார் பகுதியில் ஈயச்சுரங்கங்கள் கண்டது. (242)

1895 " ஐக்கிய மலாய் நாட்டின் உடன்படிக்கை (194)

1896 " லெப்டினென்ட் கர்னல் ஸர். ஸி. பி. எச். மிச்சல். ஜி. ஸி. எம். ஜி. ஹை கமிஷனர் ஆகியது (196)

1897 " சிலாங்கூர் சுல்தானுக ஸர். சுலைமான்ஷா. கே. ஸி. எம். ஜி., ஜி. ஸி. எம். ஜி., கே. ஸி. வி. ஓ. சிம்மாஸன மேறியது. (249)

1898 " ஸர். ஜே. ஏ. ஸ்வெட்டன்ஹாம். கே. ஸி. எம். ஜி. ஹை கமிஷனராகியது. (196)

1904	கி. பி.	ஸர் ஜான் ஆண்டர்ஸன். கே. ஸி. எம். ஜி. ஹைகமிஷனராகியது.	(196)
1908	„	கிள்ளான் துறைமுகம் போர்ட்ஸ்வெட்டன்ஹாம் ஆகியது.	(250)
1909	„	கோலாலம்பூரில் பெடரல் சட்டசபை ஸ்தாபனமாகியது.	(197)
		கோலாலம்பூரில் இப்போதிருக்கும் ஸ்டேஷன் கட்டப்பட்டது.	(201)
1911	„	காப்டன் ஸர் ஆர்தர் யங். ஜி. ஸி. எம். ஜி. கே. ஸி. இ. ஹைகமிஷனராகியது.	(196)
1916	„	பேரா சுல்தான் ராஜா அப்துல் ஜலீல் சிம்மாஸனம் ஏறியது.	(230)
1919	„	ராஜா ஆலாங் இஸ்கிந்தர்ஷா பேரா சுல்தான்களின் சிம்மாஸனம் ஏறியது	(230)
1920	„	ஸர் லாரன்ஸ் நூன் குல்லிமார்ட். கே. ஸி. பி. ஹைகமிஷனராகியது.	(196)
1923	„	தானுமேராவுக்கு அடுத்து குல்லிமார்ட் பாலம் கட்டியது.	(201)
1927	„	ஸர் ஹியூக்கு கிளிப்பர்ட். எம். ஸி. எஸ். ஜி. ஸி. எம். ஜி. ஸி. பி. இ. ஹைகமிஷனராகியது.	(196)
		கோலாலம்பூர் பெடரல் சட்ட சபை திருத்தப்பட்டது.	(197)
1930	„	ஸர். சிஸில் கிளிமெண்டி. ஜி. ஸி. எம். ஜி. ஹைகமிஷனராகியது.	(196)
1931	„	ஈயத்திற்கு கோட்டா ஏற்பட்டது.	(243)

1933 கி. பி. பாஹறாங் சுல்தான் அபுபக்கர் ரியாத்துத்தீன். கே. ஸி. எம். ஜி. சிம்மாஸன மேறியது. (263)

1934 ,, ஸர் ஷென்டன் தாமஸ். ஜி. ஸி. எம். ஜி. ஓ. பி. இ. ஹைற கமிஷனராகியது. (196)

பங்கோர் தீவை, பேராவிற்கு, பிரிட்டிஷார் திரும்பக் கொடுத்தது. (228)

1935 ,, பெர்ஞங் அணைக்கட்டு சிலாங்கூரில் கண்டது (251)

1936 ,, கோலாலம்பூர் பெடரல் சட்ட சபையின் பெடரல் செக்ரடரி நியமனமாகியது. (197)

1938 ,, சிலாங்கூர் சுல்தான் சுலைமான்ஷா காலமாகியது. இராஜமூடா ஹிஸாமுத்தீன் அலம்ஷா சுல்தானை நியமனமாகியது. (250)

ஐக்கிய மலாய்நாட்டின் ஜனத்தொகை:-

1937.

நாடுகள்.	இந்தியர்கள்.	ஏனையர்கள்.	மொத்தம்.
பேரா ...	185,515	694,117	879,632
சிலாங்கூர் ...	181,637	435,899	617,536
நகரி செம்பிலான் ...	56,680	208,062	264,742
பாஹாங் ...	16,437	183,050	199,487
	440,269	1,521,128	1,961,397

ஐக்கிய மலாய் நாட்டின் வரவு கணக்கு

1937.

விபரம்.	வருமானம். $	cts.
1. கஸ்டம் இலாக்கா ...	36,393,682	91
2. கலால் இலாக்கா ...	6,073,462	93
3. காட்டிலாக்கா ...	1,162,877	08
4. சுங்க இலாக்கா ...	5,347,187	63
5. லைசென்ஸ் இலாக்கா ...	4,216,738	39
6. கோர்ட் பீஸ் ஸ்டாம்பு இலாக்கா ...	3,461,355	29
7. சானிட்ரி போர்ட் இலாக்கா ...	2,636,215	94
8. மின்சார இலாக்கா ...	2,940,904	69
9. தபால் இலாக்கா ...	2,790,130	83
10. ஏனைய வகைகளில் ...	4,509,866	10
ஆக மொத்தம் $	69,532,421	79

ஐக்கிய மலாய்நாட்டு செலவு கணக்கு

1937.

விபரம்.	செலவு தொகை. $	cts.
1. கல்வி இலாக்கா ...	2,525,413	58
2. மின்சார இலாக்கா ...	1,458,367	95
3. சிவில் செர்விஸ், கிளெரிக்கல் செர்விஸ்	2,465,877	67
4. வைத்தியமும் இராணுவமும் ...	4,447,344	71
5. சானிட்ரி போர்ட் இலாக்கா ...	2,453,194	86
6. போலீஸ் இலாக்கா ...	2,574,353	50
7. பப்ளிக் வொர்க்ஸ் ...	8,349,915	64
8. பென்ஷன்கள் ...	4,820,605	15
9. இதர வகைகளில் ...	26,305,734	77
ஆக மொத்தம் $	55,400,807	83

மேன்மை தங்கிய பெரலீஸ் சுல்தான்.



His Highness the Raja Tuan
Syed Ali. C. M. G., C. B. E., Perlis.

[3]. ஐக்கியப்படாத மலாய் நாடு

தமிழ்த்தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

ஐக்கிய மாகாமல் ஆங்கிலரோ டொன்றுபட்ட
மெய்க்காப்பி னாட்சியினால் மேன்மையுற்றுச்-சௌக்கியமாய்
வாழுநக ராறின் வளப்பமெலா மக்களுக்கு
ஊழ்வினைதீர் நற்றமிழே ஊட்டு

ஐக்கியப் படாத மலாய் நாடு என்பது மலாய் சுல்தான்களுக்குச் சொந்தமாய் ஆங்கில வரசின் மறைமுகமான ஆட்சியில் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி, தனிப்பட்ட முறையில் அரசியலை நடத்துகின்ற ஆறு சமஸ்தானங்களாகும். இவைகளின் பரப்பு 24,347 சதுர மைல்கள். இவைகளில் ஜோஹோர், கெட்டா, பெர்லிஸ், கிளந்தான், டிரெங்கானோ என்ற ஐந்து சமஸ்தானங்களும் மலாயா தீபகற்பத்துக்குள் உள்ளவைகள். மற்றொன்றான "புருனாய்" கிழக்குத் தீவில் போர்னியோவில் உள்ளவை. இவைகளில் நிலப் பரப்பிலும் வருவாயிலும் பெரியவை.

"ஜோஹோர் சமஸ்தானம்"

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

"தொன்மைநிறை ஜோஹோரின் தோற்றமெலா மக்களுக்குக்
கன்னித் தமிழ்த்தாயே காட்டு"

மலாய் நாட்டில் தொன்மை நிறைந்த நாடுகளில் ஜோஹோரும் ஒன்று. இங்கு எழாம் நூற்றாண்டில் பல்லவர்கள், சைலேந்திர மன்னர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் எந்த இடத்தில் இருந்து ஆட்சி புரிந்தார்கள் என்ற ஆராய்ச்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இவர்களுக்குப் பின் கி. பி. 1252ல் சிங்கப்பூராமீது படை எடுத்த ஜாவானிய மஜாபஹித் மன்னர்கள் ஜோஹோரைக் கண்ட

னர். இவர்கள் ஆட்சி கி. பி. 1,338ல் இருந்து 1,500 வரை இங்கிருந்தது. (16ம் பக்கம் பார்க்க) இவர்களுக்குப் பின் மலாக்காவை போர்த்துக்கியர் கைப்பற்றியவுடன் 1511ம் ஆண்டில் அங்கிருந்த "சுல்தான் முகம்மதுஷா" நகரை விட்டு ஓடினுர். (143ம் பக்கம் பார்க்க) அவர் பாஹாங் சமஸ்தானத்தைச் சேர்ந்தார். அவரைச் சேர்ந்த மற்ருெரு சுல்தான் ஜோஹோருக்கு வந்து இப்பகுதியைக் கைப்பற்றினுர். அதிலிருந்தே இதற்கும் பாஹாங் அரசியலுக்கும் தொடர்புண்டாயிற்று. இங்கு அரசியலை நடத்திய தலைவரை "தெமாங்காங்" என்ற பெயருடன் அழைத்தார்கள். அவர் "பாஹாங் பண்டாராவுக்குக்" கட்டுப்பட்டு ஆட்சிபுரிந்து வந்தார். இவர்கள் ஆட்சி நடக்கும்போது 1602ம் ஆண்டில் அச்சேயினர்கள் ஓர் படை எடுப்பைக் கொண்டார்கள். வெற்றிபெறவில்லை. ஆயினும் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தன. "ரியான்" என்ற பகுதியில் புக்கிஸ்களின் தலைவன் ஒருவன் தானே "தெமாங்காங்" என்று கூறி ஆட்சி செலுத்தினுன். ஜோஹோரிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதனுல் 1673ம் ஆண்டில் "ஜம்பி" என்ற தலைவன் ஜோஹோரின் பல பகுதிகளை நிக்கிரையாக்கினுன். 1699ல் ஜோஹோர் மன்னனைச் சிலர் சேர்ந்து குத்திக் கொன்று விட்டனர். இக்குழப்பங்களுக்கு மேல் "ராஜா கிச்சில்" 1717ல் ஜோஹோரின் தலைவராகி "ஜோஹோர்பாரு" என்ற நகரை உண்டாக்கி அரசியலை நன்னிலைக்குக் கொண்டு வந்தார். புக்கிஸ்களைத் துரத்தினுர். இவரின் பின் தோன்றல்களுக்கு 1784ம் ஆண்டில் உலாந்தாக்காரர் பாதுகாப்பளித்தனர். அன்றிருந்து ஜோஹோர் அரசியல் குழப்பமின்றி நடைபெற்றது. 1812ல் "சுல்தான் ஹுசேன்" என்பவர் "தெமாங்கான்" ஆனுர். 1819ல் சிங்கப்பூரை பிரிட்டிஷாருக்குக் கொடுத்தார். அதனுல் அவர்களின் கூட்டுறவு ஜோஹோருக்கு ஏற்பட்டது. இவருக்குப் பிறகு "சுல்தான் அலி" என்பவர் தலைவரானுர். இவர் சரியான முறையில் நடந்து கொள்ளாததால், இவரை 1855ம் ஆண்டில் சுல்தான் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்கள். அவரின் ஆலோசனை கர்த்தராகவும், அடுத்த பதவியிலும் இருந்த "அபுபக்கரை" சுல்தான் ஆக்கினுர்கள்.

மகா ராஜா பட்டம் பெற்ற மன்னர்

சுல்தான் ஆன அபுபக்கர் பேரறிஞர். எக்காரியத்தையும் மிகத் திறமையாக நடத்தும் வன்மை பெற்றவர். எதற்கும் அஞ்சாத திடம் பெற்றவர். அதனுல் பிரிட்டிஷாரின் உதவியைப்பெற்று ஜோஹோர் சமஸ்தான அரசியலைத் திறம்பட நடத்தினுர். பலமுறை ஐரோப்பா

சென்றார். அங்கு நடைபெறும் அரசியல் முறைகளைக் கண்டார். அதன்படி தமது அரசியலையும் ஆக்கினார். நாடுகளைப் பிரித்தார். நகர்களைப் பெரிதாக்கினார். இவரின் திறமையை உணர்ந்து மேன்மை தங்கிய விக்டோரியா மஹாராணியார் 1879ம் ஆண்டில் இவருக்கு "மஹாராஜா" பட்டம் அளித்தனர். அன்று மஹாராஜாவான இவர் 1885ம் ஆண்டில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடன் ஓர் புதிய ஒப்பந்தமும் செய்து கொண்டார். அத்துடன் ஓர் அரசியல் திட்டத்தையும் வகுத்தார். அதில் மன்னரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம், அவருக்கும் குடும்பத்துக்கும் செலவு நிதியளிக்கும் முறை, அவருடைய சந்ததி, மரபினருக்குச் செலவு நிதி கொடுக்கு முறைகளையும் வகுத்தார். அத்துடன் ஜோஹோர் அரசர் எப்பொழுதும் ஓர் மந்திராலோசனை சபையைக்கொண்டே அரசியலை நடத்தவேண்டும். அதில் பல மலாய் உத்தியோகஸ்தர்கள் அங்கம் வகித்திருக்க வேண்டும் என்ற திட்டத்தையும் ஏற்படுத்தினார். அரசியலை நடத்த நிர்வாக சபை ஒன்றையும் நியமித்தார். அரசியலைச் செவ்வனே நடத்தினார். இச்சீர்திருத்தங்களைச் செய்த இவர் 1895ம் ஆண்டில் ஆண்டவனடி சேர்ந்தார்.

இன்றைய மகாராஜாவும் இளவரசரும்

மஹாராஜா பட்டம்பெற்ற சுல்தான் அபுபக்கருக்குப் பிறகு அவர் மகன் மேன்மை தங்கிய "சுல்தான் ஸர் இப்ராஹிம்,. டி.. கே., எஸ். பி. எம். ஜே., ஜி. ஸி. எம். ஜி., ஜி. பி. இ. பட்டத்துக்கு வந்தார். இவர் 17-9-1873ல் பிறந்தவர். 7-9-1895ல் சுல்தானாகப் பிரகடனம் செய்யப்பட்டு 2-11-1895ல் சிம்மாசனம் ஏறினார். இவரும் தந்தையாரைப்போன்று அரசியலை நடத்துவதில் நிபுணர். கல்வி கேள்விகளிற் சிறந்தவர். உலகத்தைப் பன்முறை சுற்றியவர். நிர்வாகத் திறமும், மனத்திடமும், எதற்கும் அஞ்சாத வன்மையும், இரக்க சிந்தையும், அண்டினோரை ஆதரிக்கும் பெருந்தன்மையும் பெற்றவர். விளையாட்டில் விருப்பங்கொண்டவர். இவர் சிம்மாசனம் ஏறியபின்பே ஜோஹோர் பாரு நகரம் மிகப் பெரிதானது. இவரால் ஜோஹோர் சமஸ்தானத்தில் ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்கள் அதிகம். இவர் தன் குடிகள் என்றும் இன்பத்தோடிருக்க வேண்டும், செல்வ வளத்தில் சிறக்க வேண்டுமென்ற பேரவாவுடையவர். தன் நாட்டின் அரசியலை தக்க முறையில் நடத்துபவர். இவர் 1914ம் ஆண்டில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி தன் நாட்டில் சில ஐரோப்பியர்களுக்கு உத்தியோகம் கொடுத்திருக்

கின்றார். அதிலிருந்து ஜோஹோர் சமஸ்தானத்தில் ஓர் பிரிட்டிஷ் ஜெனரல் அட்வைஸர் இருந்து காரியங்களைக் கவனித்து வருகிறார். இவர்களும் மலாய் மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். இங்கு கோர்ட்டு நடவடிக்கைகள் ஆங்கிலம், மலாய் இரண்டு மொழியிலும் உண்டு. இப்போது ஆங்கிலந்தான் அதிகம். இவைகளை மேன்மைதங்கிய சுல்தான் அவர்கள் மந்திரிசபை நிர்வாக சபை, சட்ட சபைகளைக்கொண்டு நடத்தி வருகின்றார். இவரின் ஆட்சியின் திறத்தைப் போற்றி இவர் சிம்மாசனமேறிய 40வது ஆண்டு விழாவை 1935ம் ஆண்டில் கொண்டாடினார்கள். இவருக்கு இப்போது வயது 66 நடக்கிறது. இன்றும் இளைஞர்களைப் போன்றே இருக்கிறார். இவருக்கு இளவரசராக உள்ளவர் இவர் மகன் மேன்மை தங்கிய பிரின்ஸ் இஸ்மாயில் தொங்கு மகோதா ஆப் ஜோஹோர். டி. கே., பி. ஐ. எஸ்., கே. பி. இ., ஸி. எம். ஜி. ஆவர். இவர் 28-10-1894ல் பிறந்தவர். இவரும் அரசியல் காரியங்களிற் சிரத்தையுடையவரே.

சமஸ்தானமும் தலைநகரமும்

இவர்களால் பரிபாலிக்கப்பெறும் ஜோஹோர் சமஸ்தானம் வடக்கே "பாஹாங் "கையும், வடமேற்கே " நகரி செம்பிலான், மலாக்கா " வையும், மேற்கே "மலாக்கா கடலையும்," தெற்கே "டெப்ரவு" கடலையும், கிழக்கே "சீனக் கடலையும் எல்லைகளாகக் கொண்டுளது. இதன் பரப்பு 7,330 சதுர மைல்கள். இதில் 1936ம் ஆண்டுக் கணக்குப்படி 631,200 மக்கள் வசிக்கிறார்கள். இங்கு ரப்பர், தென்னை, பாக்கு, கூந்தற்பனை மரங்கள் மிகுதி. அன்னாசிப்பழம் அதிகம். பல விவசாயங்களும் உண்டு. இவைகளில் சுமார் 765,282 எக்கரில் ரப்பரும், 127,000 எக்கரில் தென்னையும், 24,800 எக்கரில் கூந்தல் பனையும், 35,000 எக்கரில் அன்னாசிப்பழச் செடிகளும், 20,000 எக்கரில் சவ்வரிசிச் செடிகளும் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சேர்ந்த அன்னாசிப் பழங்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றும் 8 தொழிற் சாலைகளும், சவ்வரிசி உண்டுசெய்யும் 22 தொழிற்சாலைகளும், சாராயம் காய்ச்சும் இரண்டு தொழிற்சாலைகளும், நெருப்புக்குச்சித் தொழிற்சாலை ஒன்றும் இருக்கின்றன. இங்கு பல ஈயச்சுரங்கங்களும், சில இரும்புச் சுரங்கங்களும் இருக்கின்றன. இத்தகைய பரப்புக்கொண்ட சமஸ்தானத்தை பல ஜில்லாக்களாக பிரித்துள்ளார்கள். அவைகளில் பத்துப்பாகாட், மூவார், செகாமெட் பெரிய நகரங்கள். இவைகளின் தலைநகர் ஜோஹோர்பாரு.

மேன்மை தங்கிய கிளந்தான் சுல்தான்.



His Highness Sir Ismail· K· C· M· G·
Kelantan·

இங்குதான் சுல்தான் வசிக்கின்றார். எந்நேரமும் கடலன்னை தனதலையை மோதிக்களிக்கத் தருகின்ற ஓர் குன்றில் அரசரின் அரண்மனை கட்டப்பட்டிருக்கிறது. அதற்கடுத்து ஓர் பள்ளி உண்டு. அதன் அமைப்பு மிகப் பொருத்தமானது. அங்கு தொழுகைக்குச் செல்பவர்கள் பல இன்பத்தைப் பெறுவர். அகத்தன்பு பூண்டவர்க்கு கிடைப்பது ஆண்டவனருள். அதைப்பெறப் புறத் தின்பமும் வேண்டும். இம்மசூதிக்குச் செல்பவர்கள் முதலில் புறத்தின்பத்தைப் பெறுவர். ஏதனுல், மசூதியோ ஆழிசூழ் குன்றின் உச்சியில் அமைக்கப்பெற்றிருக்கிறது! அதைச்சுற்றி நாற்புறமும் நறுமணங் கமழும் மலர்ச் செடிகள்! பசும் புற்றரை! ஏகாந்த வெளி! இன்பக்காற்று! யாவருக்கும் நிம்மதிதரும் தெண்ணீர்க்குளம்! இவைகளைக் கண்டதும் யார் மனம் வேறொன்றை நாடும்? கண்டவிடமெலாம் கொண்டலைபும் உள்ளத்தை இவ்வியற்கை செயற்கைத் தோற்றங்கள் இழுத்துக் கட்டி விடும். அதனுல் அங்குள்ள மசூதியில் நுழைந்ததும் ஆண்டவன் திறம் உள்ளத்திற் பதியும். அவனருளும் கூடும். இது திண்ணம். இதேபோல பல குன்றுகளும் அரசியற் கட்டிடங்களும், பங்களாக்களும் உள்ளது. ஜோஹோர்பாரு நகரை இக்குன்றில் உள்ள அரண்மனையை மக்கள் கண்டுகளிக்கும் கண்காட்சிசாலை யாக்கி விட்டார்கள். இதற்குமேல் மற்றொரு குன்றில் புதிய அரண்மனை கட்டப்படுகிறது. அதன் தோற்றம் அளவிடற்கரிது. இக் கட்டிடங்களைக் கொண்ட ஜோஹோர்பாரு நகரம் பார்க்கவேண்டிய வைகளில் ஒன்று. இந்நகரையும் சிங்கப்பூரையும் பிரிந்திருந்தது "டெப்ரவு" ஜலசந்தி. அதை மாற்றியது ஜோஹோர் பாலம். (89ம் பக்கம் பார்க்க). இப்பாலம் அமைந்தபின் இந்நகரின் சிறப்பே அதிகரித்திருக்கிறது.

இங்கு சுல்தான் வாழ்வதால் பல தலைமை நிலையங்களும் இங்கே யே இருக்கின்றன. இவ்வரசியலை நடத்தும் மந்திரி சபையில் 9 அங்கத்தினர்களும், நிர்வாக சபையில் 17 அங்கத்தினர்களும், சட்ட சபையில் 28 அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். இவர்களின் யோசனைகளை ஏற்று சுல்தான் அரசியலை நடத்தி வருகின்றார். இங்கு பல வியாபாரிகள் இருக்கிறார்கள். "ஒங்கம் ஷங்காய் பாங்" ஓவர் சிஸ் சைனிஸ் பாங்குகள் இருக்கின்றன. பல பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் உண்டு. இந்தியர்களும் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களால் நடத்தப் பெறும் ஆலயம் ஒன்றுண்டு. இந்நகருக்குப் பல மைல் தூரத்தில் ஜோஹோர் நதிக் கரையில் உள்ளது கோத்தா தெங்கி.

இங்கு ஓர் நீர் வீழ்ச்சி இருக்கிறது. கிழக்குக் கரையில் உள்ளது "மெர்கிங்" என்ற நகரம். இங்கு ஈயச்சுரங்கங்கள் அதிகம்.

பத்துப் பாகாட்டின் வளப்பம்

ஜோஹோர்பாரு நகருக்கு வடமேற்கே 78வது மைலில் உள்ளது பத்துப் பகாட் நகரம். இந்நகரம் மலாக்காக் கடலில் சங்கமம் ஆகும். பத்துப்பகாட் நதிக்கரையில் அமைந்துளது. இங்கு கவர்ண்மெண்ட் ஆபீஸ்கள் பலவிருக்கின்றன. அவ்வுத்தியோகஸ்தர்கள் வசிப்பதற்கு கவர்ண்மெண்டார் கட்டியுள்ள கட்டிடங்கள் பேரழகைத் தருகின்றன. இங்கு மலாய் பட்டாளம் ஒன்றிருக்கிறது. அப்படையினர் பலர் வாழப் பல கட்டிடங்கள் உண்டு. இவைகள் ஓர் பெரிய மலைச் சாரலில் கட்டப்பட்டிருக்கின்றன. இந்நகரில் இருந்து ஜோஹோருக்குவரும் வழியிலும், மூவாருக்குச் செல்லும் வழியிலும் தென்னந் தோட்டங்கள் அதிகம். இப்பகுதியில் பல மைல் தூரம் மண் கருப்பு நிறமானவை. அத்துடன் தண்ணீர் பிடிப்புள்ளவை. அதனால் தென்னமரங்கள் பல படுத்தவண்ணமாயிருக்கும். அவைகளும் தேங்காய்களைத் தருவதில் குறைவின்றித் தரும். அம்மரங்கள் சாய்ந்திருப்பதை நோக்க "கல்வி சேர்மாந்தர் போல இறைஞ்சிக் காய்த்தவே" என்று சிந்தாமணியில் நெற்கதிர்களுக்குக் கூறியதை ஞாபகத்துக்குக் கொண்டு வரும். இம்மரங்களிலும், ஓங்கி வளர்ந்த மரங்களிலும் தெங்கின் காயைப் பறிப்பது தேர்ந்த குரங்குகள். இக்குரங்குகளைப் பலர் வளர்க்கிறார்கள். இதேபோல மலாக்காப் பகுதியிலும் உண்டு. இக்குரங்குகள் மக்களைப் போன்றே தேங்காய்களைப் பறிக்கும். இவ்வாறு பல தென்னந் தோட்டங்களிருப்பதுபோல ரப்பர்த்தோட்டங்களும் மிகுதி. அவைகளில் "பத்துப் பாகாட்"டுக்கு ஏழாவது மைலில் "சங்கோ கோஜி" என்ற ஜப்பானியர் கம்பெனிக்குச் சொந்தமான ஓர் எஸ்டேட்டு உண்டு. இந்த எஸ்டேட் சுமார் 12,000 எக்கர் கொண்டவை. இதற்குமேல் ஆயர் ஈத்தாம் பகுதியில் பல தோட்டங்கள் இருக்கின்றன. பத்துப் பாகாட், ஜோஹோர் வழியில் காடுகள் மிகுதி. பெரும் வன விலங்குகள் உள்ள இடமும் உண்டு. ஆயினும் ரோடுகள் நல்ல முறையில் இருப்பதால் வழித்துணை வசதி அதிகம். அதனால் போக்குவரத்துகள் மிகுதி.

பல சிறப்பு வாய்ந்த பத்துப் பாகாட்டில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் பல விருக்கின்றன. இவர்களில் பெரும் சொத்துகளுக்குடையவர்கள் அதிகம். இவர்கள் வாணிபத்தைப் பெருக்க, ஒற்றுமையை வளர்க்க ஓர் வர்த்தக சங்கம் கண்டுள்ளார்

கள். அதன் படமும் இந்நாலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர்களால் "சாலன் கின்னுங்" கில் ஓர் ஆலயம் காணப்பட்டிருக்கிறது. அவ்வாலயத்தில் அமைந்துள்ள தெண்டாயுதபாணிக்கு இவர் கொண்டாடும் விழா வைகாசி விசாகம். அன்று பல மக்களுக்கு அன்னமிடப்படும். இவ்விழாக்காலத்தில் செட்டியார் இளைஞர்கள் கற்பனைக்கதைகளை நாடகமாக நடித்துக் காட்டுவார்கள். அக்காட்சி கண்ணுக்கு விருந்தளிக்கும். கருத்துக்கு உணர்வளிக்கும். இவ்விழாக்கண்டு களிக்க பல்லோர் வருவர். இச்சிறப்புவாய்ந்த ஆலயத்தின் படமும் இந்நாலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்நகரத்துக்கு 11வது மைலில் உள்ளது "ஸ்ரீ மேடான் சுரங்கம்." இச்சுரங்கம் ஜப்பான் காரருக்குச் சொந்தமானது. இச்சுரங்கம் மலையையும் அதைச்சேர்ந்த நிலப்பரப்பையும் ஜப்பான்காரர் ஜோஹோர் சுல்தானிடம் சுதந்தரமான கிரையத்துக்கு வாங்கிவிட்டார்கள். இவர்கள் அங்கு எடுபடும் இரும்புக் கனிகளுக்கு மட்டும் ஓர் பகுதி வரியை ஜோஹோர் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தி வருகிறார்கள் இச்சுரங்கம் பத்துப்பாகாட்டிலிருந்து மோட்டாரில் சென்றால் 11வது மைலிலும், ஆற்று மார்க்கம் படகில் சென்றால் 18 மைலிலும் இருக்கிறது. இங்கும் 40 தமிழ் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இங்கு எடுக்கும் இரும்பை ஏற்றிச்செல்ல ஜப்பான் கப்பல் பத்துப் பாகாட்டுக்கு வரும். கப்பலை கடலில் நிறுத்தி ஆற்றில் படகுகளைக்கொண்டு இரும்புக் கட்டிகளை ஏற்றிச் செல்வார்கள். இதேபோல மலாயாவில் டிரங்கானு, கிளந்தான் பகுதிகளிலும் இரும்பு எடுக்கிறார்கள். இவைகளில் 1937ம் ஆண்டில் எடுக்கப்பட்ட இரும்பு 2,438,059 டன்கள். இதனால் மலாய்நாட்டின் கவர்ன்மெண்டாருக்கும் குறிப்பாக ஜோஹோர் கவர்ன்மெண்டிற்கும் ஓர் பகுதி வரி வசூலாகிறது. இந்த இரும்புச் சுரங்கமும் "சங்கோ கோஜி" ரப்பர் எஸ்டேட்டும் இருப்பதால் பத்துப்பாகாட் நகரமே சிறந்து விளங்குகிறது. இதேபோல மற்ற பெருந் தோட்டங்கள் அதிகமாக இருப்பதால் வியாபாரிகள் பலர் இருக்கின்றனர். அதனால் வாணிபம் பெருகி வளம் நிறைந்து இருக்கிறது பத்துப் பாகாட்.

மூவாரின் செல்வம்.

ஜோஹோர் சமஸ்தானத்தின் பெரிய நகரம் மூவார். இந்நகரம் மலாக்காவுக்கு தென் கிழக்கே 28வது மைலில் மூவார் நதி மலாக்கா கடலில் சங்கமம் ஆகுமிடத்தில் அமைந்திருக்கிறது. மலாக்காவிலிருந்து வருபவர்கள் இந்நகருக்குள் வருவதற்கு மூவார் நதி

யைக் கடந்தே வரவேண்டும். இதற்கு மோட்டார் லாஞ்சுகளும், கார்களை ஏற்றிச்செல்ல பேரிகளும் இருக்கின்றன. இதுபோலவேதான் பத்துப்பாகாட் நகரமும் ஆறும். இவைகளைக் கடப்பது மிக எளிது. இவைகளுக்கும் பாலம் அமைக்க ஜோஹோர் கவர்ன்மெண்டார் முயற்சி செய்கிறார்கள். இவ்வாறுள்ள மூவாரில் பல ஆபீஸ் நிலையங்கள் இருக்கின்றன. ஆற்றங்கரையிலும், கடற்கரையோரத்திலும் அமைந்துள்ள இந்நகரம் மிக அழகானவை. இந்நகரத்தின் தெருக்கள் நீளத்துடன் அகலமும் கூடியவை. இங்கு "சூப்ரீம் கோர்ட்டு" "வாண்டாபீஸ்" பள்ளி (மசூதி) பள்ளிக்கூடம் மற்ற கட்டிடங்கள் பெரியவை.

இங்கு வாணிபத்தைப் பெருக்க "ஓங்கம் சங்காய் பாங்கும், ஓவர் சிஸ் சைனிஸ் பாங்கும்" இருக்கின்றன. இவைகளைப் போன்ற பல நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகள் இருக்கின்றன. இவர்களில் பெரும் சொத்துகளுக்கு உடையவர்கள் அதிகம். இவர்கள் சுல்தான்களிடம் அதிக பற்றுக் கொண்டவர்கள். இவர்களிடம் இப்போதுள்ள மேன்மை தங்கிய சுல்தான் ஸர் இப்ராஹிம் அவர்கள் அதிக அன்பு காட்டுபவர். அவரால் இவர்களுக்குப் பல நலனுண்டு. அவரின் முயற்சியால் மூவாரில் உண்டாக்கப் போகின்றார்கள் ஓர் பொதுப் பூங்கா. (பப்ளிக் பார்க்.) அதற்காக 1-2-1937ல் நகரத்தார் கொடுத்தது $15,000. இதே போல பல காரியங்களுக்கும் மூவார் நகரத்தார் பணம் கொடுப்பவர்கள். இவர்களால் கட்டப்பட்டது மூவார் தெண்டாயுதபாணி கோயில். இக் கோயில் திருவிழாக்கள் ஆகின்றன. இப்போதிருக்கும் பெரிய ஆலயத்தைக் கட்டி துந்துபி ௵ ஆவணி௴ கும்பாபிஷேகம் செய்தார்கள். இவ்வாலயமும், இதிலுள்ள செட்டியார்கள் ஹாலும் மூவாரிலேயே மிகச் சிறந்த கட்டிடங்கள். இங்கு வருவோர் இதைப் பார்த்தே தீரவேண்டும். இப்பெரிய ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் தண்டபாணியின் உருவம் தன்னொளி நிறைந்தது. பழநிப் பாலதண்டபாணி இங்கேயே குடிகொண்டிருக்கிறான் என்றெண்ணும் பண்பமைந்தது. எவ்வாறு அலங்கரிப்பினும் பழநியைப் போன்று ஏற்கும் தன்மை வாய்ந்தது. இப்பெருருவிற் குடிகொண்ட இளங் குமரனுக்கு நகரத்தார் கொண்டாடும் விழா திருக்கார்த்திகை. அன்று பல மக்களுக்கு அன்னமிடுவதோடு இளவேலனை இரதத் தேற்றி ஊர்வலங் கொண்டுவருவர். இக்காட்சி கண்டு களிக்கப் பல ஊர்களில் இருந்து மக்கள் வருவர். அவர்களை வரவேற்று உபசரிப்பதில் மூவார் நகரத்தார் மிகச் சிறந்தவர்கள். இவர்கள் பத்தர்களுக்கு அன்னமிடுவதற்காகக் கட்டப்பட்ட ஹால் மிகப் பெரிது.

மேன்மை தங்கிய டிரெங்கானு சுல்தான்.



His Highness Sir Sulieman Badarul Alam Shaw. K. C. M. G. Trengganu.

இதைப் போன்று நீண்டு, அகன்று ஒரே கட்டடமாக இருக்கும் ஓர் ஹாலை மலாய் நாட்டின் மற்ற ஆலயங்களிற் காண்பதரிது. இப் பெரிய ஹாலிலேயே செட்டியார்கள் வர்த்தக சங்கமும் உடற் பயிற் சிக் கழகமும் இருக்கிறது.

மூவார் சங்கமும் முன்னேற்றும் கழகமும்

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தகத்தைப் பெருக்கு வதற்காக, ஒற்றுமையோடு வாழ்வதற்காக பவஞூ ஐப்பசிமீ 5உ (21-10-34) யில் காணப்பெற்றது வர்த்தக சங்கம். இச்சங்கம் நிறுவக் காரணமாய் இருந்த அன்பர்கள் பலர். இவர்களில் சங்கம் நிறுவிய முதலாவது ஆண்டுத் தலைவராக இருந்த திரு பி. கு. நா. கடையின் பொறுப்பாளர் வீரப்ப செட்டியார் ஒருவர். இவரைப் பலரறிவர். உதார குணமும், பெருந் தன்மையும், நட்பினர்க் குற்றதைத் தனதாகக் கொள்ளும் நற்பழக்கமும் கொண்ட இவர், விஜயஞூ பங்குனிமீ 11உ (1893) விசுவநாதபுரத்தில் பிறந்தார். இவர் தந்தையார் நெடுங் காலம் சிங்கப்பூரில் வசித்தவர். சிவ பூசையிற் சிறந்தவர். திரு. அக்கமணி (ருத்திராட்சம்) யை சிரசி லும் புயத்திலும் தரிப்பவர். சிதம்பர ஐயா வென்ற பெயரைப் பெற்றவர். இவரின் இரண்டாவது புதல்வராக பிறந்த திரு. வீரப்ப செட்டியாருக்கும். பி. கு. நா. குடும்பத்தாருக்கும் பலவகைத் தொடர்புண்டு. அம்முறையில் சிறு வயதில் கல்வி பயின்று இரங்கூ னில் உள்ள பி. கு. நா. கடைக்குச் சென்றார். 26-5-1913ல் மூவார் கடையின் பொறுப்பாளராக வந்தார். அன்று முதல் இங்கு பல முறை வந்து சென்ற இவர் இப்போதும் அக்கடையின் பொறுப் பாளராகவும் "சிபெந்தா நாகப்பா" எஸ்டேட்டை திறம்பட நடத்துபவராகவும் இருக்கின்றார். இவர் மூவாரில் சங்கத்துக்கு தலைவராக இருந்ததைப் போல கோயிற் காரியங்களைத் தங்கள் சொந்த வேலையைப் போல பார்ப்பவர். பொதுக் காரியங்களைக் கவனிப்பவர். பஞ்சாயத்துச் செய்வதில் பரந்த நோக்கங் கொண் டவர். விருந்தினரைப் பேணுவதில் விருப்புள்ளவர். இவரால் சமுகத்துக்குப் பல நலனுண்டு.

இச்சங்கத்தின் இவ்வாண்டுத்தலைவர். திரு. நா. அ. நாகப்ப செட்டியார். காரியதரிசி திரு. பெ. சித. வி. அண்ணாமலை செட்டியார். இருவரும் இளைஞர்கள். ஆயினும் சுதந்தரதாகமும், சுறுசுறுப்பான உழைப்பும் கொண்டவர்கள். இவர்களில் தலைவர் நாகப்ப செட்டியார் பெரும் குடும்பத்திற் பிறந்தவர். இவர் தந்தையார் அண்ணாமலை

செட்டியாரைப் பலரறிவர். அவரின் மூத்த புதல்வனாக ராங்கியத்தில் ராக்ஷஸஞு ஆடிமீ 22உ (1915) பிறந்தார். புதுக்கோட்டை மகாராஜா காலேஜில். எஸ். எஸ். எல். ஸி. வரை படித்துத் தேர்ச்சி பெற்றார். 1933ல் (ஸ்ரீமுகஞு ஆவணிமீ) மலாக்கா வந்தார். (இவர்களுக்குப் பல இடங்களில் தொழிலுண்டு) இப்போது மூவாரில் இருக்கிறார். இவர் கல்வியில் தேர்ச்சி பெற்றதுபோல் தொழிலிலும் தேர்ச்சிபெற்று தங்கள் தொழிலைச் செவ்வனே நடத்திவருகிறார். அத்துடன வாக்கு வன்மையும், எச்சபையிலும் பேசுந்திறனும், தமிழார்வமும், தன்னை நாடினோர்க்குற்றவை செய்யும் நற்பழக்கமும், பெரியாரைப்பேணும் பெற்றியும், கற்றவரைப் போற்றும் கருத்தும் கொண்டவர். இவரைப்போன்று காரியதரிசி அண்ணாமலை செட்டியாரும் பலவற்றிலும் சிறந்தவர். இவர் கோனாபட்டில். திரு. விசுவநாதன் செட்டியாரின் புதல்வனாக சாதாரணஞு மார்கழிமீ 12உ (1911) பிறந்தவர். சிறுவயதில் நன்குகற்று, ஆங்கிலமும் பயின்று 1924ல் மலாயாவுக்கு வந்தார். இப்போது மூவாரில் தங்கள் கடையிலிருந்து தொழிலைக் கவனித்து வருகிறார். எவ்வழியிலும் உயர்ந்த இவர்களாலும் இவரைப் போன்றுள்ள மற்றும் பலராலும் நடத்தப்படும் சங்கத்தால் செட்டியார்களுக்கு எற்படும் நலன்கள் பல. அச் சிறந்த தொண்டை ஆற்றும் இவர்களுக்கு நமது சமூகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறது.

இச் சங்கத்தின் ஆதரவில் தனிப்பட்ட முறையில் நடந்துவருவது உடற்பயிற்சிக் கழகம். இக்கழகம் "ஜவஹர்" பெயரால் 1-1-1936ல் திறுவப் பெற்றது. இதில் பல மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். சிலர் மிகப் பலசாலிகளாகவும் விளங்குகிறார்கள். இவர்கள் பயிற்சி பெற முயர்சிக்கும் தருணத்தில் எடுத்த உருவப் படம் இந்நூலில் சேர்க்கப் பெற்றிருக்கிறது. இக்கழகம் செட்டியார்களால் எதையும் செய்ய முடியும் என்பதை எல்லோருக்கும் காட்டுகிறது. இங்கு செட்டியார்களில் ஒருவர், உலகிற் சிறந்த பலசாலிகளில் ஒருவரான திரு. லெ. சோமசுந்தரம் செட்டியாரின் பயிற்சியைப் பின்பற்றிப் பலர் பயிற்சி பெறுகின்றனர். இவர்களால் இந்நாட்டில் செட்டியார்களுக்கே பெரும் புகழ் கிடைக்கின்றது. இக்கழகத்தை இன்னும் நல்ல முறையில் நடத்த இளைஞர்களுக்கு வேண்டிய ஊக்கங் கொடுப்பதோடு, இதை ஆதரிக்கும் மூவார் நகரத்தாரையும் நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கின்றோம்.


இச்சிறப்பு வாய்ந்த மூவார் நகருக்கு வடக்கே யுள்ளது செகாமெட். இதுவும் ஓர் சிறந்த ஊராகும். இங்கும் சில நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் கோயிலும் உண்டு. இதே போலப் பல நகரங்களைக் கொண்ட ஜோஹோர் சமஸ்தானம் பல வளங்களாலும் சிறந்து செல்வந்தா லுயர்ந்தோங்கி நிற்கிறது. அத்துடன் கைத்தொழிற் வளர்ச்சியும் உண்டு. தொழிலைக் கற்றுக் கொடுக்க ஜோஹோரில் ஓர் பள்ளிக்கூடம் இருக்கிறது. இதில் 1937ம் ஆண்டுக் கணக்குப்படி 51 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளிவந்துள்ளனர். இங்கு கற்கும் மாணவர்களுக்கு சம்பளமில்லை. மாணவர்கள் 3 ஆண்டுகளுக்கு அங்கு கற்கவேண்டும். அவ்வமயம் அவர்களால் செய்யப்பெறும் கைத்தொழில் சாமான்களை விற்று ஒரு பங்கை ஆசிரியர்கள் சம்பளமாகப் பெற்றுக் கொள்வார்கள். மற்ற மூன்று பங்கை பள்ளிக்கூட நிதிக்குச் சேர்ப்பார்கள். இதற்கு மேல் ஆகும் பெரும் செலவை கவர்ன்மெண்டார் கொடுக்கிறார்கள். இதனால் ஏழை மக்கள் பெறும் பலன்கள் பல. எல்லா வகையாலும் நன்மையைச் செய்கின்ற ஜோஹோர் சமஸ்தானத்தில் வாழும் மக்கள் பல்லோரும் இன்புற்றிருக்கின்றனர்.

ஜோஹோர் சமஸ்தான வரவு செலவுகள்

1937—1938.

வருமான விபரம்.	வருமானம். $	cts.	செலவு விபரம்.	செலவுகள். $	cts.
நிலவரி	3,492,745	00	சொந்த செலவு வகையறு	7,417,753	00
காட்டிலாக்கா	308,120	00	பென்ஷன் வகையறு	697,984	00
கஸ்டம்ஸ்	7,483,250	00	ஏனைய வருடாந்திர செலவுகள்	3,898,818	00
லைசென்ஸுகள், கலால் இலாக்கா	3,947,860	00	ஏனைய முக்கிய செலவுகள்	953,328	00
கோர்ட் ஸ்டாம்புகள்	287,945	00	பப்ளிக்வொர்க்ஸ் செலவுகள்	1,678,860	00
தபால் தந்தி இலாகா	403,050	00	பப்ளிக்வொர்க்ஸ் முக்கிய		
போர்ட், ஹார்பர் வரி	35,910	00	செலவுகள்	7,154,462	00
வட்டி வகையில்	1,562,273	00	மின்சாரம் முதலியவைகள்	306,300	00
சில்லரை வருமானங்கள்	395,000	00			
முனிஸிபால்டி	1,343,845	00			
நில விற்பனை வகையில்	240,000	00			
	19,499,998	00			
வருமானக் குறைவு	2,607,507	00			
$	22,107,505	00		$ 22,107,505	00

மயிலேறும் வேலனுக்கு மைடான்வாழ் மாவணிகர்
கயிலாயம் போலாகக் கட்டிவைத்த பொற்கோயில்.
உத்தேசம் 50 வருடத்திற்கு முன் நிறுவியது.



Medan Temple.

[3] ஆ. கெட்டா சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

"கிழமைமிகு கெட்டாவில் கீர்த்தி மக்கள்
பழந்தமிழே முன்வந்து பாடு."

கெட்டா சமஸ்தானம் வடக்கே பெர்லீஸ், சியத்தின் சிங்கோரா மாகாணத்தையும், தெற்கில் பேராவையும் கிழக்கே சயாம், பட்டாணி மாகாணத்தையும், மேற்கே மலாக்கா ஜலசந்தியையும் எல்லைகளாகக் கொண்டது. இதன் பரப்பு 3,660 சதுர மைல்கள். இந்த கெட்டாவுக்கும் இந்தியாவுக்கும் பன்னாட்களாகத் தொடர்புண்டு. இதை முன்னே கூறப்பட்டிருக்கிறது. (13ம் பக்கம் பார்க்க). இவ்வாறு தொடர்புள்ள கெட்டா அரசியல் 15ம் நூற்றாண்டில் பௌத்தர்களாலும், தென் இந்திய மன்னர்களாலும் நடந்தேறியது. பிறகு டச்சுக்காரர்கள் பலர் வந்து இந்நாட்டைக் கைப்பற்றினர். அப்போதும் 17ம் நூற்றாண்டில் மலையாளத்துக்கும் தென்னாட்டுக்கும் இங்கிருந்து பல கப்பல்கள் சென்றிருக்கின்றன. அன்றிருந்த வியாபாரப் பெருக்கத்தால் கெட்டா சமஸ்தானத்தில் சுமார் 100,000 மக்கள் வசித்திருக்கிறார்கள். இந்தியாவைப் போன்று சீனமும் கெட்டாவுடன் வியாபாரம் செய்துகொண்டிருந்தது. சின்னாட்களில் கெட்டா சுல்தான்கள் சயாம் அரசியலின் உதவியை நாடினர். அவர்களுக்குக் கப்பமும் செலுத்தினர். சயாம் அரசரும் கெட்டா சுல்தான்களுக்கு யானைகளை வெகுமதியாக அனுப்பினார். இவர்களுக்குள் அதிகத் தொடர்புகள் ஏற்பட்டன. அவ்வமயம் சயாம், பர்மாவுடன் போர் தொடுத்தது. அதற்காக சயாம் அரசர், கெட்டா சுல்தானிடம் பொருள், ஆயுதம், மக்கள் உணவுப் பொருள், படகு மற்றவைகள் கொடுக்கும்படியாகக் கேட்டார். கெட்டா சுல்தான் கொடுக்க மறுத்தார். அதனால் பகை உண்டாகியது. அதற்குப் பயந்து கெட்டா மன்னன் பிரிட்டிஷாரிடம் அடைக்கலம் புகுந்தார். பிறகு கெட்டா சுல்தானிடம் காப்டன் பிரான்ஸிஸ் லைட் பினாங்கு தீவைப் பெற்றார். (93ம் பக்கம் பார்க்க) அவர்களுக்குத் தீவைக் கொடுத்த சுல்தான் மறுபடியும் டச்சுக்காரர்களால் தூண்டப்பட்டு பிரிட்டிஷாருடன் யுத்தம் தொடர்ந்தார். அதில் வெற்றி பெறவில்லை. அப்பால் 1798ம்

ஆண்டில் வெல்லஸ்லி மாகாணத்தையும் பிரிட்டிஷாருக்கு, சுல்தான் கொடுத்தார். (136ம் பக்கம் பார்க்க). அவைகளுக்காக பிரிட்டிஷார் இன்னும் ஆண்டு ஒன்றுக்கு $10,000 கெட்டா கவர்மெண்டுக்குக் கொடுத்து வருகிறார்கள். அவர்களிடம் ஒப்பந்தம் செய்த சுல்தான் அப்துல்லாவும் 1798ல் காலமானார். அவருக்குப் பிறகு சுல்தான் தாஜுத்தின் முக்கரன்ஷா கெட்டா மன்னனானார். இவருக்குப் பிறகு சுல்தான் அஹமத் தாஜுத்தின் மன்னனானார்.

இவர் காலத்தில் 1821ம் ஆண்டில் சயாம்காரர்கள் திடீரெனப் படை எடுத்து கெட்டா ஆற்றில் பல யுத்தக்கப்பல்களுடன் வந்து நுழைந்தார்கள். கோட்டைகளை அழித்தார்கள். தரைப்படைத் தலைவன் பெண்டாராவையும், கடற்படைத் தலைவன் லெக்ஷ்மணனையும், சிறைப்படுத்தினார்கள். இவர்களில் லெக்ஷ்மணன் கொல்லப்பட்டான். இதைத்தெரிந்து "கோட்டா" விலிருந்து சுல்தான் தனது மனைவிமக்களோடு யானையேறி தன் சகோதரன் தொங்கு சுலேமான் இடமும் தகவல் தெரிவித்துவிட்டு பினாங்குக்கு வந்து உயிர் தப்பினார். அதை அறிந்த சயாம்காரர்கள் துரத்தினார்கள். அக்கடற்படையை பினாங்கில் புகுதவிடாமல் கிழக்கு இந்தியக் கம்பெனியின் கடற்படைகள் தடுத்துவிட்டன. பிறகு இம்மன்னனை கெட்டாவில் இருந்து அரசு செலுத்தவேண்டுமென பிரிட்டிஷார் சயாம் மன்னனிடம் சிபார்சு செய்தனர். அவர்களும் ஏற்று தங்கள் கண்காணிப்பில் கெட்டா சுல்தான் அரசியலை நடத்துவதற்கிணங்கி சுல்தான் அஹ்மத் தாஜுதீனை மறுபடியும் கெட்டா மன்னனாக்கினார்கள். இதில் அதிக சிரத்தை எடுத்தவர் பினாங்கு கவர்னர் திரு. புல்லர்ட்டன். அவ்வரசியல் 1909ம் ஆண்டுவரை சயாம் பார்வையிலேயே நடைபெற்றது.

இச்சமஸ்தானத்தில் இப்போதிருக்கும் சுல்தான் மேன்மை தங்கிய ஸர் அப்துல் ஹமீது ஹாலிம்ஷா. கே. ஸி. எம். ஜி., இப்னி மர்ஹூம் சுல்தான் அஹமட் தாஜுதின் முகாரம் ஷா வாவர். இவர் 4—6—1864ல் பிறந்தவர். 21—1—1882ல் பட்டத்துக்குவந்தார். இவர் சுல்தான் ஆனதிலிருந்தே கெட்டாவின் செல்வ வளம் சிறந்தது. இவர் ஓர் இல்லறத்துறவி. என்றும் மகிழ்வோடிருப்பவர். நேற்று நடந்ததை மறப்பவர். எதிர்காலத்தை எண்ணுபவர். இவரைப் பலர் தெய்வமாக எண்ணுகின்றனர். இப்போது மலாயாவில் உள்ள சுல்தான்களில் இவரே ஆண்டில் முதிர்ந்தவர். இவர் இதுவரை 8 மனைவிகளை விவாகம் செய்து கொண்டவர். இஸ்லாம் மார்க்க விதிப்படி ஒருவர் நான்கு மனைவிகளைப் பெறலாம். அதற்குமேல் விவாகம் செய்துகொள்ள வேண்டுமானால் ஓர் மனைவி இறக்க

வேண்டும். அல்லது விவாகரத்துச் செய்து கொள்ளவேண்டும். இதற்கேற்ப மலாய்க்காரர்கள் பல விவாகங்கள் செய்து கொள்வார்கள். அதிலும் சுல்தான்மார்கள் அதிகம். அவர்கள் எத்தனை விவாகம் செய்துகொண்டாலும் பட்டத்தரசி ஒருவள்தான். பட்டத்தரசிக்கோ, மற்றவளுக்கோ பிறக்கும் ஆண் குழந்தைகளில் மூத்தவருக்கு அடுத்த பட்டம் என்பது ஓர் முறை. இத்துடன் சுல்தானுக்கு அடுத்தபடியாக அந்தமரபினரில் யார் பெரியவரோ அவருக்குப் பட்டம் கொடுப்பதென்பது ஒரு முறை. இதனால்தான் பல வழக்குகள் நேர்கின்றன. இவ்வாறு விவாகம் செய்துகொள்ளும் முறைப்படி கெட்டா சுல்தான் (இப்போதிருப்பவர்) செய்த மனைவிகளில் இன்னும் 2 பேர்கள் இருக்கிறார்கள். இந்த 8 மனைவிகள் இடமும் இவருக்கு கிடைத்த மக்கள் 45 இவர்களால் 28—7—1934 வரை பெறப்பெற்ற குழந்தைகள் 92. இவர்கள் கெட்டா சுல்தானின் பேரன் பேத்திகளாவர். இதற்குமேல் பெருகியது பல. இவ்வொன்றினாலேயே இவரின் களங்கமற்ற தூய்மை விளங்கும். அநுபவமும் நிறைந்தவர். மற்ற சமஸ்தானங்களில் எல்லாம் பல மாறுதலுண்டு. இவருடைய சமஸ்தானத்தில் மத மார்க்க சம்பந்தமாய் எந்த மாறுதலுமில்லை. அரசியல் மொழி மலாய் மொழியே. இவர் பட்டத்துக்கு வந்தபின் 10—3—1909ல் ஏற்பட்ட பிரிட்டிஷ் சயாம் உடன்படிக்கையின்படி சயாம் அரசியலார் பார்வையிலிருந்து கெட்டா அரசியல் விலகியது. அன்று முதல் சுல்தான் பார்வையிலிருந்த கெட்டாவில் 1—11—1923ல் ஏற்பட்ட சிங்கப்பூர் உடன்படிக்கையின்படி ஓர் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் நியமனமாகினர். இவர் நியமிக்கப்பெற்றிருந்தாலும் அரசியலை நடத்தும் அதிகாரம் சுல்தானுக்கும், இந்நாட்டின் ரீசென்டுக்குமே உண்டு. மற்ற உத்தியோகஸ்தர்கள் எல்லாம் இவர்களுக்கு உட்பட்டே நடப்பர்.


இவ்வரசியலை நடத்த ஓர் கௌன்ஸில் உண்டு. அதன் தலைவர் சுல்தான். அதன் அங்கத்தினர்களில் பிரிட்டிஷ் அட்வைஸர் ஒருவரே ஐரோப்பியர். மற்றவர்கள் எல்லோரும் மலாய்க்காரர்களே. இச்சமஸ்தானத்தை அலோர் ஸ்டார், பாலிங், பண்டர்பாரு, கோலா மூடா, கூபாங்பாசு, லங்காவி, பாடாடிராப், என், கூலிம் என்று பல ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். இவைகளில் அலோர் ஸ்டாரே கெட்டாவின் தலைநகர். இந்நகர் பினாங்கிலிருந்து கடல் மார்க்கம் சென்றால் 60 மைல் கடலிலும் 7 மைல் ஆற்றிலும் செல்ல வேண்டும். அக்கடற்கரை ஓரத்தில் பல ஊர்கள் உண்டு. அக்கடலில் சங்கமம் ஆகும் ஆற்றின் கரையிலேயே அலோர்ஸ்டார் நகரம்

அமைந்திருக்கிறது. இதற்கு நேரான மோட்டார் ரோடுகளும் உண்டு. அலோர் ஸ்டாரில் இருந்து தென்மேற்கே பினங்குக்கு வரும் வழி மிக அழகானது. இருபுறமும் கழனி (வயல்) சூழ, கதிர்கள் நிறைந்திருக்க, கமுகுகள் உயர்ந்திருக்க கண்டகண்ட இடமெல்லாம் குடிகள் இல்லங்களை அமைத்து அவைகளுக்கு நேராக வழியின் இருபுறமும் ஓடிவரும் அகன்ற கால்வாயில் மீன் பிடி வலைகளைப் போட்டிருக்க, அதனுல் கிடைக்கும் மீன்களை எடுப்பதற்காக சிறுவர்கள் காத்திருக்க, அவைகளைக் கண்டு செல்பவர்கள் அளவிலா மகிழ்வுறும் வண்ணம் $19\frac{1}{4}$ மைல் நீளத்துக்கு ஒரே நேராக அமைந்துள்ள இவ்வழியைப்போல எங்கும் காண்பதரிது. காணவே இயலாது. இவ்வாறு அழகு செய்யும் வயலைப்போல பல இடங்களில் நெல் வெள்ளாமை செய்யும் நிலங்கள் கெட்டா சமஸ்தானத்தில் அதிகம். சுமார் 246,315 எக்கர்கள் நெல் வெள்ளாமை செய்யப்படுகின்றன. இங்கு ரப்பர், தென்னை, பாக்கு, அன்னசிப்பழ விளைவுகளும் உண்டு. இந்நிலங்களில் பெரும் பகுதி மலாய்க்காரர்களுக்கே சொந்தமாக இருக்கும். அதற்குக் கொடுக்கப்பட்ட கிரான்டுகளுக்கு பாதுகாப்பு மிகுதி. இதேபோல பல சமஸ்தானங்களிலும் இருக்கிறது. இருந்தாலும் இங்கு அதிகம். இந்நிலங்களில் சீனர்களும் வெள்ளாமை செய்கிறுர்கள்.

இச்சிறப்பு வாய்ந்த அலோர் ஸ்டாரிலும், கூலிம், சுங்கைப்பட்டாணி மற்றவூர்களிலும் நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள்கடைகள் இருக்கின்றன. இவர்கள் வாணிபத்தைப் பெருக்க, ஒற்றுமையை உயர்த்த அலோர்ஸ்டாரில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வர்த்தகசங்கம் ஒன்றமிருக்கிறது. இச்சங்கம் செட்டியார்களுக்குவேண்டிய பாதுகாப்பைத் தேடி நலனைச் செய்துகொண்டிருக்கிறது. இத்துடன் அலோர்ஸ்டார் நகரத்தாரால் நிறுவப்பெற்றுளது தெண்டாயுதபாணி கோயில். அவ்வாலயத்தின் படம் இந்நூலில் சேர்க்கப்பெற்றிருக்கிறது. இங்கு எழுந்தருளி இருக்கும் கந்தனுக்கு நகரத்தார் மாசி மகத்தன்று விழாக்கொண்டாடுவார்கள். அவ்வமயம் பல அன்பர்களுக்கு அன்னமளிக்கப்பெறும். அவ்வைபவமும் கந்தன் ஊர்வலப் பவனியும் காணத் தக்கவைகளில் ஒன்று. இதை மிகப் பொறுப்புடன் நடத்தும் நகரத்தார்களில் பெருஞ் சொத்துகளுக்குடையவர் பலிருக்கின்றனர்.

இவர்களில் திரு. சி. நா. க. நாகப்ப செட்டியார் கவர்ண்மென்டாருடனும், இந்தியர்களுடனும் மிகத் தொடர்பு கொண்டவர். இவர் கண்டா மாணிக்கம் செ. சி. நா. சின்னன் செட்டியாரின் இரண்டா

வையகத்தோர் கொண்டாடும் வள்ளி மணாளனுக்கு
செய்கோனில் நகரத்தார் செய்துவைத்த திருக்கோயில்.



Saigon Chettiars Temple.

வது புதல்வராக பிலவஹு தைமீ 27உ (8-2-1902) பிறந்தவர். சிறு வயதிலேயே கற்க ஆரம்பித்தார். இவர்கள் குடும்பம் மிகப் பெரிது. இவர்களுக்கு பல இடங்களில் லேவாதேவித் தொழில், வியாபாரம், இயந்திரங்கள் பலவுண்டு. அம்முறையில் 1911ம் ஆண்டில் இலங்கைக்குச் சென்ருர். 1917ம் ஆண்டு வரை ஆங்கிலம் கற்ருர். அத்துடன் சில பண்டிதர்களிடம் தமிழும் கற்ருர். இதற்கிடையில் இவருக்கு செம்பனூர் குமடநா. சுப. நாச்சியப்ப செட்டியார் மகள், கணவனுரை தவருத காரிகை மீனுட்சியை 1916ல் திருமணம் செய்தார்கள். பிறகும் இவர் இலங்கைக்குச் சென்று பயின்றதோடு தொழிற் பயிற்சியும் பெற்ருர். அதற்காக 1923ம் ஆண்டுவரை கொழும்பு, ஜாயலே, கெலனியா முதலிய இடங்களில் இருந்த இவர்களின் மில்களில் மானேஜராக இருந்தார். 1924ம் ஆண்டில் அலோர்ஸ்டார் கடைக்கு வந்து லேவாதேவித் தொழிலைச் செய்தார். அன்றுமுதல் இன்றுவரை அலோர்ஸ்டாரிலேயே இருக்கிருர். அதிலும் பல மாறுதல்கள் உண்டு. இவர் ஓர் முறை தாய் நாடேகி வரும்போது 1933ம் ஆண்டில் தனது இல்லாளேயும், செல்வி, செல்வனேயும் அழைத்து வந்தார். இங்கு வந்தபின் ஆண் மகவு ஒன்று பிறந்தது. மலாயாவில் முதன் முதலாக செட்டியார் செல்வனைப் பெற்றெடுத்தவர் இவரே. இப்போது இவருக்கு 2 ஆண்களும் 3 பெண்களும் 5 குழந்தைகள் உண்டு. இவர்களில் மூத்தமகள் இலட்சுமியை இங்கிருந்தழைத்துச் சென்று மகிபாலன்பட்டி மு. பழ. ஏகப்ப செட்டியாருக்கு 1937ல் திருமணம் செய்து கொடுத்தார். அவர் சென்னையில் டாக்டர் படிப்புக்குப் படித்துக் கொண்டிருக்கிருர். இச்செல்வத்தாலுயர்ந்த நாகப்ப செட்டியார் மிக சுருசுருப்புள்ளவர். என்றும் புன்சிரிப்போடு கூடிய வதனத்துடனிருப்பவர். எச்சபையிலும், யாரிடமும் அஞ்சாது பேசும் வன்மை பெற்றவர். விருந்தினரைப் பேணுவதில் விருப்புற்றவர். தன் காரியத்தைப்போல பிறர் காரியத்தையும் எண்ணுபவர். தயாள சிந்தையுடையவர். அவைகளுடன் மலாயும் நன்கு கற்றவர். அதனல் இவரை அலோர்ஸ்டார், கோத்தாஸ்டார் சானிட்ரி போர்ட்டில் ஓர் அங்கத்தினர் ஆக்கிஞர்கள். அத்துடன் ஹிந்து மயான நிலத்தின் டிரஸ்டியாகவும், நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தில் ஓர் முக்கிய அங்கத்தினராகவும், மலாயா இந்தியன் இமிகிரேஷன் கமிட்டியில் ஓர் அங்கத்தினராகவும் இருக்கிருர். 1938ம் ஆண்டில் கிட்டா இந்தியர் சங்கத் தலைவராகவும் இருந்தார். இவரால் இந்துக்களுக்கும், செட்டியார்களுக்கும், பொது மக்களுக்கும் பல நன்மையுண்டு. இவருக்கு அனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் வாழும் அலோர்ஸ்டாரில் இருந்து பினங்கு வரும் வழியில் உள்ளது குருன். இங்கு ஓர் மலை உண்டு. அதில் ஓர் சுப்பிரமணியர் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாலயம் எத்தனையோ காலத்துக்குமுன் தோன்றியதெனப் பலர் கூறுகின்றனர். இவ்வாலயத்தின் தொன்மையை ஆங்கில சரித்திராசியர்களும் விளக்கி இருக்கிறார்கள். இதே போல பல சிறப்பு வாய்ந்த இந்திய அடையாளங்கள் அதிகமாகக் கொண்டுள்ள கெட்டா சமஸ்தானத்தைச் சேர்ந்தது லங்காவித் தீவு.

லங்காவித் தீவு

இத்தீவு பினங்கிலிருந்து வடக்கே 60 மைலில் இருக்கிறது. இதற்கு கெட்டாவிலிருந்து கப்பலில் செல்ல வேண்டும். இத்தீவுகளை "லங்காசுகாவின்" ஆட்சி நாடென்று கூறுகின்றனர். கெட்டாவில் இப்பெயர் கொண்ட நதி ஒன்றுமுண்டு. இந்த லங்காசுகாவின் ஆட்சியையோ, லங்காபுரியின் மாட்சியையோ கூறுதற்கு உரிய ஆதாரங்கள் இல்லை. இப்போதுள்ள இத்தீவில் பல மலைகள் இருக்கின்றன. இதில் உயர்ந்த மலையின் சிகரம் 2888 அடிகள். இம்மலை பினங்குக் கொடிமலைக்கு உயரமாகவும், அழகாகவும் இருக்கின்றன. லங்காவியை அடுத்து "பூலோ தஞ்சோங் டெண்டாங்" "பூலோ டமூலை" என்ற தீவுகளும் இருக்கின்றன. இத்தீவுகளைக்காண கெட்டா அரசியல் சயாம் நாட்டிற்குட்பட்டிருந்த தருணம், "தாஜி" என்ற சியம் அரசர் தன்மந்திரிகளுடனும் குடும்பசகிதமும் "ஜோங்" என்ற கப்பலில் இத்தீவுக்கு வந்தார். மறுபடி திரும்புந் தருணம் காற்றினால் கப்பல் உடைந்தது. பலர் இறந்தனர். அரசரும் சில மந்திரிகளும் உயிர்தப்பி ஓர் தீவைச்சேர்ந்தனர். அதற்கு பூலோதாஜி" என்றபெயரை வைத்தனர். பிறகு இங்கிருந்து ஓர் மரக்கலம் தயாரித்து "தெலோக் பந்தால்" குடாவின் வழியாக "டாமாங் புண்டிங்" சேர்ந்தனர். இந்த "பூலோ தாஜி" என்ற தீவு இன்றும் சயாம் அரசியலுக் குட்பட்டதாகவே இருக்கிறது.

இவர் வந்து பார்த்துச்சென்ற லங்காவித்தீவில் உள்ள நகர் "கூவா" வாகும். இங்கு மலாய் டிஸ்ட்ரிக்கட் ஆபீஸர் இருக்கின்றனர். இங்கு சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் உண்டு. இப்பகுதியில் "டாயாங் புண்டிங்" என்ற இடத்தில் சலவைக்கல் சுரங்கம் ஒன்றுண்டு. இதை அடுத்து ஓர் குடிதண்ணீர்க்குளம் இருகிறது. சின்னாள்முன் இக்குளத்துத் தண்ணீரைப் போத்தல்களில் அடைத்து சிங்கப்பூர் மற்ற இடங்களில் சிலகாசுகளுக்கு விற்றனர். இத்தண்ணீரைக் குடிப்பதாலும், குளிப்பதாலும் பல

நோய்கள் தீருகிறதென்று கூறுகிறார்கள். இதுபோல் "டாயாங்' ரோக்" அல்லது "புத்தேரி பேரானாக்" என்ற பெயருடன் ஓர் குடிதண்ணீர்க் குளமும் உண்டு. இத்தீவு கொஞ்ச நாட்களில் ஓர் பெரிய நகராகலாம் எனக் கருதப்படுகிறது.

பல தீவுகளாலும், நெல் வெள்ளாமையாலும், இயற்கையின் எழிலாலும் சிறந்தது கெட்டா சமஸ்தானம். இச் சமஸ்தானத்தில் மதமார்க்கக் கல்வியைப் போதிப்பது போல, தமிழ் மொழிக்கும் கொஞ்சம் சிறப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் ரப்பர்த் தோட்டங்கள், மற்ற இடங்களில் சுமார் 36 தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இதற்கு கவர்ன்மெண்டார் ஆண்டொன்றுக்கு $6,319-50 கிராண்டாகக் கொடுக்கின்றனர். இதை இன்னும் கொஞ்சம் அதிகப் படுத்தினார்களானால் தமிழ் மக்களுக்குப் பேருதவியாக இருக்கும். தமிழ் மக்களும், இந்தியர்களும் முன்னேற்றமடைய அலோர்ஸ்டாரில் "கெட்டா இந்தியர் சங்கம்" ஒன்றும் இருக்கிறது. இதில் பல அறிஞர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவர்களால் இந்துமக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பல. இதே போன்று ஒவ்வொரு நாட்டினருக்கும் சங்கங்கள் உண்டு. அத்துடன் வியாபாரப் பெருக்கமும், சுல்தானின் கருணையும் அதிகம். களங்கமற்ற மனத்தூய்மையோடு, நாட்டைக் காக்கும் சுல்தான் அவர்களின் மரபு பெருகியதைப் போல குடிகள் பல்லோரும் பெரு வாழ்வு பெற்று இன்ப வாழ்க்கையோடு இருக்கின்றனர்.

[3] இ. பெர்லீஸ் சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

"பெர்லீஸின் பெற்றிதனைப் பேருலகோர் காணத்
திருவார் தமிழ்த்தாயே செப்பு."

பெர்லீஸ் சமஸ்தானம் மலாயா தீபகல்பத்தின் வடமேற்குக் கரையில் 316 சதுர மைல்கள் கொண்டதாகும். இச்சமஸ்தானம் கிழக்கே சயாம் அரசியலையும், தெற்கே கெட்டாவையும், மேற்கே

சயாம் மலைகளையும், வடமேற்கே கடலையும் எல்லையாகக் கொண்டுளது. இது 1821ம் ஆண்டு வரை கெட்டா ஆட்சியின் கீழ் இருந்தது. சயாம் அரசர் கெட்டா மற்ற அரசியல்களைத் திருப்பிக் கொடுக்கும் போது பெர்லீஸ் சமஸ்தானத்தை தனிப்பட்ட சுதந்தர நாடாக ஆக்கினர். இந் நாட்டுக்கு அரசராக 1841ம் ஆண்டில் சையத் ஹாரூன் என்ற அரபியரின் புதல்வனாகிய ஸையத் ஹுஸேனுக்கு இராஜ பட்டத்தைக் கொடுத்து சுல்தான் ஆக்கினர்கள். இப்போது பெர்லீஸ் சமஸ்தானத்தின் சுல்தானாக இருப்பவர் மேன்மை தங்கிய ராஜா ஸையத் அல்வி பின் அல்மர்ஹூம் ஸையத் ஸாபி. ஸி. எம். ஜி., ஸி. பி. இ., ஆவர். இவர் 1905ம் ஆண்டில் ஓர் பிரிட்டிஷ் ஆலோசனை கர்த்தரைக் கொண்டார். ஓர் ஸ்டேட் கௌன்ஸிலைக்கொண்டு அரசியலை நடத்தி வருகிறார்.

இச் சமஸ்தானத்தின் தலை நகர் " கங்கார் ". இந்நகருக்கு நல்ல ரோடு வசதிகளுண்டு. இதற்கு 3 மைல் தூரத்தில் உள்ள பெர்லீஸ் ஆற்றின் வழியாக " திப்பிங் திங்கி " வரை கப்பல்கள் ஓடுகின்றன. இச் சமஸ்தானத்தின் வழியாகவே எப். எம். எஸ். இருப்புப் பாதை பாங்காக்கைச் சேர்ந்த " பாடாங் ரெங்காஸ் " செல்கின்றது. பினாங்கிலிருந்து பெர்லிஸ்க்கு கடல் வழியாகவும் வரலாம். பல வழியாலும் போக்கு வரத்து வசதியுள்ள இச் சமஸ்தானத்தில் நெல் வெள்ளாமை மிகுதி. மற்ற ரப்பர், கொப்பரா, ஈயம், பாக்கு விளைவுகளும் உண்டு. இங்கு வியாபாரத்தைப் பெருக்கப் பல இந்தியர்கள் இருக்கிறார்கள். சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கடைகளும் உண்டு. இவர்களாலும், வாணிபத்தாலும் சிறந்துள்ள பெர்லீஸ் சமஸ்தானம் சுல்தானின் ஆட்சியின் உயர்வால் சிறந்து விளங்குகிறது. இங்கு வாழும் மக்களும் சுதந்தரத்துடன் இன்பத்தையும் பெறுகின்றனர். இச்சமஸ்தானத்தின் தலைநகர் " கங்கார் ". இதில் சுல்தான் வசிக்கின்றார். இவருடன் அரசியலை நடத்தும் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் வசிக்குமிடம் " ஆரௌ ". இங்குதான் சமஸ்தானத்தின் ஆபீஸ்களும், ஜெனரல் ஆஸ்பத்திரி மற்ற நிலையங்களும் இருக்கின்றன. இந்நகரமும் பார்வைக்கு அழகானவை. இங்கு வாழும் மக்களும் சுகாதாரத்துக்கேற்ற முறையில் வாழ்ந்து இன்பத்தைப் பெறுகின்றனர்.

[3]. ஈ. கிளந்தான் சமஸ்தானம்

தமிழ்த் தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

"கிளந்தானின் சீர்மக்கள் கேட்டிடவே என்று
மிளந்தமிழே முன்வந் தெழுது"

கிளந்தான் சமஸ்தானம் வடக்கே சீனக் கடலையும், தெற்கே பாஹாங்கையும், கிழக்கே டிரங்கானுவையும், மேற்கே பேராவையும் எல்லையாகக் கொண்டுளது. இதன் பரப்பு 5,750 சதுர மைல்கள். இச்சமஸ்தானம் 12ம் நூற்றாண்டில் ஸ்ரீ விஜயா, பாலம் பாங்கின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி. பி. 1365ல் மஜாபஹித்திய ஜாவானிய ஆட்சிக்குட்பட்டிருந்தது. கி. பி. 1411 "மகாராஜ குமார்" என்பவர் ஆட்சி புரிந்தார். அவருக்குப்பிறகு ஆட்சி புரிந்தோரிடம் 1488ல் மலாக்கா "சுல்தான் முகம்மதுஷா" கிளந்தானைக் கைப்பற்றி 1511ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். அவ்வமயம் கிளந்தானில் முன்பு ஆட்சி புரிந்த சுல்தானின் மகள் ஒருங் கேனிங் என்பவள் மலாக்கா சுல்தான் முகம்மதுஷாவை மணந்தாள். அவள் பெற்றெடுத்த மகனே பேராவில் முதலாவது சுல்தானானார். இவர்களுக்குப் பிறகு பாஹாங் ராஜா அலிஜலால் அப்துல்ஜலீல் ரியாத்துல்லா 1580ல் கிளந்தான் ஆட்சியை ஏற்றார். இவருக்குப் பிறகு 1587ல் ராஜா ஹுசேன் என்பவர் அரசனானார். இவரிடம் போர்த்துக்கீயர் கிளந்தானையும் பறித்துக்கொண்டனர். அவர்களிடமிருந்து 1603ம் ஆண்டில் சயாம் மன்னர் "பட்டாணி"யைக் கைப்பற்றிய தருணம் கிளந்தானையும் கைப்பற்றினர். அன்றுமுதல் சயாம் அரசியலுக்குட்பட்டே கிளந்தான் சமஸ்தானம் இருந்தது. அவர்கள் ஆட்சியை நடத்த "கோத்தாபாருவை" தலைநகராக்கினர்கள். அதன்பிறகு 15-7-1909ல் பிரிட்டிஷாருக்கும் சயாம் மன்னருக்கும் நடந்த ஒப்பந்தப்படி டிரெங்கானு, கெட்டா, பெர்லீஸ் முதலியவைகளை ஒப்பித்ததுபோல கிளந்தானையும் பிரிட்டிஷாரிடம் ஒப்பித்தார்கள்.

பிரிட்டிஷாரின் மேற்பார்வையில் சுதந்தர நாடாக உள்ள கிளந்தான் சமஸ்தானத்தின் இப்போதைய மன்னர் மேன்மைதங்கிய ஸர் இஸ்மாயில் இப்னி அல்மர்ஹூம் சுல்தான் முகம்மது நான்காவது கே. ஸி. எம். ஜி. ஆவர். இவர் 26-7-1889ல் பிறந்தவர்.

26-4-1921ல் சிம்மாசனமேறினர். இவருக்கு இப்போது வயது 49 ஆகிறது. இவர் மிகவும் நல்லவர். குடிகளிடத்து அன்பு பூண்டவர். நாட்டைச் சீர்திருத்துவதில் சிரத்தை கொண்டவர். இவர் பிரிட்டிஷாருடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி 1930ம் ஆண்டில் ஓர் பிரிட்டிஷாரை ஆலோசனையாளராகக்கொண்டு அரசியலை நடத்திவருகிறார்.

இதன் தலைநகரம் இப்போதும் "கோத்தாபாரு"தான். இந்நகரம் கிளந்தான் நதியின் வடகரையில் அமைந்துளது. இங்கேயே சுல்தான் அரண்மனையும் பிரிட்டிஷ் ஆலோசனையாளரின் ஆபீஸும் இருக்கிறது. இதேபோல "டும்பாட், பாசோக், பாசேர்பூத்தே, கோலாகிராங்" என்ற நகரங்களும் பெரியவைகளாகும். இச்சமஸ்தானத்தில் விவசாயம் மிகுதி. சுமார் 70,000 டன் நெல்கள் ஆண்டொன்றுக்கு விளைவாகின்றன. தென்னை, பாக்கு மற்ற விளைவுகளும் உண்டு. சுமார் 89,213 எக்கர்களில் ரப்பர் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து கொப்பரை, ரப்பர், பாக்கு, மீன், கால்நடைகள், பட்டுத் துணிகள் மற்றவைகள், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வேற்றுமதி, இறக்குமதிக்கு இரயில், கப்பல் வசதி இரண்டுமுண்டு. இச்சமஸ்தானம் நெசவுத் தொழிலில் சிறந்தது. இங்குள்ள மக்கள் நன்றாக நெய்வார்கள். இவர்களில் ஆண்களுக்கு மட்டும், மாதம் ஒன்றுக்கு $20 முதல் 40 வரையிலும், பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 30 காசு முதல் 70 காசு வரையிலும் சம்பளம் கிடைக்கும். இவர்கள் நெய்யும் பட்டுக் கைலிகளில் பொன் ஜரிகை வேலைப்பாடுகளை நன்றாக அமைப்பார்கள். இதற்கு அழகிய பூக்களின் வடிவங்களைக் குறித்தனுப்புவர்களுக்கு சன்மானம் $6 கொடுப்பார்கள். பொன் ஜரிகைக் கைலிகளின் விலை $12-50லிருந்து $2-00 வரை இருக்கிறது. பட்டுக் கைலிகள் $3-50லிருந்து $12-00 வரை இருக்கிறது. இத்தொழிலிலும் மற்ற ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரங்களாலும் மக்கள் இன்புற்று வாழ்கிறார்கள்.

[3.] உ. டிரெங்கானு சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்.

(குறள் வெண்பா)

"திருவார் திரெங்கானு சீர்த்திமக்கள் காண
உருவார் தமிழ்த்தாயே ஓது."

டிரங்கானு சமஸ்தானம் வடக்கிலும், வடமேற்கிலும் கிளந்தானையும், தெற்கிலும் தென் மேற்கிலும் பாகாங்கையும், கிழக்கில் சீனக்கடலையும் எல்லைகளாகக் கொண்டுளது. இதன் பரப்பு 5,050 சதுரமைல்கள். இச்சமஸ்தானமும் பாலம்பாங்கின் ஆட்சியி லிருந்தே தொடர்ந்து வருகிறது. இச்சமஸ்தானத்தை 1776ம் ஆண்டில் ஆட்சிபுரிந்த சுல்தான் மன்சூர் என்பவர் சயாம் மன்னருடன் நட்புக்கொண்டு ஆட்சி செலுத்தினர். சயாம் அரசருக்கு ஒவ்வோராண்டும் பொன்மலர்களைக் கப்பமாக அனுப்பினர். 1791ம் ஆண்டில் இக்கப்பம் நிறுத்தப்பட்டு சயாமின் ஆதிக்கத்துக்கு டிரெங்கானு உட்பட்டது. சயாம் கவர்ன்மெண்டிற்கும் பிரிட்டிஷ் கவர்மெண்டிற்கும் 15-7-1909ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி பிரிட்டிஷாரிடம் டிரெங்கானுவையும் ஒப்படைக்கப்பட்டது. அன்றிருந்து பிரிட்டிஷாரின் மேற்பார்வையில் சுல்தான் ஆட்சிபுரிந்து வருகின்றார்.

இப்போது சுல்தானக இருப்பவர் மேன்மைதங்கிய சுல்தான் ஸர் சுலையுமான் பத்ருல் ஆலம்ஷா. கே. ஸி. எம். ஜி., இப்னி அல்மர்ஹூம் சுல்தான் ஸைனலாபுடின் ஆவர். இவர் 1910ல் பிரிட்டிஷாரிடம் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ஓர் பிரிட்டிஷ் ஆலோசனையாளரைக்கொண்டு அரசியலை நடத்தி வருகிறார். இவர்கள் இருந்து அரசியலை நடத்தும் தலைநகர் கோலா டிரெங்கானுவாகும். இதற்கு கிளந்தானில் இருந்து ஓர் டிரங் ரோட்டுள்ளது. இருப்புப்பாதை வசதியில்லை. நடைபாதையும், ஆற்று மார்க்க வழியுந்தான் அதிகம். இங்கு 1922ம் ஆண்டில் இருந்து தந்தி வசதிகள் இணைக்கப்பட்டுள்ளன. தலைநகரைப்போன்று "கெம்மாமன், பிசுத்" என்ற நகரங்களுக்கும் டெலிபோன் அமைக்கப்பட்டிருக்கிறது. தலைநகரான கோலா டிரெங்கானு, டிரங்கானு நதியின் முகத்துவாரத்தில் அமைக்கப்பெற்றுளது. இங்கிருந்து பாரா ரப்பர், ஈயம், கொப்பரா, கருவாடு, மாங்கிஸ், பிரம்பு, பாக்கு, பட்டுக் கைலிகள் ஏற்றுமதியாகின்றன. இங்கு சில நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் தொழில் செய்கின்றனர். இவர்களுக்கு

சுல்தான் ஆதரவு அதிகம். இதேபோல பலரையும் ஆதரிப்பவர் சுல்தான். அதனால் அங்கு வாழும் மக்கள் ஆநந்தத்துடன் இருக்கின்றனர்.

[3.] ஊ. புருணய் சமஸ்தானம்

தமிழ்த்தாய் வணக்கம்

(குறள் வெண்பா)

" புகழார் புருணயின் பொற்பெவருங் கேட்க
அகமார்ந்த செந்தமிழே ஆற்று "

போர்னியோ தீவின் மேற்குக் கரையில் உள்ளது புருணய். இத்தீவு சுமார் 100 மைல் நீளத்தில் 2247 சதுரமைல்களின் பரப்பைக் கொண்டதாகும். இதற்கும் சிங்கப்பூருக்கும் கடல் மார்க்கம் 758 மைல்கள். இந்நாட்டை 13, 14ம் நூற்றாண்டுகளில் இந்து, மஜா பஹித் மன்னர்களும் பிறகு மலாக்கா மன்னர்களும் ஆண்டனர். அதனால் இன்றும் இந்துக்களின் அடையாளச் சின்னங்கள் இருக்கின்றன. 16, 17ம் நூற்றாண்டுகளில் இங்கு போர்த்துக்கிய, டச்சியர்கள் புகுந்தனர். அவர்கள் ஆட்சி அதிக நாள் நடைபெறவில்லை. 1847ம் ஆண்டில் இந்நாடு தலைவனில்லாதிருந்தது. கடற்கொள்ளைக்காரர்கள் பெருகி நாட்டிலுள்ள மக்களைத் துன்புறுத்தினர். அதனால் அவர்கள் பிரிட்டிஷார் உதவியை நாடினார்கள். பிரிட்டிஷார் முற்பட்டு கடற்கொள்ளைக்காரர்களை ஓட்டி ஓர் சுல்தானை நியமித்தார்கள். அவரிடம் ஓர் உடன்படிக்கையும் செய்தார்கள். 1888ம் ஆண்டில் புருணய் சுல்தான் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் ஒருவரைக் கொண்டார். 1906ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி அங்கு ஓர் ரெஸிடெண்ட் நியமனமானர். இவர் இஸ்லாம் மதமார்க்க விஷயம் தவிர மற்ற காரியங்களில் மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் மன்னர் சார்பாகவும், ஐக்கிய மலாய் நாட்டின் ஹை கமிஷனருக்குட்பட்டும் எக்காரியங்களையும் நடத்துவார். இவருடன் அரசியலை நடத்துபவரும் சமஸ்தானத்துக்கு அதிபருமானவர் சுல்தான். இப்போதுள்ளவர் மேன்மை தங்கிய சுல்தான் அஹமது தாஜுதின் ஹக்ஹஜீல் காய்ரி வாடின் இப்னி அல்மர்ஹூம் சுல்தான் முகம்மது ஜமாலுல் ஆலம் ஆவர். இவர் இச்சமஸ்தானத்தின் 27வது மன்னனவார். இச்சமஸ்தானம் ஐந்து ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு மலாய் உத்தியோகஸ்தர்களாலும், ஆங்கிலேய சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களாலும், பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இங்கு பெட்ரோல் எடுக்கப்பெறுகிறது.

ஐக்கியப்படாத மலாய் நாட்டின் காலக்குறிப்புகள்.

1338 கி. பி. ஜோஹோரை ஜாவானிய மஜாபஹித் மன்னர்கள் கைப்பற்றியது (276)

1365 „ கிளந்தானை அவர்கள் கைப்பற்றியது (295)

1411 „ கிளந்தான் மகாராஜகுமார் ஆட்சிக்குட்பட்டது (295)

1488 „ கிளந்தான் மலாக்கா சுல்தான் முகமத்ஷா ஆட்சிக்குட்பட்டது (295)

1580 „ கிளந்தானில் ராஜா அலிஜலால் அப்துல் ஜலீல் ரியத்துல்லா ஆட்சிபெற்றது (295)

1587 „ ராஜா ஹூசேன் அரசனாகினார் (295)

1603 „ கிளந்தானை சியாம் மன்னர் கைப்பற்றியது (295)

1673 „ ஜோஹோரில் ஜம்பி என்ற தலைவன் நெருப்பிட்டது (276)

1699 „ ஜோஹோர் மன்னன் கொலையுற்றது (276)

1717 „ ஜோஹோரின் தலைவனாக ராஜா கிச்சில் வந்தது (276)

1776 „ டிரங்கானோ சுல்தான் சயாம் மன்னருடன் நட்புக் கொண்டது (297)

1784 „ ஜோஹோருக்கு உலாந்தாக்காரர் பாதுகாப்பளித்தது (276)

1786 „ கெட்டா சுல்தான் பிரிட்டிஷாருக்கு பினாங்கைக் கொடுத்தது (287)

1791	கி. பி.	டிராங்கானு சயாம் அரசருக்குட்பட்டது	(297)
1798	„	கெட்டா சுல்தான் வெல்லஸ்லி மாகாணத்தை பிரிட்டிஷாருக்குக் கொடுத்தது	(287)
1812	„	ஜோஹோரில் சுல்தான் ஹுஸேன் என்பவர் தெமாங்கான் ஆனது	(276)
1819	„	ஜோஹோர் தெமாங்கான் சிங்கப்பூரை பிரிட்டிஷா ருக்குக் கொடுத்தது	(276)
1821	„	கெட்டாவை சயாம் கைப்பற்றியது	(288)
		பெர்லீஸ் கெட்டா ஆட்சியின்கீழ் இருந்தது	(294)
1841	„	பெர்லீஸில் ஸையத் உசேன் இராஜாவானது	(294)
1847	„	புருனையில் கடற்கொள்ளைக்காரர் புகுந்தது. பிரிட்டிஷார் உதவி புரிந்தது	(298)
1855	„	ஜோஹோரில் சுல்தான் அலி என்பவரை நீக்கியது. அபுபக்கர் சுல்தான் ஆகியது	(276)
1864	„	கெட்டா சுல்தான் ஸர் அப்துல் ஹமீது ஹாலிம்ஷா பிறந்தது	(288)
1879	„	ஜோஹோர் மன்னருக்கு விக்டோரியா மகாராணியார் "மஹாராஜா" வென்ற பட்டம் கொடுத்தது	(277)
1882	„	கெட்டா சுல்தான் பட்டத்துக்கு வந்தது	(288)
1885	„	ஜோஹோர் சுல்தான் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டாருடன் உடன்படிக்கை செய்து கொண்டது	(277)
1888	„	டிராங்கானுவில் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் நியமனமாகியது	(297)

1895 கி. பி. ஜோஹோர் சுல்தான் அபுபக்கர் காலமானது சுல்தான் ஸர் இப்ராஹிம் டி. கே., எஸ். பி. எம். ஜே., ஜி. ஸி. எம். ஜி., ஜி. பி. இ, சிம்மாசனம் ஏறியது (277)

1905 „ பெர்லீஸ் சமஸ்தானம் பிரிட்டிஷ் ஆலோசனையாளரை ஏற்றது (294)

1909 „ சயாம், பிரிட்டிஷ் உடன்படிக்கையினால் கெட்டா, பெர்லீஸ், கிளந்தான், டிரங்கானோ சமஸ்தானங்கள் சுதந்தரம் பெற்றது (288)

1910 „ டிரங்கானோவில் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் நியமனம் (297)

1921 „ கிளந்தான் சுல்தான் ஸர் இஸ்மாயில் சிம்மாசனம் ஏறியது (296)

1922 „ டிரங்கானோவுக்கு தந்தி வசதி ஏற்பட்டது (297)

1923 „ கெட்டாவில் பிரிட்டிஷ் ஆலோசனையாளர் நியமனமாகியது (289)


ஐக்கியப்படாத மலாய் நாட்டின் ஜனத்தொகை

1937

நாடுகள்.	இந்தியர்கள்	ஏனையர்கள்	மொத்தம்
1. ஜோஹூர்	55,906	524,450	580,356
2. கெட்டா	57,949	420,037	477,986
3. கிளந்தான்	7,464	377,446	384,910
4. டிரெங்கானு	1,379	192,448	193,827
5. பெர்லிஸ்	1,044	52,024	53,068
6. புருனைய்	243	34,124	34,367
	123,985	1,600,529	1,724,514

(73)

அங்கோர்வாட் கோயில்.



Angorwat Temple, Saigon.

ஐக்கியப்படாத மலாய்நாடுகள்


வருமானம் 1937

விஷயங்கள்	ஜொஹூர்	கெடா	பெர்லிஸ்	கிளந்தான்	டிரெங்கானு	புருணய்
நிலம், காடு, சுரங்கம்	4,576,000	1,148,000	78,000	653,000	347,000	548,000
கஸ்டம்ஸ், கலால்	7,618,000	4,825,000	589,000	1,861,000	2,060,000	375,000
கடல் வகையறு	3,952,000	441,000	32,000	192,000	55,000	35,000
கோர்ட் பீஸ்டாம்பு	363,000	267,000	15,000	124,000	32,000	4,000
தபால், தந்தி வகையறு	444,000	221,000	„	76,000	52, 000	20,000
முனிஸிபல்	1,352,000	427,000	25,000	237,000	55,000	19,000
ஏனைய வரவு	1,594,000	499,000	„	52,000	„	18,000
சில்லரை வரவு	298,000	37,000	15,000	14,000	59,000	30,000
மொத்தம்	20,197,000	7,865,000	754,000	3,209,000	2,660,000	1,049,000

ஐக்கியப்படாத மலாய் நாடுகள்
செலவு 1937

விஷயங்கள்	ஜோஹுர்	கெட்டா	பேர்லிஸ்	கிளந்தான்	டிரெங்கானு	புருனெய்
சம்பள வகையறுக்கள்	6,448,000	3,408,000	274,000	963,000	946,000	,,
மற்ற வகையில்	4,342,000	1,202,000	133,000	594,000	300,000	407,000
பென்ஷன்கள்	630,000	416,000	35,000	186,000	167,000	20,000
வட்டி	,,	,,	,,	110,000	619,000	,,
சில்லரை சிலவுகள்	166,000	505,000	47,000	167,000	196,000	48,000
பப்ளிக் வொர்க்ஸ்	1,506,000	591,000	54,000	178,000	124,000	64,000
இதர சிலவுகள்	5,306,000	873,000	93,000	388,000	293,000	114,000
மற்ற சிலவுகள்	,,	,,	,,	171,000	,,	,,
மொத்தம்	18,398,000	6,995,000	636,000	2,757,000	2,645,000	653,000

சிங்கப்பூர் துறைமுகம்.



Singapore Harbour.

[4]. அகில மலாயா அமைப்பு

தமிழ்த் தாய் வணக்கம்

(நேரிசை வெண்பா)

" அகில மலாயாவின் ஆட்சிமுறை யெல்லாம்
மகிதலத்தோர் கண்டு மகிழ—அகிலவுல
கெங்கும் உனதருளை ஈட்டுந் தமிழ்த்தாயே
கங்கைபோல் முன்வந்து காட்டு."

இதுவரை மலாயாவின் தோற்றத்தைப் பல பிரிவாகக் கண்டோம் இனி ஒன்று சேர்த்துக் காண்போம். இந்நாட்டை தொடுவாய்ப்பகுதி, ஐக்கிய மலாய் நாடு, ஐக்கியப்படாத மலாய் நாடு என மூன்று பகுதியாகப் பிரித்து ஆங்கிலவரசியலார் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆட்சி புரிகின்றனர். அவர்களின் திறத்தால் இயற்கை எழில் அமைந்த இந்நாடு செயற்கை வளத்திலும் செறிந்தோங்கி நிற்கிறது. இங்கு வாழும் மக்கள் பல இன்பங்களையும் பெற்றநுபவிக்கின்றனர். இந்நாட்டை சுவர்ணதீபம், யௌவன தீபம் என்று முன்னோர் கூறியதை இன்று கண்ணுற் காண்கின்றோம். செல்வத்தாலுயர்ந்த இந்நாட்டில் இன்று கிடைக்காத தொன்றுண்டோ ? எல்லாம் கிடைக்கின்றது. அதனல் மக்கள் இந்திரலோக வாழ்வைப் பெற்றின்புறுகின்றனர். இந்நாட்டின் சிறப்பை, செல்வத்தின் நிலையை, தினம் மக்கள் பெறுமின்பத்தை சித்தரிக்கின்றார் ஓர் பெரியார்.

"சுந்தரந் திகழுநற் சுவர்ணதீ பத்திலே
தோன்றுவது யாதென்னிலோ
சுகவயித் தியசாலை சூதிகாச்
சாலையுந் தூய கல்விச் சாலையும்
அந்தரத் தொளிர்மீ னெனப்பல
விலக்ட்ரிக ளமைந்தவா வணங்களழகும்
அணிஅணிய தாய்ச்செலும் மோட்டார்கள்
ரிக்ஷாக்க ளபார வுயர் டிரும் கார்களும்

கந்தனருள் கொண்டநக ரத்தார்கள் வீதியும்
கனகுபேரச் செல்வமுங்
கருணையே குடிகொண்டு ஏழையின்
கலிதனைக் கண்டிப்பதிற் கண்ணுளார்
சந்ததமு மாசியற் சம்மதம் பெற்றுலகில்
சஞ்சரித் திடுவதுடனே
சாதுர்ய மொழிகளால் கொண்டு விற்றிடு
நாடு தருமநிறை சத்யநாடே."

" திருவுலா வியமலா யாவிலே செல்வநிலை
சேடனுஞ் சொல்வ தரிது
திவ்யமிகு ஞாயமன் றங்களில் வழக்கினைத்
தினம் விசாரித்து விடுவர்
கருணையே குடிகொண்ட கவர்ண்மெண்டி னரசாட்சி
கண்ணினுற் காண வெளிதோ
ககனமார்க் கத்திலே ரோப்பிளான் செல்லோசை
காதினை யடைத்து விடுமே
உருவிலாத் தந்திடெலி போன்காகி தங்களும்
ஊர்களிற் போக்கு வரவும்
உயரிய சகாயமிது செய்திருக்கின்ற நிலை
யும் பருக்கரி தாகுமே
தருணமதி லிந்தியர்கள் தங்கிப் பிழைக்கு நகர்
தாய்போன்ற நாடு மிதுவே
சந்ததந் தனவணிகர் கொண்டுவிற் றிடுநாடு
தருமநிறை சத்ய நாடே."

"புகழ்பெருகு புண்ணியம் பொறுமையுட னீகையும்
புனிதகவர் மெண்டாள் கையோ
போற்றத் தகுந்ததிது வெனமாந்தர் கொண்டாடு
பொன் மயமதான நாடு
அகழாற் கடப்பதற் கரியபா லந்தொடர்
அமைத்து ரஸ்த்தாக்க ளாக்கி
அதிவிரைவி லேசெலும் புகைரதக் கப்பலும்
அளவிலா தமைந்த நாடு
திகழுமயி லயிலுடன் காட்சிதரு தேசிகன்
திவ்யபத சேவை செய்யும்
செழியதன வணிகரா லேமலாயாவுமே
சிர்பெருஞ் செல்வ நாடு
மகிபனுறும் ஜார்ஜ் மன்னருட னெலிஜபத்
மகாராணி யவர்கள் வாழ்க!
மானிலந் தனிலுள்ள ஜீவ கோடிகள் வாழ்க!
மதிபெருகி வாழ்க! மாதோ."

அவர் கூறியது போல ஆங்கில வரசியலுக்குட்பட்ட இவ் அகில மலாயாவின் ஆட்சி முறை வரவு செலவுகளை அங்கங்கே கூறி இருக்கிறோம். அவைகள் தனிப்பட்ட கணக்குகளாகும்! அதற்கு மேல் ஒன்றுபட்ட கணக்குகளைப் பலரும் பார்த்துப் பயன் பெற இங்கு தருகிறோம். இதுவே சரியான விபரங்கள் ஆகும்.

இந்நாட்டை அகில மலாயாவாக்கி இறவாதுடல் நீத்த மாட்சிமிக்க விக்டோரியா மகாராணியவர்களின் வாழ்க்கை

1819	மேமீ 24உ பிறந்தது. மூன்றும் ஜ்யார்ஜின் நான்காம் மகனுகிய கெனட் கோமகனின் புதல்வி.
1837	ஜூன்மீ 20உ இங்கிலாந்தின் இராணியாகினர்.
1857	இந்தியாவின் சக்கரவர்த்தினியாகினர்.
1840	பிரின்ஸ் ஆல்பர்ட்டை மணந்தார்.
1841	ஆண்மகவை ஈன்றனர். இவர்க்கு எட்வர்ட் என்ற பெயர் வைக்கப்பட்டது. 1857க்குள் எழு குழந்தைகள் பிறந்தன.
1887	விக்டோரியா மகாராணிக்கு பொன்விழா நடைபெற்றது. (50 வருட ஆட்சி).
1897	வைரவிழா (டைமண்ட் ஜூபிலி 60 வருட ஆட்சி) நடைபெற்றது.
1901	ஜனவரிமீ 21உ காலமாகினர். இவர்களது மூத்த மகன் எட்வர்ட் ஏழாம் மன்னனென சிம்மாஸனம் ஏறினர்.
	இவர் மக்களிடம் காட்டிய அன்பு அதிகம். இவர் அரசாட்சியில் ஒவ்வொருவர்க்கும் ஏற்பட்ட நலன்கள் பல. உலகம் அடைந்த புகழ் அதிகம். இச்சிறப்பு வாய்ந்த மகாராணியாரின் உருவப்படம் முன்னணியில் வைக்கப்பட்டிருக்கிறது.

மாட்சிமை தங்கிய ஆறும் ஜார்ஜ் மன்னரின் வாழ்க்கை.

1895	டிசம்பர் 14உ சண்டிரிங்ஹாம் அரண்மனை, பார்க்மாளிகையில் பிறந்தார்
1913	18ம் வயதில் எச். எம். எஸ். கம்யர்லாண்டு கப்பலில் சேர்ந்து கடற்படைப் பயிற்சி பெற்றார்
1914	19ம் வயதில் உலக மகா யுத்தத்தில் 'ஜிட்லாண்டு' கப்பலிருந்து போர் புரிந்தார்
1916	21ம் வயதில் கடற்படை லெப்டினெண்டாகினார்
1917	22ம் வயதில் பிரதம கமாண்டராகி ஜிட்லண்டு போரில் வெற்றி கொண்டார்
1918	23ம் வயதில் ஆகாயப்படையில் சேர்ந்தார்
1920	25ம் வயதில் யார்க் கோமகனாகினார்
1923	28ம் வயதில் லேடி எலிஸபெத்தை மணம் புரிந்தார்
1924	29ம் வயதில் கோமகளுடன் கிழக்கு ஆப்ரிக்கா விஜயம் செய்தார்
1926	31ம் வயதில் முதற் குழந்தை எலிஸபெத் இளவரசி பிறந்தனர்
1927	32ம் வயதில் கோமகளுடன் ஆஸ்திரேலியா சென்றனர்
1928	33ம் வயதில் ஜுகோஸ்லாவியாவிற்கு சென்றார் பின் ஜெர்மனியின் தலை நகரமான பெர்லின் சென்றார்
1929	34ம் வயதில் நார்வே இளவரசர் கலியாணத்திற்கு நார்வே சென்றார்
1930	35ம் வயதில் இரண்டாம் குழந்தை "மார்கிரெட் ரோஸ்" பிறந்தார், ரோமாபுரிக்கு இத்தாலிய இளவரசர் கலியாணத்திற்குச் சென்றார்
1932	37ம் வயதில் கடற்படை ரீயர் அட்மிரல் ஆகினார், விமானப் படையில் உபமார்ஷல் ஆகினார்
1936	41ம் வயதில் கடற்படைத் தலைவன் 'அட்மிரல்' ஆகினார் விமானப்படைத் தலைவன் 'பிரதம மார்ஷல்' ஆகினார்
1937	42ம் வயதில், மேமீ 12உ வெஸ்ட்மினிஸ்டர் அபே ஆலயத்தில் முடி சூட்டப்பட்டார்.

இவரே நமது அரசர் பெருமான். இவரது படமும், இவரின் வாழ்க்கைத்துணைவியாரான எலிஸபெத் மகாராணியாரின் படமும் முன்னணியில் வைக்கப்பெற்றிருக்கிறது.

போலீஸ் நிர்வகிப்பு முறை

தொடுவாய் பகுதியில் ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் உள்ளனர். இவரின் கீழ் மூன்று சி. பி. ஓ, க்கள் சிங்கப்பூர், பினங்கு, மலாக்காவிற்கென ஆங்காங்கிருந்து அலுவல் பார்க்கின்றனர். போலீஸிற்கு ஆட்களைச் சேர்த்து தொடுவாய்ப் பகுதிக்கு பயிற்சி யளிக்கும் டிப்போ சிங்கப்பூரிலுள்ளது.

ஐக்கியப்பட்ட மலாய் நாட்டில் ஒரு கமிஷனர் ஆப் போலீஸ் உள்ளனர். ஒவ்வொரு அரசியலிலும் உள்ள போலீஸ் படையை ஒரு சிப் போலீஸ் ஆபீஸர் மேற்பார்வையிட்டு வருவர். இவர் டிபுடி கமிஷனர் என்ற பதவி கொண்டிருப்பர். ஐக்கியப்படாத மலாய் நாட்டிலும் கமிஷனர் ஆப் போலீஸ்களே போலீஸ் மேற்பார்வையாளராக விருப்பர். இவ்வெல்லாப் பகுதிகளிலும் உளவுபேதா ஆபீஸர்களும் உள்ளன. இவர்களை இரகசியப் போலீஸ் என்பர். சாதாரண உடையில் இருந்து கொண்டு துப்பறியும் வேலைகளையும் செய்வர்.

சிறைச் சாலைகள்

மலாயாவின் சிறைச்சாலை அதிகாரி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் பிரிசின்ஸ் என்பர். தொடுவாய்ப் பகுதியில் சிங்கப்பூரில் செங்கையிலும் அவுட்ராம் ரோட்டிலும், பினங்கு, மலாக்கா, லாபுவான், கோக்கோ தீவுகளிலும் சிறைச்சாலைகள் உள்ளன. இவைகளில் சுமார் 14,865 கைதிகள் இருக்கின்றனர். ஐக்கியப்பட்டமலாய் நாட்டில் ஆறு சிறைச்சாலைகள், தைப்பிங், பத்துக்காஜா, கோலாலம்பூர், சிரம்பான், கோலாலப்பீஸ், குவந்தான் என்ற நகரங்களில் உள்ளன. இவைகளில் சுமார் 4,805 கைதிகள் இருக்கின்றனர். ஐக்கியப்படாத மலாய் நாட்டில் இரண்டு சிறைச்சாலைகள் ஜோஹூர் அரசியலிற்கென ஜோஹூரிலும், மூவாரிலும் உள்ளன. இதில் சுமார் 2,180 கைதிகள் இருக்கின்றனர். கெட்டா அரசியலில் இரண்டு சிறைச்சாலைகள் அலோர்ஸ்டாரிலும், சுங்கைப்பட்டாணியிலுமுள்ளன. இதில் சுமார் 375 கைதிகள் இருக்கின்றனர். பெர்லீஸ், கங்கார் நகரில் ஒரு சிறைச்சாலை இருக்கின்றது. இதில் சுமார் 132 கைதிகள் உள்ளனர். கிளந்தானில், கோத்தாபாரு மாசோக், பாசிர்பூத்தே, கோலாகிராய் என்ற நான்கு இடங்களிற் சிறைச்சாலைகள் உள்ளன. அவைகளில் 418 கைதிகள் இருக்கின்றனர். டிரங்கானுவில், கோலா டிரங்கானு வென்ற இடத்தில் ஒரு சிறைச்சாலை யுள்ளது. இதில் சுமார் 308 கைதிகள் இருக்கின்றனர்.

மலாயாவின் நாணயங்கள்

மலாய் நாட்டின் நாணயம், செம்புக் காசுகள், வெள்ளி ஐந்து காசுகள், பத்து காசுகள் இருபது காசு துண்டுகள்—டாலர் நோட்டு கள் கொண்டுள்ளன—டாலர் நோட்டு \$1, \$5, \$10, \$100, \$1000 என உள்ளன.

1895-ம் ஆண்டில் மலாயாவில் மிக்ஸிகன் டாலர், பிரிட்டிஷ் டாலர் ஹாங்காங் டாலர் செல்லுபடியாகியிருந்தன.

1902-ல் பிரிட்டிஷ் டாலர் வெள்ளி நாணயம் சிலாமணியாகக் கருதினர். தாம்பிர காசுகளும் சிலாமணியாகின.

5.10.1903-ல் இந் நாணயம் புழக்கத்தில் வர, 1895-ல் நடமாடிய டாலர்கள் மறையச் செய்யப்பட்டன.

29.1.1906-ல் நோட்டுகளும், டாலருக்கு சில்லரைகள் வெள்ளியிலும், புரோன்ஸிலும் விடப்பட்டது. மலாயாவில், நாணயம் அடிக்கும் சாலைகள் கிடையாது. 1937-ம்௵ கணக்குப்படி \$14·6 மில்லியன் (ஒரு மில்லியன் 10 லட்சம்) வெள்ளி நாணயங்களும், \$104·9 மில்லியன் நோட்டுகளுமாக உபயோகத்தில் இருக்கின்றன.

மலாய் நாட்டின் பரப்பு
1937

தேசம்	சதுர மைல்	ஏக்கருக்கள்
தொடுவாய் பகுதி		
சிங்கப்பூர்	220	140,800
பினங்கு	110	70,400
வெல்லஸ்லி மாகாணம்	290	185,600
மலாக்கா	640	409,600
லாபுவான்	35	22,400
கிருஸ்துமஸ் தீவுகள்	60	38,400
கோக்கோ தீவு	2	960
தொடுவாய் பகுதியின் கூடுதல்	1,357	868,160
ஐக்கியப்பட்ட மலாயா		
பேரா (டின்டிங்ஸ் உள்பட)	7,980	5,107,200
சிலாங்கூர்	3,160	2,022,400
நெகிரிசெம்பிலான்	2,580	1,651,200
பாஹாங்	13,820	8,844,800
ஐக்கிய மலாயாவின் கூடுதல்	27,540	17,625,600
ஐக்கியப்படாத மலாயா		
ஜோஹூர்	7,330	4,691,200
கெட்டா	3,660	2,342,400
பெர்லிஸ்	310	198,400
கிளந்தான்	5,750	3,680,000
டிரெங்கானு	5,050	3,232,000
புருனைப்	2,247	1,438,080
ஐக்கியப்படாத மலாயாவின் கூடுதல்	24,347	15,582,080
மலாயாவின் மொத்தம்	53,244	34,075,840

குறிப்பு:—அகில மலாயாவின் பரப்புகளை அங்கங்கே கூறப்பட்டிருக்கிறது. அவைகள் ஒவ்வொரு அளவுகாரரின் குறிப்புப்படி பல பூகோளங்களில் கூறப்பட்டவைகள். இங்கு கூறப்பட்டிருக்கிற கணக்கே இப்போது சரியானதாகும்.

அகில மலாயாத் துறைமுகங்கள்

நாடு		துறைமுகங்கள்
தொடுவாய்பகுதி	...	சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா, லாபுவான்.
பேரா	...	டெலுக்கான்சன், லுமுட், போர்ட் வெல்ட், பாகன்தத்தோ.
சிலாங்கூர்	...	போர்ட்ஸ் வெட்டன்ஹம்.
நெகரிசெம்பிலான்	...	போர்ட்டிக்ஸன்.
பாஹாங்	...	பீகான், குவான்டன், போன்டியன், ரொம்பீன், பீபார், கோலாபாஹாங்.
ஜோஹூர்	...	ஜோஹூர், மூவார், பத்துபாகாட், குரூப், போன்டியன், பினுட், செங்காரங், மெர்சிங், ஸிடிலி, கோத்தாதிங்கி.
கெட்டா	...	அலோர் ஸ்டார், சுங்கைபட்டாணி, லங்காவி.
கிளந்தான்	...	கும்பாட், பாசோக், சிமெராக்.
டிரெங்கானு	...	கோலாதிரெங்கானு, கெமாமன்.
பெர்லிஸ்	...	கங்கார், கோலாசங்லாங்.

ஆகாய விமானத்திடல்களும், நீர்த்தேக்கங்களும்

பகுதி.	திடல்கள்.	சுற்றளவு.
1. தொடுவாய்ப்பகுதி	(1) சிங்கப்பூர் சிலேட்டர் ஆகாயத்திடல்	1,000 கெஜம் சுற்றளவு
	(2) பிளுங்கு பாயான் லெப்பான் ஆகாயத்திடல்	1,750 ,, ,,
	(3) பிளுங்கு குளுவர் நீர்த்தேக்கம்	முக்கால் மைல் அகலமும் 3 மைல் நீளமும் உள்ளது.
2. ஐக்கிய மலாய்ப்பகுதி.	(4) தைப்பிங் ஆகாயத்திடல்	1,000 கெஜ சுற்றளவு
பேரா.	(5) ஈப்போ ஆகாயத்திடல்	1,300 ,, ,,
	(6) சித்தியவான் ஆகாயத்திடல்	1,000 ,, ,,
	(7) ஜென்ரட்டா ஆகாயத்திடல்	450 ,, ,,
	(8) தெலுக்கான்ஸான் நீர்தேக்கம்	ஸிபிளேன்களுக்கு போதிய வசதிகள் அளிக்கும் நீர்த் தேக்கங்கள்
	(9) லுமுட் நீர்த்தேக்கம்	
	(10) பாகன்தத்தோ நீர்த்தேக்கம்	
சிலாங்கூர்.	(11) கோலாலம்பூர் ஆகாயத்திடல்	800 கெஜ சுற்றளவு
	(12) போர்ட்ஸ்வெட்டன்ஹாம் ஆகாயத்திடல்	700 ,, ,,
நெகரி செம்பிலான்	(13) பாஹாங் ஆகாயத்திடல்	450 கெஜ சுற்றளவு
3. ஐக்கியப்படாத மலாய்ப்பகுதி.	(14) பதுபகாட் ஆகாயத்திடல்	1.560 கெஜ சுற்றளவு
ஜோஹுர்	(15) ஸ்கூடாம் ஆகாயத்திடல்	350 ,, ,,
	(16) லாபீஸ் ஆகாயத்திடல்	இது சிறிய திடல்
கெட்டா	(17) அல்லோர் ஸ்டார் ஆகாயத்திடல்	1,735 கெஜ சுற்றளவு
	(18) சுங்கைப்பட்டாணி ஆகாயத்திடல்	600 ,, ,,
	(19) சாரா (புலோ லங்காவி) நீர்த்தேக்கம்	ஸிபிளேன்களுக்கு உகந்த தேக்கம்
கிளந்தான்	(20) கோத்தாபாரு ஆகாயத்திடல்	800 கெஜ சுற்றளவு

அகில மலாயாவின் கல்விப் பயிற்சி.

1937

விபரம்,	தொடுவாய் பகுதி.	ஐக்கியப் பட்ட மலாயா.	ஜோஹோர்	கெட்டா	பெர்லீஸ்	கிளந்தான்	டிரெங்கானு	புருணயி
ஆங்கிலப் பள்ளிக்கூடம்	144	134	7	2	—	11	2	2
இந்திய மாணவர்கள்	2,912	4,816	—	—	—	—	—	—
தமிழ் பள்ளிக்கூடம்	66	486	70	29	1	—	—	—
தமிழ் மாணவ மாணவிகள்	2,108	14,337	2,477	1,113	18	—	—	—
மலாய்ப் பள்ளிக்கூடங்கள்	230	564	139	99	24	59	22	20
மலாய் மரணவ மாணவிசன்	23,534	47,409	16,165	12,670	3,092	6,585	2,188	1,217
சினப் பள்ளிக்கூடங்கள்	477	456	224	–	9	12	8	3
சின மாணவ மாணவிகள்	40,293	39,700	12,857	—	493	821	590	260

மோட்டார்கார்களும் வருவாயும்

விஷயவிளக்கம்	தொடுவாய்பகுதி		ஐக்கிய மலாய்நாடு		ஐக்கியப்படாத மலாய்நாடு	
1. சொந்த மோட்டார்கள்	12,309		12,538		3,769	
2. வாடகை மோட்டார்கள்	1,198		1,627		1,601	
3. சொந்த லோரிகள்	2,984		1,327		1,054	
4. வாடகை லோரிகள்	870		1.590		866	
5. மோட்டார் எண்ணெயில் வசூலித்த வருமானம்	$ 3,489,324		$ 3,736,440		$ 2,305,348	
6. டையர், டியூப் வகையரு வருமானம்	—	—	$ 196,463		$ 6,345	
7. மோட்டர்கள்மீது விதித்தவரிகள்	$ 1,405,651		$ 1,208,168		$ 639,311	

அகில மலாயா விளைவு பொருள் கணக்கு

விபரம்.	தொடுவாய் பகுதி ஏக்கருக்கள்	ஐக்கியப்பட்ட மலாயா ஏக்கருக்கள்	ஐக்கியப்படாத மலாயா ஏக்கருக்கள்
<u>ரப்பர் விளைவு :—</u>			
5,000 ஏக்கருவும் அவைக்கு மேற்பட்டவையும் ...	34,122	113,027	248·384
1,000 ஏக்கரு முதல் 4,000 ஏக்கரு வரை ...	100,513	595,977	355,261
500 ஏக்கரு முதல் 900 ஏக்கரு வரை ...	25,944	161,267	73,034
100 ஏக்கரு முதல் 490 ஏக்கரு வரை ...	47,211	163,155	108,453
	207·700	1,033,426	785,132
தென்னைத் தோட்டம் ...	72,071,000	250,720.000	286,626,000
கூந்தல்பனைத் தோட்டம் ...	—	35,280	33,645
நெல் சாகுபடி ...	69,090,000	185,730,000	485,220,000

அகிலமலாயாவின் விளைபொருள் கணக்கு.
1937

விபரம்.	தொடுவாய் பகுதி ஏக்கருக்கள்	ஐக்கியப்பட்ட மலாயா ஏக்கருக்கள்	ஐக்கியப் படாத மலாயா ஏக்கருக்கள்
கோப்பி விளைவு	1,536	10,016	6,478
தேயிலை விளைவு	30	1,950	725
பாக்கு விளைவு	1575	3,418	48,009
புகையிலை விளைவு	242	1,496	1.847
அன்னாசிப்பழ விளைவு	8,803	9,336	36,435
வாழைப்பழ விளைவு	1,360	9,985	10,787
மிளகாய் விளைவு	322	618	615
மிளகு விளைவு	10	12	15
ஏலம் விளைவு	—	54	—
மஞ்சள் விளைவு	20	—	—
இஞ்சி விளைவு	34	164	349
வெற்றிலை விளைவு	175	566	601
ஜாதிக்காய் விளைவு	91	12	103
கிராம்பு விளைவு	368	5	3
கரும்பு விளைவு	44	635	391
நிலக்கடலை விளைவு	32	654	965
ஜவ்வரிசி விளைவு	163	706	2,370
காய்கறிகள் விளைவு	1,339	290	243
பழ வகைகள் விளைவு	5,.963	20,499	14,387
அத்தாப்பு விளைவு	2,787	16,829	5,491

மலாய் நாட்டின் அளவுகள்.

நிறை 16 டிராம்—ஒரு அவுன்ஸ்.
16 அவுன்ஸ்—ஒரு பவுண்டு.
14 பவுண்டு—ஒரு ஸ்டோன்.
8 ஸ்டோன்—ஒரு அந்தர் வெயிட்.
20 அந்தர் வெயிட்—ஒரு டன்.

அளவு 12 இன்சு=1 பிட்.
3பிட்=1 கெஜம்.
$5\frac{1}{2}$ கெஜம்=1 போல்.
40 போல்=1பர்லாங்.
8 பர்லாங்=1மைல்.

---

144 சதுர இஞ்சு = 1 சதுர அடி
9 சதுர அடி = 1 சதுர கெஜம்
$30\frac{1}{4}$ சதுர கெஜம் = 1 சதுர போல்
40 சதுர போல் = 1 ரூட்
4 ரூட் = 1 ஏக்கர்
43,560 சதுர அடி = 1 ஏக்கர்

பொன் நிறை 12 ஸாகா = 1 மாயம் = 52 கிரேயன்
16 மாயம் = 1 பொங்கல் = 832 கிரேயன்
12 பொங்கல் = 1 கட்டி 9,984 கிரேயன்
= 1 பவுண்டு 8 அவுன்ஸ் 16 பென்னி வெயிட்
$133\frac{1}{4}$ பவுண்டு=1 பீக்கல். 100 கட்டி.

இம்மலாயா தீபகற்பம் மிகச் சிறிய நாடு. இந் நாட்டின் வளத்தை, செல்வ நிலையைப் போல எங்கும் காண்பதரிது. இதற்குக் காரணம் ஆங்கிலேய ஆட்சி. அவர்கள் ஆட்சிக்குட்பட்ட இச் சிறிய நாடே இந்நிலையில் இருந்தால் இன்னும் அவர்களால் ஆளப்படும் மற்ற நாடுகளின் வளத்தைக் கூறவும் வேண்டுமோ? அவர்களின் திறத்தால், இந்தியர்களின் உழைப்பால், மற்றவர்களின் வாணிபப் பெருக்கால் செழிப்புற்றோங்கும் இந் நாடும், இங்கு ஒன்றுபட்டு வாழும் மக்களும், வந்தேறும் குடிகளும் என்றென்றும் வாழ! எச் செல்வமும் பெற்றோங்க! இறைவன் அருள் பாலிப்பானாக.

"ஆர்ந்தநிதி யோங்கு மகில மலாயாவைச்
சேர்ந்தவித் தோற்றமதைச் செய்தோர்கள்—ஆர்வமுடன்
கற்றவர்கள் கேட்டவர்கள் கண்டவர்கள் யாவருமே
வெற்றிபெற வாழ்ந்திடுவர் மேல்."

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.